கழக வெளியீடு ௯௨௭:

தென்னாட்டுப் பழங்கதைகள்

SOUTH INDIAN FOLK-LORE

[ஆறாம் புத்தகம்]

திரு. சு. அ. இராமசாமிப்புலவர்
திருத்தியமைத்தது.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition : May, 1958.

THENNATTUP PAZHANG KATHAIGAL
Vol. VI

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office :

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1 —C. 1200.

முன்னுரை

கலைகள் தோன்றிய காலத்திலேயே கதைகளுந் தோன்றத் தொடங்கின. கதைகள் இலக்கியங்களிலே தனியிடம் பெற்று விளங்குகின்றன. கதைகள் எதற்காகத் தோன்றின என்று ஆராயப் புகின், இலக்கிய வளர்ச்சிக்குத் துணைபுரிவதற்காகவும், மக்கள் இனிமையாகப் பொழுது போக்குவதற்காகவும், நீதி நெறிகளை மக்களுக்கு எளிய முறையில் புகட்டுவதற்காகவும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். நன்னெறிகளை மக்களுக்குக் கற்பித்து அவர்களுக்கு அறிவும் ஊட்டுவதற்குக் கதைகள் சிறந்த கருவிகள். பழங்கால மக்கள் தம் பிள்ளைகளுக்குக் கதைகளைக் கூறியே அறிவுநலத்தையும் அறநெறி மாண்பையும் புகட்டினார்கள். கலைகள் மிகுதிப்படாத அல்லது நன்கு வளர்ச்சியடையாத அந் நாளில் இவைகளே கலைகளாகத் திகழ்ந்தன.

நிகழ்ந்த ஒரு சிறு நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு இல்லாதன பலவுங் கூட்டி மிக வளர்த்து நம்பத்தகாதவாறு இட்டுக்கட்டுவதனாலேயே கதைகள் தோன்றுகின்றன. இந் நாளினுஞ் சிலர் சிறு நிகழ்ச்சிகள் பலவற்றைப் பெருங்கதைகளாக விரித்தெழுதுதலைக் காண்கிறோம். இத்தகைய கதைகளில் உண்மைவரலாறு மிகுதியாக இடம் பெறின் வரலாற்றுக் கதைகள் என்று பெயர் பெறவுங் கூடும்.

கதைகள் இலக்கியங்களிலே இடம்பெற்று விளங்குகின்றன. எடுத்துக்காட்டாகப் புராண இலக்கியங்களில் கணக்குவழக்கின்றிப் புகுத்தப்பட்டிருக்குங் கதைகளைக் குறிப்பிடலாம். பல புராணங்கள் முற்றிலுமே கதைகளாக அமைந்தவை என்றும் பலர் கருதுகின்றனர்.

இலக்கியங்களிலோ அல்லது தனி நூலாகவோ இடம்பெறாமல் பல கதைகள் வெகுகாலமாகவே செவிவழிச் செய்தியாக வழங்கி நின்றன; இன்றும் வழங்கிக்கொண்டிருக்கின்றன. ஏறக்குறைய ஐம்பதாண்டுகட்கு முன் இத்தகைய செவிவழிக் கதைகள் நூற்றுக் கணக்கில் வழங்கிக்கொண்டிருந்தன. அக்கதைகள் நாளடைவில் ஒவ்வொன்றாக மறைந்து கொண்டு வந்தன. காலஞ்சென்ற பண்டித நடேச சாத்திரியார் இந்த நாடோடிக் கதைகள் பலவற்றைத் தொகுத்து, திராவிடர் பூர்வகாலக் கதைகள், திராவிடர் மத்தியகாலக் கதைகள், தக்காணத்துப் பூர்வ கதைகள் என்னும் பெயர்களோடு புத்தக வடிவமாக வெளியிட்டார். மற்றும் கதாரத்திநாவளி, கதாமஞ்சரி, கதாசிந்தாமணி, தெனுலிராமன் கதை என்னும் பெயர்களோடும் பல கதைகள் வெளிவந்தன. இப் புத்தகங்களில் வெளிவந்தனவும் வராதனவுமான பல கதைகள் முன்னர் வெளிவந்த சனவிநோதினி, விவேக சிந்தாமணி முதலிய சில திங்கள் வெளியீடுகளிலும் வெளிவந்தன. திங்கள் வெளியீடுகளில் வெளியான கதைகள் அக்காலத்திலேயே மறையத் தொடங்கி விட்டன. புத்தக வடிவமாக வெளிவந்த பல கதைகளுங்கூடக் காலப்போக்கில் மறைந்தொழியத் தக்க நிலையை எட்டிப் பிடித்துவிட்டன.

புதுமையை நாடுவதைவிடப் பழமையைப் போற்றுதல் பண்புடைமையாகும். இக் காலத்தில் எத்தனையோ கட்டுக்கதைகள் எத்தகைய கருத்துஞ் சுவையும் இல்லாமல் வெறுஞ் சொற்கோவைகளாக வெளிவந்து மக்களுடைய அரிய பொழுதையும் பொருளையும் வீணாக்குவதைப் பார்க்கிறோம். மக்கட்கு அறிவு ஒழுக்கம் முதலிய உறுதி பயக்கத்தக்க கதைகளைப் போற்றிப் பாதுகாத்தல் சிரிய கடமையாகும்.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சிப் பொறுப்பாளர் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள் பழமையைப் பாதுகாக்க வேண்டுமென்னும் சிரிய பண்பினர். அவர்கள் இந்தப் பழங்கதைகள் மறைந்தொழிய விடாமல் பாதுகாக்க வேண்டும் என்றும், இவைகளை அந்நாளில் எழுதப் பட்ட உரைநடைப் போக்கைவிட்டுத் தற்காலத்திற் கேற்ற இனிய நடையில் காலப்போக்கிற்கேற்ப வேண்டிய அறநெறிகளைக் கூட்டி, வடசொற்களை நீக்கித் தனித்தமிழில் அழகிய முறையில் படிப்பவர் கட்குப் பொருள் நன்கு விளங்கும்வண்ணம் பத்திகள் பிரித்தும் தலைப்புக்கள் கொடுத்தும் எழுதி முடிக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். அவ்வாறே நானும் பழங்கதைகளை யெல்லாம் ஆராய்ந்து சிரிய முறையில் எழுதி முடித்தேன். சில கதைகள் பல வகை மாற்றங்களோடும் வெவ்வேறு பெயர்களோடும் ஒன்றோடு ஒன்று இணைந்தும் ஒன்றின் முடிபை மற்றொன்று வேறுவகையாகக் கொண்டும் காணப் பட்டன. அவைகளில் சிறந்தவைகளை எடுத்துக் கொண்டு மற்றவைகளை ஒதுக்கிவிட்டேன். உரை

நடையில் மாற்றங்கள் செய்திருப்பதையன்றிக் கதைகளின் கருத்து முடிபு ஆகியவைகளில் எத்தகைய மாற்றமும் செய்யப்படவில்லை. உரைநடை நன்முறையில் அமைந்துள்ளது. வடசொற்களும் பெரும்பாலும் தமிழ்ச்சொற்களாக மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. இக் கதைகள் கற்பவர்கட்குக் கழிபேருவகையை அளிக்கும் என்பது திண்ணம்.

பலவகையான பெயர்களைக் கொடுத்து மக்களை மருளச்செய்வதைவிட, ஒரே தன்மை வாய்ந்த இக் கதைகள் ஒரே பெயரைப் பெறுதல் தக்கதெனமுடிவுசெய்து, "தென்னாட்டுப் பழங்கதைகள்" என்னும் பெயரோடு ஐந்தாம் புத்தகத்தை அண்மையில் வெளியிட்டோம். அதைத் தொடர்ந்து இப்பொழுது ஆறும் புத்தகம் வெளிவருகிறது. பழங்காலக் கதைகள் எல்லாவற்றையும் ஒருங்கே படிக்க வேண்டும் என்னும் பேரார்வம் உடையவர்கள் இவ் வரிசையில் வெளிவந்த நூல்களைப்பெற்றுப் படித்து மகிழலாம். இச் சிறிய முயற்சிக்கு அன்பர்கள் அனைவருடைய ஆதரவும் இன்றியமையாததாகலின், அன்பர்கள் அனைவரும் இக் கதைப் புத்தகங்களை வாங்கி ஊக்கமளிப்பார்களென்று நம்புகிறேன்.

சு. அ. இராமசாமிப்புலவர்.

உள்ளுறை

தென்னாட்டுப் பழங்கதைகள்

ஆறாம் புத்தகம்

க. கடவுள் உருவைச் சுமந்த கழுதை

கடவுள் உருவஞ் செதுக்கப்பட்ட கல் ஒன்றை (விக்கிரகம்) ஓர் இடத்தில் இருந்து வேறோர் இடத்திற்குக் கொண்டுபோக வேண்டியதாக நேரிட்டது. அதனை ஒரு கழுதையின்மீது ஏற்றிக்கொண்டு சென்றனர். வழியில் கடவுள் உருவச் சிலையைக் கண்ட மக்கள் அதற்குத் தலை வணங்கினார்கள். ஓர் இடத்தில் மக்கள் பலர் நின்று கடவுள் உருவை வணங்கவே தன்மேல் இருக்கும் சிலையைத் தான் மக்கள் வணங்குகிறார்கள் என்பதை அறியாத கழுதை, 'மக்கள் நம்மைத்தான் வணங்குகின்றனர் போலும்' என்று எண்ணிக்கொண்டு அவ்விடத்திலேயே அசையாமல் நின்று விட்டது.

கழுதையை ஓட்டிக்கொண்டு சென்றவன் கழுதையின் கருத்தை உணர்ந்துகொண்டான். "ஓ கழுதையே! ஒரு கழுதையை மனிதர்கள் வணங்கும்படியான காலம் இன்னும் வரவில்லை; நீ நட, நட," என்று சொல்லித் தன் கையில் இருந்த கழியினால் கழுதையை அடித்தான். இவ்வாறு உலகிற் பலர் பிறருக்குச் செய்யப்படுகிற வழிபாடுகளைத் தமக்குச் செய்யப்படுவதாக எண்ணிக்கொண்டு வீண் களிப்படைகிறார்கள்.

உ. சின்னச்சாமி

ஒரு நாள் இரண்டு அறிவிலிகள் ஒரு திருக்கோவிலுக்குச் சென்றார்கள். கோவிலைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு சிவலிங்கத்தின் முன்னே போய் நின்றார்கள். ஒருவன் மற்றவனைப் பார்த்து, "என்னடா இது! எல்லோரும் சாமி சாமி என்கிறார்கள். ஆனால் இங்கே கல்தானே இருக்கிறது? கல்லையா சாமி என்று சொல்வது?" என்று கேட்டான்.

இவர்கள் பேசிக்கொண்டதைக் கோவில் அதிகாரியொருவன் கேட்டான். "என்னடா சாமியைக் கல் என்று இகழுகிறாய்?" என்று சொல்லிக் கல் என்று சொன்னவன கன்னத்திலே பளீர் என்று ஓரறை கொடுத்தான்.

பிறகு இருவரும் கோவில் மடைப்பள்ளிக்குப்போய் இரண்டணாக் காசு கொடுத்துப் பட்டைச்சோறு ஒன்றை வாங்கினார்கள். ஓரிடத்தில் உட்கார்ந்து சாப்பிடத் தொடங்கினார்கள். பட்டைச்சோற்றிலே பெரிய கல் ஒன்று கிடந்தது. அதனைக் கையில் எடுத்தவன் (அடிபடாதவன்) மற்றவனிடங் காட்டிப, "பாரடா! சோற்றிலே எவ்வளவு பெரிய கல்கிடக்கிறது?" என்று சொன்னான். இதனைக் கேட்டதும் முன்பு அடிபட்டவன், "இப்பொழுது நான் அடிபட்டதைப் பார்க்கவில்லையா? கல் என்று சொல்லாதே. சின்னச்சாமி என்று சொல்லடா," என்று சொல்லி ஓரறை பளார் என்று கன்னத்திலே கொடுத்தான்.

௩. இலக்கணத் தவறு

உயர்நிலைப்பள்ளியிற் கல்வி பயின்றுகொண்டிருந்த இரண்டு மாணவர்கள் ஒருநாள் வழிப்பயணஞ் சென்று கொண்டிருந்தார்கள். வழியிலே ஒரு பணப்பை கிடந்தது. அதனை ஒரு மாணவன் மற்றவனுக்குக் காட்டி, "அதோ அங்கே பார்; ஒரு பணப்பை கிடக்கின்றது. இன்று கடவுள் நமக்கு நல்ல நன்கொடை வழங்கினார்," என்று கூறினான்.

முதலாம் மாணவன் இவ்வாறு கூறி முடிப்பதற்குள் இரண்டாம் மாணவன் அப் பணப்பையைத் தன்னுடைய கையிலே எடுத்துக்கொண்டு, "நமக்கு" என்று பன்மையில் ஏன் சொல்லுகிறாய். உனக்கு என்று முன்னிலை ஒருமையிலன்றோ மொழியவேண்டும்," என்று கூறினான்.

முதலாம் மாணவன், "அப்படியா?" என்று கேட்டுக்கொண்டு வேறொன்றும் பேசாமல் சென்றான். இருவருஞ் சிறிது தொலை செல்வதற்குள் பணப்பையை இழந்தவன் கூச்சலிட்டுக்கொண்டு அவர்கட்குப் பின்னே ஓடிவந்தான். அப்பொழுது கையிலே பணப்பையை வைத்திருந்தவன், "பின்னால் ஓடிவருகிறவன் பணப்பைக்கு உரியவன்போல் தெரிகிறது. இப் பணப்பையினால் நமக்கு உதை கிடைத்தாலுங் கிடைக்கலாம்," என்று சொன்னான்.

இரண்டாவது மாணவன் இவ்வாறு இயம்பியதைக் கேட்ட முதல் மாணவன், "இப்பொழுது மட்டும் நமக்கு என்று ஏன் பன்மையில் சொல்லுகிறாய்? 'எனக்கு' என்று ஒருமையிலே சொல்," என்று இரண்டாம் மாணவனுடைய தவற்றினை எடுத்துக் காட்டினான்.

௫. கெட்டிக்கார எழுத்தாளர்கள்

ஓர் ஊரிலே இரண்டு எழுத்தாளர்கள் இருந்தார்கள். அவர்கள் இருவருடைய கையெழுத்துக்களுமே நன்றாக இரா. ஒருநாள் இந்த இரண்டு எழுத்தாளர்களுடைய மனைவியரும் ஒரு பொது இடத்திலே நின்று தத்தம் கணவர்களின் பெருமையைக் குறித்துப் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது ஒருத்தி மற்றொருத்தியைப் பார்த்து, "நீ என்னுடைய கணவனை எளிதாக நினைத்துவிடாதே! எழுதுவதில் மிகக் கெட்டிக்காரர். அவர் எழுதுகிறவைகளை மற்றவர்களாற் படிக்கவே முடியாது. திரும்ப இவர் படித்துக் காட்டினால்தான் தெரியும்," என்று சொல்லிப் பெருமையாகப் பேசினாள்.

இவ்வாறு முன்னவள் பேசியதைக் கேட்ட பின்னவள், "போடி போ; என்னுடைய கணவரின் பெருமை உனக்கென்ன தெரியும்? இவர் எழுதிவிட்டாரானால் பிறகு இன்னதுதான் எழுதியிருக்கிறோம் என்று சொல்லி இவராலும் படித்தறிந்துகொள்ள முடியாது. எத்தனையோ பேர் என் கணவருடைய கையெழுத்தைப் பார்த்துவிட்டு, 'இஃதென்ன நான்முகன் எழுதும் தலையெழுத்தைப் போல் இருக்கிறதே!' என்று புகழ்ந்து பாராட்டிப் பேசியிருக்கிறார்கள்," என்று சொன்னாள்.

இவர்கள் இவ்வாறு உரையாடிக்கொண்டிருப்பதைக் கவனித்த வேறு சில பெண்கள் கைகொட்டி நகைத்தார்கள். இவ்வாறு சிலபேர் புகழ்ந்து பேசுவதைப்போல் பழியைப் பேசி மற்றவர்கட்கு இழிவை யுண்டாக்குவதும் உண்டு.

ரு. கோவணப்பற்ருல் நேர்ந்த குடும்பச்சுமை

துறவி ஒருவர் ஓரிடத்தில் குடிசையொன்று போட்டு அதில் தவஞ்செய்து கொண்டிருந்தார். அவருடைய கோவணத்தை அடிக்கடி எலி கடித்துத் துண்டித்துக் கொண்டிருந்தது. எலி வராமல் இருப்பதற்காக அவர் ஒரு பூனையை வளர்க்கத் தொடங்கினர். அப் பூனைக்குப் பால் வேண்டியதற்காகக் கறவை ஒன்றை வாங்கினர். அக் கறவையை மேய்ப்பதற்காகப் பையன் ஒருவனை அமர்த்தினர். அப் பையன் தனக்குத் திருமணஞ்செய்து வைக்கவேண்டுமென்றபடியால் அப்படியே செய்து வைத்தார். அவனுக்கு ஐந்தாறு குழந்தைகள் பிறந்தன. துறவி பிச்சையெடுத்து மாட்டுக்காரப் பையனுடைய குடும்பத்தைக் காப்பாற்றிக் கொண்டிருந்தார். காலை முதல் மாலைவரை பிச்சையெடுக்க வேண்டியதாக இருந்தபடியால் தவஞ்செய்வதற்கும் அவருக்கு நேரமில்லை.

இவ்வாறிருக்கும்போது ஊரிலே ஒரு பெரிய கலகம் நேரிட்டது. ஊரார்கள் குழந்தை குட்டிகளைத் தூக்கிக் கொண்டு வேறு ஊர் நோக்கி ஓடினர்கள். மாட்டுக்காரப் பையன் துறவியைப் பார்த்து, "அடிகாள்! இதுவரையில் என்னுடைய குடும்பத்தைக் காப்பாற்றி வந்தது பெரிய காரியமில்லை. இப்பொழுது காப்பாற்றுவதுதான் பெரிய காரியமாகும்," என்று கதறினன். துறவியார் பையனுடைய குடும்பத்தை அழைத்துக் கொண்டு வேற்றூருக்கு ஓடத் தொடங்கினர். வழியிலே இவருடைய பங்குக்கு இவரும் இரண்டு குழந்தைகளைத் தூக்கும்படியாக நேரிட்டது.

அப்பொழுது துறவி 'அந்தோ! கோவணத்தில் பற்று வைக்கப் போய் இவ்வாறு குடும்பப் பற்று அதிகரித்ததே' என்று வருந்தி அப்பொழுதே எல்லாவற்றையுந் துறந்து விட்டுப் பற்றற்ற பரமயோகியாகப் பறந்து போய்விட்டார். ஒருவர் ஏதேனும் ஒரு பொருளில் பற்று வைத்தால் அப் பொருளால் நேர்வது தொல்லையே யாகும். இதனைக் கருதியே திருவள்ளுவரும், "மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல், உற்ருர்க் குடம்பும் மிகை" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

கூ. பெயரை மாற்றியது

வைணவக் குடியானவன் ஒருவனிடம் பண்ணையாள் ஒருவன் இருந்தான். அவன் குலத்தில் தாழ்ந்தவன்; அவனுடைய பெயர் பெருமாள். தாழ்குலத்தில் பிறந்து தன்னிடம் அடிமையாக இருக்கும் பண்ணையாளுக்குப் பெருமாள் என்று பெயர் இருப்பது குடியானவனுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே அவன் தன்னுடைய ஆளைப் பார்த்து, "உனக்கு இப் பெயர் வேண்டாம். வேறு பெயர் வைத்துக்கொள். அதற்காகிற செலவை நான் கொடுக்கிறேன். எவ்வளவு செலவாகும்?" என்று கேட்டான்.

அதற்குப் பண்ணையாள், "சேரியில் உள்ளவர்களுக்கெல்லாம் சாப்பாடு போடவேண்டும். இருபது வராகனும் பத்துக்கல நெல்லுஞ் செலவாகும்," என்றான். குடியானவன், "செலவைப் பார்க்காமல் பெயரை மாற்றிக்கொள்" என்று சொல்லி இருபது வராகனும் பத்துக்கல நெல்லுங் கொடுத்தான். பண்ணையாள் குடியானவன் கொடுத்த வைகளைக் கொண்டுபோய் வைத்துக் கொண்டு சிலநாள் நன்றாகச் சாப்பிட்டான். தனக்கு வேண்டியவர்கள் சிலருக்கும் விருந்திட்டான்.

பிறகு ஒருநாள் தன் ஆண்டையாகிய குடியானவனிடஞ் சென்றான். குடியானவன் தன்னுடைய பண்ணையாளைப் பார்த்துப், "பெயரை மாற்றிக் கொண்டாயா? இப்பொழுது புதிதாக வைத்துக் கொண்டிருக்கும் பெயர் என்ன?" என்று கேட்டான். உடனே அப் பண்ணையாள் "பெரிய பெருமாள்" என்று மறுமொழி கூறினான். இதனைக் கேட்ட குடியானவன் எத்தகைய மறுமொழியும் பேசமால் மௌனமாக இருந்தான். இவ்வாறுதான் சில பேர் சில காரியங்களில் தோல்வியடைந்து மௌனமாகி விடுகிறார்கள். இக் குடியானவன் பலனற்ற வேலையிற் பொருட் செலவு செய்து, நேர்மாறான பலனை அடைந்தான் கண்டீர்களோ?

ஏ. தேன்துளிக் கலகம்

ஒரு முகமதியன் ஒரு கடைக்குச் சென்று தேன் வாங்கினன். அப்பொழுது ஒரு துளிதேன் கீழே சிந்தியது. அத்தேன்துளிமேல் ஓர் ஈ வந்து உட்கார்ந்தது. அந்த ஈயை அங்கிருந்த ஒரு பல்லி பிடித்துக் கொண்டது. அப் பல்லியைக் கடைக்காரனுடைய பூனை பிடித்துக் கொண்டது. அப் பூனையை முகமதியனுடைய நாய் கடித்து விட்டது. அந் நாயைக் கடைக்காரன் அடித்தான். கடைக்காரனை முகமதியன் கத்தியால் வெட்டினன். அம் முகமதியனை மற்றைக் கடைக்காரர்கள் வெட்டிக் கொன்று விட்டார்கள். கடைக்காரர்களை ஊரில் உள்ள முகமதியர்கள் வளைத்துக் கொண்டார்கள். கடைக்காரர்களுக்காகப் பலபேர் வந்து முகமதியர்களை வளைத்துக் கொண்டார்கள். இருபக்கத்தார்கட்கும் பலமான போர் நடைபெற்றது. நூற்றுக்கணக்கான பேர் மாண்டுபோனர்கள். ஊர் பெருங் கலகத்திற்கு உள்ளாகி நிலை தடுமாறியது. ஊர் வாழ் மக்கள் அஞ்சி ஊரைவிட்டு வெளியே ஓடத் தொடங்கினர்கள்.

ஓடிக் கொண்டிருக்கும் பொழுது ஒரு மனிதன் மற்ருெரு மனிதனைப் பார்த்து, "இக் கலகம் எவ்வாறுண்டாகியது தெரியுமா?" என்று கேட்டான். கலகத்தின் மூலகாரண உண்மையை அறிந்திருந்த அம் மனிதன். "இது தேன் துளிக் கலகம்," என்று மறுமொழி கூறினன்,

இத்தகைய ஒன்றுமில்லாத சிறிய காரணங்களைக் கொண்டே இவ்வுலகத்தில் பெரியபோர்களும் அழிவுகளும் இன்றைக்கும் உண்டாகிக் கொண்டிருக்கின்றன.

அ. படித்தவன் பலனடைந்தான்

ஒரு மனிதனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களில் இளையவன் தாய் தந்தையர் கூறிய அறிவுரையைக் கேட்டுக் கல்வியைக் நன்கு கற்றுக் கொண்டான். மூத்தவனோ தாய் தந்தையர் மொழிந்த நல்லுரைகளைக் கேளாமல் மூடனாகத் தலைநிமிர்ந்து திரிந்தான்.

இந்த இரண்டு பிள்ளைகளும் இலைபறிக்கும் பொருட்டு ஒருநாள் காட்டிற்குச் சென்றார்கள். ஓரிடத்திலே ஒரு கல்லின்மேல் யாதோ எழுதியிருத்தலை மூத்தவன் கண்டான். அவனுக்குப் படிக்கத் தெரியாதாகையால் தன்னுடைய தம்பியைக் கூப்பிட்டுக், "கல்லின்மேல் என்ன எழுதியிருக்கிறது பார்," என்றான். அக் கல்லில் எழுதப்பட்டிருந்த செய்தி, "இக் கல்லுக்கு அடியிலே ஒரு பெட்டியில் புதையல் வைக்கப்பட்டிருக்கிறது," என்பதாம். ஆனால் இளையவன் இச் செய்தியைத் தன் அண்ணனுக்குக் கூறாமல் மறைத்துவிட்டு, "இவ்விடத்தில் ஒரு பூதம் இருக்கிறதாம். அஃது இங்கு வருபவர்களை அடித்துக் கொன்று விடுமாம்," என்று வேறொரு பொய்யான செய்தியைக் கூறித் தன் அண்ணனை விரைவாக அழைத்துக் கொண்டு போய்விட்டான். பிறகு தான் மட்டும் மறைமுகமாக வந்து அப் புதையலை எடுத்துக் கொண்டு போய்ச் சிறந்த செல்வனாக வாழ்ந்திருந்தான். ஆகவே ஒவ்வொருவரும் கல்வியைக் கற்கவேண்டிய காலத்திலேயே நன்கு கற்றுக்கொள்ள வேண்டும். கல்வியறிவில்லாதவர்கள் விலங்கொடு விலங்காக மதிக்கப் பெறுவரே யன்றி மக்களாக மதிக்கப் பெறார். இதனை எண்ணியே தமிழ்மறை செய்த திருவள்ளுவனாரும்,

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்."

என்று தமிழ்மறையிலே கூறியருளினார்.

௯. கடன்காரனுக்கு வழி காட்டியது

ஒரு செட்டியிடத்தில் ஒரு குடியானவன் ஆயிரம் வராகன் கடன் வாங்கினான். குறிப்பிட்ட காலத்தில் கடனைக் கொடுக்கவில்லை. "இதோத் தருகிறேன் அதோத் தருகிறேன்," என்று சில ஆண்டுகள் போக்குக் காட்டிக் கொண்டேயிருந்தான். பிறகு செட்டி அடுத்தடுத்துப் பலமுறை அலைந்தபோது குடியானவன் இறுதியாக ஒரு நாளைக் குறிப்பிட்டு அந்நாளில் வருமாறு கூறினான்.

செட்டி, 'இன்றைக்கு எவ்வாறேனும் குடியானவன் கடனைக் கொடுத்துவிடுவான்; இனிமேல் காலங்கடத்தி வேறுநாள் குறிப்பிடமாட்டான்' என்னும் எண்ணத்தோடு குடியானவன் கடைசியாகக் குறிப்பிட்ட நாளில் சென்றான். செட்டி வருதலைக் குடியானவன் கண்டான். மிகு விரைவாக எழுந்து ஒரு கூடையில் புளியங்கொட்டையை எடுத்துக்கொண்டு கொல்லைப்புறத்து வேலிக்குச்சென்றான். ஒரு கரண்டிக்காம்பால் குத்திக் குத்திப் புளியங்கொட்டையைப் போட்டுத் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்தான்.

செட்டி வீட்டுக்குவந்து "வீட்டுக்காரன் எங்கே?" என்று வீட்டில் இருந்தவர்களிடம் உசாவினான். கொல்லையில் இருப்பதாக உணர்ந்தான். கொல்லைக்குச்சென்று குடியானவனுக்கு முன்னே நின்றான். குடியானவனோ செட்டியை நிமிர்ந்துகூடப் பார்க்காமல் மேலும் விரைவாகப் புளியங்கொட்டையைப் போட்டுத் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்தான்.

செட்டி குடியானவனைப் பார்த்து, "நான் வந்திருக்கிற காரியத்தைக் கவனிக்காமல் உம்முடைய வேலையையே பார்த்துக்கொண்டிருக்கிறீரே?" என்று கேட்டான். அதற்குக் குடியானவன், "என்ன இப்படிச் சொல்லுகிறீர்? உம்முடைய காரியத்தைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறேன்; உமக்குக் கண் தெரியவில்லையா?" என்று கேட்

டான். "அப்படியானால் நிரம்ப மகிழ்ச்சி; வராகனைக் கொடும்," என்றான் செட்டி.

குடியானவன், "இதோ புளியங்கொட்டைகளைப் போட்டுக்கொண்டிருக்கிறேனே, இவைகளெல்லாம் முளைத்து வளர்ந்து மரமாகிக் காய்த்த உடனே முதற்காய்ப்பிலே வருகிற புளியை விற்று உம்முடைய கடனைக் கொடுத்து விடுகிறேன்," என்று சொன்னான். இதனைக் கேட்ட செட்டி மிகுந்த வயிற்றெரிச்சல்கொண்டு நகைத்தான். குடியானவன் செட்டியைப் பார்த்துக், "கடனுக்கு வழி பிறந்துவிட்டதைக்கண்டு நகைக்காமல் என்ன செய்வீர்?" என்று கேட்டான். இவ்வாறு போக்குக் காட்டி மற்றவர்களை எய்க்கிறவர்களும் உலகத்திலே எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.

---

௧௦. பிரமசாரி ஓடங் கவிழ்த்தது

ஓர் ஆற்றிலே நிறைவெள்ளஞ் சென்றுகொண்டிருந்தது. ஆற்றின் இக்கரையிலே இருந்து ஓடம் ஒன்று அக்கரைக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தது. ஓடத்திலே பலர் ஏறியிருந்தார்கள். துடைப்பக்கட்டு வைத்திருந்த ஒரு மனிதன், ஒரு பாம்புப்பிடாரன், ஒரு குரங்காட்டி ஆகியவர்களும் ஓடத்தில் இருந்தார்கள். அப்பொழுது ஒரு பார்ப்பனப் பிரமசாரி ஓடிவந்து தன்னையும் ஓடத்தில் ஏற்றிக்கொள்ளுமாறு சொன்னான். அப் பிரமசாரி குறும்பு செய்வதில் பேர்பெற்றவன். ஓடத்திலே இருந்த மக்கள், "அந்தக் குறும்புக்காரப் பிரமசாரியை ஏற்றக்கூடாது" என்றார்கள். காசுக்கு ஆசைப்பட்ட ஓடக்காரன் பிரமசாரியைப் பார்த்துப், "பையா! நீ மிகுந்த குறும்புக்காரன் உன்னை ஓடத்தில் ஏற்றினால் ஏதேனும் குறும்பு செய்து கொண்டிருப்பாய். உன்னை ஏற்றுவதானால் கை கால்களை ஒன்றாகச் சேர்த்து இறுக்கிக் கட்டிப்போடுவேன்; உடன்பாடா?" என்று கேட்டான். பிரமசாரி 'அப்படியே

செய்யலாம்' என்று உடன்பட்டான். ஓடக்காரன் பிரமசாரியினுடைய கைகளையுங் கால்களையும் நன்கு கட்டிவிட்டு ஓடத்திலே ஏற்றிக்கொண்டான்.

ஓடம் நடுஆற்றிலே சென்றுகொண்டிருந்தது. பிரமசாரி சும்மா இருக்கவில்லை. துடைப்பக்கட்டையில் இருந்து வாயினால் ஓர் ஈர்க்கியை இழுத்துக் குரங்கின் குதத்திலே குத்தினன். குரங்கு துள்ளிப் பாம்புப்பெட்டியின்மேலே விழுந்தது. அதனால் பாம்புப்பெட்டி திறந்துகொண்டது. பாம்பு 'புஸ்' என்று படமெடுத்துக்கொண்டு எழும்பியது. ஓடத்தில் இருந்தவர்கள் யாவரும் அஞ்சி ஒரு பக்கமாக ஓடினார்கள். உடனே ஓடங் கவிழ்ந்துவிட்டது. நீந்தத் தெரிந்த இரண்டொருவரைத் தவிர மற்றவர்களெல்லோரும் ஆற்றுக்கு இரையானார்கள். கைகால்கள் கட்டப்பட்டிருந்த பிரமசாரிக்கு நேர்ந்த கதியைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? அதுமுதல், "பிரமசாரி ஓடங்கவிழ்த்ததுபோல்'' என்று ஒரு பழமொழி உலகிலே வழங்கி வருகிறது.

கக. பள்ளிப்பிள்ளைகளின் வேண்டுகோள்

ஒரு காலத்தில் ஒரு நாட்டில் பல ஆண்டுகள் மழையில்லாமற் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. மழைக்காக ஒவ்வொருவருந் தத்தமக்குத் தோன்றியவைகளைச் செய்தார்கள். சிலர் வருணனை வழிபட்டார்கள். சிலர் அந்தணர்கட்கு உணவிட்டார்கள். சிலர் திருக்கோயில்களுக்குச் சிறப்பு வழிபாடு செய்தார்கள். சிலர் தான தருமங்கள் செய்தார்கள்.

ஒரு பள்ளிக்கூட ஆசிரியன் தன் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகளையெல்லாம் ஒருநாள் அழைத்துக்கொண்டு ஒரு மைதானத்தை நோக்கிச் சென்றான். ஆசிரியன் மாணவர்களோடு மைதானத்தை நோக்கிச் செல்லுதலைக்கண்ட ஊரார்கள் ஆசிரியனைப் பார்த்துக், 'கணக்

காயரே! பிள்ளைகளையெல்லாம் எங்கே அழைத்துக் கொண்டு போகிறீர்?" என்று கேட்டார்கள். அதற்கு ஆசிரியன், "இப்பிள்ளைகள் கள்ளங்கபடறியாத வெள்ளை உள்ளத்தினர். இவர்கடம் வேண்டுகோளை இறைவன் கேட்காமல் இருப்பானா? இவர்கள் தெய்வங்களுக்கு ஒப்பான வர்களாவரே. ஆகவே, மழையின் பொருட்டு இவர்களைக் கொண்டு தெய்வத்தை வேண்டச் செய்யலாம் என்று அழைத்துக்கொண்டு போகிறேன்," என்றான்.

இதனைக் கேட்டவுடன் ஒருவன் கணக்காயனைப் பார்த்து நகைத்து, "ஓய் கணக்காயரே! கடவுள் பள்ளிப் பிள்ளைகளின் வேண்டுகோளை நிறைவேற்றுபவராக இருப் பாராயின் பள்ளிக்கூட உபாத்தியாயர்களெல்லோரும் வெகு காலத்திற்கு முன்பே எமலோகத்திற்குக் குடியேறி இருப்பார்களே! இச் செய்தி உமக்குத் தெரியாதா?" என்று சொல்லி நகைத்தான்.

ஆசிரியனுக்குத் தம் பள்ளிப் பிள்ளைகளின் தகுதி யைப் பற்றிய எண்ணமும், ஒருநாள் ஒரு மாணவன், "வாத்தியாருஞ் சாகாரா வயிற்றெரிச்சல் தீராதா" என்று பாடிய பாட்டின் நினைப்பும் அப்பொழுதுதான் உண்டா யிற்று. உடனே அவன் மைதானத்திற்குப் போகாமலே பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்குத் திரும்ப அழைத்துக் கொண்டு வந்துவிட்டான்.

கஉ. கடைக்காரன் எண்ணம்

அரசியல் அலுவலாளன் ஒருவன் துணி வாங்கும் பொருட்டு ஒரு துணிக்கடைக்குச் சென்றான். சரிகைச் சேலை ஒன்றைக் கையில் எடுத்து, "இதனுடைய விலை என்ன?" என்று கடைக்காரனைப் பார்த்துக் கேட் டான். கடைக்காரனோ என்னவோ எண்ணமிட்டுக் கொண்டு, "இதோ வந்துவிட்டேன் சிறிது பொறுங்கள்," என்றான். எவ்வளவு நேரங் காத்துக்கொண்டிருந்த

போதினும் கடைக்காரன் துணிவாங்க வந்த பெரிய மனிதனைக் கவனிக்காமல் எண்ணமிட்டுக் கொண்டேயிருந்தான்.

பெரிய மனிதன் கடைக்காரனைப் பார்த்து, "என்ன இன்னும் உன்னுடைய எண்ணம் ஒரு முடிவுக்கு வரவில்லையா?" என்று கேட்டான். அதற்குக் கடைக்காரன், "பாதிமுடிந்து விட்டது. இன்னும் ஒரு பாதிதான் எஞ்சியிருக்கிறது," என்று மறுமொழி கூறினன். "அவ்வளவு தொலை ஆழ்ந்து எண்ணமிடவேண்டிய பெரிய காரியம் என்ன?" என்று அந்தப் பெரிய மனிதன் கேட்டான்.

அதற்குக் கடைக்காரன், "ஐயா! நான் கூறுவதைக் கேளுங்கள். இவ்வூர்ப் பாளையக்காரருடைய மகளை நான் திருமணம் செய்துகொள்ள விரும்பியிருக்கிறேன். இதன் பொருட்டு நான் மிகுமுயற்சி செய்து பாதிக்காரியம் நிறைவேறியது அஃதாவது என்னைச் சேர்ந்த உறவினர்கள் எல்லோரும் இத் திருமணத்திற்குத் தங்களுடைய உடன்பாட்டைத் தெரியப்படுத்தி விட்டார்கள். இனிமேற் பெண் விட்டாருடைய நோக்கத்தை அறிந்து கொள்ளவேண்டியதுதான் பாக்கியாக இருக்கிறது," என்று சொன்னன்.

இதனைக் கேட்ட பெரிய மனிதன், "கடகட" என்று நகைத்து, "இன்னமுங்கூட எண்ணமிட்டு மறுபாதியையும் நிறைவேற்றித் திருமணத்தை முடிவுக்குக் கொண்டுவா," என்று கூறிவிட்டு வேறு கடையை நோக்கிச் சென்முன். இவ்வாறு வீணக எண்ணமிட்டுக் களிப்படைகிறவர்கள் உலகத்தில் எத்தனையோ பேர் இருக்கிமுர்கள்.

---

௧௪. கழுதையிடங் கற்றுக் கொண்டது

ஒரு காட்டிலே ஒரு நரியுங் கழுதையும் அரிமாவும் நண்பர்களாக விளங்கின. ஒருநாள் மூன்றுஞ் சேர்ந்து வேட்டைக்குச் சென்று, ஒரு விலங்கைக் கொன்று இரை தேடிக்கொண்டு வந்தன. அரிமா கழுதையைப் பார்த்துக், "கழுதை நண்பனே! இதனை மூவருக்கும் பங்கிடுக," என்று கூறியது.

கழுதை புலாலைப் பங்கிடத் தொடங்கி ஒப்பான மூன்று பங்குகளாகப் பிரித்துவைத்தது. இதனைப் பார்த்த அரிமா மிகுந்த சினங்கொண்டது. கழுதையைப் பார்த்து, "ஊரிலுள்ளாருடைய அழுக்குத்துணி முதலிய வைகளைச் சுமக்கும் மடையனாகிய நினக்கு அறிவு எங் கிருந்து வரும்? நீயும எங்கட்கு ஒப்பானவனா?" என்று கூறிக் கழுதைமேல் பாய்ந்து அதனை மிகக் கொடுமை யாகக் கொன்று தின்றுவிட்டது.

பிறகு சிறிது நேரத்திற்குமேல் நரியைப் பார்த்து, "நண்பனே! நீ இந்த இறைச்சியை நம் இருவருக்கும் பங்கிடு," என்று கூறியது. பங்கிடத் தொடங்கிய நரி தான் ஒரு சிறுதுண்டை எடுத்துக் கொண்டு மிகுதியை எல்லாம் அரிமாவிற்கு என்று ஒதுக்கியது. இதனைக் கண்ட அரிமா, "நண்பனே! நீ இத்தகைய சிறந்த அறிவினை யாவரிடமிருந்து கற்றுக் கொண்டனை? நீ பங்கிட்ட முறை மிக நன்றாக இருக்கிறதே?" என்று கூறிப் பாராட்டி வினவியது.

நரி அரிமாவைப் பார்த்து, "விலங்குகட் கரசே! வண்ணான் கழுதைக்கு நேர்ந்த கதியைக் கண்ணாரக் கண்ட பிறகும் எனக்கு நல்லறிவு வராதிருக்குமோ?" என்று மறு மொழி கூறியது. தீயோர்களுடைய குறிப்பை யறிந்து அதற்குத் தக்கவாறு நடந்துகொள்பவர்கள்தாம் இவ் வுலகிலே அறிவாளிகளாகப் போற்றப் பெறுவார்கள்.

கஙு. அரசன் பேசிய புதுமை

ஓர் இடத்தில் பலபேர் கூடி உரையாடிக் கொண்டிருந்தார்கள். அந்த இடத்திற்கு ஓர் இளைஞன் மிகுவிரைவாக ஓடிவந்தான். அங்கிருந்தவர்களைப் பார்த்து, "அரசன் என்னோடு பேசினன், அரசன் என்னோடு பேசினன்," என்று சொல்லி இன்பக் கூத்தாடினன்.

சிறுவன் தன்னுடைய மார்பின் மேலே கையை வைத்துக் கொண்டு, "அரசன் என்னோடு பேசினன், பேசினன்," என்று களிநடம் புரிதலைக் கண்ட ஒருவன் இளைஞனைப் பார்த்து, "அப்படி அரசன உன்னோடு பேச நேர்ந்த செய்தி என்ன?" என்று கேட்டான.

அதற்குச் சிறுவன், "அரசன் ஒரு குதிரையின்மீது வந்து கொண்டிருந்தான். நான் நடுவழியிலே நின்று கொண்டிருந்தேன். அரசனுடைய குதிரை வருகிறதே என்று சிறிதும் விலகாமல் கல்லுப் பிள்ளையாரைப்போல் நின்று கொண்டிருக்கவே அரசன் என்னைப் பார்த்து, 'அடே முழுமூடப பையலே! உனக்கு அறிவு இருக்கிறதா இல்லையா? குதிரை வருவதைப் பார்த்துவிட்டுங் குட்டிச் சுவரைப்போல் நிற்கிருயே! எட்டிப்போடா மட்டிப் பையலே,' என்று சொல்லிப் பேசினன்," என்ருன்.

இளைஞன் இயம்பியதைக் கேட்ட மற்றவர்கள், "ஓஓ அப்படியா! இனிமேல் நினக்கு எத்தகைய குறைவும் இல்லை. நீ பெருந்திருவாளனுனய். உன்னுடைய பெருமையே பெருமை!" என்றுகூறி எள்ளி நகையாடிப் பெருநகை புரிந்தார்கள். இவ்வாறு தற்பெருமை பாராட்டிக் கொள்ளும் வீணர்களும் உலகத்திலே எத்தனையோ பேர் இருக்கிருர்கள்.

௯௫. நூறுபேர் வீரர்களை ஓடச்செய்தது

ஒருநாள் மாலையில் ஓரிடத்தில் பலபேர் ஒன்றுகூடி உரையாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவ் விடத்திற்கு ஒரு சிறுவன் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க மிகுவிரைவாக ஓடிவந்தான். அங்கிருந்தவர்கள் பையனைப் பார்த்து, "ஏன் இவ்வாறு ஓடிவருகிறாய்?" என்று கேட்டார்கள். அதற்குச் சிறுவன், "நான் நூறுபேர் போர் வீரர்களை ஓடச்செய்து வருகிறேன்," என்றான். அங்கிருந்த வர்கள் மிகுந்த வியப்படைந்து, "நீ யாவது நூறுபேர்களை ஓடச்செய்யவாவது? நீ கூறுவது பெரும்புளுகாக அன்றோ இருக்கிறது," என்று கூறினார்கள். அவன் கூறியதை யாரும் நம்பவில்லை. ஒரு மனிதன் சிறுவனைப் பார்த்து, "நீ எப்படி நூறு பெயர்களைச் ஓடச்செய்தாய்?" என்று கேட்டான்.

அதற்குச் சிறுவன், "இருபது இருபது பேராய் ஐந்து வரிசைகள் கொண்ட போர்வீரர் பயிற்சிப்படை ஒன்று ஓரிடத்தில் நின்று துப்பாக்கியால் சுடுவதற்கும் ஈட்டியாற் குத்துவதற்கும் கத்தியால் வெட்டுவதற்கும் பழகிக்கொண்டிருந்தார்கள். நான் சிறிது நேரம் நின்று அவர்கள் செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். பிறகு இவர்கள் என்ன செய்கிறார்கள் பார்ப்போம் என்று, ஒரு சிறிய கூழாங்கல்லை எடுத்து அவர்களில் ஒருவன்மீது வீசினேன்.

நான் இவ்வாறு செய்ததைப் பார்த்தவுடனே அவர்களுடைய தலைவன், 'அந்தச் சின்னப் பையலைப் பிடித்துக்கோ பிடித்துக்கோ,' என்றான்; உடனே நான் அவர்களைப் பார்த்து அழகு காட்டிவிட்டு ஓடத்தொடங்கினேன். அவர்கள் சிறிது தொலை துரத்திவிட்டு, 'வண்டுப் பயலுக்கு என்ன கொழுப்பு!' என்று சொல்லிக் கொண்டே போய்விட்டார்கள்," என்றான். இதனைக் கேட்டு அங்கிருந்தவர்கள், "நீ பெரிய வீரன்தான்; ஐயமே இல்லை," என்று சொல்லி நகைத்தார்கள்.

௧௧. இலவணமுஞ் சாணமும்

பேரறிஞராக விளங்கிய ஒரு சாத்திரியார் தம்முடைய அருமைத் திருமகனுக்குத் திருமணஞ்செய்ய எண்ணினர். தம்மைப்போன்றே பேரறிஞராக விளங்கிய மற்றொரு சாத்திரியாரின் அருமைத் திருமகளைத் திருமணஞ் செய்து வைத்தார். இச் சாத்திரியாருடைய இல்லத்திற்கு ஒரு நாள் இரவில் வேறொரு சாத்திரியார் விருந்தினராக வந்தார். இருவரும் உண்டுகொண்டிருந்தனர். விருந்தாளியாக வந்த சாத்திரியார் சிறிது உப்புக்கேட்க எண்ணினர். உப்பு என்று இரவில் உரைத்தல் கூடாது என்று எண்ணியவராய், உணவு பரிமாறிய பெண்மணியாகிய வீட்டுக்காரச் சாத்திரியாரின் மருமகளை நோக்கி, "அம்மா! சிறிது இலவணங் கொண்டுவா," என்று உரைத்தனர். அப்பெண்மணி, "கொண்டு வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றனள்.

வீட்டுக்காரச் சாத்திரியார் தம்முடைய மருமகளைக் கூப்பிட்டு, "அம்மா! இலவணம் என்றால் என்னவென்று அறிவையா?" என்று கேட்டார். அதற்கு அப்பெண்மணி, "மிக நன்றாக இருக்கின்றது; ஒரு பெரிய சாத்திரியாருடைய மகளாகப் பிறந்து, ஒரு பெரிய சாத்திரியாருடைய மருமகளாக வாழ்ந்துகொண்டிருக்கும் எனக்கு இலவணம் என்றால் இன்னது என்று தெரியாமலும் இருக்குமோ?" என்று மறுமொழி உரைத்துக்கொண்டே போய்ச் சிறிது சாணத்தை எடுத்துவந்து விருந்தாளிச் சாத்திரிகளின் இலையிலே பரிமாறினாள். சாத்திரிகள் இருவரும் விழுந்து விழுந்து நகைத்தார்கள். அங்கு உண்டுகொண்டிருந்த மற்றவர்களும் வயிறு புண்ணாகுமாறு நகைத்தார்கள்.

இவ்வாறு சிலர் எல்லாம் எங்கட்குத் தெரியும் என்று கூறி, ஒன்றும் உணராதவர்களாய் மடத்தனமான காரியங்களைச் செய்தலும் உண்டு.

கஎ. இருதாரக்காரன்

ஓர் ஊரிலே செல்வன் ஒருவன் இருந்தான். அவனுக்கு அகவை ஐம்பதுக்குமேல் ஆகிவிட்டது. ஆயினும் உலக ஆசைகள் அவனை விட்டுச் சிறிதும் அகலவில்லை. "இருதாரம் ஒருநாளுந் தேடவேண்டாம்" என்னும் பெரியார் வாக்கிற்கு மாறாக மேலும் ஓர் இளம்பெண்ணைத் திருமணஞ் செய்துகொண்டான். முதல்மனைவிக்கு அகவை நாற்பத்தைந்து. இரண்டாம் மனைவிக்கோ அகவை பதினெட்டு.

முதல் மனைவி தன் கணவன் இளைஞன்போல் இருப்பது நல்லதன்று என்னும் எண்ணங்கொண்டவளாய் அவனுடைய தலையில் இருந்த கருமயிர்களையெல்லாம் ஒவ்வொன்றாகப் பிடுங்கிக்கொண்டிருந்தாள். இளையவளோ தன் கணவன் கிழவனைப்போல் காணப்பெறுதல் நல்லதன்று என்னும் எண்ணங்கொண்டவளாய் அவனுடைய தலையில் இருந்த நரை மயிர்களையெல்லாம் விடாமற் பிடுங்கியெறிந்துகொண்டே வந்தாள். இவ்வாறு இருவரும் இருவகையான எண்ணத்தொடு நடக்கவே அச் செல்வன் சிறிது நாளில் மொட்டைத் தலையனானான்.

ஒவ்வொருவரும் தத்தம் நன்மையை நாடுதல் இவ்வுலக இயற்கை அன்றோ?

கஅ. காலக்கணிதன்

ஒரு பெரிய பட்டணத்திலே காலக்கணிதன் (சோதிடன்) ஒருவன் இருந்தான். அவன் தெருவிலே ஒரு மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு போகிறவர்கள் வருகிறவர்களுக்கு நிகழப்போகிற நன்மை தீமைகளை அவரவர் பிறந்த நாள் முதலியவைகளைக்கொண்டு குறித்துப் பலன் சொல்லி ஒவ்வொருவரும் கொடுக்கும் பொருளைக்கொண்டு தன் வாழ்க்கையை இனிது நடத்திக்கொண்டிருந்தான்.

ஒருநாள் அச்சோதிடன் தன்னைச் சூழ்ந்துள்ள பலருக்கு நிகழப்போகிற நன்மை தீமைகளை மிகு தடபுடலாக எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தான். பலபேர் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் ஒருமனிதன் வெகு பரபரப்புடன் ஓடிவந்து, "ஓ சோதிடரே! சோதிடரே!! உம்முடைய வீட்டில் நெருப்புப் பற்றிக்கொண்டு எரிகிறது. உம்முடைய மனைவி தான் ஒருத்தியாகவே வீட்டுச் சாமான்களையெல்லாம் வெளியேற்றித் துன்பப்பட்டுக்கொண்டிருக்கிருள்." என்று சொன்னான். இதனைக்கேட்ட உடனே சோதிடன் தன்னுடைய ஓலைச் சுவடிகள் பஞ்சாங்கங்கள் முதலியவைகளைச் சுருட்டிக் கக்கத்திலே வைத்துக் கொண்டு குடல் தெறிக்க வீட்டை நோக்கி ஓடினன்.

அங்கு நின்ற சிலர் சோதிடனுடைய நிலைமையைக் கண்டு உள்ளம் இரங்கினர்கள். இவ்வாறுதான் சிலர் தங்கட்கு நிகழப்போகிற நன்மை தீமைகளை உணர்ந்து கொள்ளும் ஆற்றல் அற்றவர்களாய் மற்றவர்களுக்கு உபதேசஞ்செய்து தங்கள் காலத்தைக் கழிக்கிருர்கள்.

---

௩௯. பத்தியம் என்ன? எங்கே கிடைக்கும்?

ஓர் அந்தணனுக்குக் கடுமையான நோய் உண்டாயிற்று. அந்நோயினல் உடல் துரும்பாக இளைத்துப் போய்விட்டது. பலங் குன்றியது. கன்னம் குழிவடைந்தது. கண்கள் பஞ்சடைந்தன. காதுகள் செவிடுபட்டுப் போயின. அவன் தென் திசைக்குப் பயணம் புறப்படுவது இனிமேல் தப்பாது என்று அவனுடைய உறவினர்களும் பிறரும் உணர்ந்துகொண்டனர்.

அப்பொழுது அவனைச் சூழ்ந்திருந்தவர்களில் ஒருவர் அந் நோயாளியைப் பார்த்துப், "பெரியீர்! தாங்கள் இவ்வுலகத்து இன்பதுன்பங்களையெல்லாம் நன்ருக நுகர்ந்து விட்டீர்கள். தாங்கள் இனிமேல் இவ்வுலக வாழ்வைத்

துறந்து செல்வீர்கள் என்பதற்குச் சிறிதும் ஐயமேயில்லை. தாங்கள் இச் சமயத்தில் துறவு நிலையைப்பெற்றுக் கொண்டு வீடுபேற்றையடைதல் மிகவுஞ் சிறந்ததாகும். ஆகவே தாங்கள் இப்பொழுது துறவு பெற்றுக்கொள்ளுகிறீர்களா?" என்று கேட்டார்.

இதனைக்கேட்டவுடனே அந்த நோயாளி அந்தணன், "ஆகா, அதற்கென்ன? அவ்வாறே பெற்றுக்கொள்ளுகிறேன். தடையொன்றும் இல்லை. ஆனால், அதற்குப் பத்தியம் என்ன? அஃதெங்கே கிடைக்கும்? உப்பில்லாப் பத்தியமானால் நான் சாப்பிடுவதற்கு எத்தகைய தடையும் இல்லை," என்று மறுமொழி கூறினான். இதனைக் கேட்டுக்கொண்டு பக்கத்தில் இருந்தவர்கள், "இப் பார்ப்பான் துறவு நிலையைப்பற்றி உணர்ந்திருப்பது இவ்வளவுதானா?" என்று எண்ணி நகைத்தார்கள்.

இவ்வாறு எத்தனையோ பேர் அகவை மிகுந்தும் உலகியல்களை உணர்ந்துகொள்ளாத மடையர்களாக இருக்கிறார்கள்.

உ0. காலைவெட்டக் காரணம்

ஓர் இடத்திலே பலபேர் ஒன்றுகூடி உரையாடிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் தாம் தாம் செய்த ஆண்மை மிக்க வேலைகளையெல்லாம் எடுத்துக்கூறிப் பெருமை பாராட்டிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது போர்க்களத்திற்குப் போய்ப் போர் செய்துவிட்டு வந்த போர்வீரன் ஒருவன் அங்கிருந்தான். அவன் தன்னுடைய வீரப்பிரதாபங்களையெல்லாம் விளம்பத் தொடங்கினான். "அன்பர்களே! நான் ஒரு போர்முனையில் எதிரியின் பக்கத்து வீரன் ஒருவனுடைய காலை வெட்டிவிட்டேன்" என்று வீரம் பேசினான். இதனைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள், "நீ பகைவனுடைய தலையை வெட்டாமல் காலை வெட்டியதற்குக் காரணம் என்ன?" என்று

கேட்டார்கள். அதற்கு அப்போர்வீரன், "எனக்குமுன்னால் யாரோ ஒருவன் தலையை வெட்டிக்கொண்டு போய்விட்டான். பிறகு எனக்குக் கால்தான் வெட்டுவதற்கு அகப்பட்டது" என்று சொன்னான். இதனைக் கேட்டிருந்த யாவரும் நகைத்தார்கள்.

---

௨௧. கோழியைக் கொன்ற பலன்

ஓர் ஊரிலே பணக்காரி ஒருத்தி இருந்தாள். அவளிடத்திலே நான்கு பெண்பிள்ளைகள் வேலைக்காரிகளாக இருந்தார்கள். பணக்காரியிடத்தில் சேவற்கோழி ஒன்றும் இருந்தது. நாள்தோறுஞ் சேவல் கூவியவுடனே வீட்டுக்காரி வேலைக்காரிகளை எழுப்பி வீட்டு வேலைகளைச் செய்யச் சொல்லுவாள். சோம்பேறிகளான அவ் வேலைக்காரிகள் அதிகாலையில் படுக்கையைவிட்டு எழுவதற்கு விரும்பவில்லை. பொழுது விடியும்வரையும் நன்றாகத் தூங்கிக்கொண்டிருப்பதற்கு வழி என்ன என்று கலந்து எண்ணினார்கள்.

'கோழி கூவுகிறபடியினாலேயே தலைவி நேரத்தை அறிந்துகொண்டு நம்மைப் படுக்கையை விட்டு எழுப்பி விடுகிறாள். நாம் இக் கோழியைக் கொன்றுவிட்டால் பிறகு நேரந் தெரியாது. நாம் நம்முடைய விருப்பம்போல் உறங்கிக்கொண்டிருக்கலாம்' என்று முடிவு செய்தார்கள். கோழியை மறைமுகமாகக் கொன்று புதைத்துவிட்டுக் கோழியைப் பூனை கொண்டுபோய்விட்டது என்று கதை கட்டிவிட்டார்கள்.

நடந்தது என்ன தெரியுமா? வேலைக்காரிகள் எண்ணியதற்கு நேர் மாறாக முடிந்துவிட்டது. கோழி போய் விடவே வீட்டுத் தலைவிக்கு நேரந்தெரியாமற் போய்விட்டது. நள்ளிரவிலேயே வேலைக்காரிகளை எழுப்பிப் பல வேலைகளையுஞ் செய்யுமாறு ஏவத் தொடங்கிவிட்டாள்.

இதனைக் கண்ட வேலைக்காரிகள், 'இது கோழியைக் கொன்றதற்குப் பலனா? நாம் ஒன்று நினைக்க நடப்பது வேறொன்றாக முடிந்துவிட்டதே' என்று உள்ளங் கலங்கினார்கள்.

உலகத்திலே இவ்வாறுதான் சிலர் நன்மையை எதிர்பார்த்துப் பிறகு தமது எண்ணத்திற்கு மாறாகத் தீமை விளைதலைப் பார்க்கிறார்கள்.

உஉ. நாயாக முயன்ற கழுதை

ஒரு வண்ணான் வீட்டிலே ஒரு கழுதை சுமையெடுத்துத் திரிந்துகொண்டிருந்தது. ஒருநாள் அது தனக்குள்ளே, 'நாம் எவ்வளவு சுமையெடுத்து வருந்தியுழைத்தாலும் நம்முடைய தலைவன் நம்மிடத்திற் சிறிதும் அன்பு காட்டுகிறதே இல்லை. எப்பொழுது பார்த்தாலும் அடித்து உதைத்துத் தொல்லைதான் செய்கிறான். இதற்குக் காரணம் யாது? இவ் வீட்டிலே நாய் ஒன்று இருக்கிறதே அஃது எத்தகைய வேலையுஞ் செய்கிறதில்லை. தலைவனோ அதன்மீது மிகுந்த அன்பு காட்டுகிறான். தன்னோடு கூட வைத்துக்கொண்டு தான் உண்ணும் உணவையும் அதற்கு இடுகிறான். நாம் எவ்வளவு செய்தாலும் நமக்குச் சிறிது வைக்கோலைத்தான் போடுகிறான். அதுவும் வயிற்றிற்குப் போதிய அளவாகப் போடுவதில்லை. நாய் தலைவியிடத்திலும் பிள்ளைகளிடத்திலும் கொஞ்சிக் குலாவுகிறது. இரண்டு கால்களையும் எடுத்து அவர்களுடைய மடிமீதும் வைக்கிறது. அவர்களுக்கு முத்தம் கொடுக்கிறது. அவர்களோடுகூடத் தானுங் கட்டிலின்மீது ஏறிப் படுத்துக் கொள்ளுகிறது. இச்செய்கைகளாலேதான் நாய்மீது அவர்களுக்கு அன்புண்டாகியிருப்பதாகத் தெரிகிறது. நாமும் நாயைப்போலவே நடந்துகொள்வோமானால் நம்மிடத்திலும் அவர்கள் அன்புடன் நடந்துகொள்வார்கள்; இதுதான் நல்ல சூழ்ச்சியாகத் தெரிகிறது,' என்று எண்ணமிட்டது.

ஒருநாள் வீட்டுக்குடையவன் கட்டிலிலே படுத்து உறங்கிக்கொண்டிருந்தான். அப்பொழுது கழுதை அவனிடத்திற்குப்போய் அவனுடைய மடியிற் படுத்து இரண்டு கால்களையும் தூக்கி அவன் தலைமேல் வைத்து முகத்தோடு முகம் நெருங்க முத்தமிடலாயிற்று. இச்செயலால் திடுக்கிட்டு விழித்த வண்ணான் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தான். தடி ஒன்றை எடுத்துக் கழுதையை நன்றாகச் சாடினான். நாம் மற்றவர்களைப்போல் நடந்து சிறப்படைவதற்கு, அடாத காரியங்களைப் புரிவோமாயின் நேரும் பலன் இவ்வாறுதானிருக்கும்.

உ௩. கிழவனும் நமனும்

ஓர் ஊரிலே ஒரு கிழவன் இருந்தான். அவன்மிகவும் வறியவன். அவன் நாள்தோறுங் காட்டுக்குப்போய் விறகு வெட்டி அதனை ஊரிலே விற்று அதனால் கிடைக்கும் பணத்தைக்கொண்டே தன்னுடைய மனைவி மக்களைக் காப்பாற்றிக்கொண்டிருந்தான்.

ஒருநாள் காட்டிற்குப்போய் விறகுக் கட்டைகளை மிகுதியாக வெட்டிக் கட்டித் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு ஊரை நோக்கிப் புறப்பட்டான். விறகுச் சுமை மிகப்பளுவாக இருந்தபடியால் காட்டிலேயே ஓரிடத்தில் கீழே போட்டுவிட்டு உட்கார்ந்தான். உட்கார்ந்தவன் சும்மா இராமல், "ஓ நமனே! உனக்கு என்மீதில் என்ன சினம்? ஏன் என்னைப் பிடித்துக்கொண்டு போகமாட்டேன் என்கிறாய்? நான் இவ்வுலகில் எவ்வளவு நாளைக்கு இவ்வாறு விறகு வெட்டிச் சுமந்து காலந்தள்ளுவேன்?" என்று சொல்லிப் புலம்பினான்.

நமன் கிழவனுடைய மனப்போக்கை உணர்ந்து கொள்ள விரும்பினான். உடனே தன்னுடைய வடிவத்தோடு கிழவனுக்கு முன்னே தோன்றினான். "அப்பா கிழவா! நீ கூப்பிட்டதனை நான் கேட்டேன். இதோ

வந்துவிட்டேன் ; என்ன செய்யவேண்டும் ?" என்று கேட்டான்.

நமனைக் கண்ட கிழவன் அஞ்சி நடுநடுங்கினான். "ஐயையோ ! நான் விளையாட்டாகப் பேசப்போக நமன் உண்மையிலேயே வந்துவிட்டானே, இவன் என்னைப் பிடித்துக்கொண்டு போய்விடுவானாயின் என்னுடைய மனைவிமக்களை யாவர் காப்பாற்றுவர் ? என்னுடைய ஆடு மாடுகள் வீடுவாசல்கள் முதலியன எவ்வாறாகும் ?" என்று எண்ணமிட்டுக்கொண்டே நமனைப் பார்த்து, "அப்பா நமனே ! நான் இந்த விறகுக் கட்டைக் கீழே போட்டுவிட்டேன். தூக்க முடியவில்லை ; ஒரு கைபிடித்துத் தூக்கி விடுதற்காகவே கூப்பிட்டேன். தூக்கிவிட்டுவிட்டுப் போ," என்று கூறினான்.

இதனைக்கேட்ட நமன் நகைத்துக்கொண்டே போய் விட்டான். சிலர் இவ்வாறுதான் உலகப்பற்றை உள்ளம் நிறைய வைத்துக்கொண்டு வெளியிலே பற்றில்லாதவர் களைப்போலப் பேசுவார்கள்.

உசு. அடிகளும் பகவற்கீதையும்

ஓர் ஊரிலே துறவி ஒருவர் இருந்தார். அவர் அறிவு நூல்களைக் கற்றுணர்ந்தவர் அல்லர். அறிவு நூல்களின் பெயர்கூட அவருக்குத் தெரியாது. ஆயினும் அவருடைய துறவுக்கோலம் மிகப் பகட்டாக இருக்கும். அவரைப் பார்ப்பவர்கள் 'இவர் முற்றத்துறந்த முனிவரர் ; நல்ல மெய்யறிவாளி. இவரைக் கண்டு வணங்கினாலே நம்முடைய தீவினைகளெல்லாம் பறந்து போய்விடும்' என்று எண்ணுவார்கள். இவர் ஓர் ஊரிலேயே தங்கியிராமல் பல ஊர்களுக்கும் பயணஞ்செய்து ஆங்காங்குள்ள அடியார்களிடும் பிச்சையை ஏற்று வயிறார உண்டு அவர்களுக்குத் திருவருள் பாலித்துக்கொண்டிருந்தார்.

ஒருநாள் இப் போலித்துறவியார் ஒரு பெரிய ஊருக்குச் சென்றார். அவ்வூரிலிருந்த பெரிய உத்தியோகத்தன் ஒருவன் அடிகளாருடைய திருக்கோலத்தைக் கண்டு வியந்து போற்றி வழிபட்டான். பிறகு தன்னுடைய இல்லத்திலே அடிகளாருக்குத் திருவமுது செய்வித்தான். உத்தியோகத்தன் விட்டு விருந்தாகையால் சாப்பாடு தடபுடலாக இருந்தது. அடிகளார் அளவுக்கு மீறி ஒரு கை பார்த்துவிட்டார். ஆகவே, மூச்சுத் திணறியது. மெதுவாக எழுந்து கைகால்களைக் கழுவிக்கொண்டு ஓர் இருக்கையில் எழுந்தருளினார். அங்கு வந்தவர்களோடு சரியாகக்கூடப் பேச முடியாமல் வயிற்றைத் தடவிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்.

அடிகளாருடைய நிலைமையைக் கண்ட உத்தியோகத்தன், "அடிகாள்! சிறிது பாராயணஞ் செய்விக்கட்டுமா?" என்று கேட்டான். அதற்குத் துறவியார், "அப்பா வேண்டாம்! வேண்டாம். இனிமேல் ஒரு கடுகளவுகூட எதுவும் உள்ளே நுழையமாட்டாது," என்று மறுமொழி கூறினார். அங்கு அடிகளாரைப் போற்றி வழிபடுதற்கு வந்திருந்தவர்கள் இதனைக் கேட்டு நகைத்தார்கள். உத்தியோகத்தன் அடிகளாருடைய அறிவுநூற் புலமையை அப்பொழுதுதான் உணர்ந்தான். எத்தனையோ பேர் இவ்வாறு பொய்க்கோலத் துறவிகளாக உலகிலே இருக்கிறார்கள்.

உரு. வாணியனுந் தர்க்கநூற் புலவனும்

ஒருநாள் தர்க்கநூற் புலவன் ஒருவன் ஒரு வாணியனுடைய இல்லத்திற்கு எண்ணெய் வாங்கச் சென்றான். அப் புலவன் தருக்கநூல்களை மிகுதியாகக் கற்றுத் தருக்கநூல் புலவன் என்றே புகழ்பெற்றவன். தருக்கநூற் புலவன் எண்ணெய் வாங்கிக் கொண்டிருக்கும்போது செக்கு ஆடிக்கொண்டிருந்தது. செக்கிழுத்த மாடுகளின் கழுத்தில் ஒவ்வொரு மணி கட்டப்பெற்று அம் மணிகள் ஒலிசெய்து கொண்டிருந்தன.

எண்ணெய் வாங்கிக் கொண்டிருந்த புலவன் வாணியனைப் பார்த்துச், "செக்கு மாடுகளின் கழுத்தில் மணி கட்டியிருக்கிறாயே அஃது எதற்காக?" என்று கேட்டான். வாணியன் புலவனைப் பார்த்துச், "செக்கு ஆடிக்கொண்டிருக்கும்போது சில சமயங்களில் நான் வீட்டுக்குள் வேலையாக இருப்பேன். அப்போது செக்கு மாடுகள் நடப்பதையும் நிற்பதையும் அறிந்து கொள்வதற்கு மணி உதவியாக இருக்கும். அஃது எப்படியென்றால் செக்கு மாடுகள் நடந்து கொண்டிருந்தால் மணியொலி கேட்கும். செக்கு மாடுகள் நடக்காமல் ஓரிடத்தில் நின்று கொண்டிருந்தாலோ மணியொலி கேட்கமாட்டாது, மணியொலி கேட்காமல் இருத்தலைக் கொண்டு மாடுகள் நடக்காமல் நிற்கின்றன என்று உணர்ந்து கொண்டு வெளியே வந்து மாடுகளை நடக்குமாறு செய்யலாம்," என்று சொன்னான்.

செக்கான் செப்பிய இம்மொழிகளைக் கேட்ட தருக்க நூல் அறிஞன் மீண்டும் வாணியனைப் பார்த்துச், "சரி, செக்கு மாடுகள் நடக்காமல் ஓரிடத்தில் நின்று தலையை ஆட்டிக் கொண்டிருந்தால் அவைகள் நடவாமலே மணியொலி கேட்குமே! அப்பொழுது யாது செய்வாய்?" என்றான். இப்பொழுது வாணியன், "என்னுடைய மாடுகள் தருக்கநூல்களைப் படித்தன அல்ல. ஆகவே அவைகள் ஒருபோதும் அவ்வாறு ஓரிடத்திலேயே நின்று தலையை ஆட்டிக் கொண்டிருக்கமாட்டா," என்று மறுமொழி கூறினான். இதனைக் கேட்ட தருக்கநூற் புலவன் மிகுந்த நாணம் அடைந்தான்.

இவ்வாறு சிலர் தம் அறிவினால் வல்லவர்களுடைய வாயையும் மிக எளிதாக அடக்கி விடுவதுண்டு.

உக. கிரைத்தண்டும் வறுப்புச் சட்டியும்

ஒரு காலத்திலே பயணக்காரர்கள் சிலர் வடநாட்டிலே இருந்து தென்னுட்டில் உள்ள இராமேசுரத்திற்கு வந்தார்கள். தென்னுட்டுக்காரர்கள் சிலர் வடநாட்டில் உள்ள காசிக்குச் சென்ருர்கள். அந் நாளில் புகை வண்டி முதலிய வசதிகள் இல்லை. காசி இராமேசுவரம் முதலான இடங்களுக்குச் செல்பவர்கள் கால்நடையாகத்தான் செல்லுதல் வேண்டும்.

முன் கூறியவாறு பயணஞ்செய்து கொண்டு வந்தவர்கள் இடைவழியிலே ஓர் ஊரில் தங்கினுர்கள். இரண்டு பக்கத்தார்களும் வழியில் தாந்தாம் கண்ட புதுமைகளைச் சொல்லிக் கொண்டார்கள். தென்னுட்டானில் ஒருவன் ஒரு வடநாட்டானைப் பார்த்து, "நாங்கள் வருகிற வழியிலே கறியூர் என்று பெயருடைய ஓர் ஊர் இருக்கிறது. அவ் வூரிலே கிரைத்தண்டுகள் மிகுதியாக இருக்கின்றன. அவைகள் ஒவ்வொன்றும் நூறு அடி சுற்றளவுடையதாக இருக்கின்றன. அவற்றின் பக்கத்தில் உள்ள பனைமரங்களெல்லாம் சிறுமுளைகளைப் போலத் தோன்றுகின்றன. ஒவ்வொரு கிரைத்தண்டின் நிழலிலும் நூற்றுக்கணக்கானவர்கள் தங்கியிருக்கலாம்," என்று சொல்லிப் புளுகினுன்.

இவ்வுரைகளைக் கேட்டதும் வடநாட்டில் இருந்து வந்தவன், "நாங்கள் வந்த வழியிலே சட்டியூர் என்று பெயருடைய ஓர் ஊர் இருக்கிறது. அவ்வூரில் உள்ள குயவன் ஒருவன் வறுப்புச் சட்டி ஒன்று செய்துகொண்டிருக்கிருன். ஆ! ஆ!! அதனுடைய பெருமையை என்னவென்று சொல்வது? அதனுடைய அடிப்பக்கத்துச் சுற்றளவு ஐந்து மைல் தொலைக்குக் குறையாது," என்ருன்.

இதனைக் கேட்டதும் கிரைத்தண்டுப் புளுகன், "அக் குய்வன் அச் சட்டியை எதற்காகச் செய்கிருன்?" என்று கேட்டான். சட்டிப் புளுகன், "நீ கூறிய கிரைத் தண்

டைப் போட்டுச் சமைப்பதற்காகத்தான் செய்கிறான்,'' என்று கூறினன்.

இவ்வாறு உலகில் ஒருவர் புளுகை மடக்கிப் புளுகத் தக்க பெரிய அண்டப்புளுகர்களும் எத்தனையோ பேர் வழிகள் இருக்கிறார்கள்.

உஎ. ஒரு ரூபாய்க்கு இரண்டு செருப்படிகள்

ஒரு முகமதியன் ஒரு செட்டியினுடைய கடைக்குச் சென்று தனக்கு அரிசி யளக்குமாறு சொன்னான். செட்டி உடனே அளக்கவில்லை. "இதோ வந்துவிட்டேன் வந்து விட்டேன்,'' என்று சொல்லிக் கொண்டு அந்தணன் ஒரு வனுடைய கணக்கைப் பார்த்துக் கொண்டிருந்தான். அதிக நேரந் தாழ்க்கவே முகமதியனுக்குச் சினம் உண்டா கியது. அவன் மிகப் பரப்பரப்படைந்து, "எவ்வளவு நேரம் என்னைக் காக்க வைக்கிறாய்?'' என்று சொல்லிக் கொண்டே காலில் இருந்த செருப்பைக் கழற்றிச் செட்டியி னுடைய தலையில் ஓரடிகொடுத்தான்.

செட்டி மிகவும் பொறுமையுள்ளவன். வம்புவழக்கு களுக்குப் போய்ச் செலவு செய்யமாட்டான். ஆயினும் இப் பொழுது அந்தணனுடைய தூண்டுதலினால் நீதிமன்றத் திற்குச் சென்று முகமதியன்மேல் வழக்குத் தொடர்ந் தான். நீதிமன்றத் தலைவன் முகமதியனை அழைப்பித்து, "நீயேன் செட்டியை அடித்தாய்?'' என்று உசாவினான்.

முகமதியன் நீதிமன்றத் தலைவனைப் பார்த்து, "நான் அரிசி வாங்கச் சென்றேன். விரைவாகக் கொடாமல் அதிக நேரங் காக்க வைத்த படியினால் சினங்கொண்டு செருப்பினால் அடித்தது உண்மைதான்'' என்று ஒப்புக் கொண்டான்.

நீதிமன்றத் தலைவன் முகமதியனுக்கு அரை ரூபா அபராதம் விதித்து அதனைச் செட்டிக்குக் கொடுக்குமாறு

கட்டளையிட்டான். முகமதியன் தன்னுடைய காலில் இருந்த செருப்பைக் கழற்றிக்கொண்டு நீதிமன்றத் தலைவன் முன்னிலையிலேயே செட்டியை மீண்டும் ஓடி தன்னுடைய முழுப்பலத்தையுங் கொண்டு அடித்தான். இதனைக் கண்ட நீதிமன்றத் தலைவன், "ஏன் இவ்வாறு செய்தாய்?" என்று கேட்டான்.

முகமதியன், "என்னிடம் முழு ரூபாயாக இருக்கிறது. ஓர் அடிக்கு அரை ரூபா என்று தாங்கள் முடிவு செய்திருக்கிறபடியால், முழு ரூபாயாகவே செலுத்திவிடலாம் என்று மற்றுமோரடி அடித்தேன். இந்தாருங்கள் அபராதப் பணம். இதனைச் செட்டியாருக்குக் கொடுத்து விடுங்கள்," என்று சொல்லி ரூபாயை நீட்டினன். இதனைக் கண்டு நீதிமன்றத்தில் இருந்தவர்கள் எல்லோரும் நகைத்தார்கள். முகமதியனுடைய முரட்டுத் தனத்தைக்கண்ட நீதிமன்றத் தலைவன் யாதும் மறுமொழி கூறுமல் வாளாவிருந்தான். முரடர்கள் இவ்வாறுதான் எதற்கும் அஞ்சாமல் எக்காரியத்தையுஞ் செய்வார்கள்.

உ௮. வீடுமாறிய வேடிக்கை

ஓர் ஊரிலே செல்வன் ஒருவன் இருந்தான். அவனுடைய வீட்டின் இரண்டு பக்கங்களினும் இரண்டு பொற்கொல்லர்கள் குடியிருந்தார்கள். அவர்கள் பகல் முழுவதும் நகைகள் செய்து கொண்டேயிருப்பார்களாகையால் எப்பொழுது பார்த்தாலும், "டக்டக்" என்று அடித்துக் கொண்டேயிருப்பார்கள். இவ்வாறு எப்பொழுதும், "டக்டக்" என்று இரண்டு பக்கங்களினும் ஒலிகேட்டபடியாகவே யிருப்பது செல்வனுக்குப் பெருந் தலைவலியாக இருந்தது. அவர்கள் இருவரையும் எப்படியாவது வேறு இடங்கட்குக் குடியேற்றி விடவேண்டும் என்று முடிவு செய்தான்.

இருவரையும் தனித்தனியே அழைத்து, "நீங்கள் வேறிடம் பார்த்துக் குடிபோய்விடுவதானால் உங்கட்கு ரூபா நூறு தருகிறேன் போய்விடுகிறீர்களா? என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டான். இருவரும், "வேறிடம் பார்த்துக் குடிபோய் விடுகிறோம். பணத்தைக் கொடுங்கள். நாளைக்கே போய்விடுகிறோம்," என்று சொல்லிப் பணத்தை வாங்கிக்கொண்டு சென்றார்கள்.

செல்வன் "நாளையில் இருந்து தொல்லைவிட்டது. 'டக்டக்' இரைச்சல் இல்லாமல் மன ஒருமையுடன் நன்றாக உறங்கலாம்" என்று மனக்கோட்டை கட்டிக் கொண்டிருந்தான். அவன் எதிர் பார்த்தபடி மறுநாள் "டக்டக்" இரைச்சல் இல்லாமல் இருந்தது. பத்தர்கள் வேற்றிடம் போய்விட்டார்கள் என்று செல்வன் மகிழ்ந்தான். ஆனால் மறுநாள் மீண்டும் டக்டக் ஒலி உண்டாயிற்று. செல்வன் தட்டார்கள் இருவரையும் அழைத்து, "என்ன இன்னம் இடம்மாறவில்லையா?" என்று கேட்டான். அதற்குப் பத்தர்கள் இருவரும், "நேற்றே மாறிவிட்டோம். நான் இருந்த வீட்டிற்கு அவரும் அவர் இருந்த வீட்டிற்கு நானுமாகக் குடிமாறிவிட்டோம்," என்று மறுமொழி கூறினார்கள். இதனைக் கேட்ட செல்வன், அழுவதா சிரிப்பதா என்று தெரியாமல் விழித்தான்.

சிலபேர் சில காரியங்களைத் தொடங்கி இறுதியில் அக்காரியம் பயனில்லாமல் முடிவதைக் கண்டு இச் செல்வனைப் போலவே ஏமாற்றம் அடைந்து விழிக்கிறார்கள்.

உக. சிக்கிக்கொண்ட கள்ளன்

ஓர் அரசனுடைய அரண்மனையிலே விலை உயர்ந்த வைரமோதிரம் ஒன்று களவு போய்விட்டது. அரண்மனைப் பணியாளர்கள் எல்லோரையும் எவ்வளவோ உசாவியும் உண்மை புலப்படவில்லை. அமைச்சன் நல்ல அறிவாளி. அவன் களவைக் கண்டு பிடிப்பதற்கு ஒரு சூழ்ச்சி செய்தான். அரண்மனைப் பணியாளர்கள் அனைவரும் மாலை

யில் வீட்டிற்குச் செல்லும்போது ஒரே நீளமுள்ள தடிகளைக் கொண்டு வந்து ஒவ்வொருவர் கையிலும் ஒவ்வொரு தடியைக் கொடுத்தான். கொடுக்கும்போது, "இத்தடிகள் எல்லாவற்றிற்கும் மந்திரஞ் செய்யப்பட்டிருக்கிறது. மோதிரத்தைக் களவு செய்தவனிடம் இருக்கும் தடிமட்டும் இரவில் ஓர் அங்குல நீளம் அதிகமாக வளர்ந்துவிடும். காலையில் எல்லோரும் வரும்போது தடிகளைக் கொண்டு வாருங்கள்; நான் கள்ளனைப் பிடித்து விடுகிறேன்," என்று சொன்னான்.

மோதிரத்தைக் களவு செய்தவன், காலையில் அரண்மனைக்குப் போம்போது தடியில் ஓரங்குலத்தை வெட்டியெறிந்துவிட்டுப் போய்விடுவோம் என்று இரவில் எண்ணமிட்டுக் காலையில் எழுந்ததும் ஓரங்குல நீளத்தை வெட்டியெறிந்துவிட்டுத் தடியை அரண்மனைக்குக் கொண்டு சென்றான்.

அமைச்சன் எல்லோருடைய தடிகளையும் வாங்கி ஒன்றாகச் சேர்த்தான். ஒவ்வொரு தடியையும் வாங்கும் போது அத்தடி மற்றைத் தடிகளைப்போல் சரியாக இருக்கிறதா என்று சரி பார்த்துக் கொண்டேயிருந்தான். மோதிரத்தைக் களவு செய்தவனுடைய தடிமட்டும் ஓரங்குலம் குறைவாக இருந்தது. தன் களவு வெளிப்படாமல் இருப்பதற்காக அவன் தடியை வெட்டியிருக்கிறான் என்று உணர்ந்து அவனைப் பிடித்து மோதிரத்தைக் கைப்பற்றியதோடு அவனுக்குச் சரியான தண்டனையுங் கொடுத்தான்.

இவ்வாறுதான் சிலர் தங்களுடைய குற்றங் குறைகளை மறைக்கமுயன்று, "சணப்பன் வீட்டுக் கோழிதானே விலங்குமாட்டிக் கொண்டதாம்" என்பதற்கேற்ப அகப்பட்டுக் கொண்டு விழிக்கிறார்கள்.

---

௩௦. நீ இங்குவராமல் இருப்பதே மருந்து

ஒரு காட்டில் ஓரிடத்தில் பறவைகள் மிகுதியாக வசித்திருந்தன. அவ்விடத்தில் ஒருநாள் ஏதோ "கிசகிச" வென்று கூச்சல் உண்டாயிற்று. அப்பக்கத்தில் வாழ்ந்திருந்த பூனை ஒன்று அப்பறவைகளின் மீது நெடுநாள்களாக ஒரு கண் வைத்துக் கொண்டிருந்தது. இப்பொழுது கூச்சல் உண்டாகவே பறவைகளில் எதற்கேனும் நோயுண்டாகியிருக்கும். நாம் இச்சமயத்தில் மருத்துவன் என்று பெயர்வைத்துக்கொண்டு 'பறவைகள் இருக்குமிடத்திற்குப் போய் அகப்பட்ட வரையில் முறித்து உள்ளே தள்ளலாம்' என்று எண்ணிக்கொண்டு பறவைகள் இருக்குமிடத்திற்குச் சென்றது. பறவைகளைப் பார்த்து, "ஓ பறவைகளே! உங்களில் யாருக்கேனும் நோய் உண்டாகியிருக்கிறதா? என்னிடத்தில் நல்ல மருந்துகள் இருக்கின்றன. நாடிபார்த்து மருந்து கொடுப்பேனாயின் நோய் உடனே பறந்து போய்விடும்," என்று கூறியது.

பூனை புகன்றதைக் கேட்ட ஒரு பறவை, "ஓ நண்பனே! உனக்குப் பல வணக்கங்கள்; இங்கு எங்களில் யாருக்கும் எத்தகைய நோயும் வரவில்லை. அப்படி ஏதேனும் நோய்வந்தாலுங்கூட அதனைப் போக்கிக் கொள்வதற்கு எங்களுக்குத் தெரியும். நீ எங்கள்மீது அருளைத் திருப்பி இவ்விடத்திற்கு வராமல் இருப்பாயானால் அதுவே சிறந்த மருந்தாகும்," என்று மறுமொழி கூறிற்று.

பறவை பகர்ந்ததைக் கேட்ட பூனை 'நம்முடைய விருப்பம் நிறைவேறுதுபோல் இருக்கிறதே' என்று எண்ணிக் கொண்டே அவ்விடம் விட்டு வேறிடஞ் சென்றது. இவ்வாறுதான் சிலர் ஏதேனும் ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு மற்றவர்களிடையே புகுந்து தங்களுக்கு நல்ல வருவாய் தேடுவதற்கு முயற்சி செய்கிறார்கள். அத்தகையோரிடத்தில் விழிப்பாக இருக்காமற் போனால் தொல்லையேற்படுவது திண்ணமே.

௩௩. வால் இழந்த நரி

முன்னர் ஒரு கதையில் புலிக்கு உதவி செய்யப் போன ஒரு நரி தான் வாலிழந்து துன்பப்பட்டு ஓடிய செய்தியைப் படித்தீர்களன்றோ? அந்நரி அதற்குமேல் என்ன செய்தது தெரியுமா? 'அந்தோ! நாம் வாலிழந்து போனேமே நம்மைப் பார்க்கின்ற மற்றவர்கள் எள்ளி நகையாடப்போகிறார்களே! இதற்கு யாது செய்வது' என்று நெடுநேரம் எண்ணமிட்டது. பிறகு அஃது ஒரு முடிவுக்கு வந்தது. அது தன்னுடைய இனத்தார்களையெல்லாம் ஒருங்கு சேர்த்து வைத்துக் கொண்டு அவைகளைப் பார்த்துப் பின்வருமாறு கூறியது:

"என் அன்புள்ள உறவினர்களே! நமக்கு வால் இருப்பது மிகுதொல்லையாக இருக்கிறது என்பதை நான் கூறவேண்டியது இல்லை. வாலானது நடக்கும்போது பின்கால்களுக்கிடையே குறுக்கிடுகின்றது. அதனால் நடை தடுமாறுகின்றது. எவனாயினுந் துடுக்குத் தனமாய் நம்முடைய வாலைப் பிடித்து இழுப்பானாயின் தப்பித்துக் கொண்டு போவதற்கு இடையூறாகவும் இருக்கும். நடந்து செல்கையில் கீழேயிருக்குஞ் சேற்றிற் படுமானால், உடலெல்லாஞ் சேறுபட்டு அழுக்காகும். வேலிச் சந்துகளில் நுழைந்து சென்றால் காயங்கள் உண்டாகும். மேலுந் துரத்திப் பிடிப்பவர்களுக்கு வால் உதவியாகி விடுகிறது. வால் இன்னும் எத்தனையோ இடையூறுகளுக் கெல்லாங் காரணமாக இருக்கிறது; ஆகவே நான் என்னுடைய வாலைத் துண்டித்துவிட்டேன். நீங்களும் உங்களுடைய வால்களைப் போக்கிக் கொள்வது மிகு நல்ல காரியமாகும்."

வாலிழந்த நரி இவ்வாறு அறிவுரை கூறியதைக் கேட்ட ஒரு கிழநரி, "ஓ நண்பனே! உனக்கு வால் போய் விட்டபடியினால் எங்களையும் வாலறுத்துக்கொள்ளச் சொல்லுகிறாயா? உனக்கு வால் எவ்வாறு போயிற்று? அதனை விளக்கமாகக் கூறு; நாங்கள் தெரிந்துகொள்ளுகி

ரும். உனக்கு வால் போய்விட்டதைப்போல் எங்கட்கு அறிவு போய்விடவில்லை. ஆகையால் எங்களுக்கு வால் இருப்பதுதான் நல்லது; உன்னைப்போல் மற்றவர்களையுஞ் செய்வதற்கு நீ முயற்சி செய்வாயானால் அது பயன் படாது," என்று கூறிற்று.

இதனைக்கேட்ட வால் இழந்த நரி 'நம்முடைய சூழ்ச்சி மற்றவர்களிடந்தான் பலிக்குமே தவிர, நம்முடைய இனத்தாரிடம் பலிக்குமா' என்று எண்ணிக்கொண்டு மிகுந்த நாணத்தோடு ஓடிப்போய்விட்டது.

சிலர் இவ்வாறுதான் தங்களைப்போல் மற்றவர்களையும் ஆக்குவதற்கு முயற்சி செய்கிறார்கள். ஆனால் அறிவாளிகளாயுள்ளவர்கள் அவர்களுடைய சூழ்ச்சிக்கு அகப்படுகிற தில்லை.

---

௩௨. பெருந்தன்மையான காரியம்

ஓர் ஊரிலே ஒரு செல்வன் இருந்தான். அவனுக்கு மக்கள் மூவர் இருந்தனர். அவனுக்கு முதுமை மேலிட்டு விட்டது. தன்னுடைய பொருட்கள் எல்லாவற்றையும் மூவருக்கும் பங்கிட்டுக்கொடுத்தான். பிறகு ஒரு வைரமோதிரம் மட்டும் அவனுடைய கையிலே எஞ்சி நின்றது. செல்வன் தன்னுடைய மக்கள் மூவரையும் அழைத்து, "என்னுடைய அருமைச் செல்வர்களே ! இன்றுமுதல் மூன்று திங்களகளுக்குள் உங்கள் மூவரில் எவனொருவன் பெருந்தன்மையான ஒரு காரியஞ்செய்கிறானோ அவனுக்கு இம் மோதிரத்தைக் கொடுக்கப்போகிறேன்," என்று சொன்னான்.

திங்கள்கள் இரண்டு சென்றன. மூத்த மகன் ஒரு நாள் தந்தையிடம் வந்து, "அப்பா! சிறிது நாளைக்கு முன்னே முன்பின் தெரியாத ஒருவன் பற்றுச்சீட்டு முதலியயாதும் பெற்றுக்கொள்ளாமலே என்னிடம் ஒரு பணப் பையைக் கொடுத்து வைத்திருக்குமாறு சொன்னான்.

நான் அவ்வாறே வாங்கி வைத்திருந்தேன். அவன் மறுபடியும் வந்து கேட்டபொழுது அவனுடைய பணப்பையை அப்படியே அவனிடங் கொடுத்தேன். அதற்காக அவன் மிகுந்த களிப்படைந்து எனக்கு நன்கொடை வழங்க வந்தான். நான் அவனுடைய நன்கொடையை வேண்டாம் என்று மறுத்துவிட்டேன். அவன் கொடுத்த பணப்பையை நானே அமுக்கிக்கொள்ளலாமன்றோ? அவ்வாறு அமுக்கிக்கொள்ளாது கொடுத்தவிட்டதன்றி அவன் கொடுத்த நன்கொடையையும் மறுத்துவிட்டது பெருந்தன்மையான காரியம் அன்றோ?" என்று கேட்டான். இதனைக்கேட்ட தகப்பன், "நீ செய்தது பெருந்தன்மையான காரியம் அன்று. நேர்மையான காரியம்; அவ்வளவுதான்," என்று சொன்னான்.

மேலுஞ் சிறிது நாட்கள் சென்றன. இரண்டாம் பையன் தன்னுடைய தந்தையைப் பார்த்து, "நான் ஓர் ஏரிக்கரையில் போய்க்கொண்டிருக்கும்போது ஒரு குழந்தை தவறி ஏரியிலே வீழ்ந்துவிட்டது. அப்பொழுது நான் உயிருக்குத் துணிந்து ஏரியிலே குதித்து அக் குழந்தையைக் காப்பாற்றினேன். அழுது புலம்பிக்கொண்டிருந்த அக் குழந்தையின் தாய் மிகுந்த களிப்படைந்தாள். இஃது ஒரு பெருந்தன்மையான காரியம் அன்றோ?" என்று கேட்டான். அதற்குத் தகப்பன், "இல்லை இல்லை. அத்தகைய சமயத்தில் எப்படிப்பட்ட சண்டாளனாக இருந்தபோதினும் அக்காரியத்தைச் செய்வான். மனிதனாகப் பிறந்தவனுக்கு இஃது இயற்கைதானே," என்று சொன்னான்.

மேலும் சில நாள்கள் சென்றன. மூன்றும் பையன் தன்னுடைய தந்தையைப் பார்த்து, "அப்பா! ஒரு நாள் இரவில் நான ஒரு மலையின்மேல் இருந்து இறங்கிக் கீழே வந்துகொண்டிருந்தேன். அப்பொழுது எனக்குப் பிறவிப் பகையாளியாகிய ஒருவன் அம்மலையிலே செங்குத்தான ஒரு பாறையின்மேல் படுத்து உறங்கிக்கொண்டிருந்தான். அவன் அப்படி இப்படிச் சிறிது அசைவானேயானாலும்

பக்கத்திலே பாதாளமாக இருந்த பள்ளத்திலே வீழ்ந்து மாண்டுபோவான். நான் அவனுடைய நிலைமையைப் பார்த்துவிட்டு மிகுந்த கருத்துடன் அவனை எழுப்பிப் பாதுகாப்பான வேறோர் இடத்திலே கொண்டுபோய் விட்டு அங்குப் படுக்குமாறு செய்தேன். நான் செய்தது பெருந்தன்மையான காரியம் அன்றோ? மற்றவர்களாக இருப்பின் அவன் கீழே விழுந்து இறந்துபோதலைத்தானே விரும்புவார்கள்,'' என்று சொன்னான்.

தந்தை அந்த இளைய பையனைக் கட்டித் தழுவிக் கொண்டான். "என் அருமைச் செல்வனே! நீ செய்தது பெருந்தன்மையான காரியந்தான் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. வைரமோதிரம் உன்னைச் சேரவேண்டியது தான்,'' என்று கூறி மோதிரத்தை அவனிடம் அளித்தான்.

---

௩௩. மெய்யப்பன்

ஓர் ஊரிலே ஒரு சிறுவன் இருந்தான். அவனுடைய பெயர் மெய்யப்பன். ஒரு நாள் ஒரு பெரியவர் மெய்யப்பனைப் பார்த்துத், "தம்பி! நீ உன்னுடைய பெயருக்குத் தக்கவாறு நடந்துகொள்ளுதல் வேண்டும். மெய்யப்பன் என்றால் எப்பொழுதும் மெய்ம்மை பேசுதலையே பற்றிக் கொண்டிருப்பவன் என்று பொருள். நீ உண்மை பேசுதலையே மேற்கொள்வாயானால் உனக்குப் பலவகையான நன்மைகள் ஏற்படும்,'' என்று அறிவுரை கூறினார்.

மெய்யப்பன் நல்ல பையன். ஆகவே அவன் பெரியவர் மொழிப்படி எப்பொழுதும் உண்மையே பேசுதலையே மேற்கொள்வதென்றும் எத்தகைய சமயத்திலும் பொய் புகல்வதில்லையென்றும் உறுதி செய்துகொண்டான்.

மெய்யப்பன் வெகு தொலைவில் உள்ள வேறோர் ஊருக்குப் போய்ச் சில பொருள் வாங்கிக்கொண்டு வர

வேண்டியவனானான். அதன் பொருட்டு ஐம்பது வெண் பொற் காசுகளை எடுத்து மடியில் வைத்துக்கொண்டு போகவேண்டிய ஊரை நோக்கிப் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தான். வழியிலே பெருங்காடு ஒன்று இருந்தது. அக்காட்டிலே கள்ளர்கள் சிலர் எதிர்ப்பட்டார்கள். அவர்களில் ஒருவன் மெய்யப்பனைப் பார்த்து, "அடே பையா! உன்னிடத்தில் என்ன இருக்கிறது?" என்று கேட்டான்.

மெய்யப்பன் கள்ளர்களைப் பார்த்து, "என் மடியிலே ஐம்பது வெண்பொற் காசுகள் இருக்கின்றன," என்று மறுமொழி கூறினான். இதனைக்கேட்ட கள்ளர்கள் 'இச் சிறுவனிடமாவது ஐம்பது ரூபா இருக்கவாவது இவன் நம்மை எளனஞ்செய்கிறான்' என்று எண்ணினார்கள்.

பிறகு வேறொரு கள்ளன் மெய்யப்பனைப் பார்த்து, "உன்னிடத்தில் என்ன இருக்கிறது? உண்மையைச் சொல்," என்று கேட்டான். மெய்யப்பன் முன் போலவே மறுமொழி கூறினான்.

பிறகு கள்ளர்கள் ஓரிடத்தில் அமர்ந்து தாங்கள் களவு செய்த பொருள்களைப் பங்குபோட்டுக்கொள்ளத் தொடங்கினார்கள். மெய்யப்பன் அவர்களுடனேயே நின்றுகொண்டிருந்தான். ஏனெனில் அவர்கள் மெய்யப்பன் தன் வழியே செல்லலாம் என்று கூறவில்லை. பிறகு கள்ளர்களுடைய தலைவன் மெய்யப்பனைப் பார்த்து, "அடா பையலே! உன்னிடத்தில் என்ன இருக்கிறது? மறைக்காமல் உண்மையைச் சொல்," என்றான்.

மீண்டும் மெய்யப்பன் அவர்களைப் பார்த்து, "என் இடத்திலே ஐம்பது வெண்பொற் காசுகள் இருக்கின்றன என்று முன்னரே கூறிவிட்டேன். மேலும் மேலும் கேட்டுக்கொண்டே இருக்கிறீர்களே?" என்றான்.

இதனைக் கேட்டவுடன் கள்ளர் தலைவன் இரண்டு பேரைவிட்டு அப் பையனுடைய மடியை ஆராய்ந்து

பார்க்கச் சொன்னான். பையன் பகர்ந்தவாறே அவனுடைய மடியில் ஐம்பது வெண்பொற்காசுகள் இருந்தன. கள்ளர் தலைவன் மெய்யப்பனைப் பார்த்து, "உன்னிடம் இருப்பதை உள்ளவாறு கூறிவிட்டாயே! நாங்கள் பிடுங்கிக் கொண்டால் என்ன செய்வாய்?" என்று கேட்டான்.

மெய்யப்பன் கள்ளர்களைப் பார்த்து, "பணம் போனால் போய்விட்டுப் போகட்டும்; எப்படியாவது அஃது என்னுடைய கையை விட்டு நீங்கப்போவதுதான். ஆனால் கையை விட்டு நீங்காத உண்மையைக் கைவிடலாமா? ஒரு பெரியவர் நான் எப்பொழுதும் உண்மையே பேசவேண்டும் என்று அறிவுரை கூறியிருக்கிறார். என்னுடைய பெயரும் மெய்யப்பன். மெய்யப்பன் என்று பெயர் வைத்துக் கொண்டு பொய்யப்பனாக இருக்கலாமா?" என்று கேட்டான்.

மெய்யப்பனுடைய உரைகள் கள்ளர்களுக்கு நல்லறிவைக் கொடுத்தன. கள்ளர் தலைவன் மெய்யப்பனைப் பார்த்துத், "தம்பி! நீதான் எங்கட்குக் குரு. நாங்கள் இனிமேல் களவு பொய் முதலிய தீத்தொழில்களையெல்லாம் விட்டுவிட்டு நல்லவர்களாக மாறிவிடுகிறோம். களவு செய்துள்ள இப் பொருள்களையும் உரியவர்களிடத்திலே சேர்த்துவிடுகிறோம்," என்று கூறி, அவ்வாறே செய்து தங்கள் வாழ்க்கையைத் திருத்தி அமைத்துக்கொண்டார்கள். இவ்வாறு சிறியவர்களால் நல்லவர்களாகிற பெரியவர்களும் உலகிற் பலர் இருக்கிறார்கள்.

---

௩௬. காளைக் கள்ளன்

ஓர் ஊரிலே ஒரு குடியானவன் இருந்தான். அவனிடம் ஓர் அருமையான காளைமாடு இருந்தது. ஒருநாள் அதிகாலையில் குடியானவன் எழுந்து தன்னுடைய மாட்டுக் கொட்டகையைப் பார்த்தபோது காளைமாட்டைக் காணவில்லை. அதைக் கள்ளன் கொண்டுபோய்விட்டான் என்று குடியானவன் பல இடங்களிலுந் தேடிப்பார்த்தான். அது

போன இடந் தெரியவில்லை. "கெட்டமாடு தேடுமுன்னே எட்டு மாடு வாங்கிவிடலாம்" என்பதுபழமொழி. காணமற் போன மாட்டைத் தேடிக்கொண்டிருப்பதைவிட வேறு மாட்டை வாங்கிவிடுவோம் என்று எண்ணியவனுய் அடுத்த ஊரிலே கூடிய ஒரு பெரிய மாட்டுச் சந்தைக்குக் குடியானவன் சென்றுன்.

அங்கே விற்பனைக்கு வந்திருந்த மாடுகளிலே காணு மற்போன தன்னுடைய காளேமாட்டையுங் கண்டான் குடியானவன். காளேயைக் கண்டவுடனே அதனிடம் ஓடிச் சென்று அதனைப் பிடித்துக்கொண்டு, "இஃது என்னுடைய மாடு, சில நாட்களுக்கு முன்னே களவுபோய்விட்டது," என்று சொல்லி உரக்கக் கூவினன்.

காளேயைக் களவு செய்ததும் அன்றி அதனைச் சந்தையிலே விற்பனை செய்வதற்குக் கொண்டு வந்த கள்ளனுனவன், "இஃது என்னுடைய மாடு; ஓராண்டுக்கு மேலாக என்னிடம் இருக்கிறது. ஒருவேளை உன்னுடைய மாடும் இதைப்போல் இருந்திருக்கலாம். ஆனல் இஃது உன்னுடைய மாடு அன்று என்பது உறுதி," என்றுன்.

உடனே குடியானவன் அம்மாட்டினுடைய கண்களை மூடிக்கொண்டு, "ஓராண்டாக இஃது உன்னிடம் இருப்பது மெய்யானல், இதைப்பற்றி உனக்கு நன்றுகத் தெரிந்திருக்குமே, இதனுடைய இரண்டு கண்களில் எக் கண் குருடு?" என்று உசாவினன்.

விற்பதற்கு வந்தவன் அக்காளேயைச் சிறிது காலத்திற்கு முன்னேதான் களவு செய்தவனுகையால் அம்மாட்டினுடைய கண்களை அவன் அவ்வளவாகப் பார்த்தவன் அல்லன். ஆயினும் இப்பொழுது மறுமொழி கூற வேண்டியது கட்டாயமாக இருந்தபடியால் அவன், "இடது கண்தான் குருடு" என்று நன்றுகத்தெரிந்தவன் போலத் திடமாக மறுமொழி கூறினன். உடனே குடியானவன், "இடது கண் குருடு அன்று" என்றுன். சிறிது பதற்றத்துடன் கள்ளன், "வலது கண் என்பதற்கு

இடதுகண் என்று பதறிச் சொல்லிவிட்டேன். வலது கண்தான் குருடு'' என்று சொன்னான்.

உடனே குடியானவன் அக்கள்ளனைப் பார்த்து, "நீ கள்ளன் என்றும் பொய்யன் என்றும் இதனாலேயே நன்றாக விளங்கிவிட்டது,'' என்று கூறியதுடன் அங்குச் சூழ்ந்திருந்தவர்களைப் பார்த்து, "இங்குள்ள எல்லோரும் நன்றாகப் பாருங்கள். இம்மாட்டிற்கு எக் கண்ணும் குருடு அன்று. இக் கள்ளனுடைய திறமையை ஆராய் வதற்காகத்தான் இவ்வாறு இயம்பினேன்,'' என்றான்.

சுற்றியிருந்தவர்கள் கையைத் தட்டிப், "பலே! பலே! கள்ளன் அகப்பட்டுவிட்டான். ஓடிப்போகாமல் பிடித்துக்கொள்ளுங்கள்,'' என்று சொல்லிக் கூச்ச லிட்டார்கள்.

சந்தையில் சுற்றிக்கொண்டிருந்த ஊர்காவலர்கள் விரைந்துவந்து காளைக்கள்ளனைக் கைப்பிடியாகப் பிடித் துக்கொண்டார்கள். பிறகு கள்ளனை நீதிமன்றத்தில் நிறுத்தி உசாவியபோது கள்ளன் உண்மையை ஒப்புக் கொண்டு தண்டனைக்கு உள்ளானான்.

---

௩௫. வேலையாளின் சூழ்ச்சி

மிக உயர்ந்த கோபுரம் ஒன்றின்மீது உட்புறத்திலே ஓவியவேலை நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஓவியன் தான் தீட்டுகிற ஓவியம் தொலைப்பார்வைக்கு எவ்வாறிருக் கிறதென்பதைப் பார்த்து அறிந்துகொள்ள விரும்பினான். எழுந்து நின்று பார்த்துக்கொண்டிருந்தவன் ஒவ்வோரடி யாகப் பின்வாங்கிப் பார்த்துக்கொண்டே சென்றான். அவ் வோவியனுடைய முழு எண்ணமும் ஓவியத்தின்மீதே படிந் திருந்தமையின் அவனுடைய கருத்து வேறெதினுஞ் செல்லவில்லை. பின்வாங்கிச்சென்றவன் கோபுரப்பரப்பின் முடிவிடத்தை அடைந்துவிட்டான். அவன் அதன்பின்

மேலும் ஓரடி வைப்பானாயினும் படுபாதாளமாக உள்ள நிலத்தின்கண்ணே விழ்ந்து உடல் சிதறி மாண்டொழிதல் திண்ணம்.

ஓவியனுடைய உயிர்க்கிறுதியான நிலையைக் கண்டான் ஓவியனுடைய உதவியாள். அச் சமயத்தில் அவ்வுதவியாள் அஞ்சி அலறியிருப்பனாயின் ஓவியன் பரபரப்பினால் பின்னாலே வீழ்ந்து அழிந்துபோயிருத்தலுங்கூடும். ஆனால் அறிவு நலம் உடைய அவ்வுதவியாள் அங்ஙனம் அலறினான் இல்லை. பின்னர் யாது செய்தான் என்பதனைப் பேசக் கேண்மின். ஓவியந் தீட்டற்கு வைத்திருந்த வர்ணத்தைக் கையிலே தூக்கி அவ்வோவியத்தின் மேற் கொட்டப்போனான்.

உதவியாளின் முயற்சியைக் கண்ட ஓவியன், "அடடே! என்ன காரியஞ் செய்யப்போகின்றனை?" என்று கேட்டுக்கொண்டே அவனை நோக்கி ஓடலாயினன். அக் கையாளானவன் ஓவியன் கையைப் பிடித்துக்கொண்டு, "ஐயனே! தாங்கள் பின்னே நோக்குங்கள். மேலும் ஓரடி பின்னே வைத்திருப்பீர்களாயின் உங்களுடைய கதி யாதாக முடிந்திருக்கும்? தங்களுயிரைக் காப்பான் கருதியே ஓவியத்தைக் கெடுப்பான்போல நடிக்கலானேன்," என்றனன்.

தன் பின்னேயிருந்த பேராபத்தையும் தன் உதவியாள் செய்த சூழ்ச்சித்திறன்மிக்க செய்கையையும் உணர்ந்த ஓவியன் அவ்வாளைப் பெரிதும் பாராட்டி, "நண்பனே! என் இன்னுயிர் நின்னால் இன்று பிழைத்தது. இதன் பொருட்டு நான் நின்மாட்டு எஞ்ஞான்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்," என்று சொல்லி அவனுடைய அறிவு நலத்தைப் பெரிதும் புகழ்ந்துரைத்தனன்.

௩௬. விகடக்காரனும் ஒட்டனும்

ஓர் ஊரிலே விகடக்காரன் ஒருவன் இருந்தான். அவன் பலவகையான பறவைகளைப்போலவும் விலங்குகளைப்போலவும் ஒலிகளைச் செய்வதில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தான். எந்தப் பறவையைப்போல் அவன் கத்தினாலுஞ்சரி; அப் பறவைகள் உடனே அந்த இடத்திற்கு வந்துவிடும். ஒவ்வொரு வகையான விலங்குகளைப்போன்றும் கத்திக் காட்டுவதில் அவனுக்கு நிகராக எவரும் இலர். ஒருநாள் ஊரிலே பேரவை ஒன்று கூட்டிப் பல வகையான விலங்குகளைப்போன்றும் பறவைகளைப் போன்றும் ஒலியெழுப்பிக் காட்டினான். அதனைக் கேட்டவர்கள் பெருங்களிப்படைந்து கைதட்டி ஆரவாரஞ் செய்தார்கள். விகடகவி பன்றியைப்போல் பல தடவை உறுமிக் காட்டினான்; அவையோருடைய மகிழ்ச்சி கட்டுக்கடங்காததாக இருந்தது.

அப்பொழுது அங்கு வந்திருந்த ஓர் ஒட்டனானவன் அவையோர்களைப் பார்த்து, "நாளைக்கு எல்லோரும் வாருங்கள்; நான் பன்றியுறுமல் செய்துகாட்டுகிறேன்," என்று கூறினான். அவையோர்கள் மறுநாளும் திரண்டு வந்து கூடினார்கள். அன்று ஒட்டன் தான் வளர்க்கும் பன்றிகளில் ஒரு முரட்டுப் பன்றியைப் பிடித்துக்கொண்டு வந்தான் அவையோர்கள் அவன் எதற்காகப் பன்றியைப் பிடித்துக்கொண்டு வருகிறான் என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தார்கள்.

எல்லோருங்கூடிய பிறகு ஒட்டன் அந்தப் பன்றியின் வாலைத் தன்னுடைய முழுப்பலத்தையுங்கொண்டு பிடித்து முறுக்கினான். பன்றி பலவாறு உறுமிற்று. ஒட்டன் அவையோர்களைப் பார்த்து, "நேற்று மனிதன் பன்றியைப் போல் கத்தியதைக் கேட்டு ஆரவாரஞ் செய்தீர்களே, இன்று அசல் பன்றியின் உறுமல் எப்படியிருக்கிறதுபார்த்தீர்களா?" என்று கேட்டான். அவையோர்கள் பேசாமல்

இருந்தனர். ஒட்டன் மீண்டும் அவையோர்களைப் பார்த்து, "நேற்றுப் பன்றியின் போலிச் சத்தத்தைக் கேட்டுவிட்டுப் பேராரவாரஞ் செய்தீர்கள். இன்றைக்கோ அசல் பன்றிச் சத்தத்தைக் கேட்டுவிட்டுப் பேசாமல் இருக்கிறீர்கள். எல்லோரும் போலியைத்தான் விரும்புகிறீர்களே யல்லாமல் அசல் உண்மையைப் போற்றிப் புகழ்ந்து பாராட்ட மாட்டேன் என்கிறீர்கள். இதுதானா மனித இயற்கை?" என்று கூறிக்கொண்டே தன் பன்றியோடு அவ்விடம் விட்டுச்சென்றான்.

உலகத்தார்கள் எப்பொழுதும் போலியைத்தான் மிகுதியாகப் பாராட்டி மகிழ்வார்களே தவிர உண்மையானவைகளைப் பாராட்டமாட்டார்கள்.

---

௩௭. மூடன் தீர்ப்பு

பட்டிமாநகர் என்னும் ஓர் ஊரிலே மதியிழந்தான் என்னும் பெயருடைய ஒருவன் நீதிமன்றத் தலைவனாக இருந்தான். அவன் நல்ல கல்வியறிவு இல்லாதவன் ஏதோ குருட்டுத்தனமான நல்வினையினால் நீதிமன்றத் தலைவனாகித் தன் மனம்போனவாறு தீர்ப்புகள் செய்து ஆட்டம் போட்டுக்கொண்டிருந்தான்.

அவ்வூரிலே வண்ணான் ஒருவன் இருந்தான். அவன் ஆணவமும் திமிரும் உடையவன். துணி சுமக்கும் தன்னுடைய கழுதையை அவிழ்த்து விட்டுவிடுவான். அது கண்டவர்களுடைய பயிர் பச்சைகளிலே விழுந்து மேய்ந்து நாசம் பண்ணிவிட்டுவரும். யாரேனும் கழுதைதைய அடித்து விரட்டினாலோ அவர்களோடு வம்புக்குப் போவான்.

ஒருநாள் அவ்வண்ணானுடைய கழுதை ஒரு கோமுட்டி வீட்டுத் தோட்டத்திலே புகுந்து, அங்குப் பயிர் செய்யப்பட்டிருந்த காய்கறி முதலிய பயிர்களை மேய்ந்து

அழித்தது. கோமுட்டியின் மனைவி தடியொன்றைத் தூக்கிக் கழுதையை அடித்து விரட்டினாள். தடியடி கழுதையின் காலிலே பட்டபடியால் அது நொண்டி நொண்டிக்கொண்டு சென்றது.

வண்ணான் தன்னுடைய அருமைக் கழுதையைக் கோமுட்டியின் மனைவி அடித்துவிட்டாள் என்று கேள்விப் பட்டான். மிகுந்த சினத்துடன் விரைந்து வந்தான். கோமுட்டியின் மனைவி வயிற்றிலே தன்னுடைய காலால் ஓங்கி உதைத்தான். கோமுட்டியின் மனைவி ஆறு திங்கள் கருப்பம் உடையவளாக இருந்தபடியால் அக்கருப்பம் வண்ணானுடைய உதையினால் சிதைந்து போயிற்று.

கோமுட்டி உடனே நீதிமன்றத்திற்குப்போய் மதி யிழந்தான் முன்பு வண்ணான் செய்த கொடுமையைக் கூறினான். நீதிமன்றத் தலைவன் வண்ணானை அழைப் பித்து உசாவினான். தன் கழுதையின் காலைக் கோமுட்டி யின் மனைவி ஒடித்துவிட்டபடியால்தான் அவ்வாறு உதைத்ததாகக் கூறினான்.

மதியிழந்தான் தீர்ப்புச் சொல்லத் தொடங்கினான்: "வண்ணானுடைய கழுதையின் கால்கள் வழக்கம்போல் குணமாகும் வரையில் கோமுட்டி கழுதைக்குப் பதிலாகத் துணிகளைச் சுமந்துகொண்டு இருக்கவேண்டியது. வண் ணான் கோமுட்டியின் மனைவி மீண்டும் ஆறு திங்கள் கருப்பிணியாகும் வரையிலும் அவளை வைத்துக்கொண் டிருக்கவேண்டியது."

௩அ. சிங்கமும் நரியும்

ஒரு காட்டிலே சிங்கம் ஒன்று இருந்தது. அதற்கு அகவை மிகுந்துவிட்டபடியால் காட்டின் பலவிடங்களி லுஞ் சுற்றி இரைதேடுவதற்கு அதனால் முடியவில்லை. மேலுஞ் சோம்பேறித்தனமும் அதற்கு மிகுதியாக இருந் தது. ஆகவே தனது இருப்பிடமான குகையில் இருந்து

கொண்டே அந்து இரையைத் தேடிக்கொள்ள விரும்பியது.

குகைக்குள்ளே படுத்து முணுமுணுத்துக்கொண்டு இருந்ததுமன்றித் தனக்கு உடல் நலம் இல்லையென்றும் அது காடு முழுவதும் செய்தி பரப்பிற்று. இச்செய்தியைக் கேட்டுப் பல விலங்குகள் சிங்கத்தின் உடல் நலத்தைக் குறித்து உசாவுவதற்காகச் சிங்கத்தினுடைய குகைக்கு வந்தன. அவ்வாறு வந்த விலங்குகளையே சிங்கம் அடித்துத் தின்றுகொண்டு களிப்புடனிருந்தது.

ஒருநாள் நரி ஒன்று சிங்கத்தைப் பார்ப்பதற்காகச் சிங்கத்தின் குகைக்கு வந்து குகையின் வெளியே நின்று கொண்டு,"ஓ அரசர் பெருமானே! உன்னுடைய உடல் நலம் எவ்வாறுள்ளது? நான் உன்னுடைய உடல் நலத்தை உசாவித் தெரிந்துகொண்டு போகலாம் என்று வந்தேன்," என்று கூறியது.

நரியின் குரலைக்கேட்ட சிங்கம், "ஓ நரிராசனே! இப்பொழுது என்னுடைய உடம்பு சிறிது நலமாகவே இருக்கின்றது. என்னைப் பார்க்கவந்த நீ உள்ளே வராமல் வெளியிலேயே ஏன் நின்றுகொண்டிருக்கிறாய்? உள்ளே வந்துசேர்; சிறிது நேரம் உரையாடிக்கொண்டிருப்போம்," என்று கூறியது. அவ்விடத்திற்கு வருகிற விலங்குகளெல்லாம் சிங்கத்தினால் உயிரிழக்கின்றன என்பதை ஒருவாறு உணர்ந்துகொண்ட நரி, "எளியேன் தங்களுடைய பெருமை பொருந்திய இல்லத்திற்குள் வருதற்குத் தகுதியுடையேன் அல்லன். இழிந்தவனாகிய நான் தங்கள அரண்மனைக்குள் வந்தால் அரண்மனையின் பெருமை கெட்டுப் போகும். இப்படியே ஓடிப்போகிறேன்," என்று கூறிக் கொண்டே ஓடிப்போய்விட்டது. 'நம்முடைய சூழ்ச்சி நரியினிடம் பலிக்கவில்லையல்லவா?' என்று சிங்கம் மிகுந்த ஏமாற்றம் அடைந்தது.

௩௯. மணி கட்டிய நாய்

செல்வன் ஒருவன் ஒரு நாயை வளர்த்தான். அந்நாய் மிகுந்த திமிர்கொண்டு கண்டவர்களையெல்லாம் கடிக்கத் தொடங்கியது. அதனுடைய தன்மை எல்லோருக்குந் தெரியவேண்டும் என்று எண்ணிய செல்வன் அந்நாயின் கழுத்திலே மணி ஒன்றைக் கட்டிவைத்தான். அந்நாய் அந்த மணி தன்னைப் பெருமைப்படுத்துவதற்காகக் கட்டியது என்று எண்ணிக்கொண்டது. தலைகால் தெரியாதபடி மிகுந்த இறுமாப்புக்கொண்டு தனக்கு மணி கட்டியிருக்குஞ் செய்தியானது ஊரார் அனைவருக்கும் நன்றாகத் தெரியவேண்டும் என்று முடிவு செய்துகொண்டு தெருத் தெருவாய்ச் சுற்றிக்கொண்டு வந்தது.

மணி கட்டப்பெற்ற நாய் அவ்வாறு சுற்றிக்கொண்டு வரும்போது வேறொரு நாய் மணி கட்டப்பெற்ற நாயைப் பார்த்து, "ஓ மச்சான்! உனக்கு மணி கட்டப்பெற்றுள்ள செய்தி ஊர் முழுவதற்கும் நன்கு தெரியவேண்டும் என்னும் நோக்கத்தோடு நீ சுற்றிக்கொண்டு வருகிறாய்போல் தெரிகிறது. மணி கட்டியிருப்பது உன்னுடைய பெருமை எல்லோருக்கும் தெரியவேண்டும் என்பதற்காக அன்று. உன்னுடைய துடுக்குத்தனம் எல்லோருக்கும் தெரிந்து எல்லோரும் நின்னைக் கண்ட அளவில் அடித்து விரட்டுதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும் என்பதைத் தெரிவுறுத்துதற்காகத்தான். ஆகவே வீணாகத் துள்ளிக் குதிக்காதே. எவ்விடத்தில் தடியடி கிடைக்குமோ தெரியாது. விழிப்பாகவே இரு," என்று அறிவுரை கூறியது.

இதனைக் கேட்டவுடனே மணி கட்டப்பெற்ற நாய், "அப்படியா செய்தி? உனக்குத் தெரிந்துள்ள இச் செய்தி எனக்குத் தெரியாமற் போய்விட்டதே" என்று சொல்லிக்கொண்டே ஓட்டம் பிடித்தது. ஆகவே உண்மையை உணர்ந்துகொள்ளாமல் யாரும் பெருமை பாராட்டிக்கொண்டு திரியக்கூடாது.

௫௦. பூனைக்கு மணி கட்டுதல்

ஒருநாள் காட்டில் எலிகளின் மாநாடு ஒன்று கூடியது. மாநாட்டிலே, "பூனைகளின் தொல்லைக்கு நாம் எவ்வாறு தப்பிப் பிழைப்பது?" என்பதுதான் முதன்மையான ஆராய்ச்சியாக விளங்கியது. "பூனை நம்முடைய குலத்திற்குக் கொடிய பகையாக இருந்துகொண்டு நாள்தோறும் நம்மைக் கண்டவிடங்களில் பிடித்துக் கொலை செய்து தின்றுவிடுகிறது. மேலும் நாம் தகுந்த ஏற்பாடு செய்து நம்மைக் காப்பாற்றிக்கொள்ளாமற்போனால் நம்முடைய குலம் இருந்த இடமே தெரியாமற் போய்விடும்; ஆகவே, ஒவ்வொருவரும் தத்தமக்குப் புலனாகிற சூழ்ச்சிகளையெல்லாம் கூறுங்கள். ஆவன செய்வோம்," என்று தலைமையெலி தன்னுடைய தலைமைப் பேருரையை நிகழ்த்தியது.

பிறகு எலிகள் ஒவ்வொன்றும் தத்தமக்குத் தெரிந்த சூழ்ச்சித் திறன்களையெல்லாம் எடுத்துக்கூறின. எதுவும் தகுதிவாய்ந்ததாகத் தெரியவில்லை. சுண்டெலி ஒன்று எழுந்து, "நாம் மணி ஒன்றினைத் தேடிக்கொணர்ந்து அதனைப் பூனையின் கழுத்திலே கட்டிவிடுதல் வேண்டும். அவ்வாறு கட்டிவிட்டால் பூனை வரும்போது மணியின் ஒலி, 'கிண் கிண்' என்று கேட்கும். நாம் திடீரென்று நம்முடைய இருப்பிடமாகிய வளைக்குள் நுழைந்து பதுங்கிக்கொள்ளலாம்," என்று கூறிற்று. இதனைக்கேட்டவுடனே மற்றைய எலிகள், "இச் சூழ்ச்சித்திறன் மிகமிகத் திறமை வாய்ந்தது. நாம் இவ்வாறே செய்து பூனையின் தொல்லையில் இருந்து விடுபடலாம்," என்று கூறிப் பலவாறு முழங்கிப் பெருங்கூச்சலிட்டு இன்பக் கூத்தாடின. "இனிமேல் நாம் பூனைக்கு அஞ்சவேண்டிய கட்டாயமே இல்லை"யென்று ஒவ்வொன்றுந் துள்ளிக்குதித்தன.

எலிகளின் இன்பக் கூத்துச் சிறிது அடங்கியவுடன் தலைமை தாங்கிய எலி மற்றைய எலிகளைப் பார்த்து, "அன்பர்களே! சுண்டெலியாரின் சூழ்ச்சித்திறன் பெரிதும்

போற்றக்கூடியதாகத்தான் இருக்கிறது. ஆனால் ஒன்று மட்டுந்தான் எனக்கு விளங்கவில்லை. அஃதென்னவென் பீர்களாயின், பூனைக்கு மணியைக் கட்டுவது யார்? நாம் மணி ஒன்றைத் தேடி அதனைத் தூக்கிக்கொண்டு பூனையிடத்திற்குச் சென்றால், அஃது, 'இங்கே வாருங்கள்; என்னுடைய கழுத்திலே கட்டிவிட்டுப் போங்கள்' என்று தன்னுடைய கழுத்தைக் காட்டிவிட்டுச் சும்மாவா உட்கார்ந்துகொண்டிருக்கும்? நாம் பக்கத்திலே செல்வதற்கு முன்னரே, 'லபக் லபக்' கென்று பிடித்து விழுங்கிவிடாதா? இதைக்குறித்து யாரேனும் எண்ணிப்பார்த்தீர்களா?'' என்று கேட்டது.

இதனைக்கேட்டு ஓர் எலியும் மறுமொழி கூறவில்லை. எல்லா எலிகளும் ஒன்றையொன்று பார்த்துக்கொண்டு மிரளமிரள விழித்தன. இச்சமயத்தில் ஒரு பூனை மோப்பம் பிடித்துக்கொண்டு அப்பக்கமாக வந்தது. அவ்வளவில் மாநாடு இருந்த இடமே தெரியாமற் போய்விட்டது. நம்மால் ஒரு காரியம் முடியக் கூடியதா என்பதைச் சிறிதும் ஆராய்ந்து பாராமல் வீணாக அக்காரியத்தால் பெரும்பலனடையலாம் என்று இன்பக் கனவு கண்டு கூத்தாடுவதிற் சிறிதும் பயனில்லை.

---

௨௩. கரடியும் நண்பர்களும்

ஆருயிர் நண்பர்களாக விளங்கிய இருவர் ஒருநாள் காட்டு வழியாக வேற்றூர் ஊருக்குப் பயணஞ்சென்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது கரடி ஒன்று எதிரே வந்தது. நண்பர்கள் இருவரில் ஒருவனுக்கு மரம் ஏறத் தெரியும். மற்றொருவனுக்கோ மரமேறத் தெரியாது. மரமேறத் தெரிந்தவன் தன்னுடைய நண்பனுக்கு எத்தகைய உதவியுஞ் செய்யாமல் விரைவாகத் தான் ஒரு மரத்தின்மேல் ஏறிக்கொண்டான்.

மரமேறத்தெரியாத மற்றவனோ கரடி தன்னை யாது செய்கிறதோ என்னும் அச்சத்தினால் நடுநடுங்கிக் கீழே

வீழ்ந்து மூர்ச்சையடைந்துவிட்டான். பக்கத்தில் வந்த கரடி மூர்ச்சையடைந்தவனுடைய மூக்குக் காது முதலியவைகளை முகர்ந்து பார்த்துவிட்டுச் சென்றுவிட்டது. கரடி தொலைவாகச் சென்றுவிட்டபின் மரத்தின் மேல் இருந்தவன் கீழே இறங்கிவந்தான். தன்னுடைய நண்பனைத் தட்டி எழுப்பினான்.

மூர்ச்சையடைந்து கிடந்தவன் மூர்ச்சை தெளிந்து எழுந்தான். மரத்தின்மேல் ஏறிக்கொண்ட நண்பன் மூர்ச்சை தெளிந்தெழுந்த நண்பனைப் பார்த்து, "என் இனிய நண்பனே! கரடி உன்னுடைய காதிலே என்னவோ மறைமுகமான செய்தி கூறியதே! அஃதென்ன?" என்று கேட்டான்.

இடுக்கண் வந்த சமயத்தில் தன்னைக் கைவிட்டுவிட்ட நண்பன்மீது மூர்ச்சையடைந்த நண்பனுக்கு மிகுந்த சினம் உண்டாகியது. உடனே அவன் தன் நண்பனைப் பார்த்து, "ஓ அதனையா கேட்கிறாய்? தொல்லை நேர்ந்த சமயத்தில் உதவி செய்தலை விட்டுப் பின்வந்து கூடிக்குலவும் நண்பனை ஒருபோதும் நம்பாதே என்று கூறிற்று," என்று மறுமொழி கூறினான். இதனைக் கேட்டு மரமேறி நண்பன் மிகுந்த நாணமடைந்தான். இடுக்கண் நேருஞ் சமயத்தில் உதவி செய்யாத போலி நண்பர்களால் நமக்கு எத்தகைய நன்மையும் உண்டாகமாட்டாது.

---

௬௨. அரசனும் பந்தயக்காரனும்

ஓர் அரசன் ஒருநாள் தன்னுடைய அரண்மனையை விட்டுப் புறப்பட்டு வெளியே வந்தான். அப்போது வாயிலிலே ஒரு மனிதன் தன்னுடைய கையிலே கோழி ஒன்றை வைத்துக்கொண்டு நின்றிருந்தான். அரசன் அம் மனிதனைப் பார்த்து, "அப்பேன்! நீ யார்? இங்கு வந்து நின்றுகொண்டிருக்கக் காரணம் யாது?" என்று உசாவினான்.

அதற்கு அம் மனிதன், "ஆண்டவனே! அடியேன் தேவரீர் பேர் வைத்துக் கோழிப்பந்தயம் போட்டு இக் கோழியை வென்றேன். ஆகவே இதனைத் தேவரீர் இடத்தில் கொடுத்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்," என்று மறுமொழி கூறினான்.

அரசன், "அப்படியாயின் அதனை உள்ளே கொடுத்து விட்டுப்போ," என்று கட்டளையிட்டான். அம் மனிதனும் அவ்வாறே கொடுத்துவிட்டுச் சென்றான். மற்றொரு நாள் செம்மறியாட்டுக்கடா ஒன்றை ஓட்டிக்கொண்டுவந்து முன் போலவே காத்துக்கொண்டிருந்தான். அரசன் முன்பு போலவே உசாவ அம்மனிதன், "இக்கடா ஆண்டவர் பேரிட்டு வென்றது! செலுத்திவிட்டுப் போகலாம என்று வந்தேன்," என்று கூறி முன் போலவே அரண்மனையிற் கொடுத்துவிட்டுச் சென்றான்.

மற்றொருநாள் அம்மனிதன் வேறுசில பந்தயக்காரர் களோடு சும்மா வந்து நின்றுகொண்டிருந்தான். அரசன் அம்மனிதனைக் கண்டு, "என்ன இன்றைக்கு ஒன்றுங் கொண்டுவராமல் சும்மா வந்து நின்றுகொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான்.

அதற்கு அம்மனிதன், "அரசே! சும்மா வந்தவன் அல்லன். தங்களுடைய பேர்வைத்து ஈராயிரம் வராகன் பந்தயம் போட்டுத் தோற்றுப்போனேன். அவ்வராகனைக் கொடுக்குமாறு இவர்கள் என்னை இரக்கமற்றுப் பிடுங்கித் தின்னுகிறார்கள். ஆகவே தேவரீருடைய திருமுன்பிற்குக் கூட்டிக்கொண்டு வந்தேன்," என்றான்.

அரசன் அவ்விராயிரம் வராகனையும் தன்னுடைய பொருளறையிலிருந்து வரவழைத்து அவனிடங்கொடுத்து, "என்னுடைய பேர்வைத்து இனிமேல் பந்தயங்கள் போட வேண்டாம்," என்று அறிவுரைகள்கூறி அனுப்பினான். இவ்வாறு சிறுபொருள் கொடுத்துப் பெரும்பொருள் அடையுஞ் சூழ்ச்சியரும் பலர் உலகில் உளர்.

ருரு. வரம் பெறுதல்

ஓர் அந்தணனும் ஒரு கோமுட்டியும் ஒரு தெய்வத்திற்கு வெகுகாலமாகத் தொண்டு செய்துகொண்டிருந்தார்கள். அத்தெய்வம் ஒருநாள் வெளிப்பட்டு ஒவ்வொருவருக்கும் மூன்று வரங்களும் மூன்று தேங்காய்களுங் கொடுத்துச் சென்றது. வரங் கை கூடப்பெறுதல் வேண்டுமாயின் விரும்பியதனைக் கூறித் தேங்காய்களில் ஒன்றினை உடைத்தல் வேண்டும். அந்தணனுங் கோமுட்டியும் வீட்டையடைந்தார்கள்.

கோமுட்டி கடவுளைத் தொழுது தான் தன்னுடைய பெயரன் தங்கக்கிண்ணத்தில் சாப்பிடுவதைப் பார்க்க வேண்டுமென்று கூறி ஒரு தேங்காயை உடைத்தான். அவனுக்கு எல்லாவகையான செல்வங்களும் பெருகத் தொடங்கின.

அந்தணன் தன்னுடைய வீட்டிற்குப்போய்த் தனக்கு எல்லாவகையான செல்வங்களும் உண்டாக வேண்டுமென்று சொல்லித் தேங்காயை உடைக்கப்போனான். அப்பொழுது அவனுடைய மனைவி வந்து, "எஞ்சியிருக்கும் இரண்டு தேங்காய்களில் ஒன்றை, என்னுடைய பிறந்தகம் இந்திரலோகம்போலச் செழித்தோங்கும்படி வேண்டிக்கொண்டு உடைக்கவேண்டும்," என்று சொன்னாள்.

அவ்வளவில் அந்தணனுக்குப் பெருஞ்சினம் உண்டாகியது. 'நாம் நல்ல காரியத்தைச் செய்யத்தொடங்கிய போது இடையே வந்து தடைசெய்து பேசினாளே' என்று கொதித்தான். "பிறந்த அகமாம், இந்திரலோகமாம், சந்திரலோகமாம், எக்காரியத்தைச் செய்யத்தொடங்கினாலும் தடங்கல் செய்வதற்குக் கங்கணங்கட்டிக்கொண்டிருக்கும் தடிக்கழுதையே! வண்ணான் வீட்டுக்கழுதைமயிர் வேண்டுமென்று இத்தேங்காயை உடைக்கிறேன்," என்று சொல்லிக் கையிலிருந்த தேங்காயை உடைத்தான், உடனே வீடுமுழுவதும் கழுதைமயிர் கட்டுக்கட்டாய்க்

குளிர்ந்ததோடு கணவன் மனைவி இருவர் உடம்பு முழுவதும் கழுதைமயிர் உண்டாகிவிட்டது.

கழுதைமயிர்க் குவியலைக் கண்ட அந்தணன் மிகுந்த வருத்தமடைந்தான். 'அந்தோ சினத்தினால் எல்லாவற்றையுங் கெடுத்தோமே' யென்று ஏங்கினான். "இம்மயிரெல்லாம் போகவேண்டும்," என்று சொல்லி மற்றொரு தேங்காயை உடைத்தான். அப்பொழுது கழுதைமயிர் எல்லாம் போனதன்றிக் கணவன் மனைவி யிருவருடைய தலைமயிர் புருவமயிர் தோல்மயிர் முதலிய எல்லா மயிரும் போய் உடல்முழுவதும் மழுங்க மொட்டையடிக்கப் பெற்றவர்களைப்போல் ஆனார்கள். இதனைக் கண்ட அந்தணன் இஃதென்ன பெரிய கோரமாக இருக்கிறதே என்று கலங்கினான். இருவருக்கும் வழக்கம்போல் மயிர் அமைய வேண்டும் என்று சொல்லி மூன்றாவது காயை உடைத்தான். போனமயிர் திரும்பவும் உண்டாகி வழக்கம்போலாயிற்று. அந்தணன் இதுவே போதுமென்று மனநிறைவையடைந்தான்.

> " தவமுந் தவமுடையார்க் காகும் அவமதனை
> அஃதிலார் மேற்கொள் வது."

என்று திருவள்ளுவநாயனார் திருவாய் மலர்ந்தருளினார். பொய்யாமொழியாகிய அது பொய்யாதலும் உண்டா?

---

௨௨. அதிகாரச் செருக்கு

ஒரு பட்டணத்தில் இரண்டு இளைஞர்கள் இளமை முதற்கொண்டே நண்பர்களாக விளங்கினார்கள். இருவரும் ஒரே பாடசாலையிற் படித்து ஒன்றாகவே எப்பொழுதும் இருந்தார்கள். அவர்களுடைய ஒற்றுமையைப் பார்த்தவர்கள் மிகுந்த வியப்படைவது வழக்கம். அவர்களில் ஒருவனுக்குக் கல்வி நன்றாக வந்தது. மற்றவனுக்கோ கல்வி நன்றாகப் படியவில்லை. தறுகுறும்புகள் செய்துங் குறும்பர்களோடு இணைந்துங் காலம்போக்கினான்.

நாளடைவில் இருவரும் பெரியவர்களானார்கள். நன்கு கல்விகற்றுத் தேர்ச்சி பெற்றவனுக்கு அரசாங்கத்தில் ஓர் அலுவல் கிடைத்தது. அவன், "புத்தியோ டுலகினைப் புரந்தினி தளிக்கும் உத்தியோகத்தனாய்," உயர்ந்து விளங்கினான். மற்றவனோ எத்தகைய வேலையும் அகப்படாமல் வறுமையால் வாடித் தொல்லைக்கு உள்ளானான். துன்பப் படுகிற காலத்தில் நண்பர்களிடஞ் செல்லவேண்டும் என்று நூல்கள் முறையிடுகின்றன. இதனை எண்ணிக் கொண்டு, நம் நண்பனிடத்திற்குச் சென்றால் ஏதாவது உதவி செய்யமாட்டானா என்று தன் நண்பனாகிய உத்தியோகத்தனிடத்திற்குச் சென்றான் வேலையற்று வருந்தியவன்.

உத்தியோகத்தனாகிய நண்பனோ அதிகாரச் செருக்கினால் மிகுந்த களிப்பில் ஆழ்ந்திருந்தான். தன்னுடைய பழைய நண்பனைக் கண்டதும் வரவேற்கவோ களிப்படையவோ இல்லை. முன்பின் பாராதவனைப்போல் நடித்து, "நீ யார்? எங்கே வந்தாய்?" என்று கேட்டான்.

இதனைக் கேட்டவுடன் பார்க்கச் சென்ற நண்பனுக்கு மனம் பதறிப்போய்விட்டது. "அடே! நான் உன்னுடைய பழைய நண்பன். உனக்குக் கண் குருடாகப் போய்விட்டதென்று கேள்விப்பட்டபடியால் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்," என்று கூறிவிட்டு வந்தவழியை நோக்கி வீட்டிற்குப் புறப்பட்டான். இவ்வாறு அதிகாரச் செருக்கினால் அறிவற்றுப் போகிறவர்களும் உலகிலே பலர் இருக்கிறார்கள்.

---

௬௫. கேளப்பனுங் கேழ்வரகும்

ஓர் ஊரிலே ஒரு குடியானவன் இருந்தான். அவனுடைய பெயர் கேளப்பன். அந்த ஊரிலே ஓராண்டு மழை பெய்யாமற் போய்விட்டது. அதனால் நெல்விளையவில்லை. அன்னப்பிடி வெல்லப்பிடியாகிவிட்டது. மக்கள் கேழ்வரகு கம்பு முதலியவைகளை உண்டு காலந்தள்ளத் தொடங்கினார்கள். கேளப்பனுடைய வீட்டிலே மூன்றுகாலமுங் கேழ்வரகுக் கூழ்தான். கேளப்பன் நாள்தோறுங் கேழ்வரகுக் கூழையே சாப்பிட்டான். கேழ்வரகுக் கூழில் மிகுந்த வெறுப்பு ஏற்பட்டுவிட்டது.

கேளப்பன் எண்ணமிடலானான்: "எத்தனை நாளைக்கு இவ்வாறு கூழைக்குடிக்கிறது. மாமியார் வீட்டிற்காவது போய்வருவோம். 'மாமியார் வீடு மகாசுகம்' என்று எல்லோரும் அடிக்கடி மாமியார் வீட்டிற்குச் செல்லுகிறார்கள். நாமும் நான்குநாளைக்குப்போயிருந்தால் நல்ல விருந்தாகப், பருப்பும் நெய்யும், பாலுந் தயிரும், காயுங் கறியும், பண்டமும் பலகாரமுமாக வேளைக்கொருவிதமாகச் சாப்பிட்டு வரலாம்." இவ்வாறு எண்ணமிட்டு முடிவுசெய்துகொண்டு புறப்பட்டு மாமியார் வீட்டிற்குச் சென்றான்.

மாமியார் வீட்டில் அப்பொழுதுதான் புதுக்கேழ்வரகு அறுவடையாகி வீட்டிற்கு வந்திருந்தது. மருமகனைக் கண்ட மாமியார் கேழ்வரகை மாவரைத்துக் கூழ்காய்ச்சி மோரைவிட்டுக் கலந்து காலை நேரத்திலே கொடுத்தாள். நண்பகலிலோ கேழ்வரகைக் களியாகக் கிண்டி மொத்தையாக உருட்டிவைத்துச் சாப்பிடச்சொன்னாள். இரவிலோ வெல்லங்கலந்து இனிமையான அடையாகத் தட்டிக் கொடுத்தாள்.

மருமகன் அந்த அடையை நடுக்கூடத்திலே கொண்டுபோய் வைத்து மும்முறை சுற்றிவந்தான். "ஓ கேழ்வரகே! கேழ்வரகே!! உன்னுடைய பெருமையே பெருமை. இன்று காலையிலே நிராகாரமாக இருந்தாய்; நடுப்பகலிலோ இலிங்காகாரத்தை அடைந்தாய், இப்பொழுது இரவிலோ

சக்கராகாரமானாய்! உன்னுடைய ஆற்றலே ஆற்றல்,'' என்று சொல்லிப் புகழ்ந்தான். மாமியார் வீட்டினர் மருமகன் உண்மையாகவே கேழ்வரகு உணவை பாராட்டிப் புகழ்கிறான் என்று எண்ணிக்கொண்டார்கள். கேளப்பனுடைய மனதிலே அவர்கட்கு எவ்வாறு தெரியும்?

௩௰௩. கடிதம் எழுதக் கால்வலி தடை.

ஓர் ஊரிலே ஒரு கணக்கப்பிள்ளை இருந்தான். அந்த ஊரிலே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் இரண்டொருவரேயிருந்தார்கள். யாருக்கேனும் கடிதம் எழுதவேண்டியதாக இருந்தால் கணக்கப் பிள்ளையினுடைய உதவியைத்தான் நாடுவார்கள். ஒருநாள் ஓர் அந்தணன் கணக்கப் பிள்ளையிடம் வந்து, "கணக்கப்பிள்ளையவர்களே! அன்புகூர்ந்து எனக்கொரு கடிதம் எழுதிக்கொடுங்கள்,'' என்று சொல்லி வேண்டிக்கொண்டான். அதற்குக் கணக்கப்பிள்ளை, "ஐயரவர்களே! எனக்குக் கால்வலி மிகுதியாக இருக்கிறது. இப்பொழுது கடிதம் எழுதுவது இயலாத காரியம்,'' என்று மறுமொழி கூறினான்.

கணக்கப்பிள்ளை கழறியதைக் கேட்ட அந்தணன் தனக்குக் கடிதம் எழுதிக்கொடுப்பதற்கு விருப்பமில்லாமல் இவ்வாறு மறுமொழி கூறுகிறான் என்று நினைத்து, "நான் தங்கட்கு என்ன தீமை செய்தேன்? என்மேல் தங்கட்குச் சினமுண்டாகக் காரணம் இன்னதென்று தெரியவில்லையே?'' என்று சொன்னான்.

இதனைக்கேட்ட கணக்கப்பிள்ளை, "ஐயையோ! ஐயர்வாள் இவ்வாறு நினைத்துக்கொள்ளக் கூடாது. உங்களிடத்தில் எனக்கு எத்தகைய வெறுப்புஞ் சினமுங் கிடையாது. செய்தி என்னவென்றால், நான் எழுதுகிற கடிதங்களைத் திரும்பவும் நானே படிக்கும்படியாக நேரிடுகிறது. நான் உமக்குக் கடிதம் எழுதிக் கொடுத்தால் உம்மிடம் இருந்து கடிதத்தைப் பெற்றுக்கொண்டவன் "இக் கடி

தத்தை எழுதியவனை உடனே இவ்விடத்திற்கு அனுப்பி வைக்கவும்" என்று உமக்குச் செய்தி யனுப்புவான். நீர் உடனே என்னிடம் வந்து போகச்சொல்லுவீர். நான் அவ்விடம்போய் அக் கடிதத்தைப் படித்துக் காட்டி விட்டுத் திரும்பும்படியாக இருக்கும். ஏன் அவ்வாறு நேரிடுகிறதென்றால் என்னுடைய எழுத்துக்களை வேறு யாராலும் படிக்க முடிகிறதில்லை. இப்பொழுது கால்மணி நேரத்திற்கு முன்னாலேதான் கடிதம் படித்துச் சொல்வதற்காகக் காத தூரத்தில் உள்ள ஓர் ஊருக்குப் போய் விட்டுத் திரும்பினேன். அதனால் இப்பொழுது கால் மிகவும் வலியாக இருக்கிறது. அதனால் திரும்பவும் வேறூர் இடத்திற்கும் போக முடியாதே அதனால் சொன்னேனே யன்றி வேறெந்தக் காரணமும் இல்லை. நீங்கள் வேறு நான் வேறா? அப்படியெல்லாம் மனதில் ஒன்றும் வேறுபாடாக நினைத்துக்கொள்ளவேண்டாம். உங்களுக்கு எழுதாமல் வேறு யாருக்கு எழுதிக்கொடுக்கப் போகிறேன். நாளைக் காலையில் வாருங்கள். கட்டாயமாக எழுதிக்கொடுக்கிறேன். அப்படி அங்கே போய்ப் படித்து விட்டு வரவேண்டியதாக நேரிட்டாலும் தடையில்லாமற் போய்ப் படித்துவிட்டு வருகிறேன்," என்று சொன்னான். இவ்வாறு கையெழுத்து எழுதக்கூடிய பேர்வழிகள் எத்தனையோ பேர் உலகில் இருக்கிறார்கள். எல்லோருக்கும் விளங்கத்தக்க வகையில் நன்றாக எழுதுவதுதான் அறிவுடைமையாகும்.

---

௨௭. வழக்கறிஞனும் சாட்சியும்

சட்டப்படிப்பில் தேறி எம். எல். பட்டம் பெற்றவனாகிய வழக்கறிஞன் ஒருவன் ஒரு நாள் நீதியன்றத்திலே ஒரு சாட்சியைக் கேள்விகள் கேட்டு வழக்குச் செய்திகளை அறிந்துகொள்ளத் தொடங்கினான். சாட்சி சொல்வதற்கு வந்திருந்த மனிதன் அதுவரையில் அரசாங்க அலுவலில் அமர்ந்து உதவித்தொகை பெற்றுக்கொண்டு நலத்துடன்

வாழ்ந்திருக்கும் ஒரு நுண்ணறிவாளன். வழக்கறிஞன் அந்தப் பெரிய மனிதனை ஒரு பொருட்படுத்தாமல் அவனைப் பார்த்து, "நீ மிகவும் அகவை முதிர்ந்த கடுங்கிழவனாகக் காணப்படுகிருய். பத்து ஆண்டுகளுக்கு முன்னே நிகழ்ந்த செய்தி உனக்கு எப்படி நினைவிருக்கிறது?" என்று சொல்லிக் கேள்வி போட்டான்.

அதற்கு அந்தப் பெரிய மனிதன், "பத்தாண்டுச் செய்தி மட்டும் அன்று; இருபதாண்டுகட்கு முன்பு நிகழ்ந்த செய்திகள்கூட நினைவில் இருக்கின்றன," என்ருன். வழக்கறிஞன், "அப்படியாயின் அத்தகைய செய்தி ஒன்றைச் சொல்லு. உன்னுடைய நினைவாற்றலைப் பார்ப்போம்," என்ருன்.

அதற்குச் சாட்சியானவன், "ஐயா! இன்றைக்குப் பதினைந்தாண்டுகட்கு முன்னே, நீர் சட்டத் தேர்வுக்குப் படித்துக்கொண்டிருந்தீரே நினைவிருக்கிறதா?" என்று கேட்டான். "ஆம்; அப்பொழுது நான் சட்டத்தேர்வுக்குப் படித்துக்கொண்டிருந்தது உண்மைதான்," என்று வழக்கறிஞன் ஒப்புக்கொண்டான். மேலுஞ் சாட்சியானவன் தொடர்ந்து, "அந்த ஆண்டிலே செப்டம்பர்த் திங்களிலே இருபதாம் நாளிலே இரவு ஒன்பது மணி வேளைக்கு உம்முடைய தகப்பனுர் என்னிடத்திற்கு வந்து, உமது தேர்வு விண்ணப்பத்திற்காகச் செலுத்தவேண்டும் என்று என்னிடத்தில் முப்பது ரூபாய் கடன் வாங்கிக் கொண்டுபோனுர். அக்கடன் இன்றுவரைக்கும் தீர்க்கப் படவில்லை. வேண்டுமாஞல் நான் இதற்கு உரிய ஆதாரங்களோடு உறுதிப்படுத்தத் தயாராக இருக்கிறேன்," என்று சொன்னுன். இதனைக்கேட்டு நீதிமன்றத்தில் இருந்தவர்கள் அனைவரும் கைகொட்டி நகைத்தனர். வழக்கறிஞனே மிகுந்த நாணத்தோடு தலையைக்கீழே தொங்கப் போட்டுக்கொண்டான். அடக்கமில்லாமல் தங்களுடைய பெருமையைக் காட்டப் போகிறவர்கள் இவ்வாறுதான் சிறுமைக்கு உள்ளாவார்கள்.

௩அ. நல்லறிவுபெற்ற செல்வன்

ஒரு செல்வன் மிகுந்த பொருள் செலவிட்டுப் பெரிய விடு ஒன்றைக் கட்டினன். ஒன்றின்பின் ஒன்ருக எட்டுக் கட்டுக்கட்டி எட்டாவது கட்டிலே தான் எப்பொழுதும் தங்கியிருப்பதற்காக அழகிய அறை ஒன்றை அமைத்தான். அதில் கண்ணுடிக் குளோப்புகள் இரச குண்டுகள் முதலியன தொங்கவிட்டும் ஒவியங்கள் எழுதியும் அழகு படுத்தினன். இவன் செய்தி இவ்வாருக இரு காதவழிக்கு அப்புறம் ஓர் ஊரிலே இச்செல்வனுடைய நண்பன் ஒருவன் இருந்தான். அவன் வறியவன். உண்பதற்கும் உடுப்பதற்குங்கூட வழியில்லாமல் தொல்லைப் பட்டான். இவ்வாறு தொல்லைக்குள்ளானவன் மேற்படி செல்வனிடம் போய்ச் சாப்பாட்டுச் செலவுக்கு ஏதேனும் பெற்றுக்கொண்டு வருமாறு கூறித் தன்னுடைய மகனை அனுப்பினன்.

அப்பையன் மிகுந்த பசியுடனுங் களைப்புடனும் வந்து செல்வனைப் பார்த்தான். செல்வன் பையனுக்கு உண விட்டுப் பசியைப் போக்கவில்லை. நலம் உசாவவும் இல்லை. பையனை அழைத்துக்கொண்டுபோய்த் தன் வீட்டை ஒவ்வொரு கட்டாகக் காண்பித்தான். பசியினல் வாடிய பையன் செல்வனைப் பார்த்து, "ஐயா! வீடு மிக நன்ருகவுஞ் சிறந்த வேலைப்பாட்டோடும் விளங்குகிறது. ஆனல் ஒனறே ஒன்று; உனக்கு இருப்பிடம் இக் கடைசிக் கட்டிலே வைத்திருக்கிருயே, ஒருவேளை நீ இந்தக் கடைசிக் கட்டிலே இறந்துபோனல் இவ்வளவு வாசற்படிகளையுந் தாண்டிப் பிணத்தை வெளியே தூக்கிக்கொண்டு போதல் தொல்லையாயிற்றே," என்று சொன்னன்.

சிறுவன் செப்பியதைக்கேட்ட வீட்டுக்காரன் 'நாம் குடிவருவதற்கு முன்னரே இவன் இத்தகைய பொல்லாத மொழிகளைப் புகன்ருனே' என்று உள்ளம் வருந்தினன். வந்த சினத்தை மனத்திலேயே அடக்கிக்கொண்டு சிறுவன் வந்த காரியத்தைக் கேட்டான். "எல்லாவற்

றிற்கும் உன்னுடைய தகப்பனை வரச்சொல்,'' என்றுகூறி அனுப்பிவிட்டான். மகன் வீட்டிற்குச் சென்று தந்தையை அனுப்பினான். அவன் பசி காதையடைக்கத் தன் நண்பனாகிய செல்வன் வீட்டிற்கு வந்தான்.

வந்தவனைத் தாகத்துக்குச் சாப்பிடுகிறாயா? என்று கூடச் செல்வன் கேட்கவில்லை. அழைத்துக்கொண்டு போய் வீடு முழுவதையும் காட்டினான். "இவ்வாறு உன் மகனுக்குக் காண்பித்தபோது, இத்தகைய பொல்லாத மொழிகளைச் சொன்னான்'' என்று, பையன் சொல்லிய மொழிகளைக் கூறினான்.

இதனைக்கேட்ட நண்பன் அச்செல்வனைப் பார்த்து, "என் மகன் சிறு பிள்ளையாகையால் அறிவில்லாமல் பேசியிருக்கிறான். அதைக்குறித்து நீ எவ்வளவும் கவலைப்பட வேண்டியதில்லை. அவ்வாறு நீ உட்கட்டில் இறந்து போனால் பின்புறத்துச் சுவரை இடித்துப்போட்டுத் தாராளமாக உன்னுடைய பிணத்தை வெளியே தூக்கிக் கொண்டுபோகலாம்,'' என்று சொன்னான். செல்வன் இதனைக்கேட்டுப் 'பையனாவது நம்முடைய சாவைமட்டும் விரும்பினான்; இவனோ என்றால் கட்டிய வீட்டிற்கு அழிவும் நினைக்கிறான்' என்று மிகுந்த வருத்தமடைந்தான். யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை முதலியன அவனுடைய உள்ளத்திலே தோன்றின. நண்பனுக்கு வேண்டிய பொருளுதவி செய்து அனுப்பினான்.

---

௨௬. உலகம் பலவிதம்

ஓர் ஊரிலே ஒரு மனிதன் இருந்தான். அவனிடத்தில் குதிரை ஒன்று இருந்தது. அவன் அக்குதிரையை விற்றுவிட முடிவுசெய்து பக்கத்தில் இருந்த ஓர் ஊரில் கூடிய சந்தை ஒன்றுக்கு ஓட்டிக்கொண்டு சென்றான். அப்பொழுது அவனுடைய உதவிக்காக அவனுடைய மகனும் உடன்சென்றான். இருவருங் குதிரையின் பக்கமாக நடந்து சென்றுகொண்டிருந்தார்கள்.

அப்பொழுது எதிரே வந்த சிலர், "இக்குதிரை ஆளில்லாமல் வீணே நடந்துசெல்கிறது. இவர்களோ கால்வருந்த நடந்துசெல்லுகிருர்கள் இஃதென்ன மடமை," என்றனர். இதனைக்கேட்ட குதிரைக்காரன் தன் மகனைக் குதிரையின்மீது ஏற்றிவிட்டுத் தான் நடந்து சென்று கொண்டிருந்தான். அஞ்ஞான்றெதிர்ப்பட்ட சிலர், "அகவை முதிர்ந்த இக்கிழவன் நடந்துசெல்லக் குண்டுக் காளையாக விளங்கும் இந்த இளந்தடியன் குதிரைமீது ஏறிக்கொண்டு செல்கின்றனன். இக்காலச் சிறுவர்களே இவ்வாறுதான் பொல்லாதவர்களாக இருக்கின்றனர்," என்று பேசிக்கொண்டனர்.

குதிரைக்காரன் எல்லோருடைய மனமும் நோகாமல் நடந்துகொள்ளவேண்டும் என்னும் நன்னோக்கம் உடையவன். ஆகவே அவன் சிறுவனைக் கீழே இறக்கிவிட்டுத் தான் குதிரையின்மீது ஏறிக்கொண்டனன். மேலுஞ் சிறிது தொலை சென்றவுடன் எதிரே வந்த சிலர், குதிரையின்மீது கிழவன் செல்வதைப் பார்த்து, "இச்சிறுவன் நடந்து செல்லுகிருன். கிழவனோ குதிரைமீது சவாரி செய்கிருன்; இதுவுங் கலிகாலப் புதுமையே," என்றனர். இதனைக்கேட்ட கிழவன் திடுக்கிட்டுச் சிறிதுநேரம் எண்ணமிட்டான். ஒவ்வொருவரும் 'ஒவ்வொருவிதமாகச் சொல்லுகின்றனரே இதற்கென் செய்வது' என்று திகைத்தான். பிறகு சிறுவனையுந் தன்னோடு ஏற்றிக்கொண்டு இனிமேல் யாரும் எதும் பேசுவதற்கு இடமில்லையென்று களிப்புடன் சென்ருன். ஆனுல் கிழவன் எதிர்பார்த்தபடி எல்லோரும் மனநிறைவடையவில்லை. அதன்பிறகு எதிரே வந்த சிலர், "இஃதென்ன கொடுமை இரண்டுபேர் ஏறுகிறபடியால் இக்குதிரையினுடைய முதுகெலும்பு முறிந்துவிடும்போல் தெரிகிறதே. இவர்களுக்கு இந்த வாயில்லா உயிரிடத்திலே சிறிதும் அருள் இல்லையா? இத்தகைய கன்னெஞ்சக் கொடியரும் இவ்வுலகில் இருக்கின்றனரோ?" என்றனர்.

வேறுசில அறிவாளிகளோ, "இவர்கள் இருவரையும் இக்குதிரை சுமப்பதைவிட இவர்கள் இருவரும் இக்குதிரை

யைச் சுமப்பது தக்கது,'' என்று தமது எண்ணத்தைத் வெளிப்படுத்தினர். அறிவற்ற கிழவனே இது செய்யத் தக்கது இது செய்யத்தகாதது என்னும் உணர்ச்சி சிறிதும் அற்றவனுய்க் கீழே குதிரையைத் தள்ளி அதனுடைய நான்கு கால்களையும் ஒன்ருகச் சேர்த்துக் கட்டிவிட்டுத் தன் கையில் இருந்த தடியை இடையே நுழைத்துத் தானும் தன் மைந்தனும் ஆளுக்கொரு பக்கத்திற்பிடித்துத் தூக்கிக்கொண்டு சிறிது தொலை சென்றனர். வழியிலே ஆறொன்று குறுக்கிட்டது. ஆற்றைக் கடக்கப் பாலத்தின் மீது சென்றனர். இவ்வறிவற்ற செயலைக் கண்ட சிலர், "இத்தகைய முழுமூடர்களும் உலகத்தில் இருக்கின்றன ரேயோ,'' என்றுகூறிக் கைதட்டி நகைத்துப் பேராரவாரஞ் செய்தனர். ஆரவாரத்தைக் கேட்ட குதிரை கால்களை உதைத்து மிரண்டு ஆற்றிலே விழுந்துவிட்டது. ஆற்றிலே வெள்ளம் மிகுதியாகச் சென்றபடியாலும் கால்கள் கட்டப் பட்டிருந்தபடியாலும் சிறிதுநேரத்திற் செத்தொழிந்தது. சொந்த அறிவினுல் எண்ணிக் காரியங்களைச் செய்யாமல் கண்டவர்கள் கூறுபவைகளையெல்லாம் மடமையினுல் கேட்பவர் இறுதியில் மனம் வருந்தித் தொல்லைப்படு வார்கள்.

---

௫௦. யாராத்தாள் செத்ததும் விடிந்தால் தெரியும்

ஒரு மனிதனுக்குத் தாயாரும் மாமியாரும் இருந் தார்கள். அவனுடைய மனைவிக்கு உலகவழக்கப்படி மாமியாரைப் பிடிக்கவில்லை. தன்னுடைய தாய்மட்டும் இருந்தால் விருப்பப்படி நடக்கலாம், மாமியார் இருந்தால் தன் விருப்பப்படி நடக்கமுடியாது என்று எண்ண மிட்டாள். அதனை வெளிப்படுத்தாமல் தன்னுடைய கணவனைப் பார்த்து, "உன்னுடைய தாயார் என்னுடைய தாயாரை எப்பொழுதும் பகைத்துக் கலகஞ்செய்கிருள்,'' என்று சொன்னுள். மனைவி கூறியதைக்கேட்ட கணவன்,

"ஆனால் அதற்கு என்ன செய்யலாம்?" என்று கேட்டான். அதற்கு அவள், "நீ என்னுடைய தாயாரைக் கொன்று விடு," என்றாள். கணவன், "நான் கொல்லமாட்டேன், நீ என்னுடைய தாயாரைக் கொன்றுவிடு," என்றான்.

கணவன் உரையைக்கேட்ட அக்கொடியவள் "இஃது உண்மைதானா?" என்றாள். கணவன், 'இவளுடைய கொடுமையை முற்றும் அறிவோம்' என்று எண்ணியவனாய், "உண்மைதான்," என்றான். "இன்று இரவு உன்னுடைய தாய் உறங்கும்போது அம்மிக்கல்லைத் தூக்கிக்கொண்டு வந்து தலையிலே போட்டுக்கொல்லுகிறேன்," என்றாள். கணவன், "அவ்வாறே செய்," என்றான்.

நள்ளிரவில் அக்கொடியவள் எழுந்து விளக்கை யேற்றிக்கொண்டு பார்த்தாள். மாமியாரும் தாயாரும் ஓரிடத்திற் படுத்திருந்தார்கள். தன் மாமியார் காலிலே ஒரு வைக்கோற்பிரியை அடையாளத்திற்காகக் கட்டி வைத்துவிட்டு அம்மிக்கல்லைத் தூக்குதற்குச் சென்றாள்.

இவைகளையெல்லாம் தூங்குகிறவனைப்போற் கிடந்து கணவன் பார்த்தான். விரைவாக எழுந்து வைக்கோற் பிரியை அவிழ்த்து அவளுடைய தாயார் காலிலே கட்டி விட்டுத் தன்னுடைய தாயாரைச் சிறிது அப்புறமாகத் தள்ளிவிட்டான். அவள் அம்மிக்கல்லைக் கொண்டுவந்து வைக்கோற்பிரி அடையாளத்தைப் பார்த்து அவளுடைய தலைமேற்போட்டாள்.

பிறகு தன்னுடைய கணவனைத் தட்டியெழுப்பி, "உன்னுடைய ஆத்தாளைக் கொன்றுவிட்டேன," என்று சொன்னாள். இதனைக்கேட்ட கணவன், "யாராத்தாள் செத்ததும் பொழுதுவிடிந்தாற் றெரியும்," என்று சொன்னான். இது பிறகு பழமொழியாகிச் சில சமயங்களில் மாறுபட்ட உரையாடல் நடக்கும்பொழுது வழங்கி வருகிறது.

௫௧. மூன்றாம் மூண்ட புதுமை

ஓர் ஊரிலே மருதப்பன் என்னும் பெயருடையவன் ஒருவன் இருந்தான். அவனுடைய மனைவி அவன் செய்கிற தவறுகளில் முதல்மூன்று தவறுகளைப் பொறுத்துக் கொள்ளுவாள். நான்காவது தவற்றினைக் கண்டாலோ தன்னுடைய கையிலே இருக்கிற சட்டியை அவனுடைய தலையிலே போட்டு உடைத்துவிடுவாள். இஃதிவ்வாறாக, வேறோர் ஊரில் இவனுடைய நண்பன் ஒருவன் இருந்தான. அவனுடைய பெயர் வடுகப்பன். அவ்வடுகப்பனுடைய மனைவி மருதப்பனுடைய மனைவியைவிடப்பொல்லாதவள். அவள் தன்னுடைய கணவன் செய்யும் ஒரு தவற்றையும் பொறுக்கமாட்டாள். முதல் தவற்றைக் கண்டவுடனே சட்டியைத் தன் கணவனுடைய தலையிலே போட்டு உடைத்துவிடுவாள்.

மருதப்பனுக்குத் தன் குடும்பத்திலே மிகுந்த வெறுப் புண்டாகிவிட்டது. 'சட்டிகள் விழுந்தபடியினால் நம்முடைய தலை பெரும்பாலும் மொட்டையாகிவிட்டது. இவ்வாறு வழுக்கைத் தலையோடு இருப்பதைப் பார்க்கினும் நாவிதனிடத்திலே தலையை மழுங்க மொட்டையடித்துக் கொண்டு துறவியாகப் போய்விடுவோம்' என்று எண்ணியவனாய்த் தன் ஊரைவிட்டுப் புறப்பட்டுத் தன் நண்பனாகியவடுகப்பன் இருக்கும் ஊரையடைந்தான். வடுகப்பன் தன் நண்பனாகிய மருதப்பனைக் கண்டு தன்னுடைய இல்லத்திற்கு அழைத்துக்கொண்டு சென்றான்.

நீராடிய பிறகு இருவருஞ் சாப்பிடுவதற்கு உட்கார்ந்தார்கள். வடுகப்பனுடைய மனைவி ஒரு சட்டியிலே சோற்றை எடுத்துக்கொண்டுவந்து தன் கணவனுடைய உண் கலத்திலே முதலிற் போட்டாள். வடுகப்பன் வாயை மூடிக்கொண்டிராமல், "விருந்தாளியாக வந்திருப்பவருக்கு முதலிலே உணவைப் படைக்கவேண்டாமா?" என்று சொன்னான். அவ்வளவில் வடுகப்பன் மனைவி சினமடைந்து தன்னுடைய கையிலேயிருந்த சட்டியைக் கணவனுடைய

தலையிலே போட்டு உடைத்தாள். அஃது உடையும்போது வாயின் விளிம்பான கலவடை எழும்பி விருந்தாளியாகிய மருதப்பனுடைய கழுத்திலே வளையம்போல் மாட்டிக் கொண்டது.

இவ்வேடிக்கையைக் கண்ட மருதப்பன், வடுகப்பன் மனைவியைப் பார்க்கினும் தன் மனைவியே மிகுந்த குண சாலி என்று எண்ணிக்கொண்டு,

"வீணுவுடைந்த சட்டி வேணதுண்டு என் தலையில்
பூணூரம் பூண்ட புதுமைதனைக் கண்டதில்லை."

என்று சொன்னான். இம்மொழி உலகத்திலே நிலைபெற்று இன்றுவரையில் வழங்கிக்கொண்டிருக்கின்றது. இவ்வாறு தம் நிலைமை மற்றவர்கள் நிலைமையைவிடச் சிறந்து விளங்குவதைப் பலபேர் அறிந்துகொள்ளுகிறார்கள்.

ருஉ. அந்நேரிபாச்சா

ஓர் ஊரிலே அறிவில்லாத மனிதன் ஒருவன் இருந்தான். அவன் ஒருநாள் மாமியார் வீட்டிற்குச் சென்றான். மாமியார் வெல்லமிட்ட கொழுக்கட்டை செய்து மருமகனுக்குக் கொடுத்தாள். மருமகன் அதனைச் சாப்பிட்டுப் பார்த்தான். நன்றாக இருந்தது. "இதனுடைய பெயர் யாது?" என்று மாமியாரைப் பார்த்துக் கேட்டான். அவள், "கொழுக்கட்டை" என்று பதிலுரைத்தாள். அவன் வீட்டுக்குச் சென்றதும் தன் மனைவியைச் செய்யச்சொல்ல வேண்டும் என்று எண்ணினான். பலகாரத்தின் பெயர் மறந்துபோகாமலிருப்பதற்காக அடிக்கடி "கொழுக்கட்டை கொழுக்கட்டை" என்று சொல்லிக்கொண்டேயிருந்தான்.

பிறகு ஊருக்குப் புறப்பட்டுப்போகும்போது வழியிலே ஓர் ஆறு இருந்தது. அது மிகவுஞ் சிறிய ஆறு. தண்ணீரில் இறங்காமல் அவ்வாற்றை ஒரே தாண்டாகத் தாண்டி விடலாம். அப்பொழுது எதிரே வந்த ஒரு வழிப்போக்

கன், "அத்தேரிபாச்சா" என்று சொல்லிக்கொண்டே அவ்வாற்றை ஒரே தாண்டாகத் தாண்டினுன். அதனைக் கண்ட கொழுக்கட்டை ராமன் தானும் அவ்வாறே சொல்லிக்கொண்டு அவ்வாற்றைத் தாண்டினுன். அவ்வளவில் கொழுக்கட்டை என்னும் சொல் மறந்து அத்தேரிபாச்சா என்னும் சொல்லே வாயில் நிலைபெற்று நின்று விட்டது. ஆகவே, கொழுக்கட்டை ராமன், "அத்தேரிபாச்சா, அத்தேரிபாச்சா" என்றே சொல்லிக்கொண்டு வீட்டையடைந்தான்.

தன் மனைவியைக் கண்டதும், "அத்தேரிபாச்சா செய்துகொடு" என்ருன். "அஃதென்ன அத்தேரிபாச்சா? எனக்குச் செய்யத் தெரியாதே," என்ருள் அவள். அவனே "உன் தாய்க்குச் செய்யத் தெரிந்தது உனக்குச் செய்யத் தெரியாமல் இருக்குமா? நீ பொய் சொல்லுகிருய்," என்று சொன்னுன். தடி ஒன்றை எடுத்து அவளைக் கண்டபடி அடித்தான். அடித்த அடிகள் ஒவ்வொன்றும் நன்ருகத் தடித்துப்போய்விட்டன. அப்பொழுது அங்கு வந்த பக்கத்து வீட்டுக்காரி ஒருத்தி, "அடபாவி! இப்படியும் மனைவியை அடிக்கலாமா? கொழுக்கட்டைமாதிரி தடித்துப் போய்விட்டதே," என்று சொன்னுள்.

இதனைக்கேட்ட உடனே கொழுக்கட்டை ராமன், "அதாண்டி அதாண்டி" என்று சொல்லிக் கூத்தாடினுன். அவனுடைய மனைவி அவனது மூடத்தனத்திற்கு வருந்திக் கொழுக்கட்டை செய்துகொடுத்தாள். இத்தகைய மூடர்களும் உலகில் எத்தனையோ பேர் இருக்கிருர்கள்.

௩௩. வேங்கட ரெட்டியின் திருப்பதிப் பயணம்

ஓர் ஊரிலே வேங்கட ரெட்டி என்னும் பெயருடைய மனிதன் இருந்தான். அவன் திருப்பதிக்குப் போக வேண்டும் என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தான். ஒருநாள் அவன் வயலிற் களத்துமேட்டிலே உட்கார்ந்து கொண்டிருந்தபோது சிலர் அவ்வழியே திருப்பதிக்குச் சென்றுகொண்டிருந்தார்கள். வேங்கடரெட்டி யாரிடமுஞ் சொல்லாமலே தானும் அவர்களோடு சேர்ந்து திருப்பதிக் குப் போய்விட்டான்.

அவன் களத்தைவிட்டுச் சென்ற பிறகு களத்திற் கட்டியிருந்த கன்றுக்குட்டி அங்கிருந்த நெருப்புச்சட்டி ஒன்றை முட்டிக் கவிழ்த்து வைக்கோற் போரிலே தீப் பற்றிக்கொள்ளுமாறு செய்துவிட்டது. அதனால் வைக் கோற்போர் எரிந்து தொலைந்ததுடன் கன்றுக்குட்டியும் இறந்து தொலைந்தது. அதனுடைய எலும்புகள் உருத் தெரியாமல் தூளாகிக்கிடந்தன. 'களத்திற்கு வந்து பார்த் தவர்கள் வேங்கட ரெட்டி நெருப்பில் இறந்துவிட்டான். கிடப்பது அவனுடைய எலும்புதான்' என்று முடிவு செய் தனர். வேங்கட ரெட்டியின் உறவினர்களோ அழுது புலம்பினர்.

ஊரார்கள் வேங்கடரெட்டிக்குச் செய்யவேண்டிய இறுதிச் சடங்குகளையெல்லாஞ் செய்துமுடித்து அவன் மனைவி திருமங்கல நாணையும் வாங்கச் செய்துவிட்டனர். இவைகளெல்லாம் நடந்து முடிந்த பத்தாவது நாள் வேங்கட ரெட்டி திருப்பதியிலே மொட்டையடித்துக் கொண்டு பட்டை நாமஞ் சாத்தியவனாய்க் கையில் ஒரு தடியுடன் ஊருக்கு வந்து சேர்ந்தான். அவன் வந்த நேரம் விளக்கேற்றுகிற நேரம். வேங்கட ரெட்டியை முதன் முத லாக ஒரு பெண்பிள்ளை பார்த்தாள். அவளுக்கு உடல் நடுங்கியது. வாய் குழறியது, "இறந்துபோன வேங்கட ரெட்டி பிசாசாக வருகிறான்," என்று நெடுங்குரல் எடுத்

துக் கத்தினுள். இவள் கத்தியதைக் கேட்டுப் பலபேர் வந்து பார்த்தார்கள். பார்த்தவர்கள் யாவரும் பிசாசு தான் என்று முடிவு செய்து நடுநடுங்கிக் கீழே வீழ்ந்து மூர்ச்சையடைந்தார்கள். எல்லோரும் வீட்டுக் கதவைச் சார்த்தித் தாழ்ப்பாளும் போட்டுக்கொண்டார்கள்.

ஊரார்கள் தன்னைக் கண்டு அஞ்சுதலை வேங்கட ரெட்டி பார்த்தான். இதற்கு யாது செய்யலாம் என்று எண்ணமிட்டான். 'காளிகோவிற் பூசாரி மந்திரக்காரன். அவன் நம்மைக் கண்டு அஞ்சமாட்டான்; அவன் இடத்திற் குப்போய் நாம் திருப்பதிக்குப் போய்வந்திருக்குஞ் செய்தி யைக் கூறுவோம்' என்று எண்ணமிட்டுக்கொண்டு காளி கோவிலுக்குப்போய்க் கோவில் வாயிலிலே நின்றுகொண் டிருந்தான். பூசாரி விளக்கேற்றும்பொருட்டுக் காளி கோயிலை நோக்கி வந்துகொண்டிருந்தான். வரும்போதே 'வேங்கடரெட்டியின் பிசாசு இங்கும் வந்துவிட்டால் என்ன செய்வது' என்று அஞ்சிக்கொண்டே வந்தான். கோயில் வாயிலிலே வேங்கட ரெட்டி நின்றிருத்தலைக் கண்டான். கண்டவுடனே பேதியாகி விழுந்து மாண்டான்.

பிறகு வேங்கட ரெட்டி வீடு வீடாகப்போய்த் தான் திருப்பதிக்குப் போய்வந்திருப்பதாகவும் கதவைத் திறக்கு மாறும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் கதவைத் திறக்கவில்லை. மறுநாட் காலையில்தான் மக்கள் உண்மை யை உணர்ந்து அச்சம் நீங்கினார்கள். இவ்வாறு மடத் தனமாக நடந்துகொள்பவர்களும் உலகத்தில் எத்த னையோ பேர் இருக்கிறார்கள்.

௫௬. கண்டது பழுதை கடித்தது மாங்கொட்டை.

தொடை நடுங்கியாக விளங்கிய ஒருமனிதன் ஒருநாள் இரவு வழிநடந்துகொண்டிருந்தான். அப்பொழுது ஒரு வைக்கோற்பிரி வழியிலே நெளிந்துகிடந்தது. விண்ணிலேயிருந்த திங்கள் முகிற்படலத்தால் மறைப்புண்டு ஒளி குன்றியிருந்தது. அப்பொழுது தொடைநடுங்கி அப்பழுதையைப் பார்த்தான். பாம்பு கிடக்கிறது என்று எண்ணி நடுநடுங்கினான். எங்கே நம்மைத் தொடர்ந்து கடித்துவிடுகிறதோ என்று விரைந்தோடினான். வழியிலே ஒரு மாங்கொட்டை சிறிது வாய்பிளந்துபோய்க் கிடந்தது. காற்பெருவிரல் ஒன்று மாங்கொட்டைப் பிளப்பை அழுத்த அப்பிளப்பு விரலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது.

அவ்வளவில் தொடை நடுங்கி, "ஐயையோ பாம்பு கடித்துவிட்டதே! பாம்பு கடித்துவிட்டதே," என்று சொல்லி அலறிக்கொண்டு ஓடினான். அவனையறியாமலே விரலைப்பற்றியிருந்த மாங்கொட்டை கீழே விழுந்து விட்டது. ஆயினும் தொடைநடுங்கி பாம்பு கடித்துவிட்டதாக அலறுவதை நிறுத்தவில்லை. மேலும் அவன் தெய்வ நம்பிக்கையும் உடையவனாகையால் பாம்பு நஞ்சு தீமை செய்யாமல் இருக்கும் பொருட்டு அடிக்கடி, "சிவசிவா, சிவசிவா," என்றுஞ் சொல்லிக்கொண்டு ஓடினான்.

அப்பொழுது தொடைநடுங்கிக்கெதிரே ஒரு மனிதன் ஒருகையில் விளக்கும் ஒருகையில் தடியும் பிடித்தவனாகி வந்துகொண்டிருந்தான். அம்மனிதன் தொடை நடுங்கியைத் தடுத்து நிறுத்தி, "என்ன செய்தி?" என்று வினவினான். அதற்குத் தொடைநடுங்கி, "ஐயா பாம்பு ஒன்று என்னுடைய காற்பெருவிரலிலே கடித்துவிட்டது. கடித்தது எளிதாக விடவில்லை; சிறிதுநேரம் பிடித்துக்கொண்டிருந்து அப்புறந்தான் விட்டது," என்றான்.

உடனே அந்த மனிதன் கீழே உட்கார்ந்து தொடை நடுங்கி காட்டியவிரலில் பல்பட்டிருக்கிறதா, இரத்தம் வருகிறதா என்று ஆராய்ந்து பார்த்தான். அப்படியொன்றுந் தெரியவில்லை. தொடை நடுங்கியைப் பார்த்துப் "பாம்பு கடித்த அறிகுறி எதுவுந் தெரியவில்லை. பாம்பு கடித்திருந்தால் இந்நேரம் மயங்கிக் கீழே விழுந்திருப்பாய்; அப்படியும் இல்லை. பாம்பை நீ எவ்விடத்திலே கண்டாய் அந்த இடத்திற்கு வந்துகாட்டு; சிறிதும் அஞ்சாதே, என்னுடைய கையிலே விளக்கிருக்கிறது; தடியும் இருக்கிறது வா பார்ப்போம்," என்று சொல்லிக் கூப்பிட்டான்.

தொடை நடுங்கிக்கு அம்மனிதனைத் தொடர்ந்து போய்ப் பார்ப்பதற்குச் சிறிதும் விருப்பமில்லை. ஆயினும் அவன் கூப்பிட்டபடியால் சிறிது அச்சத்துடனேயே பின் தொடர்ந்து சென்றான். சிறிது தொலை சென்றவுடன் வழியிலே மாங்கொட்டை வாயைப் பிளந்துகொண்டு கிடத்தலைத் தொடை நடுங்கிக்குக் காட்டினான். தொடை நடுங்கியோ, "என்னைக் கடித்தது இஃதன்று, பாம்பு," என்று சொன்னான். இதைக்கேட்ட அம்மனிதன் தொடை நடுங்கியை மேலுஞ் சிறிதுதொலை அழைத்துக்கொண்டு சென்றான். வழியிற்கிடந்த வைக்கோற் பிரியைத் தொடை நடுங்கிக்குக் காட்டி, "நீ பாம்பு நெளிவதைப்பார்த்த இடம் இதுதானே," என்று சொல்லிக் கேட்டான்.

தொடை நடுங்கிக்கோ மறுத்துப் பேசமுடியவில்லை. தான் அதனைப் பார்த்துத்தான் அஞ்சி நடுங்கி ஓடியிருக்க வேண்டும் என்று முடிவுசெய்துகொண்டு தன்னை அழைத்துவந்த மனிதனைப்பார்த்துப் பல்லைக்காட்டினான். அன்றுமுதற், "கண்டது பழுதை கடித்தது மாங்கொட்டை," என்னும் பழமொழி உண்டாகிவிட்டது. "அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்," என்று சொல்வதும் இந்த இடத்திற்குப் பொருந்தும். இவ்வாறுதான் சிலபேர் வீணை அச்சங்கொண்டு கவலைக்கும் துன்பத்திற்கும் உள்ளாகிறார்கள்.

ருரு. யானைக்கும் பானைக்குஞ் சரி

ஒரு வேளாளன் தன்னுடைய மகனுக்குத் திருமணஞ் செய்தான். அவன் மிகுந்த செல்வம் உடையவன். திருமணத்தன்று இரவு யானைமேல் அம்பாரிவைத்து மணமக்களை அதில் இருக்கச்செய்து ஊர்கோலம் நடத்த எண்ணினான். அவ்வூரிலே ஒரு முகமதியனிடம் யானை இருந்தது. வேளாளன் அந்த யானையை ஒருநாளைக்கு இரவலாக முகமதியனிடம் கேட்டான். முகமதியனும் அதற்கு இணங்கி யானையைக் கொடுத்தான்.

இரவிலே மிகுந்த சிறப்புடன் ஊர்வலம் நடந்துகொண்டிருந்தது. தெய்வச் செயலாக அந்த யானை கீழே விழுந்து திடீரென்று இறந்துபோய்விட்டது. வேளாளன் உடனே முகமதியனிடத்திற்குப்போய், "உன்னுடைய யானை தற்செயலாக இறந்துபோய்விட்டது. யானைக்குரிய விலையைக் கொடுக்கிறேன். அல்லது வேறு யானையாவது வாங்கிக்கொடுக்கிறேன்," என்று சொன்னான். வேளாளன் கூறியதற்கு முகமதியன் இணங்கினான் அலன். "நீ வேறு எதனைக்கொடுத்தாலும் யான் அதனைப் பெறேன். என்னுடைய யானைதான் எனக்கு வேண்டும். என்னுடைய யானையைக் கொடு," என்று பிடிவாதஞ் செய்ததன்றி நீதிமன்றத்திற்குப்போய்த் தன்னுடைய யானையை வாங்கிக்கொடுக்கவேண்டுமென்று முறையீடு செய்தான்.

நீதிமன்றத் தலைவன் வேளாளனை அழைப்பித்து உசாவினான். வேளாளன், "இவனுடைய யானை தெய்வச் செயலாக மாண்டுபோய்விட்டது. யான் அதனை வேண்டுமென்று கொலைசெய்தேன் அல்லன். அவ்யானைக்குரிய விலையைக் கொடுக்கிறேன். அல்லது வேறு யானை வாங்கிக்கொடுக்கிறேன். ஒப்புக்கொள்ளச் சொல்லுங்கள்," என்று சொல்லி வேண்டிக்கொண்டான்.

நடுவன் முகமதியனைப்பார்த்து, "உன்னுடைய யானை தெய்வச்செயலாக இறந்து போயிருக்கிறபடியால் அதற்

குரிய விலையையோ அல்லது வேறு யானையையோ வாங்கிக்கொள்," என்று எவ்வளவோ வற்புறுத்திக் கூறினன். முகமதியனே சிறிதும் இணங்கினன் அல்லன். தன்னுடைய யானையே வேண்டுமென்று பிடிவாதமாகக் கூறினன். நடுவன் முகமதியனை மறுநாள் வருமாறு போக்கிவிட்டு வேளாளனைத் தனிமையில் அழைத்து, "நாளைக்கு நீ நீதிமன்றத்திற்கு வருதல் வேண்டாம். நீ உன்னுடைய வீட்டிலே உள்ள சட்டிபானைகளையெல்லாம் எடுத்துக், கதவைச் சும்மா சார்த்திவைத்துக் கதவோரத்திலே அடுக்கி வைத்துக்கொண்டு உள்ளே இரு. முகமதியன் இங்கு வந்தவுடன், 'உன்னுடைய எதிர் வழக்காளி இன்னும் வந்திலன். நீ அவனுடைய வீட்டிற்குப்போய் அவனை அழைத்துக்கொண்டுவா' என்று சொல்லி அவனை உன்னுடைய வீட்டிற்கு அனுப்பிவைக்கிறேன். அவன் மிகு விரைவாக வந்து உன் வீட்டுக்கதவினைத் திறப்பான். அவ்வளவில் சட்டிபானைகளெல்லாம் கீழே வீழ்ந்து பலவாறு உடைந்து சிதறிப்போகும். நீ உடனே பேரிரைச்சலிட்டு, 'அந்தோ! எங்களுடைய முன்னோர்கள் ஆண்டு வந்த புகழ்பெற்ற சட்டிபானைகளெல்லாம் இம்முகமதியன் உடைத்துவிட்டனனே' என்று பெருங்குரலெடுத்து ஓலமிட்டு வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு பக்கத்தார்களெல்லாரும் வந்து குவியுமாறு பேரொலி செய்து கூச்சலிட்டு அழு. அவன் எவ்வளவு சமாதான உரைகள் கூறினும் நீ அவைகளைச் சிறிதுங் கேளாதே. உடைந்து போன சட்டிபானைகளே வேண்டுமென்று பிடிவாதஞ்செய். பிறகு என்னிடம் வந்து முறையிட்டுக்கொள்," என்று சொல்லிக்கொடுத்து அனுப்பினன்.

மறுநாள் முகமதியன் நீதிமன்றத்திற்குச் சென்றவுடன் நடுவன் முகமதியனைப்பார்த்து, "எதிர் வழக்காளி வந்திலன். நீபோய் அழைத்துவா," என்று சொல்லி அனுப்பினன். எல்லாம் நடுவன் சொல்லிக் கொடுத்தவாறே நடைபெற்றன. நடுவனிடம் குடியானவன்போய், "என்னுடைய சட்டிபானைகளே எனக்குவேண்டும்," என்ற

னன். நடுவன் முகமதியனைப்பார்த்து, "நீ யாது கூறு கின்றனை?" என்று கேட்டான். அதற்கு முகமதியன், "யானைக்கும் பானைக்குஞ் சரியாய் போயிற்றுப்போ," என்றான்.

அன்றுமுதல் இம்மொழி உலகிலே நிலைபெற்றுப் பெருங்காரியங்கட்குஞ் சிறு காரியங்கட்கும் ஒப்புக்கூறுகிற பொழுது வழங்குகிற ஒரு பழமொழியாக முடிந்துவிட்டது.

---

௫௧. முயலுக்கு மூன்றே கால்

ஒரு பெருந்துறவி ஒரு காட்டிலே தவஞ் செய்துகொண்டிருந்தார். அவருடைய பெயர் கதிர் ஒளி. இக் கதிர் ஒளி முனிவரிடத்திலே மாணவன் ஒருவன் இருந்தான். அவனுடைய பெயர் திருமேனி. ஒரு நாள் முனிவர் தம்முடைய மாணவனாகிய திருமேனியைக் கூப்பிட்டு, "அடே திருமேனி! காட்டுக்குப்போய் ஒரு முயல் பிடித்துக் கொண்டுவந்து சமை. அதன் கால்களைத் தனியே சுட்டுக் கொண்டு வா," என்று கட்டளையிட்டார்.

திருமேனி அவ்வாறே ஒரு முயலைப் பிடித்துவந்து சமைத்தான். அதனுடைய கால்களைச் சுட்டான். அப்பொழுது ஒருகாலைத் தான் தின்றுவிட்டான். பிறகு எஞ்சிய மூன்று கால்களையும் கறியையும் முனிவரிடத்திலே கொண்டுபோய் வைத்தான். மூன்று கால்களைக் கண்ட முனிவர், "மற்றொரு கால் எங்கே?" என்று கேட்டார். திருமேனி, "நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்கள் தாம் இருந்தன" என்று சொல்லி வாயடி அடித்தான். இதனைக்கேட்ட முனிவர் வியப்படைந்தார். 'நம்முடைய மாணவன் எவ்வளவு உறுதியான உள்ளம் படைத்தவன் என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும்' என்று முடிவு செய்து, அவர் அடிக்கடி தம் மாணவனிடத்திலே, "நீ பிடித்த முயலுக்கு எத்தனை கால்கள்?" என்று கேட்டுக் கொண்டேயிருந்தார். அவர் கேட்கும்போதெல்லாம்

திருமேனி. "நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்கள் தாம் இருந்தன," என்று உறுதியாகச் சாதித்துக்கொண்டு வந்தான். பலமுறை அச்சுறுத்திக் கேட்டும் மாணவன் உண்மையை ஒப்புக்கொள்ளவில்லை.

முனிவர் வேறொருவகையாக ஆராய்ந்து பார்க்கத் தொடங்கினர். அவனுடைய நெற்றியிலே மையொன்றைப் பொட்டாக வைத்தார். அம் மை மாய மை; அதனை ஒருவர் நெற்றியில் வைத்துக்கொண்டால் அவர்களுடைய உருவம் கண்ணுக்குத் தோன்றமாட்டாது. அத்தகைய பொட்டை வைத்ததும் அரசனுடைய அரண்மனைக்குப் போய் அரசனுக்குச் சமைக்கிற சாப்பாட்டைக் கொண்டு வரச் சொன்னர். மாணவன் நாள்தோறும் அவ்வாறே பொட்டிட்டுக்கொண்டு அரசனுடைய சாப்பாட்டைக் களவு செய்துகொண்டிருந்தான். அரசன் கள்ளனைப் பிடிப்பதற்கு முயற்சி செய்தான்; முடியவில்லை. தன்னுடைய சாப்பாட்டைக் களவு செய்துகொண்டு போகிற கள்ளனைப் பிடித்துக் கொடுப்பவர்கட்குத் தக்கவாறு நன்கொடை வழங்குவதாக எங்கும் தெரியப்படுத்தினன்.

ஒருநாள் முனிவர் அரசனிடம் வந்து, "சோறு கறி முதலியவைகளைச் சுடச்சுட வைத்துக்கொண்டிருந்தால் கள்ளனைப் பிடித்துக்கொள்ளலாம்," என்று அறிவுரை கூறிவிட்டுச் சென்றார். உணவுப் பொருள்களைச் சுடச்சுட வைத்துக்கொண்டிருக்குமாறு அரசன் மடைத்தொழிலாளர்கட்குக் கட்டளையனுப்பினன். அன்று மாணவன் மடைப்பள்ளிக்குச்சென்று உணவுகளை ஏனங்களில் விரைவாக எடுத்து வைத்துக்கொண்டிருந்தான். உணவின் சூட்டினலே ஆவி எழும்ப அதனல் மாணவனது நெற்றியிலே இருந்த மை கரைந்துவிட்டது. மை கரையவே மாணவக் கள்ளன் அகப்பட்டுக்கொண்டான்.

அரசன் மாணவக் கள்ளனுடைய தலையை வாங்கிவிடுமாறு கொலையாளிகட்குக் கட்டளையிட்டான். கொலைக்களத்திற்குப் போய்ச்சேர்ந்தவுடன் குருவாகிய முனிவர்

தோன்றி, "மாணவா! இப்பொழுதேனும் நீ உண்மையை உரைத்தால் உன்னுடைய கொலைத்தண்டனையை மாற்றி விடுகிறேன். நீ பிடித்த முயலுக்கு எத்தனை கால்கள்? உண்மையைக் கூறு," என்று கேட்டார். மாணவன் அப்பொழுதும் அஞ்சாமல், "நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்கள்தாம்," என்றான். குரு மாணவனுடைய உள்ளத் திடத்தைப் பார்த்து மிகுந்த வியப்படைந்தார். அரச னிடத்திலே கட்டளைபெற்று அவனை அழைத்துக்கொண்டு போய் நல்லுரை வழங்கினர். அக்காலந்தொட்டு உறுதி யாகப் பொய்ம்மொழி உரைப்பவர்களைப் பார்த்து மற்ற வர்கள், 'நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்று சொல் வது வழக்கமாகிவிட்டது. இவ்வாறு உயிர் போனாலுஞ் சரி என்று பொய்ம்மொழி புகலுவோர் உலகில் எத்தனையோ பேர் இருக்கின்றனர்.

---

௩௭. பழைய கறுப்பனே கறுப்பன்

ஓர் ஊரிலே ஒரு செல்வன் இருந்தான். அவனிடத் திலே கறுப்பண்ணன் என்னும் பெயருடைய பையன் ஒரு வன் மாட்டுக்காரனாக அமர்ந்து மாடு மேய்த்துக்கொண் டிருந்தான். ஒருநாள் கறுப்பண்ணன் ஒரு மலைச்சாரலிலே மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்தபோது பெரிய கல் ஒன்றைப் புரட்டினான். ஒரு தவலை நிறைய வராகன்கள் இருந்தன. யாரோ அங்கு கொண்டுவந்து மறைவாக வைத்த அப்புதையலைத் திரும்பவும் எடுத்துக்கொண்டு போவதற்கு மறந்துவிட்டபடியால் அத்தவலை அக்கல்லுக் குக் கீழேயே இருந்தது. புதையலைக்கண்ட கறுப்பண்ணன் மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். இருந்தபடியே கல்லைவைத்து மூடிவிட்டான். அப்புதையலைக் கண்டதுமுதல் அவனு டைய உள்ளம் பெருமிதத்தை யுடையதாக மாறிவிட்டது. அதனால் உள்ளம் பூரித்துப்போனான்.

மாலையில் கறுப்பண்ணன் மாடுகளை யோட்டிக் கொண்டு வீட்டிற்கு வந்ததும் அவனுடைய தலைவன்,

"அடே கருப்பா! மாடுகளையெல்லாம் நன்ருக மேய்த்துக் கொண்டு வந்தாயா?" என்று கேட்டான். இதனைக் கேட்ட கருப்பண்ணன் சிணுங்கொண்டான். தன்னுடைய தலைவனைப் பார்த்து, "சும்மா கருப்பா என்று கூப்பிடுங் கள். அடாப் போட வேண்டாம்," என்ருன்.

இதனைக்கேட்ட தலைவன் 'ஏதோ புதுமையுண்டாகி யிருக்கிறது; ஆராய்ந்து பார்க்கவேண்டும்' என்று தனக் குள் முடிவுசெய்துகொண்டான். மறுநாள் கருப்பன் மலையடிவாரத்துக்குப்போய் மாடுகளை மேய்த்துக்கொண்டு புதையல் அப்படியே இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டு வந்தான். மாலையில் தலைவன், "கருப்பா! மாடு களையெல்லாம் நன்ருக மேய்த்துக்கொண்டுவந்தாயா?" என்று கேட்டான். கருப்பன் தலைவனைப் பார்த்து, "என்னைக் கருப்பண்ணு என்று கூப்பிடக்கூடாதா?" என்ருன். மறுநாள் மாலையில் கருப்பன் மாடுகளையோட் டிக்கொண்டு வந்ததும் அவனுடைய தலைவன், "கருப் பண்ணு" என்றுக் கூப்பிட்டான். இதனைக்கேட்டவுடனே பையன், "என்னை இன்றுமுதல் கருப்பண்ணபிள்ளை என்று கூப்பிடுங்கள்," என்ருன். மறுநாள் தலைவன் "கருப்பண்ண பிள்ளை" என்று கூப்பிட்டான்.

கருப்பன் தன்னுடைய தலைவனைப் பார்த்து, "எனக்கு மண் கிண்ணியிலே சாப்பாடு போடுகிறீர்களே! வாழை யிலையிலே போடக்கூடாதா?" என்று கேட்டான். அப் படியே அவனுக்கு வாழையிலையிலே அன்று உணவு படைக்கச்செய்தான்.

மறுநாள் காலையில் உண்மையை உணர விரும்பிய தலைவன் கருப்பனுக்குத் தெரியாமல் அவனைப் பின் தொடர்ந்து சென்ருன். கருப்பன் மாடுகளை ஓட்டிக் கொண்டுபோய் மலையடிவாரத்திலே மேய விட்டவுடன் கல்லைப் புரட்டிப் புதையல் அப்படியே இருக்கிறதா என்று பார்த்துவிட்டு அதன்மீது சிறிது நேரம் களிப்புடன் உட் கார்ந்திருந்துவிட்டு வேறிடஞ்சென்ருன். பிறகு தலைவன்

போய் அந்த இடத்தை ஆராய்ந்து கல்லைத் தூக்கிப் பார்த்தான். புதையலைக் கண்டான். அதனை மறைமுக மாக வீட்டுக்கு எடுத்துக்கொண்டு வந்துவிட்டான். மாலை யிற் கறுப்பனுக்குச் சிறப்புடன் சாப்பாடு நடைபெற்றது. 'கறுப்பன் நம்முடைய பெருமைக்கு இச் சிறப்பு வேண் டியதுதான்' என்று களிப்படைந்தான்.

மறுநாட் காலையில் மலையடிவாரத்தில் மாடுமேய்க்கச் சென்ற கறுப்பன் கல்லைத் தூக்கிப் புதையலைப் பார்த் தான். அஃது அங்கே காணப்படவில்லை. மிகுந்த வருத் தத்துடனுந் தளர்ச்சியுடனும் வீட்டிற்குத் திரும்பினான். கறுப்பனுடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்த தலைவன் கறுப்பனைக் கண்டதும், "உயர்திரு கறுப்பண்ண பிள்ளை அவர்களே! இன்று தங்கட்கு வெள்ளிக்கிண்ணி யிலே உணவு படைக்கப்பட்டிருக்கிறது. எழுந்தருளிவந்து அமுதுகொண்டருளுங்கள்," என்று கேலிக்கூத்தாகப் பேசினான்.

இதனைக்கேட்ட கறுப்பண்ணன், "நான் பழைய கறுப் பனே கறுப்பன். பழைய மண் கிண்ணியே மண்கிண்ணி" என்று மறுமொழி கூறினான். ஒருவனுக்குச் செல்வம் உண்டாகுமானால், அதிலுங் கறுப்பனுக்கு உண்டாகிய தைப்போல் திடீரென்று உண்டாகுமானால் அஃது எவ்வ ளவு ஆணவத்தையும் செருக்கையும் உண்டாக்குகிறது என்பதற்கு இக்கறுப்பனுடைய கதையே நல்ல எடுத்துக் காட்டாக விளங்குகின்றதன்றோ?

௫அ. அறிவுடையார் எல்லாம் உடையார்

ஓர் ஊரிலே ஒருமனிதன் இருந்தான். அவனுடைய பெயர் அறிவுச்செல்வன். அறிவுச் செல்வன் தன்னுடைய பெயருக்குத் தக்கவாறு அறிவிற்சிறந்து விளங்கினனே யன்றிப் பொருள் நலத்திற் சிறந்து விளங்கவில்லை. அதிக வறுமையினல் வருந்திய அவன் அரசன் சமுகத்திற்குச் சென்ருல் எவ்வாறேனும் தனது அறிவுநலத்தைப் புலப்படுத்திச் சிறப்படையலாம் என்று எண்ணினன். சிறிது பொருளுடன்போய் அரசனுடைய அவையிலே அங்கிருந்த அரசனுடைய உறுதிச் சுற்றத்தினரோடு தானும் ஒருவனுய்த் திரிந்து காலங்கடத்திக்கொண்டிருந்தான். அரசனும் இவனை ஒருவாறு உணர்ந்து தன்னுடைய சமுகம் காப்பவனென்று தெரிந்துகொண்டான்.

சிறிதுநாளில் அறிவுச் செல்வனிடம் இருந்த சிறிது பொருளும் செலவழிந்துவிட்டது. ஆகவே உணவின் பொருட்டு அவன் ரொட்டிக்கிடங்குக்குப்போய்க் காலை வேளைகளில் மாவரைப்பதும் மாலைநேரத்தில் அரசன் சமுகத்திற்சென்று பொழுதுபோக்குவதுமாக இருந்தான். ஒருநாள் அரசன் ரொட்டிக்கிடங்கு வழியாகச் சென்றுகொண்டிருக்கும்போது அறிவுச் செல்வன் மாவரைத்துக்கொண்டிருப்பதைப் பார்த்தான்.

மாலையில் அரசனுடைய அவை கூடியிருந்தது. அறிவுச் செல்வனும் அங்கிருந்தான். அரசன் அறிவுச் செல்வனைப்பார்த்து வலதுகையை மூடிக்கொண்டு சுற்றிக் காட்டினன். (அரசன் செய்த கைச்சாடையின் பொருள், மாவரைக்கும்படியாக நேரிட்டதற்குக் காரணம் என்ன என்பதுதான்) இதற்கு மறுமொழியாக அறிவுச் செல்வன் குறிப்பாக வயிற்றைச் சுட்டிக்காட்டிப் பிறகு கையை விரித்துக்காட்டிப் பிறகு இரண்டு விரலைக் காட்டினன். (இவன் செய்த கைச்சாடையின் பொருள் வயிற்றுக் கில்லாமையினலே கூலிவேலை செய்து இரண்டுபணந் தேடிச் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறேன் என்பதுதான்.)

அரசனும் அறிவுச் செல்வனும் செய்த கைக்குறிப்புகளை அரசனுடைய அவையிலே இருந்த அமைச்சன் முதலிய அலுவலாளர்கள் எல்லோரும் பார்த்தார்கள். அரசனும் அறிவுச் செல்வனும் செய்துகொண்ட கைக்குறிகளின் பொருள் யாருக்கும் விளங்கவில்லை. அவர்களெல்லோரும் அரசனுக்கு இவனுக்கு மிஞ்சின மறைமுக அந்தரங்க மனிதன் வேறுயாரும் இல்லையென்று முடிவுசெய்துகொண்டார்கள். அதனால் மிகுந்த அச்சம் உண்டாகிவிட்டது. இவன் அரசனிடத்தில் நம்மைப்பற்றி ஏதோ மறைமுகமாகப் பேசியிருக்கிறான். இதனால் யாது தீமை நேரிடுமோ என்று எண்ணிய அமைச்சன் முதலியவர்கள் அன்றிரவு அறிவுச் செல்வனுடைய இல்லத்திற்குச் சென்றார்கள். அலுவலாளர்கள் வெளியே இருந்துகொண்டு உள்ளேயிருந்த அறிவுடைச் செல்வனிடம் அமைச்சனை அனுப்பினார்கள்.

அறிவுச் செல்வன் ஏதோ காரியம் இருக்கிறதென்று தனனுடைய அறிவுடைமையினாலே அறிந்துகொண்டு அதற்குத் தக்கபடியாக நடந்துகொள்ளத் தொடங்கினான். அமைச்சனைப்பார்த்து, "எங்கே வந்தீர்?" என்று கேட்டான். அதற்கு அமைச்சன், "நானும் இன்னும் உள்ள அரசியல் அலுவலாளர்களுந் தங்கட்கு அடங்கினவர்களேயல்லாமல் வேறு அல்லர். எல்லோரும் தங்களுடைய விருப்பப்படியே நடப்பவர்கள். அரசருக்குந் தங்களுக்கும் நடந்த சைகையைத் தெரிவிக்கவேண்டும்" என்றான்

இதனைக்கேட்ட அறிவுச் செல்வன் "அரசன் என்னைப் பார்த்துக் கையை மூடிக்கொண்டது செய்தியை வெளிப்படுத்த வேண்டாம் என்றது. சுற்றிக் காட்டியது நாட்டைச் சுற்றிப்பார்த்திரா என்றது. நான் வயிற்றைக் காட்டியது எல்லாச் செய்திகளும் என்னுடைய வயிற்றுக்குள்ளே இருக்கிறதென்றது. கையை விரித்துக் காட்டியது ஒன்றையும் வெளிப்படுத்தவில்லையென்றது. இரண்டு விரலைக் காட்டியது இரண்டு நாளைக்குள்ளே எல்லாம் விவரமாகத் தெரிவிக்கப்படும் என்றது," என்றான்.

இதனைக் கேட்டவுடனே அமைச்சன் அஞ்சினான். "நாங்கள் எல்லோருமாகச் சேர்ந்து இருபது லட்சம் வராகன் கொடுக்கிறோம்; எங்களைப்பற்றி இரகசியம் எதையுந் தெரியப்படுத்தவேண்டாம்," என்று கேட்டுக்கொண்டு அப்படியே கொடுத்தான்.

மறுநாளே அறிவுச் செல்வன் சிவிகையேறி அரசனிடஞ் சென்றான். அரசன் அறிவுச் செல்வனை மறைமுகமாகப் பார்த்துச் செல்வப்பெருக்கு எவ்வாறு உண்டாயிற்றென்று கேட்டான். அறிவுச் செல்வன், "தங்களிடத்திலே நடந்த சைகையால் உண்டாயிற்று," என்றான். முழுதையும் உசாவியுணர்ந்த அரசன் அறிவுச் செல்வனைத் தன்னிடம் அமைச்சனாக வைத்துக்கொண்டான். "அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார், என்னுடைய ரேனும் இலர்," என்னும் திருவள்ளுவர் திருமறை பொய்யாகுமோ?

ருக. சூழ்ச்சி பலித்தது

ஓர் ஊரிலே செட்டியார் ஒருவர் இருந்தார். அவர் காசிக்குப் போய்க் கங்கையாடிவர எண்ணினார். அச்செட்டியாருக்கு நண்பன் ஒருவன் இருந்தான். ஒருநாள் செட்டியார் தம்முடைய நண்பனைக் கண்டு, "தம்பீ! நான் காசிக்குச் சென்று கங்கையாடிவர எண்ணுகிறேன். என்னிடம் ஆயிரம் வராகன் பணம் இருக்கிறது. இதனைக் கையிலே கொண்டுசென்றால் வீணாகச் செலவழிந்து போகும். ஆகவே எவ்விடத்திலாவது புதைத்து வைத்துவிட்டுச் செல்லலாம் என்று எண்ணுகிறேன். எவ்விடத்திற் புதைத்து வைத்தால் பாதுகாப்பாக இருக்கும்." என்று கேட்டான். இருவரும் நீண்ட நேரம் கலந்து எண்ணினார்கள். பிறகு இருவருமாகப் போய் ஊருக்குப் புறம்பேயுள்ள ஓர் ஆலமரத்தடியில் புதைத்துவிட்டுத் திரும்பினார்கள். செட்டியார் புறப்பட்டுக் காசிக்குச் சென்றார்.

செட்டியார் புறப்பட்ட மறுநாளே செட்டியாருடைய நண்பன் ஆலமரத்தடிக்குப்போய்ப் புதைத்துவைக்கப்பட்டிருந்த செட்டியாருடைய பொருளை எடுத்துக்கொண்டு வந்துவிட்டான்.

செட்டியார் காசியில் இருந்து திரும்பினார். சில நாட்கள் சென்றபிறகு ஒருநாள் தாம்மட்டும் இரவு நேரத்தில் ஆலமரத்தடிக்குப்போய்ப் புதைத்து வைத்திருந்த பொருளைத் தோண்டிப்பார்த்தார். அங்குப் பொருள் காணப்படவில்லை. 'நம்முடைய நண்பன் தான் வந்து பொருளைத் தோண்டியெடுத்துக்கொண்டு போயிருக்கிறான். நண்பனைத் தவிர வேறு எவருக்கும் நாம் பொருள் புதைத்துவைத்த செய்தி தெரியாதன்றோ? இக் களவினைச் சூழ்ச்சியினாலேயே போக்கவேண்டும்' என்று தமக்குத் தாமே முடிவு செய்துகொண்டார்.

மறுநாள் செட்டியார் தம்முடைய நண்பன் வீட்டிற்குச் சென்றார். நண்பனைக் கண்டு அளவளாவினார். பிறகு அவனைப்பார்த்து, "நண்பனே! நான் காசியில் இருந்து மற்றுமோர் ஆயிரம் வராகன் தேடிக்கொண்டு வந்திருக்கிறேன். இனிமேல் இராமேசுரத்திறகுப்போய்க் காசிக்கங்கையை இராமலிங்கத்திற்குத் திருமுழுக்காட்டி விட்டு வரவேண்டியவனாக இருக்கிறேன். இப்பொழுது கொண்டுவந்திருக்கிற பொருளைக்கூட முன்பு புதைத்து வைத்திருக்கிற பொருளோடு புதைத்து வைத்துவிட்டுப் பிறகு வந்து எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவுசெய்திருக்கிறேன். பகலில் அவ்விடத்திற்குப் போகக்கூடாது. இரவில்தான் சென்று புதைத்தல் வேண்டும். இரவில் தனியே செல்வதற்கு எனக்கு அச்சமாக இருக்கிறது. ஆகவே அன்புகூர்ந்து இன்றிரவு நீயும் என்னோடுகூட வருதல் வேண்டும்," என்று சொன்னான்.

நண்பன் செட்டியாரைப்பார்த்து, "ஆஆ! அப்படியே வருகிறேன்," என்றான். செட்டியார் சென்றபிறகு உயிர் பிடுங்கி நண்பனாகிய அவன், நம்முடைய நல்வினை பழுத்து

வருகிறதென்று உளமகிழ்வு பொங்கினன். முன்தோண்டி யெடுத்துக் கொண்டுவந்த பொருளைக் காணவிட்டால் செட்டி இப்பொழுது கொண்டுவந்துள்ள பொருளை அவ் விடத்தில் புதைக்கமாட்டான். ஆகவே நாம் எடுத்துக் கொண்டு வந்துவிட்ட பொருளை இப்பொழுது கொண்டு போய் இருந்தவிடத்திலேயே புதைத்துவிடுவோம். செட்டி இப்பொழுதுங் கொண்டுபோய்ப் புதைத்துவிட்டு வந்தபின் எல்லாவற்றையும் ஒருங்குசேரத் தட்டிக்கொண்டு வந்து விடுவோம்' என்று முடிவுசெய்து அவ்வாறே கொண்டு போய்ப் புதைத்து வைத்துவிட்டு வந்துவிட்டான்.

செட்டியார் மோசக்கார நண்பனின் நடவடிக்கை களைக் கவனித்துக்கொண்டே யிருந்தார். பொருளைக் கொண்டுபோய்ப் புதைத்துவிட்ட செய்தி தெரிந்தது. உடனே அவ்விடத்திற்குப்போய்த் தம்முடைய பொருளை எடுத்துக்கொண்டு திரும்பிவிட்டார்.

பிறகு உயிர்பிடுங்கி நண்பனை அழைத்து, "அண்ணே! இப்பொழுது இராமேசுரம் போவதற்குச் சிறிது தடை யேற்பட்டது. ஆகவே நான் ஆலமரத்தடிக்குப்போய் முன்பு புதைத்துவைத்த பொருளை எடுத்துக்கொண்டு வந்து விட்டேன். இராமேசுரத்திற்குப் போவதைக் குறித்துப் பின்னல்தான் முடிவுசெய்யவேண்டும்," என்று கூறினர். உயிர் பிடுங்கி நண்பன் 'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமற் போயிற்றல்லவா' என்று எண்ணிப் பெருமூச்சு விட்டான்

---

௯௦. விறகுவெட்டியும் கோடரியும்

ஓர் ஊரில் விறகுவெட்டி ஒருவன் இருந்தான். அவன் நாள்தோறுங் காட்டிற்குச் சென்று விறகுவெட்டி விற்று அதனல் தன்னுடைய வாழ்க்கையை நடத்திக்கொண் டிருந்தான். ஒருநாள் ஓர் ஆற்றங்கரையிலே பட்டுப் போயிருந்த ஆலமரக்கொம்பு ஒன்றை வெட்டிக்கொண்

டிருந்தான். அப்பொழுது அவனுடைய கோடரி கை நழுவித் தண்ணீரில் விழுந்துவிட்டது. அவ் ஆறு மிகுந்த ஆழம் உடையது. ஆகவே விறகுவெட்டி ஆற்றில் இறங்கிக் கோடரியை எடுக்கமுடியவில்லை. கரையிலே உட்கார்ந்து வருத்தத்தோடு புலம்பிக்கொண்டிருந்தான்.

அக்காட்டை முனி என்னும் பெயருடைய காட்டுக் கடவுள் பாதுகாத்துக்கொண்டிருந்தது. அது மிகுந்த இரக்கம் உடையது. அது விறகு வெட்டிக்கு முன்னே தோன்றி, "நீயேன் வருத்தப்படுகிறாய்?" என்று உசாவியது. விறகு வெட்டி முனியைப் பணிந்து, "சுவாமி! என்னுடைய வாழ்க்கைக்கு இன்றியமையாததாக இருந்த கோடரி ஆற்றிலே விழுந்துவிட்டது. அதனால் மிகவும் வருத்தப்படுகிறேன்," என்று சொன்னான்.

முனி விறகுவெட்டியினுடைய மனப்பண்பை ஆராய்ந்து பார்க்கத் தொடங்கியது. ஆற்றிலே மூழ்கித் தங்கக் கோடரி ஒன்றை எடுத்துக்கொண்டுவந்து விறகு வெட்டியிடங் காட்டி, "இதுதான் உன்னுடைய கோடரியா?" என்று கேட்டது. விறகுவெட்டி, "இது வன்று," என்றான். பிறகு முனி தண்ணீரில் மூழ்கி, வெள்ளிக்கோடரி ஒன்றை எடுத்துக்கொண்டு வந்து காட்டி, "இதுவா உன்னுடைய கோடரி?" என்று கேட்டது. "இதுவும் அன்று" என்று விறகுவெட்டி மறு மொழி கூறினான். பிறகு முனி மீண்டும் ஆற்றில் மூழ்கி அவனுடைய இருப்புக்கோடரியை எடுத்துவந்து, "இதுவா உன்னுடைய கோடரி?" என்று கேட்டது. விறகுவெட்டி தன்னுடைய கோடரியைக் கண்டவுடனே மிகுந்த களிப் படைந்தவனாய், "ஆம்! ஆம்! இதுவே என்னுடைய கோடரி" என்று சொல்லித் தன்னுடைய கைகளை நீட்டினான். முனி விறகுவெட்டியினுடைய மெய்ம்மைத் தன்மைக்கும் அவாவின்மைக்கும் மிகுந்த களிப்படைந்து தங்கக் கோடரி வெள்ளிக்கோடரி ஆகியவைகளையும் அவனுக்கே கொடுத்து மறைந்தது. விறகுவெட்டி மிகுந்த களிப்புடன் வீட்டுக்குத் திரும்பினான்.

இந்த விறகுவெட்டியின் வீட்டிற்குப் பக்கத்திலே வேருெரு விறகுவெட்டி யிருந்தான். அவனுடைய பெயர் ஆலங்காடன். இந்த ஆலங்காடன் மிகுந்த பேரவாவும் பொருமையும் உடையவன். பக்கத்து வீட்டுக்காரன் பொன் கோடரி வெள்ளிக்கோடரி ஆகியவைகளோடு வந்த செய்தியை அவனறிந்தான். விரைந்து சென்று, "உனக்கு இக்கோடரிகள் எவ்வாறு கிடைத்தன?" என்று உசாவினுன். முன்னவன் தனக்குக் கோடரிகள் கிடைத்த செய்தியை விளக்கமாகக் கூறினுன். இதனைக்கேட்டவுடனே ஆலங்காடனுக்கும் மிகுந்த பேரவா உண்டாகிவிட்டது. தானும் அவனைப்போல் வெள்ளிக்கோடரியும் பொன்கோடரியும் பெற்றுவரவேண்டும் என்று எண்ணினுன்.

பிறகு ஆலங்காடன் தன் நண்பன் கூறிய இடத்திற்குப் போய்த் தன்னுடைய கோடரியை மனமார ஆற்றிற் போட்டுவிட்டுக் கரையில் உட்கார்ந்து பொய்யாக வருத்தப்பட்டுக்கொண்டிருந்தான். முனி இவனிடத்திற்கும் வந்து, "என்ன செய்தி?" என்று உசாவியது. ஆலங்காடன், "என்னுடைய பிழைப்புக்குப் பற்றுக்கோடாக இருந்த கோடரி ஆற்றில் விழுந்துவிட்டது. அதனுல் வருந்திக்கொண்டிருக்கிறேன்," என்ருன்.

முனி ஆற்றில் இறங்கித் தங்கக்கோடரி ஒன்றை எடுத்துக்கொண்டுவந்து விறகுவெட்டியினிடங் காட்டி, "இதுவா உன்னுடைய கோடரி?" என்று கேட்டது. உடனே ஆலங்காடன், "ஆம்! ஆம்! இதுதான் என்னுடைய கோடரி. இங்கே கொடுங்கள்," என்று சொல்லிக்கொண்டே இரண்டு கைகளையும் நீட்டினுன். அவ்வளவில் முனிக்கு மிகுந்த சீற்றம் உண்டாகிவிட்டது. "பேரவாக்கொண்ட பேயனே! உன்னுடைய முகத்திலே விழித்தாலும் தீவினை உண்டாகும். இனிமேல் இக்காட்டுப் பக்கம் நீ அடியெடுத்துவைத்தையோ உன்னுடைய காலை முறித்துப்போடுவேன். இனிமேல் வேறு காட்டுக்கு ஓடிப்போ" என்று மிகுந்த சினத்துடன் கூறியதுமன்றி

ஓங்கி ஓர் உதையும் ஆலங்காடனுக்கு வழங்கியது. அவ்வுதையைப்பெற்ற ஆலங்காடன் ஆயிரங்கரணம் போட்டுக்கொண்டு அப்பாலே போய்விழுந்தான்.

உண்மைதான் ஒருவனுக்கு எல்லா நன்மைகளையும் உண்டாக்குமேயல்லாமல் பொய் ஒருநாளும் நன்மையை உண்டாக்கமாட்டாது. பொய்சொன்ன ஆலங்காடன் தன் இருப்புக் கோடரியையும் இழந்து ஊரைவிட்டும் ஓடிப் போனான்.

---

௩௪. மரக்காலைக் குறுக்கே பிடித்து அளத்தல்

ஒரு மனிதன் பல ஊர்களுக்கும் சென்று இறை வழிபாடுசெய்துகொண்டிருந்தான். அவனோடு அவனுடைய மனைவி மக்களும் இருந்தனர். ஆகவே அவன் தான் போய்த் தங்குமிடங்களிற் சமையல்செய்து சாப்பிடுவது வழக்கம். ஒரு நாள் ஓர் ஊருக்குச்சென்றான். அங்கு அரிசிவாங்க வேண்டியதாக இருந்தபடியால் ஒரு கடைக்குப்போய் அரிசி விலைகேட்டான். ஒரு கடைக்காரன், "ரூபாய்க்குக் குறுணி அரிசி கொடுக்கிறேன்," என்றான். இன்னொரு கடைக்காரன் "பதக்குக் கொடுக்கிறேன்," என்றான். மற்றொரு கடைக்காரன், "தூணி கொடுக்கிறேன்," என்று சொன்னான்.

இவ்வாறு கடைக்குக்கடை கேட்டுக்கொண்டுபோகையில் கடைசிக்கடைக்காரன், "பதின்குறுணி கொடுக்கிறேன்," என்று சொன்னான். அக் கடையிலே வாங்கிக் கொள்ளலாம் என்று பயணக்காரன் முடிவு செய்தான். அச்சமயத்தில் வேறொரு கடைக்காரன், "ரூபாய்க்குப் பன்னிரண்டு மரக்கால் கொடுக்கிறேன் இங்கே வா," என்று கூப்பிட்டான். மற்றவிடங்களைப்பார்க்கினும், இப்பொழுது 'பன்னிரண்டு மரக்கால் கொடுக்கிறேன்' என்று ஒருவன் கூப்பிட்டதும் அவ்விடத்திலேயே அரிசியை வாங்கிக் கொள்ள முடிவு செய்தான்.

அரிசி கொடுக்கும்படி ரூபாயைக் கடைக்காரனிடங் கொடுத்தான். கடைக்காரன் பணத்தை வாங்கிப் பெட்டியில் வைத்துக்கொண்டான். பிறகு மரக்காலைக் குப்புறக் கவிழ்த்து அரிசியை அளக்கத் தொடங்கினான். பயணக்காரன், "இஃதென்ன வேலை?"யென்று கேட்டான். கடைக்காரன், "நான் இவ்வாறுதான் அளப்பது வழக்கம்" என்றான். இதனைக்கேட்ட பயணக்காரன், "அப்படியானால் எனக்கு அரிசி வேண்டாம். பணத்தைக்கொடுத்துவிடு," என்று கேட்டான். அதற்குக் கடைக்காரன், "விருப்பமானால் அரிசியை வாங்கிக்கொண்டுபோ! இல்லாவிட்டால் சும்மா போ! பணத்தைக் குறித்துமட்டும் இனிமேற் பேச்சு எடுக்காதே!" என்றான்.

இதனைக்கேட்ட பயணக்காரன் அவ்வூரில் இருந்த நீதிமன்றத்திற்குச்சென்று கூறினான். நீதிமன்றத் தலைவன் கடைக்காரனை அழைப்பித்து உசாவினான். கடைக்காரன் "எங்களுடைய கடையிலே அவ்வாறு அளப்பதுதான் வழக்கம். தலைமுறை தலைமுறையாக அப்படித்தான் நடந்துகொண்டு வருகிறது," என்றான்.

நீதிமன்றத் தலைவன் பயணக்காரனைப் பார்த்து, "அரிசி விலை பேசிக்கொண்டபோது மரக்காலை இன்னவிதமாகப் பிடித்து அளப்பது என்று பேசிக்கொண்டதுண்டா?" என்று கேட்டான். பயணக்காரன், "அவ்வாறு பேசிக்கொள்ளுகிற வழக்கம் எங்கும் இல்லையாகையால் அதைக்குறித்து ஒன்றும் பேசிக்கொள்ளவில்லை," என்று சொன்னான்.

நீதிமன்றத் தலைவன் சிறிது நேரம் ஆழ்ந்து எண்ணமிட்டுப் பிறகு அவன் ஒரு முடிவுக்கு வந்தான். "மரக்காலை நேரே பிடித்து அளப்பதற்குக் கடைக்காரனுக்கு விருப்பம் இல்லை. மரக்காலைக் குப்புறக் கவிழ்த்து அளப்பது அரிசி வாங்குகிறவனுக்கு விருப்பமில்லை. நானோ இரண்டுபேருக்கும் ஏற்றவகையில் நடுவுநிலைமையோடு தீர்ப்புக் கூறவேண்டியவனாக இருக்கிறேன். ஆகவே,

மரக்காலைச் சாய்த்துப் போட்டுக் குறுக்கே பிடித்து அளக்குமாறு முடிவு செய்கிறேன்,'' என்று முடிவு கூறினான். இதனைக்கேட்ட பயணக்காரன் 'குப்புறக் கவிழ்த்து அளப்பதால் கிடைக்கிற சிறிது அரிசிகூட நீதிமன்றத்திற்கு வந்தபடியால் இல்லாமற் போயிற்றல்லவா? எந்தக் காலத்திலும் நீதிமன்றத்திற்குப் போகிறபடியால் மனிதன் அடைவது பொருளிழப்பே தவிர வேறொன்றும் அன்று' என்று வருந்தியவனாய் ரூபாயை இழந்து சென்றான்.

---

௩௨. உலோபனும் இசைப்புலவனும்

பொன்னுத்துரை

ஓர் ஊரிலே பொன்னுத்துரை என்னும் பெயருடைய பெருஞ்செல்வன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் பொருள் மிகுதியாக இருந்ததாயினும் யாருக்கும் எதுவுங் கொடுக்கமாட்டான். பெரிய உலோபன். பொன்னுத்துரையின் உலோப குணத்தை உணராத ஓர் இசைப்புலவன் ஒருநாள் பொன்னுத்துரையின் வீட்டிற்கு வந்தான். தன்னுடைய இசைத்திறமையைக் காட்டிப் பரிசு பெறலாம் என்று முடிவு செய்தான்.

இசை பாடுதல்

காலை நேரத்தில் சென்ற அவன் பொன்னுத்துரையைக் கண்டான். "தங்கள் முன் இசைபாடலாம் என்று எண்ணி வந்திருக்கிறேன்,'' என்று சொன்னான். இதனைக் கேட்ட பொன்னுத்துரை, "மிக மகிழ்ச்சி; அவ்வாறே பாடலாம்,'' என்று சொன்னான். இசைப்புலவன் சிறிதும் வஞ்சனையில்லாமல் சங்கராபரணம், காம்போதி, தோடி, தன்னியாசி, பியாகம் முதலிய அருமையான இராக பேதங்களைக் கொண்டு கல்லும் கரைந்து உருகுமாறு அன்று பொழுது போகும்வரையும் பாடி நெஞ்சு வறண்டு இளைத்துக் களைத்துப்போனான். உலோபனே இடையிடையே எழுந்து வீட்டிற்குப்போய் உணவு வகைகளை நன்றாகச் சாப்பிட்டு

விட்டுவந்து பாட்டைச் செவியாரக் கேட்டுக்கொண்டிருந்தான். இசைப்புலவன் இளைத்துச் சோர்வதைக் கண்ட கன்னெஞ்ச உலுத்தன் தன்னுடைய வேலைக்காரன் ஒருவனைக் கூப்பிட்டு, "அடே! ஒரு பெரிய தட்டில் ஆயிரம் பூவராகனையும் ஒரு சோடி சால்வையையும் எடுத்து வை," என்று சொன்னான்.

மேன்மேலும் ஏமாற்றுரை

பொன்னுத்துரை புகன்றதைக்கேட்ட இசைப்புலவன் செல்வன் தாராளமாக நன்கொடை வழங்குவான்போலிருக்கிறது என்று மிகுந்த மனவெழுச்சிகொண்டான். பைரவி, கல்யாணி, பூபாளம் என்னும் சிறந்த ராகங்களைக் கொண்டு இரவு பன்னிரண்டு மணிவரையிலும் பாடி மெய் சோர்ந்தான். உலுத்தனாவன் அதுவரையிலாவது போதுமென்று சொல்லாமல், வேலைக்காரனை மீண்டுங்கூப்பிட்டு, "அடே! அத்தட்டில் நான்கு காசிப்பட்டுக்கள், இரண்டு சோடி கடகங்கள், இருபது கல்லிழைத்த பதக்கங்கள், பத்து மோதிரங்கள் இவற்றையும் எடுத்துவை," என்று சொல்லிக் கத்தினான். இதைக்கேட்ட இசைப்புலவன் சிறிது களைப்பு நீங்கினான். பொழுது விடிகிறவரையில் மூச்சுப் பிடித்துக்கொண்டு மனக்களிப்புடன் கேதார கௌளம் முதலிய இன்னுஞ் சிறந்த இராகங்களையெல்லாம் பாடி மூர்ச்சையானான்.

விரட்டுதல்

பிறகு இசைப்புலவன் எழுந்து செல்வனைப்பார்த்து, "இனிமேல் என்னால் பாட முடியாது. எனக்கு விடை தரவேண்டும்," என்றான். அதற்கு உலுத்தன், "ஐயா! தாங்கள் மிகவும் வருந்தி நன்றாகப் பாடினீர்கள்; மிக மகிழ்ச்சி. போய்விட்டு வாருங்கள்," என்றான். இதைக் கேட்கவே இசைப்புலவனுக்கு நிற்பதற்குக்கூட முடியவில்லை. அவன் திகைத்து ஒன்றுந்தோன்றாமல் புறப்பட்டான். தெருவாயிற்படிவரையில் உலுத்தன் முன்னும் தான் பின்னுமாகச் சென்றபோது உலுத்தன், "நல்லது;

போய்விட்டு வாரும்,'' என்று மீண்டுஞ் சொல்லிவிட்டுத் திரும்பினான். இதைக்கேட்ட இசைப்புலவன் தன்னுடைய நாணத்தையும் விட்டு, "ஐயா! வெறுங்கையாக அனுப்புகிறீர்களே! எனக்காக எடுத்து வைக்கச்சொன்ன பூவராகன், சால்வை, அணிகலன்கள் முதலியன எங்கே?'' என்று வாடிய முகத்தோடு கேட்டான். அதற்கு உலுத்தன், "ஓய்! நீர் எனக்குச் சாதித்தது என்ன கெட்டுப் போயிற்று? என் காதுக்கு இனிமையாக ஏதோ சிலவற்றைப் பாடினீர். நானும் உம்முடைய காதுக்கு இனிமையாக ஏதோ சிலவற்றைச் சொன்னேன். நான் உமக்கு வாரிக் கொடுப்பதற்கு நீர் எனக்கு என்ன வாரிக் கொடுத்துவிட்டீர்? போம்! போம்!'' என்று சொல்லி விரட்டிவிட்டுக் கதவைச் சாத்தித் தாள்போட்டுக்கொண்டான்.

---

௩௩. மாதவக்கோனான் மகன்

ஓர் இடையன்

விளம்பாடி என்னும் ஒரு சிற்றூரிலே மாதவக்கோனான் என்னும் பெயருடைய ஓர் இடையன் இருந்தான். அவனுக்கு நெடுங்காலமாக மக்கட்பேறில்லை. பலவகையான தானதருமங்கள் புரிந்துந் தெய்வ வழிபாடு செய்தும் வந்த நல்வினையினால் இறுதியில் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. மாதவக்கோனான் அக்குழந்தையினிடத்திலே அளவிலாப் பேரன்பு கொண்டான். தான் ஆடுமேய்க்கும் இடங்களுக்கெல்லாம் அந்தக் குழந்தையை எடுத்துக் கொண்டு சென்றான். குழந்தை பசியினால் அழும்போதெல்லாம் ஆட்டுப்பாலைக் கறந்து குழந்தைக்குக் கொடுப்பான். மாலைக்காலத்தில் ஆட்டு மந்தையை ஓட்டிக் கொண்டு திரும்பிவந்து தன் வீட்டிற்குச் சிறிது தொலையில் இருக்கும் இடையில் ஆடுகளையெல்லாம் அடைத்துவிட்டுத் தான் அவற்றிற்குக் காவலாகத் தன் குழந்தையோடு அங்கேயே படுத்துக்கொள்வான்.

மேலும் அவ்வாறே

இவ்வாறே அந்த இடையன் நாள்தோறும் காலையில் ஆட்டு மந்தையை ஓட்டிக்கொண்டு மேய்க்கப்போகையி லும், இரவில் ஆட்டுக்கிடையண்டை படுத்துறங்குங் காலத்திலும் மகன்மீதுள்ள அளவுகடந்த விருப்பத்தால் அக் குழந்தையைத் தாயினிடத்தில் சிறிது நேரமுந் தங்க விடாமல் எப்போதும் தானே தன்னிடத்தில் வைத்து வளர்த்து வந்தான். சிலநாள் ஆனபிறகு அக்குழந்தைக் கும் பால் குடிக்கும் பருவம் மாறிச் சோறு சாப்பிடும் பருவம் வந்தும் மாதவக்கோனுன் ஆட்டுப்பால் விட்டுச் சோறு சமைத்து அக்குழந்தைக்கு உண்பித்து அதனை விட்டுப்பிரியாமல் வளர்த்து வந்தான்.

இடைச்சிறுவன் இயற்கை

இவ்வாறிருக்கையில் அந்த இடைப் பையனுக்கு அகவை பத்தாயிற்று. ஆகியும் அவன் தன்னைப்பெற்ற தாய் இன்னுளென்றும் தன் வீடு இது என்றும் அறியாமல் இருந்தான். அவனுக்கு மனிதர்களுடைய நடவடிக்கை களும் குணங்களும் செய்கைகளும் ஒன்றுமே தெரியாது. சுருங்கச் சொல்லுமிடத்தில் உலகில் உள்ள உயிர்த் தொகைகள் ஆண் பெண் என்னும் இருவகைப் பேத முடையன என்னுஞ் செய்தியே அவனுக்குத் தெரியா திருந்தது. அப்படியானுல் அவன் உலக அறிவில் எவ் வளவு தொலை முழுமூடனுக இருந்தான் என்பதைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ? அந்த இடைப்பையன் எப்பொழு தும் காட்டில் ஆடுமாடுகளுடன் தானும் ஓர் அஃறிணை உயிராக வாழ்ந்துவந்தபடியால் மிகுந்த திடசித்தமும் ஆற்றலும் உடற்கட்டும் உள்ளவனுக இருந்தான். கரடி, புலி, சிங்கம் முதலிய கொடிய காட்டு விலங்குகளுக்குச் சிறிதும் அஞ்சமாட்டான். அவை ஒருவேளை தன்னுடைய ஆட்டு மந்தையிற் புகுந்தாலும் தான் அஞ்சா நெஞ்சத் துடன் அவற்றை எதிர்த்துத் துரத்தவும் கொல்லவும் வழக்கப்பட்டிருந்தான். அந்தக் காட்டு விலங்குகளும் இவனைக் கண்டால் அஞ்சி நடுநடுங்கி ஓடிவிடும்.

அமீனாவுக்கு அச்சம்

எவருக்கும் அஞ்சாத் தீரனாகிய இந்த இடைப்பையன் அவ்வூர் அமீனாவிடத்தில் மட்டும் மிகுந்த அச்சமுடையவனாக இருந்தான். அஃதெவ்வாறெனில், இடைப்பையன் சிறுவனாக இருந்தபோது மாதவக்கோனான் தன் பிள்ளையின்மேல் வைத்த விருப்பத்தால் அடிக்க மனம் வராமல் அவ்வூர் அமீனாவிடத்திலே சொல்லி அப்போதைக்கப்போது அமீனாவைக்கொண்டு தன் மகனை அச்சுறுத்தி வந்தான். ஆகையால் அந்த இடைப்பையனுக்கு அவ்வூர் அமீனாவிடத்திலே மட்டும் மிகுந்த அச்சம் உண்டு. அந்த இடைப்பையன் பெரியவனானபோதும் முன்போலவே அமீனாவுக்கு அஞ்சிவந்தான்.

திருமணம்

இவ்வாறிருக்கும்போது அந்த இடைப் பையனுக்கு மணஞ்செய்யும் பருவம் வந்தது. மாதவக்கோனான் தன் மகனுக்குத் திருமணஞ்செய்ய எண்ணினான். வீட்டிற்கு வருமாறு மகனைப் பலதரம் வருந்தியழைத்தான். அவன் அதற்கு இணங்கவில்லை. அவனை வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போவதற்காகச் செய்த முயற்சிகள் யாவும் பயனில்லாமற்போயின. அதனால் மாதவக் கோனான் மிகுந்த மனவருத்தம் அடைந்தான். 'அந்தோ! நம்பிள்ளையை இவ்வாறு உலக வழக்கம் உணராமல் வளர்த்துவிட்டோமே' என்று திண்டாடினான். மேலே செய்யும் வகை தோன்றாமல் கவலையுற்றிருந்தான். அப்பொழுது அமீனா வந்து மாதவக் கோனானுடைய மனவருத்தத்தின் காரணத்தைக் கேட்டான். மாதவக்கோனான் தன்னுடைய மனவருத்தத்தின் காரணத்தைத் தெரிவித்தான். "திருமணத்தை நிறைவேற்றி வைப்பது உம்முடைய கடமை," என்று சொல்லி வேண்டிக்கொண்டான்.

அமீனா மிரட்டல்

அமீனா அதனைக்கேட்டு "நல்லது; நான் எப்படியாவது உன்மகனை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வருகிறேன்.

நீ திருமணத்திற்கு ஆகவேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய். நான் அவனை அழைத்துக்கொண்டு வந்தவுடனே மணைமீது உட்காரவைத்துத் தாலிகட்டச் செய்து திருமணத்தை நிறைவேற்றி விடுகிறேன்,'' என்று சொன்னுன். மாதவக்கோனுன் பெருமகிழ்ச்சியுடன் அதற்கு இசைந்து அவ்வாறே செய்தான். பிறகு அமீனு ஆட்டு மந்தையை மேய்த்துக்கொண்டிருந்த இடைப் பையனிடத்திற்குப்போய், அவனைக் கண்சிவந்து தீப்பொறி பறக்கச் சினந்து நோக்கி, "அடா பயலே! நீயென்ன தலைகால் தெரியாமல் தடுமாறுகிறுய். உனக்கு இவ்வளவு கொழுப்பா? நல்லது; நான் உன் ஆணவத்தை அறிகிறேன். நீ நாள்தோறும் ஆட்டுமந்தைகளைவிட்டு ஊரார் பயிரையெல்லாம் அழிக்கிறுய் என்று எல்லோரும் உன் மீது குற்றஞ் சுமத்துகிறுர்கள்; எந்நேரமும் உன்னுடைய தொந்தரவே ஊரில் பெரியதாக இருக்கிறது,'' என்று கடுகடுத்துக் கூறினுன். நீ ஊருக்கு வா என்று அவனுடைய காதைப்பிடித்து இழுத்துக்கொண்டுபோனுன். அந்த இடைப்பையன் நடுநடுங்கி 'இந்த அமீனு நம்மை என்னென்ன செய்வானே இன்று நாம் செத்தேபோனேம்' என்று பெருந் திகில்கொண்டு அமீனுவுடனே சென்றுன்.

திருமணமா? தண்டனையா?

அமீனு திருமண வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போய் அங்கு வந்திருந்த நாவிதனை நோக்கி, இவனை மொட்டையடி என்றுன். உடனே நாவிதன் மயிர் கழித்து முடித்தான். பிறகு அமீனு அங்கிருந்தவர்களிடம் இவன் தலையில் கழுநீரை ஊற்றி முகத்தில் கரும்புள்ளி செம்புள்ளி குத்துங்களென்றுன். அவர்கள் அவனுக்கு நீராட்டி நாமமும் திருச்சூர்ணமும் அணிந்தார்கள். பிறகு அமீனு, "இவனுக்கு மேலும்கீழும் கம்பளி சுற்றித் தலையில் சாணிக் கூடை ஒன்றைக் கவிழுங்கள்,'' என்றுன். உடனே அவனுக்கு வேட்டிகட்டித் தலையிலே தலைப்பாகை வைத்தார்கள். பிறகு அமீனு, "இவன் காதிலும் கழுத்திலும் கொக்கியும் சங்கிலியும் மாட்டுங்கள்,'' என்றுன். அவ

னுக்குக் காதுக்கடுக்கனும் கழுத்திற்குப் பதக்கமும் அணிந்தார்கள். பிறகு அமீனா பையனுடைய கையிலே மஞ்சள் பூசிய ஒரு கயிற்றைக்கொடுத்து, "அடா பயலே! இந்தக் கயிற்றை உன் பக்கத்திலே இருக்கும் பெண்ணினுடைய கையிலே கட்டு" என்று சொன்னான். கட்டாவிட்டால் அமீனா என்ன செய்வானோ என்று அஞ்சிக் கொண்டே மணப்பெண்ணினுடைய கையிலே கங்கணங் கட்டினான். பிறகு தாலிகட்டுதல் முதலிய சடங்குகளும் நிறைவேறின.

உறவுமுறை

திருமணச் சடங்குகளெல்லாம் பெரும்பாலும் முடிந்துவிட்டபடியால் மணமகனைவிட்டு அமீனா அப்புறம்போய்ச் சிறிது பராமுகமாயிருந்தான். மாப்பிள்ளையாகிய இடைப் பையன் தனக்கு நடந்த திருமணச் சடங்குகளையெல்லாம் கொடிய தண்டனை என்று எண்ணியிருந்தபடியால் இப்பொழுது சிறிது தெளிவடைந்து, 'நம்மைப்பிடித்த பெருஞ் சனியன் விட்டொழிந்தது. ஊரார் பயிரில் நம்முடைய ஆடுகள் மேய்ந்தபடியினால் படாதபாடுகளெல்லாம் பட்டோம்' என்று எண்ணிக்கொண்டான். நாற்புறமுஞ்சுற்றிப்பார்த்து அமீனா சற்று அப்பாலிருக்கக் கண்டு, பக்கத்தில் இருந்த மணப்பெண்ணைத் தன்னுடைய கையினாலே தீண்டி, "ஓ தங்கச்சி! இந்தப்பாவி அமீனா உன்னையும் என்னையும் பிடித்துவந்து இவ்வாறு தண்டனைகள் செய்தானே! உன் ஆடுகளும் ஊராருடைய பயிரில் மேய்ந்தனவோ"? என்று மெல்லக்கேட்டான். இதனைக் கேட்டிருந்தவர்கள் எல்லோரும் மாதவக்கோனான் குடியைக் கெடுத்தானே என்று சொல்லி நகைத்தார்கள். உடனே அமீனா ஓடிவந்து மாப்பிள்ளையின் முதுகில் ஓர் அறைகொடுத்த அளவில் அவன் அஞ்சி வாயை மூடிக்கொண்டான். அமீனா மற்றைச் சடங்குகளையும் நடத்தச்செய்து திருமணத்தை நிறைவேற்றினான். உலகப் பழக்கவழக்கங்கள் தெரியாமல் பிள்ளைகளை வளர்த்தால், இத்தகைய நிலைமைதான் ஏற்படும்.

௯௫. ஆட்டுக்கள்ளர்களும் அந்தணனும்

அந்தணன் ஒருவன் ஆட்டு வேள்வி ஒன்றைச் செய்வதற்குத் திட்டம்போட்டான். அதன் பொருட்டு வேள்விக்குத் தக்க இலக்கணங்கள் யாவும் ஒருங்கமைந்த ஆடு ஒன்றினைப் பலவிடங்களினும் நாடித்தேடி ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்தான். பிறகு அதனை விலைக்கு வாங்கித் தோள்மேலே தூக்கிப்போட்டுக்கொண்டு தான் போய்ச்சேரவேண்டிய இடத்தை நோக்கிப் புறப்பட்டான்.

அந்தணன் வாங்கிச் செல்லும் ஆட்டினைத் தாங்கள் கவர்ந்து தின்னவேண்டுமென்று மூன்று கள்ளர்கள் முடிவு செய்தார்கள். அவர்கள் ஒன்ருகக் கலந்து எண்ணி அதற்கான திட்டம் ஒன்றையும் மிகுந்த சூழ்ச்சித் திறத்தோடு அமைத்துவைத்துக்கொண்டார்கள்.

அவர்கள் வேறு வழியாகப் போய் அந்தணன் செல்லும் வழியில் மைலுக்கொருவராக உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். சிறிது நேரத்தில் ஆட்டோடு அந்தணன் முதற்கள்ளன் இருந்தவிடத்திற்கு வந்தான். அக்கள்ளன் அந்தணனைப்பார்த்து, "ஐயா! நீர் பார்வைக்குப் பார்ப்பார்போல் காணப்படுகிறீரே! பார்ப்பார் தாமா?" என்று கேட்டான். அந்தணன், "ஆம்" என்று மறுமொழி கூறினன். "அப்படியானுல் நாயைத் தோளின்மீது தூக்கிக் கொண்டு போகிறீரே! இஃது உம்முடைய குல ஒழுக்கத்திற்கு ஏற்றதாகுமோ?" என்று கேட்டான் கள்ளன்.

அந்தணன் கள்ளனைப் பார்த்து, "அடா தீவினையாளா! உன்னுடைய கண் குருடா! ஆட்டை நாய் என்று சொல்கிருயே. இது நாய் அன்று; வேள்விக்கு வாங்கிக் கொண்டுபோகிற ஆடாகும்," என்று கூறிவிட்டு மேலே வழிநடந்தான். ஒருமைல் நடந்த பிறகு இரண்டாங் கள்ளன் அந்தணனைக் கண்டான். அவன் அந்தணனைப் பார்த்துப், "பெரியீர்! பார்ப்பாராகிய தங்கட்கும் நாய்க்கும் வெகு தொலைவாயிற்றே. அவ்வாருக நாயைத் தோளின்

மீது தூக்கிக்கொண்டு போகிறீரே. இதனைக் கொண்டு போய் நீர் என்ன செய்யப்போகிறீர்? மேலும் இது வெறி பிடித்ததைப்போலவுந் தெரிகிறதே,'' என்று சொன்னான்.

அந்தணன் கள்ளனைப்பார்த்து, "அறிவில்லாத மூடனாக இருக்கிறாயே. வேள்வியிலக்கணங்களெல்லாம் நன்கு அமையப்பெற்ற ஆட்டைப் பைத்தியம் பிடித்த நாய் என்று சொல்லுகிறாயே! உன்னுடைய அறிவு இவ்வளவு தானா?'' என்று கூறிவிட்டு மேலே நடக்கலானான்.

அந்தணன் கள்ளர்களைப்பார்த்து அவ்வாறு கூறினானாயினும் அவனுடைய உள்ளத்தில் ஐயம் உண்டாகிவிட்டது. 'இரண்டுபேர் இதனை நாய் என்று இயம்பினார்களே காரணம் என்ன?' என்று எண்ணமிட்டான். ஆட்டை நன்றாக உற்றுப் பார்த்தான், ஐயங்கொண்டவனாகவே மேலே வழி நடந்தான்.

மேலும் ஒரு மைல் நடந்து சென்றபின் மூன்றாவது கள்ளன் எதிர்ப்பட்டான். அவன் பார்ப்பானைப் பார்த்து, "ஐயையோ! பைத்தியக்கார அந்தணனே! ஒரு வேளை இல்லாவிட்டாலும் ஒருவேளையில் பைத்தியம் பிடித்த நாய் ஆளைக் கடித்துவிடமாட்டாதோ? ஊரார்களையெல்லாம் இப் பைத்தியம் பிடித்த நாயைக்கொண்டு கொலை செய்வதற்கா தோளின்மேலே தூக்கிக்கொண்டு போகிறாய்? இஃது ஒரு பைத்தியம் பிடித்த நாய் என்று உன்னுடைய கண்களுக்குப் புலனாக வில்லையோ?'' என்று சொல்லிக் கொண்டே மேலே நடந்தான்.

பேதையந்தணனுக்கு இப்பொழுது மனக்கசப்பு மிகுந்துவிட்டது. 'பலபேர் ஒரேமாதிரியாகச் சொல்லுகிற படியால் இந்த ஆட்டினிடத்தில் ஏதோ கோளாறு இருக்கிறது. அல்லது நாயாகவே இருந்தாலும் இருக்கலாம். நாம் ஏமாறிவிட்டோம் போலும்; நம்முடைய கண்ணில் ஏதேனும் தவறு இருத்தல்கூடும்' என்று எண்ணியவனாய் அதனைக் கீழே விட்டுவிட்டு நடக்கத் தொடங்கினான்.

கள்ளன் அந்தணனைப் பார்த்துச், "சும்மா விட்டு விட்டுச் செல்லாதிர்! வழியிற் போவார் வருவாரைக் கடித்துத் தொல்லை செய்யக்கூடும். ஒரு மரத்திலாவது கட்டி விட்டுப்போம்," என்று கூறிவிட்டுத் தான் அந்தணன் ஐயப்படாதவாறு அவனுக்கு முன்னால் சென்றான். அந்தணன் ஆட்டை ஒரு மரத்திலே கட்டிவிட்டு விரைவாகச்சென்றான்.

பிறகு மூவரும் ஒன்றுகூடி அவ்வாட்டைப் பிடித்துக் கொண்டுபோய் யாகம் செய்வதுபோல் பாகஞ்செய்து, தங்கள் வயிற்றிலே உள்ள வயிற்றுத் தீக்கு அளித்துவிட்டார்கள். சூழ்ச்சித்திறம் உடையவர்கள் எவ்வகையிலேனுந் தங்களுடைய காரியத்தை முடித்துக்கொள்வார்கள் என்பது இக்கதையினால் நன்கு விளங்குகிறதன்றோ?

---

௬௫. பஞ்சாங்கப் பார்ப்பானுங் கள்ளர்களும்

ஓர் ஊரிலே கள்ளர்கள் பலர் இருந்தார்கள். அவ்வூரிலே காலக் கணிதத்தில் வல்லவனான பஞ்சாங்கப் பார்ப்பான் ஒருவனும் இருந்தான். அக்கள்ளர்கள் பஞ்சாங்கப் பார்ப்பானைக்கொண்டு களவுக்குச் செல்லுவதற்கு நல்லவேளை வைத்துக்கொண்டு செல்வார்கள். கணிதம் பிழையற விளங்கியபடியால் கள்ளர்களுக்குச் செல்லுமிடங்களில் நல்ல வேட்டை அகப்பட்டுக்கொண்டிருந்தது. கள்ளர்கள் காலக்கணிதனுக்கு இரண்டு மூன்று பவுன் வீதம் காணிக்கை கொடுத்துக்கொண்டு வந்தார்கள்.

காலக்கணிதன் ஒருநாள் தானுங் கள்ளர்களோடு களவுக்குச் சென்று பங்குபெற எண்ணினான். அதற்கு நல்லவேளையும் பார்த்து வைத்துக்கொண்டு கள்ளர்களைப் பார்த்து, "அன்பர்காள்! நான் என்னுடைய மூத்த மகனுக்குத் திருமணஞ்செய்ய எண்ணங்கொண்டிருக்கிறேன். அத் திருமணத்திற்குச் செலவு மிகுதியாகப் பிடிக்கும்; ஆகையால் நானும் உங்களோடு கூடிவருகிறேன். என்னை

யும் ஒரு பங்காளியாகச் சேர்த்துக்கொள்ளுங்கள்," என்று அவர்களிடங் கூறினன்.

கள்ளர்கள் காலக்கணித அந்தணனைப் பார்த்துப், "பெரியீர்! உங்களுக்கு இத்தொல்லைகளெல்லாம் வேண்டாம் நாங்கள் நானூறு வராகன் கொடுக்கிறோம். அதனைப் பெற்றுத் திருமணத்தை நிறைவேற்றுங்கள். எங்களைப் போல் உங்களால் துன்பப்பட முடியாது," என்று விரிவாக எடுத்துச்சொன்னார்கள். கள்ளர்கள் கூறியதைக் காலக்கணிதன் கேட்கவில்லை. "உங்களோடு வந்துதான் ஆக வேண்டும்," என்று சொல்லி முரட்டுப்பிடியாய்ப் பிடித்துத் தானும் அவர்களோடு சென்றான்.

எல்லோரும்போய் ஒரு மாத்துவப் பார்ப்பானுடைய இல்லத்திலே நுழைந்தார்கள். அன்று ஏகாதசி. எல்லோரும் விரதம் இருந்து மறுநாள் துவாதசியில் சாப்பிடுவதற்காகச் சமையலின் பொருட்டு எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்துவிட்டுப் பின்னிரவில் அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்தார்கள்.

கள்ளர்கள் வீடு முழுவதையும் நன்கு ஆராய்ந்து பதினாயிரம் வராகன் மதிப்புள்ள நகைகளைக் களவு செய்துகொண்டு இன்னும் ஏதாவது அகப்படுமா என்று எங்கும் பார்த்துக்கொண்டு சமையலறைப்பக்கம் வந்தார்கள். பஞ்சாங்கப் பார்ப்பான் சமையல் செய்துகொண்டிருந்தான். அங்குவந்து பார்த்த கள்ளர்களை உள்ளே வரவேண்டாம் என்று குறிப்புக்காட்டினன். கள்ளர்கள் அந்தணனைப் பார்த்து, "நாம் இனிமேல் இங்கிருக்கக்கூடாது; விரைவாகப் புறப்பட்டு ஓடிப்போதல் வேண்டும்; வந்துவிடுங்கள்," என்று சொல்லிக் கூப்பிட்டார்கள்.

அதற்கு அந்தணன், "ஒரு நொடிப்பொழுது பொறுங்கள். சமையலாகிவிட்டது. இரசங்கொதித்துத் தயிர்ப் பச்சடி ஆகவேண்டியதுதான் பாக்கியாக இருக்கிறது," என்று சொல்லிவிட்டு இலைபோடுவதற்காக வாழை இலை தேடிக்கொண்டிருந்தான்.

பூசைசெய்யும் பூசாமாடங் காணப்பட்டது. பூசை செய்யாமல் சாப்பிடுவது தவறு என்று உணவுகொண்டுபோய் வைத்து மணியை அடித்தான். மணியொலியைக்கேட்டவுடனே உறங்கிக்கொண்டிருந்தவர்கள் எல்லோரும் சமையலாகிப் பூசை நடக்கிறது என்று விரைந்தெழுந்தார்கள். கள்ளர்கள் ஓடிப்போவதற்கு முயன்றனர். வீட்டில் அதிகமான பேர்வழிகளிருந்தபடியால் கள்ளர்களை ஓடவிடாமற் பிடித்து ஊர்க்காவல் அதிகாரிகளிடம் ஒப்புவித்துவிட்டனர். வீட்டுக்கார அந்தணன் பஞ்சாங்கப் பார்ப்பான் மீது இரக்கப்பட்டு அவனை மட்டும் காட்டிக்கொடுக்கவில்லை. துவாதசிச் சாப்பாட்டுக்காக வைத்துக்கொண்டதுடன் அவனுடைய செய்திகளையெல்லாங் கேட்டறிந்து திருமணச் செலவுக்காக நூறு வராகனுங் கொடுத்தனுப்பினான்.

சிக்கிக்கொண்ட கள்ளர்கள் தகுந்த தண்டனையடைந்தார்கள். ஒரு வேலையில் பழக்கமும் அதற்கான அறிவும் இல்லாதவர்களைச் சேர்த்தால் அவ்வேலை கெடுவதோடு வேலையைத் தொடங்கியவர்களுக்குந் தொல்லையுண்டாகும்.

---

௬௬. ஏமாந்த புலி

ஒருநாள் மாலையில் ஒரு புலி இரைதேடிக்கொண்டு எவருடைய கண்ணுக்கும் அகப்படாமல் ஊருக்குள்ளே புகுந்து சுற்றிக்கொண்டிருந்தது. அப்பொழுது ஒரு வீட்டுக்குள் ஒரு கிழவி தன்னுடைய பேர்த்தியைப் பார்த்து, "நீ ஒழுங்காகச் சாப்பிடவேண்டும். அவ்வாறு சாப்பிடாமல் தில்லுமுல்லுச்செய்து தொல்லை கொடுப்பாயானால் உன்னைப் பிடித்துப் புலியினிடத்திலே கொடுத்துவிடுவேன். புலி அதோ வந்திருக்கிறது," என்று சொல்லி அச்சுறுத்தினாள்.

கிழவி கூறிய சொற்கள் புலியினுடைய காதுகளிலே விழுந்தன. 'கிழவி அந்தப் பெண்ணைத் தூக்கி நம்மிடம்

கொடுத்தாலும் கொடுப்பாள். நாம் வந்திருத்தலைத் தெரிந்துகொண்டுதான் இவ்வாறு பேசுகிறாள்போல் இருக்கிறது' என்று எண்ணிக்கொண்டு ஓரிடத்திற் பதுங்கியிருந்தது.

இரண்டு நாழிகைகட்கு மேலாயின. அப்பொழுது கிழவியினால் அச்சுறுத்தப்பட்ட சிறுமி, "பாட்டி! பாட்டி!! நான் அழாமல் சாப்பிட்டுவிட்டேனே! இனிமேல் என்னைப் புலியிடம் பிடித்துக்கொடுப்பாயா?" என்று கேட்டாள்.

கிழவி சிறுமியைப் பார்த்து, "என் கட்டிக் கரும்பே! உன்னைப் புலியிடம் பிடித்துக்கொடுத்துவிட்டு நான் உயிருடன் இருப்பேனோ? விளையாட்டிற்காகவல்லவோ அவ்வாறு சொன்னேன். புலி இங்கே வருமானால் அஃது உயிருடன் திரும்பியும் போமோ? அதோ அந்த மூலையிற் பார்! அப்பா மருந்து நிரப்பிக் குண்டுபோட்டுக் கிட்டித்துத் துப்பாக்கி வைத்திருப்பதை. புலி வருமானால் உடனே துப்பாக்கியை எடுத்துச் சுட்டுப் புலியைக் கொன்றுவிடுவேன்," என்று சொன்னாள்.

கிழவி கூறியதைக் கேட்டதும் புலி, 'அப்படியா செய்தி! எனக்கு இது முன்பே தெரியாமற் போய்விட்டதே. கிழக்குரங்கு கூறியதை உண்மை என்று நம்பியன்றோ ஏமாந்து போய்விட்டேன்' என்று எண்ணிக்கொண்டே காட்டைப்பார்த்துப் பிடித்தது ஓட்டம்.

ஆண்புலியை எதிர்பார்த்துக்கொண்டிருந்த பெண் புலி, "என்ன இவ்வளவு நேரஞ் சுற்றிவிட்டுச் சும்மா வருகிறாய்?" என்று கேட்டது. அதற்கு ஆண்புலி, "ஒரு கிழவியின் பேச்சைக்கேட்டு இன்றைக்கு ஏமாந்து போனேன். பெண்களின் பேச்சை இனிமேல் நம்பவே கூடாது. நம்பினால் ஏமாறவேண்டியதுதான்," என்று கூறிற்று.

இந்தப் புலியைப்போல் பிறர் கூறுவதை எளிதாக நம்பிவிடுவோரும் உலகத்திலே எத்தனையோபேர் இருக்கிறார்கள்.

கூள. நரியின் சூழ்ச்சி

ஒருநாள் ஓர் ஓநாய் இரைக்காகக் காடுமுழுவதுந் தேடியலைந்தது. எத்தகைய இரையும் அகப்படவில்லை. இறுதியில் ஒரு நரியைக்கண்டது. அதனைப்பார்த்து, "எனக்கு இன்றைக்கு எத்தகைய இரையும் அகப்பட வில்லை. நீ ஏதேனும் இரைதேடித் தருதல் வேண்டும். அல்லது நீயே இரையாக வேண்டும். என்ன சொல்லு கிறாய்?" என்று கேட்டது.

இதனைக்கேட்ட நரி 'இந்தத் தடி முட்டாளிடம் சிக்கிக் கொண்டோமே! என்ன செய்வானோ' என்று அஞ்சியது. பிறகு ஒருவிதமான முடிவுக்கு வந்ததாய் ஓநாயைப் பார்த்து, "அண்ணே! என்னோடு வா; தகுந்த இரையை உனக்குக் காண்பிக்கிறேன்," என்று சொல்லி ஊன் விற்கும் ஒருவனுடைய கடைக்கு இரவு நேரத்தில் மறைவாக அழைத்துக்கொண்டு போயது. கடைக்காரன் கடைக்குள் ஒரு தொட்டியில் ஊனை நிறைத்து வைத்திருந்தான். கடைக்குள்ளே போவதற்குப் பெருச்சாளி தோண்டிய ஒரு பெருவளை வழியாக அகப்பட்டது. அவ்வழியாக நரி ஓநாயை உள்ளே அழைத்துக்கொண்டுபோய்த் தொட்டியில் இருந்த ஊனை ஓநாய்க்குக் காட்டிற்று. கடைக்காரனோ கதவைச் சார்த்திப் பூட்டிவிட்டு வெளியே படுத்து உறங்கிக்கொண்டிருந்தான்.

வளைவழியாக உள்ளே நுழைந்து தொட்டியில் ஊனைக் கண்ட ஓநாய் ஒரே அடியாகத் திணிக்கத்தொடங்கியது. சூழ்ச்சித்திறனில் தேர்ச்சிபெற்ற நரியோ கண்டபடி தின்ன வில்லை. வளையால் நுழைந்து வெளியே செல்லமுடிகிறதா என்று அடிக்கடி உள்ளும் வெளியுமாய்ப் போய்வந்து ஊனைத் தின்றுகொண்டிருந்தது.

ஓநாய் நரியைப்பார்த்துத், "தம்பி! நன்றாகச் சாப்பிடாமல் அலைந்துகொண்டிருக்கிறாயே ஏன்," என்று கேட்டது. அதற்கு நரி, "அண்ணே! நீ நன்றாகச் சாப்பிடு;

நான் யாரும் வந்துவிடாமல் அங்கும் இங்கும் போய்ப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்," என்று கூறிற்று.

மட்டி விலங்கான ஓநாய் ஒன்றையும் எண்ணிப் பாராமல், ஒரே மூச்சாக விழுங்கித் தன்னுடைய வயிற்றை உப்பச் செய்துகொண்டிருந்தது. ஓநாயினால் இனிமேல் வளைவழியாக வெளியே வரமுடியாது என்பதை நன்றாக உணர்ந்துகொண்ட நரி, "அண்ணே! நீ நன்றாகச் சாப்பிடு நான் இசைபாடுகிறேன்," என்று சொல்லி ஊளையிட்டு விட்டு வெளியே ஓட்டம்பிடித்தது.

நரியின் ஊளையினால் விழித்துக்கொண்ட கடைக் காரன் கடைக்குள்ளே நரிவந்து ஊனைத் தின்னுகிறது என்று ஒரு பெரிய தடியைக் கையிலே தூக்கிக்கொண்டு விரைவாகக் கதவைத்திறந்து உள்ளே சென்றான். கடைக் காரனைக் கண்ட ஓநாய் வெளியே ஓடத்தொடங்கி வளைக் குள்ளே நுழைந்தது. கடைக்காரனும் கதவைச் சார்த்தித் தாளிட்டுவிட்டு வளையில் நுழைந்த ஓநாயிடம் ஓடினான். ஓநாய் ஊனைக் கண்டபடி உண்டு வயிற்றைப் பெருக்க வைத்துவிட்டபடியால் வெளியே போகமுடியவில்லை. திரும்பி உள்ளே போதற்கும் இயலாமற் சிக்கிக்கொண் டது. கடைக்காரன் ஓநாயை அங்கிலேயிலேயே வைத்து நன்றாகப் புடைத்துக் கொன்றுவிட்டான்.

வெளிப்பட்ட நரி சிறிது தொலைவில் என்ன நடக் கிறது என்று பார்த்துக்கொண்டிருந்தது. ஓநாய் இட்ட ஒலியால் கடைக்காரன் ஓநாயை அடித்துக்கொல்லுகிறான் என்று உணர்ந்துகொண்டு "விட்டது பீடை" என்று காட்டை நோக்கி ஓடிப்போய்விட்டது. பலமற்ற எளியவர் களாக இருக்கிறார்கள் என்று நாம் சூழ்ச்சித்திறம் உடைய அறிவாளிகளிடம் வம்புக்குப்போதல் கூடாது. போனால் ஓநாய்க்கு நேர்ந்தாற்போல் அழிவு நேரிடும்.

---

௯௮. சமையல்காரன் சூழ்ச்சி

ஒரு செல்வன் இரண்டு மாம்பழங்களைக் கொண்டு வந்து தன்னுடைய சமையல்காரனிடத்திலே கொடுத்து, அவனைப்பார்த்து, "இன்றைக்கு என்னுடைய நண்பன் ஒருவன் இங்கு வரப்போகிறான். நீ இந்த மாம்பழங்கள் இரண்டையுந் தோல் சீவி அறுத்து எங்கள் இருவருக்குங் கொடு," என்று கூறினான்.

சமையல்காரன் அப்பழங்களைத் தோல் சீவிவிட்டு அரிந்தான். பழம் நன்றாக இருக்கிறதா பார்ப்போம் என்று ஒருசிறு துண்டை வாயிலே போட்டுப்பார்த்தான். அது மிக இனிப்பாக இருந்தது. ஆகவே ஒவ்வொரு துண்டாகத் தான் செய்வது இன்னதென்று உணராமலே இரு பழங்களையுந் தின்று தீர்த்துவிட்டான். பழம் முடிந்த பிறகுதான், நாம் என்ன வேலை செய்துவிட்டோம். வீட்டுக்காரர், "பழம் எங்கே?" என்று கேட்டால் யாது மறுமொழி கூறுவது என்று எண்ணி அஞ்சினான். இந்தச் சமயத்தில் செல்வன் சமையல்காரனைக் கூப்பிட்டுப், "பழங்களை அறுத்துவிட்டாயா?" என்று கேட்டான்.

சமையற்காரன் மழுங்கல் கத்தி ஒன்றை எடுத்துக் காட்டி, "இக்கத்தி மழுங்கலாக இருக்கிறது. இதனை நன்றாகத் தீட்டிவிட்டு அறுக்கவேண்டும். வேலையாக இருக்கிறேன்," என்று சொன்னான். உடனே செல்வன் அக்கத்தியை வாங்கிக்கொண்டு உள்ளேபோய்க் கத்தி தீட்டுங் கட்டையொன்றிற் போட்டு நன்றாகத் தீட்டிக் கொண்டிருந்தான்.

இச்சமயத்தில் செல்வனுடைய நண்பன் வந்தான். சமையல்காரன், அந்நண்பனிடஞ்சென்று "ஐயா! நீங்கள் யார்? உங்களுக்கும் வீட்டுக்காரருக்கும் பகையா? உங்களுடைய காதுகள் இரண்டையும் அறுத்துவிடுவதாகக் கூறிக் கத்தியை நன்றாகத் தீட்டிக்கொண்டிருக்கிறார். நீங்கள் அவருக்கு என்ன தவறு செய்தீர்கள்? இங்கே

வாருங்கள். அவர் கத்தி தீட்டிக்கொண்டிருப்பதைக் காட்டுகிறேன்,'' என்று சொல்லி அழைத்துக்கொண்டு போய் வீட்டுக்காரன் கத்தி தீட்டிக்கொண்டிருப்பதைப் பலகணி வழியாகக் காட்டினான்.

வீட்டுக்காரன் சமையற்காரன் கூறியபடியே கத்தி தீட்டிக்கொண்டிருந்ததனை நண்பன் கண்டான். சமையல் காரன் கூறியது உண்மைதான் என்று நம்பினான். 'நம்மீது எக்காரணத்தினாலோ சினங்கொண்டு கத்தி தீட்டுகிறான்' என்று எண்ணியவனாய் விரைந்து ஓடத்தொடங்கினான்.

சமையல்காரன் வீட்டுக்காரனைக் கூப்பிட்டு, "உங்களுடைய நண்பர் இங்கேவந்து மாம்பழங்கள் இரண்டையுந் தூக்கிக்கொண்டு ஓடுகிறார்,'' என்று கூறினான். வீட்டுக் காரன் வெளியே வந்து பார்த்தான். நண்பன் ஓடுதலைக் கண்டான். சமையல்காரன் கூறியவாறு மாம்பழத்தைத் தூக்கிக்கொண்டுதான் ஓடுகிறான்போலும் என்று எண்ணினான். ஒரு மாம்பழத்தைக் கொடுத்துவிட்டுப்போ என்னும் பொருள்பட, "ஒன்றே ஒன்று. ஒன்றுதான் கொடுத்துவிட்டுப்போ,'' என்று கத்திக்கொண்டே கத்தியோடு பின்தொடர்ந்து ஓடினான்.

நண்பனோ ஒரே ஒரு காதைமட்டும் கொடுத்துவிட்டுப் போகச் சொல்லுகிறான் போலும் என்று எண்ணியவனாய் மேலும் விரைந்து ஓடத்தொடங்கினான். செல்வன் அவனைப் பிடிக்கமுடியாமல் திரும்பிவிட்டான்.

உலகத்திலே சிலர் இவ்வாறு சமயத்திற்குத் தக்கபடி சூழ்ச்சிசெய்துந் தப்பித்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் இத்தகைய புரட்டுகள் நாளடைவில் வெளிப்படாமற் போகுமா?

---

௯௩. கள்ளனை ஏய்த்த குள்ளன்

ஓர் ஊரிலே ஒரு சிறுவன் கைக்காப்பு, கால்காப்பு, கடுக்கன், மோதிரம், அரைஞாண் முதலிய நகைகளை அணிந்துகொண்டு ஊருக்கு வெளியிலே ஒரு கிணற்றிடம் விளையாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு கள்ளன் சிறுவனைப் பார்த்துவிட்டு இவனுடைய நகைகளைத் தட்டிக்கொண்டு போகலாம் என்னும் எண்ணத்துடன் இவனை நோக்கி வந்தான். கள்ளனுடைய நோக்கத்தை உணர்ந்துகொண்ட சிறுவன் அஞ்சினன். எப்படியாவது கள்ளனை ஏய்க்கவேண்டும் என்று முடிவு செய்தான். கள்ளனைக் கண்டதும் விக்கி விக்கி அழத்தொடங்கினன்.

சிறுவன் அழுவதைக்கண்டதும் கள்ளன், "தம்பி! ஏன் அழுகிருய்?" என்று உசாவினன். குள்ளன் கள்ளனைப் பார்த்து, "நான் இக்கிணற்றைக் குனிந்து பார்த்துக் கொண்டிருக்கையில் என்னுடைய கழுத்திலே இருந்த மாலை கழன்று கிணற்றுக்குள்ளே விழுந்துவிட்டது. அதனுடைய விலை ஐந்நூறு ரூபாய்களுக்கு மேலாகும். நான் அம்மாலையைப் போட்டுக்கொள்ளாமல் வீட்டிற்குச் சென்ருல் என்னுடைய தகப்பனர் என்னை அடித்து நொறுக்கிவிடுவார்," என்று கூறினன்.

குள்ளனுடைய செய்தியை உணராத கள்ளன், முதலில் கிணற்றிலே இறங்கி மாலையை எடுத்துக்கொண்டு பிறகு பையன் அணிந்துள்ளவைகளையும் கழற்றிக்கொண்டு அவனைத் தூக்கிக் கிணற்றிலே போட்டுவிட்டுப் போய் விடலாம் என்று எண்ணியவனுய்த், "தம்பி! நீ இந்தச் சாமான்களைப் பார்த்துக்கொண்டிரு. நான் கிணற்றினுள் இறங்கி உன்னுடைய மாலையை எடுத்துத் தருகிறேன்," என்று கூறிவிட்டுத் தான் வேறெங்கோ களவு செய்து கொண்டுவந்த பல பொருள்களையும் தன்னுடைய துணி மணிகளையும் வைத்துவிட்டுக் கிணற்றுக்குள் இறங்கினன். அடியிலே அமிழ்ந்தி மாலையைத் தேடிக்கொண்டிருந்தான்.

கள்ளன் கிணற்றுக்குள் இறங்கியவுடன் குள்ளன் அக்கள்ளனுடைய மூட்டையைத் தூக்கிக்கொண்டு ஓட்டம்

பிடித்தான். கள்ளன் நெடுநேரந் தேடிப்பார்த்துவிட்டுப் பிறகு மேலே ஏறிவந்து பார்த்தான். சிறுவனும் இல்லை; மூட்டையும் இல்லை. 'அடடா! பையன் நம்மிலும் பெருங் கள்ளன்! நம்மை ஏய்ப்பதற்காகத்தான் இவ்வாறு நடித் திருக்கிறான். அதனை நாம் உணர்ந்து கொள்ளாமற் போனோமே' என்று நாணினான். பிறகு அக் குள்ளனை ஊர் முழுவதுந் தேடிக் கண்டுபிடித்துத் தன்னுடைய ஒரே பெண்ணை அவனுக்குத் திருமணஞ் செய்து கொடுத்தான். இவ்வாறு சிலர் தம்மிலுங் கிழானவர்களிடத்தில் ஏமாந்து போவதும் உண்டு.

---

௪௦. மனக்கோட்டை

ஒரு காலத்தில் ஓர் ஊரிலே அந்தண இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் மிக வறியவன். பொருள் தேடித் திருமணஞ்செய்துகொள்ளவேண்டும் என்று திட்ட மிட்டுக்கொண்டிருந்தான். ஒருநாள் பணக்காரன் ஒருவன் அந்தணர்களுக்குப் பலவகைப் பலகாரங்களோடு இனிய விருந்து நடத்தினான். விருந்து முடிந்து எல்லோரும் வீட்டிற்குப் புறப்பட்டார்கள். அப்போது பணக்காரன், பிரமசாரி அந்தணனைக் கூப்பிட்டு அவனுடைய கையில் நான்கு இலட்டுகள் அடங்கிய ஒரு பொட்டலத்தைக் கொடுத்து "இன்றிரவு பசியெடுத்தால் இதனைச் சாப்பிட்டு விட்டு ஒரணாவுக்குப் பால் வாங்கிச் சாப்பிடும். இரவில் சோறு சாப்பிடுவீராயின் எங்களுடைய முன்னோர்கள் நற்கதியடையமாட்டார்கள்," என்று சொல்லியனுப்பினான்.

பிரமசாரியந்தணன் தன்னுடைய வீட்டை நோக்கிப் புறப்பட்டான் வயிறு நிறைய நன்றாகச் சாப்பிட்டிருந்தா னுகையால் நடக்க முடியவில்லை. அடிமேல் அடிவைத்து அசைந்து சென்றான். வழியில் ஒரு மாந்தோப்பிலே மணற் பாங்கான இடம் ஒன்றிலே அமர்ந்தான். அவனுடைய மனம் கற்பனையிற் புகுந்தது. "நான் இந்த இலட்டுகளைத்

தின்னுமல் இதனைக்கொண்டே முன்னுக்கு வருதல் வேண்டும். இலட்டு ஒன்றை மூன்றணவுக்கு விற்ருல் நான்கு இலட்டுக்களையும் முக்கால் ரூபாய்க்கு விற்கலாம். அந்த முக்கால் ரூபாயைக்கொண்டே பலவகையான வாணிகங்களைச் செய்து பதினுயிரக்கணக்கான ரூபாய் களைத் தேடுவேன். பிறகு தஞ்சாவூர் அரசனுடைய அரண் மனையையும் பழிக்கும்படியான அழகிய வீடு ஒன்றைக் கட்டிக்கொண்டு பல வேலைக்காரர்களை ஏவலுக்கு வைத் துக்கொண்டு மிகுந்த சிறப்பாக வாழ்ந்திருப்பேன்.

"அவ்வாறிருக்கும்போது எனக்குப் பெண்ணைக் கொடுப்பதற்கு அந்தணர்கள் எல்லோரும் நான் நீ என்று முன்வந்து என்னுடைய வீட்டிலே காத்துக்கொண்டிருப் பார்கள். நான் யாருக்கும் எளிதாக உடன்பாடு கொடுக்க மாட்டேன். எல்லோரையும் பார்த்து, 'உங்களுடைய பெண்களை ஒரே நாளில் இங்கு அழைத்துக்கொண்டு வாருங்கள்' என்று சொல்லுவேன். அவர்களும் அவ் வாறே அழைத்துக்கொண்டு வருவார்கள். அவர்கள் எல்லோரையும் நன்ருக ஆராய்ந்து பார்த்துப் பேரழகு பொருந்திய ஒரு பெண்ணைத் திருமணஞ் செய்துகொள்ளு வேன். பிறகு அவளிடம் எனக்கு ஒரு மகன் பிறப்பான். அவ னுக்குக் கைக்காப்பு, காற்காப்பு, கைச்சங்கிலி, காற்சங்கிலி, சதங்கை, சிறுமணி, அரைநாண் முதலிய அணிகலன்க ளெல்லாம் அணிவேன். அவன் என்றேனும் அழும்போது என் மனைவி அவனைத் தூக்கி அழுகையை மாற்ருமல் இருப்பின் இவ்வாறுதான் உதைப்பேன்" என்று கூறித் தனக்கு முன்னே இருந்த இலட்டுப்பொட்டலத்தைக் காலால் ஓங்கி உதைத்தான். இலட்டுக்கள் வாழையிலையிற் கட்டப்பட்டிருந்தபடியால் இலை கிழிந்து இலட்டுடைந்து மணலிலே சிதறிப்போய்விட்டது. மண்ணோடு கலந்து போன அதனை ஒன்றுஞ் செய்ய முடியவில்லை. மனக் கோட்டையை அவ்வளவில் நிறுத்திக்கொண்டு அந்தணன் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டான்.

எக. அறிவு வந்தது

ஓர் ஊரிலே பெரிய பணக்காரன் ஒருவன் இருந்தான். அவனுடைய பல்லக்கைத் தூக்குவதற்கு நான்கு ஆட்கள் திங்கள் ஊதியத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்தார்கள். இந்த ஆட்கள் பல்லக்குச் சுமக்கும் வேலை செய்பவர்களாக இருந்தாலும் மிகுந்த ஆணவம் உடையவர்கள். அவர்களுக்கு அறிவு சிறிதும் இல்லை. தங்களுடைய தலைவனாகிய பணக்காரன் எப்பொழுது என்ன சொன்னாலுங் குறுக்கே ஏதேனும் பேசிக்கொண்டிருப்பார்களே யல்லாமல், தலைவன் சொன்னதைக் கேட்கவே மாட்டார்கள். தன்னுடைய ஆட்களுக்கு நல்ல அறிவு புகட்டவேண்டும் என்று பணக்காரன் எண்ணமிட்டுக்கொண்டிருந்தான்.

ஒருநாள் அச்செல்வனுடைய பசுவின் கன்று எங்கோ காணமற் போய்விட்டது. செல்வன் தன்னுடைய பல்லக்குச் சுமப்பவர்களைக் கூப்பிட்டு, "நம்முடைய பசுவின் கன்று மேயப்போனது திரும்பி வரவில்லை. அதனைத் தேடிப் பிடித்துக்கொண்டு வாருங்கள்," என்று கட்டளையிட்டான். உடனே ஆட்கள் தங்களுடைய தலைவனைப் பார்த்து, "நீங்கள் உங்கட்கு விருப்பமான எந்த வேலையையும் எங்களிடம் கூறுகிறீர்கள். அவ்வாறு கூறினல் நாங்கள் செய்யமாட்டோம். பல்லக்குச் சுமப்பதுதான் எங்களுடைய வேலையே தவிரப் பசுவின் கன்றைத் தேடிப் பிடித்துக்கொண்டு வருவது எங்களுடைய வேலையன்று," என்று மிகவும் துடுக்காக மறுமொழி கூறினர்கள்.

இதனைக் கேட்டவுடனே செல்வனுக்கு மிகுந்த சினம் உண்டாயிற்று. இவர்கட்கு இன்று நல்ல பாடங் கற்பிக்க வேண்டும் என்று முடிவுசெய்தான். அவர்களைப்பார்த்து, "நல்லது; நான் கன்றுக்குட்டியைத் தேடிப்பிடித்துக் கொள்ளுகிறேன். உடனே பல்லக்கைக்கொண்டு வாருங்கள்," என்று சொன்னன். ஆட்கள் அவ்வாறே சிவிகையைத் தூக்கிக்கொண்டு வந்து வைத்தார்கள். செல்வன் அதில் ஏறிக்கொண்டு, காடு மேடு குன்று குளம் நெருஞ்சிமுள்

மிகுந்த திடல் முதலிய கண்டவிடங்கட்கெல்லாம் போகச் செய்தான். கன்றுக்குட்டி போகக்கூடாத நெடுந்தொலையான இடங்கட்கும் பல்லக்கைக் கொண்டுபோகச் சொன்னான். காலையில் பத்து நாழிகைக்கு வீட்டைவிட்டுப் புறப்பட்ட செல்வன் மாலை இருபது நாழிகை வரையில் வீட்டிற்குத் திரும்பவே இல்லை. சுடுமணல் மிகுந்த வழியெல்லாம் பல்லக்கைக் கொண்டுபோகுமாறு கட்டளையிட்டான். நெருஞ்சி முட்கள் குத்தியபடியாலும் சுடுமணல் காலைப் பொசுக்கியபடியாலும் சிவிகையாட்களின் கால்களில் கொப்புளங்கள் உண்டாகிக் குருதி கசியத்தொடங்கிவிட்டது.

ஆட்கள் தங்களுடைய தலைவனாகிய செல்வனைப் பார்த்து, "எங்களுடைய கால்களில் மிகுந்த வலியுண்டாகிவிட்டது. முட்கள் குத்தி இரத்தம் ஒழுகுகிறது. இனிமேல் எங்களால் நடக்கவேமுடியாது," என்று சொன்னார்கள். இதனைக்கேட்ட செல்வன், "அஃதெல்லாம் கூடாது, பல்லக்கைச் சுமப்பது உங்களுடைய வேலை. கன்றுக்குட்டியைத் தேடிப்பிடிப்பது என்னுடைய வேலை. நான் என்னுடைய வேலையைச் செய்கிறேன். நீங்கள் உங்களுடைய வேலையைச் செய்யுங்கள்," என்றான்.

சிவிகையாட்கள் செல்வனைப்பார்த்து, "ஐயா! எங்கட்கு அறிவு வந்துவிட்டது. நாங்கள் இதுவரையில் உங்களிடம் மடத்தனமாக நடந்துகொண்டோம். இனிமேல் அவ்வாறு நடந்துகொள்ளமாட்டோம். தாங்கள் அருள் புரிந்து இல்லத்திலேயே எழுந்தருளியிருங்கள். நாங்கள் போய்த் தேடிக் கன்றைப்பிடித்துக்கொண்டு வருகிறோம்," என்று கூறிப் பல்லக்கை வீட்டிலே கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டுக் கன்றுக்குட்டியைத் தேடிப் பிடித்துவந்து கட்டினார்கள்.

இவ்வாறு பட்டறிந்த பிற்பாடு அறிவு வரப்பெறுகிற மனிதர்கள் உலகில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.

எஉ. வால்பிடுங்கி

ஒருகள்ளன் ஒரு வீட்டிற்குட் புகுந்து களவு செய்தான். வீட்டுக்காரர்கள் விழித்துக்கொண்டு, "கள்ளன், கள்ளன்," என்று பெருங் கூச்சலிட்டார்கள். அக்கம் பக்கத்தார்கள் விழித்துக்கொண்டு கள்ளனைத் துரத்தத் தொடங்கினார்கள். கள்ளனுக்கு மிகுந்த அச்சம் உண்டாகி விட்டது. யார் வந்து பிடித்துக்கொள்ளுகிறார்களோ என்று அஞ்சி மிகு விரைவாக ஓடினான்.

காட்டையடுத்த ஓரிடத்தில் வழியிலே ஒருபுலி படுத்துக்கொண்டிருந்தது. இருளில் ஓடிவந்த கள்ளன் அதன் மேல் இடறிப் பொத்தென்று முதுகில் விழுந்தான். அஃது ஒரு குதிரைபோலும் என்று எண்ணியவனாய்க் காதுகள் இரண்டையும் உறுதியாகப் பிடித்துக்கொண்டு அதனைக் கால்களால் உதைத்தான்.

புலி திடுக்கிட்டெழுந்தது. "என்ன இது? ஒருநாளும் இல்லாத புதுமையாக இருக்கிறது. நம்மீது ஏறி உட்காரக் கூடிய ஆற்றல்படைத்த உயிருங்கூட உலகத்தில் இருக்கிறதா? உலகத்தார் 'கிலி' என்று சொல்லுகிறார்களே அந்தக்கிலி இதுவாக இருக்குமோ" என்று எண்ணியது. நான்கு காற்பாய்ச்சலில் விரைவாகப் பறந்தது. மேலேயிருந்த கள்ளன் அது விரைவாக ஓடுமாறு கால்களால் வயிற்றில் பலமாக உதைகள் கொடுத்தபடியே இருந்ததன்றிக், காதுகளையும் பலமாக முறுக்கிப் பிசைந்து கொண்டேயிருந்தான்.

புலி வெகுதொலை ஓடியது. பொழுது விடியுஞ் சமயமாகிச் சிறிதுசிறிதாக வெளிச்சம் உண்டாகத் தொடங்கியது. கள்ளன் தான் ஏறியிருப்பது குதிரைதானா என்று குனிந்து நன்றாகப்பார்த்தான். பெரிய வேங்கைப்புலி என்று நன்கு தெரிந்தது. புலியின்மீது சவாரி செய்கிறவனுக்கு இறங்குகிறபோதுதான் அச்சம். கள்ளன் புலியைப்பார்த்ததும் உள்ளம் நடுங்கினான். 'என்ன காரியஞ்செய்துவிட்

டோம்! எவ்வாறு கீழே இறங்குவது என்று எண்ணினன். புலி காற்ருகப் பறந்து செல்லும் வழியில் ஒரு மரக்கிளை கள்ளனுடைய கைக்கு எட்டக்கூடிய உயரத்தில் இருந்தது. கள்ளன் திடீரென்று அம்மரக்கிளையைக் கைகளாற் பற்றிக் கொண்டான். புலி, விட்டது கிலி என்று வெகு களிப்புடன் மேலும் விரைவாகப் பறந்துதோடியது.

அதிகாலை நேரமாகையால் விரைவாக ஓடிக்கொண்டிருக்கும் புலிக்கு எதிரே நரி ஒன்று வந்தது. அஃது ஓடிக்கொண்டிருக்கும் புலியைத் தடுத்து நிறுத்தி, "மாமா! மாமா!! என்ன இவ்வளவு பரபரப்பாக ஓடிக்கொண்டிருக்கிறீர்கள்? செய்தி என்ன?" என்று உசாவியது.

நரியைக் கண்டதும் புலி தன்னுடைய ஓட்டத்தை நிறுத்திவிட்டு நின்று பெருமூச்சு விட்டது. நரியைப் பார்த்து, "அருமை மருமகனே! என்னவென்று சொல்லுவேன். இரவு நான் வழியில் ஓரிடத்திற் படுத்துக்கொண்டிருந்தேன். நள்ளிரவு நேரத்தில் என்மீது திடீரென்று கிலி வந்து ஏறிவிட்டது. அந்நேரம் முதல் இந்நேரம் வரையில் அக்கிலி என்வயிற்றில் உதைத்த உதைகளுக்குக் கணக்கே இல்லை. அதுமட்டுமன்று. காதையும் நன்ருகப் பிசைந்து புண்ணுக்கிவிட்டுச் சிறிது நேரத்திற்கு முன்தான் என்னை விட்டது. அடடா! அந்தக் கிலி என் மீது சவாரி செய்தால் செய்துவிட்டுப் போகட்டும்; என்னுடைய வயிற்றில் இவ்வளவு உதைகளா உதைப்பது? காது இப்பொழுதே வீங்கிப்போய்விட்டது பார். நான் அதனிடம் இருந்து உயிர் பிழைத்ததற்குக் காரணம் என்னுடைய முன்ஞேர்கள் செய்த நல்வினையோ அல்லது நான்தான் செய்த நல்வினையோ," என்று கூறியது.

புலி புகன்றதைக் கேட்ட நரி, "என்ன மாமா; பைத்தியக்காரராக இருக்கிறீர்? கிலியாவது மண்ணுங்கட்டியாவது. நான் இதுவரையில் கேள்விப்படாத புதுமையாகவன்ரே இருக்கிறது நீர் சொல்லுகிற செய்தி. கிலி என்பதை நீர் புதிதாகப் படைத்திருக்கிறீரே தவிர உலகத்

தில் கிலிஎன்று ஒன்று இல்லை. நீர் சொல்லுவதைப் பார்த்தால், உம்முடைய பைத்தியக்காரத் தனத்தைத் தெரிந்து கொண்டு எந்த மனிதனே உம்முடைய முதுகில் சவாரி செய்திருக்கிருன் என்று தெரிகிறது. நான் அம்மனிதனை உம்மிடம் பிடித்துத் தருகிறேன் என்னேடு வாரும்,'' என்று சொல்லிக் கூப்பிட்டது. புலியோ, “அப்பா! நான்பட்டபாடு போதும்; வரவேமாட்டேன். விரும்பினல் நீ மட்டும் போய்த் தேடிப்பார். நான் இவ்விடத்திலே சிறிதுநேரம் படுத்து இளைப்பாறுகிறேன்,'' என்று கூறிக் கிலி தன்னைவிட்டு நீங்கிய இடத்தையுங் குறிப்பாகக் கூறியது.

சூழ்ச்சியில் தேர்ச்சிபெற்ற நரி, புலியை ஏய்த்துச் சவாரி செய்தது மனிதனுகவே இருத்தல்வேண்டும் என்று முடிவுசெய்து, புலி புகன்ற இடத்தை நன்ருகப் பார்த்துக் கொண்டு தேடத்தொடங்கியது. நரி தொலைவில் வருதலைக் கண்ட மனிதன் நரிக்குத் தெரியாமலே மரத்தை விட்டு இறங்கிப் பக்கத்தில் இருந்த கோயில் ஒன்றுக்குள் நுழைந்து உள்ளே தாழ்ப்பாளிட்டுக்கொண்டு தங்கியிருந்தான்.

நரி சில குறிகளால், புலியை ஏய்த்த மனிதன் இக் கோவிலுக்குள்ளேதான் இருக்கவேண்டும் என்று முடிவு செய்து கதவைப் பலமாகத் தள்ளிப்பார்த்தது. பிறகு தன்னுடைய வாலைக்கதவில் இருந்த ஒரு பெரிய தொளைக் குள் விட்டது. தாழ்ப்பாள் போட்டிருந்தால் தெரிந்து கொள்ளலாம் என்றே நரி வாலை உள்ளே விட்டது.

உள்ளிருந்த கள்ளன் ‘நாம் இந்நரியைச் சும்மா விட்டால் இது நம் உயிருக்கே உலைவைத்துவிடும்; இதற்குச் சிறிதாவது தொல்லை கொடுக்கவேண்டும்' என்று எண்ணியவனய் உள்ளே விடப்பட்ட நரியின் வாலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். மேலும் வாலை உள்ளே பிடித்துத் தன் முழுப் பலத்தையுங்கொண்டு இழுத்தான்.

'ஐயகோ! முட்டாள்தனமாக வாலை உள்ளே விட்டு நம் முட்டாள் தனத்தைக் காட்டிவிட்டோமே; நாம் மனிதனைப் பிடிக்கவேண்டாம். நம்முடைய வால் நமக்குக் கிடைத்தால் அதுவே போதும்' என்று எண்ணிக்கொண்டு நரியுந் தன் முழுப்பலத்தையுங்கொண்டு வாலை வெளியே இழுத்தது. இவ்வாறிருவரும் இழுக்கவே வால் அடிப் பகுதியிலேயே சதையோடு பிய்த்துக்கொண்டு மனிதனுடைய கைக்கு வந்துவிட்டது.

அவ்வளவில் நரி, "செத்தேன் பிழைத்தேன் செத்தேன் பிழைத்தேன்," என்று கத்திக்கொண்டு உதிரஞ் சொட்டச் சொட்டப் புலியிருந்த இடத்தை நோக்கி ஓடியது. நரியினது நிலைமையைப் பார்த்த புலி விரைவாக எழுந்து, "நான் அப்பொழுதே சொன்னேனே கேட்டாயா?" என்று கூறிக்கொண்டு மேலும் ஓடத்தொடங்கியது. நரி புலியைப் பார்த்து, "மாமா! அது மனிதனுக இருக்கும் என்று நினைத்தேன். வால்பிடுங்கி என்னுஞ் செய்தி இப்பொழுதுதான் தெரியவந்தது," என்று கூறிக்கொண்டே புலிக்குமுன்னுல் ஓடத்தொடங்கியது. புலி 'நமக்கு வாலோ காதோ போகாமற்போனது நம்முடைய நல்வினைதான்' என்று எண்ணி மிகுந்த களிப்படைந்தது.

இவ்வாறுதான் சிலபேர் தங்களுடைய பேராண்மையையும் பெருமையையும் காட்டப்போய்த் தொல்லையிலே அகப்பட்டுக் கொள்ளுகிறுர்கள்.

எங. சொல்லேருழவர் பகை

"வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை."

என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவதேவர் திருவாய் மலர்ந்தனர். நாம் இவ்வுலகில் பிறருடைய பகையைத் தேடிக்கொள்ளாது நல்லியற்கையுடன் வாழ்வதற்கு முயலுதல் வேண்டும். பிறருடைய பகை நமக்குத் தொல்லையை

விளைவிப்பதாம். பொதுவானவர்களுடைய பகையினாலேயே பொல்லாங்கு நேருமெனின் பேச்சுத்திறனும் சூழ்ச்சித் திறனும் உடையவர்களுடைய பகை உயிருக்கே இறுதியைப் பயப்பதாகும்.

ஒரு காட்டில் அகவை முதிர்ந்த அரிமா ஒன்று இருந்தது. அதற்குத் தீராத நோயும் உண்டாகிவிட்டது. அதனால் அவ்வரிமா நாள்தோறும் இளைத்துக்கொண்டிருந்தது. காட்டில் இருந்த விலங்குகள் எல்லாம் விலங்கரசனாகிய அரிமாவைப் பார்த்து நலம் உசாவிக்கொண்டிருந்தன. நரியின் இனம்மட்டும் அரிமாவை ஒரு பொருட்படுத்திச் சென்று பார்க்கவில்லை.

ஓநாய்கட்கும் நரிகட்கும் பிறவிப்பகை. அவைகள் ஒன்றை ஒன்று கொன்று தொலைப்பதற்கே சமயம் பார்த்துக்கொண்டிருக்கும். நோயாக இருந்த கிழ அரிமாவிடம் ஓநாய் ஒன்று நெருங்கிய நண்போடு பழகிக்கொண்டிருந்தது. அவ்வோநாய் நரிகளின்மீது அரிமாவுக்குக் கெட்ட எண்ணத்தை உண்டாக்கவேண்டும் என்று முடிவு செய்துகொண்டு அதற்கேற்றவாறு பேசத்தொடங்கியது. நரி மிகுந்த சூழ்ச்சித் திறமுடையதாயிற்றே; அது தனக்குத் தீமை செய்யுமே என்று ஓநாய் சிறிதும் எண்ணிப்பார்க்கவே இல்லை. ஒருநாள் ஓநாய் அரிமாவைப் பார்த்து, "ஓ விலங்கரசே! தேவரீரை எவ்வளவு விலங்குகள் வந்து பார்த்து நலம் உசாவிச் செல்கின்றன? நரிக்கூட்டத்தில் ஒரு நரியாவது தங்களைப் பார்த்தற்கு வந்ததா? கேடுகெட்ட வஞ்சக நரிகளுக்கு உள்ள ஆணவமும் திமிரும் வேறு எந்த விலங்குகட்குமே இல்லை. தங்களையே இவ்வாறு ஒரு பொருட்படுத்தாத நரிகள் இனிமேல் வேறு எந்த விலங்கைப் பொருட்படுத்தப் போகின்றன? இதனை நீங்கள் நன்றாக எண்ணிப்பாருங்கள்," என்று சொல்லி அரிமாவின் உள்ளத்தில் சினத்தை உண்டாக்கியது.

ஓநாய் அரிமாவுக்கு உரைத்த செய்திகளை நரி ஒன்று ஒரு மறைவிடத்தில் இருந்து கேட்டுக்கொண்டிருந்தது.

அதற்குப் பழிதீர்க்கவேண்டும் என்னும் எண்ணம் உண்டாகிவிட்டது. அது வெகு தொலை பின்னுக்குச்சென்று பிறகு மிகுவிரைவாக அரிமாவை நோக்கி இரைக்க இரைக்க ஓடிவந்தது. நரிமாவைக்கண்ட அரிமா மிகுந்த சினங்கொண்டது. கண்கள் தீப்பொறிகளைச் சிந்துமாறு நரியை முறைத்துப் பார்த்தது.

அரிமாவின் சினத்தைக்கண்ட நரிமா அஞ்சி நடுங்கினாற்போல் நடித்து ஒரு மூலையில் பணிவுடன் ஒதுங்கி நின்றது. பிறகு அஃது அரிமாவைப் பார்த்து, "அரசர் பெருமானே! நாள்தோறும் தங்களிடம் வந்து முகமன் பேசிச் செல்லும் விலங்குகள் வீண் வாய்மொழி பேசிச் செல்லுகின்றனவே யல்லாமல் தங்கள் உடல் நலத்தில் உளஞ்செலுத்தி எவ்விலங்கேனும் மருத்துவப் பணியில் ஈடுபட்டனவா? எம்மவரோ அவ்வாறன்று. அடிகளாருக்கு உடல்நலக் குறைவேற்பட்ட காலம் முதற்கொண்டே மருத்துவப் பணிபுரிந்து உடல் நலத்தைப் பாதுகாத்து நன்மை புரிதற்கு உளங்கொண்டவர்களாய் நாடுகள் தோறுஞ் சுற்றித் திரிகின்றனர். அதனாலேயே இங்கு வருவாரும் அரியராயினர். ஆண்டவருடைய மருத்துவப் பணியில் ஈடுபட்டு மருந்து தேடித் திரிந்தவர்களில் அடியனேனும் ஒருவன். அடியனேன் முற்பிறவியிற் செய்த நல்வினையின் பலனால் வடநாட்டிலே ஒரு காட்டிலே முனிவர் கோன் ஒருவனைக் கண்டு பணிந்து அவனிடமிருந்து தேவரீருடைய நோய்க்கு மருந்தினை அறிந்து வந்தனன். இனிமேல் நோயைப்பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. அடியனேன் அறிந்துவந்த மருந்தினை மறைமுகமாகவே தேவரீருடைய திருச்செவிகளிலே ஓதுதல்வேண்டும்," என்று கூறியது.

நரிமா நவின்றதைக்கேட்ட அரிமா, "நம் நண்பனாகிய இவ்வோநாய் இங்குள்ளதைப்பற்றி நீ சிறிதும் எண்ணமிடாதே. இவன் நமக்கு நன்மை தேடுபவனேயன்றித் தீமை தேடும் பிறன் அல்லன். ஆகவே தடையின்றிச் சொல்லலாம்," என்று புகன்றது.

நரி, "விலங்கரசே! பெற்ற தாய்க்காயினுங் கண்மறை விருக்கவேண்டுமன்றோ? 'அந்தரங்க மின்றேல் மந்திரங்கள் பலியா' என்று பெரியோருங் கூறினரல்லரோ? ஆகவே ஒரு நொடிப்போது தனித்து அடியனேன் உரைகட்குக் காது கொடுத்தருளுதல்வேண்டும்," என்றது. இதனைக் கேட்ட ஓநாயானது தொலைவாகச் சென்றது. அப்பொழுது நரி அரிமாவின் செவியில், "பெருமானே! உயிருடன் இருக்கும் ஓநாயின் உதிரத்தை உறிஞ்சி அதனுடைய தோலைப் போர்வையாகப் போர்த்துக்கொண்டால் தங்களுடைய நோய் மிகுவிரைவிலே குணமாகுமாம்," என்று கூறியது.

அரிமா தன்னுடைய உயிரை உடலிலே நிறுத்திக் கொள்வதற்காக, நண்பனுக்குத் தீமை செய்தற்கும் ஒரு சிறிதும் அஞ்சாமல் நரிமாவைப் பார்த்து, "இவ்வளவு தானே செய்தி! நீ பக்கத்திலே இருக்கிற மருந்தைத் தான் தெரிந்துகொண்டு வந்திருக்கிறாய்," என்றது.

நரி மீண்டும் அரிமாவைப் பார்த்துத், "தனக்கு மிஞ்சித்தான் தருமம்," என்று உலகினர் சாற்றுவர். தங்களுடைய உயிர் பிழைக்கவேண்டியதுதானே முதன்மையாக வேண்டற்பாலது," என்று மேலுந் தூண்டிவிட்டது.

அரிமா ஓநாயை அண்மையிற் கூப்பிட்டது. ஓர் அறையில் அதனைக்கொன்று உதிரத்தைக் குடித்துத் தோலை உரித்துப் போர்த்துக்கொண்டது.

பகையை வெற்றிகொண்டு, பகைவனது அழிவைக் கண்களாற் பார்த்துக்கொண்டிருந்த ஓரி, "உங்களுடைய நோய் இனிமேல் விரைவாகத் தீர்ந்துபோகும். தாங்கள் சிறிதுங் கவலைப்படுதல் வேண்டாம்," என்று கூறிவிட்டு அவ்விடத்தைவிட்டு அகன்று சென்றது. இவ்வாறு சூழ்ச்சிக்காரர்கள் தங்களுடைய எண்ணத்தை எவ்வகையேனும் நிறைவேற்றித்தான் முடிப்பார்கள்.

---

௭௩. முப்பது இலக்கணங்கள்

ஓர் ஊரிலே ஓர் அந்தணன் இருந்தான். அவனுக்கு ஒரே பிள்ளை. அப்பிள்ளை பெரிய மூடன்; எழுதப் படிக்கத் தெரியாது. முழுமூடனாக இருந்ததும் அல்லாமல் பொருளற்ற ஏழையாகவும் இருந்தான். இத்தகைய தன் அருமைத் திருமகனுக்குத் திருமணஞ்செய்து வைத்து விடவேண்டும் என்று அந்தணன் பெண் தேடிக்கொண்டிருந்தான்.

இச்செய்தி இவ்வாறாக, வேறோர் ஊரில் ஓர் அந்தணன் மிகுந்த செல்வம் உடையவனாகவும் ஒரே பெண்ணை உடையவனாகவும் இருந்தான். அப்பெண் பேரழகுடையவளாகவும் கல்வி கேள்விகளில் வல்லவளாகவும் நற்குண நற்செய்கைகள் யாவும் அமையப்பெற்றவளாகவும் விளங்கினாள். பெண்ணின் தந்தையாகிய அந்தணன் தன்னுடைய பெண்ணுக்கு முப்பத்திரண்டு இலக்கணங்களும் அமையப்பெற்ற ஒரு மணமகனைத் தேடிக்கொண்டிருந்தான்.

மூடப்பிள்ளையைப்பெற்ற அந்தணன் இப்பெண்ணினுடைய செய்தியையும் அவளுடைய தந்தையின் நோக்கத்தையும் உணர்ந்தான். பெண்ணின் தகப்பனை எவ்வாறாவது ஏமாற்றி அப்பெண்ணைத் தன்னுடைய பிள்ளைக்குத் திருமணஞ்செய்துவிட வேண்டும் என்று முடிவுசெய்தான். பெண்ணின் தகப்பனிடம்போய், "எனக்கு ஒரு மகன் இருக்கிறான். அவனுக்கு முப்பது இலட்சணங்கள் வரையிலும் இருக்கின்றன. முப்பத்திரண்டு இலட்சணங்கட்கு இரண்டே இரண்டு இலட்சணங்கள் தாம் குறைவு," என்று சொன்னான்.

பெண்ணைப்பெற்ற அந்தணன் எண்ணமிட்டான். "நாமும் பலவிடங்களில் பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடினோம். யாண்டுஞ் சரியான மாப்பிள்ளை அமையவில்லை. இவ்வந்தணனுடைய மகனுக்கு இரண்டு இலட்சணங்கள்

மட்டுமே குறைவாக இருப்பதாகச் சொல்லுவதால் இவ் வந்தணனுடைய மகனுக்கே நம் பெண்ணைக் கொடுத்து விடலாம்,'' என்று எண்ணி இணங்கினன்.

திருமணம் உறுதி செய்யப்பட்டது. பெண்ணின் தந்தை பெருஞ் செல்வனுகையால் திருமணத்தை மிகுந்த சிறப்போடு நடத்தத் தொடங்கினன்.

திருமணத்தை நடத்துவிக்கும் திருமண ஆசிரியன் பொரியிடுஞ் சமயத்திற் பிள்ளையாண்டானைப் பார்த்துப் பொரியைத் தீயிலிட்டு ஆகுதி செய்யச் சொன்னன். பிள்ளை யாண்டானே பொரியை வாங்கித் தன்னுடைய வாயிலே போட்டுக்கொண்டான். மாப்பிள்ளையின் செய்கையைக் கண்ட வேள்வியாசிரியன், "அடடா! பொரியைத் தீயி லன்றோ இடச்சொன்னேன். வாயிற் போட்டுக்கொண் டாயே, இப்படிச் செய்யலாமா?'' என்று கேட்டான். உடனே மணமகன் தன் வாயில் இருந்த பொரியைத் திருமணவேள்வித் தீயில் துப்பினன். இதனைக்கண்ட திருமண ஆசிரியன், "என்னடா வேள்வித் தீயை எச்சி லாக்கிவிட்டாயே?'' என்றான். உடனே மணமகன், "தீயைச் சுத்தஞ்செய்துவிடுகிறேன்,'' என்று கூறிப் பக்கத்தில் இருந்த ஒருகுடந் தண்ணீரையெடுத்துத் தீயில் ஊற்றி விட்டான்.

திருமண வேள்வி யாசிரியன், "நீ செய்கிறது வெகு அழகாக இருக்கிறது. போதும் அப்பா! கீழே உட்கார்,'' என்று கூறினன். அந்த மூடமணமகன் கழனியிலே களை பிடுங்கியும் நாற்று நட்டும் வழக்கப்பட்டவனுகையால், ஒரு காலை மண்டியிட்டு மற்றொரு காலைக் குத்திட்டுத் தருப்ப ணஞ்செய்கிறவன்போல் உட்கார்ந்தான். இதைக் கண்ட வுடனே திருமண வேள்வியாசிரியனுக்கு அடங்காச்சினம் உண்டாகிவிட்டது. "என்னடா ஒன்று சொன்னல் ஒன்று செய்கிறாய்?'' என்று கடிந்துகொண்டான். உடனே மண மகன், "ஐயா! நான் இனிமேல் ஒன்றுஞ்செய்யமாட்டேன். இஃதென்ன பேரிழவாக இருக்கிறது? செத்த பிணம்

போல் விழுந்துகிடக்கிறேன்," என்று சொன்னான். இவ்வமங்கலச் சொல்லைக்கேட்டுப் பெண்ணின் தகப்பனாகிய அந்தணன் பெருஞ்சினங்கொண்டான். மாப்பிள்ளையின் தந்தையைப் பார்த்து, "அடா பாவி! உன் பிள்ளைக்கு முப்பது இலக்கணங்கள் இருக்கின்றனவென்று மொழிந்தாயே! அந்த இலக்கணங்கள் இவைகள்தாமா?" என்று கேட்டான்.

மணமகனின் தந்தை, "என்மீது எத்தகைய தவறும் இல்லை. நான் முன்பே இரண்டு குணங்கள் இல்லையென்று கூறிவிட்டேன். அவைகளாவன: தானும் அறியான்; ஒருவர் சொன்னாலுங் கேளான். இவைகளைத் தவிர மற்றையவைகளிலெல்லாம் வல்லவன். உண்பது உடுப்பது உறங்குவது முதலிய எல்லாவற்றினுங் கெட்டிக்காரன். வேண்டுமானால் ஆராய்ந்து பார்த்துக்கொள்ளலாம்," என்று கூறினான். இதனைக் கேட்டுப் பெண்ணினுடைய தந்தை அழுவதா நகைப்பதா என்று தெரியாமல் விழித்தான்.

இத்தகைய இலக்கணம் உடையவர்கள் உலகத்தில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.

---

௪௫. ஏவாமக்கள் மூவாமருந்து

ஓர் ஊரிலே குப்புச்சாமி என்னும் பெயருடைய சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் திண்ணைப் பள்ளியிலே அரிச்சுவடி, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றிவேற்கை, குமரேசசதகம், திருப்புகழ், வடவேங்கட நாராயண சதகம், நெல்லிலக்கம், பொன்னிலக்கம் முதலியவைகளைக் கற்றுக்கொண்டிருந்தான். அவனுக்கு அகவை பத்து. குப்புச்சாமியின் ஆசிரியருடைய பெயர் குமாரசாமிப்பிள்ளை.

ஒருநாள் ஆசிரியர் வேறொரு பையனுக்குக் கொன்றை வேந்தன் பாடஞ் சொல்லிக்கொண்டிருந்தார். ஆசிரியர்

சொல்லுவதைக் குப்புச்சாமி மிகுந்த கருத்துடன் கேட்டுக் கொண்டிருந்தான். 'எண்ணும் எழுத்துங் கண்ணெனத் தகும்' என்பதைச் சொல்லிவிட்டு அடுத்தபடியாக, 'ஏவா மக்கள் மூவாமருந்து' என்பதற்குப் பொருள் விரிக்கத் தொடங்கினர். "'தாய் தந்தை இன்ன வேலையைச் செய்' என்று வாய் திறந்து கட்டளையிடுவதற்கு முன்னதாகவே, அவர்கள் இன்ன வேலையை இடப்போகிருர்கள் என்னுங் குறிப்பை அறிந்து அதனைச் செய்து முடிக்கிற பிள்ளைகள், தம்முடைய தாய் தகப்பன்மாருக்குத் தேவாமுதத்தைப் போலச் சிறந்தவர்கள் ஆவார்கள்'' என்பது இம் மொழி யின் பொருள்.

"உங்களுக்கு உங்கள் தாய்தந்தையர்கள் ஏதேனும் ஒரு வேலையைச் சொன்னல், முகத்தைக் கோணலாக வைத்துக்கொண்டு செய்கிறீர்களன்றே? அவ்வாறெல் லாஞ் செய்தல் கூடாது. ஒரு வேலையைச் சொன்னல் அதற்குத் தொடர்பான எல்லா வேலைகளையும் செய்து முடித்து அவர்கட்குக் களிப்பூட்டுதல் வேண்டும். உங்கள் தகப்பனர் உங்களைப் பார்த்து, 'அடே தம்பி! இராமா யணம் படிக்கப்போகிறேன். புத்தகம் எடுத்துவா' என்று சொன்னல் இராமாயணப் புத்தகத்தை மட்டும் எடுத்துக் கொண்டுபோய்க் கொடுத்தால் போதாது. அவ்வாறு கொடுத்தால் பிறகு மூக்குக் கண்ணுடி எடுத்துவா, எழுது கோல் எடுத்துவா, அகரவரிசை நூல் எடுத்துவா என்று ஒவ்வொன்ருகச் சொல்லிக்கொண்டேயிருப்பார். ஆகவே, 'புத்தகம் எடுத்துக்கொண்டுவா' என்று சொன்னவுடனே புத்தகம், எழுதுகோல், மூக்குக்கண்ணுடி, அகரவரிசை நூல் முதலியவைகளை முதலிலேயே எடுத்துக்கொண்டு போய்க் கொடுத்துவிட்டால் அவருக்கு எவ்வளவு மகிழ்ச்சி யாக இருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள்,'' என்று பாடஞ்சொல்லி முடித்தார்.

பக்கத்தில் இருந்த குப்புச்சாமி ஆசிரியர் பாடஞ் சொல்லியவைகளையெல்லாம் விழிப்புடன் கேட்டுக்கொண் டிருந்தான். அன்று இரவு குப்புச்சாமி தன்னுடைய

வீட்டிலே சாப்பிட்டுவிட்டுத் தூங்கத் தொடங்கினான். உடனே தூக்கம் வராதபடியால் கண்களை மூடிக்கொண்டு உறங்குபவனைப்போலக் கிடந்தான். அப்பொழுது குப்புச்சாமியின் தாயுந்தந்தையும் உரையாடிக்கொண்டிருந்தார்கள். குப்புச்சாமியின் தந்தை தன் மனைவியைப் பார்த்து, "அடியே! குப்பத்தில் இருக்கிற கோவிந்தன் நமக்கு நான்கு மரக்கால் நெல் கொடுக்கவேண்டும் அன்றோ? அதனைக் காலையில் குப்புச்சாமியை அனுப்பி வாங்கிக்கொண்டுவரச் சொல்லுவோம்" என்று சொன்னான். அதற்கு அவள், "அப்படியே செய்வோம்," என்று சொன்னாள்.

இதனைக் கேட்டுக்கொண்டே படுத்திருந்த குப்புச்சாமி, 'ஏவாமக்கள் மூவாமருந்து' என்பதை நாளைக்கு நம்முடைய தாய் தந்தையரிடம் நடைமுறையிற் செய்து காட்டவேண்டும் என்று முடிவு செய்தான்.

நான்காஞ் சாமத்தில் கோழி கூவியதைக்கேட்ட குப்புச்சாமி ஒலியுண்டாகாமல் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான். குப்பத்தை நோக்கிப் புறப்பட்டான்.

மறுநாள் பொழுது விடிந்தது. குப்பத்திற்குப்போய் நெல் வாங்கிவரச்சொல்லலாம் என்று குப்புச்சாமியின் தாய் தந்தையர் குப்புச்சாமியைத் தேடினார்கள். தோட்டம் துரவு முதலிய இடங்களிலெல்லாம் பார்த்தார்கள். பக்கத்து வீட்டுக்காரர்களையெல்லாம் பார்த்து, "எங்கள் பையனைக் கண்டீர்களா?" என்று கேட்டார்கள். அவர்களெல்லாரும், "நாங்கள் பார்க்கவில்லையே. இரவிற் படுத்துக்கிடந்தவன் விடிவதற்குள் எங்கே போய்விட்டான்?" என்றார்கள். சிலர், "இஃதென்ன மாயமாக இருக்கிறது," என்றார்கள். பள்ளிக்கூடத்தில் இருந்து பிள்ளைகள் குப்புச்சாமியைப் பள்ளிக்கூடத்திற்கு அழைத்துக் கொண்டுபோவதற்காக வந்தார்கள். குப்புச்சாமி காணமற் போய்விட்டான் என்று எங்கும் பேச்சாகிவிட்டது.

குப்புச்சாமியின் தாய், "ஐயோ! மகனே! போய் விட்டாயா?" என்று சொல்லி வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டாள். ஒப்பாரி வைத்துப் புலம்பவுந் தொடங்கிவிட்டாள்.

இச்சமயத்தில் குப்புச்சாமி தலையிலே நெல் மூட்டையோடு வந்து தோன்றினான். தாயானவள் அவனைப் பார்த்து, "அடா என் கண்ணே! என்னிடஞ் சொல்லாமல் எங்கேயடா போனாய்? இப்படிப் பக்கத்திலே வா; ஒரு முத்தங்கொடுக்கிறேன்," என்றாள். மகனைத் தேடிக் கொண்டிருந்த தந்தையும் வீட்டிற்கு வந்தான். இருவரும், "என்னடா தம்பி செய்தி?" என்று உசாவினார்கள்.

குப்புச்சாமி தன் தாய் தந்தையரைப் பார்த்து, "இரவு நீங்கள் இருவரும் காலையில் என்னை அனுப்பி நெல் வாங்கிக்கொண்டு வரச்சொல்லவேண்டும் என்று பேசிக்கொண்டீர்களே! நேற்று என்னுடைய ஆசிரியர், 'தாய் தந்தையர் ஏவுவதற்கு முன்னே வேலையைச் செய்து முடிக்கும் பிள்ளை அத்தாய் தந்தையர்க்குத் தேவாமுதத்தைப்போலச் சிறந்தவன்' என்று என்னுடைய பக்கத்திலே இருந்த பையனுக்குப் பாடஞ் சொல்லிக்கொண்டிருந்தார். அதனைக்கேட்டிருந்த நான் நீங்கள் சொல்வதற்கு முன்னரே இந்த வேலையைச் செய்துமுடித்தல் வேண்டும் என்று இரவே திட்டம் போட்டுக்கொண்டிருந்து காலையில் எழுந்ததும் அவ்வாறே செய்து முடித்தேன். நான் செய்தது உங்களுக்கு நன்றாக இல்லையா?" என்று கேட்டான். குப்புச்சாமி கூறியவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த எல்லோரும் நகைத்து மகிழ்ந்தார்கள். இவ்வாறு தாய் தந்தையரை மகிழ்விக்க முயலும் பிள்ளைகளும் உலகத்திலே சிலர் இருக்கிறார்கள்.

———

எசுஉ. பார்ப்பனன் மொழி பலித்தது

மதனபாலன்

முன்காலத்திலே தென்னுட்டில் மதனபாலன் என்னும் பெயருடைய அரசன் ஒருவன் அரசாட்சி செய்து கொண்டிருந்தான். அவ்வரசனிடத்தில் சங்கர நாராயண சாத்திரி என்னும் பஞ்சாங்கப் பார்ப்பான் ஒருவன் நாள் தோறும் பஞ்சாங்கஞ் சொல்லிக்கொண்டிருந்தான். பஞ்சாங்கம் படித்துவிட்டு வீட்டிற்குப் போகும்போது ஒவ்வொரு நாளும், 'ஸ்திரீ புத்தி பிரளயாந்தக' என்று சொல்லி விட்டுச் செல்வான். இவ்வாறு சொல்லிவிட்டுப் போகும் போது அரசனுடைய மனைவியும் அரசனேடு இருப்பாள். இவ்வாறு பல ஆண்டுகள் சொல்லிக்கொண்டிருந்தான்.

அரசன் கட்டளை

ஒருநாள் பார்ப்பான் பஞ்சாங்கம் சொல்லிவிட்டு வீட்டிற்குச் செல்லும்போது வழக்கப்படியே, "ஸ்த்ரீ புத்தி பிரளயாந்தக" என்று சொல்லிவிட்டுச் சென்றுன். இதனைக்கேட்டு அரசி வருந்திளுள். அரசனைப் பார்த்து, "இவ்வந்தணன் நாள்தோறும் இவ்வண்ணமே இயம்பிக் கொண்டு செல்கின்றனனே! இதனுடைய உண்மையை அறியவேண்டும்," என்று கூறினுள். மறுநாள் அந்தணன் வந்து பஞ்சாங்கஞ் சொல்லிவிட்டுப் புறப்படும்போது வழக்கம்போல் தான் சொல்லும், "ஸ்த்ரீ புத்தி பிரளயாந்தக" என்னும் மொழியைச் சொல்லிவிட்டுப் புறப்பட்டான். அரசன் அவ்வந்தணனைப் பார்த்து, "நீர் நாள் தோறும் இவ்வாறே இயம்பிக்கொண்டு செல்லுகிறீரே" இதனுடைய கருத்து யாது?" என்று கேட்டான். அந்தணன் அரசனைப் பார்த்து, "அரசே! பெண்களினுடைய பேச்சைக்கேட்டு அதன்படி நடந்தாலும் அவர்களை நம்பினுலும் பெருந்தொல்லையுண்டாகும் என்பதுதான் இதனுடைய கருத்து," என்றுன். அரசன் இதனைக்கேட்டு. "உண்மைதானு?" என்றுன். அந்தணன், "உண்மை

தான்" என்றான். "அப்படியானால் இவ்வுண்மையை இன்றுமுதல் எட்டு நாள்களுக்குள் எனக்கு மெய்ப்பித்துக் காட்டுதல் வேண்டும். அவ்வாறு மெய்ப்பிக்கத் தவறுவீரேயானால், உமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இனாங்களையெல்லாம் பிடுங்கிக்கொண்டு உம்மையும் நாட்டைவிட்டு ஓட்டிவிடுவேன்," என்று கூறினான். அந்தணன், "அப்படியே காட்டுகிறேன்," என்று கூறிவிட்டு வீட்டிற்குச் சென்றான்.

மனைவியிடம் ஒரு செய்தி

பிறகு ஒருநாள் பஞ்சாங்கப் பார்ப்பான் தன் மனைவியைப் பார்த்து, "அடி பெண்ணே! நான் உனக்கு மிகு இரகசியமான செய்தி ஒன்றைச் சொல்லுகிறேன். அதை வேறு எவரிடமுஞ் சொல்லாமல் உன்னளவுக்கு மட்டும் வைத்திருக்கிறாயா?" என்று கேட்டான். அதற்கு அவள், "இரகசியச் செய்தியை நான் வெளியே சொல்லுவேனா? வேறு எவரிடமுஞ் சொல்லவில்லை. அதனைச் சொல்லுங்கள்," என்று கேட்டாள். அந்தணன் அவளிடத்திலே உறுதிமொழி பெற்றுக்கொண்டு, "நம்முடைய அரசனுக்குப் பெரிய துன்பம் வரப்போகிறது. அதற்கு அறிகுறி என்னவென்றால், வருகிற வெள்ளிக்கிழமை இரவு பதினைந்து நாழிகைக்கு அரண்மனை உப்பரிகைக் கலசத்தின்மீது ஒரு வெள்ளைக் காக்கை வந்து உட்காரும்; அச்சமயத்தில் எவரேனும் விழித்திருந்து மூன்றே முக்கால் நாழிகை நேரத்துக்குள் அரண்மனையை இடித்துத் தரையோடு தரையாய்ச் சமமாக்கிவிட்டால் அரசனும் அவனுடைய குடும்பமும் பிழைக்கலாம். இல்லாவிட்டாற் பொழுது விடிவதற்குள் அரசனுடைய மாளிகை இடிந்து அரசனும் அவனுடைய மனைவியும் அவனைச்சேர்ந்த உறவினர்களும் மாண்டுபோவார்கள்," என்று சொன்னான்.

இரகசியம் பரவுதல்

இந்த உலகத்திலே மிகவும் விரைவாகப் பரவக்கூடிய செய்தி இரகசியந்தானே! பார்ப்பானுடைய மனைவி

இந்தப் புதுமையான இரகசியச் செய்தியைத், தனக்கு மிகுந்த உயிர்த்தோழியான அடுத்த வீட்டுக் கலியாணியம்மாளிடத்திலே சொல்லி "இந்த இரகசியச் செய்தியை நீ வேறு எவரிடமுங் கூருதே. கூறினல் தலைபோய் விடும்,'' என்னும் முன்னறிவிப்புங் கொடுத்தாள். அக் கலியாணியம்மாள், "ஆ எங்கேயாவது உண்டா? இரகசியத்தை நான் வெளிவிடுவேனே,'' என்று சொன்னாள். அந்த இரகசியத்தை வேறு யாரிடமேனுங் கூருதிருப்பின் கலியாணியம்மாளுடைய வயிறு வெடித்துப்போகும்போல் இருந்தது. ஆகவே அவள் அதனைத் தன் ஆருயிர் நட்பினள் ஒருத்தியிடங்கூறி, "இந்த இரகசியத்தை வெளியிலே கூருதே; கூறுவாயானல் நம் தலைபோய்விடும்,'' என்றாள். அவளுந் தனக்கு வேண்டிய மற்றொருத்தியிடம் இச் செய்தியைக்கூறி வெளிப்படுத்தாமலிருக்கும்படி வேண்டிக்கொண்டாள். இவ்வாறே அச் செய்தி பலரிடம் போய் இறுதியில் அமைச்சனுடைய மனைவிக்கு எட்டியது. அவள் உடனே செய்தியை அரசியிடஞ் சொன்னாள். அரசி அந்த இரகசியச் செய்தியை இரவில் தன் கணவனிடங் கூறி அந் நிகழ்ச்சி நிகழவேண்டிய காலம் அன்றிரவே யாகையால் செய்யவேண்டிய ஏற்பாடுகளை உடனே செய்ய வேண்டும் என்று சொன்னாள்.

அரசன் கவலை

செய்தியைக்கேட்ட அரசன் மிகுந்த கவலையடைந்தான். 'இன்னும் மூன்றே முக்கால் நாழிகை நேரந்தானே இருக்கிறது' என்று உள்ளம் வருந்தினன். உடனே படுக்கையைவிட்டுத் தன் மனைவியை அப்புறப்படுத்திவிட்டு வெளியே வந்தான்.

வெள்ளைக் காக்கை

பஞ்சாங்கப் பார்ப்பான் தான்சொன்ன இரகசியச் செய்தி அமைச்சன் மனைவி வரையில் எட்டிவிட்டதென்றும், அரசனுக்கும் விரைவாக எட்டுமென்றும் உணர்ந்து கொண்டான். வெள்ளைத் துணியினல் காக்கையுருவம்

ஒன்றைச் செய்து அதனை இரவு இருளிலேயே கொண்டு போய் அரசனுடைய உப்பரிகை மாளிகையின் கலசத்திலே வைத்துவிட்டு மேலே என்ன நடக்கிறதென்று தன்னுடைய வீட்டிலே இருந்து பார்த்துக்கொண்டிருந்தான்.

அரண்மனையை இடித்துத்தள்ளுதல்

வெளியே வந்த அரசன் செய்தி வந்ததற்கு ஏற்ப உப்பரிகைக் கலசத்திலே வெள்ளைக் காக்கை வந்து உட்கார்ந்திருக்கிறதா என்று பார்த்தான். நிலா வெளிச்சம் இருந்தபடியால் அந்தணனால் வைக்கப்பட்ட வெள்ளைத் துணிக் காக்கை வடிவம் உண்மையான வெள்ளைக் காக்கையைப்போலவே அரசனுக்குக் காணப்பட்டது. அவன் உடனே, தானேபோய் ஆயிரம் ஆட்களைக் கடப்பாரை, மண்வெட்டி, குந்தாலி, கோடாரி முதலிய பலவகை ஆயுதங்களோடு அழைத்துக்கொண்டுவந்து அரண்மனையை இடித்துத் தவிடுபொடியாக்கச் சொன்னான். அவர்கள் ஒரு நாழிகை நேரத்திற்குள் அரண்மனையை இடித்துத் தரைமட்டமாக்கிவிட்டார்கள்.

அரசனும் அமைச்சனும்

மறுநாட்காலையில் அமைச்சன் எழுந்து அரசனிடஞ் சென்றான். அரண்மனையிருந்தவிடம் தரைமட்டமாக இருத்தலைக் கண்டான். உடனே அரசனைத் தேடிக் கொண்டு சென்றான். அரசனோ ஓரிடத்தில் ஒருசிறிய குடிலை அமைத்துக்கொண்டு மனைவி மக்களோடு அதனில் தங்கியிருந்தான். அரசனைக் கண்ட அமைச்சன், "இஃதென்ன பெரிய மாறுபாடாக இருக்கிறது? இது யார் செய்த வேலை?" என்று கேட்டான். அரசன் அமைச்சனைப் பார்த்து, "ஓ அமைச்சனே! 'மந்திரிக்கழகு வரும் பொருள் உரைத்தல்' என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இவ்வாறு நேரப்போகிற செய்தியை முன்னாலேயே தெரிந்து ஆகவேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது உன்னுடைய கடமையாக இருக்க நீயோ எதையுந் தெரிந்துகொள்ளாமல், உன்னுடைய சொந்த

அலுவல்களையே பார்த்துக்கொண்டு என் அலுவல்களில் வழவழா என்று இருக்கிறாயே! இதுதகுமா? நான் விழிப் புடன் இருந்து இந்தக் காரியங்களைச் செய்யாமல் இருந் திருப்பேனாயின் அரசனேது நாடேது நகரமேது எல்லாம் இதற்குள் அழிந்துபோயிருக்காதா?" என்று சொல்லி விட்டுத் தான் கேள்விப்பட்ட செய்தியை அமைச்சனுக் குத் தெரியப்படுத்தினான்.

உண்மை உணர்தல்

பிறகு அமைச்சன் அரசனைப்பார்த்து, "அரசே இப்ப டியும் நடக்குமா? யாரோ புரளியாகக் கதைகட்டிவிட்டு இந்தப் பொல்லாத வேலையைச் செய்திருக்கிறதாகத் தெரி கிறது. தங்களுக்குச் செய்தி எவ்வாறு தெரிந்தது?" என்று கேட்டான். அரசன் தன்னுடைய மனைவி சொன் னாள் என்றான். அரசியைக்கேட்க அவள் அமைச்சன் மனைவி சொன்னாள் என்றாள். இவ்வாறே மேலும் மேலும் தொடர்ந்து உசாவிக்கொண்டுபோக இறுதியிற் செய்தி பஞ்சாங்கக்காரப் பார்ப்பானிடம் இருந்து புறப்பட்ட தென்று தெரியவந்தது. உடனே அரசனும் அமைச்சனும் பஞ்சாங்கப் பார்ப்பானைப் பிடித்து வருமாறு கட்டளை யிட்டார்கள். அந்தணன் அரசனிடத்திற்குப்போய், "ஸத்ரீ புத்தி ப்ரளயாந்தக," என்றான். அரசன் அந்தணனைப் பார்த்து, "என்ன செய்தி?" என்று கேட்டான். அந்தணன் நிகழ்ந்த செய்திகளையெல்லாம் விளக்கமாக உரைத்து விட்டுத் தான் அரண்மனைக் கலசத்தின்மேல் வைத்த துணிக் காக்கையை இடிபாடுகளுக்கிடையே தேடியெடுத் துக்கொண்டுவந்து அரசனிடம் காட்டினான். அரசன் மிகுந்த நாணம் அடைந்தான் "ஸ்த்ரீபுத்தி பிரளயாந்தக," என்று அந்தணன் கூறும் மொழிமிகு உண்மையாக இருக் கிறது என்று சொல்லி, அவனைப் பாராட்டியதுடன் தக்க வாறு நன்கொடைகளும் வழங்கிச் சிறப்புச் செய்தான்.

௭௭. ஆந்தைக்கு அஞ்சிய அறிவிலிகள்

குடியானவன்வீட்டில் ஆந்தை

ஒரு சிற்றூரில் குடியானவன் ஒருவனுடைய இல்லத்திலே ஆந்தை ஒன்று குடியேறியது. அது குடியேறிய செய்தி குடியானவனுக்குத் தெரியாது. நாட்கள் ஏழெட்டுச் சென்றன. குடியேறிய ஆந்தை வீட்டின் ஒரு மூலையில், மிக இருளாகவும் மக்கள் நடமாட்டம் அதிகமாக இல்லாமலும் இருந்த இடத்தில் வீட்டின் இறப்பிலே தங்கியிருந்தது. ஒருநாள் குடியானவன் மாட்டுக்குப் புல் அறுத்துக் கொண்டு வருவதற்கு எண்ணினன். தன்னுடைய சிறிய மகனைக் கூப்பிட்டுத் "தம்பி! வீட்டின் மூலை இறப்பிலே அரிவாள் செருகிவைத்திருக்கின்றேன். அதனை எடுத்து வா; புல்லறுத்தற்குப் போதல் வேண்டும்," என்று புகன்ருன். சிறியபையன் தந்தை கூறியவாறு அரிவாளையெடுத்தற்கு அது செருகப்பட்டிருந்த மூலைக்குச் சென்ருன்.

ஆந்தையைக் காண்டல்

அரிவாள் செருகப்பட்டிருந்த இடத்திற்குப் பக்கத்திலே ஆந்தை கண்களை உருட்டிக்கொண்டு உட்கார்ந்திருத்தலைக் கண்டான். அச் சிறுவன் அதுவரையில் எவ்விடத்திலும் ஆந்தையைப் பார்த்தவனல்லன். ஆந்தையின் கண்கள் சுழன்றுகொண்டு ஒளிவிடுதலைக் கண்டான். பேயோ பிசாசோ மூலையில் உட்கார்ந்துகொண்டு தன்னை மிரட்டுகிறதென்று எண்ணினன்.

அலறுதல்

"ஆந்தை அலறுகிறது," என்று உலகினர் உரைப்பர். இப்பொழுது ஆந்தையைக்கண்ட இளைஞன், "ஐயையோ! அப்பப்பா!! பேயோ பிசாசோ மூலையில் உட்கார்ந்து கொண்டு என்னை மிரட்டுகிறது," என்று கூவி அலறினன். உடனே வெளியே ஓடிவந்துவிட்டான்.

மூத்தவன் போதல்

தந்தை தன்னுடைய பெரிய பையனைக் கூப்பிட்டு, "இவன் பூனையையோ எதையோ இறப்பில் பார்த்துவிட்டு உளறுகிறான். நீ போய் எடுத்துக்கொண்டுவா" என்றான். மூத்தவன் மூலைக்குப்போய்ப் பார்த்துவிட்டு இளையவனைப் போலவே அலறினான்.

குடியானவன் செல்லுதல்

மூத்தவனும் அஞ்சி அலறியதைக் கண்ட குடியானவன், "நீங்கள் எல்லீரும் சட்டிசட்டியாகச் சோறு கொட்டிக்கொண்டு வெட்டியாகத் திரிதற்குத்தான் கெட்டிக்காரர்களே யல்லாமல் வேறெதற்கும் பயன் உடையவர்கள் அல்லர். இதோ நான்போய் எடுத்துக் கொண்டு வருகிறேன் பாருங்கள்," என்று சொல்லிக் கொண்டு எழுந்து அரிவாள் செருகப்பட்டிருந்த மூலைக்குச் சென்றான். அவனுடைய பிள்ளைகளாவது மெதுவாக ஓடிவந்தனர். குடியானவனோ ஊரே அதிருமாறு பெருங் கூச்சலிட்டுக்கொண்டு, "செத்தேன் செத்தேன்" என்று ஒரே தாவில் வெளியே ஓடிவந்து அண்டை அயல்வீட்டுக் காரர்களையெல்லாம் கூப்பிட்டு அவர்களோடு, "பேயோ பிசாசோ வீட்டுமூலையில் இருந்துகொண்டு என்னை விழுங்கி விடுவதாக அச்சுறுத்துகிறது. நல்லகாலமாக நான் உயிர்தப்பி வெளியிலே ஓடிவந்துவிட்டேன். இன் றேல் இந்நேரம் இறந்து மடிந்து இறைவனடி சேர்ந்திருப் பேன். நான் உயிர் பிழைத்துவந்தது என்னுடைய முன் னோர்கள் செய்த நல்வினைப்பயன்தான்," என்றான்.

ஊரார்கள்

ஊரார்கள் உள்ளே எட்டிப்பார்த்தற்கே அஞ்சியவர்களாய் ஊர்காவல் அதிகாரிகளிடம் தெரிவித்தனர். ஊர் காவலரும் பலர் வந்து சேர்ந்தனர். ஊரார்களோ ஊர் காவலர்களோ உள்ளே போய்ப் பார்த்தற்குச் சிறிதுந் துணிந்திலர். ஒவ்வொருவரும் மற்றவர்களைப் பார்த்து, "நீ முன்னே போ, நீ முன்னே போ" என்று மற்றவர்களை

முன்னாற்போகச் சொன்னார்களே யல்லாமல் எவருந் தாந் துணிந்து உள்ளே போய்ப் பார்த்தற்கு முன்வரவில்லை.

ஒரு வீரன்

இறுதியில் ஒருவன், "நான் போய்ப் பார்த்து வரு கிறேன்," என்று கூறிவிட்டு அடிமேல் அடிவைத்து மெதுவாக நுழைந்து எட்டிப்பார்த்தான். பிறகு வெளியே வந்து, "அது பூதமும் அன்று பேயும் அன்று. ஆயினும் அதனை வீட்டுக்குள்ளே வைத்திருத்தல் கூடாது," என்று சொன்னான்.

போர்வீரன்

அவ்வூரிலே போர்வீரன் ஒருவன் இருந்தான். அவன் அரசர்களுடைய போர்ப்படையிலே சேர்ந்து பல போர் முனைகளிலே போர் செய்து புகழ்பெற்றவன். அப்போர் வீரனை அழைத்துவந்து இறப்பில் உள்ள பிராணியைக் கொன்றுவிடச் செய்யலாம் என்று சிலபேர் தங்களுடைய உள்ளக்கருத்தை வெளியிட்டார்கள். சிலர் விரைவாகச் சென்று அந்தப் போர்வீரனை அழைத்துக்கொண்டுவந் தார்கள். அப்போர்வீரன் தான் போரிலே பயன்படுத் தும் ஈட்டி, குத்துவாள், கத்தி முதலியவைகளை எடுத்துக் கொண்டுவந்தான்.

போர்வீரன் புரண்டு விழுதல்

ஊர்மக்கள் அனைவரும் போர்வீரனைப் பார்த்து, "இந்த வீட்டிற்குள் பேயோ பூதமோ அல்லது வேறெதுவோ புகுந்து இறப்பிலே உட்கார்ந்துகொண் டிருக்கிறது. அதனை அப்படியே விட்டுவிட்டால் ஊரையே அழித்துவிடும்; நீ அருள்கூர்ந்து அதனை உன்னுடைய பேராண்மையினாலே கொன்று தொலைத்துவிடவேண்டும். எங்கட்கு இப்பொழுது உன்னைவிட்டால் வேறு கதியில்லை. நீ இப்பொழுது எங்களை இப்பெரிய தொல்லையில் இருந்து காப்பாற்றவேண்டும். உன்னுடைய நிகரிலாப் பேராற்றலை வெளிப்படுத்துவதற்குக் கிடைத்துள்ள இந்த அருமை

யான சமயத்தை நழுவுமாறு விட்டுவிடாதே. உனக்கு எல்லோரும் பெருந்தொகை சேர்த்து நன்கொடையும் வழங்குகிறோம்,'' என்று சொல்லிப் பலவாறு வேண்டிக் கொண்டார்கள்.

போர்வீரன் ஊரார்களுடைய வேண்டுகோளுக்கு அரைமனதாக உடன்பட்டான். போர்க்களத்திற்குப் போனால் எவ்வாறு போர்க்கோலங்கொண்டு செல்வானோ அவ்வாறு போர்க்கோலங்கொண்டு கையிலே நீண்ட ஈட்டி ஒன்றை எடுத்துக்கொண்டு பதுங்கிப் பதுங்கி ஒருவாறு விட்டிற்குள் நுழைந்தான். வெகு தொலைவில் நின்று கொண்டு ஆந்தையைப் பார்த்தான. அது மேலுங் கீழு மாகக் கண்களைப் புரட்டிக்கொண்டே போர்வீரனை நோக்கிற்று. போர்வீரனுக்கோ உடல் முழுவதுங் கிடுகிடென்று நடுங்கத் தொடங்கியது. திரும்பி வெளியே ஓடிவிடலாமா என்று முன் வைத்த கால்களைப் பின்னே வைத்தான். அவனுடைய நோக்கத்தைக் கண்ட ஊரார்கள், "அப்பா! பெரிய மனதுவைத்து இன்னும் இரண்டோரடி முன்னால் வைத்து ஈட்டியால் ஆந்தையைக் குத்திவிடு. நாங்கள் எல்லோரும் உனக்குத் துணையாக இருக்கும்போது நீ சிறிதும் அஞ்சாதே!'' என்று சொல்லி அவனுக்கு ஊக்க மளித்தார்கள். வீரன் மேலுஞ் சில அடிகள் முன்னே சென்று குத்தினான் ஆந்தையைப் பார்த்து. கைந் நடுங்கிக்கொண்டிருந்தபடியால் குத்து ஆந்தைமேல் விழவில்லை. பக்கத்தில் விழுந்தது.

அவ்வளவில் ஆந்தை, "குகூஉ குகூஉ குகூஉ கூ கூ கூகூ'' என்று அலறிச் சிறகை அடித்துக்கொண்டது. அவ்வளவில் போர்வீரன் "தடால்'' என்று கீழே விழுந்து மூர்ச்சையடைந்துவிட்டான். சிலர் விரைவாக உள்ளே ஓடிப்போய் அவனை வெளியே இழுத்துக்கொண்டுவந்து விட்டார்கள்.

வீட்டைக் கொளுத்துதல்

வீரனுக்குப் பலவகையான மருத்துவஞ் செய்தும் அவன் வெகுநேரம் வரையிலும் கண்ணைத்திறந்து பார்க்

கவேயில்லை. பிறகு ஊரார்கள் அனைவரும் வீட்டுக்காரனோடு கலந்து பேசினார்கள். "வீட்டுவாசலை அடைத்துவிட்டு நெருப்பை வைத்துவிடுவோம். அந்தப் பிராணி இறந்து போய்விடும். வீடுபோனால் போகிறது. நாங்கள் எல்லோரும் பங்குசேர்த்து உனக்குப் புது வீட்டைக் கட்டித்தருவதோடு புதிய சாமான்களையும் வாங்கித் தந்துவிடுகிறோம்," என்றார்கள். வீட்டுக்காரன் அதற்கு உடன்பட்டான். உடனே வீட்டு வாசலை அடைத்து நெருப்பை வைத்தார்கள். வீடு பற்றிக்கொண்டு எரியத் தொடங்கியது. நெருப்பைக் கண்டதும் ஆந்தை வெளிச்சத்திற்கு வைக்கப்பட்டிருந்த ஒருபெரும் ஓட்டை வழியாக வெளியே பறந்து ஓடியது.

ஆந்தை

ஆந்தை பறந்து செல்வதைக் கண்ட ஊரார்கள் எண்பது ஆண்டுக்கிழவன் ஒருவனை அழைத்து, "அதோ பறந்து செல்லுகிறதே அதனுடைய பெயர் யாது?" என்று கேட்டார்கள். அதற்கு அக்கிழவன், "அதனுடைய பெயர் ஆந்தை. அதற்குப் பகலில்கூடக் கண் தெரியாது. காக்கைக்கும் அதற்கும் பிறவிப்பகை. பகலில் வெளியே புறப்பட்டால் காக்கை குத்திக்கொன்றுவிடும் என்று பகலில் வெளியே புறப்படமாட்டாது" என்று சொன்னான். இதனைக் கேட்டவர்கள் எல்லோரும் தங்கள் மடமையை எண்ணிப் பெரிதும் நாணினார்கள். வீடு எரிந்துபோய்விட்டது. வீட்டுக்காரனுக்குப் புது வீடு கட்டிக்கொடுத்ததுடன் புதிய சாமான்களும் வாங்கிக் கொடுத்தார்கள். 'ஆந்தையின் அருளால் நமக்குப் புது வீடும் புதுச்சாமான்களும் கிடைத்தன' என்று மிகுந்த களிப்படைந்தான் வீட்டுக்காரன். இத்தகைய அறிவிலிகளும் உலகத்தில் எங்காவது ஓரிடத்தில் இருப்பது புதுமையன்றோ?

எஅ. கணவனுக்கேற்ற மனைவி

சுபேதார்

ஓர் ஊரிலே ஒரு சுபேதார் இருந்தான். அவன் அரசனிடத்திலே வேலை பார்த்து ஓய்வு பெற்றவன். அவன் அலுவல் பார்த்தகாலத்தில் அவனுக்கு ஓர் அராபிக்குதிரையை அரசன் அளித்திருந்தான். அஃது எல்லா இலக்கணங்களும் நன்கு அமையப்பெற்றதாய்ச் சிறப்புடன் விளங்கியது. அரசனிடத்தில் உதவித்தொகை பெற்றுக்கொண்டு வீட்டில் இருந்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும்போது அக்குதிரையையும் காப்பாற்றுவது அவனுக்கு இயலாததாக இருந்தது. அகவை முதிர்ந்த சுபேதார் அந்த அழகிய நல்ல குதிரையை விற்று விடலாமா என்று தன்னுடைய மனைவியிடம் கேட்டான். அவள் அவ்வாறே விற்றுவிடலாம் என்று தன்னுடைய உடன்பாட்டை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்தினள். சுபேதாருடைய மனைவி எத்தகையவளெனின் மிகுந்த நற்குணங்களும் நல்லொழுக்கங்களும் அமையப்பெற்றவள். கணவனுடைய விருப்பத்திற்குச் சிறிதும் மாறுபாடாக நடக்கமாட்டாள்.

குதிரையைப் பசுவுக்கு மாற்றுதல்

கிழவனுகிய சுபேதார் குதிரையை விற்பதற்காக ஒரு நாள் சந்தைக்கு ஓட்டிக்கொண்டு சென்றான். செல்லும் வழியில் ஓர் இடைச்சி ஓர் அழகிய பசுவையுங் கன்றையும் ஓட்டிக்கொண்டு செல்லுதலைக் கண்டான். அவைகளைக் கண்டவுடனே கிழவன், 'ஆ! ஆ!! இந்தப் பசுவுங் கன்றும் எவ்வளவு அழகாக இருக்கின்றன? இவைகளை ஓட்டிக் கொண்டு போனால் என்னுடைய மனைவி மிகுந்த மகிழ்ச்சியடைவாள்' என்று எண்ணினன். அவ்விடைச்சியைப் பார்த்து, "ஓ இடைச்சி! இப்பசு எப்பொழுது கன்று போட்டது? எவ்வளவு பால் கொடுக்கிறது?" என்று கேட்டான். அதற்கு அவள் "கன்றுபோட்டு இன்னும் இரண்டு திங்கள் நிரம்பவில்லை. வேளைக்கு இரண்டுபடி

பால் கொடுக்கிறது,'' என்று மறுமொழி கூறினாள். கிழச் சுபேதார், "நான் ஓட்டிக்கொண்டு போகும் இவ்வழகிய குதிரை நூறுவராகன் விலையுள்ளது. நான் இதனை விற்றுவிடுவதென்று முடிவுசெய்து ஓட்டிக்கொண்டு போகிறேன். இக்குதிரையை ஓட்டிக்கொண்டு உன்னுடைய பசுவை எனக்குக் கொடுக்கிறாயா?'' என்று கேட்டான்.

கிழச் சுபேதார் கபடமற்ற வெள்ளை மனத்தினையுடையவன் என்று அவள் தெரிந்துகொண்டாள். சுபேதாரைப் பார்த்து, 'ஐயா! நான் பெரிய குடும்பம் உள்ளவள். எங்கட்கு இந்தக் கறவைப்பசு இன்றியமையாததாக இருத்தல் பற்றியே வாங்கிக்கொண்டு செல்கின்றேன். ஆயினும் பெரியவராகிய உமது மொழியைத் தள்ளுவதற்கு மனம் வரவில்லை. ஆகவே இப்பசுவையுங் கன்றையும் உமக்குக் கொடுத்துவிடுகிறேன்' என்று கூறிப் பசுவையுங் கன்றையுங் கொடுத்துவிட்டுக் குதிரையைத் தான் ஓட்டிக்கொண்டுபோனாள். கிழச் சுபேதார் மிகுந்த மகிழ்ச்சியை அடைந்தான். "இன்றைக்கு நமக்கு நல்லநாள். நாம் நரிமுகத்தில் விழித்திருக்கவேண்டும். இந்தப் பசு கண்டதும் நம்முடைய மனைவி அளவற்ற களிப்படைவாள். அவாத் திருமாறு பாலுந்தயிருமாகக் குடிக்கலாம்' என்று எண்ணமிட்டுக்கொண்டே பசுவையுங் கன்றையும் ஓட்டிக்கொண்டு சென்றான்.

பசுவை ஆட்டுக்கு மாற்றுதல்

சுபேதார் வீட்டைநோக்கிச் சென்றுகொண்டிருக்கும் வழியில் ஓர் இடையன் அழகிய கஞ்சியாடு ஒன்றை ஓட்டிக்கொண்டு வந்துகொண்டிருந்தான். அவ்வாட்டைக்கண்ட சுபேதார், 'ஆ! ஆ!! இந்த வெள்ளாடு எவ்வளவு அழகாக இருக்கின்றது? பசுமாட்டுக்கென்றால் புல்லுக்காகவும் கொள்ளு, கடலை, பிண்ணாக்கு, பருத்திக்கொட்டை முதலியவற்றிற்காகவும் பணஞ் செலவழிக்கவேண்டும். பசுவைக் காப்பாற்றுவது குதிரையைக் காப்பாற்றுவதைப்போலவே தொல்லையானது. வெள்ளாட்டுக்குப் பணஞ் செலவழிக்க

வேண்டிய கட்டாயமே இல்லை. அவிழ்த்து விரட்டி விட்டால் வயிறார மேய்ந்துவிட்டு மாலையில் வீடுதேடி வந்துவிடும். அது கொடுக்கும்பால் எங்கள் இருவருக்கும் கொள்ளையோ கொள்ளை என்று போதுமானதாக இருக்கும்' என்று எண்ணினான். இடையனைப்பார்த்து, "நான் இந்தப் பசுவையும் கன்றையும் காப்பாற்றுவதற்கு ஆற்றலற்றவனாக இருக்கிறேன். நீ இந்தப் பசுவையுங் கன்றையும் பெற்றுக்கொண்டு இந்த வெள்ளாட்டை எனக்குக் கொடுப்பாயா?" என்று கேட்டான். சுபேதார் ஒரு பைத்தியக்காரன் என்பதை எளிதாக உணர்ந்து கொண்ட இடையன் எளிதாக உடன்படாமல் நடித்துக் கடைசியில் ஆட்டைக் கொடுத்துவிட்டுப் பசுவை ஓட்டிக் கொண்டு போய்விட்டான்.

ஆட்டைக் கோழிக்கு மாற்றுதல்

கிழச் சுபேதாருக்கு அளவற்ற மகிழ்ச்சியுண்டாகி விட்டது. 'இந்த வெள்ளாட்டை நம்வீட்டுக் கொட்டகை யில் கட்டி நன்றாகக் காப்பாற்றுதல் வேண்டும். இவ்வாடு ஆறு திங்களுக்கு ஒருமுறை குட்டிபோடும். அக் குட்டிகள் இரண்டாண்டுக்குப்பின் குட்டிகள்போடும். நாளடைவில் நம்மிடத்திலே ஆடுகள் மிகுதியாகப் பெருகி மந்தையாகி விடும். நாம் ஆடுகளை விற்றால் மிகுந்த பொருள் பெற லாம்' என்று பலவாறு திட்டமிட்டுக்கொண்டே ஆட்டை ஓட்டிக்கொண்டு சென்றான். செல்லும்போது வழியிலே ஒரு குடியானவன் அழகிய பெட்டைக்கோழி யொன்றைத் தூக்கிக்கொண்டு வந்தான். கிழச் சுபேதார் அக் குடியான வனைப் பார்த்து, "அன்பனே! இப்பெட்டைக்கோழி நாள் ஒன்றுக்கு எத்தனை முட்டையிடும்?" என்று கேட்டான். பத்து முட்டைகட்குக் குறையாமல் இடுமென்று குடியா னவன் மறுமொழி கூறினான். குடியானவன் கூறிய மொழி உண்மையென்று நம்பிய கிழச் சுபேதார் ஆட்டைக் கொடுத்துவிட்டுக் கோழியை வாங்கிக்கொண்டு சென் றான். அவனுடைய உள்ளம் தனக்கு மேன்மேலும் நன்மை யுண்டாகிறதென்று மகிழ்ச்சியடைந்துகொண்டிருந்தது.

கோழியை விளாங்கனிக்கு மாற்றுதல்

அப்பொழுது ஒருவன் ஒரு கூடையில் விளாம்பழங்களோடு எதிரே வந்தான். அம்மனிதனைச் சுபேதார் பார்த்துக் "கூடையில் யாதிருக்கிறது?" என்று உசாவினான். "விளாம்பழம் உள்ளது" என்று மறுமொழி கூறினான் அவன். பழத்தின் மணம் நன்றாக இருந்ததோடு கிழச் சுபேதாரின் மூக்கிலும் ஏறிற்று. அவனோடு உரையாடிக் கோழியைக் கொடுத்துவிட்டு விளாம்பழக் கூடையைத்தான் பெற்றுக்கொண்டு வீட்டைநோக்கிச் சென்றான்.

பந்தயம் போடுதல்

கிழவன் வீட்டைநோக்கிச் சென்றுகொண்டிருக்கும் போது பெருமழை வரத் தொடங்கியது. கண்கள் கூசுமாறு மின்னல்கள் உண்டாயின. இடி பலமாக இடித்தது. யாண்டும் பேரிருள் பரவி மழை பெய்தது. மழையில் நனையாமல் இருப்பதற்காகக் கிழவன் அண்மையில் இருந்த உணவுக்கடையொன்றுக்குள் நுழைந்தனன். அங்கு வழிப் போக்கர்கள் பலர் மழைக்காக வந்து தங்கியிருந்தனர். அவ்வாறு தங்கியிருந்தவர்களுள் வணிகன் ஒருவனும் இருந்தான். கிழச் சுபேதார் கொண்டு சென்ற விளாங்கனியின் நறுமணம் அவ்வணிகனுடைய மூக்கைத் தொளைத்தது. அவன் கிழச் சுபேதாரைப் பார்த்துப், "பாட்டனாரே! நறுமணம் மிக்க இவ்விளாங்கனிகளை எவ்வளவு விலைகொடுத்து யாண்டுப்பெற்றீர்கள்?" என்று உசாவினான். கிழவன் தான் குதிரை விற்பதற்குப் புறப்பட்டதுமுதல் கோழியை விளாங்கனியின் பொருட்டு மாற்றியது வரை நிகழ்ந்த எல்லாச் செய்திகளையும் விளக்கமாகக் கூறினான். அங்கிருந்தவர் எல்லாருங் கிழவன் கூறிய செய்தியைக்கேட்டு வயிறு கிழியுமாறு நகைத்தார்கள். அவனுடைய அறிவின்மைக்காக எள்ளி நகையாடி இழிசொற் கூறினார்கள்.

பிறகு வணிகன் கிழவனைப் பார்த்துத், "தாதா! இன்று உங்கள் இல்லத்திலே உங்களுடைய இல்லக்

கிழத்தியாரால் உங்கட்குத் தகுந்த நன்கொடை கிடைக்கப் போகிறது. நீங்கள் செய்துள்ள வேலை அவ்வாறிருக்கிறது. நீங்கள் அந் நன்கொடையைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னேற்பாடாக இருங்கள்,'' என்று நகைத்துக் கொண்டே கூறினன்.

வணிகனுடைய சொற்களைக்கேட்ட கிழச் சுபேதார் வணிகனைப்பார்த்து, "என்னுடைய இல்லக்கிழத்தியானவள் அத்துணைப் பைத்தியக்காரி அல்லள். நான்செய்த செயலுக்குக் களிப்புற்று என்னைத் தழுவி முத்தமிடுவள்,'' என்று கூறினன். வணிகன், "ஓ! ஓ!! அப்படியா செய்தி! கயிற்றினலே கட்டி முறத்தினலே நன்கு புடைக்காமலிருப்பின் அதுவே பெரும் பேறன்றோ!'' என்றான். இதனைக் கேட்ட கிழவன், "அவள் அவ்வாறு என்னை அடித்தால் நான் இந்தப் பழங்கள் எல்லாவற்றையும் உனக்கே கொடுத்துவிடுகிறேன்,'' என்று பந்தயம்போட்டான். வணிகனோ, "கிழவியானவள் உன் செயலைப் புகழ்ந்து மகிழ்ந்து கொண்டால் நான் உனக்கு முந்நூறு கெட்டி வராகன்கள் கொடுக்கிறேன்,'' என்று கூறித் தானும் பந்தயம் போட்டான்.

வீட்டிற்குச் செல்லுதல்

பிறகு கிழவனும் வணிகனும் கிழவனுடைய வீட்டிற்குப் புறப்பட்டார்கள். அங்கிருந்தவர்கள் எல்லோரும் இப் புதுமையைப் பார்க்கவேண்டும் என்று கிழவனைப் பின் தொடர்ந்து சென்றார்கள். கிழச் சுபேதாரின் மனைவி வாயிலுக்கு வந்து தன்னுடைய கணவனை வரவேற்றாள். "குதிரையை விற்றீர்களா?'' என்று உசாவினாள். கிழவன், "குதிரையைக் கொடுத்து வேளைக்கு இரண்டுபடி பால் கொடுக்கத்தக்க பசுமாடு ஒன்றை மாற்றினேன்,'' என்றான். இதனைக்கேட்ட கிழவி, "நல்லவேலை செய்தீர்கள்! இனிமேல் பாலுக்குந் தயிருக்கும் நமக்கு எத்தகைய குறைவும் இல்லை. நாள்தோறுஞ் சாணியின் பொருட்டுப் பக்கத்து வீடுகளுக்கெல்லாம் அலையவேண்டிய தொல்லையும் இல்லை. அந்தப் பசு எங்கே?'' என்று கேட்டாள்.

"அப்பசுமாட்டைக் கொடுத்துவிட்டு ஒருபடி பால் கறக்கத் தக்க வெள்ளாடு ஒன்றினை மாற்றினேன்," என்று கிழவன் மறுமொழி கூறினான். இம்மொழிகளைக் கேட்டதும் அக் கிழவி, "மிக நன்று! நன்று!! நல்லவேளை, இதுவரையில் அக்குதிரைக்குப் பணி செய்ததுபோல் பசுமாட்டிற்கும் பணிசெய்து நான் துன்பப்படாமல் மாட்டைக் கொடுத்து ஆட்டைப்பெற்றீர்கள். மாட்டிற்குப் பருத்திக்கொட்டை பிண்ணாக்கு முதலியவைகளை அரைத்தலும், கழுவுநீர் களைந்து வைத்தலும், புல்லறுத்துப் போடுதலும் கழுவிக் குளிப்பாட்டுதலும் மேய்த்துக் கட்டுதலும் மிகத் தொல்லையான காரியம் அல்லவோ? ஆட்டிற்கு இத்தகைய பணிகளெல்லாம் செய்யவேண்டியதில்லையே; எங்கே அந்த ஆடு?" என்று கேட்டாள். கிழவன், "ஆட்டைக் கொடுத்துவிட்டுப் பெட்டைக் கோழி ஒன்றை மாற்றினேன்," என்றான். இதனைக்கேட்டதும் கிழவி, "மிக நல்லதாகப்போயிற்று. ஆட்டுப்பிழுக்கை முதலியவைகளைக் கூட்டியள்ளும் வேலை இல்லாமற் செய்துவிட்டீர்கள். எங்கே அந்தப் பெட்டைக்கோழி?" என்று கேட்டாள். கிழவன், "பெட்டைக்கோழியைக் கொடுத்துவிட்டுத்தான் நறுமணம் உள்ள இந்த விளாம் பழங்களை வாங்கிக்கொண்டு வந்திருக்கிறேன்," என்றான். இதனைக் கேட்கவே கிழவி, தன் கணவனைத் தழுவிக் கொண்டாள். "உங்களைப்போல் அறிவாளிகளை உலகத் திலே பார்க்க முடியுமோ? கோழியினாலுந் தொல்லையேற் படும். கிழவியாக உளள நம் இல்லாளுக்கு வேலை வைக்கக் கூடாது என்றல்லவோ இவ்வாறு முடிவில் விளாம்பழங்க ளாகக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறீர்கள். நேற்றுப் பக்கத்து வீட்டுக்காரியிடம் ஒரு விளாம்பழங் கொடு என்று கேட்டேன். அவள் வீட்டுத் தோட்டத்து மரத்திலே பழங்கள் இருந்தும், முகத்தில் அடித்ததுபோல் இல்லை யென்று கூறிவிட்டாள். இப்பொழுது நான் இந்தப் பழங்களில் சிலவற்றைக் கொண்டுபோய் அவளுடைய கண்களிலே காட்டி இடித்துரைத்து வருகிறேன்," என்று சொல்லிப் புறப்பட்டாள்.

வணிகன் தோல்வி

அங்குவந்து கூடிநின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த மக்கள் எல்லோரும் கிழவியின் உரைகளையெல்லாங் கேட்டு, "ஆ! ஆ!! இப்படியுங் கணவனுக்கேற்ற மனைவி உலகத்திலே இருக்கிறாளா?" என்று மிகுந்த வியப்படைந்தார்கள். வணிகனைப் பார்த்து, "நீ பந்தயம் போட்டபடி முந்நூறு வராகன்களையும் கிழவனாருக்குக் கொடுக்கவேண்டியதுதான்," என்று கூறினார்கள். அவர்கள் பேசியதைப் பார்த்தால் வணிகன் பந்தயப் பொருளைக் கொடாவிட்டால் விடமாட்டார்கள்போல் தெரிந்தது. வணிகனுடைய முகமோ தீக்கடவுளுக்குத் திருமுழுக்குச் செய்ததைப்போல் ஆகிவிட்டது. அவன் 'இனிமேல் நம்முடைய வாணாளில் பந்தயமே போடக்கூடாது' என்று உள்ளத்தில் உறுதிசெய்துகொண்டவனாய் முந்நூறு வராகன்களையும் எடுத்துக் கொடுத்துவிட்டுத் தன் வழியே சென்றான். கிழவனும் கிழவியும் எதிர்பாராதவாறு பொருள் கிடைக்கவே மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்கள். வெள்ளை மனம் உடையவர்கட்கு எத்தகைய கேடும் நேராதென்பதற்கு இவர்களுடைய செய்தியே தகுந்த எடுத்துக்காட்டாக அமைந்தது.

எக. குருவின் மனைவியும் சீடன் மனைவியும்

குரு

ஓர் ஊரிலே எல்லா நூல்களையும் நன்கு கற்றுணர்ந்தவனாகிய அந்தணன் ஒருவன் இருந்தான். அவனுடைய மனைவி மிகுந்த பட்டித்தனம் உடையவள். கணவனை எப்பொழுதும் தொல்லைப்படுத்திக்கொண்டேயிருந்தாள். அத்தொல்லை சாப்பாட்டு வேளையில் மிகக் கடுமையாக இருக்கும். அவளுடைய வாயிலே கேட்காத வசைமொழிகளை உலகத்தில் வேறெங்குங் கேட்க இயலாது. அவளுடைய வாயிலிருந்து புறப்படும் வசைமொழிகட்கெல்லாம்

உரியவன் அவளுடைய கணவனாகிய அந்தணனே. மனைவி வசைபாடும்போதெல்லாம் அந்தணன் தலை குனிந்திருப்பான்.

மாணவன்

அறிஞனாகிய அவ்வந்தணனிடத்திலே மாணவன் ஒருவன் கல்வி பயின்றுகொண்டிருந்தான். ஆசிரியனை அவனுடைய மனைவி பாட்டுகளால் சாடிக்கொண்டிருக்கும் போது அம்மாணவன் நகைத்துக்கொண்டிருப்பான். அப்போது ஆசிரியன் தன்னுடைய மாணவனைப் பார்த்துப், "பையா! உனக்கு இவளைப் பார்க்கினும் பெரிய வல்லடித் தட்டுவாணி வாழ்க்கைத் துணைவியாக அமைந்தால் ஒழிய இந் நகைப்பு அடங்காது," என்று சொல்லிக்கொண்டிருப்பான். அப்போது மாணவன், "இந்த அம்மாளைப்போல் இன்னும் ஒரு பெண் இங்கில உலகிலே பிறக்கப்போவ தில்லை. அவ்வாறு பிறந்தால் உலகம் அழிவது உறுதி." என்று உரைப்பான்.

மாணவனுக்கு மணம்

மாணவன் தன்னுடைய ஆசிரியனிடத்திலே கற்க வேண்டியவைகளையெல்லாம் கற்று முடித்துக்கொண்டு குருவின் உடன்பாட்டைப் பெற்றுக்கொண்டு தன்னுடைய ஊருக்குப் போய்ச்சேர்ந்தான். நன்னாளொன்றிலே அவனுக்குந் திருமணம் நடந்தேறியது.

அரண்மனைப் புலவன்

மாணவனுடைய மனைவி தன் கணவனோடு குடித்தனம் நடத்துவதற்கு வந்து சேர்ந்தாள். மாணவன் தன்னுடைய மனைவியோடு ஒரு பட்டணத்திற்குப்போய் அரசனுடைய அரண்மனையிலே அரண்மனைப் புலவனாக அமர்ந்து பேரும் புகழும் பெற்றுச் சீருஞ்சிறப்புமாக வாழ்ந்திருந்தான். மாணவனுடைய புகழ் எங்கும் பரவியது. மாணவனுடைய மாட்சிமையைப் பற்றிக் கேள்விப் பட்ட குரு மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். ஒருநாள் மாணவனைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டு வந்தார்.

மாணவன் மனைவி

மாணவனுடைய மனைவி குருவினுடைய மனைவியை விடப் பத்துப் பங்கு உயர்ந்தவள் பட்டித்தனஞ்செய்வதில். குருவின் வருகையை மாணவன் உணர்ந்தான். 'நாம் அந்நாளிலே குருவின் மனைவியது பட்டித்தனத்தைப் பார்த்துப் பல்லைக்காட்டிக்கொண்டிருந்தோம். இப்போது குரு வந்து நம்முடைய மனைவியின் நிலைமையைத் தெரிந்து கொண்டால் பழிப்பாரே! இதற்கு யாது செய்வது?' என்று எண்ணமிட்டான்.

வேண்டுகோள்

பிறகு மாணவன் தன்னுடைய மனைவியைத் தனிமையிற்கண்டு, "தேவி! எவ்வாறேனும் இன்றைக்கு ஒரு நாள் மட்டும் அடியேனுடைய மானத்தைக் காப்பாற்றி மூக்கை முன்னுக்கு நிறுத்தியருளுதல் வேண்டும். நாளைக்கு உன்னுடைய மனம்போல் வட்டியும் முதலுமாகத் தந்து கணக்கைச் சரிசெய்துகொள்ளலாம். இன்றைக்கு ஒருநாள் மட்டும் நான் எவ்வளவு திட்டியபோதினும் பொறுமையுடன் கேட்டுக்கொண்டு உடன்பாடாக இருந்தருளுதல் வேண்டும்," என்று சொல்லி அவளுடைய கால்களைப் பிடித்துக்கொண்டு பலவாறு கெஞ்சி மன்றாடினான்.

துணைவி தந்த வரம்

பத்திரகாளியம்மாள் சிறிது மனம் இரங்கினாள். "உன்னுடைய குருவானால் என்ன? அவனுடைய அப்பன் ஆனால் என்ன? அல்லது அவனுடைய பாட்டன் ஆனால் என்ன? எனக்கேன் அந்த மாராட்டமும் வல்லடியும்? உன்னுடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டிய கட்டாயம் எனக்கொன்றும் இல்லை. ஆயினும் நீ இவ்வளவு தொலை கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறபடியினால் உன்மீது அருள்கூர்ந்து ஒரு வரங்கொடுக்கிறேன். கருத்துடன் கேள். இன்றெல்லாம் உன்னுடைய வாயிலிருந்து வெளிப்படும் பிதற்று மொழிகளையெல்லாங் கணக்கிட்டுக் கொள்வேன். நூறே நூறு மொழிகள்

மட்டும் பேசலாம். அதற்கு மேலே ஒருமொழியும் பேசுதல் ஆகாது. இதனை மீறி நீ நூற்றிற்குமேல் ஒரு மொழியேனும் பேசுவாயானால் யான் வட்டியும் முதலுமாகச் சேர்த்து அப்பொழுதே தீர்த்துவிடுவேன். ஆகவே விழிப்போடும் அறிவோடும் நடந்துகொள்," என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

கணவன் அதிகாரம்

"எவ்வளவு வைதாலும் இன்றொரு பொழுதுக்குள் நூறுக்குக் கணக்கேறமாட்டாது. இனிமேல் அச்சம் ஒன்றும் இல்லை. பீடைவிட்டது; சனி அகன்றது; தொல்லை தொலைந்தது; பொழுதுபோனதும் நம்முடைய ஆசிரியன் புறப்பட்டுவிடுவான்" என்று தனக்குத்தானே எண்ணி மனதை அமைதிப்படுத்திக்கொண்டான். குருவை வீட்டிற்குள்ளே அழைத்துக்கொண்டு சென்றான். தன் மனைவிமேல் தனக்குள்ள அதிகாரங்களையெல்லாங் காட்டத் தொடங்கினான். "என்னடி கழுதை! இன்னும் சாத்திரிகளுக்குத் திருவடி கழுவ—அவிசற்பொணமே! தண்ணீர் கொண்டுவந்து கொடுக்க வில்லையா? பேய்ப் பிசாசுப் பிணமே! உனக்கு அறிவு சிறிதும் இல்லையா?" என்று சொல்லி இல்லாத காறுபாறெல்லாம் செய்தான். மனைவியோ கணவன் பேசிய எல்லாவற்றையும் ஒன்று விடாமல் எண்ணிக்கொண்டு வந்தாள். கணவன் இன்று ஒருநாளைக்குள் நூறு ஆகமாட்டா என்றும் அப்படி ஆகி விட்டாலும் அவள் எண்ணிக்கொண்டிருக்கமாட்டாளென்றும் எண்ணினாலும் அன்றைக்கு ஒருநாள்மட்டும் தன்னை எதிர்த்துப் பேசமாட்டாள் என்றும் மனப்பால் குடித்துக் கொண்டு மீண்டும், "காமாட்டி! இன்னுஞ் சமையல் ஆக வில்லையோடி, முண்டே! இன்னும் அடுப்பு மூட்டவில்லையாடி? அடியே லவண்டி! தண்ணீர் இன்னுந் தூக்க வில்லையாடி," என்று பலவாறு வைது தன்னுடைய அதிகாரங்களையெல்லாம் காட்டினான். குருவோ! தன்னுடைய சீடனுக்கு மணியான மனைவி வாய்த்திருக்கிறாள் என்று உள்ளுக்குள்ளே களிப்படைந்து கொண்டிருந்தான்.

குழம்புத் துளி

பிறகு குருவுஞ் சீடனும் சாப்பிடுவதற்கு உட்கார்ந்தார்கள். சோற்றில் குழம்பு விடுதற்கு வந்த வேளையில் கொடுத்த வரத்திற்குச் சரியாக நூறு திட்டுகளும் நிறைந்துவிட்டன. இக்கணக்கு மனைவிக்குத்தான் தெரியுமே தவிர கணவனுக்குச் சிறிதுந் தெரியாது. நூறு என்றால் என்னவோ மிகப்பெரிய எண் என்று அவன் எண்ணிக் களிப்படைந்துகொண்டிருந்தான். குழம்பைக் கொண்டுவந்த கற்சட்டி மிகுந்த சூடாக இருந்தது. குழம்போ தளபுளவென்று கொதித்துக்கொண்டிருந்தது. இடது கையில் இருந்த சட்டியில் இருந்து வலது கையில் இருந்த கரண்டியினால் குழம்பையெடுத்து உணவில் ஊற்றும்போது குழம்புத்துளி ஒன்று குருவினுடைய காலில் தெறித்தது. அதனால் குரு அதிர்ந்து விழுந்தார். கையினால் குழம்புத் துளிபட்ட இடத்தைத் தடவிக்கொண்டே, "அப்பாஸ்ஸ" என்றார். சீடன் குருவைப் பார்த்து, "என்ன சுவாமி! குழம்பைக் கால் மீது கொட்டிவிட்டாளா?" என்று கேட்டான். அதற்குக் குருவானவர், "இல்லை இல்லை! தற்செயலாக ஒரு சொட்டு மேலே தெறித்துவிட்டது. வேறொன்றும் இல்லை. ஆனாலும் அதற்கென்ன இப்பொழுது? ஆனைக்கும் அடி சறுக்கும்" என்று சொல்லிக்கொண்டே குழம்பு பட்ட இடத்தைச் சுத்தஞ்செய்துகொண்டிருந்தார்.

கணவன் தலையிற் குழம்புச்சட்டி

கணவன் மீண்டுந் தனது அதிகாரத்தை மனைவியின் மீது செலுத்தி வாய்க்கு வந்தபடி பேசத்தொடங்கினான். "சீ நாயே! படுவாக்கழுதை; போக்கிரிமுண்டை! கழுதைக்கு ஆவதைப்போல் அகவை முதிர்ந்தும் குழம்பைச் சரியாக ஊற்றுவதற்கு உனக்கு இன்னுந்தெரியவில்லையா? சுரணை கெட்ட நாயே! பட்டித்தட்டுவாணி," என்று மேலும் ஏதேதோ பேசத்தொடங்குகையில், அவள் அச் சூட்டுக் குழம்புச் சட்டியைக் கணவனுடைய தலையின்மீது ஓங்கிப் போட்டுவிட்டாள். அவள் தன்னுடைய முழுப்

பலத்தையுங்கொண்டு வீசியபடியால் அக்கல்லுச் சட்டி ஆயிரஞ்சுக்கல்களாக உடைந்து குழம்பு கணவன் தலையில் திருமுழுக்காயிற்று. கல்லுச் சட்டியின் சில்லிகளோ வீடு முழுவதும் சிதறிவிட்டது. குழம்பு மேலே கொட்டியபடியால் உடல் முழுவதும் கொப்புளங்கள் உண்டாகிவிட்டன. 'பகபக' என்று எரிச்சல் மிகுதிப்படவே கணவன் துள்ளிக் குதித்துக் கதறிப்பதறினன். மனைவியானவள் கணவனை இவ்வளவோடு விட்டுவிடவில்லை. பாய்ந்து பாய்ந்து கரண்டியினல் அடித்துக்கொண்டே,

வட்டியும் முதலும்

"ஏ வெட்கங்கெட்ட நாயே! பெண்ணுக்குத் தகாத பேடி! உன்னைக்கொள்ளிவைக்க, பாடையிலே கட்ட, பாம்பு பிடுங்க, அடுப்பிலே வைக்க, மூடடா வாயை, மூடடா முழு மூடா; கட்டையிலே போகுங் கடைகெட்டவனே, உப்புக் கல்லுக்குக்கூட உதவாத பையலே! நடைப் பிணமே! அகவை மட்டும் ஆகியிருந்து என்ன பயன்? அறிவு அணுவளவேனும் வேண்டாமா? நூறு பிழைகளுக்குமேல் ஒரு பிழையைக்கூடப் பொறுக்கமாட்டேன் என்று உனக்கு முன்பே சொல்லவில்லையா? உடலறியாச் சடமே! பிற்பாடு மெதுவாக அழுதுகொள்ளலாம். முன்னே இந்தக் குழம்புக் கற்சட்டிக்குள்ள பணத்தைக் கொண்டுவந்து வை இங்கே. தேளுக்கு அதிகாரங் கொடுத்தால் நாழிக்கொருதரம் கொட்டிக்கொண்டிருக்கும் என்று சொல்லுகிற செய்தி உன்னிடத்திலே உண்மையாக முடிந்துவிட்டது. நீ கற்ற வசை மொழியகராதியை என்னிடமா படிப்பதற்கு வந்தாய்? இந்தக் குரு உனக்குச் சொல்லிக்கொடுத்தது இதுதானு? அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்தராத்திரியில் குடைபிடிப்பான் என்பது சரியாக முடிந்துவிட்டது. கடைகெட்ட நாயே" என்று சொல்லி மேலும் மேலும் ஓயாமற் பேசிக்கொண்டே போனுள்.

குருவின் வாழ்த்து

நிகழ்ச்சிகளையெல்லாங் கண்ணுற் கண்ட குரு தன்னுடைய மாணவன் நிலைமையை உள்ளவாறு உணர்ந்து

கொண்டான். அவன் அப்பெண்மணியினுடைய வசை மாரியைத் தடைசெய்து, "மங்கையர் திலகமே! உங்களுடைய வாழ்க்கையைக் காணவே எனக்கு அளவிலாத மகிழ்ச்சியுண்டாகிறது. குருவின் மனைவிக்கு நீ நல்ல பெயரைக் கொண்டு வருகிறாய். மாணவமணியே! இந்த மங்கை நல்லாளுடன் நீ நெடுங்காலம் இனிது வாழ்ந்திருப்பாயாக! நூற்றுக்கணக்கான சட்டிகளும் பானைகளும் என்னுடைய தலைமேல் உடைந்தனவாயினும் என்னுடைய வாழ்க்கைத் துணைவியானவள் அவற்றின் விலையை ஒரு நாளுங் கேட்டதே இல்லை," என்று சொல்லிக்கொண்டே அவ்விடம்விட்டுப் புறப்பட்டான். மாணவனோ 'நம்முடைய உண்மை நிலையை ஆசிரியன் உணர்ந்துகொண்டானே; நம் எண்ணம் பலியாமற் போய்விட்டதே' என்று ஏக்கம் பிடித்து உட்கார்ந்துகொண்டிருந்தான்.

---

௨0. மணியப்பன்

ஓர் எளிய பையன்

மங்கலம் என்னும் ஊரிலே மணியப்பன் என்னும் பெயருடைய ஓர் எளிய பையன் இருந்தான். அவனுடைய தாய் தந்தையர்கள் இறந்துபோனார்கள். வேறு உறவினர் எவரும் இல்லாதபடியால் மணியப்பன் திக்கற்றவனானான். யாருமற்ற அந்தச் சிறுவனை வளர்க்குமாறு தனபாலன் என்னும் செல்வன் ஒருவனுக்கு ஊர்த்தலைவன் கட்டளையிட்டான்.

செல்வனும் அவன் மனைவியும்

தனபாலன் மிகுந்த செல்வம் உடையவனாயினும் ஈவிரக்கமற்ற கன்னெஞ்சக்கொடியோன். அவனுடைய மனைவியும் அத்தன்மையினளே. இரண்டு பேரும் பொருமைக்கு இருப்பிடமானவர்கள். பக்கத்தார் வாழ்ந்தால் தங்கள் உயிரை விட்டுவிடுவார்கள். எச்சிற் கையாற்கூடக்

காக்கை யோட்டமாட்டார்கள். ஊர்த்தலைவன் கட்டளை யிட்டானே என்று அந்தத் திக்கற்ற சிறுவனை வளர்ப்ப தற்கு அரைமனதோடு ஒப்புக்கொண்டார்கள். ஒப்புக் கொண்டார்களாயினும் அவனை மிகுந்த கொடுமைப்படுத் தினார்கள். அச்சிறுவன் எவ்வளவுதான் வருந்தி வேலை செய்தபோதினும் அவனுக்கு வயிறு நிரம்பச் சோறு போடுவதில்லை. அடிக்கடி அடிப்பதும் வைவதுமாக இருந்தார்கள்.

கோழிக்குஞ்சு

ஒருநாள் கோழிகளைக் காத்துக்கொண்டிருக்கும்படி அவனுக்கு வேலையிட்டார்கள். அவ்வாறே மணியப்பன் கோழிகளைக் காவல் காத்துக்கொண்டிருந்தான். ஒரு கோழிக்குஞ்சு ஒரு சந்தின் வழியாய்க் கூட்டினின்றும் வெளியே ஓடிவந்தது. வெகுதொலையில் இருந்து அதைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு பருந்து திடீரென்று கீழே ஓடிவந்தது. அதன்மேற் பாய்ந்து அக்கோழிக்குஞ்சைத் தூக்கிக்கொண்டு ஓடிப்போய்விட்டது. அதைப் பார்த் துப் பையன், “ஓகோ கள்ளன்! கள்ளன்!!” என்று கூவினான்.

அடி

மணியப்பனுடைய தலைவன் மணியப்பனுடைய கூச் சலைக்கேட்டு இஃதென்னவென்று ஓடிவந்து பார்த்தான். கோழிக்குஞ்சைப் பருந்து தூக்கிக்கொண்டுபோன செய்தி தெரிந்தது. மணியப்பனை வாய்க்கு வந்தபடி வைதான். செம்மையாக அடித்தான். அந்த அடியினால் மணியப்பன் நாலைந்து நாட்கள் எழும்ப முடியாமல் படுத்த படுக்கை யாகக் கிடந்தான்.

மேலும் அடி

மணியப்பன் எழுந்து நடமாடத்தக்க நிலைமையை அடைந்த பிறகு மற்றொருநாள் அந்தச் சிறுவனை யழைத் துப், “பையலே! இன்றுபோய் நீ மிகுந்த கருத்துடன்

கோழிக்குஞ்சுகளைக் காத்துக்கொண்டிரு" என்று திட்டஞ் செய்தான். அவ்வாறே காத்துக்கொண்டிருக்கையில் மணியப்பனுக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று. 'இன்றைக்கும் பருந்து ஏதாவது வந்து ஒரு குஞ்சைத் தூக்கிக் கொண்டு போய்விட்டால் என்ன செய்கிறது' என்று எண்ணினன். ஒரு கயிற்றினால் எல்லாக் குஞ்சுகளையும் சங்கிலித் தொடர்போலப் பிணைத்துப் போட்டான். ஆனால் அதன் பின்பு நேர்ந்தது என்ன தெரியுமோ? சிறிது நேரத்தில் அச்சிறுவன் பசியினாலும் களைப்பினாலும் சோர்வடைந்து உறங்கிவிட்டான். அவன் நன்ருகத் தூங்குகிற சமயத்தில் ஒரு பெரிய பருந்து அந்தக் கோழிக் குஞ்சுகள் திரிவதைக்கண்டு ஒரு குஞ்சைத் தூக்கிக்கொண்டு மேலெழும்பிற்று. எல்லாக் குஞ்சுகளும் ஒரே கயிற்ருல் கட்டப்பட்டிருந்தபடியினால் ஒரு குஞ்சைத் தூக்கியபோது எல்லாம் அதன் பின்னேயே போய்விட்டன. மணியப்பனுடைய சூழ்ச்சியினால் ஏற்பட்ட பலன் இதுதான். அந்தப் பருந்து எல்லாவற்றையும் ஒருங்குசேரக் கொன்று தின்று விட்டது. வெளியே வேலையாகப் போயிருந்த தனபாலன் அந்தச் சமயத்தில் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். நடந்த செய்தியை உணர்ந்தான். ஒரு குஞ்சுக்கே மிகுந்த சினங்கொண்டு முன்பு நன்ருகப் புடைத்தவன் இப்பொழுது எல்லாக் குஞ்சுகளும் போய்விட்டன என்ருல் சும்மா விடுவானு? அளவு கடந்த சினங்கொண்டு மணியப்பனைக் குற்றுயிராக்கிவிட்டான்.

தூது வேலை

பையனுக்கு உடம்பு குணப்பட்ட பிறகு ஒருநாள் தனபாலன் அந்தச் சிறுவனைப் பார்த்துப், "பிள்ளாய்! நீ முழுமூடன்; காவல் வேலைக்கு உதவமாட்டாய். இனி மேல் பிறர்க்குச் செய்திகொண்டுபோகிற வேலை செய்," என்ருன். அடுத்த நகரத்து நியாயத் தலைவன் ஒருவனுக்கு ஒரு கூடை நிரம்பத் திராட்சைக் குலைகளும் அதனோடு ஒரு கடிதமும் அந்தப் பையன் கையில் கொடுத்து அனுப்பினன். அதை யெடுத்துக்கொண்டு போகும்

போது வழியிலே பசியுந்தாகமும் மிகுதியாக இருந்தபடி யினால் அந்தச் சிறுவன் அதனைப் பொறுக்கமாட்டாமல் அவற்றுள் இரண்டு குலைகளைத் தின்றுவிட்டான். பிறகு அவன் மற்றைப் பழங்களையும் கடிதத்தையும் நியாயத் தலைவன் கையிலே கொண்டுபோய்க் கொடுத்தான். அவன் கடிதத்தைப் பார்த்துப் பழக்குலைகளை எண்ணிப்பார்த் தான். "இரண்டு குலைகள் குறைகிறதே?" என்று பையனைப் பார்த்துக் கேட்டான். மணியப்பன் சிறிதும் பொய்பேசாமல், "வழியிலே பசியுந் தாகமும் பொறுக்க முடியாமல் நான் இரண்டு குலைகளைத் தின்றுவிட்டேன்," என்று உள்ளது உள்ளபடியே உரைத்துவிட்டான். நியா யத் தலைவன் அதனைக்கேட்டுச் சிறுவனுடைய உண்மை யைப் பார்த்து மகிழ்ந்தான். தனக்கு மேலும் பழம் வேண்டும் என்று அச்சிறுவனிடமே கடிதம் எழுதிக் கொடுத்து அனுப்பினான். திரும்பவும் பழங்களை மணி யப்பனே கொண்டுபோய்க் கொடுக்கும்படியாக நேரிட்டது. தனபாலன் முன்போலவே ஒரு கடிதத்தோடு பழங்களை அப்பையன் கையில் கொடுத்து அனுப்பினான். இந்தத் தடவையும் மிகுந்த பசியாக இருக்கவே அச்சிறுவன் வழி யில் இரண்டு குலைத் திராட்சைப் பழங்களைத் தின்று விட்டான். அவன் இந்தத்தடவை முன்போலப் பழத் தோடு கடிதத்தையுங் கொடுக்காமல் கடிதத்தை ஒளித்து விட்டுப் பழங்களை மட்டுங்கொடுத்தான். ஆயினும் இத் தடவையும் நியாயத் தலைவன் மணியப்பனைப் பார்த்துத், "தம்பி! இரண்டு குலைகள் குறைகின்றனவே" என்று கேட் டான். அதனைக்கேட்ட சிறுவன், "ஐயா! பழங்குறைகிற தென்று தாங்கள் எப்படிக் கண்டு பிடித்தீர்கள்? நான் முன்போலக் கடிதத்தைத் தங்களிடம் தரவில்லையே. கடி தத்தை அதோ அந்த மூலையில் அன்றோ ஒளித்துவைத் திருக்கிறேன்," என்றான். நியாயத் தலைவன் மணியப்ப னுடைய சிறுபிள்ளைத்தனத்தைப் பார்த்து நகைத்தான். அவனிடத்தில் மிகுந்த அன்பு பாராட்டினான். இனிமேல் அவனை நன்றாகப் பாதுகாக்க வேண்டுமென்றும் உணவு முதலியவைகளை ஒழுங்காக அளிக்கவேண்டுமென்றும்

அவனுக்குத் தக்க அறிவுரைகள் கூறி அறிவு புகட்ட வேண்டுமென்றும் தனபாலனுக்குக் கடிதம் ஒன்று எழுதிக்கொடுத்தனுப்பினான்.

தனபாலன் உரை

தனபாலன் நியாயத் தலைவனுடைய கடிதத்தைப் படித்துப்பார்த்தான். பிறகு மணியப்பனைப் பார்த்துப், "பிள்ளாய்! உனக்கு அறிவுரைகள்கூறி அறிவு கற்பிக்குமாறு நியாயத்தலைவர் எழுதியிருக்கிறார். மேலும் உணவு முதலியவைகளும் நன்றாகப் போடவேண்டுமாம். நீ செம்மையாகச் சாப்பிட விரும்பினால் செம்மையாக வேலை செய்ய வேண்டும். ஏதாவது தப்புச் செய்வாயானால் தகுந்தவாறு தண்டிப்பேன்," என்று சொன்னான்.

தனபாலன் கட்டளை

மறுநாள் தனபாலன் மணியப்பனுக்குக் கடினமான வேலை ஒன்று செய்யும்படி கட்டளையிட்டான். அஃதாவது, "குதிரைகளுக்கு நாலைந்து சுமை புல் அறுத்துக்கொண்டு வரவேண்டும்; நான் வெளியேபோய் நாலைந்து மணிநேரத்தில் திரும்பிவருவேன். அதற்குள் நீ நான் இட்ட வேலையைச் செம்மையாகச் செய்துமுடிக்காமற் போவாயானால் உன்னை அடித்துக் கொன்றுபோடுவேன்," என்று சொல்லி அச்சுறுத்திவிட்டு வெளியே சென்றான்.

மணியப்பன் புல் அறுத்தல்

மணியப்பனுக்குச் சிறிதளவு உணவு வைத்துவிட்டு வீட்டு வேலைக்காரன் முதற்கொண்டு எல்லோரும் வெளியே போய்விட்டார்கள். மணியப்பன் ஒரு சிறந்த பொறியைக் கொண்டு புல்லறுக்கத் தொடங்கினான். தன்னுடைய ஆற்றலையெல்லாம் ஒன்றாகச் சேர்த்துப் பரபரப்பாக வேலை செய்தான். வியர்வை மிகுதியாகக் கொட்டியது. மேலே அணிந்திருந்த சட்டை நன்றாக நனைந்துபோய்விட்டது. அதைக் கழற்றிப் புல்லின்மேல் காயவைத்தான். வேலை முடியாவிட்டால் தன்னுடைய தலைவன் அடிப்பான்

என்கிற அச்சத்தினால் மிகுவிரைவாகப் புல்லறுத்துக் கொண்டிருக்கும்போது பாராமல் தன்னுடைய துணியின் மேல் புல்லறுக்குங் கருவியை ஓட்டிவிட்டான். புல்லறு படும்போது துணி சுக்கல் சுக்கலாகக் கிழிந்துபோய் விட்டது. பிறகு அவன் என்ன செய்வான்? இதனைப் பார்த்து மிகுந்த திகில்கொண்டான். 'அந்தோ! நமக்குத் துன்பத்திற்குமேல் துன்பமாக வருகிறதே. நம்முடைய கொடிய தலைவன் நம்முடைய துணி கிழிந்துபோனதைக் கண்டால் எத்தகைய கொடிய தண்டனை விதிப்பானோ தெரியவில்லையே. அவன் போகும்போது நம்மைச் சும்மா அச்சுறுத்திவிட்டுப்போனான் என்று எண்ணக்கூடாது. அவன் வந்து பார்க்கும்போது வேலை சொன்னபடியே நடந்திராவிட்டால் தண்டனை விதித்தே தீருவான். தண்டித்தால் தண்டிக்கட்டும். வேறொரு தண்டனையுஞ் செய்யாமல் ஒருகணத்தில் உயிரைப் போக்கிவிடுவானானால் அது மிகச் சிறந்த நன்மையாகும்' என்று எண்ணமிட்டு வருந்திக்கொண்டிருந்தான்.

தற்கொலைக்குத் தேன்

முன் ஒரு தடவை அந்த வீட்டுக்காரி தன் கட்டிலின் கீழ் ஒரு பானை நிரம்ப நஞ்சுவைத்திருப்பதாகச் சொன்னதை மணியப்பன் கேட்டிருந்தான். அந்தப் பானையில் வைத்திருந்தது மிகச் சிறந்த தேன். அதை யாராவது கண்டால் எடுத்துச் சாப்பிட்டுவிடப்போகிறார்களே என்று அஞ்சி அதை ஒருவரும் தொடாமலிருப்பதற்காக அவள் அவ்வாறு சூழ்ச்சிசெய்து சொன்னாளே தவிர வேறன்று. இச்செய்தி சிறுவனுக்கு நினைவுக்கு வரவே அதைச் சாப்பிட்டுத் தற்கொலை செய்துகொள்ளலாம் என்று முடிவு செய்து அவன் அந்தப் பானையில் இருந்த தேனை எடுத்துச் சாப்பிட்டான். சாப்பிடவே அதுமிக இனிமையாக இருக்கக் கண்டான். 'ஆ சாவு மிகவும் கசப்பானதென்று மக்கள் சொல்லுகிறார்களே! இப்பொழுது அஃது எனக்கு எவ்வளவு இனிப்பாக இருக்கிறது. இவ்வாறு இனிமையாகச் சாவதற்கு மக்கள் ஏன் அஞ்சவேண்டும்' என்று இவ்

வாறு எண்ணமிட்டுக்கொண்டே அங்கே ஓரிடத்தில் படுத்து உயிரைவிடக் காத்திருந்தான். ஆனால் அவன் எண்ணியபடி உடல்நிலை தடுமாற்றம் அடைவதற்குப் பதிலாக மிகுந்த தென்புடன் விளங்கியது; சாவுக்கான அறிகுறி ஒன்றுங் காணப்படவில்லை. ஆகவே அவன் இது நஞ்சு அல்லவென்று அறிந்துகொண்டான்.

தற்கொலைக்குச் சாராயம்

அச் சமயத்தில் தனபாலன் அவனுடைய பெட்டிக்குள் ஈயின் நஞ்சு வைத்திருப்பதாக முன்ஒரு தடவை சொல்லியதை எண்ணிக்கொண்டு அதைச் சாப்பிட்டால் அது தப்பாமல் தன்னைக் கொல்லுமென்று எண்ணினான். உண்மையில் அதுவும் நஞ்சு அன்று; அஃது ஒருவகைச் சிறந்த சாராயம். உடனே அவன் எழுந்துபோய் அந்தச் சாராயப்புட்டியைத் திறந்து அதை அப்படியே முழுவதும் குடித்தான். ஆயினும் அதைக் குடித்தவுடனே அதன் வேகம் தலைக்கேறியது. மயக்கம் மிகுதியாயிற்று. ஆகவே அவன் 'நமக்குச் சாவு நெருங்கிவிட்டது' என்று உறுதியாக நம்பினான். 'இனிமேல் நாம் ஒருவிநாடிகூட இங்கே இருக்கக்கூடாது; சுடுகாட்டிலே போய்ப் படுத்துக்கொள்ள வேண்டும்' என்று முடிவுசெய்தான். உடனே புறப்பட்டுச் சுடுகாட்டிற்குப்போய் அங்கே ஓரிடத்தில் படுத்துக் கொண்டான். உடனே அவனுக்கு நினைவு தவறிப்போய் விட்டது. சாராயத்தை மிகுதியாகக் குடித்துவிட்டபடியால் இறந்துபோய்விட்டான்.

தனபாலன் முடிவு

தனபாலன் வீட்டிற்கு வந்தவுடனே மணியப்பனைத் தேடிப்பார்த்தான். இவன் எங்கும் அகப்படவில்லை. இறுதியில் இறந்துபோனான் என்று தெரிந்தது. அந்தச் செய்தியைக் கேட்டவுடனே 'ஓகோ! இந்தப் பையன் இறந்துபோனதன்பொருட்டு அரசினர் தன்னைப் பிடித்துக் குற்றவாளியாக்கித் தண்டித்துவிட்டால் என்ன செய்வது' என்று அஞ்சினான். மூர்ச்சையாகிக் கீழே விழுந்

தான். அவனுடைய மனைவி சமையல் அறையிலே நெய் காய்ச்சிக்கொண்டிருந்தாள். அவள் தன்னுடைய கணவன் மூர்ச்சையானான் என்று தெரிந்து அவனைத் தேற்றும் பொருட்டு வெளியே ஓடிவந்தாள். கணவனுக்கு மூர்ச்சை தெளிவதற்கான பணிவிடைகளைச் செய்துகொண்டிருந்தாள். அப்பொழுது அடுப்பிலே இருந்த நெய் தீப்பற்றி எரியத்தொடங்கியது. அது வீட்டிறப்பிலேபட வீடுமுழுவதும் தீப்பிடித்து அஞ்சத்தக்கவாறு எரியலாயிற்று.

எளியாரை

வீடு பற்றியெரியும்போது தனபாலனும் அவனுடைய மனைவியும் வீட்டிலிருந்து வெளியே ஓடிவந்து உயிர் பிழைத்தார்களாயினும் அவர்களுடைய பொருள் முழுவதும் எரிந்து அழிந்து தொலைந்துபோயின. பிறகு அவர்கள் வறுமையினால் படாதபாடுபட்டு எங்கேயோ போய்க் கூலிவேலை செய்து துன்புற்று இறந்துபோனார்கள். "எளியாரை வலியார் வாட்டினால் வலியாரைத் தெய்வம் வாட்டும்," என்னும் பழமொழி இவர்களிடத்திலே உண்மையாகிவிட்டது.

---

௪௧. குருடர்களுங் குறும்பனும்

மூன்று குருடர்கள்

ஒரு பட்டணத்தில் மூன்றுபேர் குருடர்கள் இருந்தார்கள். அவர்கள் வெகு காலமாக அந்தப் பட்டணத்திலே பிச்சையெடுத்துப் பிழைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கட்கு அந்நகரம் நன்றாகப் பழகிப் போய்விட்டபடியினாலே அவர்களை வேறு யாராவது கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போகவாவது வழி காட்டவாவது வேண்டியதில்லை. அவர்கள் தெரு, கடை, வீடு முதலியவைகளை நன்றாகத் தெரிந்து கொண்டு பிச்சையெடுத்துக் காலங்கழித்துக் கொண்டிருந்தார்கள். மூவரும் நெருங்கிய

நண்பர்கள்; ஒருவரை விட்டு ஒருவர் பிரிய மாட்டார்கள். தங்களுக்குக் கிடைக்கும் பொருளில் உண்டது போக எஞ்சியதைத் தாங்கள் குடியிருந்த குடிசைக்குள் ஒரு மூலையில் புதைத்து ஒளித்து வைத்திருந்தார்கள்.

சண்டித்தனத்திற்குத் தக்க பலன்

அந்த மூன்று குருடர்களில் ஒருவன் ஒருநாள் இரவு மிகவும் இடக்குள்ள ஒரு வஞ்சகனுடைய வீட்டுக்குப்போய் வாசலில் நின்று கதவைத் தட்டினான். "யார் அங்கே?" என்று அவ் வீட்டுக்காரன் எத்தனை தடவை கேட்ட போதினும் இந்தக் குருடன் எத்தகைய மறுமொழியும் கூறாமலே மேலும் மேலுங் கதவைத் தட்டிக் கொண்டிருந் தான். அப்பொழுது அவ் வீட்டுக்காரன் மேல்வீட்டில் இருந்தபடியால் கீழே இறங்கி வந்தான். குருட்டுப் பிச்சைக் காரனைப் பார்த்து, "நீ யார்?" என்று கேட்டான். அவன், "அப்பனே! நான் திக்கற்ற குருடன்; பொழுது விடிந்தது முதல் இதுவரையில் எத்தகைய உணவுங் கிடைக்காமல் வயிறு காய்ந்து கொண்டிருக்கிறேன்; அருள் செய்து ஒரு பிடிசோறு போட்டு என்னுயிரைக் காப்பாற்றுவாயாக," என்று சொல்லி வேண்டிக் கொண்டான்.

முன்னரே மறுமொழி கூறாதபடியால் அக் குருடனுக் குச் சரியான பாடங் கற்பிக்கவேண்டும் என்று அவ் வீட்டுக்காரன் எண்ணினான். அக் குருடனைக் கோல் நீட்டு மாறு சொல்லி அதனைப் பிடித்துக் கொண்டு மேல் வீட்டிற்கு அழைத்துப் போனான். படிகளின்மீது குருடன் தட்டுத் தடுமாறிக் கொண்டு ஏறிச் சென்றான். அவன் அதற்குமுன் எங்கும் படிகளின்மீது ஏறிச் சென்றிராத படியால் ஒவ்வொரு படியின்மீது ஏறுவதும் அவனுக்குப் பெருந்தொல்லையாக இருந்தது. ஏறிச் செல்லும்போது அம் மனிதன் தனக்கு நன்றாக உணவிடப் போகிறான் என்று எண்ணி மிகவும் மகிழ்ந்து கொண்டே சென்றான்.

மேல்வீட்டிற்குப் போய்ச் சேர்ந்த பிறகு, அவ் வீட்டுக் காரன், "எங்கள் வீட்டில் ஒன்றும் இல்லை; கீழே இறங்கிப்

போய்விடு," என்று கூறினான். குருடன் ஏதாவது கொடுக்க வேண்டுமென்று மேன்மேலுங் கெஞ்சிக் கொண்டு மேல் வீட்டிலேயே நின்றுகொண்டிருந்தான். "உடனே போகாமல் இங்கிருப்பாயானால் செம்மையாக உதைத்து கொடுப்பேன்," என்று சொல்லி அச்சுறுத்தினான் வீட்டுக்காரன்.

பிறகு குருடன் வீட்டுக்காரனைப் பார்த்து, "இல்லை என்பதற்கு இங்கு ஏன் அழைத்துக் கொண்டு வந்தாய்? கீழே நான் நின்ற இடத்திலேயே, 'ஒன்றும் இல்லை போ'; என்று சொல்லி அனுப்பியிருக்கக் கூடாதா?" என்று கேட்டான். அதற்கு வீட்டுக்காரன், "நான் இங்கிருந்தபடியே 'யார் அங்கே?' என்று எத்தனை தடவை கேட்டேன். நீ அதற்கு ஒன்றும் மறுமொழி கூறாமல் ஏன் குட்டிச் சுவரைப்போல் நின்று கொண்டிருந்தாய். நின்றுகொண்டிருந்தது மட்டும் அன்று; கதவையுந் தட்டித்தட்டி உடைத்து விட்டாயே. கேட்டதற்கு மறுமொழி கூறாமல் ஏன் அவ்வாறு செய்தாய்?" என்றான்.

குருடன், "எனக்கு இப்பொழுது அறிவு வந்து விட்டது. தெரியாத்தனமாக வந்து மாட்டிக்கொண்டேன். என்னைக் கீழே கொண்டு போய் விட்டுவிடு. நான் இனிமேல் இந்த வீட்டுப் பக்கமே அடியெடுத்து வைக்கவில்லை," என்று சொன்னான்.

அதற்கு வீட்டுக்காரன், "நான் உன்னைக் கீழே கொண்டுவந்து விடமாட்டேன். அதோ படிகள் இருக்கின்றன. ஒழுங்காக இறங்கிப் போய்விடு," என்றான். குருடன் படிகளின் வழியாக இறங்கத் தொடங்கினான். படிகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பது குருடனுக்குத் தெரியாமையால் தடுமாறிக் குப்புற வீழ்ந்து பாதிப் படிகள் வரைபோய்ச் சேர்ந்து முகத்திலும் கைகால்களினும் நன்கு அடிபட்டுக் காயமடைந்தான். விழுந்த இடத்திலேயே இருந்து அழுதான். வீட்டுக்காரன் அவனைப் பார்த்து நகைத்துக் கொண்டிருந்தான். குருடன் மேலும் தட்டித் தடவி எப்படியோ வெளி வாசலுக்குப் போய்த்

தெருவை யடைந்தான். தெருவை யடைந்த பிற்பாடு வீட்டுக்காரனைப் பலவாறு வைதுகொண்டு சென்ருன். வீட்டுக்காரன் மேலும் வேடிக்கை பார்க்க விரும்பினுன். சிறிதுஞ் சந்தடி செய்யாமல் அந்தக் குருட்டுப் பிச்சைக் காரனைப் பின் தொடர்ந்து சென்ருன்.

நண்பர்கள் ஒன்று கூடுதல்

அக்குருடன் அவ்வாறு சென்று கொண்டிருக்கும் போது, அங்குப் பிச்சையெடுத்துக் கொண்டிருந்த அவனுடைய நண்பர்கள் குரல்சாடை கண்டுபிடித்து இவனிடம் வந்தார்கள். இவன் வைதுகொண்டிருப்பதைப் பார்த்து, "ஏன் அண்ணே! என்ன நடந்தது?" என்று கேட்டார்கள். அதற்கு அவன், "இன்றைக்கு என்னுடைய பொல்லாத காலம் எனக்குச் சிறிது தொல்லையைக் கொடுத்துவிட்டது. அற்பப் பயலாகிய ஒருவனுடைய வீட்டிற்குப் பிச்சை யெடுக்கச் சென்றேன். அங்கு எனக்குத் தொல்லையுண் டாகி விட்டது," என்று சொல்லி வருத்தப் பட்டான். மேலும் அவர்களைப் பார்த்து, "இன்றைக்கு நாம் இனி மேல் வேறெங்கும் பிச்சைக்குப் போகவேண்டாம். திரும்பி நம்முடைய இருப்பிடத்திற்குச் செல்லுவோம்; என்னுடலில் காயங்கள் உண்டாகியிருக்கின்றன," என்று கூறி அவர் களை அழைத்தான். மற்றவர்களுஞ், "சரி அப்படியே வீட் டிற்குப் போய் இன்றைக்கு ஓய்வாக இருப்போம்," என்று முடிவு செய்து தாங்கள் வழக்கமாத் தங்கியிருக்குங் குடிசைக்குச் சென்றார்கள். குருடனுக்குத் தொல்லையை உண் டாக்கிய வீட்டுக்காரன் 'இவர்கள் இருப்பிடம் எங்கிருக் கிறது, போய் என்ன செய்வார்களோ பார்ப்போம்' என்று முடிவு செய்துகொண்டு அவர்களறியாமல் அவர்களைப் பின் தொடர்ந்து சென்ருன்.

குடிசையில் குருடர்கள்

சிறிது நேரத்தில் குருடர்கள் தங்கள் குடிசைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். தொல்லைப்பட்ட குருடன், "நான் ஒரு செய்தி சொல்ல வேண்டியவனுக இருக்கிறேன்.

வேறொருவரும் உட்பக்கம் வராதபடி கதவைத் தாள் இட்டு வாருங்கள்,'' என்றான். இவ்வாறு அவன் சொன்னதும் குருடர்களைத் தொடர்ந்து சென்ற வீட்டுக்காரன் மெதுவாக உள்ளே நுழைந்து ஒரு மூலையிற் பதுங்கிக் கொண்டான். அவர்கள் கதவை மூடித் தாழ்ப்பாள் போட்ட பிறகு, தடிகளினால் மூலை முடுக்குகளிலெல்லாம் தடவிப் பார்த்தார்கள். வீட்டுக்காரன் அக் குருடர்களுடைய தடிச் சோதனைக்கு அகப்படாமல் அப்படியும் இப்படியுமாகத் தாண்டித் தப்பித்துக் கொண்டே ஒரு மூலையில் இருந்தான்.

புதையலை எடுத்தல்

பிறகு யாரும் வேற்றாட்கள் இல்லையென்று முடிவு செய்து கொண்டு தொல்லைப்பட்ட குருடன் மற்றவர்களைப் பார்த்து, "என்னுடைய நண்பர்களே! இன்று எனக்கு அந்தப் படுபாவிப் பட்டி மகனுடைய வீட்டிலே மிகுந்த தொல்லை யுண்டாகிவிட்டது. உடம்பிலே காயங்கள் பல உண்டாகிவிட்டன. அக் காயங்கள் குணமாகும் வரையிலும் நான் எங்கும் வெளியே பிச்சை யெடுப்பதற்குப் போக முடியாது. ஆகவே நாம் தேடிப் புதைத்து வைத்துள்ள புதையலை வெட்டியெடுத்து ஆளுக்கு ஒரு ரூபா எடுத்துக் கொள்ளுவோம்,'' என்று சொன்னான். மற்றவர்களும் அவன் கூறியதற்கு இணங்கினார்கள்.

பிறகு ஒரு மூலையிலே கடப்பாறைகொண்டு இடித்தார்கள். கீழே ஒரு செப்புத்தவலை புதைக்கப்பட்டிருந்தது. அத்தவலையில் இருந்து தொல்லைப்பட்ட குருடன் இருபது மண்கலயங்களை வெளியே எடுத்தான். அவர்களுக்குக் கணக்கிட்டுக் காட்டினான். "ஒவ்வொரு கலயத்திலும் ஐவ்வைந்து நூறு ரூபாய்களை வைத்தோம் அல்லமோ? ஆகவே இருபது கலயங்களினும் பதினாயிர ரூபாய்கள் வைக்கப்பெற்றன. இப்பொழுது ஒரு கலத்தின் மூடியைத்திறந்து அதில் இருந்து மூன்று ரூபாய்களை எடுக்கிறேன்,'' என்று சொல்லி மூன்று ரூபாய்களை எடுத்தான். அவர்கள் இரண்டு பேருக்கும் ஆளுக்கு ஒவ்வொரு

ரூபாய் கொடுத்துவிட்டுத் தான் ஒரு ரூபாயை வைத்துக் கொண்டான். தவலேயை முன்போலவே புதைத்துவிட்டார்கள். தொல்லேப்பட்ட குருடன் பிறகு தன்னுடைய கூட்டாளிகளைப் பார்த்து, "நண்பர்களே! நான் கடைக்குப் போய்த் தின்பதற்கு ஏதாவது வாங்கிக்கொண்டு வருகிறேன். அந்தப் பட்டிமகன் இன்று நமது கைப்பொருளைச் செலவழிக்குமாறு செய்துவிட்டான்," என்று சொல்லிவிட்டு வெளியே போகப் புறப்பட்டான்.

வீட்டுக்காரன் அகப்பட்டுக்கொள்ளுதல்

மற்றவர்கள் இருவரும் அவனைப்பார்த்து, "அண்ணே! இப்பொழுதுபோய் ஒன்றும் வாங்கவேண்டாம். நாங்கள் இருவரும் வேண்டிய அளவு உணவு வாங்கிக்கொண்டு வந்திருக்கிறோம்; இப்போது இதனைச் சாப்பிடுவோம்," என்று சொன்னார்கள். தொல்லேப்பட்ட குருடன், "அப்படியே செய்வோம்," என்றான். ஐயமேற்று வந்ததை அவிழ்த்துப் பரப்பி வைத்துக்கொண்டு சாப்பிடத் தொடங்கினார்கள். குருடர்களுடைய நடவடிக்கை எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த வீட்டுக்காரன் பிச்சைக்காரர்களுடைய உணவிலிருந்து தானும் எடுத்துச் சாப்பிடத்தொடங்கினான். இவனுக்குக் கண்பார்வை தெரியுமாகையால் நல்ல வகையான பலகாரங்களையெல்லாம் விரைவாக எடுத்துத் தின்றான். குருடர்கள் கண்தெரியாவிட்டாலும் மிகக் கூர்மையான அறிவு பெற்றவர்கள். சாப்பிடும்போது நான்கு பேர்கள் மெல்லுகிற ஒலியுண்டாதலை அவர்கள் கவனித்தார்கள். யாரோ வேற்றாள் ஒருவனும் தங்களோடு இருக்கிறானென்று ஐயமற அறிந்துகொண்டார்கள். "கள்ளன் கள்ளன்" என்று பெருங் கூச்சலிட்டதோடு அந்த மனிதனைக் கெட்டியாகக் கட்டியும் பிடித்துக் கொண்டார்கள்.

வீட்டுக்காரன் பலே கெட்டிக்காரன்; எதற்கும் அஞ்சாதவன். இல்லாவிட்டால் இவ்வளவு தொலே குருடர்களைப் பின்தொடர்ந்து கைவரிசை காட்டுவானா? அந்த மனிதன் தானும் அக் குருடர்களில் ஒருவனைப் பிடித்துக்கொண்ட

தோடு மற்றவர்களைப்போல் கண்ணை இறுக மூடிக் கொண்டு, "கள்ளன் கள்ளன்" என்று கூச்சலிட்டான். இரைச்சல் அதிகமாகவே அங்குப் பலபேர் வந்து கூடினார்கள். ஊர்த்தலையாரிகளும் வந்தார்கள். குருடர்களைப் பார்த்து, "என்ன செய்தி?" என்று உசாவினார்கள். அன்றிரவு எல்லோரையும் சிறைச்சாலையில் வைத்தார்கள். மறுநாள் காலையில் அறமன்றத்திற்கு அழைத்துக் கொண்டு போனார்கள். அறமன்றத்தலைவன் உண்மையை உரைக்காவிட்டால் கொடிய தண்டனைக்கு உள்ளாவீர்களென்று அச்சுறுத்தினான்.

வீட்டுக்காரன் விளம்புதல்

மோசடியாகப் போய்ப் புகுந்த வீட்டுக்காரன் நீதிபதியைப் பார்த்து, "நாங்கள் நால்வரும் குருடர்கள். நாங்கள் பிச்சையெடுத்து வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறோம். கொறடாவினாலே நூறு அடிபட்டால் ஒழிய எங்களுடைய உண்மை நிலையை வெளியிடக்கூடாது என்று நாங்கள் தொடக்கத்திலேயே ஆணையிட்டுக்கொண்டோம். ஆகவே நான் உண்மையை உரைக்கமாட்டேன்," என்று சொன்னான்.

உடனே நீதிபதி சேவகர்களைப் பார்த்துக், "கொறடாவை எடுத்து நூறு அடிகள் அடியுங்கள்," என்று கட்டளையிட்டான். உடனே சேவகர்கள் கொறடாவை எடுத்துக்கொண்டு அடிக்கத்தொடங்கினார்கள். இருபது அடிகள் மேலே விழுந்தபிறகு இவன் பாதிக் கண்களைத் திறந்துபார்த்தான். இவன் கண்ணைத் திறந்துபார்க்கவே நீதிமன்றத் தலைவனுக்கு மிகுந்த வியப்புண்டாகிவிட்டது. அந்த மோசடிக்காரனைப் பார்த்து, "அடே! நான் குருடன் என்று நீ ஏன் எல்லோரையும் மோசஞ்செய்துகொண்டு திரிகிறாய்?" என்று கேட்டதுடன் "மேலும் நன்றாக அடியுங்கள்," என்று கட்டளையிட்டான். மேலும் பல அடிகள் மேலே விழுந்தபிறகு இவன் நீதிபதியைப்பார்த்து, "ஐயனே! உண்மையைச் சொல்லிவிடுகிறேன். அடிப்பதை நிறுத்தச் சொல்லுங்கள்," என்று சொல்லிக் கதறினான்.

நீதிபதி, "அடிக்கவேண்டாம்," என்று சேவகர்களைத் தடுத்துவிட்டு, "உள்ளதை உள்ளபடி உரை," என்று கட்டளையிட்டான்.

வீட்டுக்காரன் கதை

வீட்டுக்காரன் நீதிபதியைப் பார்த்துக் கதை சொல்லத்தொடங்கினான்: "எங்கள் எல்லோருக்கும் உண்மையில் கண்பார்வை நன்கு உண்டு. எங்களுக்கு உடம்பு வளைந்து வேலை செய்வதற்குச் சிறிதும் விருப்பமில்லை. ஆகவே குருடர்கள் என்று சொல்லி உலகத்தாரை ஏமாற்றிப் பிச்சையெடுத்துப் பொருள் தேடத்தொடங்கினோம். இதுவரையில் பதினாயிரம் வரையில் தேடியிருக்கிறோம். இனிமேல் பிச்சையெடுத்துக்கொண்டு திரிவதற்கு எனக்கு விருப்பமில்லை. நான் என்னுடைய பாகத்தைப் பெற்றுக்கொண்டு வேறு நாட்டுக்குப்போய்ச் சுகமாக வாழ்க்கை நடத்த விரும்பினேன். என்னுடைய பங்குத்தொகையான இரண்டாயிரத்தைந்நூறு ரூபாயையும் பிரித்துக் கொடுத்துவிடுங்கள் என்று கேட்டேன். என்னுடைய பங்கைக் கொடுப்பதற்கு அவர்களுக்குச் சிறிதும் விருப்பம் இல்லை. 'மோசக்காரன்' என்று சொல்லி என்னை விரட்டிவிட்டு எல்லாப்பொருள்களையுந் தாங்களே எடுத்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். நன்றாக அடிக்கச்செய்தாலல்லாமல் உண்மையை அவர்கள் ஒருபோதும் உரைக்கமாட்டார்கள்," என்று கூறினான்.

குருடர்கள் பொருளிழத்தல்

நீதிபதி குருடர்களைத் தண்டித்து உண்மையை வெளிப்படுத்தவேண்டும் என்று எண்ணினான். கொறடாவினால் ஒவ்வொருவரையும் நூறு அடிகள் அடிக்குமாறு கட்டளையிட்டான். சேவகர்கள் கொறடாவை எடுத்துக் கொண்டு நன்றாகச் சாடத்தொடங்கினார்கள். எவ்வளவு அடிகள் கொடுத்தபோதினும் பயன் ஒன்றுமில்லை. குருடர்கள் மூவரும், "நாங்கள் உண்மையில் குருடர்கள் தாம்; கண்பார்வை சிறிதும் தெரியாது. பொருளை நாங்கள் மூவருந் தாம் தேடியிருக்கிறோமே அல்லாமல் இந்த மனித

னுக்கும் அந்தப் பொருளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை," என்று சொல்லி உறுதியாகக் கூறினார்கள்.

மோசக்காரன் நீதிமன்றத் தலைவனைப்பார்த்து, "இவர்கள் பெருமோசக்காரர்கள். உயிர்போனாலுங்கூட உண்மையை உரைக்கக்கூடாது என்பது அவர்களுடைய பிடிவாதம். ஒரு சேவகனை என்னுடன் அனுப்புங்கள்; தேடிய பொருளைப் புதைத்து வைத்திருக்கும் இடத்தைக் காட்டுகிறேன். அதனை எடுத்து என்னுடைய பாகத்தை எனக்குக் கொடுத்துவிடுங்கள்; இனிமேலுங் குருடனாக இருப்பதற்கு எனக்குச் சிறிதும் விருப்பமில்லை," என்று கூறினான்.

நீதிமன்றத்தலைவன் இரண்டு சேவகர்களை அந்த மோசக்காரன் பின்னால் அனுப்பிக், "குடிசையில் இவன் காட்டுகிற இடத்தைத் தோண்டிப்பாருங்கள்," என்று கட்டளையிட்டான். சேவகர்கள் அவ்வாறே சென்று தோண்டிப்பார்த்தபோது இந்த மோசக்காரன் மொழிந்த படியே பொருள் அகப்பட்டது. சேவகர்கள் அதனை நீதி மன்றத்திற்கு எடுத்துக்கொண்டு சென்றார்கள். மேலும் பலவாறு உசாவிப்பார்த்தும் குருடர்கள், "தாங்கள் குருடர்களே" என்றுதான் சாதித்தார்கள். பிறவிக்குருடாக இருக்கும் அவர்கள் நல்ல பார்வையை எவ்வாறு பெறமுடியும்?

நீதிமன்றத் தலைவன் மோசக்காரன் கூறியதை அப்படியே நம்பினான். பொருளை நான்கு பங்காகப் பிரிக்கச் செய்தான். ஒரு பங்கை அந்த மோசக்காரனுக்குக் கொடுத்துவிட்டு மற்றைய மூன்று பங்குகளையும் அரசாங்கப்பொருளறையிற் சேர்த்துவிடுமாறு கட்டளை செய்தான். மோசக்காரன் தனக்குக் கிடைத்த பொருளையெடுத்துக்கொண்டு மிகுந்த களிப்போடு சென்றான். உண்மையான குருடர்களோ தாங்கள் அரும்பாடுபட்டு ஆயுள் முழுவதுந் தேடிய பொருளைச் சிறிதுநேரத்துக்குள் இழந்து மனம் வருந்திச் சென்றார்கள்.

முடிவுரை

சில சமயங்களில் உண்மை இவ்வாறு மறைந்து அநியாயமே வெற்றியடைந்துவிடுகிறது. இக் கதையினுல் அறங்கூறு அவையத்தாரும் சில சமயங்களில் உண்மையை உணர்ந்துகொள்ளாமல் மறங்கூறு அவையத்தார்களாகப் போய்விடுகிருர்கள் என்பதை அறிகிருேம். மோசக்காரர்கட்கும் சில சமயம் வெற்றியேற்பட்டுவிடுகிறது வியக்கத்தக்க புதுமையன்ருே?

அஉ. நன்றி மறவாத விலங்குகள்

நாடோடி

முன்காலத்தில் மிகுதியான பொருளில்லாத எளிய மனிதன் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஓரிடத்திலேயே தங்கியிருப்பதற்குப் பிடிக்கவில்லை. கையிலிருந்து சிறிது பொருளை எடுத்துக்கொண்டு உலகஞ் சுற்றப்புறப்பட்டான்.

எலி

நாடோடி ஒரு சிற்றூரிலே சென்று கொண்டிருக்கும் போது, ஓரிடத்திலே பிள்ளைகள் பலர் கூடிப் பேரிரைச்சலிட்டு நகைத்துக் கொண்டு இங்கும் அங்கும் ஓடினுர்கள். அதனைக் கண்ட நாடோடி அவர்களைப் பார்த்து, "இங்கென்ன புதுமை?" என்று கேட்டான். அதற்கு அவர்கள், "நாங்கள் இவ்விடத்தில் ஓர் எலியைப் பிடித்து வைத்திருக்கிருேம். அவ்வெலிக்குக் கூத்தாடுதல் முதலிய விளையாட்டுக்கள் கற்றுக் கொடுக்கப் போகிருேம். அது மிகவும் வேடிக்கையாக இருக்கும். விருப்பமானுல் நீரும் வந்து பாரும். அவ்வெலி மிக நன்ருகத் துள்ளுகிறது," என்று கூறினுர்கள். அதனைக் கேட்டு அவ்வெளிய நாடோடி மனிதன், அந்த எலியினிடத்திலே மிகுந்த இரக்கங் கொண்டான். அவன் அந்தப் பிள்ளைகளைப் பார்த்துப், "பிள்ளைகாள்? நீங்கள் இந்த எலியை வருத்

தாமல் விட்டு விடுவீர்களானால் நான் உங்களுக்குப் பணம் தருகிறேன்,'' என்று சொன்னான். அதற்கு அந்தப் பிள்ளைகள் இணங்கினார்கள். அந்த எலியைக் கட்டியிருந்த கட்டை அவிழ்த்து அதனைவிட்டு விட்டார்கள். அந்த எலியானது நமனுடைய கையில் இருந்து விடுபட்ட உயிரைப்போல மிகுந்த களிப்பை யடைந்து, ஒரே ஓட்டமாக ஓடிப் பக்கத்தில் இருந்த ஒருசிறு வளைக்குள் புகுந்து கொண்டது. எலியின் விடுதலையைக் கண்டு மகிழ்ந்த மனிதன் தான் முன் கூறியபடி அப் பிள்ளைகளுக்குச் சிறிது பொருள் கொடுத்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டுக் காடு, மலை, யாறு பல கடந்து நாடு பல கண்டு களித்து மேலே வழிநடந்தான்.

குரங்கு

நாடோடி வேறொரு சிற்றூரை யடைந்த போது அவ்வூரிலே அறியாத சிறுபிள்ளைகள் பலர் ஒன்று சேர்ந்து ஒரு குரங்கைப் பிடித்துக் கட்டிவைத்துக்கொண்டு அதைக் குதிக்கவும் கரணம் போடவுஞ் செய்து அந்த வேடிக்கையைப் பார்த்துக் கைகொட்டி நகைத்துக்கொண்டிருந்தார்கள். அக்குரங்கையும் பார்த்து இம்மனிதன், அந்தோ தீவினை! என்று இரங்கினான். அப் பிள்ளைகளுக்குச் சிறிது பொருள் கொடுத்து அக்குரங்கையும் தன் விருப்பம்போல் ஓடிப்போகுமாறு விடுவித்தான்.

கரடி

இவ்வாறு செய்துவிட்டு அவன் மற்றோர் ஊருக்குச் சென்றான். அங்கே பல பிள்ளைகள் ஒன்றுகூடி ஒரு கரடியைச் சங்கிலியால் கட்டிப் பிடித்துக்கொண்டு, அதைக் கூத்தாடவும், இரண்டு காலால் மனிதரைப்போல் நேராக நிற்கவுஞ் செய்து அஃது உறுமுவதைப் பார்த்துக் களிப்படைந்து கொண்டிருந்தார்கள். இச் சிறுவர்கட்குஞ் சிறிது பொருள் கொடுத்து அந்தக் கரடியையும் விடுவித்தான். அதுவும் மிகுந்த களிப்புடன் மிகுவிரைவாக அந்த இடம் விட்டு ஓடிப்போய் விட்டது.

வறுமையும் களவும்

இந்த விலங்குகளை விடுவிப்பதற்காக அவன் தன்னுடைய கையில் இருந்த பொருள்களையெல்லாம் செலவழித்து விட்டபடியால் கையில் ஒரு காசுகூட இல்லாமல் வருத்தப்படலானான். அவனுடைய எண்ணம் பின் வருமாறு திரும்பியது: 'அரசனுடைய பொருட்சாலையில் எவர்க்கும் பயனில்லாமல் அளவற்ற பொருள் குவிந்து கிடக்கிறதே! அவ்வாறாக நாம் ஏன் பசியால் உயிரை விடுதல் வேண்டும்? அரசனுடைய பொருளிற் சிறிது எடுத்துக் கொண்டால் பிறகு சேர்த்துவிடலாம்.' இவ்வாறு முடிவுசெய்த அவன் ஒரு பட்டணத்துக்குச் சென்றான். எவ்வாறோ சூழ்ச்சியாக அரசனுடைய பொருள் சாலைக்குள் புகுந்தான். அங்குக் கிடந்த பொருட் குவியல்களுள் ஒன்றில் சிறிதளவு எடுத்துக் கொண்டான். எடுத்துக்கொண்டு திரும்புகிற சமயத்தில் அங்கிருந்த காவற்காரர்களுள் ஒருவன் அவனைப் பார்த்து ஓடிவந்து கள்ளன் என்று சொல்லிப் பிடித்துக் கொண்டு போய்ச் சிறைச்சாலையில் வைத்தான். மறுநாள் நீதிமன்றத்திற்குக் கொண்டுபோய் நடுவன் முன்னிலையில் நிறுத்தினான். குற்ற உசாவல் நடைபெற்றது. அவன் பெருங்குற்றஞ் செய்தவனாகையால் ஒரு பெட்டியில் போட்டுத் தண்ணீரில் தள்ளி விடுமாறு தீர்ப்புச் செய்தான். அவ்வாறே உள்ளே காற்றுப் புகும்படி மேல் மூடியில் பல தொளைகளோடு கூடிய ஒரு பெட்டியில் அவனை ஏற்றிச் சிறிது சோறுந் தண்ணீரும் வைத்துப் பெட்டியைப் பூட்டிக் கடலிலே தள்ளி விட்டார்கள்.

கைம்மாறு

அவ்வெளிய மனிதன் தன் தலைவிதியை வெறுத்து நொந்து கொண்டான். மிகுந்த மனத்துன்பத்துடன் கடலில் மிதந்து கொண்டு சென்றான். திடீரென்று பெட்டியின் பூட்டை ஏதோ ஒன்று பீறுவது போலவும் கடிப்பதுபோலவும் ஒலி கேட்டது. உடனே பெட்டியின் மேல்மூடி திறக்கப் பட்டது. முன் அவனால் தொல்லையிலிருந்து விடுவிக்கப்

பெற்ற எலி குரங்கு கரடி ஆகிய மூன்றும் அவன் எதிரே நின்றன. அவைகள் எவ்வாறு அங்கே வந்தன தெரியுமா? அவைகளுக்கு முக்காலத்தையும் உணரும் ஆற்றல் உண்டு. தமக்கு உதவி செய்த நாடோடி மனிதன் பெருந் துன்பத்தில் அகப்பட்டுக் கொண்டான் என்பதை அவைகள் உணர்ந்தன. கரடிக்கு நீந்தத் தெரியும் ஆகையால் எலியும் குரங்கும் கரடியின் முதுகில் தொத்திக் கொண்டு அவ்விடம் வந்து சேர்ந்தன. நாடோடி அவைகளைப் பார்த்து, "நீங்கள் ஏன் இவ்வாறு தொல்லைப்பட்டு இங்கு வந்தீர்கள்?" என்று கேட்டான். அதற்கு அவைகள், "தங்களால் உதவி பெற்ற நாங்கள் தங்களுக்குத் துன்பம் ஏற்பட்டபோது உதவி செய்யாமலிருக்கலாமா? எங்கள் உயிர் பொனாலும் போகட்டும்; தங்கட்கு உதவி செய்ய வேண்டும் என்று முடிவுசெய்து வந்தோம்," என்று கூறின. அஃறிணையாகிய இவைகள் இவ்வாறு நன்றி மறவாதவைகளாக இருக்க மனிதர்களில் பலர் நன்றி மறந்து தீயவர்களாகி விடுகிறார்கள். இது எவ்வளவு இழிவு பாருங்கள்? திருவள்ளுவர்கூட, "நன்றி மறப்பது நன்றன்று," என்று திருக்குறளில் கூறியிருக்கிறானன்றோ?

வெள்ளைக் கல்

பிறகு அந்த விலங்குகள் இனிமேல் யாது செய்யலாம் என்று எண்ணமிட்டன. அந்தச் சமயத்தில் உருண்டை வடிவமான வெள்ளைக்கல் ஒன்று நீரின்மேல் மிதந்து கொண்டு அந்தப் பெட்டிக்குப் பக்கத்தில் வந்தது. அதைக் கண்டு கரடியானது, "ஓகோ இந்தக் கல் சமயத்தில் நமக்குக் கிடைத்தது நம்முடைய நல்வினைதான். இது மிக வியக்கத்தக்க ஒரு மந்திரக் கல். இது எவனுடைய இடத்தில் இருக்கிறதோ அவன் எந்த நிலைமையில் இருக்கவேண்டுமென்று மனதினால் நினைத்தாலும் உடனே அவ்விடத்தில் தான் இருக்கக் காண்பான்," என்றது.

அரண்மனை

பெட்டிக்குள் இருந்த நாடோடி இதனைக் கேட்டு மிகுந்த களிப்படைந்தான். பெட்டிக்குள் இருந்து வெளியே

வந்து அந்தக் கல்லைக் கையில் எடுத்துக்கொண்டு தான் பூம்பொழில்களால் சூழப்பெற்ற ஓர் அரண்மனைக்குள் இருக்கவேண்டும் என்று எண்ணினன். மறுகணமே அவன் இருக்குமிடம் ஓர் அழகிய அரண்மனையாக இருந்தது.

சில வணிகர்கள்

அந்த அழகிய அரண்மனையிலே அவன் சிலகாலம் இன்பமாக வாழ்ந்து கொண்டிருந்தான். ஒருநாள் அவ் வழியே சில வணிகர்கள் வந்தார்கள். அவர்கள் அந்த அரண்மனையைப் பார்த்துவிட்டு, "இஃதென்ன இதுவரை நாம் இவ்விடத்தைப் பலமுறை பார்த்திருக்கிறோம். மனித நடமாட்டம் அற்ற பாலைவனமாகக் கிடந்தது. இப்போது நீர்வளமும் நிலவளமும் செறிந்த செழிப்பு நிலமாகி இவ் வளவு அழகான தோட்டமாக இருக்கிறதே," என்று சொல்லி வியந்தார்கள். அங்குள்ள புதுமைகளைப் பார்த்துக் கொண்டே அந்த அரண்மனைக்குள் நுழைந்தார்கள். உள்ளே இருந்த மனிதனைக் கண்டு, "ஐயா! பாழ்நிலமாக இருந்த இவ்விடத்தை இவ்வளவு விரைவில் இவ்வளவு செழிப்பாக்கித் தோட்டமும் மாளிகையும் அமைத்துக் கொள்ளும்படியான வல்லமை உமக்கு எவ்வாறு உண்டா யிற்று?" என்று கேட்டார்கள். அதற்கு அவன், "இஃது என்னுடைய வேலையன்று. எனக்குக் கிடைத்த ஒரு புதுமையான கல்லின் பெருமையால் உண்டாகியதாகும்," என்றான். அதனைக் கேட்ட அவர்கள் அந்தக் கல்லைப் பார்க்கவேண்டும் என்று பேராவல் கொண்டார்கள். "அக் கல் எத்தகையது? அதனை நாங்கள் பார்க்கவேண் டும்," என்றார்கள். அவன் உள்ளே சென்று அந்தக் கல்லை எடுத்து வந்து அவர்களுக்குக் காட்டினான்.

வணிகன் கல்லையிழத்தல்

அவ்வணிகர்கள் அக்கல்லைப்பார்த்து மிகுந்த வியப் படைந்தார்கள். அவனைப்பார்த்து, "இந்தக் கல்லை விலைக்குக் கொடுக்க உமக்கு விருப்பம் உண்டா? அவ்

வாறு கொடுப்பதானால் அதற்கு விலையாக நாங்கள் வைத் திருக்கும் அருமையான சரக்குகள் எல்லாவற்றையும் வேண்டுமானாலும் கொடுத்துவிடுகிறோம்,'' என்று சொன்னார்கள். அரண்மனையில் இருந்த நாடோடி மனிதன் அவர்கள் வைத்திருக்கும் சாமான்களைப் பார்த்து அவற்றி னிடத்தில் மிகுந்த விருப்பங்கொண்டான். அந்தப் பொருள் களினிடத்தில் இருந்த அவாவினால் அப்பொருள்கள் தன்னிடமிருந்த கல்லைப் பார்க்கினும் விலையேறப்பெற் றவை என்று மதிமயங்கி அவர்களுடைய கருத்துக்கு உடன்பட்டான். அவர்கள் வைத்திருந்த பொருள்களைப் பெற்றுக்கொண்டு தன்னிடம் இருந்த கல்லைக் கொடுத்து விட்டான்.

செல்வத்தை இழந்து வருந்தல்

அவன் அந்தக்கல்லை அவர்களுடைய கையில் கொடுத்தவுடனே அவனுடைய செல்வங்களெல்லாம் போய்விட்டன. முன்போலவே கடலில் ஒரு பெட்டியிலே மிதக்கலானான். ஆயினும் அவனிடத்தில் நன்றி மறவாத விலங்குகளான எலி குரங்கு கரடி ஆகிய மூன்றும் இப் பொழுதும் அவனை மறக்கவில்லை. மறுபடியும் அவனுக் குத் துன்பநிலை நேர்ந்துவிட்டது என்று உணர்ந்து அவ னுக்குத் துணைசெய்யும்பொருட்டு அந்த இடத்திற்குவந்து சேர்ந்தன. அவனிருந்த பெட்டியின் பூட்டை உடைப்ப தற்கு முயன்றன. முன்னிருந்த பூட்டைப்பார்க்கினும் இந்தப் பூட்டு மிக உறுதியாக இருந்தபடியினாலே, அதனை உடைப்பதற்கு அவைகளாற் சிறிதும் முடியவில்லை. அதனைக் கண்டு கரடி, "நாம் இப்படி வீணாக முயற்சிப்பதி னால் பயனில்லை. அந்த மந்திரக் கல்லைக்கண்டு பிடித்துக் கொண்டு வந்தாலொழியத் துன்பம் தீரமாட்டாது,'' என்றது.

மந்திரக்கல்லை மீட்க முயற்சி

அந்தக் கல்லை வாங்கிக்கொண்ட வணிகர்கள் அதன் பெருமையால் உண்டாகிய பெரிய மாளிகையிலேயே

குடியாக நிலைத்து வாழ்ந்துகொண்டிருந்தனர். இந்த மூன்று விலங்குகளும் அந்தக் கல்லைப் பெறுவதற்காக அவ்விடஞ்சென்றன. அவ்வரண்மனையிருக்குமிடத்திற்குச் சென்றபோது கரடி மற்றவைகளைப் பார்த்து, "முதலில் எலியார்தாம் உள்ளே நுழைந்துபோய் அங்குள்ள நிலையைக் கண்டறிந்துகொண்டு வரவேண்டும். அக்காரியம் எலியாராலன்றி வேறு யாராலும் முடியாது," என்று கூறியது. எலி அதற்கு உடன்பட்டு ஒரு சிறு சாளரத்தின் வழியாகத் தனியே அம்மாளிகைக்குட் சென்றது. அங்குள்ள நிலைமைகளைப் பார்த்துக்கொண்டு விரைவாகத் திரும்பியது. தன்னுடைய நண்பர்களைப் பார்த்து, "நம்முடைய முயற்சி வீண்தான். நம்முடைய கல் ஒரு பெரிய நிலைக்கண்ணாடியின் கீழ்ப் பட்டுநாடாவில் கட்டித் தொங்குகிறது. அதற்கு இருபுறமும் பெரும்புலிபோல் இரண்டு பூனைகள் காவல் காத்துக்கொண்டிருக்கின்றன. நான் என்ன செய்கிறது?" என்று கூறியது. இதனைக் கேட்டுக் குரங்கும் கரடியும், "இதற்காக நீ அஞ்சாதே! மாளிகைக்குள்ளே போய் இரவு வரையில் சமயம் பார்த்துக்கொண்டிரு. இரவில் வீட்டுக்கார வணிகன் நன்றாகத் தூங்கியவுடனே நீ மெல்ல அவனுடைய படுக்கைமேற் சென்று அவன் மூக்கைக் கடித்து மீசை மயிரையும் வலியப் பிடித்து இழுத்துவிட்டு ஒளித்துக்கொள். பிறகு எல்லாம் நமக்கு நன்மையாகவே முடியும்," என்றன.

எலி மூக்கைக் கடித்தல்

அந்த முடிவுப்படியே எலி உள்ளே நுழைந்து வணிகனுடைய மூக்கைக் கடித்தது. அவன் வலி பொறுக்க முடியாமல் மிகுந்த சினத்துடன் விழித்தெழுந்தான். "சோற்றுக்குக் கேடாக இந்தப்பூனைகளை நாமேன் வைத்து வளர்க்கவேண்டும்? எலி வந்து என்னுடைய மூக்கைக் கடிப்பதும் இவைகளுக்குத் தெரியவில்லையே! இத்தகைய சோம்பேறிப் பூனைகள் இருப்பதால் என்ன பயன்?" என்றுகூறி அவைகளை அடித்து வெளியே துரத்திவிட்டான். எலிக்குத் தான் நினைத்த காரியம் கைகூடிற்று.

கல்லைக் கைப்பற்றுதல்

மறுநாள் இரவு வணிகன் படுத்து நன்றாக உறங்கின பிறகு எலி சிறிதும் சந்தடி செய்யாமல் உள்ளே நுழைந்து அந்தக் கற்குண்டு கட்டியிருக்கும் இடத்திலேறி அது கட்டிய நாடாவை இழுத்துக் கடித்தது. கற்குண்டு அதிலிருந்து விடுபட்டுக் கீழே விழுந்தது. உடனே எலி மிகுந்த களிப்புடன் அதை வெளிப்புறத்துக் கதவு வரையில் மெல்ல உருட்டிக்கொண்டு வந்து சேர்த்தது. கதவு பூட்டியிருந்தபடியினால் பிறகு எலி வெளிப்புறம் கொண்டு வர முடியாமல் கதவில் உள்ள ஒரு துளையின் வழியாக வெளியே வந்து அச் செய்தியைத் தன் தோழர்களுக்கு அறிவித்தது. குரங்கு, "இஃதொரு பெரிய காரியமா," என்று தன்னுடைய நீண்ட கையை அச் சாளரத்தின் வழியாய் உட்புறத்திலே போட்டு அந்தக் கல்லை எளிதாக வெளியில் எடுத்துக்கொண்டது. மூன்றும் புறப்பட்டுக் கடற்கரைக்குப் போய்ச் சேர்ந்தன.

கடலிற் செல்லுதல்

கடற்கரையிலே போய்நின்று அம்மூன்றும் 'நாம் நம்முடைய தலைவன் இருக்கும் இடத்திற்கு எவ்வாறு போய்ச் சேருகிறது' என்று எண்ணமிட்டன. கரடியானது, "நீங்கள் அதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். நான் நீந்திப்போகிறேன். குரங்கார் என் முதுகில் உட்கார்ந்து கல்லை வாயில் கவ்விக்கொண்டு என்னை இரண்டு கைகளாலும் உறுதியாகப் பிடித்துக்கொண்டு வரலாம். எலியார் என்னுடைய காதில் உட்கார்ந்துகொள்ளட்டும்," என்றது. இந்த ஏற்பாட்டின்படி மூன்றும் கடலிற் சென்றுகொண்டிருந்தன.

கல் கடலில் விழுதல்

சிறிது தொலை சென்றதும், கரடியால் வாயை மூடிக் கொண்டு சும்மா போக முடியவில்லை. அது வாயாடத் தொடங்கிற்று. குரங்கைப் பார்த்து, 'குரங்கு நயினாரே! நாம் நல்ல வேலை செய்து கல்லைக் கைப்பற்றினோம். நாம்

செய்தது நல்ல வேலையல்லவா?'' என்று கேட்டது. குரங்கினுடைய வாயிலே கல் இருந்தபடியால் அது வாயைத் திறந்து யாதும் பேச முடியாமல் இருந்தது. குரங்கு யாதும் மறுமொழி பேசாமல் இருப்பதைக் கண்ட கரடியானது, "நீ இவ்வாறு மறுமொழி கூருமல் இருப்பது ஒழுங்கல்ல. உன் அருமைத் தோழனை என்னேடு பேசுவதற்கு உனக்குப் பிடிக்கவில்லையா?'' என்று கேட்டது. குரங்கானது கரடிக்கு எங்கே சினம் உண்டாகிறதோ என்று அஞ்சியது. அது மேலும் வாயை மூடிக்கொண்டிராமல், வாயைத் திறந்து, "நீ என்ன மூடத்தனமாகப் பேசுகிருய்? வாயில் கல்லை வைத்துக்கொண்டிருக்கிற நான் உனக்கு எப்படி மறுமொழி கூறுகிறது? இப்போது அந்தக் கல் கீழே வீழ்ந்து போயிற்றே. இஃது உன்னுடைய குற்றத்தினலேதான் நேரிட்டது,'' என்றது. குரங்கின் வாயில் இருந்த கல் கடலில் வீழ்ந்து மூழ்கிப்போய் விட்டது.

கல்லையெடுக்கச் சூழ்ச்சி

குரங்கு கூறியதைக்கேட்ட கரடியானது, "ஆம்; அஃது என்னுடைய குற்றமே. நீங்கள் அதற்காக என்னிடத்தில் சினங்கொள்ளவேண்டாம். மிகு விரைவில் நாம் அந்தக் கல்லைக் கண்டெடுத்துக்கொள்ளலாம்,'' என்றது. பிறகு அதன்பொருட்டு ஒரு சூழ்ச்சி செய்து கடலில் உள்ள தவளை முதலிய உயிர்த்தொகைகளையெல்லாம் வரவழைத்து, "ஐயோ எளிய உயிர்களே! உங்களைக் கொல்லக் கொடிய பகைவன் ஒருவன் வருகிருன். நீங்கள் கடலில் உள்ள கற்களையெல்லாம் விரைவாக எடுத்து வெளியே போடுவீர்களானல் அப்பகைவன் வரமுடியாமல் நாங்கள் பெருஞ்சுவர் ஒன்று எடுத்து உங்களைப் பாதுகாக்கிருேம்,'' என்றன.

கல்லை மீட்டல்

பகைவன் என்ற பேச்சைக் கேட்டு நீர்வாழ் உயிர்களெல்லாம் அஞ்சின. கடலில் கிடந்த கற்களையெல்லாம்

பொறுக்கிக் கொண்டுவந்து கரைமேல் சேர்த்தன. அவற்றுள் ஒரு பெருந் தவளை பட்டுநாடாவில் கட்டித்தொங்கும் அந்தப் புதுமையான கல்லைத் தூக்கிக்கொண்டு வந்தது. அதனைக்கண்டு கரடி களிப்படைந்தது. பிறகு தான் அதனை எடுத்துக்கொண்டது.

முடிவுரை

பிறகு அந்தக் கல்லை எடுத்துக்கொண்டு மூன்றும் நடுக்கடலில் மிதந்துகொண்டிருந்த பெட்டியிடம்போய்ச் சேர்ந்தன. கல்லின் உதவியால் பெட்டியின் மூடியைத் திறந்தன. நாடோடி பசியினால் இறந்து போகக்கூடிய நிலையில் இருந்தான். விலங்குகள் கல்லை அவனுடைய கையில் கொடுத்தன. அதை வாங்கிக்கொண்ட உடனே அவன் தான் ஒரு பெரிய அரசனைப்போலச் சிறந்த நிலையிலே உயர்ந்திருக்கவேண்டும் என்று எண்ணினான். மறு கணத்தில் அவன் இருக்குமிடம் ஒரு சிறந்த அரண்மனையாகச் சிறந்து திகழ்ந்தது. பிறகு அவன் அவ்விடத்திலேயே நன்றி மறவாத தன்னுடைய தோழர்களோடு நெடுங்காலம் நல்வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தான். பிற உயிர்களிடத்திலே அன்பு செலுத்தி இரக்கங்கொள்பவர்கள் சிறந்த நிலையில் விளங்குவார்களேயல்லாமல் அழிந்துபோகமாட்டார்கள் என்பது இக்கதையினால் நன்கு பெறப்படுகிறது.

---

௩௩. ஆசிரியனை மிஞ்சிய மாணவன்

ஓர் அரசனும் அறிஞனும்

ஓர் அரசன் தன்னுடைய பகைவனுக்கு நாட்டைத் தோற்றுவிட்டுத், தன்னுடைய மனைவி மக்களுடன் ஊர் ஊராகச் சுற்றிக்கொண்டு திரிந்தான். ஓர் ஊரிலே புகழ் பெற்ற ஓர் அறிஞனைக் கண்டான். அவனுடைய புகழ் எல்லாவிடங்களினும் பரவியிருந்தது. ஆகவே அவனிடம் தன் மக்களை விட்டுக் கல்வி பயிலச்செய்யலாம் என்று

எண்ணினான். அவ்வறிஞனைக்கண்டு, "ஓ புலவனே! நான் பகைவர்களோடு போர்செய்து நாடுநகரங்களைத் தோற்றுவிட்டு ஊர் ஊராகச் சுற்றிக்கொண்டு திரிகிறேன். நீ என்னுடைய மக்கள் இருவருக்கும் கைம்மாறு கருதாமல் கல்வி கற்பிப்பாயானால் உனக்கு மிகுந்த நல்வினையுண்டு. ஆகையால் என்னுடையஇந்த வேண்டுகோளை ஒப்புக்கொள்ள வேண்டுகிறேன்," என்று சொன்னான்.

ஆசிரியன் அரசனைப் பார்த்து, "ஓ அரசனே! உன் விருப்பம்போல் செய்கிறேன். ஆனால் உன்னுடைய மக்களில் ஒருவனை எனக்குக் காணிக்கையாகத் தந்துவிட வேண்டும். அவ்வாறு தந்துவிடுதற்கு உடன்படுகிறாயா?" என்று கேட்டான். அரசன் அவ்வாறே ஒருவனைத் தந்துவிடுவதாக இணங்கினான். அரசனைப் பார்த்து அறிஞன், "சரி; நான் இரண்டு பேருக்கும் நன்றாகக் கல்வி கற்பிக்கிறேன். பத்தாண்டுகளுக்குப் பிறகு திரும்பவந்து உனக்கு விருப்பான ஒரு பையனை அழைத்துக்கொண்டு போ," என்று சொல்லி விடைகொடுத்து அனுப்பிவிட்டான்.

ஆசிரியன் வஞ்சகம்

ஒருவன் எவ்வளவு அறிவுடையவனாக இருந்தாலுஞ் சரி, வஞ்சகம் சூது வாது முதலிய தீக்குணங்கள் அவனை விடுகிறதில்லை. அறிவு பெரிதாகப் பெரிதாக இத் தீக்குணங்களும் பெரிதாகி விடுகின்றன. திருவள்ளுவர் கூறியபடி கற்றதற்கு ஏற்பப், புன்மைக் குணங்களையெல்லாம் ஒழித்து நல்லவர்களாக விளங்குவோர் உலகில் மிகச் சிலரே. அரசனுடைய மக்களை ஏற்றுக்கொண்ட அறிஞன் அறுபத்து நான்கு வகையான கலைகளையும் நன்கு கற்றுத் தேறியிருந்தானாயினும் வஞ்சகக் குணம் மட்டும் அவனை விட்டு நீங்கிலது. அவன் அரசனை ஏய்த்துவிடவேண்டும் என்று தனக்குள்ளே திட்டம் போட்டுக்கொண்டான்.

சிறிய பையனுக்குத் தான் கற்றிருந்த கலைகள் எல்லாவற்றையும் நன்கு கற்பித்தான். பெரிய பையனுக்குச்

சிறிதுகூடக் கல்வி கற்பிக்கவில்லை. பெரியவனைக் கொண்டு வீட்டு வேலைகள் எல்லாவற்றையுஞ் செய்வித்துக்கொண்டான். நாளடைவில் சிறிய பையன் இலக்கண இலக்கியம், காலக்கணிதம், விற்போர், மற்போர், வாட்போர், கள்ளம், கபடு, சூது, வாது, பிற உடலில் நுழைதல் முதலிய ஆசிரியன் அறிந்திருந்த அத்தனை கலைகளிலும் வல்லவனானன். ஆண்டுகள் ஒன்பது சென்றுவிட்டன.

சிறியவன் வஞ்சகம்

கலைகளையெல்லாம் நன்கு கற்றுத்தேறிய இளைய பிள்ளை ஆசிரியனுக்கு ஏற்ற மாணவனாக இலங்கினான். தன்னுடைய ஆசிரியன் தன்னுடைய தாய் தந்தையர்களை ஏய்த்து, மூடனாக விளங்கும் தன்முன்னவனைக் கொடுத்துவிட எண்ணியிருக்கிறான் என்பதை உணர்ந்துகொண்டான். ஒருநாள் இரவு படுத்துக்கொண்டபின் தன்னுடைய உடல் அவ்வாறே கிடக்கத் தான் பறவையுடல் ஒன்றில் நுழைந்துசென்று தாய் தந்தையர்கள் இருக்குமிடத்தை யடைந்தான். அவர்களைப் பார்த்து, "ஆசிரியன் மிகுந்த வஞ்ச நெஞ்சம் உள்ளவனாக இருக்கிறான். அண்ணனுக்கு எத்தகைய கல்வியுங் கற்பிக்க வில்லை. அவனைக் கொண்டு தனக்கு ஆகவேண்டியவேலைகள் எல்லாவற்றையும் செய்வித்துக்கொண்டான். நீங்கள் எங்களில் ஒருவனை அழைக்க வரும்போது அறிவிலியாக இருக்கும் அண்ணனை உங்களிடங் கொடுத்துவிடுவதாக முடிவு செய்துகொண்டிருக்கிறான். நீங்கள் வரும்போது அதற்குத் தக்க ஏற்பாடு செய்வான் நீங்கள் ஏமாந்துபோகாமல் விழிப்புடன் இருந்து சிறியவனாகிய என்னையே அழைத்துக் கொள்ளுங்கள். பிறகு உங்களுக்கு நன்மைகள் உண்டாகும்," என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அரசனும் அரசியும் வருதல்

மேலுஞ் சிறிதுகாலஞ் சென்றன. அரசனும் அரசியும் இனிமேல் அறிஞனிடம்போய் பிள்ளைகளில் ஒருவனை அழைத்துக்கொண்டு வருவோம் என்று எண்ணியவர்

களாய்ப் புறப்பட்டு அறிஞனிடத்திற்கு வந்துசேர்ந்தார்கள். இவர்கள் வருவார்கள் என்பதை ஒருவாறு உணர்ந்திருந்த அறிஞன் இவர்கள் அங்குப்போய்ச் சேருவதற்கு முன்னதாகவே பெரிய பையனை ஆடையணிகளால் அழகுபடுத்திச் சட்டாம்பிள்ளையாக உட்காரவைத்துவிட்டுச் சிறிய பையனைப் படிப்பு நன்கு வராத பையல்களுடைய வரிசைக்குள்ளே நிறுத்திவைத்துக் கைசலிக்குமாறு அடித்து ஒறுத்துக் கல்வி கற்பித்துக்கொண்டிருந்தான். அரசன் அறிஞனாகிய ஆசிரியனைப்பார்த்துப், "பெரியீர்! என்னுடைய பிள்ளைகளுக்குச் சிறிதாவது படிப்பு வந்ததா?" என்று கேட்டான்.

ஆசிரியன் பொய்யுரை

ஆசிரியன் அரசனைப்பார்த்து, "ஓ அரசனே! உன்னுடைய மூத்தமகன் சிறந்த அறிவாளி. ஒருமுறை கூறிய அளவில் எதனையும் உள்ளத்தில் பற்றிக்கொள்ளும் சிறந்த நினைவாற்றல் அமையப்பெற்றவன். எல்லா நூல்களையும் நன்கு கற்றுணர்ந்துகொண்டான். இளையவனோ சுத்த முட்டாள். எத்தனைமுறை சொன்னாலும் எத்தனை அடிகள் அடித்தாலும் அவனுடைய உள்ளத்தில் எதுவுமே ஏறுகிறதில்லை. இவனால் யாருக்கும் ஓர் உப்புக்கல்லுக்குக் கூடப் பயனில்லை. இவர்கள் இரண்டுபேர்களுக்குள் உனக்கு விருப்பமானவனை அழைத்துக்கொண்டுபோ, மற்றவனை எனக்கு ஒப்புவித்திடு," என்று உரைத்தனன்.

அரசன் வேண்டுகோள்

தன்னுடைய மகன் தனக்கு முன்னரே அறிவிப்புக் கொடுத்துள்ளபடியால் இப்பொழுது அரசன் எதுவுமே எண்ணிப்பார்க்கவேண்டிய வேலையில்லாமற் போய்விட்டது. அவன் ஆசிரியனைப்பார்த்து, "ஏ ஆசிரியனே! மிக வருத்தப்பட்டுப் பத்தாண்டுகள் இவர்கள் இருவருக்கும் கல்வி கற்பித்திருக்கின்றாய். இவ்வாறு வருத்தப்பட்டுக் கல்வி கற்பித்த நல்வினையாளனாகிய உனக்கு அறிவற்ற சிறுவனைக் கொடுத்துவிட்டுப் போவேனேயாகில் நான்

நன்றிகெட்டவனாவேன். மேலும் என்னுடைய மனைவியானவள் எப்பொழுது பார்த்தாலும் சிறிய பையனிடமே தன்னுடைய உயிரை வைத்துக்கொண்டிருக்கிறாள். ஆகவே, அறிவாளியாகிய பெரிய பையனை உன்னிடம் விட்டுவிட்டுச் சிறிய பையனையே நாங்கள் அழைத்துக் கொண்டு போவதென்று முடிவுசெய்திருக்கிறோம். ஆகவே தேவரீர் பெரிய பையனை மனம் உவந்து ஏற்றருளல் வேண்டும்,'' என்று சொல்லிப் பணிவுடன் வேண்டிக் கொண்டான்.

ஆசிரியன் ஏமாற்றம்

அரசன் அறைந்த மாற்றங்களைக் கேட்ட ஆசிரியன் பேந்தப்பேந்த விழித்தான். அவனுடைய நிலைமை மிக ஏமாற்றமாக இருந்தது. 'நாம் இவ்வளவு காலம் வருத்தப் பட்டு எல்லாக் கல்வியையும் கற்றுக்கொடுத்தும் பையன் நமக்குப் பயன்படமாட்டான்போல் இருக்கிறதே' என்று எண்ணி ஏங்கினான். ஆனால் அரசனிடம் வாய்திறப்ப தற்கு வழியில்லாமற்போய்விட்டது. இவ்வாறு தந்தைக் குப் போதித்துத் தன்னை ஏமாற்றியது இளையவன்தான் என்றும், சமயம்பார்த்துப் பழிக்குப்பழி வாங்குகிற தென்றும் முடிவுசெய்துகொண்டு மூத்தவனுக்குக் கல்வி போதிக்கலானான்.

சிறியவன் சேவலாய் மாறுதல்

இளைய பையனை அழைத்துக்கொண்டு சென்ற அரசனும் அரசியும் ஓர் ஊரில் தங்கி ஐயமேற்றுக் காலந்தள்ளிக் கொண்டிருந்தார்கள். கல்வியறிவிற் சிறந்த சிறிய பையன் தாய்தந்தையர் ஐயமேற்றுத் தொல்லைப்படுவதைக்கண்டு உள்ளம் வருந்தினான். அவர்கள் சுகமாக வாழ்க்கை நடத்திக்கொண்டிருப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று முடிவு செய்தான். அவன் தன்னுடைய தாய் தந்தையரைப்பார்த்து, "இவ்வூர் அரசனுடைய மகன் கோழிப்பந்தயத்தில் மிகுந்த விருப்பம் உடையவன். நான் கற்றுள்ள கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தையினால் எல்லா

இலக்கணங்களும் பொருந்திய சேவல் வடிவத்தை எடுத்துக்கொள்ளுகிறேன். நீங்கள் என்னை இளவரசனிடத்திற்குக் கொண்டுபோங்கள். அவன் உங்களைப்பார்த்து, 'இந்தச் சேவல் விற்பதா? விலை என்ன?' என்று கேட்பான். நீங்கள் சிறிதும் தயங்காமல் நூறுவராகன் என்று சொல்லுங்கள். அவன் நூறுவராகன் கொடுத்து என்னை வாங்கிக்கொள்வான். நீங்கள் பொருளைப்பெற்றுக்கொண்டு வேருேர் ஊருக்குப்போய்த் தங்கியிருங்கள். நான் அங்கு வந்து உங்களிடம் சேருகிறேன்,'' என்று கூறிவிட்டு உடனே சேவலாக மாறிநின்ருன். உடனே தந்தை அவன் கூறியவாறு விற்றுப் பொருள்பெற்றுக்கொண்டு வேருேர் ஊரிலே போய்த் தங்கியிருந்தான்.

சிறுவன் மீளுதல்

சேவலை வாங்கிய இளவரசன் அதனுடைய சிறப்பைக் கண்டு உள்ளங்களித்தான். அதனைப் பறவைக் கூட்டில் அடைத்து இருப்புக் கூட்டை ஒன்றை மேலே போட்டு மூடி வைக்குமாறு கட்டளையிட்டான். சேவலை வளர்த்துப் பாதுகாக்கும் சேவலாட்களும் அவ்வாறே பாதுகாப்புச் செய்து மூடிவைத்தார்கள். இரவில் சிறுவன் பெருச்சாளியாக உருவமெடுத்துக் கொண்டு தான் அடைக்கப்பட்டிருந்த இடத்தில் இருந்து தெருவரைக்கும் வளைதோண்டிக் கொண்டுபோய்ச் சேர்ந்தான். பிறகு தன்னுடைய மனித வடிவத்தை எடுத்துக்கொண்டு தாய் தந்தையர்கள் தங்கியிருந்த இடத்தை யடைந்தான்.

சிறுவன் குதிரையாக மாறுதல்

எல்லோருஞ் சிறிதுகாலம் சுகமாக வாழ்ந்துகொண்டிருந்தார்கள். தந்தையானவன் தன்னுடைய சிறுவனைப் பார்த்துப், "பொருள் முழுவதுஞ் செலவழிந்துபோய் விட்டது,'' என்று சொன்ஞன். சிறுவன் தன்னுடைய தந்தையைப்பார்த்து, "இவ்வூரில் இருக்கும் அரசகுமாரனுக்குக் குதிரையேற்றத்தில் மிகுந்த விருப்பம் உண்டு. நான் நல்லிலக்கணங்களெல்லாம் அமைந்த ஓர் அழகிய

நல்ல குதிரையாக மாறுகிறேன். நீங்கள் என்னை அவனிடத்திற்குக் கொண்டுபோய் ஆயிரம் வராகனுக்கு விற்றுப் பொருளை யெடுத்துக்கொண்டுபோய் வேறோர் ஊரிலே தங்கி வாழ்ந்துகொண்டிருங்கள். நான் அவ்விடத்திற்கு வந்து சேருகிறேன்,'' என்று கூறி உடனே ஓர் அழகிய சிறந்த குதிரையாக மாறி நின்றான். அரசனும் அவன் மனைவியும் அந்தக் குதிரையை ஓட்டிக்கொண்டுபோய் ஆயிரம் வராகனுக்கு விற்றுவிட்டுச் சுகமாகக் காலந் தள்ளிக்கொண்டிருந்தார்கள்.

ஆசிரியனும் மாணவனும்

இளவரசன் குதிரையின் அழகைப்பார்த்துப் பார்த்து உள்ளங்களித்தான். அச்சமயத்தில் அவ்விளவரசனுடைய ஆசிரியனும் குதிரையாகி நிற்கும் சிறுவனுடைய ஆசிரியனுமாகிய அறிஞன் இளவரசனிடத்திற்கு வந்தான். தன்னுடைய ஆசிரியனை அழைத்துக்கொண்டுபோய்க் குதிரையைக் காட்டினான் இளவரசன். ஆசிரியன் அக் குதிரையைக் கால்முதல் தலைவரை நன்றாக ஆராய்ந்து பார்த்தான். தன்னுடைய அறிவுத் திறமையினாலே தன்னை வஞ்சித்த மாணவன்தான் அவ்வாறு குதிரையாகக் கூடுவிட்டுக் கூடுபாய்ந்திருக்கிறான் என்று ஐயமற உணர்ந்துகொண்டான்.

சமயத்தை நழுவவிடாமல் குதிரையைக் கைப்பற்றித் தண்டித்துத் தன்னுடைய பழியைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று முடிவுசெய்தான். பிறகு தன் மாணவனாகிய அந்த இளவரசனைப்பார்த்து, "அன்ப! இக்குதிரையின் இடத்தில் சிறிதாயினுங் குற்றமில்லை. ஆயினும் இதிலே நீ ஏறக்கூடாது. கண்மூடிக் கண்திறப்பதற்குள் நூறு காதம்பாய்ந்து செல்லக்கூடியது,'' என்று சொன்னான். பிறகு தான் அதன்மேற் பாய்ந்தேறி ஒருநொடிக்குள் நாடுமுழுவதுஞ் சென்று திரும்புமாறு சுற்றியடித்துக் கொண்டு வந்தான். அதனைப் பார்த்த இளவரசன் அக் குதிரையைத் தன்னுடைய ஆசிரியனுக்கே நன்கொடையாக வழங்கிவிட்டான்.

மீனாக மாறுதல்

அதன் பிறகு ஆசிரியன் அக்குதிரையை எவ்வாருயினும் கொறுக்கிவிட வேண்டுமென்று முடிவு செய்தான். ஒரு சேற்றுக் குட்டைக்குக் கொண்டுபோய்த் தண்ணீர் குடிப்பிக்க முயன்முன். குதிரையாக இருக்கும் மாணவன் ஆசிரியனுடைய எண்ணத்தை யறிந்துகொண்டு ஆசிரியனை ஏய்ப்பதற்கு முடிவு செய்தான். அக்குளத்திற் செத்துக்கிடந்த ஒரு மீனின் உடம்பிலே நுழைந்துவிட்டான். குதிரை உடனே உயிர் நீங்கிக் கீழே விழுந்துவிட்டது.

எருமையாக மாறுதல்

தன் மாணவன் கூடுவிட்டுக் கூடுபாய்ந்துவிட்டான் என்பதை உணர்ந்த ஆசிரியன் அக்குளத்தில் உள்ள மீன்களையெல்லாம் பிடித்துக்கொல்லுமாறு கட்டளையிட்டான். வலைஞர்கள் பலர் குளத்தில் இறங்கி வலைவீசி மீன்களைப் பிடித்துக்கொல்லத் தொடங்கினர்கள். அப்பொழுது பறையன் ஒருவன் செத்துப்போன எருமைக் கன்று ஒன்றை இழுத்துக்கொண்டு அப்பக்கமாகச் சென்றுகொண்டிருந்தான். மீன் வடிவாக இருந்த மாணவன் அந்த எருமைக் கன்றுக்குள் நுழைந்துகொண்டான். அவ்வளவில் அவ்வெருமைக் கன்று உயிர்பெற்றெழுந்து நடக்கத்தொடங்கியது. பறையன் மிகுந்த களிப்போடு அதனை ஓட்டிக்கொண்டுபோகத் தொடங்கினன். ஆசிரியன் அப் பறையனைப்பார்த்து, "அடே மூடா! எங்கேனும் செத்துப்போன கன்று உயிர்பெற்றெழுந்ததைக் கண்டிருக்கிருயா? அக்கன்றைப் பேய்பிடித்திருக்கிறது கொன்றுபோடடா பைத்தியக்காரா!" என்று சொன்னன்.

கிளியாக மாறுதல்

ஆசிரியன் சொல்லியதைக்கேட்ட பறையன் எருமைக் கன்றை ஒரு மரத்தில் கட்டிவிட்டுக் கத்தியெடுத்து வருவதற்காக வீட்டிற்குச் சென்முன். மாணவன் மரத்தின் மேல் இறந்து கிடந்த ஒரு கிளிப்பிள்ளையின் உடலில் நுழைந்து பறக்கத்தொடங்கினன். ஆசிரியன் வல்லூருக

மாறிக் கிளியைத் துரத்திக்கொண்டு ஓடினான். கிளி ஒரு பட்டணத்திற்குப்போய் அப்பட்டணத்து இளவரசியின் கையில் இறங்கியது. கிளியை இப்பொழுது யாதுஞ் செய்ய முடியாது என்றுணர்ந்த ஆசிரிய வல்லூறு மாணவக் கிளியை அச்சுறுத்திவிட்டுத் திரும்பிவிட்டது. இளவரசி கிளிக்குத் தங்கக்கூண்டு ஒன்று வாங்கிவரச்செய்து அதிலே விட்டு இனிய உணவுகளை ஊட்டி வளர்த்துக் கொண்டிருந்தாள்.

கிளியும் இளவரசியும்

கிளியாக இருந்த இளவரசன் இரவிலே தன்னுடைய மனிதவடிவத்தை எடுத்துக்கொண்டு இளவரசியை அணைந்து மகிழ்ந்தான். இளவரசி உறக்கம் நீங்கியெழுந்த பிறகு தன்னிடத்தில் காணப்பட்ட வேறுபாடுகளை நோக்கித் திகைத்தாள். மறுநாள் இரவில் உறங்குபவளைப்போல் நடித்து விழித்துக்கொண்டிருந்தாள். இளவரசன் கூட்டிலிருந்து வெளிப்பட்டுத் தன் மனித வடிவத்தோடு இளவரசியிடஞ் சென்றான். இளவரசி அவனுடைய கைகளைப் பிடித்துக்கொண்டு அவனுடைய அழகைப்பார்த்து மிகுந்த வியப்படைந்தாள். "பேரழகு பொருந்திய உனக்குக் கிளி வடிவம் வரவேண்டிய காரணம் என்ன?" என்று உசாவினாள். இளவரசன் தன்னுடைய வரலாறுகள் எல்லாவற்றையும் முதலில் இருந்து முடிவு வரைக்கும் அந்த இளவரசிக்குக் கூறினான். இளவரசி இளவரசனைப் பார்த்து, "நீ இன்னும் எவ்வளவு காலத்திற்கு இவ்வாறு கிளி வடிவமாக இருக்கவேண்டும்?" என்று உசாவினாள். இளவரசன் இளவரசியைப் பார்த்து, "இன்னும் நான்கு நாட்களுக்குப் பிறகு ஒரு தொம்பங் கூத்தாடி உன்னுடைய தகப்பனாரிடத்திற்கு வந்து தன் திறமையைக்கொண்டு வியக்கத்தக்க பல வேடிக்கைகளைச் செய்துகாட்டுவான். அவ்வேடிக்கைகளைப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சியடைந்த உன் தகப்பனார் அக் கூத்தாடியைப் பார்த்து, 'உனக்கு வேண்டியதைக்கேள், தருகிறேன்' என்று கூறுவார். அக் கூத்தாடி வேறொன்றுங் கேளாமல், 'உங்கள் மகள் வளர்க்

கிற கிளியைக்கொடுங்கள்' என்று கேட்பான். உன்னுடைய தகப்பனார், 'என் மகள் வளர்க்கிற கிளியை வாங்கிக்கொண்டு வாருங்கள்' என்று சொல்லி உன்னிடத்திற்கு ஆளனுப்புவார். அப்பொழுது முதலில் நீ, 'நான் அக் கிளியைக் கொடுக்கமாட்டேன்' என்று கூறு. மறுபடியும் வாங்குவதற்கு ஆள்வந்தால் நீ உடனே என்னுடைய கழுத்தை முறித்து எறிந்துவிடு. பிறகு அக் கூத்தாடி உன்னுடைய முத்துமாலையைக் கேட்பான். அப்பொழுது நீ மிகுந்த சினங்கொண்டவளைப்போல நடித்து முத்துக்கள் சிதறுமாறு முத்துமாலையை அறுத்தெறிந்துவிடு. பிறகு நடக்கிற புதுமைகளையெல்லாம் உன்னுடைய கண்களாற் பார்ப்பாய்,'' என்று எதிர்காலச் செய்திகளை இயம்பினான்.

நவின்ற வண்ணம் நடைபெறுதல்

இளவரசன் இளவரசியிடத்தில் முற்கூறியவாறு செய்தி சொல்லிய பிறகு நான்கு நாட்கள் சென்றன. ஒரு தொம்பங் கூத்தாடி அரசனிடத்திற்கு வந்தான். அவன் அரசன் மகிழுமாறு பல வேடிக்கைகளைச் செய்து காட்டினான். அரசன் அவனுடைய வேடிக்கைகளை வியந்து புகழ்ந்தான். "உனக்கு வேண்டியதைக்கேள் தருகிறேன்,'' என்றான். கூத்தாடியாக வந்தவன் பழிதீர்த்தற்கு வந்த ஆசிரியனாகையால் அவன் அரசனைப் பார்த்துத், "தங்கள் மகளிடத்தில் உள்ள கிளியை எனக்கு வாங்கிக்கொடுங்கள். அக் கிளி எனக்கு மிகவும் பிடித்ததாக இருக்கிறது,'' என்றான். அரசன் தன்மகளிடத்தில் உள்ள கிளியை வாங்கி வருமாறு ஆளனுப்பினான். இளவரசி, "அதனைக் கொடுக்கமுடியாது,'' என்று மறுமொழி கூறியனுப்பினாள். அரசன் கூத்தாடியைப் பார்த்து, "என் மகள் கிளியைக் கொடுக்கமாட்டேன் என்கிறாள். வேறு ஏதேனும் கேள்,'' என்று கூறினான். கூத்தாடி அரசனைப் பார்த்து "வேறு எதுகொடுத்தாலும் எனக்கு வேண்டியதில்லை. அக் கிளியைத்தான் வாங்கிக்கொடுக்கவேண்டும்,'' என்று சொல்லி வற்புறுத்தினான். "'அத்தகைய கிளி எத்தனை வேண்டுமானாலும் நான் வாங்கித் தருகிறேன்;

இதனை இப்பொழுது சமயத்திற்குக் கொடு' என்று நான் கேட்பதாகச் சொல்லிக் கட்டாயப்படுத்தி வாங்கிக் கொண்டு வாருங்கள்,'' என்று மீளவும் ஆளனுப்பினான். இரும்பவும் ஆள்வந்து கேட்பதைக்கண்ட இளவரசி மிகுந்த சினம் அடைந்து அக் கிளியின் கழுத்தை முறித்துக் கிளியை வாங்க வந்தவர்கட்குமுன் எறிந்து விட்டாள். இதனை ஆட்கள் அரசனிடம் சொன்னார்கள். அரசன் கூத்தாடியைப்பார்த்துச் "சரி; கிளி இறந்துபோய் விட்டது; வேறே என்ன வேண்டும்?'' என்று கேட்டான். "உங்கள் மகள் தன்னுடைய கழுத்திலே அணிந்துள்ள முத்துமாலையை வாங்கிக்கொடுங்கள்,'' என்று கூத்தாடி கேட்டான். அரசன் தன் மகள் கழுத்தில் அணிந்துள்ள முத்துமாலையை வாங்குதற்கு ஆளனுப்பினான். தகப்பனாருடைய கட்டளையைக் கேட்ட இளவரசி மேலுஞ் சினங் கொண்டு முத்துமாலையை அறுத்து எறிந்துவிட்டாள். முத்துக்களெல்லாம் புழுக்களாக மாறிப் பலபக்கங்களினும் நெளிந்து ஊரத்தொடங்கின. இதனை உணர்ந்த கூத்தாடி தான் கோழியுடலையெடுத்துக்கொண்டு அப் புழுக்களை மூக்கினால் குத்திக் கொலைசெய்யத் தொடங்கினான்.

பூனையாக மாறுதல்

புழுக்களில் ஒன்று திடீரென்று பூனையாக மாறி அக் கோழியின் கழுத்தை வாயினாற் பற்றிக் கொண்டது. அவ்வளவில் கோழி திணறிக் கீழே விழுந்து உதைத்துக் கொண்டது. அது மனித மொழியில், "மாணவனே! எனக்கு நல்லறிவு வந்துவிட்டது. இனிமேல் உன்னுடைய வழிக்கு வரமாட்டேன். அருள்புரிந்து என்னுடைய உயிரைக் காப்பாற்றி எனக்கு உயிர்ப் பிச்சை கொடுத்த நல்வினைப் பயனைக் கட்டிக்கொள்,'' என்று வேண்டிக் கொண்டது.

மாணவன் கடுஞ்சொல்

கோழி கூறியதைக் கேட்ட பூனை, "ஒ தீவினையாளனே! உன்னுடைய வஞ்சனைகளெல்லாம் வெட்ட

வெளியாகிவிட்டது. உன்னுடைய பொய்ம்மொழிகட்கு நான் சிறிதும் மதிப்பு வைக்கமாட்டேன். ஆசிரியன் என்று எண்ணி உனக்குச் சிறிதும் இரக்கங் காட்டுதல் கூடாது. என்னுடைய தமையனுக்கு ஓரெழுத்தாயினுங் கற்பியாமல் வஞ்சகம் செய்து அவனைக் கொண்டு உனக்கு ஆகவேண்டிய வேலைகளையெல்லாஞ் செய்வித்துக் கொண்டாயன்றோ? மேலும் அவனை என் தாய் தந்தையர்க்குக் கொடுத்து ஏய்க்கவும் எண்ணினாய். அந்தப் பொல்லாத சூழ்ச்சிகளுக்கெல்லாம் இப்பொழுது பலனை அடை," என்றுகூறி மேலும் நெருக்கத் தொடங்கினான்.

அரசன் குறுக்கிடுதல்

அம் மொழிகளைக் கேட்டு அரசன் குறுக்கிட்டுப், "பெரியோர்களே! உங்களுடைய வரலாறுகளையெல்லாம விளக்கமாகச் சொல்லுங்கள்," என்று வேண்டிக் கொண்டான். பூனை உருவில் இருந்த இளைஞன் தங்களுடைய வரலாறுகளையெல்லாம் அரசனுக்குக் கூறினான். அரசன் குருவினிடத்தில் உறுதிமொழி பெற்றுக் கொண்டு அவர்களுடைய போரை நிறுத்திவிடச் செய்தான். ஆசிரியனும் மாணவனும் தங்களுடைய உண்மை வடிவத்துடன் தோன்றி நின்றார்கள்.

நலம் பெறுதல்

அரசன் ஆசிரியனுக்கும் மாணவனுக்கும் ஏற்பட்டிருந்த பகைமையைப் போக்கினான். தன்னுடைய மகளை இளவரசனுக்குத் திருமணஞ் செய்து கொடுத்தான். திருமணத்திற்கு இளவரசனுடைய பெற்றோர்களையும் அழைப்பித்தான். தொம்பங் கூத்தாடியாக வந்த ஆசிரியனிடமிருந்த பெரிய பையனையும் தன்னுடைய சம்பந்தியரசனிடம் ஒப்புவிக்கச் செய்து அவனுக்குந் திருமணஞ் செய்து வைத்தான். தனக்கு ஆண் வழிமுறை இல்லாதபடியினால் தன்னுடைய நாட்டை அந்த இளவரசர்களுக்கே மணிமுடி சூட்டினான். பிறகு அந்த இளவரசர்கள் நால்வகைப் படைகளோடுஞ் சென்று தங்களுடைய

நாட்டைக் கைப்பற்றின பகையரசனோடு போர்செய்து தங்கள் நாட்டையும் மீட்டுக்கொண்டு நெடுங்காலம் இனிது வாழ்ந்திருந்தார்கள்.

அ௬. வலைஞனும் பூதமும்

பூதந்தோன்றுதல்

ஒரு பட்டணத்திலே ஒரு வலைஞன் இருந்தான். அவன் நாள்தோறும் மீன் பிடித்து விற்று அதனால் வரும் பொருளைக் கொண்டு வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தான். ஒரு நாள் காலையில் அவன் மீன் பிடிக்கத் தொடங்கினான். வலையை வீசி இழுத்தான். அது மிகவுங் கனமாக இருந்தது. அதனைக் கண்ட அவன் மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். 'இன்றைக்கு எனக்கு நல்லநாள். வலைநிறையப் பெரிய பெரிய மீன்களாக அகப்பட்டிருக்கின்றன போல் தெரிகிறது' என்று சொல்லிக் களித்தவனாய் வலையை மேலுக்கு இழுத்தான்.

வலையில் மீன்கள் அகப்படவில்லை. செப்புப் பீப்பாய் ஒன்று சிக்கிக்கொண்டிருந்தது. வலைஞனுக்கு மேலும் எண்ணம் அதிகரித்தது. பீப்பாய்க்குள் நிறையப்பொருள் இருக்கும். மீனைக்கொண்டுபோய் விற்றுக் கொண்டிருப்பதைவிடப் பொருளாகவே கொண்டு போவது மிகவும் நல்லதன்றோ? மீனுக்குப் பதிலாகப் பொன் கிடைத்திருப்பது பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் ஆயிற்று' என்று தனக்குத் தானே சொல்லி மனக்கோட்டை கட்டினான்.

பீப்பாயை வீட்டிற்குக் கொண்டு போய்த் திறந்து பார்க்கலாம் என்று முடிவு செய்தான். அதனை உருட்டிக் கொண்டு போவதற்கு முயன்றான். அது மிகவுங் கனமாக இருந்தது. அதனை வீடுவரையில் புரட்டிக் கொண்டு போவது இயலாது என்று உணர்ந்தான்.

விரைவாக வீட்டிற்கு ஓடினான். உளியும் கோடரியும் கொண்டு வந்தான். கோடரியால் அடித்து உடைத்து மூடியைத் திறந்தான். மூடி அகன்ற அளவில் வானமளாவும்படி மிகுந்த புகையுண்டாயிற்று. அப் புகை ஒரு நொடிக்குள் பெரிய பூதமாக மாறிவிட்டது.

அது வலைஞனைப் பார்த்து, "ஆ" என்று வாயைத் திறந்தது. "உன்னை விழுங்குவேன்," என்று சொல்லிப் பெருமுழக்கஞ் செய்தது. பூதத்தைக் கண்ட குடியானவன் அஞ்சிக் கிடுகிடு என்று நடுங்கினான். "இஃதேது தொல்லையாக முடிந்துவிட்டது. 'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது' என்று உலகத்தார்கள் கூறுவார்கள். நாமோ மீன் பிடிக்க வந்து பூதம் புறப்பட்டதே," என்று ஒரு கணப்பொழுது எண்ணினான். இவன் வலைஞனாக இருந்த போதினும் அறிவும் ஆற்றலும் அமையப் பெற்றவன். ஆகவே பூதத்தோடு உரையாடவும் அதனிடம் இருந்து தப்பித்துக் கொள்ளவும் வழிதேடினான்.

பூதத்தை வேண்டுதல்

பூதத்தைப் பார்த்து, "ஓ பூதமே! நான் உன்னை இச் சிறைக்குள் இருந்து வெளிப்படச் செய்தேனே யல்லாமல் உனக்கு எத்தகைய தீமையுஞ் செய்தவனல்லன். உதவி செய்தவர்களுக்குத் தீமை செய்வது உன்னைப் போன்ற பெருந்தகையாளர்கட்கு அறமன்று. என்னுடைய வழிக்கு வராமல் விட்டுவிட்டுப் போய்விடு," என்று சொல்லிப் பலவாறு கெஞ்சிக் கூத்தாடினான்.

பூதம் புகலுதல்

பூதம் வலைஞனைப் பார்த்து, "ஓ மனிதனே! நான் செய்யப் போவதில் தவறு ஒன்றும் இல்லை. நான் கூறுவதைக் கேள். முன்னாளிலே ஒரு முனிவனுக்கு என்மீது மிகுந்த சினம் உண்டாகிவிட்டது. அவன் தன்னுடைய தவச் செருக்கினால் என்னை எளிதாகப் பிடித்து இந்தப் பீப்பாயிலே அடைத்து நடுக்கடலிலே எறிந்துவிட்டான். நான் இந்தப் பீப்பாய்க்குள் அகப்பட்டுக் கொண்டதும்

மூச்சுவிட முடியாமல் திக்குமுக்காடிப் படபடவென்று உதைத்துக் கொண்டேன். எனக்கு ஏற்பட்ட துன்பஞ் சொல்லமுடியாது. நூறு ஆண்டுகளுக்குள் எவன் என்னை இந்தச் சிறையினின்றும் விடுவிக்கிருனே அவனைப் பெருஞ் செல்வன் ஆக்கிவிடுறது என்று எண்ணினேன். அப் பொழுது எவனும் விடுவிக்க வில்லை

"அதன் பிறகு நூறு ஆண்டுகளுக்குள் விடுவிப்ப வனைப் பெரிய சக்கரவர்த்தியாக்கி விடுவதற்கு ஊக்கம் உள்ளவனாக இருந்தேன். அப்பொழுதும் எவனும் விடுவிக்க வில்லை. அதனால் என்னுவி தளர்ந்து நொந்து சிதைந்தது. பிறகு பீப்பாய்க்குள் இருப்பது பழக்கமாகிவிட்டது. அதன் பிறகு நான் என்னை இப் பீப்பாய்க்குள் இருந்து வெளிப் படுத்துபவனை உடனே பிடித்து விழுங்கி விடுவது என்று உறுதி செய்துகொண்டேன். அந்தப் பழிக்கு நீ உரியவ னாகிவிட்டது உனது தீவினையே யாகும். ஆகவே நான் உன்னைவிட மாட்டேன் நீ எனக்கு இரையாக வேண்டிய வன்தான்," என்று சொல்லிக் கொண்டே வலைஞனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது.

வலைஞன் சூழ்ச்சி

பூதம் புகன்றதைக் கேட்ட வலைஞன், 'நாம் இப் பூதத் திற்கு இரையாவது உறுதிதான். நம்முடைய பொல்லாத காலந்தான் நம்மைப் பிடித்து இவ்வாறு சிக்கவைத்திருக் கிறது. ஆயினும் முயற்சி செய்து பார்ப்போம். துன்பம் வந்த போது அஞ்சித் தளர்ந்து விடுகிறவன் ஆண்மை யாளனாகான்' என்று பலவாறு எண்ணினான். பூதத்தைப் பார்த்து, "ஓ பூதமே! நீ என்னை விழுங்கினால் விழுங்கி விட்டுப் போ. ஆனால் எனக்கு ஏற்பட்டிருக்கிற ஒரே ஓர் ஐயத்தை மட்டும் நீக்கி விடு. அஃதென்னை என்பாயேல் கூறுகிறேன் கேள். மிகப் பெருவடிவத்தைக் கொண் டுள்ள நீ இந்தச் சிறிய பீப்பாய்க்குள் இருந்துதான் வந்த தாகக் கூறுவாயேல் நான் அதனை ஒருநாளும் நம்பமாட் டேன். மூன்றுமுழ நீளங்கூட இல்லாத இந்தப் பீப்பாய் எங்கே; விண்ணையளாவி வளர்ந்திருக்கிற உன்னுடைய

விசுவரூபம் எங்கே? அதுவுமன்றி நான் பீப்பாயின் மூடியைத் திறக்கையில் புகையெழும்பியதே யல்லாமல் உன்னுடைய வடிவத்தைச் சிறிதுகூடக் காணவில்லையே," என்று கூறினான்.

பூதத்தின் மடமை

வலைஞனுடைய சூழ்ச்சி பலித்துவிட்டது. "நான் இதோ உன்னுடைய ஐயத்தை ஒழிக்கிறேன் பார்," என்று கூறிக் கொண்டே பூதம் மீண்டும் புகையாக மாறி அந்தப் பீப்பாய்க்குள்ளே நுழைந்தது. பூதம் இவ்வாறு நுழைய வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்த வலைஞன் சிறிதுந் தாழ்க்காமல் திடீரென்று மூடியைத் தூக்கிப் போட்டுப் பீப்பாயை மூடினான். கைக்கோடரியினால் ஆணிகளையெல்லாம் இறுக அடித்து அப் பூதத்தால் சிறிதும் அசைக்க முடியாதபடி செய்துவிட்டான்.

பூதத்தின் உறுதிமொழி

மடமையினாலே திரும்பவும் பீப்பாய்க்குள் சிக்கிக் கொண்ட அப்பெரும் பூதம் "படபட" என்று உதைத்துக் கொண்டது. "லபலப" என்று அடித்துக் கொண்டது. அதனுடைய குடுமி வலைஞனிடஞ் சிக்கிக் கொள்ளவே அது கெஞ்சிக் கூத்தாடத் தொடங்கியது. "ஓ என் ஆருயிர் நண்பனே! என்னால் மூச்சுவிட முடியவில்லை. நான் இன்னுஞ் சிறிது நேரம் இங்கிருப்பேனேயானால் கட்டாயம் இறந்து போவேன். உன்னுடைய வழிக்கு நான் இனிமேல் வருவதில்லை. அருள்கூர்ந்து மூடியைத் திறப்பாயாக," என்று சொல்லிப் பலவாறு பணிவுடன் வேண்டிக் கொண்டது.

பூதம் புகன்றதைக் கேட்ட வலைஞன், "போதும் போதும்; உன்னுடைய தகுதி நன்றாகத் தெரிந்து விட்டது. முன்பு அறிவில்லாமல் மூடியைத் திறந்து பெரிய தொல்லைக்குள்ளே அகப்பட்டுக் கொண்டேன். பீப்பாய்க்குள் பொருள் இருக்கும் என்று எண்ணி ஏமாந்து மூடியைத் திறந்து விட்டேன். பீப்பாய்க்குள் நீ இருக்கிற செய்தியை

நான் முன்னரே அறிந்திருப்பேனாயின் பீப்பாயைத் திறந்தும் இருப்பேனோ? ஒருவன் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குவதற்குமுன் நன்றாக ஆராய்ந்து பார்த்துச் செய்யத் தொடங்குதல் வேண்டும் என்றும்; அவ்வாறு ஆராய்ந்து பார்க்காமல் செய்துவிட்டால் பிறகு தொல்லையேற்படும் என்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் அதனைக் கேள்விப்பட்டிருந்தும் மடத்தனத்தினாலும் பேராசையினாலும் மூடியைத் திறந்துவிட்டேன். ஒருவர் ஒருமுறை செய்த பெருந்தவற்றை மீண்டுஞ் செய்வார்களா? வெளியே வந்த நீ எனக்குச் செய்ய முயன்ற உதவியை நான் மறந்துவிடுவேனோ? பீப்பாய்க்குள் இருப்பதே உனக்குப் பழக்கமாகி விட்டதாகச் சிறிது முன்புதானே கூறினாய்? அதனை அதற்குள்ளாகவா மறந்து விட்டாய்?" என்று பலவாறு பேசினான்.

இவன் கூறியதைக்கேட்ட பூதம், 'இவன் பீப்பாயைத் திறந்து நம்மை வெளியே விடாமல் எங்கே ஓடிப் போகிறானோ' என்று மிகவும் அஞ்சியது. "உனக்கு மிகுந்த பொருள் அகப்படுவதற்கான வழியை நான் காட்டுகிறேன். உனக்கு எத்தகைய தொல்லையும் உண்டாக்க மாட்டேன்," என்று உறுதி கூறியது. பலவாறு தெய்வங்களின்மீது ஆணையிட்டுக் கொடுத்தது. அதற்குப் பிறகு மூடியைத் திறந்தான். முன்போலவே அப் பூதம் வெளிப்பட்டு நின்றது. பீப்பாயை உதைத்துக் கடலுக்குள் தள்ளி விட்டது.

நன்மை செய்தது

பீப்பாயைப் பூதம் உதைத்துக் கடலுக்குள் தள்ளியதைக் கண்டதும் வலைஞனுடைய முகம் வெளுத்துப் போய் விட்டது. பூதம் வலைஞனுடைய நடுக்கத்தைப் பார்த்து நகைத்தது. அவனுடைய முதுகிலே தட்டிக் கொடுத்தது. "நண்பனே! அஞ்சாதே. நான் உனக்குத் தீமை செய்ய மாட்டேன்," என்று கூறியது. "என் பின்னே வா" என்று சொல்லி வலைஞனை அழைத்துக் கொண்டு ஊருக்கு வடக்குப் பக்கமாகச் சென்றது. காத தொலைக்கு அப்பால்

இருந்த ஒரு மலையின்மேல் ஏறச் செய்தது. அதற்கு அப்பால் நான்கு மலைகளை வலைஞனுக்குக் காட்டியது. "அந்த நான்கு மலைகளுக்கும் நடுவில் ஒருகுளம் இருக்கிறது. அதில் நாளுக்கொரு முறை வலை வீசுவாயானால் புதுமையான நிறங்கள் உள்ள நான்கு மீன்கள் அகப்படும்; அவைகளை அரசனிடம் கொண்டுபோய்க் கொடுப்பாயானால் உன்னுடைய ஆசை அடங்குமாறு மிகுந்த பொருள் கிடைக்கும்,'' என்றுகூறி மாயமாய் மறைந்து போய்விட்டது.

மீன்கள் அகப்படுதல்

வலைஞன் பூதங்காட்டிய குளத்திற்குப் போய் வலை வீசினான். சிவப்பு, வெள்ளை, கறுப்பு, மஞ்சள் என்னும் நால்வகை நிறங்களையுந் தனித்தனியே கொண்ட நான்கு மீன்கள் அகப்பட்டன. அவைகளைக் கொண்டுபோய் அரசனிடம் கொடுத்தான். அரசன் அம் மீன்களைப் பார்த்துக் களித்து வலைஞனுக்கு ஆயிரம் வராகன் கொடுத்து அனுப்பினான். மீன்களை மடைப்பள்ளிக்குக் கொண்டு போய்ச் சமைக்குமாறு சமையற்காரனுக்குக் கட்டளையிட்டான். சமையற்காரன் மீன்களைக் கொண்டு போய் நெய் யூற்றி வறுத்துச் சமைத்துக் கொண்டிருந்தான்.

புதுமையான நிகழ்ச்சி

பக்கத்திலே இருந்த சுவரில் ஒரு வெடிப்பு இருந்தது. அந்த வெடிப்பிலே இருந்து ஒரு கட்டழகி வெளிப்பட்டாள். அவள் மீன்களைப் பார்த்து, "மீன்களே! விழிப்புடன் இருங்கள்,'' என்று கூறிவிட்டு மறைந்துவிட்டாள். அவ்வளவில் அம் மீன்கள் நான்கும் கருகிக் கரியாகிக் கீழே விழுந்தன. அதைக் கண்டு சமையல்காரன், 'அந்தோ! மீன்கள் கெட்டுப் போயினவே; அரசன் யாது செய்வானோ' என்று அஞ்சி நடுங்கினான். விரைவாக ஓடிப்போய்ச் அச் செய்தியை அமைச்சனிடம் தெரிவித்தான்.

அமைச்சன் வியப்படைந்தான். வலைஞனுக்கு மறு நாளும் ஆயிரம் வராகன் கொடுத்து நான்கு மீன்களைக் கொண்டு வரச்செய்தான். தானும் பக்கத்தில் இருந்து

கொண்டு சமைக்கச் செய்தான். முதல்நாளைப் போலவே நிகழ்ந்தது. அந்தப் புதுமையை அமைச்சன் அரசனுக்குத் தெரியப்படுத்தினான். அரசன் அதனைக் கேட்டு வியப்படைந்தான். மூன்றுவது நாளும் அந்த வலைஞனுக்கு ஆயிரம் வராகன் கொடுத்து மீன்கள் கொண்டுவரச் செய்தான். அமைச்சனோடுகூடத் தானும் பக்கத்தில் இருந்துகொண்டு அந்த மீன்களைச் சமைக்கச் செய்தான். முன்போலவே நிகழ்ந்தது.

வலைஞனை உசாவுதல்

அரசன் வலைஞனை அழைப்பித்து, "நீ இந்த மீன்களை எங்கேயிருந்து பிடித்துக் கொண்டு வந்தாய்?" என்று கேட்டான். அதற்கு வலைஞன், "இந் நகரத்திற்கு வடக்குப் பக்கத்தில் காததொலையிலே நான்கு குன்றுகள் இருக்கின்றன. அவற்றின் நடுவிலே ஒருகுளம் இருக்கிறது. அக் குளத்திலே வலை வீசியபோது இம் மீன்கள் அகப்பட்டன," என்று சொன்னான்.

அரசன் அமைச்சனைப் பார்த்து, "அந்த நான்கு குன்றுகள் எங்கே இருக்கின்றன?" என்று கேட்டான். அமைச்சன், "நான் அந்தக் குன்றுகளைப் பார்த்ததில்லை," என்று மறுமொழி கூறினான்.

புதுமை காண்டல்

அரசனும் அமைச்சனும் அந்த வலைஞனை அழைத்துக் கொண்டுபோய் அவன் மீன்பிடித்த குளத்தையும் பக்கத்தில் இருந்த குன்றுகளையும் பார்த்தார்கள். வலைஞனுக்கு மேலும் ஓர் ஆயிரம் வராகன் கொடுத்து அனுப்பிவிட்டார்கள். அரசனும் அமைச்சனும் அரண்மனைக்குத் திரும்பிவிட்டார்கள். அரசன் தான்மட்டுந் தனியாகச் சென்று அக் குன்றுகளைப் பார்க்கவேண்டும் என்று எண்ணினான். மறுநாள் தான்மட்டும் நள்ளிரவிற் புறப்பட்டு அந்தக் குளத்திடஞ் சென்றான். குளத்திற்கு அண்மையில் ஓரிடத்தில் வெளிச்சந் தோன்றியது. அவ்வெளிச்சம் வந்தவிடத்திற்கு அரசன் சென்றான். அவ்விடத்தில் ஓர்

அழகிய கட்டிடம் இருந்தது. அக் கட்டிடத்துக்குள் நுழைந்தான். அங்கு ஒரு பெரிய கூடத்தில் இடுப்பு வரைக்கும் கல்வடிவமாக ஓர் உருவம் இருந்தது. இடுப்பு வரைக்கும் கல்லாக இருந்தாலும் மேலே இருந்த உருவம் மனிதனுடைய உருவமாகத்தான் இருந்தது. அந்த மனிதன் மிகுந்த வருத்தத்தோடு பலவாறு புலம்பிக் கொண்டிருந்தான்.

அரசன் பாதிக் கல்லும் பாதி மனிதனுமாக இருந்த அந்த வடிவத்தைப் பார்த்து, "ஐயா! உன்னுடைய புதுமையான வடிவம் எனக்கு மிகுந்த வியப்பை யுண்டாக்கு கிறது. நீயார்? உனக்கு இத்தகைய நிலைமை உண்டாகக் காரணம் என்ன? அன்பு கூர்ந்து தெரிவிப்பாயாக," என்று சொல்லி வேண்டினன்.

அரசன் கூறியதைக்கேட்ட அந்த அரை மனிதன், "என்னுடைய கதை உனக்கேன்? ஆற்றப்போகிருயா தேற்றப்போகிருயா அல்லது துன்பந்தீர ஏதேனும் வழி செய்யபோகிருயா போபோ," என்று புகன்ருன். அதற்கு அரசன், "உனக்கு எத்தகைய தொல்லையிருந்தாலும் இருக்கட்டும்; என்னுடைய உயிரைக்கொடுத்தாவது உன்னுடைய அல்லலை அகற்றுகிறேன் கூறுவாயாக," என்று சொல்லிப் பன்முறை வேண்டிக்கொண்டான்.

கல்வடிவ மனிதன் கதை

"நான் கிருட்டிண தீபத்திற்கு (ஒருநாடு) அரசன். என்னுடைய மனைவி சிறிதுகாலம் என்னிடத்திலே காதல் உள்ளவளாக இருந்தாள். பிறகு தீய ஒழுக்கத்திலே ஈடு பட்டாள். ஒருநாள் நான் அவளுடைய கள்ளக்காதலனைத் தாக்கிப் பெருங்காயத்தை உண்டு செய்து அவன் எழுந்து நடமாடமுடியாதபடி செய்துவிட்டேன். என்மனைவி அவனை வீட்டிற்குக் கொண்டுவந்து மறைவான ஓர் இடத்தில் வைத்து மருத்துவஞ் செய்துகொண்டிருந்தாள். இதனை அறிந்த நான் வாளையெடுத்துக்கொண்டு அவர்கள் இரு வரையும் கொலைபுரியப் போனேன். என்னுடைய மனைவி

பெரிய மாயாவி (மந்திரக்காரி). அவள் என்மேல் எரிந்து விழுந்தாள். கொடியவளாகிய அவள் சிறிதும் பற்றில்லாமல் என்னை இவ்வாறு பாதிக் கல்வடிவமும் பாதி மனிதவடிவமுமாக மாற்றிவிட்டாள். நான் அரசாட்சி புரிந்துகொண்டிருந்த கிருட்டிண தீபங்கள் நான்கையும் நான்கு குன்றுகளாகவும், என் நகரத்தைக் குளமாகவும், அதில் இருந்த நால்வகை வகுப்பார்களையும் நான்கு நிறமுள்ள மீன்களாகவும் மாற்றிவிட்டாள்.

"மேலும் அவள் இதற்கு அரைமைல் தொலையில் ஓர் அழகிய அரண்மனையை அமைத்து அங்கே ஒரு படுக்கையில் தன்னுடைய கள்ளக் கணவனைக் கிடத்தி அவனுக்கு வேண்டிய எல்லாவகையான பணிவிடைகளையுஞ் செய்துகொண்டிருகிருள். பகல் முழுவதும் அவனுடைய பக்கத்திலே இருந்துவிட்டு இரவு வேளையில் இவ்விடத்திற்கு வருகிருள். ஒரு பிரம்பினுல் நூறு அடிகள் என்னை அடித்துவிட்டுப் போகிருள். இத்தகைய பொல்லாத துன்பத்தை நான் நுகர்ந்துகொண்டிருக்கிறேன்," என்று சொல்லி வருந்தியழுதான். அவனுடைய கதையைக் கேட்டு அரசன் வருந்திஞன். "நான் எவ்வாருவது முயற்சி செய்து உன்னை இந்தத் துன்பத்தில் இருந்து நீங்கச் செய்கிறேன்," என்று சொல்லிவிட்டுச் சென்ருன்.

அரசனுடைய நடிப்பு

கிருட்டிணதீபத்து அரசனுக்கு எவ்வாருவது நன்மையைச் செய்யவேண்டும் என்று அரசன் எண்ணிஞன். மறுநாள் தன்னுடைய கணவனைத் தண்டிப்பதற்காக அந்த மந்திரக்காரி சென்றிருந்தபோது அரசன் அந்த மந்திரக்காரி தன்னுடைய கள்ளக் கணவனை வைத்திருந்த இல்லத்திற்குச் சென்ருன். படுக்கையின்மேற் கிடந்த கள்ளக் கணவனைத் துண்டுதுண்டாக வெட்டி மறைத்தான். அவன் படுத்திருந்த படுக்கையின்கண் தான் ஏறிப்படுத்துக்கொண்டு தன்னை நன்ருக மூடிக் கொண்டான். கள்ளக் கணவன் எப்படிக் கிடந்தானே அதேபோல் நடித்துக்கொண்டு கிடந்தான். சிறிதுநேரத்

திற்கெல்லாம் மந்திரக்காரி அந்த இடத்திற்கு வந்துசேர்ந்தாள். படுக்கையில் படுத்துக்கிடப்பது தன்னுடைய ஆசைக்காதலன் என்றே நம்பினாள். அவனைப் பார்த்து, "என் ஆருயிர்க்காதலனே! உன்னுடைய உடல்நிலைமை எப்படியிருக்கிறது? காயத்தில் வலியிருக்கிறதா? உன்னுடைய நோய் தீர்ந்து என்னை என்றைக்கு மகிழ்விப்பாயோ தெரியவில்லையே!" என்று கவலையுடன் பேசினாள்.

அரசன் மறுமொழி

அரசன் நோயாளியைப்போலவே முக்கி முனகிக்கொண்டு மிகுந்த ஈனசுரத்தில், "ஐயோ! இந்த வீண் விசாரத்தில் என்ன பயன்? நீ நாள்தோறுஞ் செய்யுந் தண்டனையால் மிகுந்த வருத்தமடைந்து கதறும் உன்னுடைய கணவன் தொல்லை என்னுடைய நோயை அதிகப்படுத்துகிறது. மந்திரத்தினால் நீ மாறுபாடுகள் செய்யாதிருப்பாயானால் நான் எப்பொழுதோ சுகமடைந்து எழுந்து உன்னைத் தழுவி மகிழ்ந்திருப்பேன். இப்பொழுதாவது காலந்தாழ்க்காமல் அந்தக் குன்றுகளுக்கும் குளத்துக்கும் உன் கணவனுக்கும் பழைய வடிவங்களைக் கொடுப்பாயானால் என்னுடைய தொல்லை உடனே தொலைந்துவிடும்," என்று தன்னுடைய திறமையினால் நடித்துப் பேசினான்.

மாயத்தை நீக்குதல்

இதனைக் கேட்ட மாயக்காரி பெருமகிழ்ச்சியடைந்து, "என்னுடைய நல்வினையே நல்வினை. என் அருமைக் காதலனுடைய இனிய மொழியைக் கேட்கும் பேறு இன்றைக்கல்லவோ எனக்குக் கிடைத்தது. என்னுடைய மந்திரத்தை இதோ மாற்றிவிடுகிறேன்," என்றாள். உடனே போய் மந்திரநீரைத் தெளித்துத் தன்னால் மாற்றப்பெற்ற எல்லாவற்றிற்கும் பழைய வடிவத்தைக் கொடுத்தாள்.

மந்திரக்காரி மாளுதல்

பிறகு தன்னுடைய காதலன்போல் நடிக்கும் அரசனிடம்போய், "என் ஆருயிர்த் தலைவா! உன்னுடைய

கட்டளைப்படியே எல்லாவற்றிற்கும் பழைய வடிவத்தைக் கொடுத்துவிட்டேன்,'' என்று சொன்னாள். அரசன் அவளைப்பார்த்து, "என் ஆசைக்கண்ணாட்டி! என்பக்கத்தில் வந்து என்னைக் கட்டியணைத்துக்கொள்ளடி,'' என்று சொல்லிக் கொஞ்சினான். மாயக்காரி மிகுந்த களிப்புடன் அவனுடைய பக்கத்திலே சென்றாள்.

அரசன் தடாரென்று எழுந்து அவள்மேற் புலிபோற் பாய்ந்தான். தன்னுடைய கையில் இருந்த வாளினால் அந்தப் பெண்பேயைக் கண்டதுண்டமாக வெட்டிவிட்டான்.

ஊர்க்குத் திரும்புதல்

பிறகு அரசன் கிருட்டிணதீப அரசனாகிய இளைஞனிடத்திற்குச் சென்றான். "இளவரசா! மந்திரக்காரியாகிய உன்னுடைய மனைவியைக் கொன்றுவிட்டேன். இனிமேல் அவளால் உனக்குத் தொல்லையுண்டாகமாட்டாது. உன்னுடைய நகரத்திற்குப்போய் நலத்துடன் வாழ்ந்திரு,'' என்று சொன்னான்.

அதற்கு அந்த இளைஞன், "என்னுடைய தொல்லையைப் போக்கிய என்னுடைய அப்பனே! இதுதான் என்னுடைய நகரம்,'' என்று சொல்லி எதிரே தெரிந்த பெரிய நகரத்தை அரசனுக்குக் காட்டினான். மேலும் அரசனைப் பார்த்து, "அரசே! தங்களுடைய பட்டணம் இங்கிருந்து இருபது நாள் வழிப்பயணத்தொலைவில் இருக்கிறது. முன், பக்கத்தில் இருப்பதாகத் தெரிந்தது. மந்திரக்காரியின் மாயத்தினாலேதான். என்னோடு சிலநாள் இருந்துவிட்டுப் பிறகு தங்களுடைய நாட்டிற்குச் செல்லுங்கள்,'' என்றான். அரசன் அவ்வாறே சிலநாட்கள் அங்கிருந்துவிட்டுப் பிறகு நால்வகைப்படைகளும் தன்னைப் புடைசூழ்ந்துவர, இருபது நாட்கள் பயணஞ்செய்து தன்னுடைய நகரத்தை அடைந்து சிறப்புடன் அரசாட்சி செய்துகொண்டிருந்தான்.

அரு. நெருப்புப் பெட்டி

பெண்ணின் பிறந்தநாட்குறிப்பு

ஓர் அரசனுக்கு நெடுங்காலம் மக்கட் பேறு உண்டாக வில்லை. பிறகு மிக அருமையாக ஒரு பெண் பிறந்தது. காலக் கணிதர்கள் அக் குழந்தைக்குப் பிறந்த நாட்குறிப்பு எழுதிப் பார்த்தார்கள். அப் பெண் தன்னுடைய பதினெட் டாம் அகவையில் போர்வீரன் ஒருவனைத் திருமணஞ் செய்து கொள்வாள் என்று தெரிந்தது. தன் மகளை ஒரு போர்வீரனுக்குத் திருமணஞ் செய்து கொடுப்பது அரசனுக்கு மிக இழிவாகத் தோன்றியது. அப் பெண் ணுக்குப் பதினெட்டு ஆண்டு முடியும் வரைக்கும் திருமணமே செய்வதில்லையென்று உறுதி செய்து கொண் டான். அவளைத் தனியாக ஒற்றைத் தூண்மேல் கட்டிய திருமாளிகையில் இருக்கச் செய்து மாளிகையைச் சுற்றி லும் பலமான பாதுகாப்பு ஏற்படுத்தினான்.

ஒரு போர்வீரன்

இவ்வாறாக ஒருநாள் அந்நகரத்திற்குப் போர்வீரன் ஒருவன் வந்தான். அவன் சட்டையுஞ் சல்லடமும் அணிந் திருந்தான். தலையில் தொப்பியிருந்தது. தோளிலே தோற்பை ஒன்றை மாட்டியிருந்தான். அவன் தன்னுடைய கையிலே கத்தி ஒன்றைப் பிடித்தவாறு பாட்டுக்கள் பாடிச் சென்றான். அவனுடைய கோலத்தையும் பாட்டையும் பார்த்து நகரத்தவர் அனைவரும் எள்ளி நகையாடிக் கொண்டிருந்தார்கள்.

கிழவியின் அறிவுரை

ஒரு கிழவி போர்வீரனைப் பார்த்து, "இவ்வளவு ஒயிலும் ஒய்யாரமுமாகப் போகிற நீ பைந்நிறையப் பணமும் நிரப்பிக் கொண்டு போனால் மிக நன்றாக இருக்குமே," என்று சொன்னாள். போர்வீரன் கிழவியைப் பார்த்துப், "பணம் எவ்வாறு எங்கே கிடைக்கும்?" என்று உசாவி

ஞன். அதற்குக் கிழவி, "என் பேச்சைக் கேட்பையாகில் உனக்குப் பணங்கிடைக்கக் கூடிய வழியைச் சொல்லிக் கொடுக்கிறேன்," என்ருள். அதற்கு அவன், "கேட் கிறேன் சொல்," என்று சொன்ஞன். அதற்கு அவள், "அதோ ஊருக்கு வெளியில் ஆலமரம் ஒன்று தெரிகிறது பார்த்தாயா? அவ்வால மரத்தடிக்குச் செல். ஆலமரத் திலே பொந்து ஒன்று இருக்கும். அப் பொந்துக்குள்ளே நுழைந்து செல். செல்லச் செல்ல ஓர் அழகிய மாளிகை உன் கண்களுக்குக் காணப் பெறும். அம் மாளிகைக்குள் நுழைந்து சென்ருல், அகன்ற ஒருகூடம் இருக்கும். அக் கூடத்தில் ஒரு பெட்டியின்மேல் எலுமிச்சம் பழம் அளவு பெரியதான கண்கள் உள்ள நாய் ஒன்று நின்றுகொண் டிருக்கும். அந்நாய் உன்னைக் கண்டதுங் குரைத்துக் கடிக்கவரும். அதன் முகத்தின்மேல் இத் துணியைப் போர்த்துவிடு. அஃது யாதொன்றுஞ் செய்யமுடியாமல் உன்னிடத்தில் அடங்கிப் போய்விடும். அதைக் கீழே இறக்கிப் பெட்டியைத் திறந்து அதற்குள்ளிருக்கும் பொருளை வேண்டிய அளவு எடுத்துக்கொண்டு பெட்டியை மூடி நாயை மீண்டும் அதன்மேல் ஏற்றிவிடு. பிறகு அங் கிருந்து உள்ளே செல். அங்கும் இத்தகைய அகன்ற கூடம் ஒன்றைக் காண்பாய். அங்கும் ஒரு பெட்டியின் மேல் விளாங்காய் அளவு விழிகளுள்ள வேருெரு நாய் நின்று கொண்டிருக்கும். அதுவுங் குரைத்தால் அதன் மேலும இத் துணியைப் போர்த்துக் கீழே இறக்கிப் பெட்டியைத் திறந்து வேண்டும் அளவு பொருள் எடுத்துக் கொள். அங்கிருந்து மேலும் உட்பக்கஞ் சென்ருல் இன்னு மொரு கூடம் அங்கிருக்கும். அங்குள்ள பெட்டியின்மேல் பனங்காய் அளவு விழிகளுள்ள வேருெரு நாய் காத்துக் கொண்டிருக்கும். அதைக் கண்டும் அஞ்சாமல் அதன் முகத்தின்மேல் துணியைமூடி நீ சுமக்கக் கூடிய அளவு பொருளை மூட்டை கட்டிக் கொண்டுவா. வரும்பொழுது அக் கூடத்துள் வடவண்டைப் பக்கத்து மாடத்தில் வைத் திருக்கும் நெருப்புப் பெட்டியை மட்டும் எனக்குக் கொண்டு வந்து கொடு. நீ வழி தப்பிப் போகாமல் இருக்குமாறு இக்

கயிற்று முனையை இடுப்பிற் கட்டிக் கொண்டுபோ. மறு முனையை நான் பிடித்துக் கொண்டிருக்கிறேன்," என்று சொன்னாள்.

சொல்லிய வண்ணஞ் செய்தல்

கிழவி கூறியதற்குப் போர்வீரன் உடன்பட்டு இடுப்பில் கயிறு கட்டிக் கொண்டு மறுமுனையைக் கிழவி கையிற் கொடுத்துவிட்டு, அவள் கொடுத்த துணியைத் தான் கையில் எடுத்துக் கொண்டு மரப்பொந்துக்குள் நுழைந்து சென்றான். பாட்டி பகர்ந்தபடி முதற் கூடத்துக்குள் பெட்டியின்மேல் இருந்த நாயின் முகத்தைத் துணியைப் போட்டு மூடி அதனைக் கீழே இறக்கிவிட்டுப் பெட்டியைத் திறந்து பார்த்தான்.

தாம்பிர நாணயம்

அப்பெட்டியில் தாம்பிர நாணயங்கள் நிரப்பப்பெற்றிருந்தன. தன் பைந்நிறைய அந் நாணயங்களை அள்ளி நிறைத்தான். பிறகு பெட்டியைமூடி நாயை அதன்மேல் ஏற்றிவிட்டுத் துணியை எடுத்துக்கொண்டு இரண்டாங் கூடத்திற்குட் சென்றான்.

வெள்ளி நாணயம்

அதில் இருந்த நாய்முகத்தைத் துணியினால் மூடிக் கீழே இறக்கிவிட்டுப் பெட்டியைத் திறந்துபார்த்தான். அதற்குள் வெள்ளிநாணயம் நிரப்பப்பெற்றிருந்தது. முதற்கூடத்தில் அள்ளிக்கொண்டுவந்த தாம்பிரநாணயத்தை அங்குக் கொட்டிவிட்டுப் பைந்நிறைய வெள்ளி நாணயங்களை நிரப்பிக்கொண்டு பெட்டியைமூடி நாயை அதன்மேல் ஏற்றிவிட்டுப் பிறகு மூன்றாங்கூடத்திற்குள் நுழைந்தான்.

தங்க நாணயம்

அங்கும் முன்போலவே செய்து பெட்டியைத் திறந்து பார்த்தான். அதில் தங்க நாணயங்கள் நிரப்பப்பெற்

திருந்தன. வெள்ளியை அங்குக் கொட்டிவிட்டுத் தங்க நாணயங்களைப் பைந்நிறைய அள்ளிக்கொண்டு பிறகு பொந்து வாயிலுக்கு வந்து சேர்ந்தான்.

மாயாவிக் கிழவி சாவு

கிழவி போர்வீரனைப்பார்த்து, "நெருப்புப்பெட்டியைக் கொண்டுவந்தாயா?" என்று கேட்டாள். "மறந்து விட்டேன்," என்று சொல்லி மீண்டும் உள்ளே சென்றான். கிழவி குறிப்பிட்ட இடத்தில் இருந்த நெருப்புப்பெட்டியை எடுத்துக்கொண்டு வந்தான். "அதனை என்னிடங்கொடு," என்று கிழவி கேட்டாள். போர்வீரன் கிழவியைப்பார்த்து, "நீ இந்தத் தீப்பெட்டியை என்ன செய்வாய்?" என்று கேட்டான். அதற்குக் கிழவி, "அச்செய்தி உனக்கேன்? கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் எதற்கு? நெருப்புப் பெட்டியை இப்படி என்னிடங்கொடு," என்று சினத்துடன் கேட்டாள். "இதனுடைய பயனைச் சொல்லாவிடின் நான் கொடுக்கமாட்டேன்," என்று முரட்டுத்தனஞ் செய்தான். "கொடுக்காவிடின் உன்னை வெளியே வரவிடமாட்டேன்," என்று கிழவி அதட்டினாள். போர் வீரன் முரடனைகையால் அவனுக்குக் கடுஞ்சினம் மூண்டது. கையில் இருந்த கத்தியினால் கிழவியை வேலை தீர்த்து விட்டுத் தன்னுடைய இருப்பிடத்திற்குச் சென்றான்.

நெருப்புப்பெட்டியின் பயன்

போர்வீரன் தான்கொண்டுவந்த பொருளை வைத்துக் கொண்டு யாதொரு குறைவும் இல்லாமல் அரசபோகங் களை நுகர்ந்துகொண்டு காலங்கழித்து வந்தான். கையிற் கொண்டுவந்த பொருள்களெல்லாம் நாளடைவில் தீர்ந்து போய்விட்டன. ஒருநாள் இரவு அவனுக்குப் பசி மிகுதி யாகிவிட்டது. எந்த மூலையிலாவது நாணயங்கள் அகப் படுமா பார்ப்போம் என்று தான்கொண்டுவந்திருந்த நெருப்புப்பெட்டியில் இருந்து ஒரு குச்சியைக் கிழித்தான். அது பற்றியவுடனே அணைந்துபோய்விட்டது. அதனுடைய புகையில் இருந்து எலுமிச்சம்பழம் அளவு

விழிகள் உள்ள ஒரு நாய் வந்து வணங்கியது. "அடியே னுக்குக் கட்டளை யாது?" என்று கேட்டது. நெருப்புப் பெட்டியின் பயனைக் கண்டு மகிழ்ந்த போர்வீரன், "நாயே! உணவுக்கு ஒன்றும் அகப்படாமல் வயிறுகாய்ந்து வாடித் துன்புறுகிறேன். எனக்குவேண்டிய பொருளைக் கொண்டு வந்து கொடு," என்று சொன்னான். அந்நாய் ஒருமூட்டை செப்பு நாணயங்களைக் கொண்டுவந்து போட்டது. செப்பு நாணயங்களைக் கண்ட போர்வீரன், "ஐயையோ இவை எற்றுக்கு? தங்க நாணயங்களாகக் கொண்டுவந்திருக்கக் கூடாதா?" என்று கேட்டான். அதற்கு நாய், "நான் செம்புக்குக் காவலேயல்லாமல் தங்கத்திற்கன்று. செப்பு நாணயங்கள் வேண்டினால் ஒரு குச்சியும், வெள்ளி நாண யங்கள் வேண்டினால் இரண்டு குச்சியும் தங்க நாணயங்கள் வேண்டினால் மூன்று குச்சியுங் கிழிக்கவேண்டும்," என்று கூறியது. நெருப்புப்பெட்டியின் முழுப்பயனையும் உணர்ந்து கொண்ட அவன் அந்நாயை அனுப்பிவிட்டான்.

இளவரசியைக் காண்டல்

இவ்வாருகச் சிலகாலஞ்சென்றது. இளவரசி மிகுந்த கட்டழகியென்றும் அவள் போர்வீரன் ஒருவனுக்கு மனைவியாவாள் என்று காலக்கணிதர்கள் கூறியிருக்கி ருர்களென்றும் போர்வீரன் செய்தியறிந்தான். இளவரசி யைப் பார்க்கவேண்டும் என்று எண்ணினான். ஒருநாள் இரவு மூன்று நெருப்புக்குச்சிகளைக் கிழித்தான். உடனே பனங்காய் அளவு விழிகள் உள்ள நாய் வந்து வாலை யாட்டிக்கொண்டு நின்றது. "அடிகாள்! அடியேன் ஏவலன்; காத்திருக்கிறேன் கட்டளை யாது?" என்று கேட்டது. "இளவரசி பேரழகுபொருந்தியவள் என்று கேள்விப்படுகிறேன்; எப்படியேனும் அவளை இவ்விடத் திற்குக் கொண்டுவரவேண்டும்," என்று சொன்னான். நாய், "இஃது எவ்வளவு வேலை! இதோ முடிக்கிறேன்," என்று விரைவாகப் பாய்ந்து சென்றது. இளவரசியின் படுக்கையறையில் நுழைந்தது. உறங்கிக்கொண்டிருந்த அவளைத் தனது முதுகின்மேற் படுக்கவைத்துக்கொண்டு

வந்து போர்வீரனிடஞ் சேர்த்தது. அவன் அவளைத் தொடையின்மேல் உட்காரவைத்துக் கொஞ்சிக் குலாவினான். மறுபடியும் அவளை அவளுடைய இருப்பிடத்திலே கொண்டுபோய்ச் சேர்த்துவிடுமாறு ஏற்பாடு செய்தான்.

இளவரசி தாய்க்குச் சொல்லுதல்

பொழுது விடிந்ததும் இளவரசி பனங்காய் அளவு விழியுள்ள அஞ்சத்தக்க ஒருநாய் வந்து தன்னைத் தூக்கிக் கொண்டுபோய் ஒரு போர்வீரனிடம் சேர்த்தது என்றும் அவன் தன்னைத் தன் தொடையின்மீது வைத்துக் கொண்டு கொஞ்சிக் குலாவினான் என்றும் தன்னுடைய தாயிடம் உரைத்தாள். இதனைக்கேட்ட அவள், "கனவு கண்டிருப்பாய்," என்று மகளைத் தேற்றினாள். "இரவில் விழிப்புடன் காத்துக்கொண்டிருங்கள்," என்று தோழிப் பெண்களுக்குக் கட்டளையிட்டாள்.

அடையாளஞ் செய்தல்

மறுநாள் இரவும் போர்வீரன் இளவரசியைக் கொண்டு வருமாறு நாய்க்குக் கட்டளையிட்டான். நாய்வந்து இளவரசியைத் தூக்கிக்கொண்டு போகையில் தோழி பார்த்தாள். தன்னிடம் இருந்த மந்திரமிதியடியைக் காலில் மாட்டிக்கொண்டு நாயைப் பின்தொடர்ந்தோடினாள். நாய் புகுந்த வீட்டிற்கு அடையாளஞ் செய்துவிட்டு வந்தாள். அச் செய்தியை அறிந்த நாயானது அத் தெருவில் இருந்த வீடுகட்கெல்லாம் அதே வகையான அடையாளத்தைப் போட்டுவிட்டது. தோழி செய்தியை அரசனிடந் தெரிவித்துத் தான் அடையாளம் போட்டுவிட்டு வந்த வீட்டைக் காட்டுவதற்கு அரசனை அழைத்துக்கொண்டு சென்றாள். வீடுகள் எல்லாவற்றிற்கும் அடையாளம் போட்டிருந்தபடியினால் வீடு இதுதான் என்று தெரிந்து கொள்ளமுடியாமல் திரும்பினார்கள்.

போர்வீரனைப் பிடித்துக்கொள்ளுதல்

மூன்றாம்நாள் இரவு இளவரசியினுடைய தாய் தன்னுடைய மகளின் இடுப்புக்குக் கோதுமை மாவுமூட்டை

ஒன்றைக் கட்டி அம்மூட்டையில் சிறிய ஓட்டை ஒன்றைச் செய்துவைத்தாள். அன்றிரவில் மங்கையை நாய் தூக்கிக்கொண்டு போகும்போது, பின்னால் யாராவது தொடர்ந்து வருகிறார்களா என்று பார்த்துக்கொண்டு சென்றதேயன்றிக் கோதுமைமாக் குறியை அது பார்க்க வில்லை. ஆகவே இளவரசி சென்ற வழிமுழுவதும் மாவு சிந்தியிருந்தது. அம்மாக்குறியின் வழியே அரசவீரர்கள் சென்று போர்வீரனைப் பிடித்துக்கெண்டார்கள். அரச னுக்கு மிகுந்த சினம் உண்டாகிவிட்டது. அவனுக்குத் தூக்குத்தண்டனை விதித்துத் தூக்கிலே போடுமாறு ஏற்பாடு செய்தான்.

போர்வீரன் கேலி

அரசனுடைய ஏவலர்கள் போர்வீரனைப் பிடித்துப் பின்கட்டு முன்கட்டாகக் கட்டினார்கள். கொலைக்களத்திற்கு இழுத்துக்கொண்டு சென்றார்கள். அப்பொழுது அப்பட்ட ணத்து மக்கள் அரசன்மகளைக் கெடுத்த போர்வீரனைத் தூக்கில் போடப்போகிறார்கள் என்னுஞ் செய்தியைக் கேட் டுத் தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதைப் பார்ப் பதற்காக விரைந்தோடினார்கள். கைவிலங்கோடு சென்று கொண்டிருக்கிற போர்வீரன் அவர்களைப்பார்த்து, "ஓ மக்களே! பரபரப்படைந்து ஏன் ஓடுகிறீர்கள்? இப் பொழுது மிஞ்சிப்போனது ஒன்றுமில்லை. நான் வராமல் தூக்குப்போடமாட்டார்கள். மெதுவாகப் போங்கள்," என்று கேலிமொழிகள் பேசிக்கொண்டு சென்றான்.

போர்வீரன் வேண்டுகோள்

போர்வீரனைத் தூக்குமேடையில் நிறுத்தித் தூக்குப் போடுவதற்கு ஆகவேண்டிய காரியங்களையெல்லாஞ் செய்துமுடித்தார்கள். போர்வீரன் அரசனைப்பார்த்து, "ஓ அரசனே! எனக்கு ஒரு விருப்பம் உண்டு. அதனை நிறைவேற்றிக் கொண்ட பிறகு தூக்கிலே போடவேண் டும்," என்று சொல்லி வேண்டினான். அரசன், "அஃ தென்ன?" என்று கேட்டான். அதற்குப் போர்வீரன்,

"எனக்குச் சுருட்டுப் பிடிக்கும் பழக்கம் உண்டு. விடியற் காலையில் இருந்து இன்றைக்கு இதுவரையிலுஞ் சுருட்டுப் பிடிக்கவில்லை. ஆகவே என்மீது அருள்கூர்ந்து சுருட்டுப் பிடிப்பதற்கு உடன்பாடு கொடுங்கள். பிடித்தான பிறகு உங்கள் விருப்பம் போல் தூக்கிலே போடுங்கள்," என்று வேண்டிக் கொண்டான்.

நாய்கள் வருதல்

அரசன், "அவ்வாறே செய்" என்று உடன்பாடு கொடுத்தான். உடனே போர்வீரன் தன்னுடைய மந்திர நெருப்புப் பெட்டியை எடுத்து ஒன்று, இரண்டு, மூன்று என்று குச்சிகளைக் கிழித்தான். அப்பொழுது எலுமிச்சம் பழ அளவு விழிகள் உள்ள நாய் ஒன்று, விளாங்காய் அளவு விழிகள் உள்ள நாய் ஒன்று, பனங்காய் அளவு விழிகள் உள்ள நாய் ஒன்று ஆக மூன்று நாய்கள் வந்தன. அவைகள் தூக்குமாட்ட நின்ற வீரர்கள்மேற் பாய்ந்து அவர்களைக் கடித்து உதறிக் கொன்றுவிட்டன. மேலும் அவைகள் வேடிக்கை பார்க்க வந்து சூழ்ந்துள்ள மக்களின் மீதும் பாய்ந்து கடித்து எல்லோரும் கதிகலங்கித் திக்குக் கொருவராக ஓடச்செய்தன.

அரசன் பணிவு

மேலும் அவைகள் அரசனும் அமைச்சனும் இருந்த இடத்திற்கு, "வாள் வாள் ஊ ஊ பௌ பௌ ஊ பௌ பௌ," என்று அஞ்சத் தக்கவாறு பெருங் கூச்சலிட்டுக் கொண்டு விரைந்தன. அப்போது அரசன், "ஐயையோ என் வழிக்கு வரவிடாதே. நீ வீராதி வீரனாக இருக் கிறாய். என்னுடைய பெண்ணை உனக்கே திருமணஞ் செய்து வைக்கிறேன்," என்று சொல்லி அரற்றினான். மேலும், "ஊழ்வினையை வெல்லவல்லவர் யாவர்? தெய்வம் முடிவு செய்யாததைத் தெய்வ அறிவு படைத்தவர்கள் ஏன் எழுதுகிறார்கள்? ஊழ்வினையை மாற்றுவதற்கு நாம் செய்கிற முயற்சிகளெல்லாம் வீணாகவே போய்விடுகின்றன. மனிதர்களுடைய எண்ணப்படி எல்லாக் காரியங்களும்

நடைபெறுமானால் தெய்வம் இருக்கவேண்டிய கட்டாயம் என்னவிருக்கிறது? நம்முடைய மகளுக்கு மணவாளனாகக் கடவுள் இவனையே கொடுத்திருக்கிறார். அவ்வாறாக வேறு விதமாக எவ்வாறு நடைபெறும்," என்று அமைச்சன் முதலானவர்கட்கு அறவுரைகள் கூறிவிட்டு மறுநாளே போர்வீரனுக்குத் தன்னுடைய மகளைத் திருமணஞ் செய்து வைத்தான். அரசன் பணிந்து போனவுடனேயே போர்வீரன் துணியைப் போட்டுமூடி நாய்கள் மறைந்து போகச் செய்துவிட்டான். பின்னர்ப் போர்வீரன் இளவரசியோடு இனிது வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தான். காலக் கணிதம் பொய்யாகாதென்பதையும் எல்லாம் ஊழ்வினையின்படி நடைபெறும் என்பதையும் இக்கதை நன்கு விளக்குகிறது.

அகூ. பொல்லாதவர்களைத் தள்ளி வைக்காதே

பொல்லாதவர்கள்

இவ்வுலகிலே பொல்லாத பேர்வழிகள் பலர் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள். நாம் செய்யுங் காரியங்களில் அவர்களையுஞ் சேர்த்து அணைத்துக்கொண்டு காரியத்தைச் செய்தல் வேண்டும். இன்றேல் அவர்கள் காரியத்தைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்குவதோடு நமக்குந் தொல்லை கொடுப்பார்கள்.

விலங்கரசனுக்கு விருந்து

ஒரு காட்டிலே வாழ்ந்துகொண்டிருந்த விலங்குகள் ஒரு காலத்தில் விலங்கரசனாகிய அரிமாவுக்கு (சிங்கத்துக்கு) விருந்து நடத்துவதற்கு முடிவுசெய்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தன. ஆனால் அவ் விலங்குகள் ஒரு பெரிய தவற்றினைச் செய்துவிட்டன. அஃதென்ன வென்றால், வஞ்சகத்தில் புகழ்படைத்த நரியை விருந்து நடத்தும் ஏற்பாட்டிற் சேர்த்துக்கொள்

ளாமல் ஒதுக்கிவைத்ததுதான். நரியைச் சேர்த்தால் அது காரியத்தைக் கெடுத்துவிடுமென்று அதற்குத் தெரிவிக்காமலே பிறவிலங்குகள் எல்லா ஏற்பாடுகளையும் விரிவாக நடத்தின. வஞ்சகக் குணமுஞ் சூழ்ச்சித் திறமையும் படைத்த நரிக்கு இச்செய்தி தெரியாமற்போகுமா? அரிமாவுக்கு விருந்து நடத்துதற்குச் செய்யும் ஏற்பாட்டை அது தெரிந்துகொண்டது. 'அப்படியா செய்தி' உங்களுக்குத் தகுந்த பாடங்கற்பிக்கிறேன்; என்னை யாரென்று எண்ணிக் கொண்டீர்கள்? என்று உள்ளத்திலேயே கர்விக் கொண்டு விலங்கு வேந்தனாகிய அரிமாவிடஞ் சென்றது.

சூழ்ச்சி

அரிமா நரிமாவைப் பார்த்து, "நண்பனே! நினது வரவு நல்வரவாகுக. நீ என்னிடம் வந்த செய்தி என்னையோ?" என்று உசாவியது. உடனே நரிமா தன்னுடைய வேலையைத் தொடங்கிற்று. "என்னுடைய ஆண்டவனே! நடக்கிற காரியங்களை என்னவென்று சொல்லுவேன். உம்முடைய குடிகளாகிய விலங்குகள் உம்மை விருந்துக்கழைத்துக் கொலை செய்துவிடுவதென்று முடிவுசெய்து அதற்கான ஏற்பாடுகளையுஞ் செய்துகொண்டிருக்கின்றன. அவை தங்களை விருந்துக்கழைப்பதற்கு விரைவிலே வரக்கூடும். தேவரீர் மிகுந்த விழிப்புடன் இருந்து இத் தொல்லையில் நின்றும் விடுபட வேண்டும். அடியேன் தங்களிடத்தில் உள்ளன்புடையவனுகையால் என்னை வஞ்சகக்கொலை ஏற்பாட்டில் சேர்த்துக் கொள்ளாமல் ஒதுக்கிவைத்திருக்கிறார்கள். செய்தியை உணர்ந்த நான் தேவரீர்க்குச் செய்தி அறிவித்து விழிப்புடன் நடந்துகொள்வதற்கு ஆகவேண்டிய அறிவுரைகளைக் கூறவேண்டும் என்று உடனே புறப்பட்டு வந்தேன்," என்று கூறியது. வஞ்சக நெஞ்சம்படைத்த நரியின் சொற்களை அரிமா உண்மையென்று நம்பிவிட்டது. அது நரியைப்பார்த்து, "நான் இப்பொழுது செய்யவேண்டியதென்ன? அதனைச் சொல்; அவ்வாறே செய்கிறேன்," என்று கூறிற்று. இதனைக்கேட்ட நரி தன்னுடைய

எண்ணம் திண்ணமாக நிறைவேறிற்று என்று மிகுந்த களிப்பையடைந்து அரிமாவைப்பார்த்து, "அரசே! பகைவர்கள் உம்முடைய குடிகளாகையால் அவர்கள் விருந்துக் கழைக்கும்போது தேவரீர் மறுத்துக் கூறுமற் செல்ல வேண்டும். அவைகளின் போக்கைத் தாங்கள் கருத்துடன் பார்த்துக்கொண்டேயிருங்கள். நான் சிறிது தொலைவில் வந்து பதுங்கியிருந்து எல்லா நடவடிக்கைகளையும் விழிப்புடன் பார்த்துக்கொண்டிருக்கிறேன். தேவரீரைக் கொல்வதற்காக அவைகள் தம்மிடத்திற்கு நெருங்கும் பொழுது நான் ஊளையிடுகிறேன். அவ்வளவில் தேவரீர் சிறிதுந் தாழ்க்காமல் முன்வரும் அவ் விலங்குகள்மீது பாய்ந்து அவைகட்கு நல்ல அறிவு கூறி விடுங்கள்; பிறகு எல்லாஞ் சரியாகிவிடும்," என்று கூறியது. நரி, தன்னை விருந்திற் சேர்க்காததற்காக மற்றைய விலங்குகளைப் பழிவாங்குவதற்காக இந்தப் பொல்லாத சூழ்ச்சியைச் சொல்லுகிறது என்று அரிமா சிறிதும் உணர்ந்துகொள்ளவோ எண்ணிப்பார்க்கவோ இல்லை. நரி கூறிய செய்தி முற்றிலும் உண்மையானது தான் என்று தன்னுடைய அறியாமையினுல் அரிமா எண்ணிவிட்டது. அரிமாவுக்குத்தான் கூரிய அறிவு இல்லையே!

விருந்து அழைப்பு

சிலநாட்கள் சென்றன. புலி கரடி முதலிய பெரிய விலங்குகள் சில அரிமாவிடத்திற்கு வந்தன. அரிமாவைப் பார்த்து, "அரசே! நாங்கள் எல்லோரும் ஒன்றுகூடித் தேவரீர்க்கு ஒரு விருந்து நடத்துவதென்று முடிவுசெய்து அதற்காக வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்திருக்கிறோம். தேவரீர் மறுத்துரையாமல் விருந்துக்கு வந்து எங்களுடைய விருந்தை யேற்றுக்கொள்ளவேண்டும்," என்று சொல்லி வேண்டிக்கொண்டன. இதனைக்கேட்ட அரிமா, நரிமா சொல்லிய செய்தி உண்மையாகத்தான் இருக்கும்போலும் என்று உள்ளத்தில் எண்ணிக்கொண்டு "வருகிறேன்," என்று சொல்லி அனுப்பிவைத்தது.

சூழ்ச்சி பலித்தது

விலங்குகள் குறிப்பிட்ட காலத்தில், அரிமா விருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்ட இடத்திற்குப் போயிற்று. விருந்து ஏற்பாடுகள் மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றிருந்தன. ஆனால் அரிமாவோ விருந்து ஏற்பாடுகளைக் கொலை ஏற்பாடு என்று தனக்குள்ளே எண்ணிக்கொண்டது. விருந்து நடைபெற்றது. மயில் கூத்தியற்றியது. குயில் இசைபாடியது; ஒவ்வொரு விலங்குந் தனக்குத் தெரிந்த செயல்களையெல்லாம் அரிமாவுக்குமுன் செய்துகாட்டி அரிமாவுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கின. இறுதியில் புலியுங் கரடியும் இரண்டு பெரிய மாலைகளைத் தூக்கிக் கொண்டு மேடையை நோக்கிவந்தன. அரிமாவுக்கு மாலை சூட்டும்படியாகவே அவைகள் வந்தன. இந்தச் சமயத்தில் அந்தப் பொல்லாத நரி ஊளையிட்டது. மாலை யணிய வந்த விலங்குகள் மண்ணிற்புரண்டன. அவைகள் விண்ணுலகஞ் சேர்வதற்கு அதிகநேரம் பிடிக்கவில்லை. மற்றைய விலங்குகள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டுத் தமது முழுப்பலத்தையும் பயன்படுத்தி ஓட்டம்பிடித்தன. அப்பொழுது வஞ்சக நரி அரிமாவிடம் வந்து, "வஞ்சகர்கள் தப்பி ஓடுகிறார்களே விட்டுவிடலாமா? நாளைக்கு மேலும் ஏதேனும் சூழ்ச்சி செய்யத்தொடங்குவார்களே," என்று அரிமாவுக்கு அறிவுரை கூறியது. அரிமா உடனே அவ்வெளிய விலங்குகளைத் துரத்தத்தொடங்கியது. நரிமா நவின்றதைக் கேட்ட சில விலங்குகள், "அந்தோ இந்தக் கோளாறு வஞ்சக நரியினால்தான் ஏற்பட்டிருக்கிறது. வஞ்சகர்களை நமதுகைக்குட் போட்டுக்கொள்ளாமல் எக் காரியங்களையுஞ் செய்யலாகாது; செய்தால் அவர்கள் தங்கள் வஞ்சகத்தொழிலைத் தொடங்கிவிடுவார்கள். இந்தச் செய்தியை முன்னரே உணர்ந்துகொள்ளாமல் இந்த நரியை, வஞ்சகன் காரியத்தைக் கெடுத்துவிடுவான் என்று ஒதுக்கிவைத்தார்களே! இப்பொழுது உயிருக்கே தொல்லை வந்ததே," என்று சொல்லிக்கொண்டு ஓடின.

அஎ. அமைச்சன் கூறிய அறிவுரை

ஒரு கள்ளன்

ஓர் அரசன் தன்னுடைய பேரவையில் உட்கார்ந்து நீதிமன்றம் நடத்திக்கொண்டிருந்தான். அப்பொழுது சில வீரர்கள் கள்ளன் ஒருவனைக் கொண்டுவந்து அரசனுக்கு முன் நிறுத்தி, "அரசே! இவன் களவு செய்தனன். இவனை நன்கு உசாவித் தண்டனை கொடுங்கள்," என்று சொல்லி வேண்டிக்கொண்டார்கள். அரசன் அக்கள்ளனை உசாவினுன். அக் கள்வன்தான் களவுசெய்தது உண்மை தான் என்று ஒப்புக்கொண்டான்.

தண்டனை

உடனே அரசன் வீரர்களைப்பார்த்துக், "கசையினுல் இவனுக்கு நூறு அடிகள் கொடுங்கள்," என்று சொல்லித் தண்டனை விதித்தான். வீரர்கள் கள்ளனைச் சவுக்கால் அடிப்பதற்கு அழைத்துக்கொண்டு சென்ருர்கள். அப்பொழுது அரசனுக்கு ஓர் அறிவுரை நினைவுக்கு வந்தது. அஃதாவது, "'முற்பகல் செய்யில் பிற்பகல் விளையும்' என்று பெரியோர்கள் கூறியிருக்கிருர்கள். பழிக்குப்பழி வாங்கும் தன்மை பிறவியைத் தொடர்ந்து வருகிறதென்பதை நாம் நம்பாமல் இருக்கமுடியாது. நாம் இப் பிறவியில் இக் கள்ளனை இவ்வாறு தண்டிப்போமேயானுல் மறு பிறவியில் அக் கள்ளன் அரசனுக நாம் கள்ளனுக அவன் இந்த நூறு அடிகளையுந் திரும்பவும் நமக்குக் கொடுக்கும்படியான காலமும் உண்டாகிவிடுமன்ரோ" என்று உள்ளத்தில் எண்ணினுன். பிறகு பக்கத்தில் இருந்த அமைச்சனைப்பார்த்து, "ஓ அமைச்சனே! நான் இப்பொழுது இக் கள்ளனைத் தண்டிப்பேனுயின் மறுபிறவியில் அவன் அரசனுக, நான் கள்ளனுகி இத் தண்டனையை மீண்டும் பெறும்படியாக இருக்குமன்ரோ? ஆகவே அவனை நான் இப்பொழுது ஏன் தண்டிக்கவேண்டும்? எப்படியாவது போகட்டும் என்று விடுதலை செய்து போகச்சொல்லி விடவா?" என்று கேட்டான்.

அமைச்சன் மறுமொழி

அரசன் இவ்வாறு கூறியதைக்கேட்ட அமைச்சன் 'அரசனுக்கு எவ்வாறே அச்சம் உண்டாகிவிட்டது. இக் கள்ளனைத் தண்டிக்காமல் விட்டுவிடுவோமானல் நாட்டிலே கள்ளர்கள் தொல்லை மிகுதிப்பட்டுக் களவும் புரட்டும் மிகுதியாகிவிடும். மக்கள் அரசனை ஒரு பொருளாக மதிக்கவேமாட்டார்கள்' என்று எண்ணினன். பிறகு அரசனைப்பார்த்து, "ஓ அரசே! தாங்கள் கூறிய அறநெறி முறை சரியானதுதான். பழிக்குப்பழி வாங்கும் பண்பு தொடர்ந்து வந்து தொல்லை கொடுக்கக்கூடியதே. முன் பிறப்பில் நீங்கள் ஒரு கள்ளனுக இருந்தீர்கள். இந்தக் கள்ளன் அரசனுக இருந்தான். நீங்கள் அந்தப் பிறவியில் செய்த குற்றம் ஒன்றுக்காக அவன் உங்களை நூறு அடிகள் அடித்திருக்கிருன். அத் தீவினைதான் இப்பொழுது அவனைச் சூழ்ந்துகொண்டது. ஆகவே நீங்கள் பழிக்குப்பழி வாங்கும் பொருட்டு அவனைத் தண்டிப்பதற்குக் கட்டளையிட்டிருக்கிறீர்கள். ஆகவே அதைப்பற்றி இப்பொழுது சிறிதும் கவலைப்படவேண்டாம்," என்று கூறி அரசனைத் தேற்றுவித்தான். அரசன் தேறுதலடைந்து கள்ளனைத் தண்டிக்குமாறு கூறினன். இவ்வாறு அமைச்சனுடைய அறிவுரையால் அரசன் ஒரு கள்ளனைத் தண்டிக்காமல்விடும் பழியில் இருந்து நீங்கினன்.

அஅ. கோமாளியும் கொடை வேந்தனும்

கொடை

ஓர் ஊரிலே ஓர் அரசன் அரசாட்சி செய்துகொண்டிருந்தான். அவ்வரசன் நற்பண்பு சிறிதும் இல்லாதவன். உலகத்தார்கள் தன்னைப் புகழவேண்டும் என்பதற்காக வீணன காரியங்களைச் செய்வான். புலவர்கட்கோ பிற இரவலாளர்களுக்கோ பொருள் வழங்கி உதவி செய்ய வேண்டும் என்னும் எண்ணம் அவனுக்குச் சிறிதும் கிடையாது. ஆயினும் பார்க்கிறவர்களும் ஊரார்களும்

தன்னைப் புகழவேண்டும் என்பதற்காக இரவலாளர்களாக வருகிற புலவர்கள், இசைவாணர்கள், கோமாளிகள் முதலிய எல்லோருக்கும் பெரும் பொருளைக் கொடுப்பான்.

வழியிற் பறித்தல்

அந்த அரசனுடைய ஊரைச் சுற்றிப் பெருங் காடுகள் நான்கு பக்கங்களினும் சூழ்ந்துள்ளன. வெளியூரில் இருந்து வருகிறவர்கள் அக் காட்டுவழியாகத்தான் வரவும் போகவும் வேண்டும். பெருமைக்காக நன்கொடை வழங்கும் அரசன் நான்கு பக்கத்து வழிகளினும் தன்னுடைய ஆட்களை மறைத்து வைத்திருப்பான். நன்கொடை பெற்றவர்கள் அங்குச் சென்றதும் அப்பொருள்களைப் பறித்துத் தன்னிடமே கொண்டுவந்து சேர்க்கச் செய்து விடுவான். இஃது அரசனுடைய வஞ்சகமான ஏற்பாடு. ஆனால் இரவலாளர்களோ உண்மையிலேயே கள்ளர்கள் பொருள்களைப் பறித்துக்கொண்டு போய்விட்டதாக எண்ணிக்கொண்டு போய்விடுவார்கள்; இவ்வாறு வெகு காலம் நடந்துகொண்டிருந்தது.

கோமாளி

ஒருநாள் அரசனுடைய அவைக்கு வேறோர் ஊரில் இருந்து, கண்டவர்கள் நகைக்குமாறு பல நகைச்சுவை வேடிக்கைகளைச் செய்யும் நகைச்சுவையாளனாகிய கோமாளி ஒருவன் வந்தான். அவனுக்கு அரசனுடைய போலிக் கொடையைப்பற்றிய உண்மை நன்றாகத் தெரியும். ஆகவே அவன் அரசனுக்குத் தக்கவாறு அறிவுபுகட்ட வேண்டுமென்று முடிவு செய்துகொண்டு வந்திருந்தான். அரசனுடைய அவையிலே கண்டவர்கள் எல்லோரும் பேராரவாரஞ் செய்து பெருநகை புரியுமாறு பல அரிய வேடிக்கைகளைச் செய்துகாட்டினான். அவனுடைய வேடிக்கை அரசனுக்கு அளவுகடந்த மகிழ்ச்சியை அளித்தது. கோமாளிக்குப் பலவகையான பரிசுகளை வழங்கியதோடு அவன் ஏறிக்கொண்டு போவதற்கு அழகிய குதிரை யொன்றையுங் கொடுத்தான். கோமாளி பரிசுப்பொருள்

களை மூட்டையாகக் கட்டித் தோளின்மீது போட்டுக் கொண்டு குதிரையின்மீது ஏறிப் புறப்பட்டான். அவன் குதிரையின்மீது எவ்வாறு அமர்ந்தான் தெரியுமா? குதிரையின் வால்பக்கத்தைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்தான். "இஃதென்ன புதுமை! ஏன் இவ்வாறு உட்கார்ந்தாய்?" என்று அரசன் கேட்டான்

அறிவு வந்தது

அதற்குக் கோமாளி, "அரசே! தாங்கள் நன்கொடையாக அளிக்கும் பொருள்களை வழிப்பறிசெய்து மீளவுங் கைப்பற்றிக்கொள்ளுகிறீர்கள் என்று கேள்விப்படுகிறேன். இஃது உண்மையென்று நன்ருகத் தெரிகிறது. உங்களுடைய ஆட்களைக் கண்டதும் மூட்டையை அவர்களிடங் கொடுத்துவிட்டுக் குதித்தோடிப் போவதற்குத் தக்க வகையில் பின்பக்கத்தைப் பார்த்துக்கொண்டு ஏறினேன். அவர்கள் வந்து உதைத்துப் பிடுங்குவதற்குமுன் வலுவில் முன்னதாகவே கொடுத்துவிடுவது மிகவுஞ் சிறந்ததன்றோ?" என்று கூறினன். இதனைக் கேட்டவுடனே அரசனுக்கு மிகுந்த நாணம் உண்டாகியது. 'நாம் நன்கொடை கொடுப்பதாகப் பேர் செய்துவிட்டுக் கொடுத்ததை மீளவுங் கவர்ந்துகொள்வதில் எத்தகைய பயனுமில்லை'யென்று அதுமுதல் இந்த வஞ்சகச்செயலை அறவே ஒழித்து நல்லவனுக நடந்துகொள்வதற்கு முயன்முன். கோமாளியின் நன்கொடை மூட்டையும் பறிபோகாமல் தப்பியது. இவ்வாறு வெளிவேடத்திற்காக காரியஞ் செய்பவர்கள் உலகில் எத்தனையோ பேர் இருக்கிருர்கள்.

௨௬. ஊழிற்பெருவலி யாவுள ?

காசி நாட்டுக்காவலன்

ஒருநாள் காசியரசன் கங்கைக் கரைவழியே உலவிக் கொண்டிருந்தான். ஓரிடத்தில் ஆற்றங்கரையில் இருந்த முள்முருங்கை மரத்தில் இருந்து ஓர் உலர்ந்த இலை கீழே விழுந்தது. உடனே அஃது எலியாக மாறி ஓடியது. இலை எலியாக மாறியதற்கு வியப்படைந்து அதன் வரலாறு முழுவதையும் அறிந்துகொள்ள விரும்பினான். அதனைப் பின்தொடர்ந்து நடந்தான். சிறிதுதொலை சென்ற பிறகு ஒரு பூனை எதிர்ப்பட்டது. எலி உடனே நாயாக மாறிப் பூனையைக் கொன்றுவிட்டு விரைந்தோடிக்கொண்டிருந் தது. அரசன் அந்த நாயைப் பின்தொடர்ந்து சென்றான். சிறிது தொலைக்கு அப்புறம் நாய்களைக் கொன்று தின்னக் கூடிய இயல்பு வாய்ந்த குறவன் ஒருவன் குண்டாந் தடியோடு எதிரே வந்துகொண்டிருந்தான். நாய் உடனே ஓர் அழகிய தேவமாதாக மாறி ஒரு மரத்தடியில் உட்கார்ந் தது. குறவன் அம் மாதைக் கண்டு அளவற்ற மோக மடைந்தான். உடனே அவளை வலுக்கட்டாயமாகத் தழு வினான். உடனே இறந்து கீழே விழுந்தான். பிறகு அம் மாது அவ் விடத்தைவிட்டுப் புறப்பட்டுச் சென்றுகொண் டிருந்தாள்.

வரலாறு கேட்டல்

அரசன் அம் மாதின் கையைப்பிடித்துக்கொண்டு, “அம்மா! எனக்கு உன்னுடைய செய்கை முழுவதும் வியப்பாக இருக்கிறது. இலை எலியானதும், எலி நாயான தும், நாய் அழகிய பெண்ணாக மாறியதும் நான் கண்ணாரக் கண்டேன். உன்னுடைய வரலாற்றைக் கூறினால் அன்றி நான் அப்புறம் அடி எடுத்து வைக்கமாட்டேன். அருள் சுரந்து உனது வரலாற்றைக் கூறி அருள்புரிவாயாக,” என்று சொல்லி வேண்டிக்கொண்டான். அம்மாது அரச னிடமிருந்து தப்பிக்கொண்டு போய்விட எவ்வளவோ முயன்றும் அரசன் விடவில்லை. ஆகவே அவள் தன்

வரலாற்றைக் கூறத்தொடங்கினள். "ஓ அரசனே! ஈது எனக்கு நான்முகன் விதித்திருக்கும் வேலை. என்னைச் சாவுக்கடவுள் (மரணதேவதை) என்பார்கள். நீ பார்த்த முள்முருங்கை மரத்தில் இருந்த சிறிய புழுக்களை அழிக்க எண்ணி, இலையுருவந் தாங்கி அவற்றை என்னிடம் இழுத்துக் காயவைத்துக் கொன்றுவிட்டு அவற்றுடன் உதிர்ந்தேன். பிறகு பூனையையுங் குறவனையுங் கொன்றேன். இவ்வாறு நிலவுலகம் முழுவதும் எதையேனுஞ் சாக்கிட்டு எவ்வளவோ உயிர்த்தொகைகளை அழிக்க வேண்டியதாக இருக்கிறது. எனக்கு நின்று பேசுவதற்கு நேரமில்லை என்னை விட்டுவிடு," என்று பரபரப்புடன் பேசினள்.

தன் செய்தியறிதல்

அரசன் இடையே குறுக்கிட்டுத் தனக்குச் சாவு எப்பொழுது? எவ்வாறு நேரும் என்று கேட்டான். அதற்கு அவள் இன்னும் பத்துத்திங்கள் சென்றபின் ஐந்தாவது நாளில் இலங்கைத் தீவின் அரசன் தனது பட்டணத்தின் வடக்குத்திக்கில் இருக்கும் ஆலமரத்தின் மேலண்டைக் கிளையில் உன்னைத் தூக்கிட்டுக் கொல்வான்," என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டாள்.

அரசன் எண்ணம்

பிறகு அரசன் தனக்கு நேரிடும் என்ற தீய சாவைக் குறித்துத் துன்பமுற்றான். அதிலிருந்து தப்புவதற்கு மறைமுகமாகப் பலவாறு எண்ணமிட்டான். இலங்கைத் தீவின் அரசன் என்னைத் தூக்கிட்டுக் கொல்வதற்கு எவ்வாறு நேரிடும்? ஒருவேளை அவன் நமது நாட்டின் மீது படையெடுத்துவரக்கூடும். அதில் நமக்குத் தோல்வி நேரிட்டாலும் நேரிடலாம். அப்பொழுது அப் பகைவன் நம்மைச் சிறைபிடித்துக்கொண்டுபோய் அச் சாவுக்கடவுள் கூறியவாறு கொலை செய்தாலுஞ் செய்யக்கூடும். அரசாட்சித் தொடர்பு இல்லாவிடின் என்மேல் சினமுண்டாகி அவன் என்னைக் கொல்வதற்கு வழியேற்படாது. ஆகவே

இப்போது நம்முடைய இளவரசனுக்குப் பட்டங்கட்டிவிட்டு அமைச்சனைத் துணைவனாக நிறுத்திவிடுவோம். நாம் நாடு சுற்றப்போவதாகப் போக்குக் காட்டிக் கப்பலேறிப் புறப் படுவோம். சிலரையே படைத்துணையாகக் கூட்டிக் கொண்டு மாறுகோலத்துடன் பிரமபுரத்துக்குச் சென்று சாவுக்கடவுள் குறிப்பிட்டுள்ள நாள்வரைக்கும் அங்கு இருந்துவிட்டுச் சாவுக் கடவுளின் வாயில் தெள்ளிய மண்ணை அடித்துவிட்டுப், பிறகு இங்குவந்து சேருவோம்' என்று எண்ணி முடிவு செய்தான்.

துன்பத்திற் சிக்குதல்

தான் முடிவு செய்தபடியே எல்லாவற்றையுஞ்செய்து முடித்துவிட்டுத் தேவையான படையுடன் மரக்கலமேறிப் புறப்பட்டான். அவ்வாறு புறப்பட்ட எட்டாவது நாளில் அஞ்சத்தக்க பெரும்புயல் அடித்தது. மரக்கலம் மூழ்கி விட்டது. எல்லோரும் கடலுக்கு இரையாகிவிட்டார்கள். அரசன் மட்டுங் கட்டிய உடையோடு ஒரு மரச்சட்டத்தைப் பிடித்துக்கொண்டு ஓரிடத்தில் கரையேறினான். தனது சாவில் இருந்து பிழைப்பதற்கு முயன்று எல்லோரையும் கடலில் பலியிட நேர்ந்தமைக்குப் பெரிதும் வருந்தினான். வெகு துன்பத்துடன் சிறிது தொலை சென்றான். அகப் பட்ட காய்கனிகளைத் தின்று பசியைத் தீர்த்துக்கொண் டான். தீய விலங்குகளிடமிருந்து தப்புவதற்காக உயர்ந்த மரம் ஒன்றின்மீது ஏறி நான்கு பக்கங்களையும் கருத்துடன் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான்.

மனிதர்களைப் பார்த்தல்

அவ்விடத்திற்கு நேர் மேலண்டைப் பக்கத்தில் சிறிது தொலைக்கு அப்பால் சில மனிதர்கள் புற்றிலிருந்து வெளி வருதலைப்போல் காணப்பட்டார்கள். அவர்களைக் கருத்துடன் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். அவர் கள் அரசன் இருந்த மரத்திற்குச் சிறிது தொலைவில்வந்து ஒரு படகிலே ஏறினார்கள். அவர்களோடு தானும் போக வேண்டும் என்று அரசன் எண்ணினான். 'ஆயினும் ஏதே

னும் ஓர் ஊருக்குப் போய்ச்சேர்ந்தால் எவ்வாறேனும் இலங்கைத் தீவிற்குப் போக நேரிட்டாலும் நேரிடலாம். இத்தகைய காட்டிலே தங்கியிருந்தால் தவசிகளைப்போல் காய் கனி கிழங்கு முதலியவைகளைத் தின்றுகொண்டு எத்தகைய கவலையும் இல்லாமல் வசித்து வரலாம். ஒருவேளை கொடிய விலங்குகள் அடித்துக் கொன்றுவிட்டாலும் பகைவர்கள் கையில் அகப்பட்டு மாண்டுபோனேம் என்னும் பழிச்சொல்லில் இருந்து தப்பித்துக்கொள்ளுதல் கூடும்' என்று எண்ணினன்.

மதுரை மன்னன் மைந்தன்

அம்மரத்தின்மீதே தங்கியிருந்த அரசன், பிறகு அம் மனிதர்கள் புறப்பட்டுவந்த இடத்தைப் போய்ப்பார்க்க வேண்டும் என்று எண்ணினன். கீழே இறங்கி அந்த இடத்தை நோக்கிச்சென்ருன். அங்கு ஒரு மனிதன் நுழைந்து செல்லக்கூடிய வழியொன்று காணப்பட்டது. அதற்குள் இறங்கிப் பார்த்தான். அங்கு ஒரு கதவு மூடப்பட்டிருந்தது. அதைத் திறந்தான். அழகிய இடம் ஒன்று வீட்டைப்போல் காணப்பட்டது. அதற்குள்ளே சென்று பார்த்தான். பேரழகு வாய்ந்த இளவரசன் ஒருவன் அன்னத்தூவியமைந்த அழகிய இருக்கையில் அமர்ந்திருந்தான். அவனை நெருங்கிக் கைகளைக் கூப்பி வணங்கினன். "ஏந்தலே! மனிதர்களின் இயக்கமற்ற இக்கொடிய காட்டிலே இத்தகைய அழகிய இடம் ஒன்று அமைந்திருக்கக் காரணம் என்ன ? இங்கு நீ தனியாகத் தங்கியிருப்பதேன் ? இதனை எனக்குத் தெரிவிக்கவேண்டும்," என்று வேண்டிக்கொண்டான. அவ்விளைஞன், "அண்ணேன்! நமது உளவை வேறு எவருக்கும் தெரியப்படுத்தாமல் நீயும் எங்கட்கு உதவியாளனுகி இவ்விடத்தில் இருப்பேன் என்று உறுதிமொழி உரைப்பாயாகில் இவ்விடத்துச் செய்தியை இயம்புகிறேன்," என்று சொன்ஞன். காசி மன்னன் அதற்கு இணங்கி உறுதிமொழி கூறினன். அதன்மேல் அவ்விளவரசன், "நான் மதுராபுரி மன்னவனுடைய மைந்தன். என் தகப்பனுருக்கு நான்

ஒரே பிள்ளை. வெகுகாலம் பொறுத்துப் பிறந்தேன். காலக்கணிதர்களை அழைப்பித்து நான் பிறந்த காலக் குறிப்பை அவர்களுக்குக் காட்டினார்கள். அவர்கள் அக் குறிப்பை நன்றாகப் பார்த்துவிட்டுப் பதினெட்டாம் ஆண்டில் பத்தாந் திங்களில் பத்தாம் நாளில் காசியரசனால் எனக்குச் சாவு நேரிடும் என்று சொன்னார்கள். ஊரில் இருப்பின் அம்மன்னவன் படையெடுத்து வந்து என்னைப் பிடித்துக்கொண்டுபோய்க் கொன்றாலும் கொல்லக்கூடும் என்று எண்ணி என்னுடைய தகப்பனார் எனக்கு இந்த இடத்தை ஏற்பாடு செய்தார். நேற்றோடு எனக்குப் பதினேழாண்டு முடிந்து ஒன்பது திங்களுங் கழிந்துபோய்விட்டது. இன்னும் நாற்பது நாட்கள்தான் எஞ்சி இருக்கின்றன. இதைத் தாண்டின பிறகு வீடுபோய்ச் சேருவோம்,'' என்று சொல்லி முடித்தான்.

காசி மன்னன் வருத்தம்

இதனைக் கேட்கவே காசி மன்னனுக்கு மிகுந்த நடுக்கம் உண்டாயிற்று. "அந்தோ! எனக்கு அஞ்சி இவனை இவ்விடத்தில் ஒளித்துவைத்திருக்க நானும் இவ்விடத்திற்கே வந்து சேர்ந்தேனே'' என்று எண்ணினான். தான் அவ்விட,த்தைவிட்டுப் போய்விடுவதற்கு முயன்றான். இளவரசன் தனக்குத் துணையாக இருக்கச்சொல்லி வலுக் கட்டாயஞ் செய்தான். அதன் பிறகு அவன் எத்தகைய தீமை செய்தபோதினும் தான் அவனுக்கு எத்தகைய தீமையுஞ் செய்யாதிருந்து காலக் கணிதர்களது மொழியைப் பொய்யாக்கத் தீர்மானித்தான். தான் அவ்விடமே தங்கியிருந்து அவ்விளவரசனோடு நாளுக்குநாள் பேரன்பு காட்டினான். தன்னுடைய வரலாற்றை மட்டும் அவனுக்குத் தெரியப் படுத்தாமல் இருந்தான்.

காலக்கணிதம் பலித்தது

இவ்வாறாகக் காலக்கணிதர்கள் குறிப்பிட்ட காலம் நெருங்கியது. யாது நிகழுமோ என்று அச்சமுற்ற காசி மன்னன், "நான் எங்கேனும் போய்விட்டு வருகிறேன்; உன்

னோடு தங்கியிருப்பதற்கு என்னால் இயலவில்லை,'' என்று சொல்லிப் புறப்படத் தொடங்கினான். அப்போது இளவரசன் காசி மன்னனைப் பார்த்து, "இவ்வளவு நாள் உடனிருந்த நீ கடைசி நேரத்தில் என்னைத் தனிமையில் விட்டு விட்டுப் போகலாமா? தேறுதல் சொல்லுவதற்காவது ஒருவன் இல்லாவிடின் அச்சத்தினாலேயே என்னுடைய உள்ளம் வெடித்துப் போய்விடக்கூடும். ஆதலின் அருள் கூர்ந்து இன்றைக்கு ஒருநாள் மட்டும் என்னோடு தங்கியிரு. நாளை மாலையில் என்னைச் சேர்ந்தவர்கள் வந்து என்னை அழைத்துக்கொண்டு போய்விடுவார்கள்,'' என்று சொல்லி மன்றாடினான். காசியரசன் அவனுக்கேதும் மறுமொழி சொல்ல முடியவில்லை. அவனோடு தங்கியிருந்தான். இவ்வாறாக இளவரசன், "என்னுருயிர்த் தோழனே! காலக்கணிதர்கள் குறிப்பிட்ட நேரம் இதோ நெருங்கியது. அதை எண்ணினாலே என்னுடைய வயிறு கொதிக்கிறது; வெடித்துப் போவதைப்போலத் துடிதுடிக்கிறது. அன்பு கூர்ந்து, அதோ இருக்கும் கொம்மட்டிக்காயைக் கொண்டு வந்து தோலைச் சிவிவிட்டு இரண்டு கிற்றுக்களைக் கிறிக் கொடுத்தால் எரிச்சல் அடங்குமாறு புசிப்பேன்,'' என்று சொன்னான். காசியரசன் கொம்மட்டிக்காயைக் கொண்டு வந்து தோல் சிவிக்கொண்டிருந்தான். கைதவறிக் கத்தி கீழே விழத் தொடங்கியது. விசையாக இளவரசனுடைய கன்னப்பொறியிலே தாக்கியது. ஆ! ஆ!! என்ன புதுமை! அந்நொடியிலேயே இளவரசன் இறந்துவிட்டான். காசியரசன் அதனைக்கண்டு உள்ளம் வருந்தினான். 'தான் அவ்விடமிருப்பின் அவனைச் சேர்ந்தவர்கள் வந்து சேர்ந்து தன்னைப் பிடித்துக்கொல்லுவார்கள்' என்று அஞ்சினான். ஒரு புதருக்குட்போய் மறைந்துகொண்டிருந்தான்.

மதுரை மன்னன் மகனைக்காண்டல்

காலக் கணிதர்கள் குறிப்பிட்ட நாள் கழிந்துபோனதற்கும் காசி மன்னன் படையெடுத்து வராததற்கும் மதுரை மன்னன் களிப்படைந்தான். தன் மகனுக்குக் கண்டம் தப்பியதென்று எண்ணினான். இனிமேல் அவனை

ஊருக்கு அழைத்துக்கொண்டு வந்துவிடலாம் என்று முடிவு செய்தான். பலவகை ஒலிக் கருவிகள் முழங் கச் சிறுபடையுடன் புறப்பட்டு மகனிருந்த இடத் திற்கு வந்தான். அருமைப் புதல்வன் ஆவியொழிந்து இறந்துகிடத்தலை ஈன்றோன் கண்டு, உளம் வருந்தி ஊக்கங் குறைந்து, எண்ணுதும் எண்ணி, ஏங்கி, "ஐயோ மகனே! ஊழைக்கடந்தாய் என்று உளம் மகிழ்ந்தேனே! மாண்டு மடிந்தாயோ?" என்று சொல்லி மூர்ச்சையடைந்தான். அமைச்சர் முதலாயினோர் தெளிவிக்கத் தெளிந்தெழுந் தான்.

காசிமன்னனைக் கடலில் விடுதல்

"என் மகனைக் கொலைபுரிந்தவன் இங்கு எங்கேயாவது மறைந்திருப்பான், அவனைத் தேடிப்பிடித்துக்கொண்டு வாருங்கள்," என்று கட்டளையிட்டான். சேவகர்கள் எல்லாப்பக்கங்களினும் போய்ச் செடிகள் புதர்கள் முதலிய எல்லா இடங்களையுந் தேடிப்பார்த்தார்கள். கடைசியில் காசிமன்னனைக் கண்டுபிடித்தார்கள். பிடித்துக்கொண்டு போய் அரசன் முன்பு நிறுத்தினார்கள். மதுரை மன்னன் காசிமன்னனைப் பார்த்து, "அடேய்! நீயார்? என்னுடைய மகனை ஏன் கொலைபுரிந்தாய்?" என்று கேட்டான். காசி யரசன் உள்ள செய்திகளையெல்லாம் உள்ளவாறே உரைத் தான். "என்னை இப்பொழுதே கொன்று ஊழை நிறை வேற்றுங்கள்" என்றான்.

இலங்கையை அடைதல்

மதுரை மன்னன் சிறிது நேரம் எண்ணினான். பிறகு செப்புத்தகடு ஒன்றில் என்னவோ எழுதி அதனோடுகூட அரசனையும் ஒரு பேழையில் அடக்கி அப்பேழையைக் கடலில் விட்டுவிடக் கட்டளையிட்டான். அப்பேழை இலங் கைத் தீவையடைந்து கரைதட்டியது. அவ்விடத்திலே ஒரு வலைஞன் அப் பெட்டியைக் கண்டான். அதனை எடுத்துக்கொண்டுபோய் அந்நாட்டு மன்னனிடஞ் சேர்த் தான். அவ்வரசன் பேழையைத் திறக்கச்செய்து பார்த்

தான். களைத்துப்போய் இருந்த காவலனையும் செப்புத் தகட்டையுங் கண்டான். செப்புத்தகட்டை எடுத்துப் படித்துப் பார்த்தான். அம்மனிதனைப் பார்த்து, "அடே தீயவனே! நீ என்னுடைய மருமகனை எதற்காகக் கொலை புரிந்தாய்? கொன்றுவிட்டுக் கத்தி தவறித் தற்செயலாக விழ்ந்து விட்டதென்று பொய் பேசினையன்றோ? உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்கு எவ்வளவு பொய்யும் பித்தலாட்டமும் பேசியிருக்கிறாய்? எக்காரணத்தைக்கொண்டோ என்னுடைய சம்பந்தி மன்னன் உன்னைத் தண்டிக்காமல் விட்டுவிட்டான். நான் அவ்வாறு உன்னை விட்டுவிட மாட்டேன்," என்று கூறிப் பின் தனனுடைய சேவகர்களைப் பார்த்து, "இவனுடைய கழுத்துக்குச் சுருக்கிட்டு நமது ஊருக்கு வடக்குப் பக்கத்தில் இருக்கிற ஆலமரத்தின் மேற்குப்பக்கத்தில் உள்ள கிளையில் கட்டித் தொங்க விட்டுத் தூக்குப்போட்டுக் கொன்றுவிடுங்கள்," என்று கட்டளையிட்டான்.

ஊழிற்பெருவலி யாவுள ?

பிறகு காசியரசன் தன்னுடைய பழவினையைத் தூற்றிக்கொண்டான். தன்னுடைய வரலாறு முழுவதையும் இலங்கையரசனுக்கு இயம்பினான். இலங்கையரசனோ இப்பேச்செல்லாம் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளப் பேசிய சட்டுக்கதை என்று திட்டமாக எண்ணினான். காசியரசனை உயிரோடு விட்டுவிடுவதற்கு அவன் சிறிதும் விரும்பவில்லை. ஆயினும் ஒரு சிறு செய்கையின்மூலம் உண்மையை உணர்ந்துகொள்வோம் என்று எண்ணினான். மேலப்பக்கத்துக் கிளையில் தூக்குப்போடாமல் வடக்குப் பக்கத்துக் கிளையில் தூக்குப் போடுங்கள் என்று சேவகர்களுக்குக் கட்டளையிட்டான். அவ்வாறே வடக்குப் பக்கத்துக் கிளையில் தூக்குப் போட்டார்கள். காசி மன்னனுடைய உயிர் நீங்குஞ் சமயத்தில் பெரும் புயற் காற்று வீசியது. வடக்குப்பக்கத்துக் கிளை மேற்குப் பக்கமாகத் திரும்பிவிட்டது. அரசன் முதலியோர் இதனைக் கண்டு பெருவியப்படைந்தார்கள். "ஊழிற் பெருவலி

யாவுள மற்றொன்று, சூழினுந் தான்முந் துறும்" என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் கூறியது பொய்யா மொழியன்றோ? ஊழைக் கடப்பதென்பதும் முடியுமோ? ஊழையும் உப்பக்கங் காண்பது இங்கு முடியாத காரிய மாகவே போய்விட்டது.

---

௬௦. ஊதியம் உளதேல் உதவியுண்டு

முத்துவீரன் என்பவன் தன்னுடைய போலி நண்பனும் அரிசிவணிகனும் சூதன் என்னும் பெய ருடையவனுமாகிய ஒருவனிடத்தில் சிறிதுநேரத்திற்குக் குதிரையை இரவல் கேட்கச் சென்றான். அப்போது அவர்கள் இரண்டுபேருக்கும் பின்வருமாறு உரையாடல் நிகழ்ந்தது.

முத்துவீரன்: நண்பா! நான் ஒரு வேலையை முன்னிட்டு ஓர் ஊருக்கு இன்றைக்குக் கட்டாயம் போய்விட்டு வரவேண்டியதாக இருக்கிறது. அதன்பொருட்டு உன்னுடைய குதிரையை இரவலாகக் கேட்டு வாங்கிக் கொண்டுபோகலாம் என்று வந்தேன்.

சூதன்: ஐயா! தங்களுக்கு உதவிசெய்வதைப் பார்க்கப் பேரின்பம் எனக்கு வேறொன்றும் இல்லை. இப் பொழுது உங்களுக்கு உதவி செய்யமுடியாமல் இருப் பதுபற்றிச் சிறிது வருத்தப்படுகிறேன். என்னுடைய கடையில் இருந்த அரிசியெல்லாம் செலவாகிவிட்டது. நான் பட்டணத்துக்குக் குதிரையின்மேல் ஏறிக் கொண்டுபோய் வேண்டிய அரிசி வாங்கிக்கொண்டு வரவேண்டும். இல்லாவிட்டால் என்னுடைய கடைக் குத் தடையுண்டாகுமே?

முத்து: இதற்காக நீங்கள் கவலைப்படவேண்டாம். என் வீட்டில் இரண்டு மூட்டை அரிசி இருக்கிறது,

அதனை நீங்கள் உங்கள் கடைக்கு எடுத்துக்கொண்டால் பிறகு முடிந்தபொழுது வாங்கிக்கொடுக்கலாம். இந்தச் சிறிய காரியத்திற்காகத் தடை சொல்லாதீர்கள்.

நூதன்: ஓ அது கூடாது. உங்களுடைய அரிசியை மக்கள் வாங்குவார்களோ மாட்டார்களோ தெரியவில்லை. மக்களுடைய மனப்போக்கு ஒருமாதிரியானது. வாங்குபவர்கள் குறைகூறக் கூடும்.

மூந்து: அப்படி ஒருபோதும் குறைகூறமாட்டார்கள். என்னுடைய அரிசி மிகவும் உயர்ந்தது. நீங்கள் இந்த அரிசியை விற்பீர்களானால் மக்கள் மிகுந்த மகிழ்ச்சியடைவார்கள்.

நூதன்: அது கிடக்கட்டும். பிறருக்கு உதவி செய்வதில் எனக்குள்ள விருப்பம் வேறொருவருக்கும் இல்லையென்பதை நீர் நன்றாக அறிவீர். ஆயினும் இன்று காலைமுதல் அது சிறிதுகூடப் புல் தின்னவில்லையே. அஃது எவ்வாறு வழிநடக்கும்? அதை அனுப்புவதற்கு எனக்கு அச்சமாக இருக்கிறது.

மூந்து: இதற்காக நீர் அஞ்சவேண்டாம். நான் வழியில் வேண்டிய புல் வாங்கிப் போடுகிறேன்.

நூதன்: அது சரிதான். நேற்று இரவு சிறிது மழை பெய்தபடியினால் வழியெல்லாஞ் சேறுந் தண்ணீருமாக இருக்குமே. குதிரை சறுக்கி விழுந்தால் கால் ஒடியுமே.

மூந்து: அப்படிப்பட்ட தொல்லை ஒருபோதும் உண்டாக மாட்டாது. உங்களுடைய குதிரை மிகுந்த திறமையுள்ளது என்பது உமக்கே தெரியாதா? இல்லாவிட்டால் குதிரைமேல் ஏறிக்கொண்டுபோய் அரிசி வாங்கிக்கொண்டு வரவேண்டும் என்று முன்பு சொன்னீர்களே எவ்வாறு சொன்னீர்கள்?

நூதன் : ஒகோ நான் முதன்மையாக ஒன்றை மறந்து போனேன். சேணமெல்லாம் துண்டு துண்டாகக் கிழிந்து போய்விட்டது, கடிவாளத்தையும் செப்பனிட அனுப்பியிருக்கிறேனே.

முத்து : அதற்காக நீர் வருத்தப்படவேண்டாம். நல்ல காலமாக என் வீட்டில் சேணமும் கடிவாளமும் வைத்திருக்கிறேன்.

நூதன் : உங்கள் சேணம் என்னுடைய குதிரைக்கு ஒரு போதுஞ் சரியாக இருக்கமாட்டாதே.

முத்து : அப்படியானால் அண்டைவீட்டு அழகப்பசாமி சேணத்தை நான் சற்று இரவல் வாங்கிக் கொள்ளு கிறேன்.

நூதன் : அழகப்பசாமி சேணத்தை நான் முன்னமே பார்த் திருக்கிறேன். அஃது என் குதிரைக்குச் சிறிதும் பொருந்துவதில்லை.

முத்து : அப்படியாயின் அதுவும் வேண்டாம்; சேணம் தைத்து விற்பவன் எனக்கு மிகவும் வேண்டியவன். நான் சொன்னபடி கேட்பான். அவனிடத்தில் இருந்து உன் குதிரைக்குப் பொருந்தியதாய் ஒரு சேணம் வாங்கிப் போட்டுக்கொண்டு போகிறேன்.

நூதன் : ஆம்; அப்படியே செய்யலாம். எவ்வாருயினும் தங்கட்கு உதவி செய்யவேண்டும் என்று என் னுடைய மனமும் பதைக்கின்றது. குதிரையைக் கொடுக்க எனக்கு யாதொரு தடையும் இல்லை. ஆயி னும் என்ன செய்வேன்? பத்து நாட்களாக நன்ருகத் தேய்த்துச் சீர்ப்படுத்துவாரில்லாமல் குதிரை மிகவும் விகாரமாகக் கிடக்கின்றது. இந்த நிலைமையில் இதை யாராவது பார்ப்பார்களானல் எள்ளிநகையாடு வார்கள். குதிரையின் கோலத்தைக் கண்டு யாரா வது உம்மை இகழ்ந்தால் அஃது எனக்கும் இழி வன்ரோ?

முத்து: இஃதொரு பெரிய காரியமா? என்னுடைய வேலைக்காரனைக்கொண்டு கால் மணி நேரத்தில் குதிரையை நன்றாகத் தேய்க்கச் செய்கிறேன்.

சூதன்: ஆம்; அப்படியே செய்விக்கலாம். முதன்மையான காரியம் ஒன்று இப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது. இதற்கு இலாடங் தைக்கவில்லையே.

முத்து: இலாடங் தைப்பதற்கு எவ்வளவு நேரஞ்செல்லும்? இதோ மூன்ருவது வீட்டில் இலாடங் தைப்பவன் இருக்கிருன். கூப்பிடச் சொல்லவா?

சூதன்: என்ன, இந்த நாட்டுப்புறத்து மடையனு என்னுடைய குதிரைக்கு இலாடங் தைப்பவன்? அரசனுடைய குதிரைக்கு இலாடங் தைக்கிறவன் தவிர மற்றெவனுலும் என்னுடைய குதிரைக்கு இலாடங் தைக்க முடியாது.

முத்து: அப்படியா? அதுவும் எனக்கு மகிழ்ச்சியே. நான் போகும்போது அரசன் குதிரைக்கு இலாடங் தைக்கிற கருமான்வீட்டு வழியாகத்தான் போவேன். அங்கே எளிதாகத் தைப்பித்துக்கொள்ளுகிறேன்.

சூதன்: [இந்தச் சமயத்தில் சூதனுடைய வேலைக்காரன் ஒருவன் அவ்வழியே போகிருன். அவனைப் பார்த்து]

மாணிக்கம்! மாணிக்கம்!!

மாணிக்கம்: (அவனிடம் ஓடிவந்து) ஏன் ஐயா! இதோ காத்திருக்கிறேன்.

சூதன்: (மாணிக்கத்தைப் பார்த்து) நம்முடைய நண்பரான இவர் நம்முடைய குதிரையைச் சற்று இரவல் கேட்கிருர். (கண்ணைச்சிமிட்டிக்குறிப்புக்காட்டிவிட்டு) குதிரை முதுகில் கையளவு அகலம் புண் ஒன்று இருந்ததே. அஃது ஆறியிருக்கிறதா? ஓடிப்போய்ப் பார்த்துவிட்டு வா.

(அவன் காட்டிய குறியைத்தெரிந்துகொண்ட மாணிக்கம்) "இதோ போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போகிறான்.

சூதன் : (மாணிக்கம் அப்புறம் போனவுடனே முத்துவீரனைப் பார்த்து) ஐயா! குதிரைப்புண் நன்றாக ஆறிப் போயிருக்கும் என்று எண்ணுகிறேன். கடைசியாய் உங்களுக்கு உதவி செய்யும்படியாக முடிந்தது பற்றி மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். சமயத்தில் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளாத மனிதர்கள் உலகில் இருப்பதில் என்ன பயன்? நாம் இன்றைக்கு ஒருவர்க்கு உதவி செய்தால் அல்லவோ பிறர் நாளைக்கு நமக்கு உதவி செய்வார்கள்? சமயத்தில் பிறருக்கு உதவி செய்யும் பெருங்குணம் என்னைப் போல் மற்றெவர்க்கும் இல்லையென்பது தங்களுக்கு நன்கு தெரிந்ததே.

[இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் மாணிக்கம் திரும்பி ஓடிவந்தான். மாணிக்கத்தைப் பார்த்து]

குதிரைப்புண் எப்படியிருக்கிறது?

மாணிக்கம் : ஐயா! நான் அதனை என்னென்று சொல்வேன்! நீங்கள் கையளவு புண் என்கிறீர்களே, முறத்தளவு புண் என்று சொன்னாலும் அதற்குப் பொருந்தும். ஐயோ பாவம். அந்தக் குதிரை ஓரடிகூட எடுத்துவைக்கமாட்டாது. மேலும் இன்று பகலில் கடைத்தெருவுக்குக் குதிரையை ஓட்டிக் கொண்டு வரும்படி தங்களுடைய பெரிய பிள்ளை கட்டளையிட்டுப் போயிருக்கிறாராம்.

சூதன் : (முத்துவீரனைப்பார்த்து) ஐயா! நான் என்ன செய்வேன்? கடைசியில் இவ்வாறு நேர்ந்ததைக் குறித்து வருத்தப்படுகிறேன். இந்தக் குதிரை மட்டும் இப்போது தங்களுக்கு உதவும்படியானால் நான் எவ்வளவோ மகிழ்ச்சியடைவேன். என்னுடைய

ஆருயிர்த் தோழனை உங்களுக்கு உதவிசெய்ய முடியாமற் போனதைப்பற்றி என் மனம் மிகவும் வருந்துகிறது. என்ன செய்வேன் ஐயா!

முத்து: உங்களுக்காக நான் வருத்தப்படுகிறேன் ஐயா. ஏனெனில், காட்டு அதிகாரி ஒருவர் உடனே தன்னை வந்து பார்க்கும்படி இன்று எனக்குக் கடிதம் எழுதினார்; போய்ப்பார்த்தால் நம்மிருவருக்கும் மிகுந்த ஊதியம் கிடைக்கும் என்று தெரிகிறது. இன்று மாலை நேரத்திற்குள் தன்னைவந்துபார்த்தால் ஒரு பெருங் காட்டில் பாதியை வெட்டிக்கொள்ள எனக்குக் கட்டளை கொடுப்பதாகச் சொல்லுகிறார். அஃது எனக்கு மிகவும் பயனுள்ளது. உங்களுக்கும் நானூறு ஐந்நூறு ரூபாய் கிடைக்கும். எப்படியெனில்; எனக்கு அந்தக் காட்டுக் குத்தகை கிடைத்தால் அதில் உமக்கும் பங்கு கொடுக்கலாம் என்றிருந்தேன். ஆனால்,

நூதன்: என்ன நானூறு ஐந்நூறு ரூபா என்று சொல்லுகிறீர்?

முத்து: ஒரு சமயம் இன்னும் அதிகம் கிடைத்தாலும் கிடைக்கலாம். ஆயினும் என்ன செய்யலாம்? உங்களுடைய குதிரை இப்போது உதவத்தக்க நிலையில் இல்லாததால் வேறு யாரையாவது கேட்டுத்தான் வாங்கிக்கொண்டு போகவேண்டும்.

நூதன்: ஐயா! நீங்கள் அப்படிச்செய்தால் அஃது எனக்கு மிகவும் இழிவு அல்லவா? என் குதிரையைத் தங்களிடத்தில் ஒப்புவித்துவிட்டேன். உங்கள் விருப்பம் எப்படியோ அப்படிச் செய்துகொள்ளலாம். உங்கள் விருப்பத்துக்கு இரண்டாவதில்லை. நான் என்னுடைய நண்பர்களுக்கு உதவி செய்யப் பின் வாங்குகிறவன் என்று உங்களுக்குத் தோன்றுகிறதா?

முத்து: அப்படியாயின் நீங்கள் அரிசிக்கு என்ன் செய்வீர்கள்?

சூதன் : அதைக் குறித்து நீங்கள் கவலைப்படவேண்டாம்; கடையில் இருக்கிற அரிசி இன்னும் பத்து நாள வரைக்குக்கூடப் போதும்.

முத்து : சேணமெல்லாம் கிழிந்துபோயிற்று என்றீர்களே அதற்கு என்ன செய்கிறது ?

சூதன் : கிழிந்துபோய்விட்டதாகச் சொன்னது பழைய சேணம்; புதிதாகச் சேணமும் கடிவாளமும் இரட்டையாக வாங்கி வைத்திருக்கிறேன். அதை முதல்முதல் நான் பயன்படுத்துவதைவிட என்னுடைய நண்பன் பயன்படுத்தினால் மிகுந்த மகிழ்ச்சியே. அவைகளையே தங்கட்குத் தருகிறேன்.

முத்து: அப்படியாயின் நான பட்டணத்துக்குப் போய்க் குதிரைக்கு இலாடம் மட்டுந்தான் தைக்கவேண்டுமோ ?

சூதன் : உண்மையாக நான் அதை முற்றும் மறந்து போனேன். நம் பக்கத்துவீட்டுக்காரனுடைய திறமையைப் பார்க்கலாம் என்று நேற்றுத்தான் முதல் முதல் அவனைக்கொண்டு இலாடந் தைப்பித்தேன். அது நன்றாகவே அமைந்திருக்கிறது.

முத்து : மாணிக்கஞ் சொல்லுகிறபடி குதிரை முதுகில் பெரியபுண் இருக்கும்போது அதன்மேல் எவ்வாறு ஏறமுடியும் ?

சூதன் : அந்தப் போக்கிரிப் பையல் பேச்சு எனக்கு நன்றாகத் தெரியும். அவன் எப்பொழுதும் ஒன்றைப் பத்தாகச் சொல்வது வழக்கம். நான் உண்மையாகச் சொல்லுகிறேன். அந்தப்புண் கண்ணுக்குக்கூடத் தெரியமாட்டாது.

முத்து : குதிரையைத் தேய்த்துச் சீர்ப்படுத்த வேண்டுமல்லவா? பத்து நாட்களுக்குமேல் தேய்க்கப்பெறாமல் குதிரை அழுக்காகக் கிடக்கிறதென்றீர்களே அதற்கு என்ன செய்யலாம் ?

நூநன் : அந்த வேலைக்காரப்பையல் அவ்வாறு ஒரு நாளும் வைத்திருக்கமாட்டான். நாள்தோறும் தேய்த்துக் குளிப்பாட்டித் தூய்மையாக வைத்திருக்க வேண்டுமென்று நான் கண்டிப்பாகக் கூறியிருக்கிறேன். ஆகையால் குதிரை அழுக்காக இருக்க மாட்டாது.

முத்து : இன்று காலைமுதல் புல் தின்னாமல் நிற்கிற தென்றீர்களே. அதற்கென்ன செய்கிறது? இனி மேல் தீனிபோட்டுக் குதிரையின் வயிறு நிறைந்த பிறகு தானே அதன்மீது ஏறிப் போகமுடியும். ஆகையால் நான் வேறு ஒரு குதிரையைப் பார்த்துக் கொண்டு போகிறேன். உங்கள் குதிரை ஓய்வாகக் கிடக்கட்டும்.

நூநன் : அதற்காக அஞ்சவேண்டாம். இன்று காலையில் அது மிகுதியாகக் கொள்ளுத் தின்றுவிட்டபடியால் புல் தின்னவில்லை. அதனுடைய வயிறு நிறை வாகத்தான் இருக்கிறது. அஃது உங்களைச் சுமந்து கொண்டு விரைவாக ஓடும். அதற்காக நீங்கள் அஞ்சவேண்டாம். வழியும் நன்றாகக் காய்ந்தே யிருக்கிறது. நீங்கள் குதிரைமேல் ஏறிக்கொண்டு நன்றாகப் போய் வரலாம். விரைவாகப் புறப்படுங்கள்; வீணாகக் காலந்தாழ்த்த வேண்டாம்.

[சிறிது நேரத்தில் குதிரையும் வந்து சேர்ந்தது. முத்து வீரன் அதில் ஏறிக்கொண்டு தான் போகவேண்டிய இடத்திற்குப் புறப்பட்டான். சிலபேர் இவ்வாறு ஏதாவது பயன் ஏற்படுவதாக இருந்தால் உதவி செய்ய முன்வருகிறார்கள். இல்லாவிட்டால் ஏதேனுஞ் சாக்குப்போக்குச் சொல்லித் தட்டிக் கழித்துவிடுகிறார்கள்.]

௩௩. இஃது உன்னுடைய தன்று

நன்மை செய்பவனுக்குத் தீமை செய்பவன் ஒருநாளும் முன்னுக்கு வரமாட்டான். ஒரு செல்வன் ஒருநாள் அதிகாலையில் குதிரைமீதேறி ஒரு பட்டணத்து வழியாகச் சென்றான். அப்பொழுது அவனுக்குத் தெரியாமல் அவனுடைய பையிலிருந்து பதினாறு மொகராக்கள அடங்கிய ஒருதாள் பொட்டலம் கீழே விழுந்துவிட்டது. செல்வன் அதனைப் பாராமல் தன்வழியே போய்விட்டான். கீழே விழுந்த பொட்டலம் ஓர் எளிய பையனுடைய கையிலே அகப்பட்டது. அச் சிறுவன் மிகவும் நல்லவன். ஆகவே அவன் அப் பொட்டலத்தைக் கொண்டுபோய் அவ்வூர் நீதிமன்றத் தலைவனிடங் கொடுத்தான். நீதிமன்றத் தலைவன் பறையறைந்து இச் செய்தியை ஊர் முழுவதுந் தெரியப்படுத்தினான். அதன் பிறகு மேற்சொன்ன செல்வன் நீதிமன்றத்திற்கு வந்து நீதிமன்றத் தலைவன் கொடுத்த பொட்டலத்தைப் பெற்றுக்கொண்டு, "தன்னுடைய பொருள் குறைந்திருக்கிறதென்றும், பொட்டலத்தை எவன் கண்டெடுத்தானோ அவனிடந்தான் அஃது இருக்கவேண்டும்" என்றும் சாதித்தான. எளிய பையன், "தனக்கொன்றுந் தெரியாதென்றும் தான் எடுத்த பொட்டலத்தை அப்படியே கொண்டுவந்து கொடுத்துவிட்டதாகவும்" கூறினான். நீதிமன்றத் தலைவன் மொகரா மடிப்பை வாங்கிப் பார்த்தான். பதினாறு மொகராக்களுக்குமேல் இருந்திருக்கமுடியாதென்று உணர்ந்துகொண்டான். பிறகு அந் நீதிமன்றத் தலைவன், செல்வனைப் பார்த்து, "இஃது உன்னுடையதன்று; உன்னுடையது வேறு எவருடைய கையிலோ அகப்பட்டிருக்க வேண்டும். இம் மடிப்பில் பதினாறுக்குமேல் கொள்ளாதாகையால் இஃது உனக்குரியதாக இருக்கமுடியாது," என்றுகூறி அம் மடிப்பைச் சிறுவனிடங் கொடுத்துவிட்டுப் பொய்வழக்குப் பேசிய அச் செல்வனைப் போகச் சொல்லிவிட்டான். சிறுவனுக்குத் தீமைசெய்ய எண்ணிய செல்வன் கைப்பொருளும் இழந்து திரும்பினான்.

௯௨. கோழியும் நரியும்

ஒருநாள் ஒரு கோழியானது ஒரு குப்பைமேட்டின் மீது உட்கார்ந்து கூவிக்கொண்டிருந்தது. அப்பொழுது ஒரு நரி அங்கே சென்று கோழியைப் பார்த்து, "ஓ கோழியே! உன்னுடைய முகம் எவ்வளவு அழகாக இருக்கிறது தெரியுமா? உன்னைப்போன்ற முக அழகுடைய வேறொரு பறவையை நான் பார்த்ததே இல்லை. உனது குரலைப்போல இனிமையான குரலையும் நான் வேறெங்குங் கேட்டதில்லை," என்று பலவாறு புகழ்ந்து பேசியது. நரி எதற்காக இவ்வாறு தன்னைப் புகழ்ந்து பேசுகிறது என்று கோழி எண்ணிப்பார்க்கவில்லை. மேலும் நரி கோழியைப் பார்த்து, "நீ கண்ணை மூடிக்கொண்டு கூவும்பொழுது மிகவும் இனிமையாக இருக்கும்," என்று கூறியது. கோழி தன் கண்களை நன்ருக மூடிக்கொண்டு கூவியது. இதனைப்பார்த்த நரி திடீரென்று கோழியின் மேற் பாய்ந்து அதனை வாயிற் கௌவிக்கொண்டு விரைந்து ஓடியது. அப்பொழுது வேட்டை நாய்கள் சில நரியைத் துரத்திக்கொண்டு வந்தன. நரி மேலும் விரைந்து ஓடியது. நரியின் வாயிலிருந்த கோழியானது நரியைப் பார்த்து, "ஓ நரியே! நீ ஓடவேண்டாம்; வேட்டை நாய்களைப் பார்த்துக், 'கோழி எனக்கு உரிமையானது' என்று சொல்" என்று கூறியது. வஞ்சனையிற் கைதேர்ந்த நரி இச் சமயத்தில் ஏமாந்து போய்விட்டது. கோழி சொன்னபடியே வேட்டை நாய்களைப் பார்த்துச் சொல்வதற்காக வாயைத் திறந்தது. அவ்வளவில் கோழி பக்கத்திலிருந்த ஒரு மரத்தின்மேல் ஏறிக்கொண்டுவிட்டது. நரி கோழியை மீண்டும் பிடிப்பதற்கு எண்ணமிட்டுக் கொண்டிருந்த போது வேட்டை நாய்கள் விரைந்து வந்து நரியின்மீது பாய்ந்துவிட்டன. எவ்வளவு சூழ்ச்சிக்காரனுக இருந்தாலும் ஒரு சமயம் மற்றவர்களிடத்தில் ஏமாந்து போகவும் நேரிடக் கூடும்.

௯௩. சாயம் ஏற்றிக்கொண்ட நரி

ஒரு நரி காட்டிலே சுற்றித் திரிந்துகொண்டிருந்தது. ஓரிடத்தில் சாயத்தொட்டி ஒன்று இருந்தது. தொட்டி நிறைய நீலநிறச் சாயம் நிரம்பியிருந்தது. இதனைப்பார்த்த உடனே நரிக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று. அஃது அத்தொட்டியிற் படிந்து நன்றாக அமுங்கித் தன் உடம்பு முழுவதற்கும் நீலநிறச் சாயம் ஏற்றிக்கொண்டது. பிறகு அது மற்ற விலங்குகளிடத்திற்குப் போயிற்று. இதனைக் கண்ட விலங்குகள் "நீ யார்?" என்று உசாவின. அதற்கு நரி, "நான் காட்டில் உள்ள விலங்குகள் யாவற்றிற்கும் அரசன். இப்பொழுதுதான் புதிதாக வந்திருக்கிறேன்," என்று கூறியது. இதனுடைய நிறத்தைக்கண்ட மற்றைய விலங்குகட்கு வேறு வகையாக எண்ணமுடியவில்லை. எல்லா விலங்குகளும் உண்மைதான் என்று நம்பிச் சாயமேற்றிக்கொண்ட நரிக்குக் கீழ்ப்படிந்து நடக்கலாயின. உண்மையில் விலங்கரசனாக உள்ள அரிமாவே அஞ்சிச் சாய நரியைத் தன்னுடைய முதுகிலே சுமந்துகொண்டு எல்லா இடங்கட்குஞ் செல்லத்தொடங்கியது. இவ்வாறு சிலகாலம் நரியின் செங்கோல் நன்றாக நடந்துகொண்டிருந்தது.

சாயமேற்றிக்கொண்ட நரியின் உண்மையை எவ்வாறாயினும் கண்டுபிடிக்கவேண்டும் என்று பிற நரிகளெல்லாம் சமயம் பார்த்துக்கொண்டிருந்தன. சாயமேற்றிக்கொண்ட நரி ஒருநாள் தன்னுடைய தாய்க்குச் சில உணவுப்பொருள்களை நரித்தூதர்கள்மூலம் அனுப்பிவைத்தது. இதனால் எல்லா நரிகளும் உண்மையை உணர்ந்துகொண்டன. அவை ' விரைந்து அரிமாவிடத்திற்குப் போய்த் "தாங்கள் விலங்கரசனாக இருந்தும் ஒரு நரியைச் சுமந்து திரிகிறீர்களே! இது தங்களுடைய தகுதிக்கு அடுக்குமா?" என்று கோளுரை கூறிவிட்டன.

நரிகள் நவின்றதைக்கேட்ட அரிமா, "அவனும் உங்கள் இனத்தவனா? நடையுடை தோற்றம் முதலியன

ஒருமாதிரியாக ஒத்திருந்தாலும் நிறம் மாறுபாடாகத் தோன்றுகிறதே! அந்த நிறத்திற்குத்தானே எல்லோரும் மதிப்புக் கொடுத்திருக்கிறோம். நன்றாகப் பார்த்துக் கொண்டு எதனையுஞ்செய்வோம். அவன் ஊளையிடுவதைப் பார்த்து எனக்குத் தெரியப்படுத்துங்கள். ஊளையைப் பார்த்துக்கொண்டு மேலே ஆகவேண்டியவைகளைச் செய்வோம்,'' என்று கூறியது.

இதனைக்கேட்ட நரிகள், ''அவனுடைய ஊளையொலியை நீங்கள் கேட்கவேண்டுமானால் வசந்தகாலந் தொடங்குமட்டும் பொறுத்துக்கொண்டிருங்கள். அப்பொழுது ஓர் இரவில் ஒரு புதிய உடு வானத்தில் தோன்றும். அப்பொழுது எங்கள் குலத்தவர்கள் அனைவரும் ஊளையிடவேண்டியது கட்டாயமான வழக்கமாகும். அப்படி யாரேனும் ஊளையிடாமல் இருந்தால் அவர்களுடைய உடலிலே உள்ள மயிர்கள் உதிர்ந்துபோகும். அப்பொழுது நீங்கள் உண்மையை உள்ளங்கை நெல்லிக்கனிபோல உணர்ந்துகொள்ளலாம்,'' என்றன.

நரிகள் நவின்றபடியே அந்த நாளும் வந்தது. எதிர்பார்த்த உடுவும் விண்ணிற் பூத்தது. நரிக்கூட்டங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்து ஊளையிட்டுத் திரிந்தன. சாயமேற்றிக்கொண்ட நரியினால் சும்மா இருக்கமுடியவில்லை. ஊளையிடாமல் இருந்தால் உண்மை வெளியாகிவிடுமே என்று அஞ்சித் தானும் மெதுவாக ஊளையிட்டது. சாயமேற்றிக்கொண்ட நரி ஊளையிடுவதை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அரிமா நரிமேற் பாய்ந்து ஒரே அறையில் அதனைக் கொன்று தீர்த்துவிட்டது.

தன் அளவுக்கு அமைதியாக அடங்கியிராமல் வீணான பேரவாக்கொண்டு புதுமையான காரியங்கள் எவற்றையேனுஞ் செய்பவர்கள் இறுதியில் மிகுந்த தொல்லைக்குள் மாட்டிக்கொண்டு விழிப்பார்கள்.

---

௯௪. டில்லிபாட்சாவும் பேரறிவுச் செல்வனும்

டில்லிமாநகரில் டில்லிபாட்சா அரசாட்சி செய்து கொண்டிருந்தான். ஒருநாள், 'ஒரு பார்ப்பனமாது முகமதியனால் கொடுக்கப்பட்ட ஊனைத் தின்றாள்,' என்று ஒரு வழக்கு டில்லிபாட்சாமுன் வந்தது. அப்பார்ப்பனமாது எல்லா நூல்களையும் நான்கு மறைகளையும் நன்கு ஓதியுணர்ந்த ஓர் அந்தணனுடைய மனைவி. எல்லாவகையான நற்குணங்களும் பொருந்திய கற்பரசி. ஊரார்கள் எல்லோராலும் நன்கு போற்றப்பட்ட உத்தமி. சிறந்த அழகும் அமையப்பெற்றவள். அவளுடைய அழகு செல்வத் திமிரினால் மதம்பிடித்தலைந்த ஒரு முகமதியனுடைய உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. எவ்வாறாவது அப் பார்ப்பனிமீது பழிசுமத்தி அவளைத் தன்வழிப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று முடிவு செய்திருந்தான்.

ஒருநாள் அவ்வந்தணமாது ஒரு குளத்திற்குத் துணி துவைப்பதற்குச் சென்றிருந்தாள். அச்சமயத்தில் அவள் மீது மோகங்கொண்டிருந்த முகமதியன் அரசாங்கச் சேவகன் ஒருவனுக்குக் கைக்கூலி கொடுத்து அவள்மீது பழிசுமத்துவதற்கு ஏற்பாடு செய்துகொண்டான். தான் ஊன் துண்டுகள் சிலவற்றைக்கொண்டுபோய் அப் பார்ப்பனமாது துவைத்துவைத்த துணிகளில் மறைத்து வைத்துவிட்டு அரசாங்கச் சேவகனை அண்மையிற் கூப்பிட்டு அவனைப் பார்த்து, "இவ்வந்தணமாது என்னிடம் இருந்து ஊனை வாங்கி உண்டாள். உண்டதுமன்றி எஞ்சியதைப் புடைவையில் மறைத்துவைத்திருக்கிறாள் பார்," என்று சொன்னான்.

கைக்கூலிபெற்ற அவ்வஞ்சகச் சேவகன் பார்ப்பனியைப்பார்த்து, "அம்மா! உங்களுக்குச் சாய்பு ஊன் கொடுத்ததாகச் சொல்லுகிறார். இது குலதருமத்திற்கு மாறுபாடான காரியமாகையால் நீங்கள் அரசன்முன் வந்து உங்களிடம் குற்றமில்லையென்பதை மெய்ப்பித்த பிற்பாடு

நீங்கள் உங்கள் வழியே செல்லலாம்,'' என்று மிகுந்த ஆணவத்துடனும் அதிகாரத்துடனும் கூறினான்.

இதனைக்கேட்ட அந்தணமாது அஞ்சி நடுநடுங்கினாள். "கணவன்மீது மாறாத பேரன்புகொண்ட எனக்கும் இத்தகைய தொல்லை உண்டாயிற்றே,'' என்று கண்ணீர் பெருக்கினாள். மறுமொழி யாதுங் கூறாமல் அரசன் அவைக்குப் போய்த் தலைகுனிந்தவண்ணமாக நின்றுகொண்டிருந்தாள்.

கைக்கூலிபெற்ற வஞ்சகச் சேவகன் அரசனைப் பார்த்து, "இந்தப் பார்ப்பனமாது குலதருமத்துக்கு மாறுபாடாக முகமதியன் ஒருவனிடம் இருந்து ஊனை வாங்கி உண்டாள்,'' என்று கூறினான். டில்லிபாட்சா, "எம் முகமதியனிடமிருந்து இவள் ஊனை வாங்கித் தின்றுளோ அம்முகமதியனுக்கு இவள் பெண்டாட்டியாக வேண்டும்,'' என்று தீர்ப்புக்கூறினான். இதனைக்கேட்டு அவையில் இருந்தவர்கள் எல்லோரும் மிகுந்த வருத்தமடைந்தார்கள். பார்ப்பனமாது மூர்ச்சையடைந்தாள். அவளுக்கு உணர்ச்சி வருவதற்கு மருத்துவஞ்செய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது அப்பேரவையில் பேரறிவுச்செல்வன் என்னும் பெயருடைய அந்தணன் ஒருவன் இருந்தான். அவன் எழுந்து டில்லிபாட்சாவுக்கு வணக்கஞ்செய்தான். தான் செய்யும் விண்ணப்பத்தைக் கேட்டருளவேண்டும் என்று வேண்டிக்கொண்டான். டில்லிபாட்சா 'அவ்வாறே கூறலாம்' என்று கட்டளையிட்டான்.

பேரறிவுச்செல்வன் டில்லிபாட்சாவைப் பார்த்து, "இவ்வழக்கானது இவ்வவையில் உள்ளோரேயல்லாமல் உலகத்தில் எல்லோரும் வியப்படையத் தக்கதாயிருக்கின்றது. இத்தகைய வழக்கை மிகுந்த கருத்துடன் உசாவி ஒரு முடிவுக்கு வரவேண்டும். பாட்சா அவர்கள் ஒரு நொடிக்குள்ளேயே தீர்ப்புக் கூறிவிட்டபடியால் அவையில் உள்ள எல்லோருமே மிகுந்த கலக்கமடைந்திருக்

கிறார்கள். அரச நீதி தவறாமல் அரசாட்சி நடத்தவேண்டியது அரசர்களுடைய கடமையாகும். ஏதேனும் தவறு நிகழ்ந்துவிடின் அரசாட்சிக்குக் களங்கம் உண்டாகும். இந்த வழக்கை நன்கு உசாவித் தீர்ப்புக்கூறுமாறு எனக்குக் கட்டளையிட்டால் நான் அவ்வாறே செய்கிறேன். என்னுடைய தீர்ப்புப் பாட்சா அவர்களுக்கு உடன்பாடாக இல்லாவிடின் அதனை மாற்றி விருப்பப்படி செய்யலாம்,'' என்று சொன்னான். பாட்சா, 'அப்படியே செய்,' என்று கட்டளையிட்டான்.

பேரறிவுச் செல்வன் அந்தணமாதின் அண்மையில் நின்றுகொண்டு, "அம்மா! தாயே!! நினக்கு வெற்றியுண்டாகும். கடவுள் உண்மையை உலகிற்குப் புலப்படுத்திப் பொல்லாத மூர்க்கரைத் தண்டிப்பார்'', என்று அவளுடைய காதில் இரண்டுமுறை சொன்னான். அந்தணமாது மூர்ச்சை தெளிந்து கண்ணீர் பெருக்கினாள். பேரறிவுச் செல்வன் அந்தணமாதைப் பார்த்து, "அம்மா நீ எதற்கும் அஞ்சாதே! காலையிலிருந்து குளத்திற்குத் துணி துவைப்பதற்குச் சென்றதுவரையில் நடந்தவைகளைக் கூறவேண்டும்,'' என்று சொன்னான்.

அந்தணமாது அவையோர்களையும் பேரறிவுச் செல்வனையும் பார்த்து, "நான் இன்று காலையில் எழுந்து வீட்டு வேலைகளையெல்லாஞ் செய்து முடித்துவிட்டு வாழைக்காய்க்கறி இரசம் முதலியவைகளைச் செய்து என் கணவருக்கும் வீட்டில் உள்ளவர்கட்கும் உணவு படைத்தேன். பிறகு நானும் உண்டுவிட்டுத் துணிகளைத் துவைப்பதற்காகக் குளத்திற்குச்சென்று துணிகளைத் துவைத்துக்கொண்டிருந்தேன். இவைகளைத் தவிர வேறு ஒன்றும் எனக்குத் தெரியாது,'' என்று கூறினாள்.

பேரறிவுச் செல்வன் உடனே அரண்மனை மருத்துவனை அழைப்பித்து அப்பார்ப்பனமாது வாந்தி யெடுத்தற்கு மருந்து கொடுக்கச் செய்தான். அவ்வாந்தியில் வாழைக்காய்க் கறி, சோறு முதலியன வெளிப்பட்

டனவே யல்லாமல் வெகுநேரம் வரையில் செறியாத ஊன் ஒரு சிறிதும் விழவேயில்லை. இதனால் அவ்வந்தணமாது ஊனுண்டாள் என்னும் செய்தி பொய்யாகப்போய்விட்டது. அவையில் இருந்தவர்கள் எல்லோரும் பேரறிவுச் செல்வனுடைய அறிவுத் திறமையை வியந்து புகழ்ந்தார்கள்.

டில்லிபாட்சா பேரறிவுச் செல்வனுடைய அறிவு நுட்பத்தை வியந்து பாராட்டினன். முன்பின் ஆராய்ந்து பாராமல் ஒரு மாதைத் தண்டித்துப் பழியைத் தேடிக் கொள்ளப் பார்த்தோமே என்று உள்ளம் வருந்தினன். அப்பெண்ணுக்குப் பலவகையான துணிமணிகள் அணிகலன்கள் முதலியன நன்கொடையளித்துப் பாராட்டி வீட்டிற்கனுப்பிவைத்தான். பேரறிவுச் செல்வனையும் பெருமைப்படுத்தினன்.

பொய்வழக்குக் கொண்டுவந்த முகமதியனையும் அவனுக்கு உடந்தையாக இருந்த சேவகனையும் இறக்கும் வரையில் சிறைச்சாலையில் அடைக்கக் கட்டளையிட்டான்.

பேரறிவுச் செல்வன் தன் பெயருக்கேற்ப மிகுந்த அறிவாளியாக விளங்குதலைக் கண்டு அவனைத் தன்னுடைய அமைச்சனாக ஏற்படுத்திக்கொண்டு அதுமுதல் எல்லாக் காரியங்களையும் பேரறிவுச் செல்வனைக் கலந்தே செய்துகொண்டு அரசாட்சியை நடத்திக்கொண்டிருந்தான் டில்லிபாட்சா.

கரு. கோள் உரைத்தல்

பேரறிவுச்செல்வன் அமைச்சனாக அமர்ந்தது முதல் எல்லாக் காரியங்களும் செம்மையாக நடந்துகொண்டிருந்தன. ஒருநாள் பாட்சாவின் பேரவை கூடியிருந்தது. பாட்சா பேரறிவுச் செல்வனோடும் மற்றவர்களோடும் உரையாடிக்கொண்டிருந்தான். அப்பொழுது பாட்சா அவையோர்களைப் பார்த்து, "கோள் உரைப்பவனை என்னசெய்ய வேண்டும்?" என்று கேட்டான். சிலர், "கோட்சொல்லியைத் தண்டிக்கவேண்டும்," என்றார்கள். சிலர், "கோட்சொல்லியின் நாவை அறுக்கவேண்டும்," என்றார்கள். சிலர், "கோட்சொல்லிகட்கு அபராதம் போடவேண்டும்," என்றார்கள். பேரறிவுச்செல்வன் தானாகவலிந்து எத்தகைய மறுமொழியுங் கூறாமல் இருந்தான். டில்லி பாச்சா அமைச்சனாகிய அவனைப்பார்த்து, "உன்னுடைய நோக்கம் யாது?" என்று கேட்டான். அதற்குப் பேரறிவுச்செல்வன், "கோள் சொல்லுபவனை ஒன்றுஞ் செய்யவேண்டியதில்லை. கோள் உரைகளைக் கேட்பவனுடைய இரண்டு காதுகளையும் அறுத்துவிடவேண்டும்," என்றான்.

பேரறிவுச் செல்வனுடைய இம்மறுமொழிகளைக் கேட்ட பாட்சா, "கோள் சொல்லுபவனைச் சும்மாவிட்டு விட்டுக் கோள்மொழியைக் கேட்பவனுடைய காதுகளை அறுப்பது அறமாகுமா?" என்று கேட்டான். அதற்கு அமைச்சன், "ஆம்; அதுதான் அறமாகும். கோள்மொழிகளைக் கேட்பவர்கள் இல்லாவிட்டால் கோள்சொல்பவர்களும் ஏற்படமாட்டார்கள். கோள் கேட்பவர் இருக்கிறபடியினால்தான் கோள்சொல்பவர்களும் உண்டாகிறார்கள். ஆகவே கோள் கேட்பவனுடைய காதுகளைத்தான் அறுக்கவேண்டும்," என்றான். டில்லி பாட்சாவும் பிறகு பேரறிவுச் செல்வனுடைய கூற்றை ஒப்புக்கொண்டான்.

௧௨௪. சமயத்திற்குத் தக்க அறிவு

ஒருநாள் டில்லி பாட்சா தன் மனைவியாகிய அரசியோடு உரையாடிக்கொண்டிருந்தான். அப்பொழுது அவனுக்கு அபான வாயு வெளியாயிற்று. அது மிகுந்த துர்நாற்றம் உடையதாக இருந்தது. அதனால் பாட்சா மிகுந்த வெறுப்பும் எரிச்சலும் அடைந்தான். உடனே அரசியை வெளியே பிடித்துத் தள்ளி, "உன்னுடைய பிடை பிடித்த மூஞ்சியை என்னிடம் இனிமேல் காட்டாதே. எங்கேனும் தொலைந்துபோ," என்று சொல்லி ஊருக்கு வெளியே இருந்த ஒரு மண்டபத்தில் அவளைத் தனிமையாக வைத்தான்.

மறுநாள் பாட்சா அரசிருக்கை மண்டபத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு அங்கிருந்த அலுவலாளர்கள் அவையோர்கள் அனைவரையும் அழைத்து, "நீங்கள் அபான வாயு விடுவதுண்டா?" என்று கேட்டான். அரசியின் செய்தியை எல்லோரும் தெரிந்துகொண்டிருந்தபடியால், இக் கேள்வி அரசியை முன்னிட்டே கேட்கப்பட்டிருக்கிறதென்று உணர்ந்துகொண்டு எல்லோரும், "நாங்கள் அபானவாயு விடுவது இல்லை," என்று சொன்னார்கள். பிறகு அமைச்சனாகிய பேரறிவுச்செல்வன் அவைக்கு வந்தான். பாட்சா அவனைப் பார்த்தும் அக்கேள்வியைக் கேட்டான். எல்லோருடைய மறுமொழிக்கும் மாறாகப் பேரறிவுச்செல்வன் தான் அபான வாயு விடுவது உண்டென்று மறுமொழி கூறினான். அவ்வளவில், பாட்சா அமைச்சனைப் பார்த்து, "நீ இவ்விடத்தில் இருப்பதற்குத் தகாதவனாக இருப்பதால் என்னுடைய நாட்டில் இருக்கக் கூடாது. உடனே புறப்பட்டு எங்கேயாவது போய்விட வேண்டும்," என்று சொன்னான். அமைச்சனாகிய பேரறிஞன், "அப்படியே செய்கிறேன்," என்று சொல்லி மிகுந்த களிப்புடன் புறப்பட்டு வீட்டிற்குச்சென்றான். அமைச்சனுடைய பகைவர்கள் விருந்து நடத்தித் திருவிழாக் கொண்டாடினார்கள்.

அரசி தன்னாலே பேரறிவுச்செல்வனும் நாட்டைவிட்டு வெளியே போகும்படியாக நேரிட்டிருக்கிறதென்று கேள்விப்பட்டு மிகுந்த வருத்தமடைந்தாள். அவனை வரவழைத்து, "பாட்சா எப்பொழுதும்போல் என்னிடத்தில் விருப்பமாக இருக்கும்படி செய்வதற்கு உன்னால்தான் முடியும். உன்னைத்தவிர வேறு எவராலும் இவ்வேலையைச்செய்வதற்கு முடியாது," என்று சொல்லிக் கண்ணீர் பெருக்கினாள். பேரறிவுச்செல்வன் அரசியைப் பார்த்து, "பாட்சா என்னையும் தம்மிடம் வரக்கூடாதென்று சொல்லிக் கட்டளையிட்டிருக்கிறார். அவ்வாறாக நான் உன்னுடைய காரியத்தை எவ்வாறு நிறைவேற்ற முடியும்?" என்று கேட்டான்.

அதற்கு அரசி, "ஓ அமைச்ச! நீ மிகவுங் கெட்டிக்காரன். உன்னால் ஆகாதது ஒன்றுமில்லை. நான் உன்னுடைய ஆற்றலைப் பன்முறையும் நன்றாகப் பார்த்திருக்கிறேன். நான் உன்னை என்னுடைய அண்ணனைப்போல் எண்ணிக்கொண்டிருக்கிறேன். ஆகையால் இச் சமயத்தில் கைவிடக்கூடாது," என்று சொல்லி மிகவும் வற்புறுத்தி வேண்டிக்கொண்டாள். மேலும் பேரறிவுச் செல்வனைப் பார்த்து "இக் காரியத்திற்கு ஏதேனும் பொருளுதவி வேண்டியதாக இருப்பினும் என்னால் இயன்றதைக் கொடுக்கிறேன்," என்று சொன்னாள். அமைச்சனாகிய பேரறிவுச் செல்வன் அரசியின் வேண்டுகோளுக்கு இணங்கினான். அரசியின் எண்ணத்தை ஒரு திங்களுக்குள் நிறைவேற்றுவதாகச் சொன்னான். அதற்காகப் பதினாயிரம் வராகன் வேண்டும் என்றான். அரசி தான் அணிந்திருந்த சந்திரகண்ட மாலையை விற்றுப் பதினாயிரம் வராகனை அமைச்சன் பேரறிவுச் செல்வனுடைய கையிலே கொடுத்தாள்.

அமைச்சன் அவ் வராகன்களைப் பாதுகாப்புச் செய்துவிட்டுச் சில வராகன்களுக்குத் தங்கச் சோளம் செய்து அவைகளைக் கையில் வைத்துக்கொண்டு பாட்சாவின் அரண்மனை வாயிலுக்கு வந்தான். வாயில் காவலாளனைப்

பார்த்து, "ஓ காவலாளனே! நீ பாட்சாவிடம்போய் பேரறிவுச் செல்வன் வந்திருக்கிறான் என்றும், இன்றியமையாத சிறந்த காரியம் இருக்கிறதாம் அதனைத் தெரிவித்து விட்டுப் போவதற்காக வந்திருக்கிறானே யல்லாமல் அமைச்சு வேலையை விரும்பி வரவில்லையென்றுந் தெரியப் படுத்துவாயாக," என்று சொல்லி அனுப்பினான். வாயிற் காவலாளன் அரசனிடம்போய் இச் செய்தியைச் சொன்னான். வந்து தெரியப்படுத்தலாம் என்று பாட்சா கட்டளையிட்டான். உடனே பேரறிவுச் செல்வன் உள்ளேபோய்ப் பாட்சாவுக்கு வணக்கஞ் செலுத்தினான். தங்கச் சோளங்களைப் பாட்சாவினுடைய கையிற் கொடுத்தான். பாட்சா, "இஃதென்ன?" என்று வினவினான். அமைச்சன் மிகுந்த வணக்கத்துடன், "அரசே! இச் சோளங்களை ஒரு யோகி சுவரர் மேருமலையில் இருந்து கொண்டுவந்து கொடுத்தார். இதனாற் பயன் என்னவென்று கேட்டேன். அந்த யோகி இதை நிலத்தில் தகுந்தவர்கள் விதைத்தால் தங்கச் சோளம் விளையும் என்று கூறினார். ஆகவே இத்தகைய அருமையான பொருளைத் தங்களுடைய திருமுன்பு சேர்க்க வேண்டும் என்று இவ்விடத்திற்குக் கொண்டு வந்தேன். இதைத் தகுதியான இடத்தில் தகுதியானவர்களைக் கொண்டு விதைக்கவேண்டும். இக் காரியந் தங்களைப் போன்றவர்களால் ஆகுமேயல்லாமல் என்னைப்போன்றவர்களால் ஆகமாட்டாது," என்று கூறித் தான் அவ்விடத்தைவிட்டுப் போகத் தொடங்கினான்.

பாட்சா பேரறிவுச் செல்வனைப் பார்த்து, "இவ்விதைகளை விதைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நீயே செய்," என்று சொன்னான். பேரறிவுச் செல்வன், "அப்படியே செய்கிறேன்," என்று கூறிவிட்டுத் தங்கச்சோளம் விதைப்பதற்குத் தக்க நிலத்தைத் தேடத்தொடங்கினான். தன்னுடைய பகைவர்களின் வீடுகள் உள்ள இடங்களைப் பார்த்து, "இந்த இடமே தகுந்தது" என்று சொல்வான். அவ் வீட்டுக் குடையவன் ஓடிவந்து ஆயிரக்கணக்கான வராகன்களைக் கொடுத்து "என்னுடைய வீட்டை இடித்து

விடாமல் இருக்கவேண்டும்,'' என்று சொல்லி வேண்டிக் கொள்வான். அவ் வீட்டைவிட்டு மேலுஞ் சிறிதுதொலை செல்வான். அங்கே தன்னுடைய பகைவர்கள் வீடு காணப்பட்டால் அதை இடித்துவிட வேண்டும் என்பான். அவ் வீட்டுக்காரர்களும் வேண்டிய பொருள் கொடுத்துத், "தங்களுடைய வீடுகளை இடித்துவிடாமல் இருக்க வேண்டும்,'' என்று சொல்லி வேண்டிக்கொள்வார்கள். இத்தகைய சூழ்ச்சியாலும் பெரும்பொருள் சேர்ந்தது. பிறகு எல்லோருக்கும் உடன்பாடான ஓரிடத்தைத் தெரிந் தெடுத்து அவ்விடத்தைச் சோளம் விதைப்பதற்குச் சரிப் படுத்துமாறு கட்டளை செய்துவிட்டுச் சென்றான். மறுநாட் காலையில் எழுந்து நாட்கடன்களை முடித்துக்கொண்டு அரச அவைக்கு வந்து பாட்சாவைக் கண்டு வணங்கினான். "நிலஞ் சரிசெய்யப்பட்டிருக்கிறது. விதைப்பதற்கு நல்ல நேரமும் நெருங்கிக்கொண்டிருக்கிறது. தாங்கள் தங்க ளுடைய உறுதிச் சுற்றத்தினருடன் (பரிவாரங்களோடு) உடனே புறப்படவேண்டும்,'' என்று சொல்லி வேண்டிக் கொண்டான். பாட்சா பேரறிவுச் செல்வனோடும் மற்றவர் களோடும் புறப்பட்டுச் சோளம் விதைக்கத் தேர்ந்தெடுக் கப்பட்டிருக்கும் இடத்திற்குப் போய்ச் சேர்ந்தான்.

பேரறிவுச் செல்வன் பாட்சாவைப் பார்த்து, "விதைப் பதற்குத் தகுதியுள்ளவர்களைத் தேடவேண்டியதில்லை. தாங்களே இருக்கின்றீர்கள். தங்கட்கு விருப்பமானவர் களும் இருக்கிறார்கள். ஆனால் ஒரு செய்திமட்டுங் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும் என்று யோகி என்னிடஞ் சொல்லியிருக்கிறார். ஆனால் நான் கேட்டால் கனவான் கட்குச் சினம் உண்டாகுமோ என்னவோ என்று அஞ்சு கிறேன்,'' என்றான். அதற்குப் பாட்சா, "அச்சமில்லாமற் கேட்கலாம்,'' என்றான். பேரறிவுச் செல்வன் பாட்சாவைப் பார்த்து, "இவ் விதைகளை விதைப்பவர்கள் அபானவாயு விடாதவர்களாக இருக்கவேண்டும். அப்படி அபானவாயு விடாத தாங்களாவது தங்களுடைய நண்பர்களாவது விதைக்கலாம். அப்படி விதைப்பின் தங்கச் சோளக்

கதிர்கள் விளைவதற்குச் சிறிதும் ஐயமேயில்லை. அப்படி விளையாமற்போயின் என்னுடைய உயிரைத் தப்பாமற் பலி கொடுக்கிறேன்,'' என்றான்.

பாட்சா முன்னரே இராணியின் பொருட்டுக் கேட்ட பொழுது அபானவாயு விடுவதில்லை என்று சொன்னவர் களை ஒவ்வொருவராய் அழைத்துக்கேட்டான். சிலர் உறுதியாகச் சொல்ல முடியாதென்றும், சிலர் ஐயமாக இருக்கிறதென்றும், சிலர் எப்பொழுதாவது விடுவதுண் டென்றும், சிலர் இப்பொழுது தாங்கள் விடுகிறது உண்டு என்றுஞ் சொன்னார்கள். இவ்வாறு எல்லாருஞ் சொன்ன படியால் பாட்சா பேரறிவுச் செல்வனைப் பார்த்து, "நீயே விதைப்பாயாக" என்றான். அதற்குப் பேரறிவுச்செல்வன், "நான் நாள்தோறும் அபானவாயு விடுகிறேன்; நான் விதைத்தால் பயனேற்படாது. அபானவாயு விடாம லிருக்கின்ற தாங்கள் தாம் இதனை விதைக்கவேண்டும்,'' என்றான். பாட்சா, "நானும் நாள்தோறும் அபானவாயு விடுகிறேனாதலால் நான் விளைத்தாலும் பயனேற்படமாட் டாது,'' என்றான்.

இதனைக்கேட்ட பேரறிவுச் செல்வன் மிகுந்த மகிழ்ச்சி யடைந்து, 'நாம் எடுத்த காரியம் வெற்றியடைந்தது' என்று களித்தான். பாட்சாவைப் பார்த்து, "அபான வாயு விடாதவர்களே ஒருவரும் இல்லை. எல்லோரும் அபானவாயு விடுபவர்களாகவே இருக்கிறார்கள். இவ்வா ருக அரசியாரையும் என்னையும் மட்டும் ஏன் அபானவாயு விடுபவர்கள் என்று இழிவுபடுத்தினீர்கள். இதனைப் பிற அரசர்கள் கேள்விப்பட்டால் இகழ்ந்து நகைக்கமாட்டார் களா?'' என்று கேட்டான். பாட்சா தன்னுடைய தவற் றினைத் தான் உணர்ந்துகொண்டு அரசியை வரவழைத்து அவளைச் சமாதானப்படுத்தினான். பேரறிவுச் செல்வ னுக்குந் தக்கவாறு நன்கொடைகள் வழங்கிப் பெருமைப் படுத்தினான். தவறானமொழிகள் கூறிப் பொய்யுரை புகன்றவர்களைத் தக்கவாறு தண்டித்து நாட்டைவிட்டு விரட்டினான்.

௩௪. நுண்ணுணர்வு

அக்பர்பாட்சா அரசாட்சி செய்துகொண்டிருக்கையில் ஒருநாள் பாட்சாவின் மகள் மாடியின்மீது நின்று தலைமயிரை ஆற்றிக்கொண்டிருந்தாள். அவள் தெருவிற் போகிறவர்களையும் வருகிறவர்களையும் பார்த்துக்கொண்டு நின்றிருந்தாள். அப்பொழுது திருமணமாகாதவன் ஒருவன் தெருவிற் சென்றுகொண்டிருந்தான். அவன் தற்செயலாக மாடிமீது பார்த்தான். பாட்சாமகள் நின்றுகொண்டிருத்தலையுங் கண்டான். அவளுடைய அழகுக்கு மிகுந்த வியப்படைந்தான். அப்பொழுது அவனுடைய கையிலே பளபளப்புடைய வெண்கலச் செம்பு ஒன்று இருந்தது. அச் செம்பிலே பாட்சாவின் மகளுடைய வடிவம் பிரதிபிம்பமாகக் காணப்பட்டது. பாட்சாவின் மகளுடைய அழகைக்கண்டு வியப்படைந்த மணமாகாதவன் செம்பில் தெரிந்த அவளுடைய வடிவத்தை முத்தமிட்டான். இதனை மாடிமீதிருந்த பாட்சாவின் மகள் கண்டாள்; உடனே தன்னுடைய தாய்க்கு இச்செய்தியைத் தெரியப்படுத்தினாள். இராணி இச்செய்தியைப் பாட்சாவுக்குத் தெரியப்படுத்தினாள்.

பாட்சா வால்மிதியுண்ட பாம்பைப்போல் சிறிப் பெருஞ்சினம் அடைந்தான். உடனே தன்னுடைய அரசிருக்கை மண்டபத்திற்குவந்து அவ்வாறு முத்தமிட்ட மணமாகாதவனைப் பிடித்துத் தலையை வெட்டவேண்டும் என்றான். இதற்குள் பேரறிவுச்செல்வன் அவைக்கு வந்தான். பாட்சா அமைச்சனாகிய அவனைப்பார்த்து, "ஓ அமைச்ச! உங்களவர்கள் குற்றஞ்செய்துவிட்டார்கள்" என்று சொல்லிப் பற்களை நறநறவென்று கடித்தான். பேரறிவுச்செல்வன் பாட்சாவை அமைதிப்படுத்தி நடந்தவைகளையெல்லாம் நவிலவேண்டும் என்று கேட்டான். பாட்சா தன்னுடைய சினத்தைச் சிறிது அடக்கிக்கொண்டு, "ஓ அமைச்சனே! அந்தப்புரத்துப் பெண்களை முத்தமிட்டவர்களைச் சித்திரவதை செய்யவேண்டு

மென்பது அறநூல்விதித்த கட்டளையல்லவா? என்னுடைய மகளை மணமாகாதவன் ஒருவன் முத்தமிட்டுவிட்டானாகையால் அவனுடைய தலையை வாங்கவேண்டியது கட்டாயம் செய்யவேண்டியதாகும்," என்று சொன்னான்.

இதனைக்கேட்ட பேரறிவுச்செல்வன் பாட்சாவைப் பார்த்து, "அரசே! தங்களுடைய மகளோ ஏழு உப்பரிகைகள் உள்ள உயர்ந்த மாளிகையில் இருக்கிறாள். அவ்வாறாக அவன் அம்மாளிகைக்குள் வருவது எப்படி? இது நம்பத்தக்கதாக இல்லையே. இதன் உண்மையை உணர்ந்து கொண்டுதான் தண்டனை விதிக்கவேண்டுமேயல்லாமல் மனம்போனபடி விதித்துவிடக்கூடாது," என்று சொன்னான்.

அதற்குப் பாட்சா நடந்தவைகளையெல்லாம் விளக்கமாகச் சொன்னான். உண்மையை உணர்ந்த அமைச்சனாகிய பேரறிவுச்செல்வன் பாட்சாவைப் பார்த்து, "அவன் எப்படித் தங்களுடைய மகளின் நிழலை முத்தமிட்டுக் கொண்டானோ அப்படியே அவனுடைய நிழலிற் காணப்படும் தலையைத் துண்டிக்கவேண்டும். நாளைக் காலையில் அவ்வாறே செய்துவிடுவோம்," என்று சொன்னான். தண்டனையின் நுட்பத்தைக் கேட்டுப் பாட்சாவும் அவையினரும் பேரறிவுச்செல்வனுடைய அறிவுத்திறமையை வியந்து புகழ்ந்து கொண்டாடினார்கள். மறுநாட்காலையில் அந்த மணமாகாதவனுக்கு அவ்வாறே தண்டனை நிறைவேற்றப்பட்டது. பேரறிவுச்செல்வனுடைய நுண்ணுணர்வால் மணமாகாதவன் இவ்வாறு உயிர்பிழைத்தான்.

௧௯அ. எருது வெண்ணெய்

டில்லிபாட்சாவிடம் பேரறிவுச்செல்வன் அமைச்சனாக அமர்ந்தபிறகு அதுவரையிலும் பாட்சாவிடம் புகழோடு வாழ்ந்திருந்த முகமதியர்களுக்கு அடியோடு மதிப்பே இல்லாமற்போய்விட்டது. அதனால் முகமதியர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து அக்பர் பாட்சாவின் மனைவியிடம் போய்ப் பலமுறை வணக்கஞ்செய்து அவளைப் புகழ்ந்து கொண்டாடி அவளைப்பார்த்து, "ஓ அரசியே! தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. ஆயினும் எங்களுடைய விண்ணப்பத்தைக்கேட்டருளுதல் வேண்டும். பேரறிவுச் செல்வன் அமைச்சனாக வந்தநாள்முதல் நம்மவர்கட்குச் சிறப்பில்லாமற் போய்விட்டது. தங்களுடைய தம்பியார் அடையவேண்டிய அமைச்சுவேலை எங்கேயோ கிடந்த ஒரு பார்ப்பானுக்குப் போய்விட்டது. இதனைத் தாங்கள் ஆராய்ந்து பார்த்து ஆகவேண்டியவைகளைச் செய்யாமற் போனால் நமது சமயத்தைச் சேர்ந்த பெரியோர்கள் நம்மை இகழ்ந்துரைக்கமாட்டார்களா? தங்களுடைய அருமைத் தம்பியார் அமைச்சரானால் எங்களைச்சேர்ந்தவர்கட்கெல்லாம் பலவகையான மேன்மைகள் உண்டாகும். ஆகவே தாங்கள் தங்களுடைய தம்பியார் அமைச்சராவதற்குச் செய்யவேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்யவேண்டும்," என்றுகூறி அவளுடைய உடன்பாடு பெற்றுக்கொண்டு தங்கள் இருப்பிடங்கட்குச் சென்றார்கள்.

அரசி தன்மீதிருந்த எல்லா அணிகலன்களையும் எடுத்தெறிந்துவிட்டு ஒரு பழைய கட்டிலின்மேற் படுத்துப் புரண்டு கபடநாடகம் ஆடினாள். பாட்சா அந்தப்புரஞ் சென்று தன் அரசியின நிலைமையைப் பார்த்தான். அவளைப் பார்த்து, "உனக்கு நேர்ந்த தொல்லை யாது? அதனைக் கூறு; நான் விரைவில் போக்கடிக்கிறேன்; நீ இவ்வாறு தலைவிரிகோலமாகக் கிடப்பது என்னுடைய உள்ளத்தை வாட்டி வருத்துகிறது," என்று சொன்னான். அதற்கு அவள், "என்னுடைய உடல் முழுவதிலுங்

கொடுமையான எரிச்சல் உண்டாகியிருக்கிறது. இதற்கு எருதினுடைய வெண்ணெயைக் கொண்டுவந்து பூசினால் அல்லாமல் நீங்காது என்று மருத்துவர்கள் எல்லோரும் ஒரேமுகமாகக் கூறுகிறார்கள். எருது வெண்ணெய் விரைவில் வராமற்போனால் நான் மாண்டொழிவது ஒருதலை. ஆகவே பேரறிவுச்செல்வனுக்குச் சொல்லி விரைவில் அதனைத் தருவித்துக்கொடுத்தல் வேண்டும்,'' என்று கூறினாள்.

பாட்சா, "அப்படியே ஆகட்டும்'' என்று கூறிவிட்டு அவைக்குவந்து அமைச்சனைக் கூப்பிட்டான். "எருதின் வெண்ணெய் ஒருசேர் மிகு விரைவாகத் தேடிக்கொடுக்க வேண்டும்,'' என்று சொல்லிக் கட்டளையிட்டான். அவ்வாறே தேடித்தருவதாகப் பேரறிவுச்செல்வன் உடன்பட்டான். "எருதின் வெண்ணெய் காஷ்மீர் நாட்டில் உள்ளது. அதன்விலை சேர் இருபதுலட்சம் ரூபாயாகின்றது. கொண்டுவருவதற்கு ஏழுநாட்கள் காலதவணை கொடுக்கவேண்டும்,'' என்று சொல்லி இருபதுலட்சம் ரூபாய்களைப் பெற்றுக்கொண்டு தன்னுடைய இல்லத்திற்குச்சென்றான். தாராளமாகச் செலவுசெய்து நன்றாகச் சாப்பிட்டுக்கொண்டிருந்தான்.

நான்காம்நாள் நள்ளிரவில் பேரறிவுச்செல்வன் தன்னுடைய மகளைக் கூப்பிட்டுப் பழைய துணிகள் சிலவற்றை அவளிடங்கொடுத்து, "நீ இதை அரசனுடைய பூம்பொழிலில் உள்ள குளத்தில் கொண்டுபோய்த் துவைக்க வேண்டும். அவ்விடத்தில் யாருந் துணி துவைப்பது வழக்கமில்லையாகையால் அங்கே துவைப்பவர்களை அரசனிடம் பிடித்துக்கொண்டுபோவார்கள். அரசன் உன்னைப் பார்த்து, "ஏன் இவ்வேளையில் வந்து துணிகளைத் துவைக்கிறாய்?'' என்று கேட்பான். நீ அப்பொழுது அரசனைப்பார்த்து, "என்னுடைய தந்தையாகிய பேரறிவுச்செல்வர் இப்பொழுதுதான் பிள்ளை பெற்றிருக்கிறார்; அக்குழந்தைக்குப் போர்ப்பதற்கு நல்லதண்ணீரில் தோய்த்த துணிகள் வேண்டும் என்று மருத்துவச்சி சொன்னாள்

என்று சொல்,'' என்று சொல்லி அனுப்பினன். அவ்வாறே பேரறிவுச்செல்வனுடைய மகள் நள்ளிரவு வேளையில் அரசனுடைய பூம்பொழிலுக்குச் சென்று அங்குள்ள குளத்தில் துணிகளைத் துவைத்தாள். துணி துவைக்கும் ஒலி அரசனுக்குக் கேட்டது. "துணி துவைப்பவர்களைப் பிடித்துக்கொண்டுவாருங்கள்,'' என்று அரசன் ஏவலர்கட்குக் கட்டளையிட்டனுப்பினன். ஏவலர்கள் பேரறிவுச்செல்வன் மகளைப் பிடித்துக்கொண்டுபோய் அரசனுக்கு முன்பு நிறுத்தினர்கள்.

அரசன் பேரறிவுச்செல்வனுடைய மகளைப்பார்த்து, "நீ யார்?'' என்று கேட்டான். அவள் "நான் பேரறிவுச் செல்வனுடைய மகள்,'' என்று மறுமொழிகூறினள். "துணி துவைக்கும் வழக்கம் இல்லாத இடத்தில் இவ் வேளையில் வந்து நீ துணி துவைக்கவேண்டிய காரணம் என்ன?''வென்று அரசன் கேட்டான். அப்பெண் தன்னுடைய தந்தை சொல்லிக்கொடுத்தபடியே சொன்னள். இதனைக்கேட்ட பாட்சா விழுந்து விழுந்து நகைத்தான். "ஏ குட்டி! உலகத்தில் ஆண்கள் பிள்ளைபெறுவது என்பது முழுப்பொய். மேலும் பிறந்த குழந்தைக்குத் துவைத்த துணிகளைப் போர்த்துவதென்பதும் பொய் யல்லவா?'' என்று கேட்டான்.

அதற்குப் பேரறிவுச்செல்வனுடைய மகள், "எவ் வாறு இது பொய்யாகும்? எருது கன்று போட்டுப் பால் கறந்து தயிர் கடைந்து அதில் வரும் வெண்ணெயை விலக்கு வாங்கிவரும்படி கட்டளையிட்ட தாங்கள் பொய் யென்று சொன்னல் பொய்; மெய்யென்று சொன்னல் மெய்; எனக்கு ஒன்றுந் தெரியாது,'' என்று சொன்னள்.

இதனைக்கேட்ட பாட்சா அவளுடைய அறிவுக்கு வியந்து அவளுக்கு நன்கொடைகள் வழங்கி அனுப்பி விட்டான். எருது வெண்ணெய் வாங்கிக்கொண்டு வருமாறு கூறிய தன்னுடைய மடமையை நினைத்துப் பெரிதும் இரங்கினன். பேரறிவுச்செல்வனுடைய நுண்ணுணர்

வுக்கு மகிழ்ந்து மறுநாள் அவனை அழைத்துப் பெரிதும் பாராட்டினான். வழக்கம்போல் அவனுடைய அறிவுரைகளைக்கேட்டு அவனிடம் அன்பு பாராட்டிக்கொண்டிருந்தான். அரசியும் முகமதிய கனவான்களும் தங்களுடைய சூழ்ச்சி பலிக்காமற் போய்விட்டதே என்று உள்ளம் வருந்தினார்கள்.

---

௬௬. வஞ்சகத்திற்கு வஞ்சகம்

அக்பர் பாட்சாவினுடைய முன்னிலைக்குக் கங்காபந்துலு என்பவனுடைய வழக்கு வந்தது. அஃதென்னவென்றால், டில்லியில் இருந்த கங்காபந்துலு என்பவன் பெரிய பணக்காரன். அவன் காசிக்குப் போய்வர எண்ணினான். அவனுடைய வீடு பாதுகாப்புக் குறைவாக இருந்தபடியால் தன்னிடமிருந்த பொன் வெள்ளி முதலிய விலையுயர்ந்த பொருள்களையெல்லாம் பாதுகாப்பாக வைக்க வேண்டுமென்று டில்லியில் இருந்த அப்துல்முசல்மான் என்பவனிடம் ஒப்புவித்துத் தான் திரும்பிவந்து கேட்கும் பொழுது கொடுத்துவிடவேண்டும் என்று சொல்லிவிட்டுச் சென்றான். பிறகு காசியில் இருந்து திரும்பிவந்து கேட்கையில், "நீ என்னிடத்தில் எப்பொழுது வைத்தாய்? வைக்காமலே பொய் பேசுகின்றனையா? போடா போ," என்று சொல்லி அழிவழக்குப் பேசி ஏமாற்றத்தொடங்கி விட்டான். கங்காபந்துலு பாட்சாவிடம் வந்து இதனைக் கூறித் தன்னுடைய பொருள்களை முகமதியனிடமிருந்து திரும்ப வாங்கிக்கொடுக்க வேண்டுமென்று முறையிட்டுக் கொண்டான். பாட்சா அமைச்சனாகிய பேரறிவுச்செல்வனைப்பார்த்து, "நீ இந்த வழக்கை உசாவி முகமதியனுக்குத் தண்டனை கிடைக்காமல் கங்காபந்துலுவின் பொருளை அவனுக்கு வாங்கிக்கொடுத்துவிடு," என்று கட்டளையிட்டான். பேரறிவுச்செல்வன் அவ்வாறே செய்வதாகக் கூறினான்.

மறுநாள் பேரறிவுச்செல்வன் கங்கா பந்துலுவை அழைத்து, "நாளையன்று இரவு எட்டு மணிக்கு நான் அப்துல் முசல்மானுடைய வீட்டிற்குப்போகிறேன். நீ ஒன்பது மணிக்குவந்து, 'சாயபு! என்னுடைய பொருள்களைக் கொடும். நான் காசிப்பயணத்தை முடித்துக் கொண்டு வந்துவிட்டேன்' என்று மட்டுங்கேள். அவ்வாறு கேட்பாயானால் உன்னுடைய பொருள் உனக்கு வந்து சேரும்," என்று சொன்னான். கங்காபந்துலு சரி என்று ஒப்புக்கொண்டு தன்னுடைய வீட்டிற்குச் சென்றான்.

மறுநாள் பேரறிவுச்செல்வன் அப்துல் முசல்மான் விட்டிற்குப்போய், "ஐயா சாயபு! உம்முடைய வீடே இவ்வூரிலுள்ள வீடுகட்கெல்லாம் பாதுகாப்பாக இருக்கின்றது. நான் குடும்பத்தோடு இராமேசுவரத்திற்குப் போய் வரவேண்டும் என்று பயண ஏற்பாடுகளெல்லாம் செய்து முடித்திருக்கிறேன். என்னுடைய பொருள்களையெல்லாம் உம்மிடம் வைத்துப்போகவேண்டியிருப்பதால் உம்முடைய உடன்பாடு வேண்டியதாக இருக்கிறது. என்னுடைய பொருளையெல்லாம் ஒரு பெட்டியில் வைத்து நாளை இரவு உம்மிடம் கொண்டுவருகிறேன். உம்முடைய வீட்டையன்றி வேறு சில வீடுகள் பாதுகாப்பு உடையவைகளாக இருந்தாலும் அவ்வீட்டுக்காரர்களிடத்தில் எனக்குச் சிறிதும் நம்பிக்கை இல்லை," என்று கூறினான். மிகப் பொல்லாத வஞ்சகனாகிய அப்துல்முசல்மான், "அப்படியே செய்யுங்கள்" என்று சொன்னதுமல்லாமல், "உங்கள் கட்டளைப்படி யாருக்குக் கொடுக்கவேண்டுமென்று சீட்டு வந்தால் அப்படியே கொடுப்பேன்" என்றுஞ் சொன்னான். பேரறிவுச்செல்வன் மறுநாள் இரவு எட்டுமணிக்கு வருகிறேன் என்று சொல்லிவிட்டுச் சென்றான். தன் வீட்டில் இருந்த ஒரு பழைய பெட்டியில் உடைந்துபோன கற்சட்டித் துண்டுகளை நிறைத்துப்பூட்டி மறுநாள் இரவு எட்டு மணிக்கு அப்துல்முசல்மான் வீட்டிற்குத் தூக்கிக்கொண்டு போய்த் தன்னுடைய பக்கத்திலே வைத்துக்கொண்டு உலக வழக்கப்படி உரையாடிக்கொண்டிருந்தான்.

அப்பொழுது கங்காபந்துலு அங்கு வந்து, "சாயபு! வணக்கம், நான் காசிக்குச் சென்றபோது தங்களிடம் வைத்துச்சென்ற பொருளைத் திரும்பக் கொடுக்கவேண்டும்," என்று சொல்லி வேண்டிக்கொண்டான். அப்துல் முசல்மான் மறுமொழி ஒன்றும் பேசாமல் கங்காபந்துலுவினுடைய பொருள்களையெல்லாம் எடுத்துக்கொடுத்துவிட்டுப் பேரறிவுச் செல்வனைப் பார்த்து, "இவர் எப்பொழுதோ காசிக்குப் போகையில் வைத்துவிட்டுப்போன பொருளை இப்பொழுது வந்து கேட்டதும் கொடுத்தேனாகையால் என்னுடைய தகுதியை இதனால் நீர் நன்றாகத் தெரிந்துகொள்ளலாம்," என்று சொன்னான்.

பேரறிவுச்செல்வன் நம்முடைய காரியம் கைகூடிற்று என்று மகிழ்ந்தவனாய், "இப்பெட்டியைப் பாதுகாப்பாக வைத்திருங்கள்" என்று சொல்லிவிட்டுத் தன்னுடைய வீட்டிற்குப் போய்ச்சேர்ந்தான். நடந்த செய்தியை மறுநாள் டில்லி பாட்சாவுக்குத் தெரியப்படுத்தினான். பாட்சா மிகுந்த களிப்படைந்தான். பெரும்பொருள் கிடைக்கும் என்று அவாவுடனிருந்த அப்துல்முசல்மான் பெட்டியைத் திறந்து பார்த்துவிட்டுக், 'கைப்பொருளையும் இழந்து போனேமே' என்று உள்ளம் வருந்தினான்.

---

௧௦௦. அறிஞனைத் தோற்கடித்தல்

அக்பர் பாட்சா டில்லியில் அரசாட்சி செய்துகொண்டிருந்த காலத்தில் பாட்சாவின் அவையில் இருந்த அறிஞர்கள் மற்றைய நாட்டு அறிஞர்களைவிட எல்லாக் கலைகளிலும் எல்லா மொழிகளிலும் வல்லவர்களாக இருக்கிறார்களென்றும் எத்தகைய அறிஞர்கள் சென்றாலும் பாட்சாவின் அறிஞர்களோடு வாதித்து அவர்களை வெல்லுதல் முடியாதென்றும் எல்லா நாடுகளினும் வதந்தி பரவியிருந்தது.

அவ்வாருகக் காச்மீர நாட்டில் இருந்து சகல கலை களினும் மிகவல்லவனை "எல்லாம் அறிந்தவன்" என் னும் அறிஞன் பாட்சாவின் அவையில் உள்ள அறிஞர் களையெல்லாம் இழிவு படுத்தவேண்டும் என்று எண்ணி ஆரவாரத்துடன் புறப்பட்டு டில்லிக்கு வந்து சேர்ந்தான். டில்லி பாட்சாவைக் கண்டு, "டில்லிக்கு வல்லபா! தங்க ளுடைய அவையில் பல அறிஞர்கள் பல கலைகளிலும் பல மொழிகளிலும் வல்லவர்களாக இருக்கிருர்களென்று எல்லா நாடுகளினும் புகழ் பரவியிருக்கிறது. ஆகவே இவர்களோடு நூற்பொருள்களில் சொற்போரிடுவதற்கு நான் வந்திருக்கிறேன். நான் தோல்வியடைந்தால் என் னுடைய வெற்றிச் சின்னங்களை இவர்களுக்குக் கொடுத்து விடுகிறேன். இவர்கள் தோல்வியடைந்தால் இவர்க ளுடைய வெற்றிச் சின்னங்களை எனக்குக் கொடுங்கள். இதற்கு உங்களுடைய அறிஞர்கள் இணங்கமாட் டார்களென்ருல் இவர்கள் தோல்வியடைந்தவர்களே யாவார்கள்," என்று சொன்னுன்.

அந்த அறிஞன் சொன்னதைப் பாட்சா கேட்டு, "என்னிடத்தில் உள்ள அறிஞர்கள் கையால் ஆகாதவர்க ளல்லர். உன்னுடைய விருப்பப்படி நாளைக் காலைமுதல் சொற்போரிடலாம்," என்று சொன்னுன். அவ்வாறே மறு நாட் காலையில் பாட்சாவின் புலவர்களுக்கும் காச்மீரநாட்டு எல்லாம் அறிந்தவனுக்கும் சொற்போர் தொடங்கியது. பாட்சாவின் புலவர்கள் அனைவரும் தோல்வியடைந் தார்கள்.

அன்று மாலையில் பாட்சாவுக்குத் தன்னுடைய அவைக்களப் புலவர்கள் அனைவரும் தோல்வியடைந் தார்கள் என்று தெரிந்தது. பாட்சா மிகவும் உள்ளம் வருந்திஞன். தன்னுடைய அமைச்சனுகிய பேரறிவுச் செல்வனை வரவழைத்துத் தன்னுடைய அவைக்களப் புலவர்களால் தனக்கு நேரிட்ட இழிவைக்கூறி எல்லாம் அறிந்தவனேடு சொற்போரிட்டு அவனைத் தோற்கடிக்க வேண்டும் என்று கூறிஞன்.

அதற்குப் பேரறிவுச்செல்வன், "இஃதொரு பெரிய காரியமா? காசுமீரநாட்டுப் புலவனுடைய செருக்கை நான் அடக்குகிறேன்," என்று கூறிவிட்டு எல்லாம் அறிந்தவனிடம்போய், "ஐயா புலவரே! இன்னும் நான் ஒருவன் இருக்கிறேன். என்னைத் தோற்கடித்துவிட்டு உம்முடைய விருப்பப்படி வெற்றிச் சின்னங்களைப் பெற்றுக்கொண்டு போகலாம்" என்று சொன்னான். அதற்கு அப்புலவன், "அப்படியே செய்யலாம்" என்று சொன்னான். அதற்கு மறுநாள் அமைச்சனுக்கும் எல்லாம் அறிந்தவனுக்குஞ் சொற்போர் நிகழ்ந்தது. பேரறிவுச் செல்வன் காச்மீர நாட்டுப் புலவனைப் பார்த்து, "பெரும்பேரறிஞரே! நான் தங்கள் திருமுன்னர் உட்காருவதற்கே தகுதியில்லாதவன். அவ்வாறாகத் தங்களிடஞ் சொற்போரிடுவது மிகுந்த தொல்லையன்றோ? ஆகவே நாம் எத்தனை நாட்களுக்குள் சொற்போரிட்டு வெற்றிபெறவேண்டியது அந்நாட்களின் எண்ணிக்கையை முடிவு செய்துகொண்டு எவர் முன்னர்த் தொடங்கவேண்டியது என்பதையும் முடிவு செய்யுங்கள்," என்று சொன்னான்.

காசுமீர நாட்டுப் புலவன் பேரறிவுச்செல்வனைப் பார்த்து, "ஐயா! சொற்போர் மூன்று நாட்களுக்குள் முடிவுபெற்று அதற்குள் வெற்றிபெற்றவருக்கே வெற்றிச் சின்னங்களை அளிக்கவேண்டும். முன்னர் நீவிரே சொற்போரைத் தொடங்கலாம். நீவிர் மூன்று நாட்களுக்குள் என்னை வென்றால் என்னுடைய வெற்றிச்சின்னங்களைக் கொடுத்துவிடுகிறேன். இன்றேல் உம்முடைய வெற்றிச் சின்னங்களைக் கொடுத்துவிடவேண்டும்," என்று சொல்லிச் சொற்போரைத் தொடங்கலாம் என்று சொன்னான்.

பேரறிவுச்செல்வன் காசுமீரநாட்டு அறிஞனைப்பார்த்து, "ஓ அறிஞனே! பாகீரதி தீரத்திலே ஓர் ஆலமரம் உள்ளது. அம்மரம் இரண்டு மூன்று நாழிகை தூரம்வரையில் வேர்கள் பரவி மிகப்பெரிதாக இருக்கின்றது. அம்மரத்திற்குப் பலகோடி கிளைகள் இருக்கின்றன. ஒவ்வொரு கிளையிலும் பலகோடிப் பறவைகள் வந்து வசித்துக்கொண்

டிருக்கும்,'' என்ருன். அதற்கு எல்லாம் அறிந்தவன், "அப்புறஞ்சொல்'' என்ருன். பேரறிவுச்செல்வன், "அப் பறவைகளில் ஒன்று பறந்தது'' என்று கூறிவிட்டுச் சும்மா இருந்தான். காச்மீரப்புலவன் மேலே சொல்லென் ருன். பேரறிவுச்செல்வன், "மற்ருெரு பறவை பறந்தது'' என்று கூறிவிட்டுச் சும்மா இருந்தான். பிறகு சிறிது நேரஞ்சென்று, "மேலே சொல்'' என்ருன். "மற்ருெரு பறவை பறந்தது, வேருெரு பறவை பறந்தது'' என்று சொல்லிக்கொண்டிருந்தான். இவ்வாறு பறவைகள் பறந் தனவென்று எத்தனை நாளைக்கு வேண்டுமானுலுஞ்சொல் லிக்கொண்டிருக்கலாம். இதற்கு முடிவே இல்லையென்று எல்லாம் அறிந்தவன் உணர்ந்தான். இனிமேல் தன்னுல் பேரறிவுச்செல்வனை வெல்வது முடியாது என்று உணர்ந் தான். தன்னுடைய வெற்றிச்சின்னங்களைக் கொடுத்து விட்டுத் தன்னுடைய இருப்பிடத்திற்குப் போவதற்கு உடன்பாடு கேட்டான். பேரறிவுச்செல்வன் பாட்சாவுக்குத் தன்னுடைய வெற்றியையும் காச்மீரநாட்டுப் புலவனுடைய தோல்வியையுந் தெரியப்படுத்திஞன். அறிஞர்களை இழிவு படுத்துதல் கூடாது என்றுகூறி எல்லாம் அறிந்தவ னுக்கு அவனுடைய வெற்றிச்சின்னங்களைத் திரும்பக் கொடுக்குமாறு கூறிஞன். "'நானே உயர்ந்தவன்' என்று இனிமேல் வீண் செருக்குக்கொண்டு திரியாதே'' என்று அறிவுரை கூறி அனுப்பிஞன்.

கOக. கங்கை ஏன் அழுகிறது?

ஒருநாள் டில்லிபாட்சா பேரறிவுச் செல்வனுகிய அமைச்சனேடு குதிரைகள் கட்டிய வண்டியில் ஏறி வேடிக்கையாகச் சுற்றிக்கொண்டிருந்தான். ஓரிடத்தில் கங்காநதி பேரிரைச்சலோடு ஓடிக்கொண்டிருந்தது. பாட்சா பேரறிவுச் செல்வனைப் பார்த்து, "கங்கையாறு ஏன் இப்ப டிப் புலம்பியழுகிறது?'' என்று கேட்டான். அதற்குப் பேரறிவுச் செல்வன், "தாய்வீட்டில் இருந்து கணவன்

விட்டிற்குச் செல்வதால் இவ்வாறு அழுது புலம்பிக் கொண்டு செல்லுகிறது," என்று மறுமொழி கூறினன். கடல் ஆறுகளுக்குக் கணவன் என்று பெரியோர்கள் கூறுவார்கள். இதனை மனதில் வைத்துக்கொண்டே பேரறிவுச் செல்வன் அவ்வாறு மறுமொழி கூறினன். இப்பதில் பாட்சாவுக்கு மிகுந்த மனநிறைவை உண்டாக்கிற்று. அவன் பேரறிவுச் செல்வனைப் பெரிதும் பாராட்டிப் புகழ்ந்தான்.

கoஉ. சூழ்ச்சிக்குச் சூழ்ச்சி

பேரறிவுச் செல்வன் டில்லிபாட்சாவுக்கு அமைச்சனை பிறகு டில்லிபாட்சா முகமதியர்கள் எவரையுந் தன்னிடஞ் சேர்ப்பதில்லை. அவரவர்களுடைய தீய நடவடிக்கைகளுக்குத் தக்கவாறு அவர்களைத் தண்டித்து அடக்கிக் கொண்டு வந்தான். அவர்களுக்கு அரசாங்கத்தில் அதிகாரமும் கொடுப்பதில்லை. இதனை முகமதியர்களாற் பொறுக்கமுடியவில்லை. அதுவரையிலும் அமைச்சர்களாக இருந்தவர்களும் பிறரும் ஒன்றுசேர்ந்து எப்படியேனும் பேரறிவுச் செல்வனை அமைச்சு வேலையில் இருந்து விரட்டவேண்டும் என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தார்கள். இவ்வாருக டில்லியில் ஒரு தச்சன் ஆறுதிங்கள் காய்ச்சலாகக் கிடந்து எலும்பெல்லாம் வெளியே தெரியத் தாடியும் மீசையும் வளர்ந்து நிற்பதற்குக்கூட ஆற்றலின்றித் தடியின் உதவியில்லாமல் எழுந்திருக்கவும் முடியாதவனுக இருந்தான்.

அக் கிழவனை முகமதியர்களெல்லாரும் பார்த்துச் சிறிது பொருள்கொடுத்து மகிழ்ச்சிப்படுத்தினர்கள். "உன்னல் ஒரு காரியம் முடியவேண்டியதாக இருக்கிறது," என்று சொல்லிச் சில செய்திகளையுஞ் சொல்லிக் கொடுத்தார்கள். அக் கிழவன் அவ்வாறே மறுநாள் டில்லிபாட்சா வெளியே வந்த சமயத்தில் அவனைப்பார்த்து,

"ஐயா! நான் தேவலோகத்தில் இருந்து வருகிறேன். அங்கே தங்களுடைய தாயாரைப் பார்த்தேன். அவர்களுக்கு எல்லாவகையான நன்மைகளும் இருக்கின்றன. எவ்விதமான குறைவுமில்லாமல் நலத்துடன் இருக்கிறார்கள். அவர்களுடைய உடல் படிகம்போல் விளங்குகின்றது. அவர்கள் பழம்பிறப்பின் அறிவோடு இருக்கிறார்கள். இப்பொழுது புதிதாக வந்திருக்கும் அமைச்சன் அந்தணனும். தங்கள் தாயார் நிலவுலகத்தில் இருந்த காலத்தில் அந்தணர்கள் வீட்டு அப்பளமும் ஊறுகாயுந் தின்ன வேண்டுமென்று மிகுந்த விருப்பமாக இருந்தார்களாம். ஆகையால் அவைகளை அந்த அந்தணன் மூலமாகக் கொடுத்து அனுப்பவேண்டுமென்று சொன்னார்கள். அவர்களுடைய விருப்பத்தை உடனே நிறைவேற்றுவீர்களாக," என்று சொன்னான்.

பாட்சா அத் தச்சனுடைய பேச்சில் நம்பிக்கை வைத்தான். அதிவிரைவில் அனுப்பவேண்டுமென்று முடிவு செய்தான். அமைச்சனாகிய பேரறிவுச் செல்வனை அழைத்து, "ஓ அமைச்சனே! என்னுடைய தாயார் தேவலோகத்தில் இருக்கிறாள். அவள் அந்தணர்வீட்டு ஊறுகாயும் அப்பளமும் தின்னவேண்டும் என்று விருப்பங் கொண்டிருக்கிறாளாம். நீ அவளுடைய விருப்பத்தை மிகு விரைவாக நிறைவேற்றவேண்டும். சிறிதுங் காலங்கடத்தக் கூடாது," என்று சொன்னான். பேரறிவுச் செல்வன் இவைகளெல்லாம் முகமதியர்களுடைய சூழ்ச்சி என்று உணர்ந்து கொண்டான். பாட்சாவைப் பார்த்துக், "கட்டாயம் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு வருகிறேன்," என்று சொன்னான்.

பிறகு பேரறிவுச் செல்வன் தேவலோகஞ் செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினான். தன் வீட்டிற்கும் இடுகாட்டிற்கும் சுரங்கவழி ஒன்றை ஏற்படுத்தினான். அவ்வழி வெளியே தெரியாமல் அடைத்து வைத்தான். பிறகு பாட்சா முதலானவர்களை இடுகாட்டிற்கு வருமாறு சொல்லியனுப்பினான். அவ்வாறே டில்லி

பாட்சாவும் முகமதிய கனவான்களும் வந்து கூடினார்கள். அப்பொழுது அமைச்சன் எல்லோரிடத்தினும் விடை பெற்றுக்கொண்டு ஊறுகாய்களையும் அப்பளங்களையும் கையிற் பிடித்துக்கொண்டு சுரங்க வழியில் கட்டைகளை யடுக்கி நெருப்பைப் பலமாக எரியவிட்டு அந் நெருப்பின் நடுவிலே குதித்தான் முன்னேற்பாடாக அமைத்துவைத் திருந்த சுரங்கவழியாகப் புகுந்து தன்னுடைய வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தான். அவனுடைய ஆட்கள் கட்டை மணல் முதலியவைகளைப் போட்டுச் சுரங்கவழி வெளியே தெரியாமல் மறைத்துவிட்டார்கள்.

பிறகு அரசியினுடைய தம்பிக்கு அமைச்சு வேலை கிடைத்தது. முகமதியர்கள் பேரறிவுச் செல்வன் தொலைந் தான் என்று மிகுந்த களிப்புடனிருந்தார்கள். திங்கள்கள் ஆறு சென்றன. அமைச்சன் பேரறிவுச் செல்வன் வீட்டுக் குள்ளேயே தாடியும் மீசையும் நன்ருக வளரும்படியிருந் தான். வீட்டைவிட்டு வெளியே எழும்பாமலிருந்தபடியால் வெளுத்துங் கொழுத்தும் பருத்தும் மதமதவென்றிருந் தான். அவனுடைய தோற்றம் அழகிய துறவியினுடைய தோற்றம் போலிருந்தது. ஒருநாள் பாட்சா வெளியே புறப்பட்டான். அப்பொழுது பேரறிவுச்செல்வன் சிறிது மயிரையுஞ் சாம்பரையுங் கலந்து வைத்துக்கொண்டு பாட்சாவின் முகத்தின்மேல் ஊதினன். பாட்சாவின் கண் களிலும் மூக்கிலும் மயிருஞ் சாம்பரும் விழுந்தன. அவன் திடுக்கிட்டுப் பேரறிவுச் செல்வனைப் பார்த்து, "நீ யார்!" என்று கேட்டான்.

பேரறிவுச் செல்வன் பாட்சாவைப் பார்த்து, "அரசே! என்னைத் தெரியவில்லையா? நான் தங்களுடைய பழைய அமைச்சன் பேரறிவுச் செல்வன் அல்லனே? அதற்குள் ளாகவா என்னை மறந்துவிட்டீர்கள். தங்கள் கட்டளைப்படி தங்களுடைய தாயாருக்கு ஊறுகாய்களையும் அப்பளங் களையும் கொண்டுபோய்க் கொடுத்தேன். அவள் மிகுந்த களிப்படைந்தாள். நான் ஆறுதிங்கள் அவ்விடமே மிகுந்த நலத்துடன் தங்கியிருந்தேன். எனக்குத் தங்களைப் பார்க்க

வேண்டுமென்று மிகுந்த விருப்பமாக விருந்தது. இச் செய்தியை அவளிடந் தெரியப்படுத்தினேன். 'அப்படியானல் நீபோய்ச் சிறிதுகாலம் தங்கியிருந்துவா' என்று சொல்லிக் காமதேநுவின் மயிரும் ஓம விபூதியுங் கொடுத்தனுப்பினுள். அவைகளைத்தான் இப்பொழுது தங்கள் மேல் தூவினேன். மற்றொரு செய்தியுஞ் சொல்லியிருக்கிறுள். அஃதாவது உங்களுடைய காசிகள் அவ்விடம் வந்து தனக்குக் குரான் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருக்க வேண்டுமென்றும், தங்களிடம் முன்பு அனுப்பிய தச்சனைச் சிறிதுகாலம் அங்கே வந்திருந்து தான்படுத்துக் கொள்வதற்குப் பூலோகக் கட்டில் ஒன்றும் அங்குள்ள கற்பகமரத்து வைரத்தினுல் செய்து கொடுக்கவேண்டுமென்றும், மேலுஞ் சில முசல்மான்களிடம் பூலோகத்துப் பழங்களும் பலகாரங்களும் அனுப்பவேண்டுமென்றுஞ் சொன்னுள். இவைகளையெல்லாம் தாங்கள் விரைவாகச் செய்துமுடிக்கவேண்டும்,'' என்று சொல்லி முடித்தான்.

பேரறிவுச் செல்வன் கூறியவைகளைக் கேட்ட பாட்சா தன்னுடைய முகமதிய அமைச்சனை அழைத்துத் தன் தாயாருடைய கட்டளைப்படி உடனே எல்லாவற்றையும் நிறைவேற்ற வேண்டுமென்று கட்டளையிட்டான். "இங்கிருந்து அனுப்பும் பொருள்களெல்லாம் பாதுகாப்பாகக் கொண்டுபோய்ச் சேர்ப்பார்களோ இல்லையோ தெரியவில்லை. அதனைப் பார்த்துக்கொள்வதற்காக நீயுங்கூடப் போய் வரவேண்டும்'' என்றுங் கட்டளையிட்டான். பார்த்தார்கள் முகமதியர்கள்; தாங்கள் கூறும் உரை அரசனிடம் ஏறமாட்டாது என்று உணர்ந்துகொண்டார்கள். 'நாம் இனிமேல் இவ்வுலகத்தில் வாழ்வதற்கு மனம் வைக்க வேண்டியதில்லை. நாம் அழிவதற்குக் கடவுளும் உடன்பாடாக இருக்கிருர்' என்று உள்ளத்தில் எண்ணிக்கொண்டார்கள். பாட்சாவினுடைய கட்டளைப்படி எல்லாப் பொருள்களையுந் தேடித்தொகுத்தார்கள். பிறகு பாட்சா பேரறிவுச் செல்வனை அழைத்து, "அமைச்சன் வருகிற வரையில் நீ அமைச்சனுக இரு'' என்று கட்டளையிட்டான்.

அப்படியே ஆகட்டுமென்று பேரறிவுச் செல்வன் அமைச்சு வேலையை ஒப்புக்கொண்டான். தேவலோகம் போகிறவர்களைப் பார்த்து விரைவாகப்போய் வந்துவிடுங்களென்று கபடமொழிகள் பேசினான். இடுகாட்டில் புளியங்கட்டைகளை மிகுதியாக அடுக்கிப் பெருநெருப்பை மூட்டினான். எல்லோரையும் தீயிலே விழும்படியாகச் செய்தான்.

தீயிலே விழுந்த எல்லோரும், "ஐயா அமைச்சரே! ஐயா பாட்சா அவர்களே! நாங்கள் அறியாமையாற் செய்த காரியத்திற்கு எங்களுடைய உயிரையே போக்கடித்துக் கொள்ளுமாறு நேரிட்டுவிட்டது. இப்பொழுதாவது எங்களை வெளியே இழுத்துவிடுங்கள்," என்று வேண்டிக் கொண்டார்கள். ஆயினும் தீயின் அண்மையில் எவரும் நெருங்க முடியவில்லை. எல்லோரும் இறந்து போனார்களென்று பாட்சா அறிந்தான். பேரறிவுச் செல்வனைப் பார்த்து, "ஏன் இவ்வாறு பொய் சொல்லி எல்லோரையும் கொன்றொழித்தாய்?" என்று கேட்டான். என்மீது கொண்ட பகையினால் உங்களவர்கள் செய்த வேலையை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். மேலும் நான் தேவலோகத்திற்குப் போய் உங்களுடைய தாயாரைப் பார்த்து வந்தபோது, இவர்கள் ஏன் போய்வரக்கூடாது?" என்று கேட்டான்.

இரண்டோராண்டுகள் கடந்துங்கூடத் தேவலோகம் போனவர்களைப்பற்றி எத்தகைய செய்தியுந் தெரியவில்லை. ஆகவே அவர்களெல்லாரும் இறந்தொழிந்தவர்கள் தாம் என்று பாட்சா ஐயமற அறிந்துகொண்டதுமன்றிப் 'பேரறிவுச் செல்வன் பெருஞ் சூழ்ச்சிக்காரன்; அவனிடம் விழிப்பாக இராமற் போவோமாயின் நமக்குக்கூட ஏதேனும் தொல்லை யேற்படக்கூடும்' என்று அஞ்சிக்கொண்டிருந்தான்.

---

௧௦௩. உணவில் மயிர்

டில்லி பாட்சா அரசாட்சி செய்துகொண்டிருக்கையில் டில்லிமாநகரில் கோபாலதாசு என்னும் பெயருடைய சாவுகார் ஒருவன் இருந்தான். அவன் எல்லோருக்கும் பணங் கடன்கொடுத்து வட்டி வாணிகஞ்செய்து பெரும் பணக்காரன் ஆனுன். அவன் செல்வப்பெருக்கில் தனக்கு எவரும் நிகரில்லையென்று செருக்குற்றிருந்தான். ஒருநாள் கோபால தாசு சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது உணவிலே ஒரு மயிர் அகப்பட்டது. அவன் சமையல்காரனைப் பார்த்து, "இம் மயிர் யாருடையது?" என்று கேட்டான். சமையல்காரன் நீண்ட இம்மயிர் கோபால தாசின் மனைவியுடையதாக இருக்கவேண்டும் என்று எண்ணி அவளிடம் போய் அம் மயிரைக் காட்டி, "இம்மயிர் யாருடையது?" என்று கேட்டான். அவள், "அம்மயிர் தன்னுடையது" என்று கூறினுள். இதனைக்கேட்ட சமையல்காரன் கோபால தாசிடம் போய், "இம்மயிர் உங்களுடைய மனைவி கோதேவி அம்மாளுடையது" என்று மறுமொழி கூறினுன். கோபாலதாசு சமையல்காரனைப் பார்த்து, "இனிமேல் என்றைக்காவது உணவில் மயிர் இருக்குமானுல் அவள் தலையில் ஒரு மயிர்கூட இல்லாமல் சிரைத்து விடும்படி ஏற்பாடு செய்வேன் என்று சொல்லிவிட்டுவா" என்று சொல்லி யனுப்பினுன். அவ்வாறே சமையல்காரன் கோதேவியம்மாளிடஞ் சென்று கூறினுன். அதனைக்கேட்டு அவள் அஞ்சினுள். அதுமுதல் தலைவாரிக்கொள்ளுதல் நீராடுதல் முதலியவைகளைத் தன்னுடைய உறவினர்கள் வீட்டிலே வைத்துக்கொண்டாள்.

இவ்வாருக மறுபடியும் ஒருநாள் ஒருமயிர் சோற்றில் எவ்வாருே அகப்பட்டுவிட்டது. கோபால தாசு மிகுந்த சினங்கொண்டான். நாவிதனை அழைத்துக் கோதேவியம்மாளுடைய தலையை மொட்டை யடிக்குமாறு கட்டளையிட்டான். அப்பொழுது கோதேவியம்மாள் தனக்கு

நேர்ந்த கதியைத் தன்னுடைய அண்ணன் தம்பிகளோடு சொல்லியழுதாள். அவர்கள் டில்லிபாட்சாவிடம்போய் தங்கள் தங்கையின் தலையை மொட்டையடிக்கப் போகுஞ் செய்தியை விண்ணப்பஞ்செய்து அவ்வாறு நடவாமலிருக்கும்படி செய்யவேண்டுமென்றும், கோபால தாசுக்கு நல்லறிவு புகட்டவேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார்கள்.

பாட்சா பேரறிவுச் செல்வனை அழைத்து, "நீ இக் காரியத்தை முடித்துக் கோபால தாசுக்கு அறிவு வரும்படி செய். மேலும் இத்தகைய காரியங்கள் இனிமேல் உலகத்தில் நடவாமலிருக்கும்படியும் பார்த்துக்கொள்," என்று சொன்னான்.

பேரறிவுச் செல்வன், "அப்படியே ஆகட்டும்" என்று சொல்லிவிட்டுக் கோபால் தாசின் வீட்டிற்குப் புறப்பட்டான். புறப்படும்போதே நான்குபேர் மனிதர்களை ஒரு பாடையை எடுத்துக்கொண்டு தனக்குப் பின்னே வருமாறு ஏற்பாடு செய்துவிட்டுச் சென்றான். பாடையைக் கொண்டுபோய்க் கோபால தாசின் வீட்டின் முன்னே வைத்துவிட்டு அவனைப்பார்த்து, "ஐயா! சாவுகார்! நீ உன்னுடைய மனைவியின் தலையைச் சிரைக்கும்படி நாவிதனுக்குக் கட்டளையிட்டிருப்பதாகக் கேட்டு மிகுந்த மகிழ்ச்சியுண்டாயிற்று. நீ நல்ல அறிவாளி. உலகபோகங்களைத் துறந்து இக் காரியத்தைச் செய்யத் தொடங்கினாய். உன்னுடைய செல்வத்தை வீணாகப் பாட்சாவுக்கு ஒப்புவித்து விடாதே. இத்தகைய நல்ல சமயத்தில் தான தருமங்களைச் செய்; விரைவாக ஆகட்டும். நாழிகையாய்விட்டது. நீ செய்யவேண்டிய தான தருமங்களைச் செய்த பிறகுதான் உன்னைப் பாடையிலே வைத்துக் கட்டி இடுகாட்டிற்குக் கொண்டுபோக வேண்டும். உன்னைக் கொண்டுபோய்க் கொளுத்தின பிறகுதான் உன் பெண்டாட்டி விதவையாவாள். விதவையான பிறகு இன்றைக்கே சிரைக்கும்படி அறிஞர்கள் சொன்னால் இன்றைக்கே சிரைக்கச் செய்கிறேன். அல்லாவிடின் பதினோராம் நாள் சிரைக்கச் செய்கிறேன்," என்று சொன்னான். இவ்வாறு சொல்லவே

கோபாலதாசு வெட்கமடைந்து சிறிதுநேரம் ஒன்றுந் தோன்றமல் பேசாமலிருந்தான். பிறகு அமைச்சனைப் பார்த்து அவன் காலில் விழுந்து "இனி எப்பொழுதும் என் மனைவியின் தலையை மொட்டையடிக்குமாறு நான் நாவிதனுக்குக் கட்டளையிடுகிறதில்லை. நான் செய்த இக் குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளவேண்டும்," என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். கற்பரசியாகிய அவனுடைய மனைவியும் அவனை இழிவுபடுத்த வேண்டாமென்று வேண்டிக்கொண்டாள். பிறகு பாட்சா பேரறிவுச் செல்வனுடைய வேடிக்கையான செய்கையைக் கேள்விப்பட்டு அவனை வியந்து புகழ்ந்துகொண்டாடினுன்.

கoஈ. விலைமகளின் வழக்கு

டில்லி பாட்சா அரசாட்சி செய்துகொண்டிருக்கையில் ஒரு விலைமகள் ஒரு வழக்குக் கொண்டுவந்தாள். அவ் வழக்கு என்னவெனின்; "மாட்சிமை தங்கிய டில்லி பாட்சா மகாராசா அவர்களுடைய சமுகத்திற்கு; நான் நேற்றிரவு நன்ருக உறங்கிக்கொண்டிருந்தேன். மேட்டுத் தெருவில் இருக்கும் சுப்பிரசாதபாபு அவர்கள் கனவில் என்னேடு தழுவுதல் செய்தார். என்னுடைய கட்டணப்படி எனக்குச் சேரவேண்டிய தொகை ஆயிரத்து நூற்றுப் பதினறு ரூபாயையும் கொடுத்தனுப்பவேண்டுமென்று என் மாமாவோடு சொல்லியனுப்பினேன். அவர் கொடுக்கமுடியாது என்று அதட்டி விரட்டி அனுப்பிவிட்டார். ஆகவே அவரால் எனக்குக் கிடைக்கவேண்டிய ரூபாயை எனக்கு வாங்கிக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிக்குத் தங்கள் நீலாலகை" என்பதே அவ் வழக்காகும்.

இவ்வழக்கை டில்லிபாட்சா பார்த்தான். இவ்வாறு இதுவரையில் வழக்குக் கொண்டுவந்தவர்கள் எவருமிலர். ஆகவே அவளுக்குச்சேரவேண்டிய தொகையை சுப்பிரசாதபாபு கொடுக்கவேண்டும் என்று தீர்ப்புச்

செய்தான். இதனைக்கேட்ட சுப்பிரசாதபாபு குய்யோ முறையோ என்று மோதிக்கொண்டான். "அந்தோ! நான் ஒரு பாவத்தையும் அறியேன். இவளுக்குத் தண்டத்துக்கு ஆயிரத்து நூற்றுப்பதினறு ரூபாயை நான் எப்படிக்கொடுப்பது? இதனை நன்றாக ஆராய்ந்து தீர்ப்புச் சொல்லவேண்டும்," என்று வேண்டிக்கொண்டான். பாட்சா அமைச்சனாகிய பேரறிவுச்செல்வனைப் பார்த்து, "நீ இந்தவழக்கை விசாரித்து முடிவுசெய்," என்று கட்டளையிட்டான்.

பேரறிவுச்செல்வன் வழக்கை உசாவினான். "சுப்பிரசாதபாபு உடனே நீலாலகைக்கு ஆயிரத்து நூற்றுப் பதினறு ரூபாயையும் கொடுக்கவேண்டியதே" என்றான். அரசனும் அமைச்சனும் சொன்னபிறகு தப்பாதாகையால் அவ்வாறே ரூபாய்களைக் கொண்டுவந்து அமைச்சனுக்கு முன்புவைத்தான் சுப்பிரசாதபாபு.

அமைச்சன் அந்த ரூபாய்களை நீலாலகையின் முன் வைத்துக்கொண்டு எண்ணி ஒரு பையில் போட்டு மூட்டையாகக் கட்டி ஒரு கண்ணாடிக்குப் பின்பக்கம் வைத்து அவளைக்கூப்பிட்டு "இந்தப் பக்கத்தில் இருந்து ரூபாய்களை எடுத்துக்கொண்டுபோ," என்று சொன்னான். அவள் அவ்வாறிருந்துகொண்டு அந்த ரூபாய் மூட்டையை எடுக்கமுடியவில்லை. ஆகவே, "என்னுடைய கையிலே எடுத்துக்கொடுங்கள்," என்று சொன்னாள். அதற்கு அமைச்சன், "கனவில் இன்பந் துய்த்ததற்குக் கண்ணாடி நிழலிற் காணப்படும் ரூபாயைப் பெற்றுக்கொள்வதே ஆதாயம் ஆகும். இந்த ரூபாய் மூட்டை உன்னுடைய கையில் கொடுக்கப்படமாட்டாது. ரூபாயின் நிழலைப் பார்த்ததே போதும்; நீ போகலாம்," என்று கூறிவிட்டு ரூபாயைக் கொண்டுவந்தவனுடைய கையிலே கொடுத்து விட்டான். இத்தீர்ப்பைக்கேட்டு அவையிலே குழுமியிருந்த அனைவரும் மிகுந்த வியப்படைந்தார்கள். விலைமகளோ 'நம்முடைய சூழ்ச்சி பலிக்கவில்லையே' என்று எண்ணிக் கொண்டு தன்னுடைய வீட்டிற்குப்போய்ச் சேர்ந்தாள்.

கரு. இருபத்தேழில் பதினென்றுபோனல்

டில்லிபாட்சா கொலுமண்டபத்தில் வீற்றிருந்தான். அப்பொழுது அவனுடைய அலுவலாளர்கள் பலர் அவனைச் சூழ்ந்திருந்தார்கள். பாட்சா அவர்களைப் பார்த்து, "இருபத்தேழில் பதினென்றைக் கழித்தால் மிச்சம் எவ்வளவு?" என்று கேட்டான். அதற்கு எல்லோரும் பதினறு மிச்சம் என்று ஒரேபடியாக மறுமொழி கூறினர்கள். பிறகு பேரறிவுச்செல்வன் அவைக்கு வந்தான். எல்லோரையுங் கேட்டதுபோல் பாட்சா அவனைப்பார்த்தும் அக்கேள்வியைக் கேட்டான். அதற்குப் பேரறிவுச்செல்வன் "இருபத்தேழில் பதினென்று போனல் மிச்சம் ஒன்றுமில்லை," என்று சொன்னன். அவையில் இருந்தவர்கள் அனைவரும் இம் மறுமொழியைக்கேட்டு மிகுந்த வியப்படைந்தார்கள். 'இன்று இவனுக்குப் பாட்சாவிடம் இழிவு ஏற்படும்' என்று உள்ளங்களித்தார்கள். பாட்சா அமைச்சனைப்பார்த்து, "நீ எவ்வாறு இந்தக் கணக்கைப்போட்டாய்?" என்று கேட்டான்.

அதற்கு அமைச்சனகிய பேரறிவுச்செல்வன் "இருபத்தேழு விண்மீன்களில் பதினெரு விண்மீன்களே மிகுந்த சிறப்பும் பெருமையும் உடையவை. இந்தப் பதினென்றையும் விட்டுவிட்டு மற்றவைகளைப்பார்த்தால் அவை எதற்கும் பயனற்றவை. அவைகளால் உலகத்திற்கு ஏற்படும் நன்மையும் பூச்சியம்; ஆகையால் இந்த விண்மீன் பலனை வைத்துக்கொண்டு கணக்கைப்போட்டேன்," என்ருன். அவையில் இருந்தவர்கள் பேரறிவுச்செல்வனுடைய புதுமையான அறிவைப்பாராட்டி வியந்தார்கள்.

௩௦௯. மிட்டாய் மணத்துக்குப் பணம்

டில்லிபாட்சாவிடம் மற்றொருநாள் ஒரு வழக்கு வந்தது. ஒரு மிட்டாய்க்கடைக்காரன் வாசனைப்பொருள்களால் மிட்டாய் செய்துகொண்டிருந்தான். அச்சமயத்தில் வழிப்போக்கன் ஒருவன் அந்தக் கடையிலே எத்தகைய மிட்டாய்கள் செய்யப்படுகின்றன என்று தெரிந்துகொண்டு பிறகு வாங்கிக்கொள்ளலாம் என்று இருந்து பார்த்தான். வெகு நேரமாகியும் மிட்டாய் விற்பனைக்கு வரவில்லை. பிறகு வந்து வாங்கிக்கொள்வோம் என்று அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டான். அந்த மிட்டாய்க்கடைக்காரன் வழிப்போக்கன் 'தன்கடையண்டை வந்து மணம்பிடித்துக்கொண்டுபோனான். ஆகையால் அதற்காகத் தனக்குப் பத்து ரூபா கொடுக்கவேண்டு' மென்று வழக்குக் கொண்டுவந்திருந்தான். இந்த வழக்கை உசாவித் தீர்ப்புக்கூறவேண்டுமென்று பாட்சா அமைச்சனாகிய பேரறிவுச்செல்வனுக்குக் கட்டளையிட்டான். பேரறிவுச்செல்வன் வழக்கை உசாவிவிட்டு வழிப்போக்கன் மிட்டாய்க்கடைக்காரனுக்கு ரூபா பத்துக் கொடுக்கவேண்டியதே என்று தீர்ப்புக்கூறினான். வழிப்போக்கன் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டுப் பத்து ரூபாய்களைக் கொடுத்தான். அமைச்சன் அதைக் கையில் வாங்கிக்கொண்டு மிட்டாய்க் கடைக்காரனைக் கூப்பிட்டு அவனுடைய காதினிடம் ரூபாய்களை ஒவ்வொன்றாய்த் தட்டி ரூபாயின் ஒலிகளைக் கணக்கிட்டுக்கொள்ளுமாறு சொன்னான். மிட்டாய்க் கடைக்காரன் பத்து ரூபாயின் ஒலிகளையுங் கேட்டுப் "பத்து ரூபாய் ஒலி ஆயிற்று!" என்றான். பிறகு அமைச்சன் மிட்டாய்க்கடைக்காரனைப் போகச்சொன்னான். மிட்டாய்க் கடைக்காரன் 'பணத்தைக்கொடுத்துவிட்டால் போகிறேன்' என்றான். அதற்கு அமைச்சன் "மிட்டாயின் மணத்தை முகர்ந்ததற்குப் பணத்தின் ஒலியைக் கேட்டலே ஊதியமாகும். பணம் உனக்குக் கொடுக்கப்படமாட்டாது," என்றுகூறி ரூபாய்களை வழிப்போக்கனிடமே கொடுத்தனுப்பிவிட்டான். இத்தீர்ப்பைக்கேட்டு அவையில் இருந்த எல்லோரும் நகைத்தார்கள்.

கoஎ. கிளிகளின் கணக்கு

டில்லிபாட்சாவின் அவையில் இருந்தவர்களுக்கும் பிற அலுவலாளர்களுக்கும் பேரறிவுச்செல்வன் அமைச்சனாக இருப்பது மிகுந்த பொறாமையை உண்டாக்கிற்று. 'இவனுக்கு எப்பொழுது அமைச்சுவேலை ஒழியுமோ, நாம் நம்முடைய விருப்பப்படி ஆட்டம்போட்டுக்கொண்டிருப்பதற்கு எப்பொழுது காலம் நேருமோ, என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தார்கள். டில்லிபாட்சா இச்செய்தியைத் தெரிந்துகொண்டான். பேரறிவுச்செல்வன் இல்லாத சமயத்தில் அவன்மீது பொறாமைப்படுகிறவர்களைப் பார்த்து, "அவையோர்களே! இவ்வூரில் எத்தனை கிளிகள் இருக்கின்றன? அதனைக் கூறவேண்டும்," என்று கேட்டான். எல்லோரும் ஒரேகுரலாய்க், "கிளிகளை எண்ணுவதற்கு யாரால் முடியும்?" என்று மறுமொழி கூறினார்கள்.

பிறகு பேரறிவுச்செல்வன் அவைக்கு வந்தான். பாட்சா அவனைப்பார்த்து, "ஓ அமைச்ச! இவ்வூரில் எத்தனை கிளிகள் இருக்கின்றன?" என்று கேட்டான். அமைச்சன் சிறிதும் எண்ணமிட்டுக்கொண்டிருக்கவில்லை. உடனே பாட்சாவைப்பார்த்து, "இவ்வூரில் அறுபதினாயிரத்து இருநூற்றுத்தொண்ணூற்று நான்கு பெரிய கிளிகளும் ஏழாயிரத்து நானூற்றுப்பதினொரு சிறிய கிளிகளும் இருக்கின்றன," என்று மறுமொழிகூறினான். இதனைக் கேட்டுப் பாட்சா, "கணக்குத் தவறாக இருக்குமோ என்னவோ," என்றான். அதற்கு அமைச்சன், "நான் சொன்ன கணக்கு எவ்விதத்திலும் தவறாது. ஆனால் ஒருவேளை இவ்வூரிலிருந்து கிளிகள் வெளியே போயிருந்தாலும், அல்லது வெளியூரில் இருந்து இங்கு வந்திருந்தாலும் கணக்கு ஏற்றத்தாழ்வாக இருக்குமேயல்லாமல், மற்றைப்படி நான் சொல்லிய கணக்குச் சரியாக இருக்கு,"மென்று கூறினான். இதனைக்கேட்டுப் பாட்சாவும் அவையினரும் அமைச்சனுடைய அறிவுத்திறமையைப் புகழ்ந்து கொண்டானார்கள்.

௯௦அ. காசிப்புலவனை வெல்லுதல்

டில்லியில் உள்ள இந்துப் புலவர்களைப் பாட்சா பெருமைப்படுத்தாத காரணத்தால் அந்நாட்டில் அறிஞர்கள் குறைந்துபோய்விட்டார்கள். இச்செய்தியை உணர்ந்த காசிப்புலவன் ஒருவன் டில்லிபாட்சாவிடம் வந்து, "என் புலமையை ஆராய்ந்து பார்த்தாயினும் அல்லது இவ்விடத்தில் உள்ள உங்கள் நாட்டு அறிஞர்களோடு சொற்போர் இயற்றச் செய்தாயினும் எனக்கு வெற்றிப் பத்திரிகை கொடுத்தருளவேண்டும்," என்று கேட்டான்.

பாட்சா, புதிதாகவந்த அப்புலவனோடு, தன் நாட்டில் சிறந்த பண்டிதர்களில்லையென்றால் இகழ்ச்சியாகுமென்று எண்ணி, "நாளை நண்பகலில் அவை கூட்டுகிறேன்; தாங்கள் வரவேண்டும்," என்று சொல்லிச் சிறப்புகள் செய்து அனுப்பினான்.

பிறகு பேரறிவுச்செல்வனை அழைத்துக் காசியில் இருந்து வந்துள்ள புலவனது கருத்தையும் தான் கூறியுள்ள மறுமொழியையுந் தெரியப்படுத்தி, "ஏதேனுஞ் சூழ்ச்சிகள் செய்து காசிப்புலவனை வென்று துரத்துவாயாக," என்று கட்டளையிட்டான். அமைச்சனாகிய பேரறிவுச் செல்வன், "தாங்கள் இதற்கெல்லாம் கவலைப்பட வேண்டாம். நான் அப்புலவனை எளிதாக வென்று துரத்தி விடுகிறேன்," என்று கூறிவிட்டுச் சென்றான்.

மறுநாள் அவை கூடியது. அமைச்சன் புலவனைப் போல் கோலம் போட்டுக்கொண்டு காசிப்புலவனுக்கு எதிரில்வந்து உட்கார்ந்தான். காசிப்புலவனைப் பார்த்து, "ஐயா! தாங்கள் காசிப்புலவர் என்று கேள்விப்பட்டேன். மேலும் இந்நாட்டில் வெற்றிப்பத்திரிகை பெறக்கருதி வந்ததாகவுந் தெரிகின்றது. பெரிய நூல்களில் கேள்விகள் கேட்டு உம்மைத் திணறச்செய்வதற்கு எனக்கு விருப்பமில்லை. பொதுவான அறிவைக்கொண்டே மறுமொழி கூறத்தக்க இரண்டொரு கேள்விகள் கேட்கிறேன்.

அதற்கு மறுமொழி கூறுவீராயின் வெற்றிப்பத்திரிகை கொடுக்கப்படும். இன்றேல், நீர் இதுவரையில் பெற்றுள்ள வெற்றிப் பத்திரிகைகளையெல்லாம் பிடுங்கிக்கொண்டு விரட்டியடிக்கப்படும்,'' என்று சொன்னான். இதனைக் கேட்கவே காசிப்புலவனுக்கு மிகுந்த நடுக்கம் ஏற்பட்டது. ஆயினும் அதனை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல், "அவ்வாறே ஆகட்டும்'' என்று சொன்னான்.

பேரறிவுச்செல்வன் தன்னுடைய இரண்டு கைகளிலும் நிறைய மணலை அள்ளிக்கொண்டு, "இஃது எவ்வளவு மணல் சொல்வீராக,'' என்று கேட்டான். காசிப்புலவன் விண்மீன்களையும் பசுவின் மயிரையும் கணக்கிடுதல் முடியாதென்று நூல்கள் முறையிடுகின்றன. அவைகளைப்போலவே மணலையும் அளவிடுதல் முடியாத காரியமாகும். அவ்வாறாகத் தாங்கள் இக்கேள்வியைக் கேட்டல் நேர்மையன்று. நூன்முறைமைக்கு ஒத்ததாகக் கேட்கவேண்டும்,'' என்று சொன்னான்.

பேரறிவுச்செல்வன் காசிப்புலவனைப் பார்த்துப், "பெரியீர்! தங்களுக்குத் தருக்கநூல் தெரிந்திருக்குமாயின் பொருட்பரிச்சேதத்தை உடன்பாடாகக்கொண்டு என்னுடைய கேள்விக்கு விடையளித்திருக்கலாம். தங்களுக்குத் தெரியாதாயின், நான் பள்ளிக்கூடத்திற் படிக்கும் ஒரு சிறு பையனைக்கொண்டு இக்கேள்விக்குத் தக்கவாறு விடையளிக்கச்செய்கிறேன். தங்களுடைய எண்ணத்தை விரைவாகத் தெரியப்படுத்தியருளுங்கள்,'' என்று சொன்னான். காசிப்புலவன் சிறிது நேரம் எண்ணமிட்டான். ஒன்றும் விளங்காமையால், "இக் கேள்விக்கு விடைகூற என்னால் இயலாது,'' என்று கூறிவிட்டான்.

அமைச்சன் அவையில் இருந்த ஒரு சிறுவனை அழைத்தான். "இஃது எவ்வளவு மணல்?'' என்று கேட்டான். உடனே அச்சிறுவன், "இஃது இரண்டு கை மணல்'' என்று மறுமொழி கூறினான். அவையோர்கள் அனைவரும், "காசிப்புலவன் தோற்றான்'' என்று இரைந்

தார்கள். அமைச்சன் காசிப்புலவனுடைய விருதுகளை யெல்லாம் பிடுங்கிக்கொண்டு விரட்டியடித்தான். பாட்சா பேரறிவுச் செல்வனுடைய அறிவுத் திறமைக்கு வியந்து பலவகையான பரிசுகள் வழங்கினான்.

---

௩௦௯. பானை நிறைய வேடிக்கை

டில்லியில் பேரறிவுச்செல்வன் அமைச்சனான பிறகு காசிகளுக்கும் மற்றைய முகம்மதியர்களுக்கும் சரியானபடி பெருமை கிடைக்காமற்போய்விட்டது. ஆகவே பேரறிவுச் செல்வனை அமைச்சு வேலையினின்றும் தொலைத்துவிட வேண்டும் என்று அவர்கள் மிகுந்த முயற்சிசெய்து பார்த் தார்கள். பேரறிவுச்செல்வன் தன்னுடைய அறிவுத் திறமையினால் அவைகளையெல்லாந் தடுத்துக் கெடுத்து விட்டான்.

காசிகள் அனைவரும் ஒன்றுகூடித் தங்கள் நாட்டில் தங்களுக்குத் திக்கில்லாமற் போய்விட்டபடியால் வேறு நாடுகளுக்காயினுஞ்சென்று தங்களுடைய காரியத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்று புறப்பட்டுக் காபூல் நாட்டை யடைந்தார்கள். அந்நாட்டின் அதிபதியைக் கண்டு தங்களுடைய திவினையையும் பேரறிவுச்செல்வ னுடைய திறமையையுங் கூறி, "நீங்கள் எங்களுக்குச் சிறப் புண்டாகுமாறு செய்து எங்களுடைய குலதெய்வமாக விளங்கவேண்டும்," என்று சொல்லி வேண்டிக்கொண் டார்கள்.

காபூல் பாட்சா காசிகளின் நிலைமைக்குப் பெரிதும் வருந்தினான். அவனும் முன்னரே பேரறிவுச்செல்வனு டைய திறமையைப்பற்றி மிகுதியாகக் கேள்விப்பட்டிருந்த படியால் யாதுஞ்செய்வதற்குத் தோன்றாதவனாய் எண் ணத்தில் ஆழ்ந்தான். தன்னுடைய அமைச்சனை அழைத்து, "நீ ஏதேனுஞ் சூழ்ச்சிசெய்து பேரறிவுச்செல் வனை அமைச்சு வேலையிலிருந்து விலக்கி நம்மவர்களுக்கு

நன்மை உண்டாகச் செய்யவேண்டும்,'' என்று கட்டளை யிட்டான்.

காபூல் பாட்சாவின் அமைச்சன் இரண்டு மூன்று நாட்கள் வரையில் ஆழ்ந்து எண்ணமிட்டான். இறுதியில் ஒரு சூழ்ச்சி செய்து பாட்சாவிடம் தன்னுடைய முடிவைக் கூறினான். ஒரு புதிய பானையும் ஒரு சீட்டும் டில்லி பாட்சா வுக்கு அனுப்பினான். டில்லி பாட்சா அச்சீட்டைப் படித் துப் பார்த்துவிட்டுப் பேரறிவுச்செல்வனாகிய அமைச்ச னிடங்கொடுத்தான். அவன் அதைப் படித்துப் பார்த் தான். அதில், "டில்லி பாட்சாவுச்குக் காபூல் பாட்சா அதிக வணக்கங்கள் செய்து எழுதிக்கொண்டது. தங்க ளுடைய அந்தண அமைச்சன், மிகவுங் கெட்டிக்காரனும். எல்லோரும் வியந்து கொண்டாடும்படி புதுமையான காரி யங்கள் செய்கிறானும். அப்படியானால் நான் அனுப்பி யிருக்கிற புதிய பாண்டம் நிறைய அவனுடைய புதுமை யான வேடிக்கையை அனுப்பிவைக்கவேண்டும். அந்த வேடிக்கைகள் சரியானதாகத் தோன்றாமற் போகுமானால் அமைச்சு வேலையில் இருந்து அந்த அந்தணனை விலக்கி விட்டு நம்மவர்களுக்கு அமைச்சு வேலையைக் கொடுக்க வேண்டும். இன்றேல் சண்டை ஏற்படும்,'' என்று எழு தப்பட்டிருந்தது.

பேரறிவுச்செல்வன் சீட்டைப் படித்துப்பார்த்துவிட் டுப் பாட்சாவைப் பார்த்துப், "பானை நிறைய வேடிக்கை கள் அனுப்புவதற்கு என்னால் முடியும். ஆனால் இதற்கு நான்கு திங்கள் காலம் வேண்டும். இச்செய்தியைக் காபூல் பாட்சாவுக்குத் தெரியப்படுத்துங்கள்,'' என்று சொன் னான். டில்லி பாட்சா காபூல் பாட்சாவுக்கு, "நான்கு திங்கள் கழிந்த பிறகு தாங்கள் அனுப்பியுள்ள பானை நிறைய வேடிக்கை அனுப்பப்படும்,'' என்று தெரியப் படுத்தினான்.

பேரறிவுச்செல்வன் காபூலில் இருந்துவந்த பாண்டத் தைப்போலப் பத்துப் பாண்டங்களைச் செய்வித்தான். பூச

ணிக்கொடிகள் சிலவற்றை வளர்த்தான். அவைகள் காய்க்கத் தொடங்குகையில் ஒவ்வொரு பாண்டத்துக்குள்ளும் ஒவ்வொருபிஞ்சை எடுத்துவிட்டு வளர்த்தான். அப்பிஞ்சுகள் அப்பாண்டங்களுக்குள்ளேயே பெருத்து வந்தன. அவைகள பெருத்து முற்றிய பின்பு பூசனிக்காய்களின் காம்புகளை அறுத்துவிட்டு ஒவ்வொருபாண்டத்தின்வாயையுந் துணியைப்போட்டுக் கட்டினன். நன்ருக முத்திரையும் வைத்தான். பாட்சாவிடம் கொண்டுபோய் 'இவைகளைக் காபூல் பாட்சாவுக்கு அனுப்பிவைக்கவேண்டு'மென்ருன். பாட்சா பூசனிக்காய் அடைக்கப்பட்டிருந்த குடங்களைப் பார்த்துவிட்டு மிகுந்த வியப்படைந்தான். "இவைகளை எவ்வாறு செய்தாய்?" என்று அமைச்சனைப் பார்த்துக் கேட்டான். அமைச்சன் பாட்சாவைப் பார்த்து, "அரசே! அறிவு,சூழ்ச்சி, வேடிக்கையான செய்கை முதலியவைகள் பிறப்பிலேயே இயற்கையாக உண்டாகவேண்டியவைகள். இதனை உணர்ந்துகொள்ளாமல் தங்களைச் சேர்ந்தவர்கள் என்னை இழிவுபடுத்தவேண்டுமென்று இக்காரியஞ்செய்தார்கள். ஒரு பாண்டம் வேடிக்கை காபூல் பாட்சா கேட்டிருக்கிருன். நான் பத்துப் பாண்டங்களாக அனுப்புகிறேன். இவைகளைக் காபூல் பாட்சா பார்க்கட்டும். பிறகு என்னுடைய வேடிக்கையைத் தெரியப்படுத்துகிறேன்," என்று சொன்ஞன்.

டில்லி பாட்சா காபூல் பாட்சாவுக்குப் பத்துப் பாண்டங்களையும் அனுப்பினன். காபூல் பாட்சா பத்துப் பாண்டங்களையும் பார்த்து மிகுந்த வியப்படைந்தான். டில்லிக் காசிகளை அழைத்து அவர்களுக்குப் பாண்டங்களைக் காட்டினன். அவர்களைப் பார்த்து, "ஒ காசிகளே! பேரறிவுச்செல்வனே இருப்பதற்குத் தகுதி வாய்ந்தவன். நம்மவர்களுக்கு இத்தகைய புதுமையான அறிவுண்டோ? ஏதோ பார்க்கலாம் என்று நினைத்து ஒரு புதிய பாண்டத்தை அனுப்பிவைத்தோம். இவ்வாறு புதுமையான காரியம் நடைபெறுமென்று நாம் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. ஆகவே, நீங்கள் பொருமைப்படாமல் உங்கள்

நாட்டிற்குத் திரும்பிப்போங்கள். உங்கள் நாட்டில் இத் தகைய அறிவாளியிருப்பது உங்களுக்கெல்லாம் மிகுந்த பெருமையாகும்,'' என்று கூறியதுடன் பேரறிவுச் செல்வனுடைய அறிவுடைமைக்கு வியந்து பலவகையான நன் கொடைகளை அனுப்பிப் பெருமைப்படுத்தினான். அறிவுடையவர்கள் எல்லாவிடங்களினுஞ் சிறப்படைகிறார்கள் என்பது உண்மையாக முடிந்தது.

---

௬௬. கள்ளர்களைப் பிடித்தல்

டில்லி பாட்சா அரசாட்சி செய்துகொண்டிருக்கையில் அம்பலத்தரசன் என்னும் பெயருடையவன் ஒருவன் பஞ்சு வாணிகஞ் செய்துகொண்டிருந்தான். ஒரு காலத்தில் வேறூர் ஊருக்கு அனுப்பும் பொருட்டுப் பத்து லட்சம் ரூபாய்க்குப் பருத்தி வாங்கிப் பட்டணத்துக்கு அண்மையில் இருந்த கிடங்கு ஒன்றில் வைத்திருந்தான். அதில் ஆயிரம் மூட்டைகள் காணுமற்போய்விட்டன. பருத்தி மூட்டைகள் களவுபோன செய்தியை அம்பலத்தரசன் பாட்சாவிடம் முறையிட்டுக்கொண்டான். பாட்சா கொத்தவாலை அழைத்துக் காணுமற்போன பருத்தி மூட்டைகளைக் கண்டுபிடிக்கவேண்டியது என்று கட்டளையிட்டான். கொத்தவால் எவ்வளவோ முயற்சி செய்தும் களவுபோன பருத்திமூட்டைகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. தன்னால் முடியவில்லை என்பதைக் கொத்தவால் பாட்சாவிடந் தெரியப்படுத்திக்கொண்டான்.

பிறகு பாட்சா பேரறிவுச்செல்வனாகிய அமைச்சனைப் பார்த்து, "களவுபோன பருத்திமூட்டைகளை நீ கண்டு பிடிப்பாயாக,'' என்று கட்டளையிட்டான். பேரறிவுச் செல்வன் அக்களவைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சி தொடங்கினான். ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி ஊர் மக்கள் எல்லோருக்கும் விருந்தளித்தான். எல்லேருஞ் சாப்பிட்டுவிட்டு மகிழ்ச்சியுடன் வெற்றிலைபாக்குப்

போட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது அமைச்சன் படைத்தலைவனைப் பார்த்து, "அம்பலத்தரசனுடைய பருத்திமூட்டையைக் களவுசெய்தவர்கள் அப்பருத்திகள் தங்கள் தாடிகளில் ஒட்டிக்கொண்டிருப்பதைக் கூட உணராமல் எவ்வளவு அச்சமற்றவர்களாக உரையாடிக் கொண்டிருக்கிறார்கள் பார்த்தாயா?'' என்று உரத்த குரலிற் கேட்டான். அப்பொழுது உண்மையாகத் திருடின வர்கள் தங்கள் தாடிகளைத் தொட்டுத் தடவிப்பார்த்தார்கள். அவ்வாறு தடவிப் பார்த்தவர்களைப் பிடித்துப் படைத்தலைவனிடம் ஒப்புவித்தான். பிறகு பாட்சாவிடம் அக்கள்ளர்களைக் கொண்டுவந்து உசாவுகையில் அவர்கள் தாங்கள் களவுசெய்ததை ஒப்புக்கொண்டு ஆயிரம் மூட்டைகளையும் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். அம்பலத்தரசன் அமைச்சனுடைய அறிவுத்திறமையை வியந்து சிறந்த நன்கொடைகள் வழங்கினான். கள்ளர்களுடைய கைகள் வெட்டப்பட்டன. பாட்சாவும் பேரறிவுச்செல்வனின் அறிவுத்திறமையைக் கொண்டாடித் தகுந்தவாறு சிறப்புக்கள் செய்தான்.

கூகூ. பொம்மைச் சூழ்ச்சி

டில்லிபாட்சா பேரறிவுச்செல்வனுடைய அறிவுத் திறமையை மிகவும் புகழ்ந்து காசிகளைத் தன்னோடு சேர்க்காமல் சிறுமைப்படுத்தி வந்தான். காசிகளில் ஒரு சூழ்ச்சிக்காரன் இருந்தான். அவன் எப்படியாயினும் இந்தப் பார்ப்பார அமைச்சனைப் பறக்கடிக்க வேண்டுமென்று மிகு முயற்சி செய்தான். மற்றைக் காசிகளையும் கலந்து ஒரு முடிவு செய்துகொண்டு சீன நாட்டிற்குச் சென்றான். அங்குள்ள தச்சர்களைக்கொண்டு மூன்று வடிவங்களை ஒரேமாதிரியாகச் செய்து எடுத்துக்கொண்டு டில்லிக்கு வந்தான். தன்னுடைய இனத்தார்களையெல்லாம் ஒரு பள்ளிவாசலில் கூட்டினான். அவர்களிடந் தான் செய்து கொண்டுவந்துள்ள உருவங்களைக் காட்டினான். "முசல்மான்

களே! நான் உங்களுடைய பொருளுதவியினால் சீன நாட்டிற்குப்போய் இந்த மூன்று உருவங்களையுஞ் செய்து கொண்டு வந்திருக்கிறேன். இவைகளால் நம்முடைய துன்பங்களெல்லாம் நீங்கும். இவைகளைப் பாட்சாவிடத்திற் கனுப்பி, 'இவைகளில் எது சிறந்தது, எது நடுத்தர மானது, எது குறைந்தது' என்று பார்ப்பன அமைச்சன் கண்டுபிடிக்கவேண்டியது. அப்படி அவன் கண்டுபிடிக் காமற் போவானாயின் அவன் சிறந்த அறிவாளியாக மாட்டான். அதன்பிறகு அவனை அமைச்சனாக வைத்துக் கொள்ளக்கூடாது என்று சொல்லுவோம்" என்று சொன்னான். எல்லோரும் அவன் சொன்னபடியே செய்ய லாம் என்றார்கள். பிறகு மூன்று உருவங்களையும் எடுத்துக் கொண்டு பாட்சாவிடத்திற்குப் போனார்கள். பாட்சாவைப் பார்த்து, "இம்மூன்று உருவங்களில் எது சிறந்தது எது நடுத்தரமானது எது கடைப்பட்டது என்பதை உங்களு டைய அமைச்சன் கண்டுபிடிக்கவேண்டும். அவ்வாறு அவன் கண்டுபிடிக்கவில்லையென்றால் பிறகு அவனை அமைச்சனாக வைத்துக்கொள்ளக்கூடாது," என்று சொல்லி மூன்று பொம்மைகளையும் பாட்சாவின் முன்பு வைத்தார்கள்.

பாட்சா முகமதியர்களுடைய தொல்லையைப் பொறுக்க முடியாமல் மிகுந்த வெறுப்படைந்தான். 'இந்தக் காசிகள் சிறிதுநேரங்கூடச் சும்மாயிராமல் ஏதேனுந் தொல்லை கொடுத்துக்கொண்டே இருக்கிறார்களே' என்று உள்ளத் தில் எண்ணிக்கொண்டான். பேரறிவுச்செல்வன் அவைக்கு வந்தவுடனே "அப்பொம்மைகளிற் சிறந்த பொம்மையைக் கண்டுபிடிக்கவேண்டும்" என்று சொன்னான்.

அமைச்சன் "அப்படியே ஆகட்டும்" என்றான். மூன்று பொம்மைகளையும் கருத்தூன்றி நன்றாகப் பார்த் தான். எந்த உறுப்பிலும் மாறுபாடு சிறிதுங் காணப் பெறவில்லை. மீண்டும் நன்றாக ஆராய்ந்து பார்க்கையில் மூன்று பொம்மைகளின் காதுகளினுந் தொளைகள் காணப் பட்டன. மெல்லிய கம்பி ஒன்றைக் கொண்டுவந்து ஒரு

பொம்மையின் காதில் நுழைத்தான். அஃது உள்ளே சென்றதே தவிர வெளிப்படவில்லை. பிறகு அதனை இழுத்து வேறொரு பொம்மையின் காதில்விட்டான். அது வாய் வழியாக வெளியே வந்தது. பிறகு மற்றொரு பொம்மையின் காதிலே நுழைக்க அஃது இன்னொரு காதின்வழி வெளியே வந்தது.

பேரறிவுச்செல்வன் தன்னுடைய சூழ்ச்சி பலித்தது என்று மிகுந்த களிப்படைந்தான். பிறகு பாட்சாவைப் பார்த்து, "இப்பொம்மைகளில் உத்தமம் மத்திமம் அதமம் என்பவைகளைக் கண்டுபிடித்துவிட்டேன். அவையைக் கூட்டினால் தெரியப்படுத்துகிறேன்," என்று சொன்னான். அதன்பிறகு பாட்சா காசிகளையும் மற்றைய முகமதியர் களையும் ஒன்றுசேர்த்துப் பேரவையைக் கூட்டினான். அமைச்சன் அப்பொம்மைகளின் தகுதிகளை விளக்கத் தொடங்கினான். முதலாவது பொம்மையைச் சுட்டிக்காட்டி, "இதன் காதுக்குள்ளே கம்பியைவிட்டால் உள்ளே போகிறது. பிறகு அது வெளிப்படுகிறதில்லை. இவ்வாறு கேட்பதைத் தனக்குள்ளேயே அடக்கிக்கொள்பவன் உத்தமனாவான்," என்றான். பிறகு இரண்டாவது பொம் மையைச் சுட்டிக்காட்டி, "இதன் காதுத் தொளையில் கம்பியை விட்டால் அது வாயால் வெளிப்பட்டுவிடு கின்றது. இவ்வாறு கேட்பதை வெளியே சொல்லிவிடு பவன் மத்திமன் ஆவான்," என்றான். பிறகு மூன்றாவது பொம்மையைச் சுட்டிக்காட்டி, "இதன் ஒரு காதில் கம்பியை விட்டால் மற்றைக் காதின்வழி வெளிப்பட்டு விடுகிறது. இவ்வாறு ஒரு காதால் வாங்கி ஒரு காதால் வெளியே விட்டுவிடுபவன் எதற்கும் பயன்படாத அதம னாவான்," என்று சொன்னான். இவ்வாறு பேரறிவுச் செல்வன் கூறியதைக்கேட்டு அவையில் கூடியிருந்தவர்கள் எல்லோரும் மிகுந்த வியப்படைந்தார்கள். காசிகள் இவனைத் தோற்கடிக்கமுடியாது என்று நாணித் தலை குனிந்தார்கள். மிகுந்த தொல்லைப்பட்டுச் சீனநாட்டிற்குப் போய்ப் பொம்மையைச் செய்துகொண்டு வந்தவனே

யாரோடுஞ் சொல்லாமல் நாட்டைவிட்டே ஓடிப்போனான். டில்லிபாட்சா பேரறிவுச்செல்வனுடைய அறிவுத்திற மைக்கு மிகுந்த களிப்படைந்து அவனுக்குப் பலவகையான சிறப்புக்களையுஞ் செய்து பெருமைப்படுத்தினான். "அறி வுடையார் எல்லாம் உடையார், அறிவிலார் என்னுடைய ரேனும் இலர்" என்னும் திருவள்ளுவருடைய திருவாக்குப் பொய்யாகுமோ?

கக௨. அக்பர் இராமாயணம்

அக்பர் பாட்சா அரசாட்சி செய்துகொண்டிருக்கை யில் ஒருநாள் பேரறிவுச்செல்வன் எழுந்து, "மகாராசா! நாளைக்கு இராமநவமியாகையால் கச்சேரிக்கு விடுமுறை கொடுக்கவேண்டும்," என்று கேட்டான். இதனைக்கேட்ட பாட்சா "இராமநவமியன்று உங்கள் இனத்தாருக்குத் தானே திருவிழா, விரதம் முதலியன நடக்கின்றன. எங்கள் இனத்தாருக்கும் இவ்வாறே நடக்குமாறு செய். அந்த இராமனும் என்னைப்போல ஓர் அரசன்தானே. அவனுடைய வரலாற்றை எழுதினதைப்போல என்னு டைய வரலாற்றையும் எழுது. இராமனை வால்மீகி ரிஷி எவ்வாறு வருணித்தாரோ அவ்வாறே என்னையும் வரு ணித்தெழுது. அடுத்த ஆண்டுமுதல் அக்பர் இராமா யணத்தை ஒட்டி நவமி முதலிய திருவிழாக் கொண் டாடுவதற்கு ஏற்பாடு செய்வோம்," என்று சொன்னான்.

அதற்குப் பேரறிவுச்செல்வன், "அரசே! தங்களு டைய திருவுளப்படி செய்வதற்கு யாதொரு தடையும் இல்லை. நான் தங்களுடைய அக்பர் இராமாயணத்தைக் காலை மாலை முதலிய ஓய்வு நேரங்களில் எழுதி முடித்து விடுகிறேன். இதற்குப் பெரிய அறிஞர்களின் துணையும் பலவகையான உதவிகளும் வேண்டும். அதன்பொருட்டுப் பத்து லட்ச ரூபாய்க்குக் கட்டளையிட்டருளவேண்டும்," என்று கேட்டுக்கொண்டான். பத்து லட்ச ரூபாய்

அளிக்குமாறு பொருளறை அலுவலாளனுக்குக் கட்டளை யனுப்பியதுடன் மறுநாள் கச்சேரிக்கு விடுமுறையும் அளித்தான் பாட்சா. பேரறிவுச்செல்வன் பத்து லட்சம் ரூபாய்களையும் வாங்கிக்கொண்டுபோய் இராமநவமித் திரு விழாவை மிகு சிறப்பாகக் கொண்டாடினான். பிறகு ஊருக்கு அண்மையில் உயர்ந்த சுவர்களை நாற்புறமும் எழுப்பினான். ஊரில் உள்ளவர்கள் உண்ட பிறகு எச்சில் இலைகளையெல்லாம் அச்சுவருக்குள் போடும்படியாகக் கட்டளையிட்டான். அவ்வாறே எல்லோரும் எச்சில் இலைகளை யெல்லாம் ஏணியின்மேல் ஏறி அச்சுவருக்குள் போட்டுக் கொண்டிருந்தார்கள். மறு ஆண்டில் சித்திரைத்திங்கள் நெருங்கியது.

பேரறிவுச்செல்வன் பாட்சாவிடம்போய், "அரசே! தங்களுடைய கட்டளைப்படி தங்களுடைய இராமாயணம் முழுவதையும் எழுதியாய்விட்டது. ஒரே ஒரு படலம் மட்டும் பாக்கியாக இருக்கின்றது. அவ்விடத்தில் சிறிது ஐயம் உண்டாகியிருக்கிறபடியால் தங்களுக்கு விண்ணப் பஞ்செய்யலாம் என்று வந்தேன். சினங்கொள்ளாமல் மறுமொழி கூறியருளவேண்டும்," என்று சொன்னான். பாட்சா, "செய்தியைக் கூறலாம்" என்று கட்டளையிட் டான். அமைச்சன் அஞ்சினவனைப்போல நடித்து அக்பர் பாட்சாவைப் பார்த்து, "அரசே! இராமனுடைய மனைவி சீதையை இராவணன் தூக்கிக்கொண்டு போனான் என்று இராமாயணத்தில் வருகிறது. அதைப்போல் தங்களு டைய மனைவி இராணி பீபியை யார் தூக்கிக்கொண்டு போனதாகத் தங்களுடைய இராமாயணத்தில் எழுது வது?" என்று கேட்டான். பாட்சா மிகுந்த சினங்கொண்டு, "தூகராப் என்னுடைய மனைவியையாவது ஒருவன் தூக் கிக்கொண்டு போகவாவது? உடனே என்னுடைய இராமாயணத்தைக் கிழித்தெறிந்துபோடு," என்று சொல் லிக் கட்டளையிட்டான். உடனே அமைச்சன் எச்சில் இலைகள் போடப்பட்டிருக்கும் இடத்திற்கு வந்து அதற்கு நெருப்பு வைத்துவிட்டான். எச்சில் இலைகளின் புகை

ஊர் முழுவதையும் மூடிக்கொண்டது. பாட்சா அமைச்சனைப் பார்த்து, "இஃதென்ன ஊரெல்லாம் பற்றியெரிவதைப்போல மிகுந்த புகை எழும்புகிறதே?" என்று கேட்டான்.

அதற்கு அமைச்சன் பாட்சாவைப் பார்த்துத், "தங்களின்பொருட்டு, தங்களுடைய ஆற்றல் மிகுபுகழ் நல்லியல்பு முதலியவைகளை வருணித்தெழுதிய இராமாயணத்தைத் தாங்கள் கிழித்துவிடும்படியாகக் கட்டளையிட்டீர்கள். கிழிப்பது முடியாத காரியம் என்று நெருப்பு வைத்துக் கொளுத்திவிடச் சொன்னேன். அந்த இராமாயணத்தின் புகை இவ்வாறு காணப்படுகிறது," என்று சொன்னான்.

அதனைக்கேட்ட பாட்சா 'பத்து லட்சம் ரூபாயும் புகையாகப்போய்விட்டதே' என்று உள்ளம் வருந்தினான். அமைச்சன் தான் வாங்கிக்கொண்டுபோன பத்து லட்ச ரூபாயில் ஒரு லட்ச ரூபாயை மட்டும் இராமநவமிக்குச் செலவழித்துவிட்டுப் பாக்கியை வட்டிக்குப்போட்டிருந்தபடியால் மறு ஆண்டில் பாட்சாவின் பணம் பத்து லட்சம் ரூபாயும் வட்டியும் முதலுமாகச்சேர்த்துவிட்டான். பாட்சா அமைச்சன் செய்த சூழ்ச்சியைப் பிறகு தெரிந்துகொண்டு அவனுடைய சூழ்ச்சித் திறமைக்காகப் பலவகையான பரிசுகளை வழங்கி மகிழச்செய்தான்.

ககங. அரசியின் ஏமாற்றம்

டில்லி பாட்சா பேரறிவுச்செல்வன்மீது மிகுந்த அன்புள்ளவனாக இருந்தான். காசிமார்கள் எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்தும் பேரறிவுச்செல்வனை அமைச்சு வேலையில் இருந்து விரட்ட முடியவில்லை. அவர்கள் அடிக்கடி ஏதேனும் முயற்சி செய்துகொண்டே யிருந்தார்கள். அவர்கள் ஒருநாள் இராணியிடஞ் சென்றார்கள். இராணி காசியார்களை வரவேற்றுப் போற்றினாள். அவர்கள் தன்

னிடம் வந்த காரணத்தைத் தெரியப்படுத்தவேண்டும் என்று வேண்டிக்கொண்டாள். காசிகள் இராணியைப் பார்த்து, " அம்மா! தாங்கள் எங்களுடைய விண்ணப்பத்தைக்கேட்டு என்ன செய்யப்போகிறீர்கள்? அதைச் சொல்வதால் எத்தகைய பயனும் இல்லை. ஏதோ இவ்வளவு நாள் இந்த நாட்டில் இருந்தோம். இப்பொழுது இந்த நாட்டைவிட்டுப் போகும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது உங்களைப் பார்த்துச்சொல்லிவிட்டுப்போகலாம் என்று வந்தோம்," என்று சொன்னார்கள்.

இராணி பீபிக்கு எப்பொழுதும் காசிமார்களிடத்தில் மிகுந்த அன்புண்டு. அவள் திடுக்கிட்டு, " ஆ! என்ன காரணம்? அரசனாலாவது அல்லது வேறு எவராலாவது உங்கட்குத் தொல்லை நேர்ந்ததா? நாட்டைவிட்டுப்போகிறோம் என்ற செய்தியை என் என்னிடஞ் சொன்னீர்கள்?" என்று கேட்டாள்.

காசிமார்கள் இராணியைப் பார்த்து, " உலகத்தில் உள்ள எல்லாச் சமயங்களும் மனிதர்களால் உண்டானவை என்றும், நமது முஸ்லிம் சமயமே கடவுளால் உண்டாக்கப்பட்ட உண்மையான சமயமென்றும் நமது குரானிற் சொல்லப்பட்டிருக்கிற செய்தி தங்களுக்குத் தெரியாததன்று. அவ்வாருகச் சகல தருமங்களும் நியாயமும் அறிந்த நம் நூல் அறிஞர்கள் கூறும் மொழிகளில் அன்புவைக்கவேண்டியது சமய வழக்கமாகையால் அவ்வாறு நாங்கள் சொல்வதை அரசர் சிறிதுங் கேட்பதில்லை. அதற்குக் காரணம் தாழ்ந்த குலத்தானை அமைச்சனாக வைத்துக்கொண்டிருப்பதேயன்றி வேறன்று. தங்கள் தம்பிமார்கள் எல்லா நூல்களையுங் கற்று அறிவாளிகள் என்று எல்லோராலும் கொண்டாடப்பெற்றுப் புகழ்பெற்றிருக்கிறார்கள். அவர்களில் ஒருவருக்கு அமைச்சு வேலையைக்கொடாமலிருப்பதுதான் நாங்கள் இந்த நாட்டைவிட்டுப் போவதற்குக் காரணமாகும்," என்று சொன்னார்கள். இதனைக்கேட்ட இராணி, " நாளைக்குள் நான் அந்த நீசனை நாட்டைவிட்டுப்

போகச்செய்கிறேன். நீங்கள் ஒருநாள் மட்டும் பொறுத்துக்கொள்ளுங்கள்,'' என்று சொல்லி அவர்களை அனுப்பி வைத்தாள்.

காசிமார்கள் போனவுடன் இராணி தன்னுடைய நகைகளையெல்லாம் எடுத்தெறிந்துவிட்டு ஒரு மூலையிற் போய் முக்காடிட்டுப் படுத்துகொண்டாள். பாட்சா வந்து பார்த்து மனைவியைக் காணாமல் தோழிகளை உசாவினான். அவர்கள், "இராணியம்மாள் ஓர் இருட்டறையின் மூலையில் முக்காடிட்டுக்கொண்டு படுத்திருக்கிறார்கள்,'' என்று சொல்லி இராணியைக் காட்டினார்கள்.

பாட்சா இராணியைப் பார்த்துச், "செய்தி என்ன?'' என்று கேட்டுப் பலவாறு உசாவினான். பலவாறு வேண்டியும் அவள் மறுமொழி கூறவில்லை. சிறிதுநேரம் பொறுத்துப் பாட்சாவைப் பார்த்து, "என்மேல் உங்களுக்கு விருப்பம் இருப்பது உண்மையானால் இப்பொழுதே என்னுடைய உயிரைப் போக்குவதற்கு நஞ்சு தேடிக் கொடுக்கவேண்டும்,'' என்று சொன்னாள். அதற்குப் பாட்சா, "அப்படி உயிரைப் போக்கடித்துக்கொள்ளக் கூடிய அவ்வளவு பெருத்த காரியம் இன்னதென்று தெரியப்படுத்தினால் நான் தக்க முயற்சி செய்து உன்னுடைய உயிரை நிறுத்துகிறேன்'' என்று சொன்னான்.

இராணி பாட்சாவைப் பார்த்து, "என்னுடைய உயிரை நிறுத்துவது உண்மையானால் என்னுடைய தம்பிகளில் ஒருவருக்கு அமைச்சுவேலை கொடுக்கவேண்டும்,'' என்று கூறினாள். தன் மனைவிக்குத் தன் தம்பிகளுடைய மூடத்தனம் தெரிந்திருந்தும் அவ்வாறு அவள் சொல்வதற்குக்காரணம் காசிமார்களுடைய போதனையாக இருக்க வேண்டுமென்று பாட்சா எண்ணினான். இராணியைப் பார்த்து, "உன்னுடைய மொழியைத் தள்ளக்கூடாது தான். ஆனால் நான் யாதொரு காரணமும் இல்லாமல் அமைச்சனை வேலையைவிட்டு நீக்கிவிட்டால் உலகத்தார் என்னை இகழ்வார்கள். அமைச்சனை வேலையைவிட்டு நீக்கு

வதற்குத் தகுந்த சூழ்ச்சியை நீயே நன்றாக எண்ணிப் பார்த்துச் சொல்லவேண்டும்,'' என்று கூறினான்.

இராணி மிகுந்த களிப்புடன் பாட்சாவைப் பார்த்து, "தாங்கள் நாளைக்காலையில் பூம்பொழில் மண்டபத்தில் போய் உட்கார்ந்துகொண்டிருங்கள். என்னோடு சண்டை போட்டுக்கொண்டு போயிருப்பதாக நடியுங்கள். யார்வந்து அழைத்தபோதினும் அவ்விடத்தைவிட்டுப் புறப்படா தீர்கள். அப்பொழுது அமைச்சன் பேரறிவுச் செல்வன் வந்து தங்களை அழைப்பான். அவனிடம் 'இராணியை இவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தால்தான் நான் வருவேன். உனக்கும் அமைச்சுவேலை தங்கும்' என்று சொல்லுங்கள், அவன் என்னை அழைக்கும்போது நான் வராமல் இருக்கிறேன். பிறகு என்னுடைய பெரிய தம்பியை அனுப்புங்கள். நான் கூடவே வந்துவிடுகிறேன். பிறகு அமைச்சனை அழைத்து முன்கூறிய திட்டப்படி நீ இராணியை அழைத்துக்கொண்டு வராமற் போனபடியால் நீ அமைச்சு வேலையில் இருந்து கண்டிப்பாக விலகிவிட வேண்டியதென்று சொல்லிவிட்டு என் தம்பிக்கு அந்த வேலையைக் கொடுத்துவிடுங்கள்,'' என்று சொன்னாள்.

பாட்சா இராணியைப் பார்த்து, "நீ சொன்னது சரியான சூழ்ச்சிதான். நாளைக்காலையில் நான் உன்னோடு சண்டைபோட்டுக் கொண்டதைப்போல நடித்துப் பூஞ் சோலை மண்டபத்திற்போய் உட்கார்ந்து கொள்ளுகிறேன். பிறகு உன்னுடைய விருப்பம் நிறைவேறும்,'' என்று கூறி விட்டு மறுநாட்காலையில் பாட்சா இராணி சொன்னவாறே செய்தான்.

அமைச்சன், 'பாட்சா யாது காரணத்தால் அங்கே போய் உட்கார்ந்திருக்கிறானோ தெரியவில்லை. போய் உசாவுவோம்' என்று பாட்சா இருக்குமிடத்திற்குச் சென் றான். "யாருமில்லாமல் இங்கே தனியாக வந்திருக்கிறீர் களே, காரணம் யாது?'' என்று பாட்சாவைப் பார்த்துக் கேட்டான்.

பாட்சா அமைச்சனைப் பார்த்து, "நான் இராணியோடு ஊடல்கொண்டு இங்கே வந்திருக்கிறேன். அவளை நீ இங்கே அழைத்துக்கொண்டு வரவேண்டும். அவ்வாறு அழைத்துக்கொண்டு வந்தால்தான் உனக்கு அமைச்சு வேலை நீடிக்கும். எவ்வளவு நேரத்தில் அழைத்துக் கொண்டு வருவாய்?" என்று கேட்டான். அமைச்சன் பாட்சாவைப் பார்த்து, "விரைவாகவே அழைத்துக் கொண்டு வருகிறேன், கணவன் மனைவியர் கலகம் பொழுது போகும் வரையில் தானே," என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

அமைச்சன் இராணியிருக்கும் அந்தப்புரத்தை அடைந்து அவள் காணத்தக்க ஓரிடத்தில் நின்றுகொண்டிருந்தான். இராணி தன்னுடைய மனம் மாறாமல் இருப்பதற்கு உறுதி செய்துகொண்டிருந்தாள். அமைச்சன் அந்தப்புரத்திற்குச் செல்லும்போதே ஏவலர் சிலரோடு சில செய்திகளைச் சொல்லி ஏற்பாடு செய்துவிட்டுச் சென்றான். அமைச்சன் அங்கு நின்றுகொண்டிருக்கும்போது ஒரு சேவகன் விரைவாக வந்து, "எல்லாம் விரைவாக நடக்கிறது. நிக்கா விரைவிலேயே முடியும்போல் தெரிகிறது. ஆகவேண்டிய ஏற்பாடுகளையெல்லாஞ் செய்து கொண்டு வரும்படியாகப் பாட்சா சொன்னார்," என்று சொன்னான். அமைச்சன், "நல்லதென்று பாட்சாவிடம் போய்ச்சொல்," என்று சொல்லியனுப்பினான்.

அமைச்சனும் ஏவலாளனும் உரையாடியதை இராணி கேட்டாள். அவள் மனது மிகுந்த குழப்பத்தை யடைந்தது. இவர்கள் பேசிய செய்தியைக் கவனித்தால் ஏதோ ஐயத்திற்கிடமாக இருக்கின்றது. காரியங் கெட்டுப்போனாலும் போகலாம். பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது என்றபடி ஆனாலும் ஆகிவிடக்கூடும். என்று கலங்கினாள். அமைச்சனை அழைத்துப் பக்கத்தில் உட்காரவைத்துக்கொண்டு, "இப்பொழுது நீங்கள் இருவரும் பேசிக் கொண்ட செய்தி என்ன?" என்று உசாவினாள். அதற்கு அமைச்சன், "அச் செய்தியை நான் இங்குச் சொல்லக்

கூடாது. எல்லாம் விரைவில் தெரியும்; தாங்கள் எந் நிலையில் இருக்கிறீர்கள் என்று பார்த்துக்கொண்டு போவ தற்கே நான் வந்தேன். அதைப்பற்றி எனக்கு ஆக வேண்டியது ஒன்றுமில்லை," யென்றான்.

இராணிக்கு முன்னிலும் ஐயம் மிகுதிப்பட்டது. தான் செய்த சூழ்ச்சி விபரீதமாக முடிகிறது போலும் என்று கலங்கினாள். அவளுடைய கலக்கத்தைக்கண்ட அமைச்சன், "அம்மா! நீங்கள் கலங்கவேண்டாம். நீங்கள் உடனே புறப்பட்டு வந்தால் நான் அரசரைச் சரிப்படுத்தி மற்றொரு மணத்தை நிறுத்திவிடுகிறேன்," என்று கூறினான். உடனே இராணி புறப்பட்டு அமைச்சனோடு சென்றாள். பாட்சா இப்பொழுதும் பேரறிவுச் செல்வன் வெற்றியடைந்துவிட்டான் என்று உணர்ந்துகொண்டான்.

ககசு. கழுதையைக் குதிரையாகச் செய்தல்

பாட்சாவோடு இராணி ஒருநாள் உரையாடிக்கொண் டிருக்கையில் பார்ப்பார்களை நம்பக்கூடாதென்றும் தன்னு டைய சிறிய தம்பியாகிய அபீபுல்லாகானை அமைச்சனாகச் செய்யவேண்டுமென்றும் மிக விருப்பமாகச் சொல்லித் தன் னுடைய எண்ணத்தை நிறைவேற்றவேண்டும் என்றாள். பாட்சா "அவ்வாறே ஆகட்டும்" என்று சொன்னான். மறுநாள் அமைச்சனாகிய பேரறிவுச் செல்வன் வந்தவுடனே அவனைப் பார்த்து, "இன்றுமுதல் உன்னுடைய ஊதியத் தைத் திங்கள்தோறும் தவறாமற் பெற்றுக்கொள். ஆனால் அமைச்சு வேலையைப் பார்க்கவேண்டாம். அவ் வேலைக்கு இராணியின் தம்பியாகிய அபீபுல்லாகானை ஏற்படுத்தி யிருக்கிறேன். உன்னுடைய வீட்டிலேயே சுகமாக உட் கார்ந்துகொண்டிரு," என்று சொல்லி அவனை வீட்டிற் கனுப்பிவிட்டான். அபீபுல்லாகானை அழைத்து அமைச் சனாக வேலைபார்க்குமாறு கட்டளையிட்டான்.

ஏழெட்டு நாட்கள் சென்றன. பேரறிவுச் செல்வன் சும்மா இருக்கவில்லை. அவனால் ஒரு நொடிப்பொழுதாவது சும்மா இருக்க முடியுமா? வண்ணானுடைய நொண்டிக் கழுதை யொன்று வேலையற்று எங்கேயோ ஒரு பாழ் வீட்டுச் சுவரண்டை நின்றுகொண் டிருந்ததைப் பிடித்து இழுத்துக்கொண்டுபோய்ப் பாட்சாவின் தோட்டத்தில் உள்ள நடைவாவியில் செங்கல்லால் தேய்த்துக் கழுவிக் கொண்டிருந்தான். தோட்டக்காரர்கள் பேரறிவுச் செல்வன் செய்யுங் காரியத்தைப் பார்த்து அஞ்சினார்கள். பாட்சாவினிடம் போய், "அரசே! தங்களுடைய அழகிய பூஞ்சோலையில் உள்ள நடைவாவியில் பழைய அமைச்சர் நொண்டிக் கழுதையைத் தேய்த்துக் கழுவிக்கொண்டிருக் கிறார்," என்று சொன்னார்கள்.

பாட்சா அதனைக்கேட்டு மிகுந்த வியப்படைந்தான். 'அந்தோ அந்தணர்கள் கழுதையைத் தொடுவதே இல்லையே. இவனுக்குப் பித்துப் பிடித்துவிட்டதோ என்னவோ? ஆயினும் போய்ப் பார்ப்போம்' என்று தோட்டத்தில் உள்ள நடைவாவியைப் போய்ப் பார்த்தான். பேரறிவுச் செல்வன் கழுதையைத் தேய்த்துக் கழுவிக் கொண்டிருப்பதைக் கண்டான். அவனைப் பார்த்து, "உனக்கென்ன பித்துப் பிடித்துவிட்டதா? இத்தகைய இழிவான காரியத்தைச் செய்துகொண் டிருக்கிறாயே," என்று கேட்டான்.

அதற்குப் பேரறிவுச் செல்வன், "அரசே! இஃது இழிவான காரியமன்று. நான் இக் கழுதையைக் குதிரை யாகச் செய்துகொண்டிருக்கிறேன். இதிற் புதுமையென்ன இருக்கிறது?" என்று சொன்னான். அதற்குப் பாட்சா, "எங்கேனும் கழுதை குதிரையாகப் போகுமா? இஃது ஒருநாளும் நடவாத காரியம்," என்று சொன்னான். அதற்குப் பேரறிவுச் செல்வன், "முழுமூடனாகிய அபீபுல்லா கான் அமைச்சனாகி யிருக்கிறபோது கழுதை குதிரை யாவதுதானா நடவாத காரியம்?" என்று கேட்டான். பாட்சா மூடனாகிய தன் மைத்துனனை அமைச்சனாக

ஏற்படுத்தியதைக் குறித்து மிகுந்த நாணமடைந்தான். அவனை அப் பதவியைவிட்டு விலக்கிவிட்டு மீண்டும் பேரறிவுச் செல்வனையே அமைச்சனாக ஏற்படுத்தினான்.

---

௧௧௫. புகைவரி

தன் தம்பி அமைச்சு வேலையினின்றும் விலக்கப் பட்டதைக் கண்டு இராணி மிகுந்த மனவருத்தங் கொண்டாள். தன் தம்பியையே அமைச்சனாக ஏற்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தினாள். இராணியின் தொல்லை பொறுக்க முடியாமல் அபீபுல்லாகானைப் பாட்சா மீண்டும் அமைச்சனாக ஏற்படுத்தினானாயினும் அவனை அப் பதவியி லிருந்து விரட்டுவதற்கு முயற்சி செய்துகொண்டிருந்தான்.

இராணியானவள் தன்னுடைய தம்பியிடம் பாட்சா மிகுந்த வெறுப்பாக இருப்பதையும் அவனை விரட்டுவதற்கு முயற்சி செய்துகொண்டிருப்பதையுங் கண்டாள். பாட்சாவைப் பார்த்து, "நீங்கள் அந்தப் பார்ப்பானிடத்திலே தான் மிகுந்த பற்று வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். என்னுடைய தம்பியிடம் சிறிதாவது உங்கட்கு அன்பில்லை. அவனிடம் நீங்கள் அன்பாக நடந்துகொள்ளவேண்டும்," என்று சொல்லி வற்புறுத்தினாள். அதற்குப் பாட்சா, "உன் தம்பியிடம் விருப்பமாக நடந்துகொள்வதற்கு அவனிடஞ் சிறிதும் அறிவில்லையே, முழுமூடனாக இருக்கிறானே. முழுமூடனிடத்தில் எவ்வாறு அன்போடு நடந்துகொள்வது?" என்று கேட்டான். அதற்கு, இராணி, "நீங்கள் பார்ப்பானிடத்தில் கொண்டிருக்கும் பற்றினால் இவ்வாறு பேசுகிறீர்கள்," என்று சொன்னாள். அதற்குப் பாட்சா "அவனுடைய அறிவுத் திறமையை நான் உனக்கு விரைவாகவே தெரியப்படுத்துகிறேன் பார்," என்று சொன்னான். இராணி தன்னுடைய தம்பியை அழைத்துப், "பாட்சா உன்னையும் பழைய அமைச்சனையும் அறிவுத் திறனில் ஆராய்ச்சி செய்து பார்க்க எண்ணி

யிருக்கிறார். நீ விழிப்புடன் நடந்துகொள்," என்று முன் னறிவிப்புக் கொடுத்தாள். பாட்சா அபீபுல்லாகானைப் பார்த்து, "நீ உன்னுடைய அமைச்சு வேலையைக் காப் பாற்றிக்கொள்ள வேண்டுமானால் இன்று மாலைக்குள் புகைவரி போட்டு இலட்சம் ரூபாய் கொண்டுவந்து பொரு ளறையிற் சேர்க்கவேண்டும்," என்று கட்டளையிட்டான்.

அபீபுல்லாகான் இக் கட்டளையைக் கேட்டு மிகுந்த சினங்கொண்டான். தன்னுடைய பதவியை ஒழித்துக் கட்டுவதற்காகப் பாட்சா இவ்வாறு கட்டளை யிட்டிருக் கிறான் என்று முடிவு செய்துகொண்டு தன் அக்காளாகிய இராணியிடம் போய், "அக்கா! உன்னுடைய கணவன் என்னை அமைச்சு வேலையில் இருந்து ஒழிப்பதற்கே எப் பொழுது பார்த்தாலும் முயற்சி செய்துகொண்டிருக்கிறார். புகைவரி போட்டு இலட்சம் ரூபாய் திரட்டி இன்று மாலைக் குள் பொருளறையிற் சேர்க்கவேண்டுமாம். இல்லாவிட் டால் எனக்கு அமைச்சு வேலை நிலைபெறாதாம். இவ்வாறு அடிக்கடி தொல்லை கொடுத்துக்கொண்டிருக்கும் இவரிடத் தில் நான் வேலை பார்த்துக்கொண்டிருக்க முடியாது," என்று கூறிவிட்டுத் தன்னுடைய வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தான்.

பாட்சா நண்பகலில் அந்தப்புரத்திற்குச் சென்றான். இராணி பாட்சாவைப் பார்த்து, "உங்களுக்கு அந்தப் பார்ப்பான் மீதுதான் பற்று அதிகமாக இருக்கிறது. என்னுடைய தம்பியைச் சும்மா வீட்டிற்குப் போகுமாறு சொல்லக்கூடாதா? புகைவரி போட்டுப் பொழுது போவ தற்குள் இலட்சம் ரூபாய் கொண்டுவந்து சேர்க்கவேண்டும் என்று என்னுடைய தம்பிக்குக் கட்டளை அனுப்பினீர்க ளாமே இது தகுமா?" என்று கேட்டாள். அதற்குப் பாட்சா, "உன்னுடைய தம்பியின் அறிவு அவ்வளவு தான். இதே கட்டளையை அந்தப் பார்ப்பானுக்கு அனுப்பி வைக்கிறேன். பொழுதுபோவதற்குள் இலட்சம் ரூபாய் வருகிறதா இல்லையா பார்," என்று சொல்லிவிட்டு அதே கட்டளையைப் பேரறிவுச் செல்வனுக்கு அனுப்பினான்.

பேரறிவுச் செல்வன் பாட்சாவின் கட்டளையைப் பெற்றவுடனே ஊர்த் தலையாரிகளை வரவழைத்தான். "இன்றைக்கு யாருடைய வீட்டுப் புகையும் வெளியே வரக் கூடாது. அவ்வாறு வந்தால் கடினமான தண்டனை விதிப்பதன்றி நூற்றுக் கணக்காக அபராதமும் போடப் படும்," என்று பறையறையச் செய்ததுமன்றித் தானே கூடவிருந்து பறையறைதலையுங் கவனித்தான்.

இவ்வாறு பறையறைதலைக் கேட்டவுடனே டில்லி மக்கள் அனைவரும் மிகுந்த திகிலடைந்தார்கள். இஃதென்ன புதுமையான கட்டளையோ என்று மிகுந்த அச்சங் கொண்டார்கள். ஓடோடியும் வந்து அமைச்சன் பேரறிவுச் செல்வனுடைய காலிலே விழுந்து வணங்கினார்கள். "பெரியீர்! தாங்களே எங்களுக்குக் கதி. எங்கள் வீட்டில் இருந்து புகை வெளியே வருகின்றது. இப்பொழுதுதான் சமையல் செய்கிறோம். காலையிலேயே சமையல் செய்வதற்கு முடியாமற் போய்விட்டது. இன்று வீட்டிலே திதி. முதலிலே சமைத்தது போதவில்லை. இரண்டாவது முறை சமைக்கிறோம். குழந்தைகள் காலையில் இருந்து சாப்பிடாமல் தவிக்கின்றன. இப்பொழுது சமையல் செய்யாவிட்டால் உயிர் போய்விடும். இன்று சிற்றூர்த் தேவதைக்குத் தெருவிற் பொங்கலிடாவிட்டால் எங்கள் குழந்தைகள் பிழைக்கமாட்டா," என்று இப்படிப் பலபேர் வந்து முறையிட்டுக் கொண்டதுமல்லாமல் அவரவர்களுடைய ஆற்றலுக்குத் தகுந்தபடி பொருளையுங் கொண்டு வந்து பேரறிவுச் செல்வனிடங் குவித்தார்கள். இவ்வாறு சேர்ந்த பொருள் பெருங் குவியலாகிவிட்டது. அப் பொருளைக் கணக்கிட்டுப் பார்த்தபோது இரண்டு லட்சம் ரூபாய் இருந்தது. பொழுதுபோவதற்குள் இலட்சம் ரூபாயை அரசனுடைய பொருளறைக்கு அனுப்பி விட்டான். எஞ்சிய பொருளை ஏழை எளியவர்கட்குத் தானம் பண்ணினான். பாட்சா பேரறிவுச் செல்வனுடைய அறிவுத் திறமைக்கு வியந்து மீண்டும் அவனுக்கு அமைச்சு வேலையை வழங்கினான். அன்று இரவு இராணியிடம் பாட்சா நடந்த

செய்தியைத் தெரியப்படுத்தினன். அவள் அதற்கு முன்னரே அச் செய்தியைக் கேள்விப்பட்டிருந்தபடியால் ஒன்றும் பேசாமல் மிகுந்த நாணமடைந்திருந்தாள். மறுநாள் தன்னுடைய தம்பியை அழைத்துப் "பார்ப்பானுடைய அறிவை நாமெல்லாரும் புகழவேண்டியதுதான். உன்னல் முடியாத வேலையை அவன் முடித்துவிட்டான்," என்று சொன்னாள்.

கககூ. சமையல் சூழ்ச்சி

மழை காலத்தில் ஒருநாள் பாட்சா பூம்பொழிலில் உலாவிக்கொண்டிருந்தான். தாமரையோடை மிகுந்த குளிருடையதாக இருந்தது. "இவ்வோடையில் இரவு முழுவதும் உட்கார்ந்திருப்பவனுக்கு ஐம்பது மொகராக்கள் நன்கொடை யளிப்பேன்," என்று சொன்னான். மேகநாதன் என்பவன் இச் செய்தியைக் கேள்வியுற்றான். அவ்விரவு முழுவதும் தாமரையோடையில் உட்கார்ந்துகொண்டிருந்தான். காலையில் எழுந்து பாட்சாவிடம் வந்து ஐம்பது மொகராக்களையும் கொடுக்கும்படியாகக் கேட்டான். பாட்சா மேகநாதனைப் பார்த்து, "நீ தண்ணீரில் உட்கார்ந்து கொண்டிருந்தபோது எதனைப் பார்த்துக்கொண்டிருந்தாய்?" என்று கேட்டான். அதற்கு மேகநாதன் "தங்கள் அரண்மனையில் உள்ள திருவிளக்கைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன்," என்று மறுமொழி கூறினன். அதற்குப் பாட்சா, "நீ விளக்கின் வெப்பத்தினல் தண்ணீரில் உட்கார்ந்துகொண்டிருந்தாய். ஆகவே உனக்கு நன்கொடை கொடுக்கப்படமாட்டாது போ," என்று சொன்னன். மேகநாதன் மிகுந்த வருத்தமடைந்து இச் செய்தியை அமைச்சன் பேரறிவுச் செல்வனிடஞ் சொல்லிவிட்டுத் தன்னுடைய வீட்டிற்குச் சென்றான்.

மேகநாதனுக்கு உதவி செய்வதற்குத் தகுந்த சமயத்தைப் பேரறிவுச் செல்வன் எதிர்பார்த்துக் கொண்டிருந்

தான். சித்திரைத் திங்களில் பாட்சா வேட்டையாடுவதற்கு எண்ணினன். உறுதிச் சுற்றத்தினரோடும் (பரிவாரங்கள்) அமைச்சன் பேரறிவுச் செல்வனோடும் புறப்பட்டான். பல விலங்குகளைக் கொன்று வேட்டையாடிய பிறகு எல்லோருங் களைப்படைந்து ஓரிடத்தில் தங்கினார்கள். சமையல் செய்து சாப்பிடுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றன.

பேரறிவுச் செல்வன் அந்தணனாகையால் நீராடி விட்டுச் சமையல் செய்யத் தொடங்கினன். ஒரு தவலையில் அரிசியைக் களைந்து போட்டான். அதனை ஒரு மரத்தின் கிளையில் கட்டிவிட்டுத் தான் வேறோர் இடத்தில் நெருப் பைப்போட்டு எரித்துக்கொண்டிருந்தான். சுற்றுப் பக்கத் தில் இருந்தவர்கள் எல்லோரும் 'இவன் சமையல் செய்யும் வேடிக்கையைப் பார்த்தார்கள். இவன் என்ன இவ்வாறு பித்துக்கொள்ளித்தனமாக வேலை செய்கிறானே' என்று எண்ணமிட்டார்கள். சிலர் அமைச்சன் சமையல் செய்யும் வேடிக்கையைப் பாட்சாவிடம் போய்ச் சொன்னார்கள். உடனே பாட்சா புறப்பட்டுவந்து மந்திரி சமையல் செய்யும் வேடிக்கையைப் பார்த்தான். "ஓ அமைச்சனே! இஃ தென்ன இவ்வாறு செய்கிறாய்? உயரமான கிளையில் தவலையைக் கட்டிவிட்டுக் கீழே நெருப்பைப்போட்டு எரிக் கிறாயே! இதனுடைய புகைகூடத் தவலைக்குப் போகமாட் டாதே! அவ்வாறாகச் சமையல் எவ்வாறாகும்? நீ எப் பொழுது சாப்பிட்டுவிட்டு எங்களோடு வந்து சேர முடி யும்?" என்று கேட்டான்.

பேரறிவுச் செல்வன் தகுந்த சமயங் கிடைத்ததென்று நினைத்து, "அரசே! குளிர்காலத்தில் தாமரையோடையில் இரவு முழுவதும் உட்கார்ந்து கொண்டிருந்த மேகநாத னுக்கு உங்கள் அரண்மனையில் இருந்த விளக்கு வெப் பத்தை யளித்திருக்கையில் நான் செய்யும் சமையலில் மட்டும் சோறு வேகாமற் போகுமா?" என்று கேட்டான். பாட்சா தான் மேகநாதனிடம் நடந்துகொண்ட செய்தியைத் தெரிந்துகொண்டே அமைச்சன் அதனைத் திருத்த இவ்வாறு செய்திருக்கிறான் என்று அறிந்துகொண்டான்.

அரண்மனைக்குச் சென்றவுடன் மேகநாதனை யழைத்து அவனுக்குரிய நன்கொடையைக் கொடுத்துவிட்டான்.

---

௧௧௭. மார்பளவு கயிறு

அக்பர் பாட்சாவின் மைத்துனனாகிய மகமதுல்லா கான் என்பவன் தன்னுடைய அக்காளாகிய இராணியைப் பார்த்துவிட்டுப்போக வந்தான். வந்த விடத்தில் ஐந் தாறு திங்கள்கள் தங்கியிருந்தான். அவனைப் பாட்சா ஒருபொருட்படுத்தி மதிக்கவில்லை. அதனால் அவனுக்கு மிகுந்த வெறுப்புண்டாய்விட்டது. தன்னுடைய அக்கா ளாகிய இராணியிடம் போய், "அக்கா! நான் ஊருக்குப் போகிறேன். இனிமேல் நொடிப்பொழுதும் இங்கே இருக்க மாட்டேன். என்னுடைய தமையனுக்கு இரண்டு மூன்று தடவை அமைச்சு வேலை கொடுத்து அதைப் பார்ப்பா னுடைய போதனையால் என்னுடைய மச்சான் திரும்பவும் பிடுங்கிக் கொண்டான். இப்பொழுது நான் இங்கே வந்து ஐந்தாறு திங்கள்கள் ஆகியும் பாட்சா என்னோடு முகங் கொடுத்துப் பேசவில்லை. இப்படிப்பட்ட இடத்தில் இருந்து காலங்கழிப்பதைவிடப் பிச்சையெடுத்துப் பிழைக்கலாம்," என்று சொல்லிவிட்டு எழுந்துபோகத் தொடங்கினான். இராணியானவள் தம்பி யென்னும் பாசத்தினால், "அடே தம்பி! போகவேண்டாம்; உன்மேலே ஆணை," என்று சொன்னாள். பிறகு அவன் போகாமல் திரும்பிவந்து இராணியின் பக்கத்தில் அமர்ந்தான். இராணி அவனைப் பார்த்துத், "தம்பி! நீ எனக்குக் கடைக்குட்டித் தம்பி யாகிறாய். அதனால் எனக்கு உன்மேலே அளவுகடந்த பிரியமுண்டு. அச் செய்தியை இப்பொழுது சொல்லிப் பயன் என்ன? உன்னுடைய அத்தான் பார்ப்பானுடைய பேச்சைக் கேட்பவராக இருக்கிறார். நான் என்ன செய்வது? இன்றைக்கு உனக்கு அமைச்சு வேலை கிடைக்கும்படியாகச் செய்கிறேன். நீ சிறிதும் கவலைப்படாதே," என்று கூறினாள்.

பிறகு இராணி தன்மீதிருந்த நகைகளை யெல்லாம் எடுத்து மூலைக்கொன்றாய் எறிந்துவிட்டு ஓலமிட்டு அழத் தொடங்கினாள். அழுகையைக் கேட்ட பாட்சா 'அந்தோ! என்னுடைய உயிர்த்துணைவிக்கு என்னவோ தீங்கு நேர்ந்துவிட்டது. அது யாரால் உண்டாயிற்றோ தெரிய வில்லை' என்று எண்ணமிட்டுக்கொண்டு பள்ளியறைக்குச் சென்றான். மனைவியின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, 'காதலி காதலி' என்று அழைக்க எண்ணியவன் அவ் வாறு அழைப்பதற்கு வராமல் 'காலதி காலதி' என்று அழைத்தான். அவளுடைய கண்ணீரைத் துடைத்து அழுகையை மாற்றிக்கொண்டிருந்தான். அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் எல்லோரும் அங்கேவந்து ஒரே கூட்டமாகக் கூடினார்கள். இராணி அழுவதை நிறுத்திவிட்டுப் பாட்சாவைப் பார்த்து, "ஆருயிர்த் தலைவா! என்னை அழவேண்டாம் என்று சொல்வதிற் பயனென்னை? நான் நாள்தோறும் அழுதுகொண்டிருக்கிறேன். என் தம்பிகள் யாருக்கும் என் இந் நாட்டில் வேலையகப்படுவதில்லை? பார்ப்பார்கள் என்றால் உங்களுக்குப் பலே அச்சாவாக இருக்கின்றது. இது மிகுந்த தீவினையன்றோ? இப் பொழுது என்னுடைய கடைக்குட்டித்தம்பி இங்கு வந்து ஐந்தாறு திங்கள்கள் ஆகின்றன. அவன் சிறந்த அறிவாளி. அரசியல்காரியங்கள் முழுமையையும் நன்றாக நடத்தக்கூடியவன். ஆகவே அவனுக்கு அமைச்சு வேலை கொடுக்கவேண்டும்; இன்றேல் நான் உயிரைப் போக்கிக் கொள்வேன்," என்று சினந்து உரைத்தாள்.

பாட்சா, "அவ்வாறே செய்கிறேன்" என்று கூறி விட்டு அத்தாணிமண்டபத்திற்குச் சென்றான். மகமதுல்லா கானுக்கு அமைச்சு வேலை அளித்திருப்பதாக அறிக்கை வெளியிட்டான். பிறகு பேரறிவுச்செல்வனை அழைத்து, "நீ இன்றுமுதல் வீட்டிலேயே இரு. உன் ஊதியத்தை உன் வீட்டிற்கு அனுப்பிவிடுகிறேன்," என்று சொல்லி யனுப்பினான். பேரறிவுச்செல்வன் பாட்சாவின் கருத்தை அறிந்துகொண்டு களிப்போடு சென்றான்.

புதிய அமைச்சன் வேலைக்கு வந்து சிலநாட்கள் ஆயின. பாட்சா அவனைப் பார்த்து, "நீ இந்த நாட்டிற்கு அமைச்சனாக வந்திருக்கிறாய்; உனக்குள்ள ஆற்றலை நான் புகழ்ந்தாலும் புகழாவிட்டாலும் பேரறிவுச் செல்வனும் அவனைச் சேர்ந்தவர்களும் மற்றவர்களும் புகழவேண்டும். ஆகையால் நீ இந்த மார்பளவு கயிற்றை எடுத்துக் கொண்டுபோய் ஏழு நாட்களுக்குள் பத்து லட்சம் ரூபாயைப் பொருளறைக்குக் கொண்டுவந்து சேர்க்கவேண்டும்," என்று சொன்னான்.

மகமதுல்லாகான் அந்தக் கயிற்றை எடுத்துக் கொண்டு மிகுந்த எரிச்சலுடன் தன் தமக்கையிடஞ் சென்றான். "அக்கா! பார்த்தாயா? இன்று என்னிடம் மச்சான் இக்கயிற்றைக் கொடுத்து ஏழு நாட்களுக்குள் பத்து லட்சம் ரூபாய்களைப் பொருளறையிற் சேர்க்க வேண்டுமென்று சொல்லுகிறான். இவன் என்னுடைய மச்சானாக இருந்தபடியால் பிழைத்தான். இல்லாவிடின் இவனை அங்கேயே கொன்றிருப்பேன். ஏழைகள் வீட்டிற் பிறந்தவர்களென்று என் அண்ணன் தம்பிகளை இவ்வாறு இழிவுபடுத்துகிறான். இனிமேல் இவனுடைய முகத்தில் விழிக்கிறதில்லை," என்று சொல்விட்டு வெளியே போய் விட்டான்.

அன்றிரவு இராணி பாட்சாவைப் பார்த்து, "நீங்கள் ஏதேனும் சாக்குப்போக்குச் சொல்லி என் தம்பிகளுக்குக் கொடுக்கிற வேலையை உடனுக்குடன் பறித்துக்கொண்டிருக்கிறீர்களல்லவா?" என்று கேட்டாள். புதிய அமைச்சன் பத்துநாள் வரையில் பொருளறையில் பத்து லட்சம் ரூபாயையும் சேர்க்கவில்லை. பாட்சா அமைச்சனைக் கூப்பிட்டு, "நீ பத்து நாளாகியும் ஏன் இன்னும் பணங் கொண்டுவந்து சேர்க்கவில்லை?" என்று கேட்டான். மகமதுல்லாகான் எத்தகைய மறுமொழியுங் கூறாமல் மவுனஞ்சாதித்தான்.

பிறகு பாட்சா பேரறிவுச்செல்வனை அழைத்தான். அவனிடம் அந்த மார்பளவு கயிற்றைக்கொடுத்து "ஒரு

வாரத்திற்குள் நீ இந்தக் கயிற்றைக்கொண்டு பத்து லட்சம் ரூபாய்களைத் திரட்டிப் பொருளறையிற் சேர்க்கவேண்டும்,'' என்று சொன்னான். பேரறிவுச் செல்வன் "அவ்வாறே சேர்க்கிறேன்," என்று சொல்லிக் கயிற்றை வாங்கிக் கொண்டு சென்றான். தலையாரிகளைக் கூப்பிட்டு இக் கயிற்றைக் காட்டிலும் நீளமான இடத்தில் யாரும் வீடு கட்டிக்கொண்டு குடியிருக்கக்கூடாது. அப்படிக் கட்டிக் கொண்டிருப்பவர்கள் உடனே இடித்துவிட வேண்டியது. இடிக்காவிட்டால் அவர்களுடைய செல்வத்தில் பாதிப் பங்கு அபராதமாக விதிக்கப்படும் என்று பறைசாற்று வித்தான். இதனைக்கேட்ட மக்கள் தத்தளித்துத் தடுமாறினார்கள். அமைச்சனுடைய கால்களிலே வந்து விழுந்து வணங்கினார்கள். "எங்களைக் காப்பாற்ற வேண்டும்,'' என்று கெஞ்சினார்கள்.

அமைச்சன் அவர்களைப் பார்த்து, "அவரவர்களுடைய ஆற்றலுக்குத் தக்கவாறு பொருள்கொடுத்து இத்தொல்லையில் இருந்து விடுபடலாம்,'' என்று கூறினான். எல்லோரும் மிகுந்த களிப்படைந்து பொருள் கொண்டு வந்து கொடுத்தார்கள். அன்று மாலைப் பொழுதுக்குள்ளேயே பத்து லட்சம் ரூபாய்கட்கு அதிகமாகப் பொருள் சேர்ந்துவிட்டது. அமைச்சன் பத்து லட்ச ரூபாய்க்கு அதிகமாகப் பொருளறையிற் சேர்த்துவிட்டு அச் செய்தியைப் பாட்சாவுக்குத் தெரியப்படுத்தினான். அப்பொழுதே பாட்சா அமைச்சு வேலையைப் பேரறிவுச் செல்வனுக்குக் கொடுத்தான். இராணியும் மற்றைய முகமதியர்களும், "பார்ப்பான் பலே அச்சா ஹை'' என்று சொல்லிப் புகழ்ந்து கொண்டாடினார்கள். மகமதுல்லாகான் யாரிடத்திலும் சொல்லாமற் புறப்பட்டுத் தன்னூர்போய்ச் சேர்ந்தான்.

௧௧அ. மூடன் செய்யவேண்டியது

டில்லி பாட்சாவின் குரு மெக்காவில் இருந்து டில்லிக்கு வந்தார். அவரோடு அவருடைய மாணவர்களும் வந்தார்கள். பாட்சா குருவையும் அவரோடு கூடவந்தவர்களையும் வரவேற்றுப் போற்றினான். அவர்கள் புறப்பட்டுப் போகும்போது விலையுயர்ந்த பொருள்களை நன்கொடையாக வழங்கி யனுப்பினான்.

பிறகு அமைச்சன் பேரறிவுச் செல்வனைப் பார்த்து, "அமைச்சனே! எனக்குக் குரு இருப்பதைப்போல உனக்கு இருக்கிறாரா?" என்று கேட்டான். அதற்கு அமைச்சன், "அரசே! எனக்குக் குருமார் பலபேர் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பொருள் முதலியவற்றில் விருப்பம் இல்லாமையால் என்னிடம் வருவதில்லை. பொருள் முதலியவற்றில் விருப்பம் இருந்தால்தானே பொருள் பெறலாம் என்று வருவார்கள்," என்று சொன்னான். பாட்சா, "உன்னுடைய குருமார்களில் யாராவது ஒருவரை எனக்குக் காட்டவேண்டும்; எப்பொழுது காட்டுவாய்?" என்று கேட்டான். பேரறிவுச் செல்வன் பாட்சாவின் மொழிகளுக்குக் குறுக்குச் சொல்லலாகாது என்று எண்ணினான். பாட்சாவைப் பார்த்து, "எங்கள் குருமார்களில் ஒருவர் இவ்வூரில் இருந்தார். இப்பொழுது இருக்கிறாரோ இல்லையோ தெரியவில்லை. இருந்தால் நாளைக்கே காண்பிக்கிறேன். இல்லாவிட்டால் மறுமுறை வரும்போது காண்பிக்கிறேன்," என்று சொன்னான்.

பிறகு பேரறிவுச் செல்வன் இளமையுள்ளவனும் அழகுள்ளவனும் ஆன ஓர் இடையனைத் தேடிப்பிடித்து, "அடே! நான் உனக்கு நூறு மொகராக்கள் கொடுக்கிறேன். நீ நான் சொன்னபடி கேட்கவேண்டும். அவ்வாறு கேட்டு நடந்துகொள்ளாவிட்டால் உன்னுடைய தலையை வாங்கிவிடுவேன்," என்று சொன்னான். இடையன் சொன்னபடியே கேட்பதாக ஒப்புக்கொண்டான். பிறகு

அவனைப்பார்த்து, "நீ நீராடிவிட்டுத் திருநீறு சிவக்கண் மணிமாலை முதலியவைகளை அணிந்துகொண்டு முக்காடு போட்டுக்கொள்ள வேண்டும். பிறகு இவ்வூரில் உள்ள சங்கராச்சாரியார் மடத்தில் உட்கார்ந்து செபமாலையை உருட்டிக்கொண்டிருக்க வேண்டும். யார் வந்து உன்னோடு பேசினாலும் எத்தகைய மறுமொழியும் பேசக்கூடாது. நானே வந்து பேசினாலுங்கூட வாயை அசைக்கக் கூடாது," என்று சொன்னான். இடையன் அவ்வாறே உட்கார்ந்து செபமாலையைப் புரட்டிக்கொண்டிருப்பதாக ஒப்புக்கொண்டான். அவனை அவ்வாறே இருக்கச்செய்துவிட்டுப் பாட்சாவிடத்திற்குப் பேரறிவுச்செல்வன் போய், "என்னுடைய குரு இப்பொழுது இவ்வூரில் இருக்கிறார்; பார்ப்பதற்கு வரலாம்," என்று சொல்லிக் கூப்பிட்டான். பாட்சா விலை உயர்ந்த காணிக்கைப் பொருள்கள் பலவற்றை எடுத்துக்கொண்டு உறுநிச் சுற்றத்தினர் புடைசூழச் சங்கராச்சாரியர் மடத்திற்குச் சென்றான். குருவின் முன் காணிக்கைகளை வைத்து வணங்கினான். "பெரியீர்! இவ் வூருக்கு வந்து எத்தனை நாட்கள் ஆயின? எதிர்காலத்தின் பலாபலன்கள் எவ்வாறிருக்குமோ? திருவாய் மலர்ந்தருள வேண்டும்," என்று சொல்லி வேண்டிக்கொண்டான். குரு வேடக்காரன் உதட்டை யசைக்காமலும் கண்ணைத் திறந்து பாராமலும் செபமாலையைப் புரட்டிக்கொண்டேயிருந்தான். குரு பேசாமல் இருக்கவே பாட்சா என்ன செய்வதென்று தெரியாமல் நெடுநேரம் நின்று பின் திரும்பித் தன்னுடைய இருப்பிடத்திற்குப் போய்ச் சேர்ந்தான்.

பிறகு பேரறிவுச் செல்வன் பாட்சாவைப்போய்ப் பார்த்தான். பாட்சா அமைச்சனைப் பார்த்து, "ஓ அமைச்ச! ஒருவன் மூடனாக இருந்தால் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான். இக்கேள்வி குருவின் பொருட்டு வந்ததென்று பேரறிவுச்செல்வன் அறிந்து கொண்டான். உடனே பாட்சாவைப் பார்த்து, "மௌனஞ் சாதித்துக்கொண்டிருப்பதைத் தவிர வேறொன்றுஞ் செய்யவேண்டியதில்லை," யென்றான்.

பாட்சா, நான் குருவைப்பற்றிக் கேள்வி கேட்கிறேன் என்று உணர்ந்துகொண்டு அமைச்சன் இவ்வாறு மறுமொழி கூறினான் என்று அவனைப் பலவாறு புகழ்ந்து கொண்டாடினான்.

---

௩௩௧. குற்றவாளிக்குத் தண்டனை

அக்பர் பாட்சா பேரறிவுச் செல்வனுடைய பேச்சுகளைக் கேட்டுக்கொண்டு முகமதியர்களை மதிப்பதில்லையென்று முகமதியர்கள் அடிக்கடி இராணியிடம் முறையிட்டுக்கொண்டு வந்தார்கள். இராணி தன்னால் முடிந்த அளவு முயற்சிசெய்து பார்த்தும் சரிப்படவில்லை. அவள் முகமதியர்களின்மேல் மிகுந்த அன்புவைத்துப் பேரறிவுச் செல்வன் செய்த உதவியையும் தான் சொன்ன பேச்சையும் மறந்துவிட்டாள். அவள் ஒருநாள் பாட்சாவைப் பார்த்து, "என்னுடைய தம்பிகள அமைச்சு வேலைக்குத் தகுதியற்றவர்கள் என்று ஒதுக்கிவிட்டீர்கள். இனிமேல் நான் என்னுடைய தம்பிமாரைக் குறித்துத் தங்களிடம் உதவிமொழிகள் பேசுவதில்லை. ஆனால் இந்த ஊரிலே முகமதியர்களிற் சிறந்த அறிவாளிகள் இல்லாமற் போகவில்லை. உசேன்கான் சாயபு என்பவனை நீங்கள் நன்றாக அறிவீர்கள். அவன் சிறந்த அறிவாளி. அவன்மீது யாருங் குறைகூறியது கிடையாது. ஆகவே அவனுக்கு அமைச்சு வேலையைக் கொடுக்கவேண்டும்," என்று சொன்னாள்.

பாட்சா இராணியைப் பார்த்து, "நான் உன்னுடைய பேச்சை எப்பொழுதும் தட்டியது இல்லை. உன்னுடைய விருப்பப்படியே உன்னுடைய தம்பிமார்கட்கு அமைச்சு வேலையைக் கொடுத்தேன். அவர்களோ அறிவில்லாதபடியினால் அவ்வேலையை நன்றாகப் பார்க்காமல் போக்கடித்துக்கொண்டார்கள். அதற்கு நான் என்ன செய்வது? சிறந்த வேலையை அறிவாளிகளுக்குத்தான் கொடுக்கவேண்டுமென்பது உனக்குத் தெரியாததன்று. நீ கூறிய

உசேன்கான் சாயபுவின் அறிவுத்திறமையை உனக்கு முன்னாலேயே ஆராய்ந்து காட்டுகிறேன். அவன் அமைச்சு வேலை பார்ப்பதற்குத் தகுதிவாய்ந்தவன் என்றால் வேலை கொடுக்கிறேன்,'' என்று கூறிவிட்டு எழுந்து சென்றான்.

இவ்வுரையாடல் நடந்த இரண்டு மூன்று நாட்களுக்கு அப்புறம் பாட்சா அந்தப்புரத்திற்குப் போய்த் தன்னுடைய குழந்தையோடு விளையாடிக்கொண்டிருந்தான். அப்போது குழந்தை பாட்சாவினுடைய மார்பிலே உதைத்து எச்சிலையும் துப்பிவிட்டு நகைத்தது. இதனை இராணியும் பார்த்துக்கொண்டிருந்தாள்.

மறுநாள் பாட்சா கச்சேரிக்கு வந்தான். இராணியை மறைவாக இருந்து பார்த்துக்கொண்டிருக்குமாறு திட்டஞ் செய்தான். உசேன்கான் சாயபுவையும் அழைத்து அவையில் இருக்கச்செய்தான். அத்தாணியில் இருக்கவேண்டிய பிற பெரியோர்களும் காசிகளும் இருந்தார்கள். பாட்சா எல்லோரையும பார்த்து, ''நேற்றிரவு ஒரு பையல் என்னை மார்பிலே உதைத்ததன்றி முகத்திலே எச்சிலையுந் துப்பினான்; அவனை என்ன செய்யலாம்,'' என்று கேட்டான். அவையில் இருந்தவர்களுள் சிலர் அவனைத் தண்டிக்க வேண்டும என்றார்கள். சிலர் அபராதம் போடவேண்டும் என்றார்கள். சிலர் நாட்டைவிட்டுத் துரத்தவேண்டும் என்றார்கள். பிறகு பாட்சா உசேன்கான் சாயபுவைப் பார்த்துக் கேட்டான். அதற்கு அவன் தனக்கு அமைச்சு வேலை கிடைக்கவேண்டும் என்னும் எண்ணத்தை உள்ளத்தில் வைத்துக்கொண்டு, ''அந்தப் பையலுடைய காலை உடனே துண்டித்துவிடவேண்டும்,' என்று சொல்லி மிகுந்த ஆர்ப்பாட்டஞ் செய்தான்.

சிறிதுநேரங் கழித்துப் பேரறிவுச் செல்வன் அவைக்கு வந்தான். பாட்சா அவனிடமும் இச் செய்தியைக் கூறி அப் பையலை என்ன செய்யலாம் என்று கேட்டான். 'பாட்சாவின் மார்பில் உதைத்து எச்சிலையுந் துப்புவதற்கு யாருந் துணியமாட்டார்கள். இவ்வாறு செய்தது பாட்சாவின்

குழந்தையாகத்தான் இருக்கவேண்டும்' என்று முடிவு செய்து பாட்சாவைப் பார்த்து, "அப் பையல் தங்களை உதைத்து எச்சிலைத் துப்பியது அந்தப்புரத்திலா?" என்று கேட்டான். பாட்சா, "ஆமாம்" என்று சொன்னான்.

உடனே பேரறிவுச் செல்வன் பாட்சாவைப் பார்த்து, "உங்களை உதைத்த கால்களுக்குப் பொற் சதங்கைகள் செய்து போடவேண்டும். உங்கள்மீது எச்சிலைத் துப்பிய வாயை முத்தமிட்டுக் கொள்ளவேண்டும்," என்று சொன்னான். பேரறிவுச் செல்வனுடைய அறிவுத் திறமையைப் பாட்சா வியந்து அவனுக்கு நன்கொடைகள் வழங்கிப் பெருமைப்படுத்தினான். இராணி தன்னால் புகழ்ந்தோதப் பெற்ற உசேன்கான் சாயபு அறிவற்றவன் என்றுணர்ந்து மிகுந்த நாணங்கொண்டாள். காசிகளைப் பார்த்து, "இனிமேல் அந்தப் பார்ப்பன அமைச்சனைப்பற்றி என்னிடம் எத்தகைய குறைகளையும் கூறுதீர்கள். அவனுக்குள்ள அறிவு நம்மவரில் யாருக்குங் கிடையாது. அவன் அமைச்சனாக இருப்பது தகுதியானதுதான்," என்று சொல்லிவிட்டாள்.

கஉ०. அறிவுக்கூர்மை ஆராய்ச்சி

டில்லியில் அமைச்சன் பேரறிவுச் செல்வனால் தங்களுக்கு இழிவு உண்டாவதைப் போக்கிக்கொள்வதற்குக் காசிகள் அனைவரும் எண்ணினார்கள். அவர்களெல்லோரும் ஒன்று சேர்ந்து காபூல்நாட்டிற்குச் சென்றார்கள். காபூல்பாட்சாவைப் பார்த்து, "இதுவரையிலும் இராணி எங்களிடம் சிறிது அன்புள்ளவளா யிருந்தாள். இப்பொழுது அவளும் பேரறிவுச் செல்வனே சிறந்த அறிவாளியென்று புகழத் தொடங்கிவிட்டாள். ஆகவே டில்லியில் பார்ப்பானுக்கெதிரில் எங்களுக்கு மதிப்புண்டாகுமாறு செய்யவேண்டும்," என்று சொல்லி வேண்டிக்கொண்டார்கள்.

அப்பொழுது காபூல்பாட்சா முன்னரே பானை நிறைய வேடிக்கையை அனுப்பியவனிடத்தில் மறுபடியும் அறிவுத் திறமை ஆராய்ச்சி செய்வது தக்கதன்று என்று எண்ணினான். இரண்டு மூன்று நாள் பொறுங்கள் என்று காசிகளுக்கு ஒப்புரை கூறினான். தன்னுடைய அமைச்சனை அழைத்து, "ஏதேனுஞ் சூழ்ச்சிசெய்து பேரறிவுச் செல்வனை வெற்றிகொள்ளவேண்டும்," என்று சொன்னான், "ஏதேனும் சூழ்ச்சியை ஆராய்ந்து சொல்லுகிறேன்," என்று அமைச்சன் கூறினான். இரண்டு மூன்று நாட்கள் இதைக்குறித்து ஆழ்ந்து எண்ணமிட்டான்.

பிறகு அமைச்சன் பாட்சாவைப் பார்த்து, "பேரறிவுச் செல்வனுடைய அறிவுக் கூர்மையை ஆராய்வதற்கு எனக்கு ஒரு சூழ்ச்சி தோன்றியிருக்கிறது. எவ்வாறெனில் நீங்களும் அவையோர்களும் ஒரேவகையான இருக்கையில் ஒரேவகையான ஆடையணிகலன்களை யணிந்து உட்கார்ந்திருக்கையில் பேரறிவுச் செல்வனை யழைத்தால் அவன் பாட்சா யாரென்று தெரிந்துகொள்ளமுடியாமல் யாராவதொருவரிடம்போய் வணக்கஞ்செய்வான். அச் சமயத்தில் அவனைத் தோற்கடிக்கலாம்," என்று சொன்னான். இதனைக் கேட்டுக் காபூல்பாட்சா இது சரியான சூழ்ச்சியாகவே இருக்கிறதென்று எண்ணினான். அவ்வாறு பேரறிவுச் செல்வனை அழைப்பதற்கு அமைச்சனுக்குக் கட்டளையிட்டான். அமைச்சன் டில்லி பாட்சாவுக்கு, "தங்களுடைய அமைச்சரின் அறிவுத் திறமையை ஆராய்ந்து பார்ப்பதற்கு எண்ணியிருக்கிறோம். அவரை அனுப்பிவைக்கவேண்டும்," என்று செய்தி அனுப்பினான். அதை டில்லி பாட்சா பார்த்துவிட்டுத் தன்னுடைய அமைச்சனாகிய பேரறிவுச் செல்வனிடங்கொடுத்தான். அமைச்சன் 'சரிதான்' என்று ஒப்புக்கொண்டான். டில்லியில் உள்ள சிறந்த பொருள்களைக் காபூல் பாட்சாவுக்குக் காணிக்கையாக அளிப்பதற்கு எடுத்துக்கொண்டு காபூலை அடைந்தான். தன்னுடைய வரவைத் தெரியப் படுத்தினான். காபூல் அமைச்சன் கூறியிருந்தபடியே

பாட்சா முதலானவர்கள் ஒரேவகையான ஆடை அணிகலன்கள் அணிந்து ஒரேவகையான இருக்கையில் இருந்து கொண்டு பேரறிவுச் செல்வனை அவைக்கு வருமாறு அழைத்தார்கள். பேரறிவுச் செல்வன் கொலுக்கூடத்திற்குப் போனபோது பாட்சா அவையோர் முதலிய எல்லோரும் ஒரேமாதிரியான இருக்கைகளில் அமர்ந்திருத்தலையும் பாட்சாவினுடைய அரியணை தனியாகத் துண்டுபடுத்தி அறியமுடியாமல் இருத்தலையும் பார்த்தான். இது தன்னுடைய அறிவுத் திறமையை ஆராய்ந்துபார்க்கும் பொருட்டுச் செய்யப்பட்ட சூழ்ச்சியென்று உணர்ந்துகொண்டான். அவையைக் கூர்ந்துநோக்கியபோது எல்லோருடைய பார்வையும் அவையின் நடுவில் இருந்த ஒரு பேர்வழிமீது படிந்திருத்தலைக் கண்டான். அந்தப் பேர்வழிதான் பாட்சாவாக இருக்கவேண்டுமென்று முடிவு செய்தான். காணிக்கைப் பொருள்களை அவனுக்கு முன்பு வைத்து வணக்கஞ்செய்து நின்றான். காபூல் பாட்சா பேரறிவுச் செல்வனுடைய செய்கையைப் பார்த்து மிகுந்த களிப்படைந்தான். அவனைக் கட்டித்தழுவிக்கொண்டான். "நான்தான் பாட்சாவென்று நீ எவ்வாறு கண்டுபிடித்தாய்?" என்று கேட்டான். பேரறிவுச் செல்வன் பாட்சாவைப் பார்த்து, "மன்னவா! தங்களைக் கண்டுபிடிப்பது எனக்கு ஒரு பெரிய காரியமாகவில்லை. எல்லோருடைய பார்வைகளும் உங்கள்மீதே படிந்தபடியால் நீங்கள்தான் பாட்சாவென்று உணர்ந்துகொண்டேன்," என்று சொன்னான். காபூல் பாட்சா பேரறிவுச் செல்வனுக்குச் சிறப்பான நன்கொடைகள் வழங்கி டில்லிக்கு அனுப்பி வைத்தான். டில்லியில் இருந்து வந்திருந்த காசிகள் மிகுந்த நாணமடைந்து சொல்லாமலே ஓடிப்போனார்கள். காபூல் அமைச்சன் தன்னுடைய சூழ்ச்சி இப்படி வீழ்ச்சி பெற்றதே என்று இரங்கினான்.

௧௨௧. பழக்கவாசனை

ஒருநாள் டில்லி பாட்சாவும் பேரறிவுச் செல்வனும் உரையாடிக்கொண்டிருந்தார்கள். பேரறிவுச் செல்வன் டில்லி பாட்சாவைப் பார்த்துப் "பழக்கவாசனையே எல்லாவற்றிற்குங் காரணம்" என்று சொன்னான். பாட்சா மந்திரியைப் பார்த்து, "எல்லாக் குணங்களும் பிறப்புடனே உண்டாகின்றன. நீ பழக்கவாசனை என்று சொல்லுகிறாயே, எவ்வாறு பொருந்தும்?" என்று கேட்டான்.

அதற்கு அமைச்சன், "பிறவியோடு சில குணங்கள் உண்டானாலும், பழக்கவாசனையினாலேதான் எல்லாக் குணங்களும் உறுதிபெறுகின்றன; நற்குணங்கள் பிறவியோடு உண்டானாலும் பழக்கத்தினாலேதான் சீர்பெறுகின்றன," என்று சொன்னான். பாட்சா இதனை ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று எண்ணினான்.

அமைச்சன் இரண்டு கிளிக்குஞ்சுகளை வரவழைத்தான். அவைகளைப் பாட்சாவின் முன்வைத்து, "அரசே! இக் கிளிக்குஞ்சுகளில் ஒன்றைத் தங்களுடைய மகள் வளர்க்கும்படியாகத் திட்டஞ்செய்யுங்கள். மற்றொன்றை உங்களுக்கு நாள்தோறும் ஊன்கொண்டு வந்துகொடுக்கும் கசாப்புக் கடைக்காரனை வளர்க்கச் செய்யுங்கள்," என்றான்.

கிளிகள் இரண்டும் அவ்வாறே வளர்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டன. ஒருநாள் பேரறிவுச் செல்வன் பாட்சாவோடு உரையாடிக்கொண்டிருந்தான். அப்பொழுது கிளிகள் இரண்டையுங் கொண்டுவரச் செய்தான். இரண்டு கிளிகளும் கூண்டுகளோடு கொண்டுவரப்பட்டன. இரண்டு கிளிகளையும் பாட்சா முன்வைத்து, வாழைப்பழம், மிட்டாய், கற்கண்டு, திராட்சை முதலியவைகளைக் கூண்டிலிருக்கும் உணவுக் கலங்களில் வைத்தான். பாட்சாவின் மகள் வளர்த்த கிளிமட்டும் அவைகளைத் தின்றது. கசாப்புக்காரன் வளர்த்த கிளி அவைகளை முகந்துகூடப் பார்க்கவில்லை.

பிறகு பாட்சா மகள் வளர்த்த கிளியைப் பேசச்செய்ய அது நல்ல மொழிகளைப் பேசிப் பாடியது. கசாப்புக்காரன் வளர்த்த கிளியோ, "வெட்டு, குத்து, தோல், மயிர், எலும்பு, தலை, கால்" என்று பேசியது.

அமைச்சன் பாட்சாவைப் பார்த்துப், "பழக்கவாசனை எப்படியிருக்கிறது பார்த்தீர்களா?" என்று கேட்டான். பாட்சா பழக்கவாசனையினாலேயே எல்லா இயல்புகளும் வளர்கின்றனவென்றும், பிறப்பினால் உண்டான சில குணங்கள்கூடப் பழக்கவாசனையால் மாறிப்போகின்றன என்றும் அறிந்துகொண்டு பேரறிவுச் செல்வனுக்குப் பலவகையான நன்கொடைகள் வழங்கினான்.

கஉஉ. வைகுண்டாச்சாரி

ஓர் எளிய அந்தணன்

சிறுகாவூர் என்னும் ஊரில் ஓர் அந்தணன் இருந்தான். அவன் வைணவன். மிக எளிய நிலையினனாகையால் உணவுக்கு வேறு வழியில்லாமல் நாள்தோறுங் காலையில் எழுந்து நீராடி மடியுடுத்திப் பன்னிருபட்டை நாமங்களைச் சார்த்திக்கொண்டு மிகவுந் தெய்வபக்தியுள்ளவனைப்போல் நடித்துக்கொண்டு வீடுவீடாகப் போய்ப் பிச்சையெடுப்பான். அவ்வூர் மிகச் சிறிய சிற்றூராகையாலும் ஊரார்கள் ஒன்றுந்தெரியாதவர்களாக இருந்தபடியாலும் இவ்வந்தணன் அவ்வூரார்களுக்கு ஆசாரியராக விளங்கினான். அவர்கட்குக் காலக்கணிதம் முதலியவைகளுஞ் சொல்லுவான். காலக்கணிதஞ் சொல்லும்பொழுது தீமையான செய்திகளை விலக்கிவிட்டு நன்மையான செய்திகளையே சொல்லிவந்தபடியால் இவனிடத்தில் அவ்வூர் மக்களுக்கு மிகுந்த பற்றுதல் உண்டாகியிருந்தது. அவன் என்ன சொன்னபோதிலும் ஊரார்கள் அதனை அப்படியே நம்பத் தொடங்கினார்கள்.

ஊர் ஒன்றுகூடுதல்

தான் என்ன சொன்னபோதிலும் ஊரார்கள் நம்பத் தக்க நிலையில் இருக்கிறார்கள் என்பதை வைணவ அந்தணன் அறிந்தான். 'காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவேண்டும். இச் சமயத்தை நழுவவிட்டால் வேறு சமயம் வாய்ப்பது அருமை' என்னும் முடிவுக்கு வந்தான். ஊரார்களை வஞ்சித்துப் பணம் பறிக்கவேண்டும் என்று முடிவு கட்டினான். ஒருநாட்காலையில் எழுந்து நீராடினான்; பன்னிரு நாமங்களைச் சார்த்திக்கொண்டு அவ்வூர் நாட்டாண்மைக்காரனிடஞ் சென்றான். அவனைப் பார்த்து, "ஐயா நாட்டாண்மைக்காரரே! நான் நேற்றிரவு ஒரு புதுமையான காட்சியைக் கண்டேன். அதனை இவ்வூரார்கள் எல்லாருடைய முன்னிலையிலும் வெளிப்படுத்த வேண்டும். ஆகவே அம்பலச் சாவடியில் இன்று காலை பத்துநாழிகைக்கு எல்லோரும் வந்துகூடவேண்டுமென்று பறையறையச் செய்யும்," என்று சொன்னான். நாட்டாண்மைக்காரன் வைணவ அந்தணனிடத்திலே பேரன்பு கொண்டவன். ஆகவே உடனே பறையறையச் செய்து ஊரார்கள் அனைவரும் அம்பலச் சாவடியில் வந்துகூடச் செய்தான். அவ்வாறே எல்லாரும் குறிப்பிட்ட நேரத்தில் அம்பலச் சாவடியில் வந்து கூடினார்கள் வைணவ அந்தணனுடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

கட்டுக்கதை

வைணவ அந்தணன் ஆடம்பரத்தோடு அம்பலச் சாவடிக்குவந்து அங்கே தனக்காகப் போடப்பட்டிருந்த இருக்கையில் உட்கார்ந்தான். எல்லோரும் இப் பெரியவர் என்ன சொல்லப்போகிறாரோ என்று ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். வைணவ அந்தணன் கூடியிருந்த மக்களைப் பார்த்து, "அன்புள்ள மக்களே! உங்களுக்கும் உங்கள் வழிமுறையாருக்கும் இனிமேல் நரகத்தைப் பற்றி அச்சம் சிறிதும் வேண்டியதில்லை. நீங்கள் என்னைப் போற்றிப் பாதுகாத்து வந்தபடியால் உங்களுக்கு நன்மையுண்டாகும்படி இதுவரையிலும் வைகுண்ட

நாதனைப் போற்றி வழிபட்டுக்கொண்டிருந்தேன். அவர் நேற்றிரவில் எனக்குக் காட்சி தந்தார். என்னை வைகுண்டத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் எனக்கு வைகுண்டாச்சாரி என்று பெயர்கொடுத்தார். மேலும் என்னைப் பார்த்து, 'நீ மிகவும் நல்லவன். உன்னால் சிறுகாவூரார் எல்லாரும் வைகுண்ட பதவியடைவதற்குத் தகுதியுடையவர்களானார்கள். அவ்வூரில் இறக்கிற ஒவ் வொருவரிடமும் இறந்தவுடன் உன்னுடைய பிழைப்புக்காக ஐவ்வைந்துபொன் பெற்றுக்கொண்டு ஒவ்வொரு சீட்டுக் கொடுத்தனுப்பு. நான் அவர்களுக்கு வைகுண்ட பதவி யைக் கொடுக்கிறேன்,' என்று கூறி என்னை மறுபடியும் இவ்விடத்திற்கு அனுப்பிவிட்டார். நான் கடவுளுடைய பெருமையையும் அருளையும் என்னவென்று சொல்லு வேன். வைகுண்டக் காட்சியை மனிதர்களால் வருணித்துச் சொல்லவுங்கூடுமோ? நீங்கள் நல்வினையாளர்களாகையால் உங்களுக்கு இத்தகைய பெருமையுண்டாயிற்று," என்று பலவாறு கூறினான். இடையிடையே அறவுரைகளையும் கலந்துபேசினான். அம் மக்களையும் பலவாறு புகழ்ந்தான்.

ஏமாந்த சோணகிரிகள்

கல்வியறிவற்ற அவ்வூர் மக்கள் யார் என்ன சொன்ன போதிலும் அப்படியே நம்பிவிடக் கூடியவர்களாக இருந் தனர். வைகுண்டாச்சாரியின் கட்டுக்கதையையும் நம்பி விட்டார்கள். அன்றுமுதல் வைகுண்டாச்சாரியைத் தெய்வமாக எண்ணிவிட்டார்கள். அவனுக்குவேண்டியவை களையெல்லாங்கொடுத்து ஆதரித்தார்கள். யாராவது இறந்துபோனால் ஐந்து பொன் எடுத்துக்கொண்டுபோய் வைகுண்டாச்சாரிக்குக் கொடுத்து அவனிடமிருந்து வைகுண்டத்திற்கு ஒரு சீட்டு வாங்கிப் பிணத்தின் கையில் கட்டிக்கொளுத்திவிடுவது வழக்கம்.

ஓர் எளிய மனிதன்

இவ்வாறு பல ஆண்டுகள் சென்றன. வைகுண்டாச் சாரி பெரும்பொருள்சேர்த்து மெத்தைவீடுங் கட்டிவிட்

டான். அவனுக்கு அகவை ஐம்பதுக்கு மேலாகிவிட்டது. இவ்வாறாக ஒருநாள் அவ்வூரில் ஓர் எளிய மனிதன் இறந்துவிட்டான். அவனிடத்தில் ஐந்து பொன்னுக்கு வழியில்லை. அவ்வூரார் பிறருக்கு உதவிசெய்யவேண்டும் என்னும் எண்ணம் உடையவர்களாதலால் எல்லோரும் வரிவைத்துக்கொடுத்து அவ்வெளிய மனிதனை வைகுண்டத்திற்கு அனுப்புகிறதென்று முடிவுசெய்தார்கள். வரி வைத்துப் பணம் தண்டினார்கள். அப்பொழுது அவ்வூர் அறச்சாலையில் வந்து தங்கியிருந்த ஒரு வணிகனையும் வரிகொடுக்கும்படி கேட்டார்கள். அவன், 'வரி என்னத்திற்கு?' என்று அவர்களைக் கேட்டான். ஊரார்கள் செய்தியைச் சொன்னார்கள். அவன் மிகுந்த வியப்படைந்து, நல்லதென்று உடன்பட்டு வரியைக் கொடுத்தான். அவர்களுடைய அறிவின்மையைக் குறித்து வருத்தமடைந்தான். வைகுண்டாச்சாரியின் தொழிலை நிறுத்தவேண்டுமென்று தனக்குள்ளே முடிவுசெய்தான். ஊரார்கள் பணத்தைக் கொண்டுபோய் வைகுண்டாச்சாரியிடங் கொடுத்துச் சிட்டுவாங்கிப் பிணத்தினுடைய கையிலே கட்டிக்கொளுத்திவிட்டார்கள்.

வணிகன் சூழ்ச்சி

வணிகன் தன்னுடைய முடிவை நிறைவேற்ற எண்ணினான். மறுநாள் அதிகாலையில் எழுந்து ஓர் ஓலையை எடுத்தான். அதில், "சிறுகாவூரில் இருக்கும் வைகுண்டாச்சாரிக்கு வைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் திருமாலாகிய நாம் விடுக்குந் திருமுகம் என்னவென்றால், நீர் ஏற்றத்தாழ்வைப் பாராமல் எல்லோருக்கும் வைகுண்ட பதவிக்குச் சிட்டுக்கொடுத்து அனுப்பிவிடுகிறீர். உம்முடைய அன்புக்காக நாம் எல்லோருக்கும் வைகுண்டத்தில் இடங்கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. இதனால் வைகுண்டத்தில் இடநெருக்கடி ஏற்பட்டிருப்பதுடன் நரகம் பெரும்பாலுங் காலியாகக் கிடக்கிறது. இச் செய்தியைப் பற்றியும் வேறு பல செய்திகளைப் பற்றியும் உம்மை நேரிற் கண்டு பேசவேண்டியதாக இருக்கிறது. நீர் இச்

சீட்டைப் பெற்றவுடனே புறப்பட்டு இவ்விடத்திற்கு வந்து விட்டுப்போகவேண்டியது. இப்படிக்கு வைகுண்டத்தில் வீற்றிருக்கும் வைகுண்டபதி," என்று எழுதினுன். அதனைச் சுருட்டி வளைத்து முத்திரையிட்டான். பூலோகத்தில் சிறுகாவூரில் இருக்கும் வைகுண்டாச்சாரிக்குக் கொடுப்பது. "அனுப்புதல் வைகுண்டம்" என்று எழுதினுன். மஞ்சள் குங்குமம் முதலியன பூசிச் சுடுகாட்டிற்குக் கொண்டுபோனுன். முதல்நாள் பிணத்தைச் சுட்டு எரித்து ஆறிப்போயிருந்த சாம்பலுக்குள் அவ் வோலையைப் புதைத்துவைத்துவிட்டான்.

ஓலை யகப்படுதல்

மறுநாட் காலையில் ஊரார்கள் எழுந்து முதல்நாள் சுட்ட பிணத்தின் எலும்பை எடுத்துப் பால் தெளிப்பதற்காக இடுகாட்டிற்குச் சென்றுர்கள். அவர்களோடு ஓலையெழுதிச் செருகிய வணிகனுஞ் சென்றுன். அங்கே மற்றவர்கள் பிணத்தின் எலும்பைப் பொறுக்குவதற்குச் சாம்பலைக் கிண்டினுர்கள். அப்பொழுது ஓலை அகப்பட்டது. அஃது என்னவென்று பார்த்தபோது வைகுண்டாச்சாரிக்கு முகவரி எழுதப்பட்டிருத்தலைக் கண்டார்கள்.

வைகுண்டாச்சாரிக்கு அழிவு

ஊரார்கள் ஓலையை எடுத்துக்கொண்டு வைகுண்டாச்சாரியின் வீட்டிற்கு ஓடினுர்கள். வைகுண்டாச்சாரியைப் பார்த்து, "உங்களுக்கு வைகுண்டத்தில் இருந்து சீட்டு வந்திருக்கிறது," என்று சொன்னுர்கள். வைகுண்டாச்சாரி ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கிறதென்று தனக்குள்ளே எண்ணினுன். "வைகுண்டத்தில் இருந்து எனக்கு இப்பொழுது சீட்டு வரவேண்டிய காரணமில்லையே," என்று சொன்னுன். ஊரார்கள், "உங்களுடைய சீட்டு அடிக்கடி வைகுண்டத்திற்குப் போய்க்கொண் டிருக்கும்போது அங்கிருந்து மட்டும் ஏன் வராது? நீர் உடனே ஓலையை உடைத்துப் படித்துப் பாரும்," என்று சொன்னுர்கள். வணிகன், "உமக்கு வெள்ளெழுத்தினுல் படிக்க முடியாவிட்டால்

இங்கே கொடும். நான் படித்துச் சொல்லுகிறேன்,'' என்று சொல்லி ஓலையைத் தானே வாங்கி உடைத்துப் படிக்கத் தொடங்கினான். எல்லோருங் கேட்டார்கள். பிறகு வைகுண்டாச்சாரியைப் பார்த்து, "ஐயா நல்வினையாளரே! நீர் மிகுந்த பெருமையுடையவராகையால்தான் உமக்கு வைகுண்டத்தில் இருந்து சீட்டு வந்திருக்கிறது. உடனே நீர் புறப்பட்டுப்போய் என்ன செய்தி என்று தெரிந்து கொண்டு வரவேண்டும். இல்லாவிட்டால் வைகுண்ட பதிக்குச் சினம் உண்டாகிவிடும். நீர் கொடுக்கிற சீட்டை அவர் ஒரு பொருட்படுத்தாமல் எங்களையெல்லாம் நரகத்தில் தள்ளிவிடுவார். காலந்தாழ்த்தாமல் உடனே புறப்படும்,'' என்று சொல்லி விரைவுபடுத்தி ஆச்சாரியைப் பிடித்து இழுத்துக்கொண்டுபோய்ச் சுடுகாட்டில் வைத்துக் கொளுத்திவிட்டார்கள். வைகுண்டாச்சாரி, யானை தன்னுடைய தலையிலே தானே மண்ணைவாரிப் போட்டுக் கொண்டதைப்போலத் தன்னுடைய சூழ்ச்சியினால் தானே மாண்டொழிந்தான். இந்த வேலை செய்த வணிகன் அந்த வைகுண்டாச்சாரி ஒரு மோசடிக்காரன் என்று ஊரார்களுக்கெல்லாம் உரைத்து அவர்களுக்கு நல்லறிவு புகட்டிவிட்டுத் தன்னுடைய ஊருக்குப் போய்ச் சேர்ந்தான். தம்முடைய நன்மையை நாடிப் பிறரை வஞ்சித்து ஏமாற்றிக்கொண்டு திரிபவர்கள் இறுதியில் தங்களுக்குத் தாமே அழிவைத் தேடிக்கொள்ளுவார்கள் என்பது இக் கதையாற் பெறப்படுகின்றது.

௩௨௩. திருவரங்காச்சாரி

இறைவனிடத்தில் பகை

சோழவளநாட்டிலே திருக்குடந்தை என்னும் ஊரிலே திருவரங்காச்சாரி என்னும் பெயருடைய வைணவ அந்தணன் ஒருவன் இருந்தான். அவன் இளம் பருவத்திலேயே திருவாய்மொழி முதலிய வைணவ நூல்களை ஓதியுணர்ந்தான். வைணவ சமயத்திலே கடுமையான பற்று உண்டாகியது. வைணவ சமயந் தவிர மற்றைச் சமயங்களெல்லாம் பொய்யென்று இகழ்ந்துகொண்டு திரிந்தான். முதன்மையாகச் சைவசமயத்தையே அவன் அதிகமாகப் பகைத்தான். சிவனிடத்திலும் சிவனடியாரிடத்திலும் சைவசமயச் சின்னங்களிடத்திலும் அவனுக்குண்டாகிய வெறுப்பு இவ்வளவு அவ்வளவு என்று இயம்பமுடியாது. திருநீறு, சிவகண்மணி, வில்வம் முதலிய சைவச் சின்னங்களையணிந்த எவரையாகிலுங் கண்டால், "அரி அரி" என்று சொல்லிக் கண்ணை மூடிக்கொள்ளுவான். உடனே போய் நீராடிப் பெருமாளை வணங்கி வருவான். அவனுடைய வீட்டிற்கு வருகிற எவரும் திருநீறு அணிந்துகொண்டு வரக்கூடாதென்றும், வருவதற்கு விரும்புகிறவர்கள் நாமஞ் சாத்திக்கொண்டுதான் வரவேண்டும் என்றும் சொல்லித் தெருத்திண்ணைமாடத்தில் ஒரு திருமண்கட்டியும் திருச்சூரணக் குடுக்கையும் வைத்தான். அவைகளையெடுத்து நாமஞ் சார்த்திக்கொண்டு போகிறவர்களோடு மட்டுந்தான் அவன் பேசுவான். அவனுடைய நாவிதன் வண்ணான் முதலானவர்களும் அவ்வாறுதான் செய்கிறது வழக்கம். இவ்வாறு அவன் வீரவைணவனாகிச் சிவனையுஞ் சிவனடியார்களையும் இடைவிடாது பகைத்துக் கொண்டு திரிந்தமையால் அவனுடைய திருவரங்காச்சாரி என்னும் பெயர் போய்ச் சிவத்துவேடாச்சாரி என்னும் பெயர் உண்டாகிவிட்டது.

சிவகன்மணி

திருவரங்காச்சாரி இவ்வாறு நாளுக்குநாள் சமயவெறி கொண்டவனாய்க் காலங்கழித்துவரும்போது ஒரு நாள்

மாலைநேரத்தில் காவிரியாற்றுக்குப் போய் மாலைக்கடன்களை முடிக்கத் தொடங்கினான். தண்ணீரை யள்ளி முகங் கழுவினான். தண்ணீரில் மிதந்துவந்த ஒரு சிவகண்மணி (உருத்திராக்கம்) கையில் அள்ளிய நீரில் இருந்தது. மாலைப்பொழுதாகையால் அதைப் பார்க்காமல் தன் முகத்தையும் கண்களையுங் கழுவினான். அப்பொழுது அச் சிவகண்மணி உறுத்திற்று. அஃதென்னவென்று ஆராய்ந்து பார்த்தபோது சிவகண்மணியாக இருக்கக் கண்டான். அவ்வளவில் அஞ்சித் திடுக்கிட்டான். "அரி அரி ஆதிமூலம்" என்று ஓலமிட்டான். "அந்தோ இத் தீவினையை எவ்வாறு போக்குவேன். தீண்டக்கூடாத கொட்டையைத் தீண்டிவிட்டதுமன்றி முகத்திலுங் கண்களிலும் ஒற்றிக்கொண்டேனே. எம்பெருமானுடைய திரு வடிகளையன்றி வேறெவைகளையும் நம் கண்களில் ஒற்றிக் கொள்ளலாமோ? என்று மிகுதியாகத் துக்கப்பட்டான். அன்றிரவெல்லாம் உணவும் உறக்கமும் இல்லாமல் ஏங்கிக் கொண்டிருந்தான். காலையில் எழுந்து தன்னுடைய குருவினிடஞ் சென்றான். அவருடைய திருவடிகளில் தன்னுடைய எண்வகை உறுப்புக்களும் படியும்படியாக விழ்ந்து வணங்கினான். பிறகு எழுந்துநின்று கண்களில் தாரைதாரையாகக் கண்ணீர் பெருக்கினான். கைகட்டி வாய்புதைத்துத் தனக்கு நேரிட்ட தீவினையை எடுத் துரைத்தான். அதைப் போக்கும்படியாக ஒரு வழி காட்ட வேண்டுமென்று வேண்டிக்கொண்டான்.

குருவின் அறிவுரை

மாணவனுடைய நிலைமையைக் கண்ட ஆசான் நம் முடைய மாணவன் தீண்டொணாக் கொட்டையைத் தீண்டி விட்டு வருத்தமுற்றிருக்கிறான் என்று அவனிடத்தில் இரக்கங்கொண்டான். அவனைப் பார்த்து, "மாணவனே! நீ அஞ்சுதல் வேண்டாம். நம் பெருமான் உனக்குத் திருவருள்புரிவார். ஆதிமூலம் என்றவுடனே வந்து யானையைக் காப்பாற்றிய கடவுள் இப்பொழுது உன்னைக் கைவிடுவாரா? உன்னுடைய தீவினையைப் போக்குவதற்கு

நான் ஒரு வழி சொல்லுகிறேன் கேள். திருப்பதிகட்குச் சென்று நம் பெருமானைப் போற்றி நம்முடைய முன்னோர்கள் தங்கட்குண்டான தீவினையைப் போக்கிக்கொண்டார்கள். ஆகவே நீ இன்றைக்கே புறப்பட்டு வழியில் உள்ள சிறந்த திருப்பதிகளில் பெருமானை வழிபட்டுக்கொண்டு இறுதியில் காசி நகரத்திற்குப் போய்ச்சேர். நரசிம்மாவதாரங் கொண்ட நம் பெருமானுடைய திருவடிகளில் இருந்து தோன்றிய கங்கையில் நீராடி உன்னுடைய தீவினையைப் போக்கிக்கொள்ளலாம்,'' என்று சொன்னான். சிவத்துவேடாச்சாரியாகிய திருவரங்காச்சாரி தன்னுடைய வீட்டிற்குச் சென்று பயண ஏற்பாடுகளைச் செய்து கொண்டு காசிமாநகரத்திற்குப் புறப்பட்டான்.

குயவன் வீடு

திருவரங்காச்சாரி தன்னுடைய குருவின் கட்டளைப்படி பல வைணவத் திருப்பதிகளினும் திருமால் வழிபாடு செய்துகொண்டு காசியை நோக்கிச்சென்றான். ஒருநாள் பொழுதுபோய் நான்கு நாழிகைக்கு மேலாகி விட்டது. முன்னிருட்டுக் காலமாகையால் வழி சரியாகத் தெரியவில்லை. அச் சமயத்தில் பெருங் காற்று வீசத்தொடங்கிய தன்றி மழையும் பெய்யத்தொடங்கிவிட்டது. திருவரங்காச்சாரி நன்றாக நனைந்துபோனான். அவனால் குளிர் பொறுக்கமுடியவில்லை. இராத் தங்குவதற்கு அண்மையில் ஏதாவது இடங் கிடைக்குமாவென்று பார்த்தான். சிறிது தொலையில் ஒரு வீடு காணப்பட்டது அங்குப் போய்ப் பார்த்தான். பக்கத்தில் ஒரு சட்டிபானைச் சூளை இருந்தமையால் அஃதொரு குயவன் வீடு என்று அறிந்து கொண்டான். குயவன் சற்சூத்திரனாகையால் பார்ப்பார வீடு இல்லாத ஊரில் அந்தணர்கள் குயவன் வீட்டில் தங்கலாம் என்று நூல் வழக்கு இருக்கிறது. முன் காலத்தில் பாண்டவர்கள் அந்தணக்கோலம் பூண்டு துரோபதையைத் திருமணஞ் செய்யச் சென்றபோது குயவன் வீட்டில் தங்கியிருந்தார்கள் என்று பாரதத்திலுங் கூறப்பட்டிருக்கிறது. பெருமாளுடைய திருவருளினால்

தான் நமக்கு இத் துன்பகாலத்தில் இத்தகைய நல்ல இட வசதி கிடைத்தது என்று தனக்குள்ளே எண்ண மிட்டுக்கொண்டு அக் குடிசைக்குச் சென்றான். அக் குடிசையின் ஒட்டுத்திண்ணையில் ஏறித் தன்னுடைய ஆடைகளைப் பிழிந்து காயவைக்க எண்ணினான். தற் செயலாக அங்கிருந்த மாடக்குழி ஒன்றில் கையை வைத்தான். அங்கு ஒரு கொட்டைப்பாக்கு இருந்தது. 'இதனை வாயில் போட்டுக் கடித்தால் குளிருக்கு நன்றாக இருக்கும்' என்று எண்ணி அதை எடுத்து வாயிற் போட்டுக் கடித்தான். தன் மூட்டையில் இருந்த வேறொரு வேட்டியை எடுத்துக் கட்டிக்கொண்டு ஈரவேட்டியைக் கொண்டுபோய்ச் சூளையின்மீதிருந்த பானைகள்மீது உலரப் போட்டான். பானைகள் சில உருண்டு "கடகட" என்னும் ஒலியோடு விழுந்து உடைந்தன. குயவனும் குயத்தியும் 'நம்முடைய சட்டிபானைகளை ஏதோ விலங்குகள் தள்ளி விட்டு உடைக்கின்றன' என்று எண்ணியவர்களாய்த் தடியைத் தூக்கிக்கொண்டு வெளியே ஓடிவந்தார்கள். அந்தணன் நிற்றலைக் கண்டார்கள். அவனைப் பார்த்து, "நீர் யார்?" என்று உசாவினார்கள். அந்தணன் தான் காசிக்குச் செல்லும் வழிப்போக்கனென்று அவர்களிடந் தெரியப்படுத்தினான். குயவனுங் குயத்தியும் நல்லவர்க ளாகையால் அந்தணனிடத்தில் அன்புகாட்டினார்கள். அவனை உள்ளே அழைத்துக்கொண்டு சென்றார்கள். அவனுக்கு ஆகவேண்டியவைகளைச் செய்து படுக்கைக்கு இடமும் ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். அந்தணன் அவர்களோடு சிறிதுநேரம் உரையாடிக்கொண்டிருந்தான்.

எச்சிற்பாக்கு

வைணவ அந்தணன் வாயிற் பாக்குக்கொட்டை யைப் போட்டுக் கடித்துக்கொண்டிருப்பதைக் குயவன் கண்டான். அவன் அந்தணனைப் பார்த்து, "ஐயா! தங்களுடைய வாயில் எதையோ கடித்துக்கொண்டிருக்கி றீர்களே அஃதென்ன?" என்று கேட்டான். அதற்கு வைணவ அந்தணன், "ஒன்றுமில்லை, தெருப்புறத்து

மாடக்குழியிலே ஒரு பாக்கு இருந்தது. அதை வாயிற் போட்டுக் கடித்தால் குளிர் மட்டம்ாக இருக்கும் என்று போட்டுக் கடித்துக்கொண்டிருக்கிறேன்,'' என்று சொன்னுன். அக்குயவன் வெள்ளை மனத்தினன். சூதுவாது தெரியாதவன். அவன் நகைத்துத் தன் மனைவியைப் பார்த்து, " அடி ராமி! நான் நண்பகலில் இந்தப் பாக்கை வாயிற்போட்டுக் கடித்துத் தூளாக்கிவிடுவதற்கு எவ்வளவோ முயற்சிசெய்து கடித்துப்பார்த்தேன். கடிபட வில்லை. பிறகு அதனைக் கக்கி மாடக்குழியில் போட்டு வைத்தேன். அதனை இப்பொழுது ஐயர் தம்முடைய வாயிலிட்டுக் கடித்துத் தூளாக்கிவிட்டார். என்னுடைய பல்லைக்காட்டிலும் ஐயருடைய பல் கெட்டியானதாகத் தெரிகிறது,'' என்று சொன்னுன்.

வைணவ வெறியன் வருத்தம்

குயவன் தன் மனைவிக்குக் கூறிய செய்தியைத் திருவரங்காச்சாரி கேட்டான். " ஐயையோ மோசம் போனேமே. சூத்திரர்களுக்கு உணவு போட்டபின் மிகுந்ததைப் பாக்கி என்று அந்தணர்கள் உண்ணமாட்டார்களே. அவ்வாருக நாம் சூத்திரனுடைய வாயில்பட்ட எச்சிலை அருந்தும்படியாக நேரிட்டுவிட்டதே. இவ்வாறும் ஊழ்வினை வந்து மூளுமா? ஆ! ஆ!! தெய்வமே! வைகுண்ட வாசா! கோவிந்தா!! நாராயணு!!! கோபாலா!!!'' என்று பலவாறு கூறிப் புலம்பி வருந்தினுன். அன்றிரவு முழுவதும் உறக்கம்பிடியாமல் பலவாறு வருந்திக்கொண்டிருந்தான். காலையில் எழுந்து அக்குயவனிடஞ் சொல்லாமலே அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டான். அண்மையில் ஒரு திருமால் பதி இருக்கிறதென்று கேள்விப்பட்டு அங்கே சென்ருன். அங்கிருந்த ஒரு வைணவ குருவைக் கண்டு தன்னுடைய செய்தியைச் சொன்னுன். தான் "சூத்திரனுடைய எச்சிலைத் தின்ற தீவினையைப் போக்குவதற்கு வழி யாது?'' என்று கேட்டான். அக்குரு, " நீ காசிக்குப்போய்க் கங்கையாடி வரும்போது, செகநாதத்திற்குப்போய்ப் பெருமாளை வணங்கிக்கொண்டுவா; எல்லாத்

தீவினைகளும் ஒழிந்துபோகு" மென்று சொன்னார். வைணவ அந்தணன் திருவரங்காச்சாரி மேலுந் தன்னுடைய காசிப்பயணத்தைத் தொடங்கினான்.

நாய்குடித்த எச்சிற்பால்

வெகுநாள் வழிநடந்து திருவரங்காச்சாரி காசியை நெருங்கினான். அப்பொழுது அவனுக்கு ஏகாதசி விரதம் நேரிட்டது. ஏகாதசியன்று ஒன்றுஞ் சாப்பிடாமல் விரதமிருந்து மறுநாட் காலையில் எழுந்து நீராடல் முதலியவைகளை முடித்துக்கொண்டு துவாதசியில் விரதம் முடிப்பதற்கு எண்ணினான். உணவுக்கு வழி பிறக்கவில்லை. பாலாகிலும் வாங்கிச் சாப்பிடலாம் என்று அங்கிருந்த ஓர் இடையன் வீட்டிற்குச் சென்றான். "பால் இருக்கிறதா?" என்று கேட்டான். இடையன், "இருக்கிறது" என்று சொல்லி இரண்டாழாக்குப் பால் கொடுத்தான். அதைக் குடித்தும் பசியடங்கவில்லை. "இன்னும் ஓர் ஆழாக்குப்பால் கொடு" என்று கேட்டான். "சரி" என்று இடையன் உள்ளேபோய்த் தன் மனைவியைப் பார்த்து, "ஐயர் இன்னுஞ் சிறிது பால் கேட்கிறார்; கொடு" என்று கேட்டான். அதற்கு அவனுடைய மனைவி, "இனிமேல் இல்லை" என்று சொன்னாள். இடையன் தன்னுடைய மனைவியைப் பார்த்து, "நான் ஒரு படிபால் கறந்துகொண்டு வந்தேனே! எங்கே?" என்று கேட்டான். அதற்கு அவள், "நான் பாலை வாங்கிக் கீழே வைத்துவிட்டு வேலையாக வெளியே போய்விட்டுத் திரும்பினேன். அப்பொழுது நம்முடைய கிடைகாக்கிற நாய் பாலை குடித்துக் கொண்டிருந்தது. நான் அதனை உடனே விரட்டி விட்டேன்; எஞ்சியிருந்தது அவ்வளவுதான்," என்று மறுமொழி கூறினாள். வைணவப் பார்ப்பான் அவர்கள் என்ன பேசிக்கொள்ளுகிறார்கள் என்று கேட்டுக்கொண்டிருந்தான். பேசிக்கொண்ட செய்தி இன்னதுதான் என்று அவனுக்குத் தெரிந்தது. அவன் உடனே, முன்னிலும் பன்மடங்கு மிகுந்த வருத்தமடைந்தான். 'அந்தோ! தெய்வசங்கற்பம் இவ்வாறும் இருந்ததே! 'பறையன்

பார்க்கச் சாப்பிட்டாலும் சாப்பிடலாம். நாய் பார்க்குமாறு சாப்பிடக்கூடாது என்று அறிவு நூல்கள் முறையிடு கின்றனவே. அவ்வாருக நாய் குடித்த மிச்ச எச்சிற் பாலையுங் குடிக்குமாறு நேர்ந்ததே' என்று வருந்திக் கொண்டு காசிமாநகரை அடைந்தான்.

தீவினை நீங்க வழி

காசி நகரில் இருந்த தன் ஆசாரியர் ஒருவரைக் கண்டு தன்னுடைய செய்திகளையெல்லாஞ் சொல்லித் தீவினையைப் போக்குவதற்கு வழிசொல்ல வேண்டும் என்று மன்ருடிக் கேட்டுக்கொண்டான். அவ்வாசிரியன் இவனிடத்திலே அன்புகூர்ந்து, "அன்பனே! நீ சிறிதும் அஞ்சுதல் வேண்டாம். இக் காசிமா நகரத்தை அடைந் தால் எவ்வகையான தீவினையும் கதிரவனைக்கண்ட பனி போல நீங்கிவிடும். நீ துன்பங்களையெல்லாம் பொறுத்துக் கொண்டு இக் காசிமாநகரத்திற்கு வந்து சேர்ந்துவிட்டாய். உனக்கு இனிமேல் எவ்வகையான குறைவும் ஏற்பட மாட்டாது. இக் காசியில் கங்கையாற்றில் மக்கள் நடமாடாத இடத்திற்குப்போய்த் தண்ணீருக்குள் மூழ்கிக் கொண்டு நான் சொல்லித்தருகிற அருமறையைச் சொல்லி முடித்தபின்பு தலையை வெளியே எடுத்தல்வேண்டும். இவ்வாறு நமது பெருமாள் தோற்றம் பத்தையுங் குறித் துப் பத்துத் தடவை மூழ்குவாயானல் உன் தீவினை அதோகதியாகிவிடு," மென்று சொல்லி அம் மந்திரத்தை யுஞ் சொல்லிக்கொடுத்தார்.

பறையனும் அவனுடைய குருவும்

காசிமா நகரில் இழிகுலத்தானுகிய ஒரு பறையன் இருந்தான். அவனுடைய தகப்பன் முதுமையடைந்து இறந்துபோனன். அப்பறையன் தன்னுடைய குருவாகிய ஒரு வள்ளுவனிடஞ் சென்று தகப்பன் இறந்துபோனன் என்றும் அவனுக்குச் செய்யவேண்டிய சடங்குகள் யாவை யென்றுங் கேட்டான். அதற்கு அவ் வள்ளுவன், "உன் தகப்பனை இன்றைக்குத் தீயிலிட்டுச் சுட்டு, நாளைக்குக்

காலையில் அவனுடைய எலும்பைப் பொறுக்கிக்கொண்டு போய்க் கங்கையாற்றிற் போடுவாயானால் உன்னுடைய தகப்பன் அந்தணரைப்போலக் கரையேறுவான். நீ பறையனாகையால் ஒருவரும் இல்லாத துறையைப் பார்த்துப் போ," என்று கூறினான். இதனைக்கேட்ட அப் பறையன் தன் தகப்பன், அந்தணரைப்போல் நற்கதி அடைவான் என்று வள்ளுவன் சொன்ன கருத்தை உணர்ந்துகொள்ளாமல் தன் தகப்பன் அந்தணர்களைப் போல உருவம்பெற்றுக் கரையில் ஏறி வருவான் என்று எண்ணிக்கொண்டான். உடனே போய்த் தன் தகப்பனைச் சுட்டெரித்தான். மறுநாட் காலையில் எழுந்து எலும்புகளை யெல்லாம் பொறுக்கி ஒரு மட்பாண்டத்தில் வைத்துக் கொண்டு மக்கள் நடமாட்டம் இல்லாத துறையை நாடிச் சென்றான்.

அந்தணனும் பறையனும்

அப்பொழுது அத் துறையிலேயே சிவத்துவேடாச் சாரியான திருவரங்காச்சாரியும் போய்த் தண்ணீரில் மூழ்கித் தன் குரு சொன்னபடியே மந்திரஞ் சொல்லிக் கொண்டிருந்தான். அம் மந்திரம் நீண்டதாகையால் ஒரு முறை மூழ்கி யெழுந்திருக்கக் கால் நாழிகை செல்லும். இப் பறையன் அங்கே போய்ச் சேர்ந்த அப்பொழுதுதான் திருவரங்காச்சாரி நீர்க்குள் முழுகி நரசிம்மாவதாரத்தைக் குறித்து மந்திரஞ் சொல்லிக்கொண்டிருந்தான். அச் செய்தியறியாத இப் பறையன் தன் கையில் இருந்த மட்பாண்டத்தைத் தண்ணீரிற் போட்டுவிட்டு நின்றான். சிறிது நேரத்திற்கெல்லாம் திருவரங்காச்சாரி தலையை வெளியே தூக்கவே, இப் பற்றயன் தன்னுடைய குருவான வள்ளுவன் சொன்னபடி தன் தகப்பன் அந்தணனாகித் தலையை வெளியே நீட்டினான் என்று மிகவுங் களிப் படைந்து அவ் வந்தணனுக்குப் பக்கத்திற் சென்று, "என்னைப் பெற்ற அப்பா வாடா," என்று சொல்லி அவனைக் கட்டிப்பிடித்து அணைத்து முத்தமிட்டான். அப்போது வைணவ அந்தணன் 'இஃதென்ன மோசமாக

இருக்கிறதே! கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதைப் போல, நாம் தீவினையைப் போக்க வந்தவிடத்தில் இச் சண்டாளன் நம்மைத் தன்னுடைய தகப்பன் என்று அழைக்கின்றானே' என்று கடுஞ்சினங் கொண்டான். அவனைப் பார்த்து, "அடா தீயவனே! தீண்டத்தகாத பையலே! உன்னுடைய நிழல்கூட அந்தணர்மீது படக் கூடாதே. அவ்வாறாக நீ என்னைத் தீண்டி 'அப்பா' என்று அழைக்கிறாயே; உனக்கென்ன அழிவுகாலம் நேரிட்டிருக்கிறதோ," என்று சொல்லிச் சினந்தான்.

பறையன் மறுமொழி

அப் பறையன், "என்னடா எங்க அப்பா! உன் மகனை நீ மறந்துவிட்டாயோ? இப்பொழுது நீ அந்தணனாகப் போனபடியினால் மேலே பறக்கப் பார்க்கிறாயோ? போன திங்களில் நீ நலத்துடன் இருந்தபோது நாமெல்லாம் மாடடித்து உண்ணவில்லையா? உனக்குப் பூணூல் ஒரு கேடா," என்று சொல்லி அந்த அந்தணனுடைய பூணூலை அறுத்தெறிந்தான். அவன் என்ன சொல்லியுங் கேளாமல், அவன் தப்பியோடவும் இடங்கொடாமல் கைப்பிடியாகப் பிடித்து வீட்டிற்குக் கொண்டுபோய்ச் சேர்த்தான். தன்னுடைய உறவினர்கட்கெல்லாஞ் சொல்லி எல்லாரையும் விருந்துக்கழைத்தான். மாட்டு ஊன் ஆட்டு ஊன் முதலியவைகளைக் கொண்டுவந்து விருந்தளித்தான். இவ் வந்தணன் சாப்பிடுவதற்கு மனங்கொள்ளாமல் வருத்தப்பட்டான். அப் பறையன் தான் ஊட்டிவிட்டால் தான் தன்னுடைய தகப்பன் சாப்பிடுவான் என்று சோற்றையுங் கறித்துண்டையும் எடுத்து அவனுடைய வாயிலே திணித்தான்.

அறிவு வந்தது

திருவரங்காச்சாரி, "ஐயோ பெருமாளே! உம்மை நம்பியிருந்த எனக்கு நேரிட்ட கதி இதுதானா? கிருட்டிணனாகி உலகில் தோன்றியபோது துரியோதனன் முதலானவர்களைக் கொன்று பாண்டவர்களைக் காப்பாற்றினீரே;

இப்பொழுது அடியேனைக் காப்பாற்றாமல் எங்குப்போய் விட்டீர்," என்று சொல்லி ஓலமிட்டான். அன்றிரவு சமயம் பார்த்துக்கொண்டிருந்து பறையனிடமிருந்து தப்பி யோடிப்போனான். அவனுக்கு நல்ல அறிவு வந்துவிட்டது. நான் சிவனடியார்களையும் சிவனையும் அளவுக்கு மீறிப் பகைத்தபடியினாலேயே இத்தகைய கட்டுக்கடங்காத தொல்லைகளெல்லாம் நேரிட்டன. இனி இத்தகைய சமயப் பகையைப் பாராட்டுவதில்லையென்று முடிவு செய்து கொண்டு ஊர்போய்ச் சேர்ந்தான். அறிவில்லாமல் சமயப் பகையை மேற்கொள்பவர்கள் இவ்வாறுதான் துன்புற்று வருந்துவார்கள். "அரியுஞ் சிவனும் ஒண்ணு; அறியா தவன் வாயிலே மண்ணு" என்று பழமொழியும் வழங்கு கின்றது.

கஉரு. கடவுளின் செயல்கள் நேர்மை யானவைகளே

ஓர் உயர்ந்த மலையில் துறவி ஒருவர் இலைக்குடில் அமைத்துத் தவஞ்செய்து கொண்டிருந்தார். அவர் இவ் வுலகத்தில் நடக்குங் காரியங்களைக் கவனித்துப் பார்த்தார். தீயவர்கள் தாங்கள் அடையவேண்டிய தண்டனையில் இருந்து விலகி விடுதலையும் நல்லவர்கள் தண்டனைபெற்று வருந்துவதையுங் கண்டார். அவருக்கு மிகுந்த திகைப்பு உண்டாகிவிட்டது. இவ்வுலகத்தை ஆளுகிற கடவுள் நேர்மையுள்ளவரானால் இத்தகைய மாறுபாடான காரியங்கள் உலகத்தில் ஏன் நடைபெறு கின்றன? என்று ஐயங்கொண்டு மனவருத்தமடைந் திருந்தார். தமக்குள்ள ஐயத்தையும் மனக்கலக்கத்தையும் போக்கவேண்டுமென்று கடவுளை வேண்டிக்கொண்டார்.

ஒருநாள் துறவி தம்முடைய இலைக்குடிலில் அமர்ந்து மலையடிவாரத்தில் உள்ள ஒரு சுனையைப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு மனிதன் தண்ணீர்த்

தாகங்கொண்டவனுய்க் குதிரையின்மீது ஏறி அச் சுனை யிடத்திற்கு வந்தான். குதிரையைவிட்டுக் கீழே இறங் கினுன். தன் தோளில் மாட்டியிருந்த பணப்பையைக் கழற்றிக் கரையிலே ஓரிடத்தில் வைத்தான். தான் தண்ணீர் குடித்துவிட்டுச் சிறிதுநேரம் படுத்துக் கிடந்தான். பிறகு எழுந்து பணப்பையை மறந்துவிட்டுக் குதிரையின்மீது ஏறிப் போய்விட்டான்.

குதிரைக்காரன் சென்ற சிறிது நேரத்திற்குப் பின் வேஞெரு வழிப்போக்கன் நீர்வேட்கை கொண்டவனுய் அந்த இடத்திற்கு வந்தான். பணப்பையைக் கண்டான்; தண்ணீரைக் குடித்துவிட்டுப் பணப்பையை எடுத்துக் கொண்டு விரைவாக அந்த இடத்தைவிட்டுப் போய் விட்டான்.

அதன் பிறகு சிறிது நேரத்தில் விறகு வெட்டி ஒருவன் அவ்விடத்திற்கு வந்தான். தண்ணீர் குடித்து விட்டுப் படுத்துக்கிடந்தான். இச் சமயத்தில் முன்பு பணப்பையை மறந்துவிட்டுப்போன குதிரைக்காரன் ஆத்திரத்தோடு அந்த இடத்திற்கு வந்தான். விறகு வெட்டியைப் பார்த்து, "அடே! நான் இவ்விடத்தில் மறந்து வைத்துவிட்டுப் போன பணப்பை எங்கே?" என்று கேட்டான். விறகுவெட்டி "நான் பார்க்கவில்லே," என்ருன். குதிரைக்காரன் மிகுந்த சினங்கொண்டு தன் னுடைய உடைவாளே உருவி விறகுவெட்டியை வெட்டிக் கொன்றுவிட்டு அவனுடைய விறகுக்கட்டு முதலியவை களே ஆராய்ந்துபார்த்தான். பணப்பை அகப்படவில்லே. அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டான்.

மலேமேல் அமர்ந்து இவைகளேயெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த துறவி பெருமூச்செறிந்தார். "ஆ தெய்வமே! ஒன்றுமறியாத எளியவன் ஒருவன் வீணுக உயிரைப் பறிகொடுத்தானே! இஃதென்ன கொடுமை! பணத்தை எடுத்துக்கொண்டு போனவன் வேஞெருவனுக இருக்க ஒன்றுமறியாதவன் உயிரைப் பறிகொடுப்பது என்ன நீதி!

இவைகளெல்லாம் குளறுபடையான காரியங்களாக இருக்கின்றனவே!" என்று சொல்லிப் புலம்பினர்.

இச்சமயத்தில் விண்ணில் இருந்து தெய்வவாக்குப் பிறந்து, "ஓ துறவி! இவைகளைப்பற்றி யெல்லாம் உனக்கென்ன கவலை! நீ உன்னுடைய காரியத்தைப் பார்த்துக் கொண்டிரு. இவ்வுலகத்தை ஆளுகைக்குரிய காரியங்கள் உன்னுடையன அல்லவே. எல்லா உலகங்களையும் படைத்து அளித்து ஆளுகிறவரும் எல்லா அறிவும் உடையவருமாகிய கடவுளுடைய திருச்செயலை உன்னுடைய சிற்றறிவினுல் அளந்து அறியமுடியுமோ? நீ நினைப்பது மடமை. கடவுளுடைய செயலைப்பற்றி நீ உன்னுடைய உள்ளத்தில் சிறிதும் ஐயத்திற்கு இடங்கொடாதே. எல்லா உலகங்கட்குந் தலைவராகிய கடவுள் ஓர் அணுவளவேனும் தவறுவார் என்று நீ உன்னுடைய உள்ளத்தில் எண்ணாதே. கடவுள் இவ்வுலகத்தை ஆளும் விதம் மறைமுகமானதாக இருக்கின்றது. கடவுளுடைய செயலை மனிதர்கள் உள்ளவாறு உணர்ந்துகொள்ள முடியாமல் அவரிடத்திலே ஐயங்கொள்ளுகிருர்கள். நீ கடவுளுடைய கருத்தை அறிந்துகொண்டால் மனநிறைவு கொள்வாய்.

"சுனையோரத்தில் பணப்பையைக் கண்டு எடுத்துக் கொண்டு போனவனுடைய தந்தையின் பொருளைக், குதிரைமீது ஏறிவந்து பணப்பையை விட்டுவிட்டுப் போனவனுடைய தந்தை பல ஆண்டுகட்கு முன்பு நேர்மையற்ற வழியில் கவர்ந்துகொண்டான். கடவுள் இப்பொழுது அப்பொருள் உரியவனிடத்திற் சேருமாறு செய்தார்.

"சிறிது காலத்திற்கு முன் விறகுவெட்டியானவன் குதிரையேறி வந்தவனுடைய தகப்பனின் பொருளைக் கைப்பற்றுவதற்குக் காட்டில் தனிமையான இடத்தில் கண்டு கொலை செய்துவிட்டான். இப்பொழுது கடவுள் பழிக்குப்பழி வாங்குமாறு குதிரைக்காரனுக்கு இடங்கொடுத்தார். ஓ துறவியே! உலக நிகழ்ச்சிகளெல்லாம் இவ்வாறு மறைமுகமான தொடர்புடையவைகளாக இருக்

கின்றன. ஆகவே நீ கடவுளுடைய திருவருளைப்பற்றி ஐயப்படுதல் மடமையிற் சேருமேயல்லாமல் வேறு அன்று," என்று பேசியது.

இதனைக்கேட்ட துறவி கடவுளின் செயலையும் தம் முடைய மடமையையும் எண்ணிப் பார்த்து மிகுந்த நாணங் கொண்டார். அன்றுமுதல் அவர் கடவுளின் செயலிற் குறை நினைப்பதை விட்டார்.

கஉரு. பின்புத்திக் கோனன்

ஓர் ஊரிலே பின்புத்திக் கோனன் என்னும் பெய ருடைய ஓர் இடையன் இருந்தான். அவன் தன்னுடைய ஆட்டுமந்தையைக் காட்டிலே கொண்டுபோய் மேய்த்துக் கொண்டு வருவது வழக்கம். ஒருநாள் அவன் ஆடுகளை மேய்த்துவிட்டு மாலை நேரத்தில் வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தான். அப்பொழுது வழியிலே ஒரு புதரில் புலியொன்று இறந்துகிடத்தலைக் கண்டு பக்கத்தில் போய்ப்பார்த்தான். தாய்ப் புலி இறந்திருக்கவும் அப் பொழுதுதான் பிறந்த புலிக்குட்டி ஒன்று உயிரோடு கிடந்தது. அப்புலி எவ்வாறு இறந்ததென்னில்; நிறை கருப்பமுடைய ஒரு பெண்புலி கருவுயிர்க்கும் நிலையில் இருக்க அதனைப் புதரில் விட்டுவிட்டு ஆண் புலி பக்கத் திலே இருந்து காவல் காத்துக்கொண்டிருந்தது. அப் பொழுது ஒரு வேடன் ஆண் புலியைக் குறிபார்த்துச் சுட்டான். துப்பாக்கிக்குண்டு ஆண் புலியின் மார்பிற் புகுந்து இருதயத்தைத் துளைத்துக்கொண்டு பின்னல் புதரில் இருந்த பெண் புலியின் மண்டையிற்பட அப் பெண் புலியும் இறந்துவிட்டது. வேடன் பெண் புலியைப் பார்க்காதபடியினல் தான் சுட்ட ஆண் புலியைமட்டும் எடுத்துக்கொண்டு அவ்விடத்தைவிட்டுப் போய்விட்டான். அப்பெண் புலியைத்தான் இடையன் கண்டான்.

பின்புத்திக் கோனன் உயிரோடிருந்த புலிக்குட்டியி னிடத்தில் அன்பு காட்டினன். ஆட்டுக்குட்டியை எடுப் பதுபோல் எடுத்து வீட்டிற்குக் கொண்டுபோய்ச் சேர்த் தான். வீட்டிலே அப்பொழுது அவனுடைய பெட்டை நாய் ஒன்று மூன்று குட்டிகளைப் போட்டிருந்தது. புலிக் குட்டியையும் அந்நாய்க் குட்டிகளோடு சேர்த்து நன்ருக வளர்த்து வந்தான். புலிக்குட்டி நாயின் பாலையே குடித்து வளர்ந்தபடியாலும் பழக்கவாசனையாலும் புலித் தன்மையை மறந்து நாய்த்தன்மையை அடைந்திருந்தது.

பெரிதானபிறகு கோனன் சொற்படி கேட்கவும் கோனனைக் கண்டால் அவனிடத்தில் வாலாட்டி அன்பு பாராட்டவும் ஆட்டுக்கிடையைப் பாதுகாக்கவுந் தொடங் கியது. பின்புத்திக் கோனன் தான் புலியை நாயாக்கி விட்டதாகப் பெருமை கொண்டாடினன். தன்னிடத்தில் உள்ள நாய்களைவிட இந்தப் புலிநாயினிடத்திலே மிகுந்த அன்பு காட்டினன்.

சிலர் கோனனைப் பார்த்து, “எவ்வளவு பழகினலும் புலி புலிதான். அதனுடைய பிறவிக்குணம் ஒருநாளும் மாருது. என்றைக்காவது பிறவிக்குணத்தைக் காட்டித் தீமைசெய்யத் தொடங்கிவிடும். ஆகவே நீ விழிப்புடன் இருக்கவேண்டுமென்று கூறினர்கள். ஆனல் கோனன் பின்புத்தி யுடையவனுகையால் அவர்கள் கூறிய அறிவுரை யைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை.

இவ்வாறிருக்குங் காலத்தில் மழை சரியாகப் பெய்ய வில்லை. அதனல் காட்டின் வெளியிடங்களில் புல் இல்லா மற் போய்விட்டது. கோனன் தன்னுடைய கிடையைக் காட்டுக்குள் நெடுந்தொலை கொண்டுபோய் மேய்க்கத் தொடங்கினன். அப்பொழுது புலிநாயையும் கிடை காப்பதற்கு உடன்கொண்டுபோனன். காட்டுப் புலிகள் வந்தால் நாட்டுப் புலி அவைகளை விரட்டி யடித்துவிடு மென்பது கோனனுடைய எண்ணம். நாட்டுப்புலி அவ் வாறுதான் செய்துகொண்டிருந்தது.

ஒருநாள் ஆட்டுக்கிடைக்குள் காட்டுப்புலி ஒன்று புகுந்தது. அப்புலியைப் பின்புத்திக் கோனனுடைய நாட்டுப்புலி அதன்மேல் விழுந்து அதனைக் கடித்துத் துரத்தத் தொடங்கியது. ஆத்திரத்தோடு அதன்மேல் விழப்போகவும் அப்புலி இதனிடம் வந்து முகந்து பார்த்தது. பிறகு முகத்தோடு முகத்தைச் சேர்த்துத் தேய்த்தது. அவ்வளவில் பின்புத்திக் கோனனுடைய நாட்டுப்புலிக்கு மூர்க்கத்தனமும் மிகுந்த வெறியும் உண்டாகத் தொடங்கிவிட்டது. இரண்டு புலிகளுமாகச் சேர்ந்து கொண்டு பின்புத்திக் கோனனுடைய ஆட்டுக்கிடை மேற்பாய்ந்து ஆடுகளைக் கொன்றொழிக்கத் தொடங்கின. பின்புத்திக்கோனன் தான் அருமையாக வளர்த்த நாட்டுப் புலி தன் கிடைக்கே நமனாகி நாசஞ்செய்தலைக் கண்டான். தான் தன்னுடைய புலியினிடஞ் சென்றாலும் கொன்றொழித்துவிடும் என்று அஞ்சினான். பல ஆடுகள் மாண்டொழிந்தபின் காட்டுப்புலி ஓடிவிட்டது. நாட்டுப்புலி அதனோடு ஓடவில்லை. ஆயினும் அஃது ஆட்டினுடைய குருதியைக் குடித்து ருசிகண்டு மேலும் பல ஆடுகளைத் தனக்கு இரையாக்கிக்கொள்ள முனைந்து நின்றது.

பின்புத்திக்கோனனை அவனுடைய வளர்ப்புப் புலி ஒரு பொருட்படுத்தவில்லை. "நீ யாரோ நானாரோ போ" என்கிற மனநிலையில் அஃது இருந்தது அதனைப் பிடித்து பலமான கயிறுகளாற் கட்டிப்போட்டு வழக்கமான சோறு முதலிய உணவுகளைப் போட்டுப்பார்த்தான். அஃது அவைகளைத் தின்னவில்லை. அவனையே பிடித்துத் தின்ன வேண்டும் என்று பார்த்தது. 'நாம் இனிமேல் இதனை வைத்துக்கொண்டிருந்தால் நம்முடைய உயிர் பிழைப்பது அருமை' யென்று கோனன் வளர்ப்புப் புலியைத் தடி கொண்டு அடித்து விரட்டினான்.

"சேர்க்கை வாசனை எவ்வளவு பலமாக இருந்தாலும் அது பிறவி வாசனைக்குமுன் நிற்காது" என்று பின்புத்திக் கோனன் தன்னுடைய ஆட்டுமந்தையிற் பாதியைப் பலி கொடுத்தபின் உணர்ந்தான். ஆகவே ஒருவருக்குச்

சேர்க்கை வாசனையால் ஏதோ நல்லியல்பு உண்டாகி யிருக்கிறது என்று நாம் ஏமாந்துவிடக்கூடாது. ஒவ்வொரு வருடைய பிறவிக்குணமும் அழிந்துபோகாமல் அவர்கட் குள்ளேயே அடங்கியிருந்து சமயம் நேர்ந்தபோது அது வெளிப்படத் தொடங்கிவிடும்.

கஉகூ. அம்மையாரும் பன்றியும்

ஓர் ஊரில் ஓர் அம்மையார் இருந்தார். அந்த அம்மையாரிடம் ஒரு ரூபா பணம் இருந்தது. அப் பணத் திற்கு அம்மையார் ஒரு பன்றி வாங்கி வளர்க்க எண்ணி னார். ரூபாயை எடுத்துக்கொண்டு சந்தைக்குப்போய் ஒரு பன்றியை வாங்கினார். அதனை வீட்டிற்கு ஓட்டிக்கொண்டு வரும்போது வழியிலே ஒரு வேலியைத் தாண்டவேண்டிய தாக இருந்தது. பன்றியோ வேலியைத் தாண்டாமல் அழும்பு செய்தது. அம்மையார் சிறிது தொலைவில் ஒரு நாயைக் கண்டார். அந் நாயைக் கூப்பிட்டு,

"நாயே! நாயே!! இந்தப் பன்றியைக் கடி. வேலியைத் தாண்டமாட்டேன் என்கிறது. நான் இருட்டு வதற்கு முன் வீட்டிற்குப் போய்ச் சேரவேண்டும்," என்று சொன்னார். அந் நாய், "என்னால் முடியாது" என்று கூறிவிட்டது.

அம்மையார் சுற்றுமுற்றும் பார்த்தார். ஒரு கோல் காணப்பட்டது. அக் கோலைப் பார்த்துக், "கோலே! கோலே!! இந் நாயை அடி. அஃது இந்த நாயைக் கடிக்காதாம், பன்றியோ வேலியைத் தாண்டா தாம். எனக்கோ இருட்டுவதற்கு முன்பு வீட்டிற்குப் போய்ச் சேரவேண்டும்," என்று சொன்னார். கோல், "நான் நாயை அடிக்கமாட்டேன்" என்று கூறிவிட்டது. அம்மையார் சிறிது தொலை போய் ஓரிடத்தில் நெருப்பைக் கண்டு,

"நெருப்பே நெருப்பே! இந்தக் கோலைக் கொளுத்து
கோல் நாயை அடிக்காதாம்
நாயோ பன்றியைக் கடிக்காதாம்
பன்றியோ வேலியைத் தாண்டாதாம்,"

என்று சொன்னார். நெருப்பு, "நான் கோலைக் கொளுத்த மாட்டேன்," என்று கூறிவிட்டது. பிறகு அம்மையார் கண்ணுக்குத் தண்ணீர் காணப்பட்டது. அம்மையார் தண்ணீரைப் பார்த்து,

"தண்ணீரே தண்ணீரே! இந்த நெருப்பை அணை
நெருப்புக் கோலைக் கொளுத்தாதாம்
கோல் நாயை அடிக்காதாம்
நாய் பன்றியைக் கடிக்காதாம்
பன்றி வேலியைத் தாண்டாதாம்,"

என்று சொன்னார். தண்ணீர், "நான் நெருப்பை அணைக்கமாட்டேன்," என்று கூறிவிட்டது. பிறகு அம்மையார் ஓர் எருதைக் கண்டு,

"எருதே எருதே! இந்தத் தண்ணீரைக் குடி
தண்ணீர் நெருப்பை அணைக்காதாம்
நெருப்புக் கோலைக் கொளுத்தாதாம்
கோல் நாயை அடிக்காதாம்
நாய் பன்றியைக் கடிக்காதாம்
பன்றி வேலியைத் தாண்டாதாம்,"

என்று கூறினார். எருது, "நான் தண்ணீரைக் குடிக்க மாட்டேன்," என்று கூறிவிட்டது. அம்மையார் பிறகு ஒரு சாய்புவைக் கண்டு,

"துருக்கா துருக்கா! எருதை வெட்டு
எருது தண்ணீரைக் குடிக்காதாம்
தண்ணீர் நெருப்பை அணைக்காதாம்
நெருப்புக் கோலைக் கொளுத்தாதாம்
கோல் நாயை அடிக்காதாம்
நாய் பன்றியைக் கடிக்காதாம்
பன்றி வேலியைத் தாண்டாதாம்,"

என்று கூறினார். அந்தச் சாய்பு, "நான் எருதை வெட்ட மாட்டேன்," என்று கூறிவிட்டான். பிறகு அம்மையார் ஒரு கயிற்றைக் கண்டு,

"கயிறே கயிறே! துருக்கனைச் சுருக்கிடு
துருக்கன் எருதை வெட்டானும்
எருது தண்ணீரைக் குடிக்காதாம்
தண்ணீர் நெருப்பை அணைக்காதாம்
நெருப்புக் கோலைக் கொளுத்தாதாம்
கோல் நாயை அடிக்காதாம்
நாய் பன்றியைக் கடிக்காதாம்
பன்றி வேலியைத் தாண்டாதாம்

என்று கூறினார். அக் கயிறு "நான் துருக்கனைச் சுருக்கிட மாட்டேன்," என்று கூறிவிட்டது. பிறகு அம்மையார் ஓர் எலியைப் பார்த்து,

"எலியே எலியே! இந்தக் கயிற்றைக் கடி
கயிறு துருக்கனைச் சுருக்காதாம்
துருக்கன் எருதை வெட்டானும்
எருது தண்ணீரைக் குடிக்காதாம்
தண்ணீர் நெருப்பை அணைக்காதாம்
நெருப்புக் கோலைக் கொளுத்தாதாம்
கோல் நாயை அடிக்காதாம்
நாய் பன்றியைக் கடிக்காதாம்
பன்றி வேலியைத் தாண்டாதாம்,"

என்று கூறினார். எலி, "நான் கயிற்றைக் கடிக்க மாட்டேன்," என்று கூறிவிட்டது. பிறகு அம்மையார் ஒரு பூனையைப் பார்த்து,

"பூனை பூனை! இந்த எலியைப் பிடி
எலி கயிற்றைக் கடிக்காதாம்
கயிறு துருக்கனைச் சுருக்காதாம்
துருக்கன் எருதை வெட்டானும்
எருது தண்ணீரைக் குடிக்காதாம்
தண்ணீர் நெருப்பை அணைக்காதாம்

நெருப்புக் கோலைக் கொளுத்தாதாம்
கோல் நாயை அடிக்காதாம்
நாய் பன்றியைக் கடிக்காதாம்
பன்றி வேலியைத் தாண்டாதாம்,''

என்று கூறினர். அதற்குப் பூனை அம்மையாரைப் பார்த்து, "நான் எலியைப் பிடிக்க வேண்டுமானுல் எனக்கு ஒரு லோட்டா பசும்பால் வாங்கிக்கொண்டு வந்து கொடு. அவ்வாறு கொடுத்தால் எலியைப் பிடிக்கிறேன்,'' என்றது அம்மையார் பசுமாட்டிடஞ் சென்று, "ஒரு லோட்டா பால் கொடு,'' என்று கேட்டார். பசுமாடு, "உனக்கு நான் சும்மா பால் கொடுத்துக்கொண்டிருக்க முடியாது. சிறிது புல் லறுத்துவந்து போடுவாயானுல் தருகிறேன்,'' என்றது. அம்மையார் அங்குப் புல் மண்டியிருந்த இடங்கட்குப்போய்ப் புல் பிடுங்கிவந்து பசுமாட்டிற்குப் போட்டார். உடனே பசுமாடு பால் கொடுத்தது. பாலைக் கொண்டுபோய்ப் பூனைக்கு வைத்தார். பூனை அதனைக் குடித்துவிட்டுக் களிப்போடு துள்ளிக்கொண்டு, எலியைப் பிடிக்க ஓடிற்று. உடனே,

எலி கயிற்றைக் கடிக்கப் போயிற்று
கயிறு துருக்கனைச் சுருக்கிடப் போயிற்று
துருக்கன் எருதை வெட்டப் போனுன்
எருது தண்ணீரைக் குடிக்கப் போயிற்று
தண்ணீர் நெருப்பை அணைக்கப் போயிற்று
நெருப்புக் கோலைக் கொளுத்தப் போயிற்று
கோல் நாயை அடிக்கப் போயிற்று
நாய் பன்றியைக் கடிக்கப் போயிற்று
பன்றி வேலியைத் தாண்டிற்று,

அம்மையார் இருட்டுவதற்குமுன் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தார்.

தென்னாட்டுப் பழங்கதைகள்

ஆசிரியர் :

திரு. சு. அ. இராமசாமிப் புலவர்

[ஆறு பகுதிகள் : தனித்தனி விலை ரூ. 5-00]

தென்னாட்டில் பண்டைக் காலத்தில் வழங்கிவந்த கதைகள் பல. அவை கற்பனை நயம் செறிந்தனவாய், கேட்போருக்கு இன்ப மூட்டுவனவாய், பொழுதுபோக்குக்கு ஏற்ற கதைகளாய்த் திகழ்ந்தன. இடைக்காலத்தில், புதுக்கதைகள் பல தோன்றியதால் பழங் கதைச் சுவையினை மக்கள் மறந்தனர்-அவற் றின் ஒளி மங்கின. அவற்றை மீண்டும் புதுப்பித்து மக்களிடையே பரவச்செய்யின் மக்கள் பழைமை இன்பத்தை மீண்டும் துய்க்க வாய்ப்பேற்படும் எனக் கருதி திரு. சு. அ. இராமசாமிப் புலவர் அவர்களைக் கொண்டு செப்பம்செய்து, இனிய எளிய தமிழில் இக் கதைகளை வெளியிட்டுள்ளோம். இவை ஆறு பகுதிகளாய் வெளிவந்துள்ளன. ஒவ்வொன் றும் படித்தின்புறத் தக்கது. ஒவ்வொரு பகுதி யும் 320 பக்கங்கள் கொண்டது.